வெளியீடு 15-12-2004 Issued 15-12-2004

28 2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜூலை 29, 2004—தொகுதி 62—எண் 1

Thursday the 29th July, 2004—Volume 62—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009.

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

226197

65/2005

28 2005

29-07-2004

உள்ளடக்கம்

பக்கங்கள்


ஆளுநரும் அமைச்சரவையும் iii - vii

Governor and Council of Ministers ix - xii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xiii - xv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xvii - xxvii

1. வினாக்கள்—விடைகள்—

அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 1 - 51

ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (11 மற்றும் 12-வது பட்டியல்கள்) 51 - 115

2. நன்றி நவிலல்—

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதி பெற்றுத் தந்த முதலமைச்சருக்கு நன்றி 116 - 117

3. கவன ஈர்ப்பு—

லால்குடி தொகுதி, மாந்துறை—பூவாளூர், புற வழிச்சாலை 117 - 120

4. அறிக்கைகள் அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு 120

**5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**


| | பக்கங்கள் |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 24 – உள் துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் | 121 - 218 |
| (ஆ) கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை | |
| (இ) கோரிக்கை எண் 26 – தொழில் துறை | |
| (ஈ) கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை | |
| (உ) கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | |
| (ஊ) கோரிக்கை எண் 42 – சிறு தொழில்கள் துறை | |
| *மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் | 121, 122, 131, 138, 139, 164, 199 - 211 |
| *மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் | 124, 131 - 132, 193 - 199 |
| *மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன் | 126, 128, 129, 132, 135 - 136, 147, 158 - 159, 160, 165 |
| திரு. கே.என். இலட்சுமணன் | 132 - 142 |
| *திருமதி வளர்மதி ஜெபராஜ் | 142 - 151 |
| *திருமதி வி. அழகம்மாள் | 152 - 157 |
| திரு. லா. சந்தானம் | 157 - 165 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 218 - 223 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி மற்றும் உணவு அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

10. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

11. வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

12. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

13. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

14. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

15. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

காப்பக
226147
சென்னை-600 008
V2 11,31P04
P04.62.1

16. கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

17. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

19. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

20. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

21. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு

22. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம். செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

23. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

-------

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | - | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home. Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | - | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance and Food** | - | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 4. **Minister for Law, Information Technology and Electricity** | - | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | - | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| 6. **Minister for Health** | .. | **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Health, Medical Education and Family Welfare. |
| 7. Minister for Social Welfare | .. | **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 8. Minister for Adi-Dravidar Welfare | .. | **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| 9. Minister for Transport | .. | **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 10. Minister for Industries | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:** Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| 11. **Minister for Agriculture and Rural Industries** | .. | **The Hon. Thiru K. Pandurangan:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development, Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |
| 12. **Minister for Commercial Taxes and Co-operation** | .. | **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes and Co-operation. |
| 13. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P.V. Damodhiran:** Animal Husbandry. |
| 14. **Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| 15. **Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 16. **Minister for Education and Backward Classes** | .. | **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees, Backward Classes, Most Backward Classes and Denotified Communities |
| 17. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 18. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| 19. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 20. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |

| | | |
|---|---|---|
| 21. **Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 22. **Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply. |
| 23. **Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |

-----

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

*திருமதி சி. எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. செ. கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 23-7-2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி நூ. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

- - -

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | |
|---|---|
| 1. அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 7. அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 8. அருணாசலம், திரு. அ. | - வாசூர் (செ.வ.) |
| 9. அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 10 அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு | - திருச்செந்தூர் |
| 12. அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - பேரணமல்லூர் |
| 13. அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 15. அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 16. அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 17. அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 18. அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |
| 19. ஆண்டிவேல், திரு. ப. | - வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. கு.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. இ. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



182. மில்லர், திரு. அ. .. கடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளை
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
214. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-I
220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி
228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

---

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### ஆடி 14, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

### 2004 ஜூலை 29, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை."*

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த்தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

### 1. வினாக்கள்–விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 61, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**61—**

**மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும்**
**கடலுணவுத் தொழிற்சாலை**

***15154—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 29

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர் அல்லது குறுக்குச் சாலையில் மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர் குறுக்குச் சாலையில் மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி மிகவும் வறட்சியான பகுதி. இங்குள்ள மக்கள் விவசாயம் மற்றும் ஆடு, மாடு வளர்க்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள். தற்சமயம் பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினால் இந்தத் தொழில்களும் சிறப்பான முறையில் நடைபெறுவதில்லை. குறுக்குச் சாலை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இங்கு குறைந்த கூலியில் வேலை ஆட்களும், குறைந்த விலையில் இடவசதிகளும் கிடைப்பதற்கு வாய்ப்பாக உள்ளது. மேலும், வெள்ளப்பட்டி என்ற பகுதியிலே தமிழ்நாட்டிலே நண்டு வளர்ப்புத் தொழில் மாண்புமிகு அம்மா அவர்களால் சென்ற ஆண்டு துவக்க அனுமதிக்கப்பட்டு அது சிறப்பாக நடைபெற்று வருகிறது. வெள்ளப்பட்டி, தருவைக்குளம், தூத்துக்குடி ஆகிய பகுதிகளிலே மீன் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகையினால் இந்தப் பகுதிகளிலே மீன் பதப்படுத்தும் தொழிலை அல்லது கடல் உணவு தயாரிக்கும் தொழிலைச் சிறப்பாக நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மற்றும் ஓட்டப்பிடாரம், புதியம்பத்தூர் அல்லது குறுக்குச் சாலையில் தனியாரால் குளிர்பதன நிலையங்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், அரசால் வணிக நோக்கத்தில் மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடல் உணவு தயாரிக்கும் நிலையம் துவங்கி நடத்துவது இலாபகரமாக அமையும்



2004 ஜூலை 29]

சாத்தியம் இல்லை என்பதால் அவ்வாறான திட்டங்கள் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பட்டணமருதூர், புதூர்பாண்டியாபுரம் ஆகிய இடங்களில் மீன் பதப்படுத்தும் தொழில் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு தரமான மீன்களைப் பதப்படுத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இதன்மூலமாக இங்கு அதிகமான இலாபம் கிடைக்கிறது என்று அந்தத் தொழிலதிபர்கள் கூறுகிறார்கள். எங்கள் பகுதிகளில் இந்தத் தொழிற்சாலை வரும் காலகட்டத்தில் இங்கு அதிகமான இலாபம் அரசுக்குக் கிடைக்க வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை உணர்கிறோம். மேலும், இந்தப் பகுதியில் இந்தத் தொழிற்சாலை வரும் காலகட்டத்தில் எங்கள் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்; அரசுக்கு அதிகமான இலாபமும் கிடைக்கும். ஆகையினால் இதை இந்த ஆண்டு இல்லையென்றாலும் வரும் நிதியாண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசால் இந்த மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். இன்றைக்கு உள்ள சூழ்நிலையிலே தனியார் செய்வதைவிட அரசால் நடத்தப்படும் இந்தத் தொழிலில் செலவு நடைகளும் அதிகமாகும் என்பது எல்லோருக்கும் கண்கூடாகத் தெரிந்த உண்மை. அந்த அடிப்படையிலே இதுபோன்ற மீன் பதப்படுத்தும் நிலையம் அரசால் அமைக்கின்ற சாத்தியம் இல்லையென்றாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று இதனை அமைப்பதற்கான முடிவுகள்பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையின் மூலமாகப் பல சிறிய துறைமுகங்களும், பெரிய துறைமுகங்களும் கட்டுப்பாட்டில் உள்ளன. குறிப்பாக, தமிழகத்திலுள்ள அனைத்து சிறிய துறைமுகங்களிலும் மீன் பதப்படுத்தும் நிலையத்தை ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசால் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட குளிர்பதன நிலையங்களிலெல்லாம் நஷ்டம் ஏற்படுகின்ற சூழ்நிலையிலே இன்றைக்குத் தனியாருக்கு அவற்றையெல்லாம் ஒப்பந்தத்திற்காக அதாவது lease–க்கு, வாடகைக்கு விடப்பட்டிருக்கின்ற சூழ்நிலையிலே அரசால் இதுபோன்ற கம்பெனிகள் அமைக்கின்ற திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று இதுசம்பந்தமாக அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தூத்துக்குடி மாவட்டமானது கடல் பகுதி நிறைந்த இடம். அதிலே கடல்வளத் தொழில் செய்பவர்கள்தான் 30 சதவீதம் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது நலிந்த நிலையில் இருக்கிறார்கள். தனியார் அதை நடத்துவதால் இவர்களுக்கு அதிகமான இலாபம் கிடைப்பதில்லை. தனியார்களே அந்த இலாபத்தைக் கொண்டு போகிறார்கள். அதை அரசு நடத்தினால் ஏழையெளிய மீனவ சமுதாய மக்களுக்கு நாம் நன்மை செய்தது போலவும் இருக்கும்; நல்ல முறையிலே அதை முறைப்படுத்தி நடத்தினோமானால் இலாபகரமான தொழிலாக அமைந்து அரசுக்கு வருவாயும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, அதற்கு ஆவன செய்வார்களா என்று அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு; சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னர் கேட்ட கேள்விகளுக்குக் கூறிய பதில் இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 62, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.





62—

## சிறுவர் பூங்கா

***38875—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு அணையில் சிறுவர் பூங்கா மற்றும் படகு சவாரி வசதியை அரசு ஏற்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு அணையில் சிறுவர் பூங்கா மற்றும் படகு சவாரி வசதியை அரசு ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலுள்ள வாணியாறு அணை என்பது என்னுடைய மொரப்பூர் தொகுதியில் உள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய சொந்த ஊராட்சியிலே இந்த அணை உள்ளது. இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் கட்டப்பட்ட அணையாகும். ஏற்காடு மலையடிவாரத்தில் இந்த அணை அமைந்துள்ளது. நல்லதொரு இயற்கையான சூழலில் இந்த அணை இருக்கிறது. பல கிராமங்கள் அந்தப் பகுதியில் உள்ளன. இந்த அணையின் அருகிலேயே பொம்மிடி இரயில் நிலையமும் உள்ளது. அந்தப் பகுதிக்குப் பொழுதுபோக்கு அம்சம் எதுவும் இல்லை. தற்போது சுற்றுலாப் பயணிகளுடைய வருகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே ஏற்கெனவேயுள்ள சிறுவர் பூங்காவை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊராட்சியினுடைய வருவாய் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே அந்த அணையில் ஒரு Boat House—படகுக் குழாம் ஒன்றை—ஏற்படுத்த நம்முடைய அரசு முன்வருமா? அந்தப் படகுக் குழாம் அமைத்தால் அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற வகையிலேயும், அந்த ஊராட்சியினுடைய வருவாயைப் பெருக்குகின்ற

வகையிலேயும் அமையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இந்தச் சுற்றுலாப் பயணிகளுடைய வருகையை முன்னிட்டு படகுக் குழாம் அமைப்பதற்கும், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள அந்தச் சிறுவர் பூங்காவை விரிவுபடுத்துவதற்கும் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஏற்காடு மலையடிவாரத்தில் வாணியாறு உள்ளது. ஏற்காட்டில் பெய்யும் மழையால் வாணியாறுக்குத் தண்ணீர் கிடைக்கப்பெறுகிறது. வாணியாறு அணை 1981–ல் தொடங்கப்பட்டு 1985–ல் கட்டி முடிக்கப்பட்டது. இது தருமபுரி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய அணையாகும். அணையின் உயரம் 65 அடியாகும். இந்த அணை மலைகள் சூழ்ந்த இயற்கையான சூழ்நிலையில் அமைந்துள்ளது. சேலத்திலிருந்து 46 கிலோ மீட்டர் தொலைவிலும், பொம்மிடி இரயில் நிலையத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. பாசன வசதிக்காக இந்த அணை கட்டப்பட்டுள்ளது. வாணியாறு அணைப் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள மாநில சுற்றுலாத் துறை ரூ.3,50,000 நிதி ஒதுக்கீடு செய்து வாணியாறு அணைப் பகுதியில் ஓய்வுக்கூடம், கழிப்பிட வசதி மற்றும் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மழைக் காலங்களில் மட்டுமே அணைக்கு நீர்வரத்து உள்ளது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே சுற்றுலாப் பயணிகள் இந்த அணைப் பகுதிக்கு வருகின்றனர். வாணியாறு அணையில் படகு வசதி செய்யவும், அணையைச் சுற்றிச் சிறுவர் பூங்கா அமைக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஆலோசனை பெற்று அரசு நிதிநிலைக்கேற்ப சிந்தித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். ரெங்கநாதன்.

**திரு. என் ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, பூம்புகார் கடற்கரையில் சிறுவர் பூங்கா ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதியில் ஏற்கெனவே சிறுவர் பூங்கா இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 63, டாக்டர் (திருமதி) ஆ. கருப்பாயி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**63—**

### பணி நிரந்தரம்

***35441—டாக்டர் (திருமதி) ஆ. கருப்பாயி:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளத்தூர் தொகுதி, காவேரி நகரில் தைலா சில்க் ஸ்பின்னிங் மில் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திட சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இவ்வுலகில் நான் பெற்ற பெரும் பாக்கியம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொண்டனாய் வாழ்வதுதான். காக்கி உடையை அணிந்து கொண்டு சாதாரண போக்குவரத்துத் தொழிலாளியாக இருந்த என்னை தொழிலாளர் நலத் துறை அமைச்சராக்கி எனக்குப் பெருமையைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். தமிழக சரித்திரத்திலேயே சாதாரண ஒரு தொழிலாளியாக இருந்த என்னை தொழிலாளர் நலத் துறைக்கு அமைச்சராக்கி, உழைக்கும் வர்க்கத்தின் உணர்வுகளைப் புரிந்து, உழைப்பதற்கு உத்தரவிட்ட உன்னதமான தலைமைதான் அம்மா நீங்கள். அத்தகைய நல்லெண்ணம் மிக்க, நாடு காக்கும் நல்ல இதயம் கொண்ட தாய்க்கு நான் மட்டுமல்ல, என் தலைமுறையே தாள்பணிந்து நன்றியினை இந்த நல்ல நேரத்தில் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, தைலா சில்க் ஸ்பின்னிங் மில் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வது தொடர்பான ஆய்வு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆலையை 5–4–2003 முதல் மூடுவதற்கான அறிவிப்பை நிர்வாகம் அனுப்பியதைத் தொடர்ந்து, தொழிலாளர் நல உதவி ஆணையர் (சமரசம்) அவர்களின் முன்பு நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையில், தொழிற்தகராறு சட்டப் பிரிவு 12, உட்பிரிவு (3)–ன்கீழ் 27–2–2003 அன்று ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, அந்த நிறுவனம் மூடப்பட்டதை ஏற்றுக்கொண்டு மொத்தமுள்ள 96 தொழிலாளர்களும் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டனர். எனவே, பணி நிரந்தரம் செய்வது தொடர்பான பிரச்சினை தற்பொழுது எழவில்லை.

**டாக்டர் (திருமதி) ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 64, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**64—**

## கழிவுநீர்க் கால்வாய் மற்றும் அடிகுழாய்கள்

***21126—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகரத்திலுள்ள பாரதியார் தெரு, பரசுராம தெரு ஆகியவற்றில் கழிவுநீர்க் கால்வாய்கள் மற்றும் புதிய அடிகுழாய்கள் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கடையநல்லூர் நகராட்சியில் போதுமான நிதி இல்லாததால் பாரதியார் தெரு மற்றும் பரசுராம தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை. இப்பகுதிகளில் அடிகுழாய்கள் புதிதாக அமைக்கப்பட்டு, பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.





**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் நகரத்திலுள்ள பாரதியார் தெரு மற்றும் பரசுராம தெருக்களில் உள்ள கழிவுநீர்க் கால்வாய் சிறியதாக உள்ளதால் கழிவுநீர் வெளியே செல்ல முடியாத சூழ்நிலையில் அங்கு பொதுமக்களுடைய வீட்டிற்குள் அந்த நீர் சென்று பொதுமக்கள் அவஸ்தைப்படுகிறார்கள். எனவே கழிவுநீர்க் கால்வாய் அகலமாகக் கட்டிக்கொடுக்க வேண்டும். மேலும் கடையநல்லூர் நகரத்தில் 2002–2003 ஆம் ஆண்டில் மழை பொய்த்துவிட்ட காரணத்தினால், குடிநீர் கிடைக்காமல் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளான நேரத்தில், கடையநல்லூர் மக்களின் நலனைக் கருதி, எனது சொந்த செலவிலேயே 5 டாங்கர் லாரிகள் மூலமாக வார்டு வாரியாகப் பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குற்றாலம் வருகை தந்தபோது, மக்களுக்கு தாங்கள்தான் – நம்முடைய பேரவைத் தலைவர்தான் அந்தத் தண்ணீர் விநியோகத்தை பொதுமக்களுக்காகத் தொடங்கி வைத்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து கடையநல்லூர் நகரத்திற்கு சுமார் 58 போர்கள் மற்றும் 10 Sintex Tank–கள் வழங்கியுள்ளேன். இதை நான் ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால்—கடையநல்லூர் நகரத்தில் அங்கீகாரம் இல்லாத பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிநீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கீகாரம் இல்லாத பகுதியில் குடிநீர் பெற நகராட்சியில் குடிநீர் இணைப்புக்குப் பணம் கட்டித் காத்திருப்போர் பட்டியலில் நிறையபேர் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக அங்கீகரிக்கப்படாத பகுதிக்குக் குடிநீர் கிடைக்க நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 29

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரசுராம தெரு மற்றும் பாரதியார் தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைப்பதற்கு இந்நகராட்சியில் நிதிநிலை தற்போது திருப்திகரமாக இல்லாத காரணத்தினால், வரும் நிதியாண்டில் அரசு நிதியுதவி பெற்றோ அல்லது நகராட்சி நிதிநிலையைப் பொறுத்தோ பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, கடந்த வறட்சிக் காலத்திலே கடையநல்லூர் நகராட்சியிலே சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும், பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் அங்கே ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, அந்தப் பகுதிவாழ் மக்களுக்குப் போதிய தண்ணீர் வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் எடுத்துரைத்ததுபோல approval இல்லாத பகுதிகளுக்கு புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு இப்போது மின்சாரம் பெறுவதற்கு உண்டான தடையில்லாச் சான்றிதழ் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்ததுபோல, வரும் காலங்களில் அந்தப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு முனைப்போடு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமைகிறேன்.

*முற்பகல் 10–15*

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஆலங்குளம், சங்கரன்கோவில் ஆகிய பகுதிகளுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் 76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்து பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெல்லை மாவட்ட மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீரின்றி அமையாது உலகு என்ற வகையிலே,

"ஆபத்துக் குதவாப் பிள்ளை,
அரும்பசிக் குதவா அன்னம்,
தாகத்தைத் தீராத் தண்ணீர்,
தரித்திரம் அறியாப் பெண்டிர்,
கோபத்தை அடக்கா வேந்தன்,



2004 ஜூலை 29]

குரு மொழி கேளாச் சீடன்,
பாவத்தைத் தீரா தீர்த்தம்
பயனில்லை ஏழும்தானே"

என்பதுபோல எனது தொகுதிக்குட்பட்ட அச்சம்புதூர், ஆய்க்குடி, சாம்பவர் வடகரை, பண்பொலி வடகரை, கீழ்பிடாகை ஆகிய பேரூராட்சிகளுக்கும் குத்துக்கல்வலசை ஊராட்சி மற்றும் தேன்பொத்தை ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மேற்கண்ட கிராமங்களை உள்ளடக்கி தண்ணீர் வழங்க திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** "கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற பொன்மொழிக்கேற்ப, கேட்காமலேயே கொடுக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நடப்பு ஆண்டிலேயே மேற்கண்ட கிராமங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் தொடங்க உள்ளனவா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, அவருடைய தொகுதிக்கு உட்பட்ட அந்தப் பல்வேறு கிராமங்கள் மற்றும் 126 ஊரகக் குடியிருப்புகளைக் கொண்ட அந்தப் பகுதிகளில், இந்த ஆண்டில் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** வினா எண் 65, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**65—**

## கிராமங்களை ஊராட்சியாக்குதல்

***36538—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடியாங்குப்பம், சிவனார்தாங்கல் ஆகிய இரண்டு கிராமங்களையும் இணைத்து ஓர் ஊராட்சியாக ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடியாங்குப்பம், சிவனார்தாங்கல் ஆகிய இரண்டு கிராமங்களையும் இணைத்து ஒரு ஊராட்சியாக ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 66, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**66—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

***6525—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் பேரூராட்சி, வெண்ணமடையில் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வரும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.





**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றாலம் பஞ்சாயத்து வெண்ணமடையில் மிகவும் கஷ்ட நிலையில் சுமார் 20 ஆண்டுகாலமாக பட்டா இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பகுதி மக்களின் ஏழ்மையைக் கருதி, ஏழைகளுக்கு உதவிடும் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வீட்டுமனைப் பட்டா வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்காசி வட்டம், இலஞ்சி கிராமம், புல எண் 1170, 1171 கீழவெண்ணமடை குளமாகும். மேற்படி குளம் புறம்போக்கில் 33 நபர்கள் வீடுகட்டி ஆக்கிரமணம் செய்துள்ளனர். இவர்கள் வீடு கட்டியுள்ள நிலம் நீர்நிலைப் புறம்போக்கு நிலம் என்பதாலும், இந்த நிலம் தடையாணைக்கு உட்பட்ட நிலம் ஆகையாலும், மேற்படி நபர்கள் ஆக்கிரமித்துள்ள இடம் தடை செய்யப்பட்ட நிலம் என்பதாலும் இவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாநகராட்சிப் பகுதி, நகராட்சிப் பகுதி, பேரூராட்சிப் பகுதி, ஊராட்சிப் பகுதிகளில் அரசின் பல்வேறு புறம்போக்கு இடங்களில் இலட்சக்கணக்கான குடும்பங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு வீடு கட்டி வசித்து வருகிறார்கள். அதில் பெரும்பாலான இடங்கள் பொதுமக்களுக்கு இடையூறு இன்றியும், அரசுக்குப் பயன்படாத நிலையிலும் உள்ளன. ஆகவே தற்சமயம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடங்களை, காலி இடங்களைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருவதுபோல், தமிழகத்திலுள்ள பயனற்றுக் கிடக்கும் புறம்போக்கு நிலங்களில் ஏரி, குளங்கள் போக ஏழையெளியவர்கள் வீடுகட்டி வசித்து வரும் இடங்களை, அந்த இடத்திற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்து பட்டா வழங்கி அவர்களிடம் ஒப்படைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடத்திலே அறிய விரும்புகிறேன்.

[2004 ஜூலை 29

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 67, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**67—**

**தடுப்பு அணை**

***31456—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம், அமராவதி ஆற்றின் குறுக்கே சிறிய தடுப்பு அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், அமராவதி ஆற்றில் தாராபுரத்திற்கு மேலே 9 அணைக்கட்டுகளும், கீழே 9 அணைக்கட்டுகளும் உள்ளன. இதில் தாராபுரம் நகராட்சிக்காக அமராவதி ஆற்றில் குடி தண்ணீர் எடுக்கும் இடத்திற்கு மேலே சுமார் 1/2 கிலோமீட்டர் தூரத்தில் கொழிஞ்சிவாடி அணை உள்ளது. இப்பகுதிக்குக் கீழே 6 கிலோமீட்டர் தூரத்தில் நஞ்சைத்தலையூர் அணைக்கட்டு உள்ளது. இவ்விரண்டுக்கும் இடையே குறுகிய தூரத்தில் இன்னுமொரு Check dam கட்ட வேண்டுமானால், அதன் பயன்பாடு மற்றும் பயன் செலவு விகிதம் ஆகியவற்றை ஆராய்ந்த பின்பு இதைப்பற்றி அரசு கனிவுடன் முடிவெடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2004 ஜூலை 29]

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மிகவும் வறட்சிவாய்ந்த தொகுதியாகும். தாராபுரம் நகரத்திற்கு அமராவதி அணையிலிருந்து தண்ணீர் எடுத்துவிட்டால் அங்கே ஒரு மாத காலம் மட்டுமே அந்தத் தண்ணீர் தாராபுரம் நகரத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. மீண்டும் நிலத்தடி நீர் வற்றிப் போகிறது. இதன் காரணமாக தாராபுரம் நகரத்திலே ஒரு சிறிய தடுப்பணை கொஞ்சம் செலவில்—இரண்டு இலட்சம் அல்லது மூன்று இலட்சம் ரூபாய் என்ற அளவில் ஒரு சின்ன அணையாக, ஒரு தடுப்புச் சுவரை—வைத்துவிட்டால் குறைந்தபட்சம் 3 மாத காலங்கள் அந்த நிலத்தடி நீர் மக்களுக்குப் பயனாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட நான் இதுபற்றிக் கூறியிருக்கிறேன், இப்பொழுது தாராபுரம் நகரத்திலே 22 நாளைக்குப் பின்புதான் தண்ணீர் வருகிறது. நாங்கள் லாரி மூலமாகவும் மற்ற வாகனங்கள் மூலமாகவும்தான் மக்களுக்குத் தண்ணீர் கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம் என்பது தாங்களும் அறிந்ததே. மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய ஆட்சியிலே தாராபுரம் நகரத்திற்கு ஒரு சிறிய தடுப்பணை கட்டினால் நன்றாக இருக்கும். இதனை நிறைய ஊர் பிரமுகர்களும் மற்றவர்களும்கூட ஆலோசனையாகக் கூறுகிறார்கள். நீண்டநாள் தண்ணீர் பஞ்சத்திற்கும் இது ஒரு வழிவகையாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு கனிவுடன் இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன்.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலிருந்துதான் தாராபுரத்திற்கும் எங்களுடைய காங்கேயம் பகுதிக்கும் குடிதண்ணீர் வந்துகொண்டிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல எங்கள் பகுதிக்கு அந்த தாராபுரத்திலிருந்து தாளக்கரை என்ற இடத்திற்கருகில்

நாங்கள் இப்போது sump அமைத்து குடிதண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். தாளக்கரைக்கு அருகில் இந்தத் தடுப்பணை கட்டினால் தாராபுரத்திலிருந்து காங்கேயம் வரும் வழியிலிருக்கும் அனைத்து வழியோர கிராமங்களுக்கும் காங்கேயத்திற்கும் குடிநீர் கிடைப்பதற்கு மிகவும் பேருதவியாக இருக்கும் என்பதால் இந்தத் தடுப்பணையைக் கட்டுவதற்கு ஆவன செய்து கொடுக்குமாறு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவுடன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. ராமராஜ்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேவாரம் பகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் பக்கத்தில் ஏறக்குறைய 600 ஹெக்டேர் நிலப்பரப்புள்ள பகுதியில், 30 ஆண்டுகளுக்கு முன்பாக இயற்கைச் சீற்றத்தினால் அங்கே இருந்த ஒரு மிகப் பெரிய அணை, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து நீர் வரத்து அதிகமாக இருந்த காரணத்தால், பெரும் வெள்ளத்தால் உடைந்து, இன்று அந்தப் பகுதி மக்கள் வறட்சியின்கீழ் தவிக்கின்ற இந்த நேரத்தில், அந்தப் பகுதி மக்களினுடைய சார்பாக பணிவான ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். அந்தப் பகுதியும் தங்களுக்குத் தெரிந்த பகுதிதான். 30 ஆண்டுகளுக்கு முன்பாக உடைந்திருக்கின்ற அந்த அணைக்கட்டை மீண்டும் கட்டித் தரும்படி எங்களது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையாகத் தரும்பட்சத்தில் அவருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு லா. சந்தானம்.



**திரு லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை பகுதியிலே ஓடுகின்ற வைகை ஆற்றிலே மதுரைக்குக் கீழ்புறமாக விரகனூர், பார்த்திபனூர் அணைகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. மதுரைக்கு மேற்கே உள்ள பகுதிகளில் குடிநீர் ஆதாரத்திற்காகப் பல்வேறு இடங்களுக்கு, திண்டுக்கல், திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற பகுதிகளுக்கு எல்லாம், குடிநீர் எடுக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் மதுரைக்கு மேற்குப் பகுதியில் மேலக்கால் அருகிலே ஒரு அணைத் திட்டத்தை ஏற்படுத்தித் தந்தால் அது குடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதாக அமையும் என்கின்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் நியாயத்தின் அடிப்படையில் அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் உள்ள அமராவதி அணையானது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல மேலே 6 அணைகள் கீழே 3 அணைகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. மாண்புமிகு தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் கூறியதுபோல அந்த இடத்திற்குச் சரியாக தண்ணீர் செல்வதில்லை என்று இருக்கக்கூடிய நிலையிலே அந்த ஒவ்வோர் அணைக்கட்டும் உலக வங்கித் திட்டத்திலோ அல்லது ஏதாவது ஒரு நிதி ஆதாரத்தின்மூலமோ சரிபார்க்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 68, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**68—**

**சரக்குக் கிடங்குகள்**

***37720—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பராமரிப்பிலுள்ள சரக்குக் கிடங்குகள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அவற்றை அதிகப்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தற்போது 230 கிடங்குகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்த கொள்ளளவு சுமார் 7.50 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

(ஆ) ஆண்டிப்பட்டி மற்றும் கும்மிடிப்பூண்டி தாலுகாக்களில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு கிடங்குகள் 66 இலட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 69, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**69—**

**வீடு கட்டக் கடன் தொகை**

***37365—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 29]

(அ) தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு வீடு கட்ட வழங்கப்படும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும்போது ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியில் 50 சதவிகிதம் மாதத் தவணைகளாகப் பிடித்தம் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பிற அரசு ஊழியர்களுக்கு உள்ளது போல பிடித்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு ஆணை எண் 366, வீட்டுவசதித் துறை நாள் 20–3–1995–ன்படி வாரியத்தில் வெளியிடப்பட்ட (நிரந்தரம்) வாரிய ஆணை (தலைவர்) எண் 85 நாள் 7–4–1995–ல் வீடு கட்டும் முன் பணத்தொகை பிடித்தம் 40 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாணை அரசாணைக்குட்பட்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) (1) 20 ஆண்டுகளுக்கு மேல் கடனைத் திரும்பச் செலுத்தும் காலம் உள்ள வாரியப் பணியாளர்கள் மற்றும் அதிகப்படியான வீடு கட்ட முன்பணத் தொகை பெறுபவர்களின் பிடித்தத்தொகை, அவர்கள் மீதமிருக்கும் பதவிக்காலம் முழுவதிலும் அடிப்படைச் சம்பளம் plus அகவிலைப்படியில் 40 விழுக்காட்டிற்கு குறைவில்லாமலும், அசல் 180 தவணைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். மேலும் 40 விழுக்காடு மதிப்பிடுகையில் ஏற்கெனவே பிடித்தம் செய்யப்பட்டு வரும் வீடு கட்டுவதற்கான முன்பணத் தொகையினையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

(2) கடனைத் திரும்பச் செலுத்தும் பதவிக் காலம் 20 ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ள வாரியப் பணியாளர்களின் அசல் மற்றும் வட்டி பிடித்தத்தொகை அவர்கள் பதவிக் காலத்தில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னர் பிடித்தம் செய்யப்பட வேண்டும். அப்பிடித்தம் அடிப்படைச் சம்பளம் plus அகவிலைப்படியில் 40 விழுக்காடு இருத்தல் வேண்டும். இறப்பு ஓய்வு பணிக்கொடையினையும் கணக்கில் கொள்ளலாம். ஏற்கெனவே பிடித்தம் செய்யப்பட்ட வீடு கட்டுவதற்கான முன்பணத் தொகையினையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

[2004 ஜூலை 29

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியப் பணியாளர்கள் வீடு கட்ட பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துகிறபோது முன்பணத் தொகை பிடித்தம் 50 விழுக்காடு உயர்த்தப்பட்டபோது 120 அல்லது 130 தவணைகளிலேகூட கடனைத் திருப்பிச் செலுத்துகிற நிலை முற்றுப்பெறுகிறது. இதுபோன்ற நிலை ஏற்படுகிறபோது 180 தவணைகளுக்கும் கடனைச் சமமாகப் பகிர்ந்து செலுத்தும் நிலை உருவாக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறிய பதிலிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். 20 வருடங்களுக்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு பிடித்தம் 40 சதவீதம். 20 வருடங்களுக்குக் குறைவாகப் பணிக்காலம் உள்ளவர்களுக்குப் பிடித்தம் 40 plus 10. இது மின்வாரியத்திற்கு மட்டுமல்ல; அரசாங்கம் மூலம் அளிக்கப்பட்ட ஆணை; எல்லோருக்குமே இது பொருந்தும். எனவே, இதைப் பரிசீலிப்பதற்குத் தற்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 70, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**70—**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

*** 44740—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதியில் கூடுதலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2004 ஜூலை 29]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்க நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10–9–2003 அன்று கேள்வி எழுப்பியிருந்தார்கள். நான் ஏற்கெனவே, நேற்றுக் குறிப்பிட்டதுபோல, நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விரைந்து செயலாற்றுகிறது என்பதற்கு இதையும் ஓர் உதாரணமாக இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மேற்படி நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10–9–2003 அன்றைக்குக் கேள்வி எழுப்பியவுடனேயே 27–2–2004 அன்று முதல் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களது பொற்கால ஆட்சியில் நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில் கூடுதலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தேவை என அங்குள்ள பொதுமக்களும் பெரியோர்களும் விரும்பினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களது சீரிய தலைமையின்கீழ் தமிழகத்தில் ஆட்சி ஏற்பட்டபின், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினராகிய நான் இத்தொகுதியில் கூடுதலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தேவையென்ற கோரிக்கையை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு பரிசீலித்து இந்த நீதிமன்றம் செயல்படுவதற்குரிய ஆணைகளை வழங்கி கூடுதலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாங்குநேரி நீதிமன்ற வளாகத்திலேயே செயல்பட வைத்துள்ளார்கள். இவ்வேளையில் இதற்காக நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களது பொற்பாதங்களில் எனது நன்றியைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மேலே சொன்ன நீதிமன்றம் தனிக் கட்டடத்தில் செயல்பட இதற்கென புதிய நீதிமன்றக் கட்டடம் அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஆணை வழங்கி உதவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோரிக்கையை விடுத்தது 10–9–2003, நீதிமன்றம் தொடங்கப்பட்டது 27–2–2004 என்று சொல்லும்பொழுது கிட்டத்தட்ட 6 மாதத்திற்குள்ளே அவரது கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தற்போது கட்டடம் வேண்டுமென்கிற கோரிக்கையை விடுத்திருக்கின்றார்கள். 140 கோடி ரூபாய்க்கு மத்திய அரசாங்கத்திற்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பல முறை இந்த மாமன்றத்திலேயே குறிப்பிட்டிருக்கிறோம். 140 கோடி ரூபாய் என்று சொல்லும்பொழுது, matching grant–ஆக மத்திய அரசு 70 கோடி ரூபாய் தர வேண்டும். மாநில அரசு 70 கோடி ரூபாய் செலவு செய்யத் தயாராக இருக்கிறது. மத்திய அரசு 70 கோடி ரூபாய் one time–ஆக, special grant–ஆகக் கொடுத்தாலும்கூட, ஒரே வருடத்திலே தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை நீதிமன்றங்களுக்கும் நல்ல, அழகிய கட்டடங்களை நம்முடைய அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுப்பார்கள். எனவே, இந்த 140 கோடி ரூபாய் proposal–லிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை priority–யிலே வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். நம்முடைய தருமபுரி மாவட்டத்திற்கென மாவட்ட Sessions Court கிருஷ்ணகிரியிலே செயல்பட்டு வந்தது. தற்போது தருமபுரி மாவட்டத்திலிருந்து பிரிந்து, கிருஷ்ணகிரியை தனி மாவட்டமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். ஆகவே தருமபுரி மாவட்டத்திற்கென தனியாக ஒரு Sessions Court கொடுக்க நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றால் அதாவது, constitution of new Courts என்கின்றபோது, உயர் நீதிமன்றத்தின் கருத்துருவைப் பெற்றுத்தான் நாம் அமைக்க முடியும். எனினும், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டம் என்பதால்



நிச்சயமாக அங்கே நீதிமன்றம் வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. எனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கருத்து உயர் நீதிமன்றத்திற்கு இந்த வாரமே பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்படும். உயர் நீதிமன்றம் அளிக்கின்ற பரிந்துரையின் அடிப்படையிலே அங்கே நீதிமன்றம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 71, திரு. கே.எஸ். பழனிசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10–35*

71—

**பக்தர்களுக்கு வசதிகள்**

***32848—திரு. கே.எஸ். பழனிசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, தம்பிக்கலை அய்யன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அறநிலையத் துறை மூலம் வசதிகள் செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பள்ளப்பாளையம் கிராமம் அருள்மிகு தம்பிக்கலை அய்யன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குத் தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சேவார்த்திகளின் வசதிக்காக அரசு மற்றும் தனியார் மூலம் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்கி சுவாமி தரிசனம் செய்வதற்காகத் தங்கும் விடுதிகள் (28 அறைகள்) குறைந்த வாடகையில் ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளன. சமுதாயக்கூடமும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டு குறைந்த வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. மேற்கூறியவாறு பக்தர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியிலுள்ள தம்பிக்கலை அய்யன் கோயில், தமிழகத்திலுள்ள ராகு ஸ்தலங்களில் மிக முக்கிய ஸ்தலமாக இருக்கிற காரணத்தினால் பல்லாயிரக்கணக்கான பக்தகோடிகள் அங்கு வருகிறார்கள். பஸ் வசதி இருக்கிறது என்று சொன்னார்கள். சக்தி—ஈரோடு சாலையிலிருந்து திருக்கோயிலுக்கு வரும் 5 கிலோ மீட்டர் சாலை நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட சாலை; மிகவும் பழுதடைந்து உள்ளது. அதைச் சரி செய்து கொடுக்க வேண்டுமென்றும், என்னுடைய தொகுதியிலே அன்னதானத் திட்டம் நடைபெறாத, மிகவும் பிரசித்திப்பெற்ற கோயிலிலே, அன்னதானத் திட்டத்தை இந்த ஆண்டே ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்றும், கோயிலுக்கு உட்பட்ட 10 ஏக்கர் நிலத்திலே ஒரு திருக்குளம் அமைக்க வேண்டுமென்று நீண்டநாட்களாக பக்த பெருமக்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்தக் கோரிக்கையை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தெந்த ஆலயங்களில் நிதி வசதி இருக்கிறதோ, அந்தந்த ஆலயங்களை எல்லாம் தேர்வு செய்து அங்கேயெல்லாம் அன்னதானத் திட்டத்தை அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய ஆலயங்களிலேயும் அன்னதானத் திட்டத்தை அறிவிப்பதற்கு வேண்டிய நிதி இருக்குமேயானால், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கிற ஆன்மீக பக்தர்களிடையே நிதி வசூலித்து அந்த அன்னதானத் திட்டத்தை நடத்துவதற்கு முன்வருவார்களேயானால், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு அந்த ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தைத் துவக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல, குளங்கள் இருக்குமேயானால், நிலங்கள் இருந்தால், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசு அனைத்து ஆலயங்களிலே இருக்கிற குளங்களிலும் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்கும். அதைப்போல அந்த ஆண்டவனுடைய ஆலயங்களிலே இருக்கிற குளங்களில் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சாலைகள்



போடுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, பொதுப் பணித் துறை அமைச்சரிடம் நிதியைப் பெற்று சாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கோயிலுக்கு உட்பட்டு 10 ஏக்கர் நிலம் உள்ளது. புதிதாகத் திருக்குளத்தை இந்து சமய அறநிலையத் துறை மூலம் இந்த ஆண்டே ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளம் கட்டுவதற்கு நிலம் இருக்குமேயானால், இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஏற்பட்ட பிறகு தமிழகத்திலே உள்ள அனைத்துக் கோயில்களும் புனரமைக்கப்பட்டு குடமுழுக்குச் செய்யப்பட்டு வருகிற இந்த நல்ல வேளையிலே உலகப் பிரசித்திபெற்ற 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றான சோளிங்கர் இலட்சுமிநரசிம்ம சுவாமி மலைக்கோயிலுக்கு பழநியில் அமைத்துள்ளதுபோல் ஒரு rope car அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அல்லது இழுவை இரயில் அமைக்கும் திட்டமாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். 1405 படிகளைக் கொண்ட சோளிங்கர் இலட்சுமிநரசிம்ம சுவாமி மலைக் கோயிலுக்கு முதியவர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் சென்று வழிபடுவதற்கு ஏதுவாக இல்லையென்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சோளிங்கர் மலைக் கோயிலுக்கு ஓர் இழுவை இரயில் அல்லது rope car அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் தருவதற்கு வசதியாக இருக்கும்.

[2004 ஜூலை 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: வினா எண் 72, திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**72—**

## கோயில் குடமுழுக்கு

***37594—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள செல்லியாண்டியம்மன் திருக்கோயிலில் குடமுழுக்குச் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயில் கடந்த 1995 ஆம் ஆண்டு பவானியிலுள்ள இந்து ஆலய பாதுகாப்பு கமிட்டியினர் மற்றும் உபயதாரர்கள் மூலம் 15-7-1995ல் குடமுழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடியவில்லை. எனினும் 12 ஆண்டுகள் முடியும் முன்பே இங்கே திருப்பணி செய்ய வேண்டுமென்று அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் விரும்புகிற காரணத்தினால், அந்த ஆலங்களில் போதிய நிதி வசதி இருக்கிற காரணத்தினால் அந்தப் பகுதி மக்களுடைய வசதிக்கேற்ப அங்கே இராஜகோபுரம் கட்டி, குடமுழுக்குச் செய்ய கோயில் நிருவாகமும் மற்றும் ஊர் பொதுமக்களும் முன்வந்திருக்கிற காரணத்தினால் அங்கே அந்தப் பணி நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்தர்களுக்கு முதலிடம் கொடுத்தும், பசிப் பிணியைப் போக்க கோயில்களிலே அன்னதானத் திட்டம் தந்தும், 6,000 ஆதிதிராவிடர்



2004 ஜூலை 29]

திருக்கோயில்களுக்கு இப்போது 25,000 ரூபாய் நிதி கொடுத்தும், பக்தர்களைக் காத்துக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், ஜமுக்காளம் நகரம் என்று பெயர் பெற்ற பவானி நகரில் அமைந்துள்ள அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயிலில் இப்போது கோபுரம் சிறிது பழுதடைந்துள்ளதால் 12 ஆண்டுகள் நிறைவைப் பெறாமலேயே கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று அங்குள்ள சிவ பக்தர்கள் சங்கமும், முருக பக்தர்கள் சங்கமும் விருப்பம் தெரிவித்துள்ளன. அதற்குண்டான நிதியையும் இப்போது அவர்கள் வசூல் செய்து வைத்திருக்கிறார்கள். ஆகவே அதற்கு உடனடியாக திருப்பணி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில்— தமிழகத்தில்— இந்த மாமன்றத்தில் பொறுப்பேற்றுப் எத்தனையோ முதலமைச்சர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்ததால்தான், இப்போது வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஏழை எளிய மக்களுடைய ஆலயங்களுக்கும் திருப்பணி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், 6,000 ஆலயங்களைத் தேர்வு செய்து திருப்பணி செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆன்மிக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, நீங்கள் கூறிய அந்த ஆலயங்களுக்கு இந்த ஆண்டே திருப்பணிகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 73, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**73—**

## கிராமத்தில் மருத்துவ சிகிச்சை

***8664—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 29

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உறுமன்குளம் ஊராட்சி, பெட்டைகுளம் கிராமத்திற்கு அரசு மருத்துவர்கள் வந்து பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் உறுமன்குளம் ஊராட்சி, பெட்டைகுளம் கிராமத்திலே துணைச் சுகாதார நிலையம் செயல்படுகிறது. திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த மருத்துவ அலுவலர் பயணத் திட்டப்படி துணைச் சுகாதார நிலையத்திற்குச் சென்று அங்கு வரும் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள திசையன்விளையில் முழுநேர ஆரம்ப சுகாதார மையம் உள்ளது. கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு அந்தப் பகுதியில் இது ஒன்றுதான் ஆரம்ப சுகாதார மையமாகச் செயல்பட்டு வருகின்றது. மேற்படி ஆரம்ப சுகாதார மையத்தை முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சராகச் சிறப்பாகப் பணியாற்றிய திரு. செம்மலை அவர்கள், 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவதாக உறுதி அளித்திருந்தார்கள். தற்போது அண்டை மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நமது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பும், இன்னும், அது வரவில்லை. 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டால் அந்தப் பகுதி மக்களுக்கு அது வசதி வாய்ப்பாக இருக்கும். காரணம் அங்கிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் சாத்தான்குளம், ராதாபுரம் பகுதியில்தான் அரசு மருத்துவமனை இருக்கின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு திசையன்விளை அரசு ஆரம்ப சுகாதார மையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவதோடு, அருகில் உள்ள உறுமன்குளம் பஞ்சாயத்து, பெட்டைகுளம் துணைச் சுகாதார மையத்திற்கு மருத்துவர்களும் அதாவது M.B., B.S. டாக்டர்களும் சென்று வருவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2004 ஜூலை 29]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் ஒன்றியத்தில் தற்சமயம் 3 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. திசையன்விளை, கூடங்குளம், தெற்குக் கள்ளிகுளம் ஆகிய இடங்களில் மூன்று அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், 12 துணைச் சுகாதார நிலையங்களும் தற்சமயம் இயங்கி வருகின்றன. உங்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பெட்டைகுளம் பகுதிக்கு வாரம் ஒரு முறை மருத்துவர் சென்று, அங்குள்ள பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார். இந்த ஆண்டு நிதி நிலைமைக்கேற்ப அரசினுடைய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான, கனிவான பார்வைக்குச் சென்று, அதற்குப் பிறகு இதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தமைக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதே ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் கூடங்குளத்தில் அரசு ஆரம்ப சுகாதார மையம் உள்ளது. அந்தப் பகுதியில் அணுமின் திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே தங்கியிருந்து பணியாற்றி வருகிறார்கள். ஆகவே அந்த கூடங்குளம் ஆரம்ப சுகாதார மையத்தையும் வரும் நிதியாண்டில் 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்; உயர்த்தித் தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உறுதி ஒன்றும் அளிக்கவில்லை. நிதி நிலைமைக்கு ஏற்றாற்போல நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் சொன்னேனேயொழிய, வேறல்ல. உங்கள் தொகுதிக்கே 2 கேட்கிறீர்கள். ஒரு தொகுதி என்று எடுத்துக்கொண்டால், ஒரு ஒன்றியத்திற்கு ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையிலே, இந்தத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒரே யூனியனிலே இரண்டு

கேட்கிறீர்கள். ஆகவே நிதி நிலைமைக்கு ஏற்றாற்போலத்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். மகாலிங்கம்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, புதுப்பாளையம் ஊராட்சி 10-க்கும் மேற்பட்ட சிற்றூராட்சிகளைக் கொண்ட ஊராக உள்ளது. அங்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் இருப்பதனால், வஞ்சிப்பாளையம் மற்றும் முருகம்பாளையத்திலுள்ள பொதுமக்கள் அங்கே சென்று சிகிச்சை பெறுவதற்கு அதிக தொலைவு உள்ளதால், வஞ்சிப்பாளையம் என்கின்ற ஊரிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழகத்திலே 1,413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மத்திய அரசின் விதிமுறைப்படி 1,146 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் இருக்க வேண்டும். அதையும் மீறி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அதேபோல, துணைச் சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டால், 8,682 துணைச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 5,000 மக்கள்தொகை கொண்ட கிராமப் பகுதிகளுக்கும் ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலே, இதுவரையில் தமிழ்நாட்டிலே 8,682 துணைச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே தற்சமயம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதல் பெற்று, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றைக்கு சர்க்கரை வியாதி உள்ள நோயாளிகள் அதிக அளவிலே இருக்கிறார்கள். அந்தச் சர்க்கரை வியாதியினுடைய...





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு இல்லையா? *(சிரிப்பு)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, எனக்கு இல்லை. சர்க்கரையினுடைய அளவை உடனுக்குடன் கண்டுபிடிக்கின்ற Glucometer என்ற கருவி அரசாங்க hospital-ல் இருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவை இல்லாத காரணத்தால், அந்தச் சர்க்கரை நோயினை உடனுக்குடன் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தக் கருவியினுடைய விலை சாதாரணமாக 3,000 ரூபாய்தான் இருக்கும். ஆகவே அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அந்தக் கருவிகளை வழங்குவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்வதோடு, அப்படி நிதிநிலைமையைக் கருதி முடியவில்லை என்றாலும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதை வாங்குவதற்கு நிதியமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், தற்சமயம் கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்த 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் Glucometer, Mobile E.C.G., X-ray Machine போன்ற கருவிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்து, சுகாதாரத் துறை அதைச் செயல்படுத்தி வருவதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே ஒரேயொரு ஆரம்ப சுகாதார நிலையம், அதுவும் துணைச் சுகாதார நிலையமாகச் செயல்பட்டு

வருகின்றது, செங்களவர்புரி என்ற பகுதியிலே இருக்கக்கூடிய ஓரேயொரு துணைச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலே இந்தத் தொகுதிக்கு ஒரு தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக, மருத்துவமனையாக அமைக்கக்கூடிய அடிப்படையிலே, இந்த நிதியாண்டிலே செங்களவர்புரி துணைச் சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கிட்டத்தட்ட 117 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. வருகின்ற நிதியாண்டிலே நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையின்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. பெ. வாசுதேவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**74—**

## அவசர ஊர்தி

***42201—திரு. பெ. வாசுதேவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, செய்யூர் அரசு பொது மருத்துவமனைக்கு அவசர ஊர்தி (Ambulance) தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட செய்யூர் அரசு மருத்துவமனையில் தற்பொழுது நல்ல நிலையிலே ஓர் ஆம்புலன்ஸ் வாகனம் இயங்கி வருகிறது. எனவே இம்மருத்துவமனைக்கு மற்றுமோர் அவசர ஊர்தி வழங்கும் அவசியம் எழவில்லை.





*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வாசுதேவன். (குறுக்கீடு) இல்லையா? வினா எண் 75, திரு. பால் மனோஜ் பாண்டியன் (குறுக்கீடு) திரு. வாசுதேவன்.

**திரு. பெ. வாசுதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதைப் பார்த்து தமிழக மக்கள் அனைவரும் அம்மா அவர்களைப் பாராட்டுகின்றார்கள். எனது மதுராந்தகம் தொகுதியில் செய்யூர் அரசு பொது மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வசதி தற்சமயம் இல்லை; அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இருக்கின்றது என்று. அந்த ஆம்புலன்ஸ் செய்யூர் அரசு மருத்துவமனையில் இல்லை; தற்சமயம் இல்லை. அமைச்சர் அவர்கள் அதைச் சரிவர ஆய்வு செய்து, எங்கள் செய்யூர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வசதி பெற்றுத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வாசுதேவன், இடத்தை மாற்றி உட்கார்ந்திருக்கிறீர்களா? சரி, சரி.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு சில குறிப்புகளைக் கொடுக்கிறேன். ஆம்புலன்ஸ் வாகனம் நல்ல நிலையிலே இயங்கி வருகிறது. ஊர்தி பதிவு எண் T.N.21G.1525 என்ற நம்பர் கொண்ட அந்த வாகனம் அங்கே இயங்கி வருகிறது. மேலும் தங்களுடைய கோரிக்கையை ஏற்று இதுசம்பந்தமாக ஆய்வு செய்கிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த ஆம்புலன்ஸ்களுக்கும், அதுபோக மருத்துவத் துறையின் சார்பாக இயங்கக்கூடிய அத்தனை ஊர்திகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக அங்கே டிரைவர்களை நியமிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுபோன்று ஆம்புலன்ஸ்கள் எந்த எந்த மாவட்டங்களில் எந்த எந்த மருத்துவமனைகளில் இயங்காமல் இருக்கின்றனவோ அவற்றையும் இயங்க வைக்க கடந்த ஒரு மாத காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பல்வேறு கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஆம்புலன்ஸ்கள் எல்லாம் செம்மையான முறையிலே இயங்கி வருகின்றன.

[2004 ஜூலை 29

**திரு. பெ. வாசுதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செய்யூர் மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் இல்லை; அங்கே டிரைவர் இல்லை என்று சொன்னார்கள். ஆம்புலன்சும் இல்லை. அங்கே காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையிலே ஆம்புலன்ஸ் இருப்பதாக அறிகிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆம்புலன்ஸ் வழங்கினால் எங்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்ற மக்களுக்கு இலகுவாக இருக்கும் — ஆகவே அந்த ஆம்புலன்ஸைப் பெற்றுத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாகக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**75—**

## அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லம்

***16545—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அ) இல்லை.

ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2004 ஜூலை 29]

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் எத்தனை அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினர் மகளிர் காப்பகங்கள் என்பது; பாலியல் தொழிலில், பரத்தமைத் தொழிலில் ஈடுபடும் பெண்கள், குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும், தனியார் தொண்டு நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிப்பதற்காகவும், நீதிமன்றத்திலே தண்டனை வழங்கப்படுகின்ற காலத்தில், அந்தக் குறுகிய காலத்திலே தங்க வைப்பதற்குரிய இடங்கள்தான் அரசினர் மகளிர் காப்பகங்கள் என்பவை. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் என்கிற தடுப்புச் சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்டவை பாதுகாப்பு இல்லங்கள். மகளிரும், சிறுவர்களும் தண்டனை பெற்று சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகின்ற காலம் வரை தற்காலிகமாக, அந்தக் குறுகிய காலத்திலே, தங்க வைக்கப்படக்கூடிய இடங்கள் இந்த மகளிர் காப்பகங்கள் என்பவை. இது நெல்லை மாவட்டத்திலே இல்லை. சென்னையிலே இரண்டு இடங்களிலும், மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இந்த இடங்களிலே மட்டும்தான் இந்தக் காப்பகங்கள் இப்போது அரசின் சார்பிலே நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுடைய பழக்கவழக்கங்கள்பற்றி அந்த மாவட்டத்திலேயிருந்து குற்றச்சாட்டுகளாக அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி அதிகமாகக் குற்றங்கள் இழைக்கப்படுகின்ற சூழ்நிலைகள் உருவாக்கப்படுமேயானால் அவற்றைத் தடுப்பதற்குரிய வழிகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொண்டு நிறுவனங்களோடு சேர்ந்து எடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. ராதாரவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

76—

## கருத்தரங்குகள்

***31918—திரு. ராதாரவி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்க போக்குவரத்து விதிகள் குறித்த கருத்தரங்குகளை மாவட்டந்தோறும் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்க, மாவட்டங்கள்தோறும் கருத்தரங்குகள் நடத்துவதற்கு, சாலைப் பாதுகாப்பு விதியின்கீழ் வெளியிடப்பட்ட வழிமுறைகள் வகை செய்கின்றன. இதுகுறித்து மாவட்ட அலுவலர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ராதாரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இப்படிக் கருத்தரங்குகள் நடக்கின்றன என்று. ஆனால் நான் ஏறத்தாழ மூன்று இலட்சம் கிலோ மீட்டர்வரை சுற்றியிருக்கிறேன், இந்தத் தமிழ்நாட்டிலே, இந்த நான்கு வருடங்களிலே. எந்த இடத்தில் பார்த்தாலும் விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. எனவே நான் சென்ற முறையே மாண்புமிகு அமைச்சரிடம் தெரிவித்தேன். Bus ஓட்டுபவர்கள், நெடுஞ்சாலைகளிலே போகும்போது overtake பண்ணுவதற்கு right signal போடுகிறார்கள்; அது தவறான ஒரு வழிமுறை; இதுதான் விபத்துக்கு ஒரு main காரணம். Left signal-தான் போட வேண்டும்; மேலும், அரசாங்க bus ஆகட்டும், இல்லை, omni bus ஆகட்டும், எந்த bus-ஆக இருந்தாலும், உள்ளே உட்காருபவர்களுக்கு ஊர் போவதற்கு ticket கொடுக்கிறார்கள். எதிரே வருகிறவர்களுக்கு மேலே போவதற்கு ticket தருகிறார்கள். ஏனென்றால், அவர்கள் எதிர்த்துதான் ஓட்டிக்கொண்டு வருகிறார்கள். நம் வண்டி மேலே ஏறி இறங்கினால்தான்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கருத்தரங்கை நடத்தும்போது ராதாரவியுடைய தலைமையில் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. ராதாரவி:** நன்றி. ஏனென்றால், உண்மையிலேயே நான் ஒரு நல்ல driver. அதற்காகத்தான் இதைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன், நான். மேலும், Yoga classes, Vedanta classes நடத்தலாம். ஏனென்றால், மனிதாபிமானம் இல்லாமல்தான் ஓட்டுகிறார்கள். நம்முடைய கருத்தரங்கிலே இப்படிப்பட்ட ஒரு system இருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. இன்று அமெரிக்காவிலே பார்த்தீர்களென்றால், நீங்கள் வெளிநாட்டிலே பார்த்தீர்களென்றால், வயது 16-லிருந்து 18 வரைக்கும்தான் Drivers Vehicle Centre என்று வைத்திருக்கிறார்கள். அதிலே, முதலிலே, road rule கற்றுத் தருகிறார்கள். பின்னர், Highway rule கற்றுத் தந்து, மூன்று மாதத்திற்குப் பின்னர் written test வைக்கிறார்கள். அதைப்போல நம்மிடம் test இருக்கிறதா? Written test இருக்கிறதா? அங்கே அதற்குப் பின்னர்தான் driving test கொடுக்கிறார்கள். நம்மிடம் இருப்பது வெறும்- driving test-தானேயொழிய, written test அல்ல என்று நான் நினைக்கிறேன். அதிலேயும் மேலும் மூன்று தடவை fine போட்டால், அந்த licence-ஐ மூன்று வருடத்திற்கு suspend பண்ணுகிறார்கள். மூன்று தடவைக்கு மேலே தவறு செய்தால் மொத்தமாகவே அவர்களுக்கு அந்த licence தருவதில்லை. இதைப்போல ஒரு hard-ஆன rule-ஐ நாம் எடுத்து வைத்தோமானால், ஒருவேளை accident-ஐ நாம் தவிர்க்கலாம்.

அதேபோல, இப்போது அரசாங்க bus ஓட்டுபவர்களாக இருந்தால் ஒரு வருடத்திற்கு suspend பண்ணி வைக்கலாம். இதுபோல நாம் கொஞ்சம் hard-ஆன rule-ஐ வைக்காததனால்தான், அவர்களும் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் இருப்பதால்தான் நிறைய accidents நடக்கின்றன. நாம் பொதுவாக licence முறையை வைத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது அல்ல, தொன்றுதொட்டு, இதேபோல் தவறாகத் தந்து கொண்டிருக்கிறோம். அதை மாற்றுவதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான் முடியும். வேறு யார் ஆட்சியிலும் இதற்கு நிவர்த்தி வராது என்பது என்னுடைய எண்ணம். அதனால் இப்படிப்பட்ட திட்டங்கள் இருக்கின்றனவா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி அவர்கள் அரிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். அவருக்கு நானும் சில கூடுதல் தகவல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாலைகளில் பாதுகாப்பான போக்குவரத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் வருடத்தின் தொடக்கத்தில் முதல் வாரத்தில் சாலைப் பாதுகாப்பு வாரம் தமிழகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சாலைப் பாதுகாப்பு வாரங்களில் விழிப்புணர்வைப் பரப்புவதற்காக சுவரொட்டிகள் அச்சடித்து, சிறு புத்தகங்கள் வழங்கி, விபத்துகளைத் தவிர்ப்பது மற்றும் பாதுகாப்பான பயணம் குறித்தெல்லாம் எல்லா மக்களுக்கும் விளக்கிச் சொல்லப்படுகிறது. அதிலும் குறிப்பாக, கல்லூரி மாணவர்களுக்கு, குறிப்பாக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி மூலமாக ஓட்டுநர் உரிமம் பெறுபவர்களுக்கு licence புதுப்பிப்பவர்களுக்கு மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு—அவர்களுக்கும்கூட அந்த விதிமுறைகளெல்லாம் சொல்லித் தரப்படுகின்றன. தேசிய மற்றும் நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளை ஆராய்ந்து அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக மாநில போக்குவரத்துப் பாதுகாப்பு ஆலோசனைக் குழு ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு மாநில போக்குவரத்து பாதுகாப்பு ஆலோசனைக் குழுவிற்கு மாநிலத்தினுடைய போக்குவரத்துத் துறை அமைச்சர்தான் தலைவராக இருந்தார். இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்போது மாநில போக்குவரத்துப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே இந்த ஆண்டு தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்; மனமுவந்து அந்த தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக் குழுவிற்கு தலைமை ஏற்று நடத்துகிறார். போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் செயலாளர், தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், உள் துறைச் செயலாளர், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர்,





நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர், காவல் துறை இயக்குநர், சென்னை மாநகர காவல் துறை ஆணையர், போக்குவரத்து ஆணையர் மற்றும் சென்னை வளர்ச்சிக் குழுமத்தின் தலைவர், சென்னை மாநகராட்சி ஆணையர், தலைமைப் பொறியாளர்—தேசிய நெடுஞ்சாலை, தலைமைப் பொறியாளர்— நெடுஞ்சாலைத் துறை, இயக்குநர், சாலைப் போக்குவரத்து நிறுவனம், மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் போன்றவர்கள் இந்த உயர்மட்டக் குழுவிலே உறுப்பினர்களாகப் பொறுப்பு வகிக்கிறார்கள். அதுபோல சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், தலைவர், சிற்றுந்து உரிமையாளர் சங்கம், Managing Trustee, CONCERT--பொதுச் செயலாளர், St. John's Ambulance தலைவர், தென்னிந்திய ஆட்டோமொபைல் சங்கத்தினர், போக்குவரத்துத் தலைமை வார்டன் போன்றவர்கள் எல்லாம் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்படுகிறார்கள். மாநில அளவிலே இப்படிப்பட்ட உயர் மட்டக் குழு ஒன்று இயங்கி வருகின்ற வேளையில், மாவட்ட அளவிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே, ஒரு குழு அமைக்கப்பட்டு இன்று அதுவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்தக் குழுவும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட அளவிலே கூடி விபத்துகளைத் தவிர்ப்பது மற்றும் பல்வேறு பாதுகாப்பான போக்குவரத்திற்கு வேண்டிய வழிகளை ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை சொல்கிறது. அதுமட்டுமல்லாமல், இப்போது இந்தக் குழுவிலே அந்தந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி அந்த மாவட்டக் குழுவிலே மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இனி வருங்காலங்களில் நடைபெறும் அந்தக் கூட்டங்களில், மாண்புமிகு உறுப்பினர் நமது ராதாரவி அவர்களும் கலந்துகொள்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அந்தக் கூட்டங்களிலே கலந்து கொண்டு இன்றைக்கு அவர் கொடுத்திருக்கின்ற அந்த நல்ல ஆலோசனைகளை எல்லாம் அதன் மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, இப்போது விபத்துகளைத் தடுப்பதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக Trauma Care Centres—அதாவது அவசர விபத்துத் தடுப்பு மையங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைத் (மேசையைத்

தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே 80 மையங்களில் தமிழ்நாடு முழுவதும் விபத்துத் தடுப்பு மையங்களை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே இப்போது 70 மையங்கள் நடைபெற்று வருகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில், விபத்துகள் நடந்துவிட்டாலும்கூட, அதிலிருந்து மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்கின்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்; ஓட்டுநர் உரிமம் வழங்குவது குறித்து விழிப்புணர்வு வேண்டும், சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகளை ஏற்று, ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதில் அரசு கடுமையான போக்கை இப்போது கடைப்பிடித்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல, அந்த ஓட்டுநர்களுக்கு யோகா பயிற்சி எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே ஓட்டுநர்களுக்கு, குறிப்பாக அரசுப் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஓட்டுநர்களுக்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது என்கின்ற தகவலையும் அன்போடு அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தளவிலே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, அம்மா அவர்களுடைய அரிய ஆலோசனைகளின்படி, அவருடைய வழிகாட்டுதலின்படி, விபத்துகளைத் தடுப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக, வேகமாக எடுத்துவருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**77—**

## பென்சிலின் தொழிற்சாலை

***8498—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





அம்பாசமுத்திரம் தொகுதியில் ரூ.200/– கோடி செலவில் மத்திய அரசு அறிவித்த பென்சிலின் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசின் பங்கு என்ன?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் பென்சிலின் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்சிலின் என்பது உயிர் காக்கும் மருந்து. இந்த பென்சிலின் என்பது Penicillium Notatum என்று அழைக்கப்படும் ஒரு பூஞ்சைக் காளானிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் உயிர் காக்கும் மருந்துகள் இல்லையென்று அறிந்த விஞ்ஞானிகள் அதாவது Flarry Chain, அதற்குப்பின் Alexander Fleming ஆகிய விஞ்ஞானிகள் இந்த அற்புதமான பென்சிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தார்கள். இந்த பென்சிலின் மருந்து Rheumatic Fever என்று அழைக்கப்படும் காய்ச்சலுக்கும், Sexually Transmitted Diseases என்று அழைக்கப்படும் பால்வினை நோய்களுக்கும் Leptospirosis என்று அழைக்கப்படும் எலிக் காய்ச்சல் நோய்க்கும் மிகவும் அற்புதமான ஓர் உயிர்காக்கும் மருந்து. இந்த மருந்து இந்தியாவிலே கல்கத்தாவிலும் பம்பாயிலும் Vikram Sarabhai என்ற Drug Company-யால் மட்டும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த பென்சிலின் தயாரிப்பதற்குரிய மூலப்பொருள்– raw material ஆன பூஞ்சைக் காளானை உருவாக்குவதற்கும் விளைவிப்பதற்கும் ஏற்ற ஒரு தட்பவெப்பம் என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதியான பொதிகை மலையில்தான் இருக்கிறது. முன்னர் மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த எங்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு மறைந்த திரு. அருணாச்சலம் அவர்கள் 1984–லேயே அம்பாசமுத்திரம் தொகுதியிலே பென்சிலின் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று அறிவித்து அதற்குரிய பூர்வாங்க வேலைகள் அந்த நேரத்தில் நடந்தன. அனைத்துப் பத்திரிகைகளிலும் அம்பாசமுத்திரம் பகுதியில் இந்தத் தொழிற்சாலை இதோ வருகிறது, அதோ வருகிறது என்று எழுதினார்கள். எங்கள் தொகுதி மக்களும் அதை எதிர்பார்த்து இருந்தனர். அந்த நேரத்திலே மத்திய அரசாங்கத்தின் மூலம் ஏமாற்றம்தான் மிஞ்சியது.

எனவே இந்த நேரத்தில் நான் அம்மா அவர்களுடைய அரசில் பங்கேற்றுள்ள எங்களுடைய மாவட்டத்தினுடைய தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் மீண்டும் இந்த அரிய, அற்புதமான தொழிற்சாலைக்கான—சுமார் 200 கோடி இல்லை என்றாலும், 50 கோடி அளவிலாவது மாநில அளவிலே நிறுவப்படும் என்று சொன்னால் நேரடியாக ஆயிரம் பேருக்கும், மறைமுகமாக பத்தாயிரம் பேருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடும். அனைத்து வசதிகளும், நீர் ஆதாரமும், நில ஆதாரமும் கொண்ட என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய மண்ணின் மைந்தர் அவர்கள், அம்மா அவர்களிடம் எப்படியாவது—அனுமதி பெற்று எங்களுக்கு இந்த அற்புதமான தொழிற்சாலையை அறிவிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். மாண்புமிகு எங்கள் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, இந்தத் தொழிற்சாலையை அம்பாசமுத்திரம் தொகுதியிலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TIDCO முதன்முதலில் பென்சிலின் தொழிற்சாலையை அமைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கோரியபோது அம்பாசமுத்திரத்தில் தொழிற்சாலையை நிறுவ விண்ணப்பித்து இருந்தார்கள். பிறகு புது டில்லியைச் சார்ந்த J. K. நிறுவனத்தினர் தொழில் முனைவோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுடன் இணைந்து பென்சிலின் தொழிற்சாலையை நிறுவ பல்வேறு இடங்களை ஆய்வு செய்ததில் கடலூரிலுள்ள SIPCOT வளாகம் பொருத்தமானது என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூபாய் 195 கோடி முதலீட்டில் பென்சிலின் தொழிற்சாலை நிறுவப்பட்டு 1995 ஆம் ஆண்டிலிருந்து உற்பத்தி துவங்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியில் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க புதிய தொழில் முனைவோர் யாரேனும் முன்வந்தால் அவர்களுக்குப் புதியதாக, அம்பாசமுத்திரம் பகுதியில் பென்சிலின் தொழிற்சாலையை நிறுவுவதற்கு அரசு அனைத்து உதவிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.





**78—**

## டைடல் பூங்கா

***23761—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் டைடல் பூங்கா–II அமைக்கும் பணியை அரசு விரைந்து முடிக்குமா?

(ஆ) ஆம் எனில், இதுபோன்ற டைடல் பூங்கா கோயம்புத்தூரில் எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் மற்றும் சிங்கப்பூர் நிறுவனமான அசென்டாஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் சேர்ந்து சென்னையில் தரமணியில் டைடல் பூங்கா, அதாவது புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்குக் கொள்கை அளவில் 4–7–2002 அன்று கையெழுத்திட்டு, டிட்கோவும் அசென்டாஸும் சேர்ந்து 17–6–2003 அன்று இணைத் துறை ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டது. ஒவ்வொரு கட்டமும் 18 மாதங்கள் என்ற அடிப்படையில் 54 மாதங்களில் நிறைவேற்றிடத் திட்டமிட்டுள்ளது. முதல்கட்ட தொடக்கப் பணிகள் 140 கோடி ரூபாய் செலவில், கிட்டத்தட்ட 7,000 பேர்களுக்கு மேலாக வேலைவாய்ப்புப் பெறுகின்ற வகையில், வருகின்ற ஏப்ரல் 2005-க்குள்ளாகக் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சென்னையில் அமைந்துள்ளதைப்போல கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த டைடல் பார்க் அமைப்பது குறித்து தகவல் தொழில்நுட்பத் துறையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சென்னையிலே டைடல் பூங்கா–II அமைக்கும் பணி துரிதமாக நடைபெறுவதாகக் கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றியைக்

கூறிக்கொள்ள விரும்புகிறேன். டைடல் பூங்கா அமைக்கக் கூடிய பணியைப் பொறுத்தவரை சென்னை நகரம், கோவை நகரம் ஆகிய இரண்டு நகரங்கள் மட்டும்தான் டைடல் பூங்கா அமைப்பதற்கு உகந்த இடம் என்று Wipro, Infosys, Tata Consultancy போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் முனைப்போடு செயல்பட்டுவரும் இந்த வேளையில், கோவை நகரம், தொழில்நுட்பவியல் முதலீட்டிற்கு உகந்த இடமாக இருப்பதால், சென்னை நகரத்தைப்போல, கோவை நகரத்திலும், டைடல் பூங்கா அமைப்பதற்குத் துரித நடவடிக்கையை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவையைச் சுற்றிலும் போதிய இட வசதி உள்ளது; தொழிலாளர்கள் உள்ளார்கள்; பொறியியல் கல்லூரி அங்கே உள்ளது; இரயில் வசதி, பன்னாட்டு விமானப் போக்குவரத்து வசதி, டெலிபோன் வசதி போன்ற பல்வேறு வசதிகள் அங்கே இருக்கக்கூடிய வகையிலே, அங்கே தொழிலாளர்கள், படித்த பொறியியல் வல்லுநர்கள் வேலை செய்வதற்கு, வேலையில் அமர்த்துவதற்கு—சுமார் 15,000 பேர்களுக்கு அங்கே வேலை கொடுக்கக்கூடிய—ஒரு வாய்ப்பிருக்கும். அதைத் துரிதமாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அமைத்துத்தர வேண்டுமென்று உங்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலும், சென்னையிலே உள்ளதைப் போன்று தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்காக, கோவை மருத்துவக் கல்லூரிக்குப் பின்புறமுள்ள சுமார் 14 ஏக்கர் நிலப்பரப்பில், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், முதற்கட்டமாக, 2,50,000 சதுர அடி கொண்ட, தகவல் தொழில்நுட்பப் பூங்கா தொடங்குவதற்கு, 'எல்காட்' நிறுவனத்தின் மூலமாகப் பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தேவைகளுக்கேற்ப, இரண்டாவது கட்டத்தில், மேலும் 2,50,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கும், மாண்புமிகு அம்மா அவர்களால் உத்தேசிக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திரு. பி.கே.டி. நடராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**79— கால்நடை மருத்துவமனை**

***20800—திரு. பி.கே.டி. நடராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்தில், கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, 2,294 மட்டுமே. அதன் அருகில், 2 கிலோ மீட்டர் தொலைவில் பித்தனாப்பட்டி மற்றும் முத்தழகுப்பட்டி கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது துறையில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே, கால்நடை மருந்தகங்களாகவும், மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. எனவே பொன்னுமாந்துறை கிராமத்தில், தற்போது, எந்தவொரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்திற்கு அருகில் சின்ன பொன்னுமாந்துறை, காமாட்சிபுரம், குட்டியபட்டி, குருவப்பநாயக்கன்பட்டி, இராயர்பட்டி, டி. புதூர், மல்லேந்திரபுரம், வண்ணாம்புதூர், பள்ளப்பட்டி போன்ற

அனைத்துக் கிராமங்களையும் சேர்த்து, 10,000 கால்நடைகள் வரை உள்ளன. இந்தப் பகுதியில், பெரும்பாலும் கால்நடைகளின் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்து பிழைப்பு நடத்தி வருகின்றனர். இவர்கள் கால்நடைகளை வைத்தியம் செய்வதற்கு, 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பித்தனாப்பட்டி கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது; மற்றும் 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள முத்தழகுப்பட்டி கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. கால்நடைகளை நல்லமுறையிலே பராமரிக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, வருகின்ற நிதியாண்டிலாவது பொன்னுமாந்துறை கிராமத்தில் கால்நடை மருத்துவக் கிளை நிலையமாவது அமைத்துத் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, அந்தந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே, கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. ஒரு கிராமத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, 10,000—க்கு மேல் இருப்பின், அங்கு கால்நடை மருந்தகம் அமைத்துத் தரப்படுகிறது. கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமாயின், அப்பகுதிக்கும், அதன் அருகில் செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம், 8 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். கால்நடை மருத்துவமனை தொடங்கப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை, நாற்பதுக்கும் கூடுதலாக இருக்க வேண்டும். திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதிக்கு உட்பட்ட ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பொன்னுமாந்துறை கிராமத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, 2,294 ஆகும். இதன் அருகில், 2 கிலோ மீட்டர் தூரத்தில் பித்தனாப்பட்டி மற்றும் முத்தழகுப்பட்டி கால்நடை கிளை நிலையங்களும் 5 கிலோ மீட்டர் தொலைவில், குந்தலம்பட்டியில் கால்நடை மருந்தகமும் உள்ளன. திண்டுக்கல் மாவட்டம், பொன்னுமாந்துறை கிராமத்தில், கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து, அக்கிராமமும் மற்றும் அதைச் சுற்றியுள்ள சின்ன பொன்னுமாந்துறை, குட்டியபட்டி, குருவப்பநாயக்கன்பட்டி, இராயர்பட்டி, பள்ளப்பட்டி, டி. புதூர், வண்ணாம்புதூர் ஆகிய இந்த கிராமங்களிலெல்லாம் சேர்த்து உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை,





மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு பி.கே.டி. நடராஜன் அவர்கள் கூறியதைப்போல, 10,000—க்கு மேல் இருக்குமானால், வரும் நிதியாண்டில், அரசின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணை பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, திருமதி ஆர். சரோஜா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

முற்பகல் 11–15

**80—**

## பச்சைமலைப் பகுதியை வளப்படுத்துதல்

***30222—திருமதி ஆர். சரோஜா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த எவ்வளவு நிதியை அரசு வழங்கியுள்ளது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த இதுவரை ரூ.114.69 இலட்சம் வழங்கப்பட்டு, பல பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் சில பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஆர். சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ரூ.114.69 இலட்சத்தில் பல பணிகள் நடைபெற்றுள்ளன என்று கூறினார். எந்தெந்தப் பகுதியில், என்னென்ன பணிகள் நடைபெற்றுள்ளன என்பதை அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

[2004 ஜூலை 29

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த 2001–2002 நிதி ஆண்டிலிருந்து 2003–2004 நிதி ஆண்டு வரை நந்தியாபுரம், கோம்பைபுதூர், நாகைநல்லூர் முதலிய கிராமங்களில் ரூ.44.69 இலட்சம் செலவில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இது தவிர, பச்சைமலைப் பகுதியினை வளப்படுத்தவும், அப்பகுதி மக்களின் வசதிகளை மேம்படுத்தவும், முதற்கட்டமாக 11-12-2002-ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் திருச்சி மண்டலம், உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள பச்சைமலைப் பகுதியில் சோபனாபுரம் முதல் டாப் செங்காடு வரை சாலை பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படும் என அறிவித்ததையடுத்து, 2002–2003 ஆம் ஆண்டில் வனத் துறை மூலம் ரூ.10 இலட்சமும் மாவட்ட ஆட்சியர் நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும் ஒதுக்கப்பட்டு, மேற்கண்ட சாலைப் பணிகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. மேலும் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ள ரூ.50 இலட்சத்திற்கு 28-6-2004-ல் வனத் துறையால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அம்மா அவர்களின் ஆணையின் பேரில் பச்சைமலைப் பகுதியில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் காப்புக் காடு வழியாக மின்சாரம் எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள மக்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## குறுகிய கால வினா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 1. திரு. பி.கே. சேகர்பாபு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

1—

## பாலங்கள் கட்டுதல்

***60768—திரு. பி.கே. சேகர்பாபு:**

**மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—**



2004 ஜூலை 29]

(அ) சென்னையில் இவ்வாண்டில் (2004–2005) இருப்புப் பாதை கடவுகளில் மேம்பாலம் அல்லது தரைப்பாலம் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை மேம்பாலங்கள்/தரைப்பாலங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையில் கீழ்வரும் இரயில்வே மேம்பாலம்/தரைப்பாலம் கட்டும் திட்டங்களை 2004–2005 ஆம் ஆண்டு இரயில்வே பணித் திட்டத்தில் சேர்க்க இரயில்வே துறையிடம் கோரப்பட்டு அத்துறையின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

1. சுத்திவாக்கம்—காக்ரேன் பேசின் இரயில்வே சந்திக்கடவில் மேம்பாலம்

2. இரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் மேம்பாலம்.

3. வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் LC2 வாகன சுரங்கப்பாதை.

4. வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் LC1 வாகன மேம்பாலம்.

5. மணியக்காரச் சத்திரத் தெருவில் (M.C. Road) இரயில்வே சந்திக்கடவில் வாகனச் சுரங்கப்பாதை மற்றும்

6. கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப் பாதை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் என்பது, மேம்போக்குப் பாலமாக ஆகி அவசர கோலங்களில் தேவையற்ற இடங்களில் இலாப நோக்கத்திற்காக கடந்த காலங்களில் கட்டப்பட்ட நிலை மாறி இப்போது மக்கள் நல அரசான டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மக்களின் பயன்பாட்டுக்காக இரயில்வே கடவுப் பகுதிகளில் 3 மேம்பாலங்கள், 3 சுரங்கப் பாலங்கள்

அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 6 பாலங்களுக்கும் ஆகின்ற செலவு எவ்வளவு? 2004–2005 ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி இந்தப் பாலங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது? இந்தப் பாலங்களைக் கட்டி முடிப்பதற்கு உண்டான ஆண்டுகள் எத்தனை என்று வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அனுமதி கோரப்பட்ட 6 பாலங்கள், மேலும் சேத்துப்பட்டு-பச்சையப்பன் கல்லூரி அருகில் ஹேரிங்டன் ரோடு சந்திக்கடவில் ஒரு சுரங்கப் பாதை ஆக இந்த 7 பாலங்களுக்கும் சேர்த்து ரூ.66 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது. அவற்றில் 7–வது பாலமாகக் கூறப்பட்ட சேத்துப்பட்டு-பச்சையப்பன் கல்லூரி அருகில் ஹேரிங்டன் ரோடு சந்திக்கடவில் சுரங்கப் பாதைக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மீதி இருக்கின்ற 6 பாலங்களுக்கு இரயில்வே துறையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பாலங்களுடைய பணி மேற்கொள்ளப்படும். ஆக, 7 பாலங்களுக்கும் சேர்த்து மொத்த மதிப்பீடு ரூ.66 கோடி ஆகும்.

முற்பகல் 11–20

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலங்களைக் கட்டுவதற்காக ரூ.66 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 2004–2005 ஆம் ஆண்டில் இந்தப் பாலங்களைக் கட்டுவதற்கு ஒதுக்கியிருக்கிற நிதியினையும், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் கடந்து செல்கிற இருப்புப்பாதைக் கடவுப் பாலங்களை கணக்கெடுத்து இருக்கிற தென்னக இரயில்வே துறை, இந்த 6 இருப்புப்பாதைக் கடவு பாலங்களுக்கும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் செல்கிற பாலங்கள் என்று கணக்கெடுத்து, இதை 2000 ஆம் ஆண்டே திட்ட மதிப்பீட்டில் சேர்த்துள்ளதால், இந்தப் பணிகளை விரைவாகத் தொடங்குவதற்கு இரயில்வே துறையிடம் சென்னை மாநகராட்சி வற்புறுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே துறையிடம் சென்னை மாநகராட்சி மூலமாக, கடந்த 3–6–2004 அன்றும், அதற்கு அடுத்தபடியாக 30–6–2004 அன்றும் கடிதம் மூலமாக அனுமதி கோரப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை மாநகரில் போக்குவரத்து தடையின்றி செல்ல வேண்டுமென்ற காரணத்திற்காக மிக விரைவாக அனுமதி பெற்று உடனடியாக அந்தப் பணியைச் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்ததன்பேரில் மிக வேகமாக அந்த அனுமதியைப் பெறுவதற்கு சென்னை மாநகராட்சியானது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்@

## பதினொன்றாவது பட்டியல்

1—

## மயானச் சாலை செப்பனிடல்

**வினா எண் 17899— திரு. லா. சந்தானம் :** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், குறவக்குடி மயானச் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.6.00 இலட்சம் தேவைப்படும். மதுரை மாவட்டத்திற்கான பத்தாவது ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் (2002-2007) (Master Plan) இச்சாலைப் பணி இடம் பெற்றுள்ளது.

---

@இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2—

## பழுதடைந்த சாலைகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 23704—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைத் துறைக் கோட்டத்தில் உள்ள எலையமுத்தூரிலிருந்து சல்லாபுரம் செல்லும் சாலை கி.மீ.2/0 முதல் 4/0 மற்றும் கி.மீ.4/0 முதல் கி.மீ.5/4 ஆகிய பகுதிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதை உடனடியாகப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பழுதடைந்துள்ள பகுதிகளைப் புதுப்பிக்க தோராயமாக ரூ.14.00 இலட்சம் தேவைப்படும். இருப்பினும், சாலைகளில் ஏற்படும் நொடிகள் அவ்வப்போது போடப்பட்டு, போக்குவரத்திற்கு ஏற்றவாறு சீர் செய்யப்பட்டு வருகிறது.

3—

## நெடுஞ்சாலையைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 24070—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அலங்காநல்லூரிலிருந்து தனிச்சியம் பிரிவு வரை உள்ள நெடுஞ்சாலையைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள இதர மாவட்டச் சாலையான தனிச்சியம் அலங்காநல்லூர் சாலையாகும். இச்சாலை கி.மீ.0/0—10/0 நீளம் கொண்ட தார் பரத்தப்பட்ட ஒருவழித்தடச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ.6/0—7/0 மற்றும் 9/0—10/0 வரை 2 கி.மீ நீளம் ரூ.13.10 இலட்சம் செலவில் நபார்டு ஆர்.ஐ.டி.எப்.88 திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு சாலை மேம்பாடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பகுதிகளில் ஏற்படும் நொடிகள் அவ்வப்போது சீர் செய்யப்பட்டு, சீரான போக்குவரத்திற்கு உகந்ததாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

4—

## மின்சார திருட்டை தடுத்தல்

**வினா எண் 50696—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் மின்சாரத் திருட்டு நடைபெறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மின்சார வாரிய அமலாக்கப் பிரிவு கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு மின் இணைப்புகளை ஆய்வு மேற்கொண்டதில் கண்டுபிடிக்கப்பட்ட மின் திருட்டுகளின் விவரம் பின்வருமாறு:

[2004 ஜூலை 29

அமலாக்கம்/தமிழ்நாடு மின்சார வாரியம்

| வருடம் | கண்டுபிடிக்கப்பட்ட மின் திருட்டுகளின் எண்ணிக்கை | கூடுதல் தீர்வை ரூ. | சமரசம் செய்யப்பட்டவை | சமரசத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 2001-02 | 84 | 56,30,989 | 83 | 27,01,630 |
| 2002-03 | 38 | 12,02,228 | 38 | 11,80,633 |
| 2003-04 | 50 | 45,29,554 | 44 | 11,47,022 |

5—

## கோயில்களில் சிறப்பு வழிபாட்டுக் கட்டணத்தைக் குறைத்தல்

**வினா எண் 33160—டாக்டர் சி. விஜயகுமார்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கோயில்களிலுள்ள சிறப்பு வழிபாடு கட்டணத்தை ரூபாய் ஐந்து என்றிருப்பதை குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை திருக்கோயில்களின் நிர்வாகத்தில் 117 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றுள் பின்வரும் மூன்று திருக்கோயில்களில் மட்டும் சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் விராலிமலை, அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் திருவப்பூர் ஆகிய இரண்டு திருக்கோயில்களில் தினசரி சிறப்பு நுழைவுக் கட்டணம் ரூ.5.00 நிர்ணயம் செய்யப்பட்டு நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், நார்த்தாமலை திருக்கோயிலில் விழாக் காலங்களில் மட்டும் சிறப்பு நுழைவுக் கட்டணம் ரூ.5.00 நிர்ணயம் செய்யப்பட்டு நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 29]

மேற்படி திருக்கோயில்களுக்கு ரூ.5.00 என கட்டணம் நிர்ணயம் செய்து 1999 ஆம் வருடம் முதல் அமல்படுத்தப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. திருக்கோயிலின் நலன் கருதியும், பக்தர்கள் அதிகமாக வருவதால் கூட்டத்தினை ஒழுங்குபடுத்தவும் மேற்படி கட்டணம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. கட்டணம் ரூ.5.00 என்பது மிகக் குறைவான கட்டணமே என்பதால் மேற்படி கட்டணத்தை மேலும் குறைக்கும் அவசியம் எழவில்லை.

6—

## மழைநீரை தெப்பக்குளத்தில் நிரப்புதல்

**வினா எண் 34875—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, விளக்குத்தூண் பகுதியில் காமராஜர் சாலையில் தேங்கும் மழைநீரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை, விளக்குத்தூண் பகுதியில் காமராசர் சாலையில் தேங்கும் மழைநீரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் திருக்கோயில் மூலம் நிரப்புவது சாத்தியமில்லை. விளக்குத்தூண் மற்றும் கீழவாசல் பகுதியிலிருந்து சுமார் 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் தெப்பக்குளம் அமைந்துள்ளதால் தேங்கும் மழைநீர் ஈர்ப்பு விசை மூலம் அங்கு சென்றடைவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. 1413 ஆம் பசலி தை தெப்ப உற்சவத்தினை முன்னிட்டு, குடிநீருக்காக வைகை அணையிலிருந்து வைகை ஆற்றில் ஒரு வாரத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதை பயன்படுத்தி வைகை ஆற்றிலிருந்து பம்ப் மூலம் மேற்படி தெப்பக்குளத்தில் சுமார் 4 1/2 அடி தண்ணீர் நிரப்பப்பட்டு மேற்படி தெப்ப உற்சவம் நடத்தப்பட்டது. தற்போது தெப்பத் திருவிழாவிற்காக நிரப்பப்பட்ட தண்ணீரும் வற்றிவிட்டது. தற்போது மணலூர் மற்றும் திருபுவனம் கூட்டு குடிநீர் திட்டத்தின் புனரமைப்புப் பணிகள் நடந்து

[2004 ஜூலை 29

வருகின்றன. பணி முடிந்த பின் வறட்சியான காலங்களை தவிர்த்து மழை காலங்களில் தெப்பக்குளத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7—

## ஆவுடையார் கோயில் நிலங்கள் விவரம்

**வினா எண் 38698—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருப்பெருந்துறை என்கிற ஆவுடையார் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஹெக்டேர்கள்?

(ஆ) அவற்றில் ஆதீனம் வசம் எவ்வளவு நிலங்கள் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருப்பெருந்துறை அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயில், திருவாவடுதுறை ஆதீனம் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திருக்கோயிலுக்கு நஞ்சை நிலம் 326.83.0 ஹெக்டேரும், புஞ்சை நிலம் 455.97.0 ஹெக்டேரும் உள்ளன. திருக்கோயில் வசம் உள்ள இந்த நிலங்கள் அனைத்தும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

8—

## கோயில் குளத்தைத் தூர்வாருதல்

**வினா எண் 47293—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வடகால் ஊராட்சி, வடக்கு வடகால் காளியம்மன் கோயில் குளத்தைத் தூர்வாரி சுத்தப்படுத்த அரசு முன்வருமா?



2004 ஜூலை 29]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி தொகுதி, வடகால் ஊராட்சி, வடக்கு வடகால், அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் திரு. அய்யாசாமி மகன் திரு. ராமலிங்கம் என்பவருக்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் கிராம தலைவர் மற்றும் முக்கியஸ்தர்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்து வருகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக குளங்கள் ஏதும் இல்லை. இத்திருக்கோயிலுக்கு அருகில் உள்ள குளம் புறம்போக்கில், சர்வே எண் 44/3ல் 42.5 ஏர்ஸ்-ல் ஆழ்வார்தோப்பு குளம் உள்ளது. இக்குளம் மேற்படி கோயில் உபயோகத்திற்கு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இக்குளத்தினை ஊராட்சிமன்ற நிர்வாகத்தின் மூலம் தூர்வாரி செப்பனிட்டுக் கொடுக்க ஊராட்சிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

9—

## திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி கட்டுதல்

**வினா எண் 49087—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு கூடுதலாக தங்கும் விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சார்பில் 403 அறைகள் மற்றும் 2 ஹால்கள் ஏற்கெனவே கட்டப்பட்டு பக்தர்களின் வசதிக்காக தற்போது பயன்பாட்டில் உள்ளன. மேலும்

திருக்கோயிலின் ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டப் பணியில் பக்தர்கள் தங்கும் வசதிக்காக கூடுதலாக 60 அறைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

10—

## கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டுதல்

**வினா எண் 49280—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் கடந்த 1988 ஆம் வருடம் திருக்கோயிலின் நிதியின் மூலம் சுமார் ரூ.4,85,000/- மதிப்பீட்டில் திருமண மண்டபம், சமையல் கூடம், சாப்பாடு கூடம், குளியலறைகள், கழிவறைகள் சுமார் 6,000 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளன. திருமண நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.2,500/- வீதம் வாடகைக்கு விடப்பட்டு வருடத்திற்கு ரூ.25,000/- வருமானமாக வருவதால் தற்போது புதியதாக திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

11—

## மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள்

**வினா எண் 24378—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழையெளியவர்களின் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக சமூக நலத் துறை ஒவ்வொரு மாவட்டத்திலும் மறுவாழ்வு மையங்களை நடத்தி வருகிறது. வெகுவாக மனவளர்ச்சி குன்றியவர்களை சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மனநலக் காப்பகத்தில் உள்நோயாளியாகவும், வெளிநோயாளியாகவும் வைத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. மிதமான மன வளர்ச்சி குன்றியவர்களை சென்னை, தேனாம்பேட்டை அரசு மாவட்ட மறுவாழ்வு மையத்தில் அனுமதியளித்து பல உதவிகள் வழங்கப்படுகிறது.

12—

## இருதய அறுவை சிகிச்சை

**வினா எண் 43134—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தனியார் மருத்துவமனைகளில் ஏழையெளியவர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் மருத்துவமனைகளில் நடைபெறும் சிகிச்சைகளை விரைவுபடுத்தி காலதாமதத்தைத் தடுக்க தற்பொழுது விதிமுறைகள் ஏதும் இல்லை. தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி

அமைப்பின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வறுமைக்கோட்டிற்கு கீழ் இருக்கும் மற்றும் உயிரை அச்சுறுத்தும் நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய மக்களுக்கு, இவ்வமைப்பின் மூலமாக நிதி வழங்க அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மூலமாகச் செய்யப்படும் இருதய அறுவை சிகிச்சைக்கு நிதி வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி நிதி ஒதுக்கீட்டின் மூலமாக பயன்பெறும் நோயாளிகள் தங்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை தாமதமானதாகத் தெரிந்தால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனுச் செய்து நிவாரணம் பெறலாம்.

**13—**

## புற்றுநோய் அதிகரிப்பதைத் தடுத்தல்

**வினா எண் 49994—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் அதிகரித்திருப்பதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தற்போது மேலை நாடுகளைப் போன்று நமது நாட்டிலும் மார்பகப் புற்றுநோய் அதிகரித்து வருகிறது. மாறிவரும் வாழ்க்கை முறை, இதற்கு ஒரு முக்கிய காரணம் என்றாலும், இதற்கான சரியான காரணம் ஆராயப்பட்டு வருகிறது. மார்பகப் புற்றுநோயைக் கண்டறிய பயன்படும் "MAMMOGRAPHY" கருவி அரசு மருத்துவமனைகளில் உள்ளது. மார்பகப் புற்றுநோயை பெண்கள் தானாகவே "சுய பரிசோதனை" மூலம் கண்டறியும் எளிய வழிமுறைகள் உள்ளன. அவை அனைத்தும் ஆரம்ப சுகாதார மருத்துவமனை முதல் அரசு பொது மருத்துவமனைகள் அனைத்திலும் விளக்கப்படுகின்றன. மார்பகப் புற்றுநோய்க்குத் தீர்வு காண அறுவை சிகிச்சை முறை, கதிர் வீச்சு சிகிச்சை மற்றும் கீமோதெரபி என்னும் கூட்டு மருந்து சிகிச்சை முறையும் அளிக்கப்படுகின்றன.



**14—**

## கல்விக் கடன் கோரி விண்ணப்பித்த மாணவ, மாணவிகள்

**வினா எண் 31621—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001, 2001-2002 ஆம் ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டத்தில் கல்விக் கடன் கோரி விண்ணப்பித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்லூரி மாணவ, மாணவிகள் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001, 2001-2002 ஆம் ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டத்தில் கல்விக் கடன் கோரி விண்ணப்பித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியரின் விவரம்:

| ஆண்டு | விண்ணப்பித்தவர் எண்ணிக்கை | கடன் உதவி வழங்கப்பட்டவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 2000-2001 | 535 | 535 |
| 2001-2002 | 190 | 148 |

**15—**

## மயானக் கொட்டகை கட்டுதல்

**வினா எண் 34540—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓதவந்தான்குடி ஊராட்சி, ஓதவந்தான்குடி ஆதிதிராவிட காலனியில் மயானக் கொட்டகை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓதவந்தான்குடி ஊராட்சியை சேர்ந்த திருநீலகண்டம் என்ற ஆதிதிராவிடர் காலனியில் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2002-03—ன்கீழ் ரூ.30,000/- மதிப்பீட்டில் மயானக் கொட்டகை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**16—**

## பழங்குடிகள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள்

**வினா எண் 34849—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1989 ஆம் ஆண்டு பட்டியல் இன மற்றும் பட்டியல் பழங்குடிகள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் தொடரப்பட்ட வழக்குகள் மொத்தம் எத்தனை ?

(ஆ) இதில் எத்தனை வழக்குகளில் தீர்ப்பாகியுள்ளது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1989 ஆம் ஆண்டு பட்டியல் இன மற்றும் பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் தொடரப்பட்ட வழக்குகள், அதில் தீர்ப்பாகியுள்ள வழக்குகளின் விவரம் வருமாறு:



| வரிசை எண் | வருடம் | பதிவான வழக்குகளின் எண்ணிக்கை | உண்மைக்கு புறம்பானவை | நீதிமன்ற நிலுவையில் உள்ளவை | காவல் விசாரணையில் உள்ளவை | தண்டனை பெற்றவை | விடுதலை பெற்றவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1999 | 1011 | 373 | 202 | 1 | 37 | 398 |
| 2 | 2000 | 996 | 297 | 279 | - | 38 | 382 |
| 3 | 2001 | 828 | 313 | 288 | 1 | 23 | 203 |
| 4 | 2002 | 917 | 361 | 453 | 4 | 17 | 82 |

2) கடந்த நான்கு ஆண்டுகளில் 1999 முதல் 2002 வரை பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 3752.

3) கடந்த நான்கு ஆண்டுகளில் 1999 முதல் 2002 வரை தீர்ப்பாகியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 1180 (தண்டனை 115, விடுதலை 1065).

**17—**

## வணிக வரித் துறையில் பதிவுச் சான்றுகள்

**வினா எண் 4823—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித் துறையில், விண்ணப்பம் பெற்றவுடன் விசாரணையே இல்லாமல், பதிவுச் சான்றுகள் 2000-2001 ஆம் ஆண்டில் எத்தனை வழங்கப்பட்டுள்ளன ?

(ஆ) இதில் பில் மற்றும் பட்டியலின்றி வணிகம் செய்து வரும் போலி வணிகர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) இதனால் அரசுக்கு வரி இழப்பு எவ்வளவு ?

(ஈ) இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் வணிக வரித் துறையில் விண்ணப்பம் பெற்றவுடன் விசாரணையே இல்லாமல் 38114 பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) விசாரணையின்றி பதிவுச் சான்று வழங்கப்பட்ட வணிகர்களில் ஒரு இனத்தில் மட்டும் போலி வணிகர் எனக் கண்டறியப்பட்டது. அப்போலி வணிகர் திருவாளர்கள் வசந்த சுதன் டிரேடர்ஸ், விருத்தாசலம். 2001-2002 ஆம் ஆண்டு அதாவது அவரது பதிவுச் சான்று நீக்கப்படும் வரை எண்ணெய் வித்து கொள்முதல் விவரங்கள் கீழ்வருமாறு:-

| | | |
|---|---|---|
| மணிலா முதல் கொள்முதல் | : | ரூ. 14,87,562.00 |
| எள் முதல் விற்பனை | : | ரூ. 6,66,993.00 |
| வரி செலுத்த வேண்டிய தொகை | : | ரூ. 21,67,122.00 |

இதற்கான வரித்தொகையான ரூ.86,685.00, 13.11.2002ல் முழுமையாக செலுத்தப்பட்டு விட்டது. எனினும், மேற்கண்ட வரி ரூ.86,685/-ஐ செலுத்துவதிலும் நமூனா சமர்ப்பிப்பதிலும் ஏற்பட்ட தாமதத்திற்கும் சேர்த்து தண்டத்தொகை ரூ.19,512.00/- மட்டும் செலுத்தப்பட வேண்டியுள்ளது எனவும். மேற்கண்ட வரி விதிப்பிற்குப்பின் வேறு எந்த வடிப்பு நகலும் பெறப்படவில்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது.

(இ) வரி இழப்பு ரூ.3.21 இலட்சங்கள் இருக்கலாம் என கணக்கிடப்பட்டுள்ளது.

(ஈ) 1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 20—ன்படி ஆண்டுக்கு ரூபாய் 3 லட்சத்திற்கு மேல் வணிகம் செய்யும் வணிகர்கள் அனைவரும் பதிவுச் சான்று பெற்றுக்கொள்வதுடன் வணிகம் நடைபெறும்வரை ஆண்டுதோறும் அதனை முறையாக புதுப்பித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அவ்வாறு பதிவு பெறாத வணிகர்கள்மீது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959 விதி 46(1) (பி) (ம) விதி 56-ன்கீழ் கடும் நடவடிக்கை தொடர வழி வகுக்கப்பட்டுள்ளது. இம்முக்கியத்துவத்தினை வணிகர்கள்





நன்குணர வேண்டும் என்ற நோக்குடன், செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு, தெருத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. டிசம்பர் 2002 வரையிலும் 19740 தெருக்களில், தெருத் தணிக்கை முடிவு பெற்று புதிதாக பதிவு செய்துள்ள வணிகர்களின் எண்ணிக்கை 5453 எனக் கண்டறியப்பட்டது. இதனை மறுபரிசீலனை செய்யும் வினா எழவில்லை.

**18—**

## கால்நடை மருத்துவமனை துவங்குதல்

**வினா எண் 24344—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, ராதாபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, ராதாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

**19—**

## அரசு கால்நடை மருந்தகம்

**வினா எண் 37493—திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், தர்மத்துப்பட்டியில் உள்ள அரசு கால்நடை மருந்தகத்தை தனியார் ஆக்கிரமித்துள்ளதை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 ஜூலை 29

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், தர்மத்துப்பட்டி கால்நடை மருந்தகத்தை திரு. என். கிருஷ்ணசாமி உடையார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு (எஸ்.எ. எண் 1231/02) தொடுக்கப்பட்டு, நிலுவையில் உள்ளது.

**20—**

**காட்டுப்பொருட்களின் உபயோகத்தை ஊக்கப்படுத்துதல்**

**வினா எண் 32069—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூலிகை, சாயம், பசை, தீவனம் போன்ற காட்டுப்பொருட்களின் உபயோகத்தை ஊக்கப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

மூலிகைச் செடித் தோட்டங்கள், வனவிரிவாக்க மையங்களில் அமைக்கப்பட்டு, பயிற்சிக்கு வரும் நபர்களுக்கு அவற்றின் பயன்கள் பற்றி கூறப்பட்டு வருகிறது. அலமாதியிலுள்ள மத்திய தீவனப் பயிர்கள் நிலைய அலுவலர்கள் வாயிலாக, வனவிரிவாக்க மையங்களில் தீவனப் பயிர்கள் வளர்ப்பு முறை மற்றும் அவற்றால் கால்நடைகளுக்கு உண்டாகும் பயன்கள் குறித்து பயிற்சியின்போது எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஏரிகளில் கருவேல் தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி தோட்டங்களிலிருந்து கோந்து (பசை) கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. காட்டுப் பொருட்களிலிருந்து சாயப்பொருள் எடுப்பது சம்பந்தமாக இதுவரை எந்தவித திட்டங்களும் வனத் துறையில் நடைமுறையில் இல்லை.



2004 ஜூலை 29]

**21—**

**மரக்கன்றுகள்**

**வினா எண் 35858—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த நிதியாண்டில் வனத் துறையால் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்ட நிலங்கள் எத்தனை ஹெக்டேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கடந்த நிதி ஆண்டில் வனத் துறையில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்ட நிலங்கள் 37635 ஹெக்டேர் ஆகும்.

**22—**

**தனியார் தொழிற்சாலைகள்**

**வினா எண் 48727—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் "RED CATEGORY"-ல் இயங்கும் தனியார் தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவை இயங்கும் இடங்கள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 163

(ஆ) பள்ளிபாளையம், சங்கரி, பரமத்தி வேலூர், குமாரபாளையம், திருச்செங்கோடு, மொளசி, இராசிபுரம், நாமக்கல்.

**23—**

### மலை ஜாதி மக்களுக்கு நலத் திட்டங்கள்

**வினா எண் 54711—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள அன்னை இந்திராகாந்தி வன சரணாலயத்திற்குட்பட்ட வனப் பகுதியிலுள்ள மலைஜாதி மக்கள் குடியிருப்புப் பகுதிக்கு தடையில்லாமல் நலத் திட்டங்கள் நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள அன்னை இந்திரா காந்தி வன உயிரின சரணாலயம் பகுதியில் வசித்து வரும் மலைவாழ் மக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வழங்கப்படும் நிதியினைக் கொண்டு குடியிருப்பு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-க்கு உட்பட்டு நலத் திட்டங்கள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது.

**24—**

### மீனவ மக்களுக்கு விடுகள்

**வினா எண் 39271—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, முத்துக்குடா, புதுப்பட்டினம், அரசநகரிபட்டினம், ஏனாதி ஆகிய கிராம மீனவ மக்களுக்கு வீடுகள் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மீனவர் இலவச வீட்டுவசதி திட்டத்தின்கீழ் அறந்தாங்கி தொகுதி, முத்துக்குடா மீனவ கிராமத்திற்கு 50 வீடுகளும், ஆர். புதுப்பட்டினத்திற்கு 68 வீடுகளும், ஏனாதி கிராமத்திற்கு 20 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அரசநகரிப்பட்டினம் மீனவ கிராமத்திற்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**25—**

### விசைப்படகு பழுதுபார்த்தல்

**வினா எண் 45371—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு துறைமுகத்திலுள்ள விசைப்படகைப் பழுதுபார்க்கும் பணிமனையைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பழையாறு துறைமுகத்திலுள்ள லாபகரமாக இயங்காத விசைப்படகு பழுதுபார்க்கும் பணிமனையை மீண்டும் இயக்க வாய்ப்பில்லை.

**26—**

### மீனவர்களுக்குக் காலனி விடுகள்

**வினா எண் 52076—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொட்டாய்மேடு மீனவர்கள் 56 நபர்களுக்கு காலனி வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொட்டாய்மேடு கிராமத்தில் நிலமுள்ள கடல் மீனவர்கள் 10 நபர்களுக்கு 2003-04 ஆம் ஆண்டில் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. உரிய பட்டா நிலம் பயனாளிகளால் ஒப்படைக்கப்பட்டவுடன் நிதி ஒப்பளிப்பிற்கு தகுந்தவாறு வீடுகள் கட்டிக் கொடுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**27—**

## நன்னீர் இறால் வளர்த்தல்

**வினா எண் 54329—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னீர் இறால் வளர்க்க அரசு ஊக்கத்தொகை வழங்குகிறதா?

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை ஹெக்டேர் பரப்பளவில் நன்னீர் இறால் வளர்க்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். குளங்களில் உயர் ரக கெண்டை மீன்களுடன் நன்னீர் இறால் குஞ்சுகளை விட்டு வளர்த்தெடுக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.1875/- வீதம் ஒரு முறை அரசால் மானியம் வழங்கப்படுகிறது.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 35.50 ஹெக்டேர் பரப்பளவில் நன்னீர் இறால் வளர்க்கப்படுகிறது.

**28—**

## தொழிற்சாலைகளில் பாதுகாப்பு அலுவலர்களை நியமித்தல்

**வினா எண் 49615—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் சட்டம் 40-பி(2)-ன்படி எத்தனை தொழிற்சாலைகளில் பாதுகாப்பு அலுவலர்கள் (Safety Officers) நியமிக்கப்பட்டுள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 40-பி(1) (ii)-ன்படி தமிழ்நாட்டில் மொத்தம் 41 தொழிற்சாலைகளில் பாதுகாப்பு அலுவலர்கள் (Safety Officers) நியமிக்கப்பட்டுள்ளனர்.

**29—**

## தொழிற்சாலைகளுக்குப் பாதுகாப்பு விருதுகள்

**வினா எண் 50732—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு விருதுகள் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) இம்மாவட்டத்தில் எந்தெந்த தொழிற்சாலைகளுக்கு அவ்விருது வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொழிற்சாலைகளுக்கென மாநில பாதுகாப்பு விருதுகள் ஒவ்வொரு ஆங்கில ஆண்டிற்குதான் வழங்கப்பட்டு வருகிறது. நிதியாண்டிற்கு வழங்கப்படுவதில்லை. மேலும், தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு விருதுகள் வழங்க மாவட்ட அளவில் நிதி ஒதுக்கப்படுவதில்லை. ஒட்டுமொத்தமாக மாநிலம் முழுமைக்கும் சேர்த்து அரசால் நிதி வழங்கப்படுகிறது.

(ஆ) 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுக்கென பாதுகாப்பு விருதுகள் பெற தகுதியுடைய தொழிற்சாலைகள் அரசால் அமைக்கப் பெற்ற குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட இரு தொழிற்சாலைகளுக்கு 2-வது பரிசாக ரூ.1,500/- மதிப்புள்ள வெள்ளிக்கேடயம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1. விஸ்டியான் ஆட்டோமோடிவ் சிஸ்டம்ஸ் (இந்தியா) (பிரைவேட்) லிமிடெட், மறைமலை நகர், செங்கல்பட்டு-603 204.

2.ஜே.கே.எம். டேரிம் ஆட்டோமோடிவ் லிமிடேட், இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர்.

2003 ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

30—

## ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

**வினா எண் 12140—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம், மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, 8-வது வார்டு மறவர் வடக்குத் தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீரவநல்லூர் பேரூராட்சி, 8வது வார்டு மறவர் தெருவில் 1996 ஆம் வருடம் 10-வது நிதிக்குழு மானியத் திட்டத்தின்கீழ் ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு (எண் 36) நல்ல முறையில் இயங்கி வருகிறது.





31—

## தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 15268—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் தரிசு நிலம் மேம்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

32—

## மயானக் கொட்டகைகளை சீர் செய்தல்

**வினா எண் 15552—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம் வெள்ளமண்டபம் ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு உள்ள பழுதடைந்துள்ள சுடுகாடு கொட்டகையை சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

[2004 ஜூலை 29

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், சீதக்கமங்கலம் ஊராட்சி, சீதக்கமங்கலம் மற்றும் வெள்ளமண்டபம் கிராமத்தில் 2002—2003 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இரண்டு மயானக் கொட்டகைகள் கட்டி முடிக்கப்பட்டு, இரண்டும் பயன்பாட்டில் உள்ளன.

33—

## தொகுப்பு விடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா எண் 17457—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள மேலக்கரைமேட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

ஆ) ஆமெனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு 2000—2001 ஆம் ஆண்டில் 15 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்படி ஊராட்சி மேலக்கரைமேட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் ஏதும் கட்டிக் கொடுக்கப்படவில்லை.



2004 ஜூலை 29]

34—

## மயானக் கொட்டகை அமைத்துக் கொடுக்கும் திட்டம்

**வினா எண் 17503—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தொடுவாய் கிராமத்தில் மயானக் கொட்டகை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயானக் கொட்டகை கட்டிக் கொடுப்பதற்கு என்று அரசிடம் தனித் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. மேலும் கொள்ளிடம் ஒன்றியம், தொடுவாய் கிராமத்தில் மயானக் கொட்டகை அமைத்துக் கொடுக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் பரிந்துரைக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட கிராமத்தில் மயானக் கொட்டகை அமைத்துக் கொடுக்க தற்போது வாய்ப்பு இல்லை.

35—

## பண்ணக்காரன் கோட்டகத்திற்கு மயானக் கொட்டகை

**வினா எண் 17584—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, பண்ணக்காரன் கோட்டகத்திற்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 ஜூலை 29

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயானக் கொட்டகை கட்டிக் கொடுப்பதற்கு என்று அரசிடம் தனித் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. எனவே, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, பண்ணக்காரன் கோட்டகத்திற்கு மயானக் கொட்டகை கட்ட தற்போது வாய்ப்பு இல்லை.

**36—**

## தொகுப்பு விடுகள் கட்டித் தரும் திட்டம்

**வினா எண் 18246—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட்டம், நெமிலி கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், நெமிலி கிராமத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**37—**

## பொதுக் குழாய், ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 20619—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 29]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பனகுடி பேரூராட்சி, நடுத் தெரு மக்களுக்கு பொதுக் குழாய் அமைக்கவும், ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கவும் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பனகுடி பேரூராட்சி நடுத் தெருவில் 11 வீடுகள் உள்ளன. மேற்படி தெருவில் அனைத்து வீடுகளிலும் பேரூராட்சி குடிநீர் இணைப்பு உள்ளது. மேலும், மேற்படி தெரு அருகில் 3 ஆழ்குழாய்க் கிணறு கம்ப்ரசர் மோட்டாருடன் சின்டெக்ஸ் தொட்டி மூலம் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிதாக ஆழ்குழாய் மற்றும் பொதுக் குழாய் அமைக்க தேவையில்லை.

**38—**

## நல்ல குடிநீர் வழங்குதல்

**வினா எண் 22734—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோலையார்குடம், ரொட்டிக்கடை பகுதிகளில் குடிநீரில் மண் கலந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு நல்ல குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட ரொட்டிக்கடைப் பகுதியில் உள்ள மக்களுக்கு நாள்தோறும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ரொட்டிக்கடைப் பகுதியில் உள்ள குடிநீர் குழம்பாக வந்த பழைய தொட்டி கடந்த ஒரு வருடத்திற்கு முன்னரே மூடப்பட்டு விட்டது. தற்போது பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**39—**

## ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

**வினா எண் 23299—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மதுரை மேற்கு ஒன்றியம், விளாங்குடி பேரூராட்சியிலுள்ள மயானத்தைச் சேர்ந்த 3.80 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விளாங்குடியில் புல எண் 137/1-ல் உள்ள 1.14 ஏக்கர் இடம் வருவாய்த் துறை ஆவணங்களின்படி பேரூராட்சி மயானமாக உள்ளது. இதைச் சுற்றி முள்வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பை அகற்ற மதுரை மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. மேலும், புல எண் 137/3-ல் ஆக்கிரமிப்பில் உள்ள இடம் பல ஆண்டுகளாக மயானமாக இருந்து வரும் பட்டா இடமாகும். இதில் பட்டாவை ரத்து செய்து மயானம் என்று சப் டிவிசன் செய்து வருவாய்த் துறையினரால் அறிவிப்பு வெளியிட்ட பின்புதான் ஆக்கிரமிப்புகளை அகற்ற இயலும்.

**40—**

## தொகுப்பு விடுகள் கட்டித்தருதல்

**வினா எண் 24242—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், செங்குளம் பகுதி, சேத்தநாயக்கன்பட்டி, கட்டங்குடி. புதுப்பட்டி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி ஒன்றியம், சேத்தநாயக்கன்பட்டி கிராமம் அடங்கிய செந்நிலைக்குடி ஊராட்சியில் 40 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அருப்புக்கோட்டை ஒன்றியம், கட்டங்குடி ஊராட்சியில் 43 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் கட்டங்குடி கிராமத்தில் 2003-2004 ஆம் நிதியாண்டில் 4 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. திருச்சுழி ஒன்றியம், மூன்றடைப்பு ஊராட்சி, புதுப்பட்டி கிராமத்தில் 8 தொகுப்பு விடுகள் ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**41—**

## பள்ளிகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 25695—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியிலுள்ள கோட்டூர் பேரூராட்சிப் பள்ளிகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* பேரூராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லாததால் நிதிநிலை சீரான பின்னர் மேற்படி பள்ளிகளைப் பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2004 ஜூலை 29

(ஆ) கேள்வி எழவில்லை.

42—

### கிராம நிர்வாக அலுவலகம் கட்டும் திட்டம்

**வினா எண் 29307—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சியிலுள்ள காரைமேட்டில் (வி.ஏ.ஓ) கிராம நிர்வாக அலுவலகம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

43—

### கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம்

**வினா எண் 29366—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 56 வள்ளுவக்குடியில் கிராம நிர்வாக அலுவலகம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 ஜூலை 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், 56 வள்ளுவக்குடியில் 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

44—

### இலவச குழும வீடுகள்

**வினா எண் 30156—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கோமாபுரம் பகுதியில் இலவச குழும வீடுகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கோமாபுரம் ஊராட்சியில் 2002-2003 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 10 தொகுப்பு வீடுகளும் 2003-2004 ஆம் ஆண்டில் 1 தொகுப்பு வீடும் கட்டப்பட்டுள்ளது.

45—

### கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டும் பணி

**வினா எண் 30310—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜுலை 29

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருமங்கலம் ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், பெருமங்கலம் ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**46—**

## மயானக் கொட்டகை கட்டித் தருதல்

**வினா எண் 32753—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 65 எடக்குடி வடபாதி ஊராட்சி, கீழவெளியில் மயானக் கொட்டகை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயானக் கொட்டகை கட்டிக்கொடுப்பதற்கு என்று அரசிடம் தனித் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. மேலும் சீர்காழி ஒன்றியம் 65 எடக்குடி வடபாதி ஊராட்சி கீழவெளியில் மயானக் கொட்டகை கட்டித்தர பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் பரிந்துரைக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட கிராமத்தில் மயானக் கொட்டகை கட்டித்தர தற்போது வாய்ப்பு இல்லை.



2004 ஜுலை 29]

**47—**

## இலவச தொகுப்பு வீடுகள்

**வினா எண் 33661—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியைச் சார்ந்த சின்னசேரி கிராமத்திற்கு இலவச தொகுப்பு வீடுகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், சின்னச்சேரி கிராமத்தில் 1999-2000 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகள் பிற்பட்ட வகுப்பினருக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**48—**

## குடிநீர் வசதி

**வினா எண் 36548—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் 134-வது வட்டம், மேற்கு சைதாப்பேட்டை தனபால் தெருவிற்கு போதிய குடிநீர் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 ஜூலை 29

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியில் மேற்கு சைதாப்பேட்டை 134-வது வட்டத்திலுள்ள தனபால் தெருவிற்கு தற்போது சென்னையிலுள்ள ஏரிகளில் நீர் இருப்பு மிகவும் குறைந்துள்ளதால் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க முடியவில்லை. ஆதலால் இத்தெருவிலுள்ள 86 வீடுகளில் குடியிருக்கும் சுமார் 486 குடும்பங்களுக்கு இங்கு அமைக்கப்பட்டுள்ள ஒரு குடிநீர்த் தொட்டி மூலமாக 3000 லிட்டர் குடிநீரும், தெரு விநியோகமாக லாரிகள் மூலம் 36000 லிட்டர் குடிநீரும் ஆக மொத்தம் 39000 லிட்டர் அளவு குடிநீர் தினமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இதர உபயோகத்திற்காக இத்தெருவிலுள்ள இரண்டு இந்தியா மார்க் ஆழ்துளை கைப்பம்புகள் நல்ல முறையில் இயக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏரிகளில் நீர்வரத்து அதிகரித்தவுடன் இத்தெருவிற்கு தேவையான அளவு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது.

**49—**

## தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 43854—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சின்னாம்பள்ளிமேடு, செய்யாம்பாளையம், சின்னசோளிபாளையம், ஜமீன்எளம்பள்ளி, அருந்ததியர் தெரு ஆகிய காலனி மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சின்னாம்பள்ளிமேட்டில் 7 தொகுப்பு வீடுகளும், செய்யாம்பாளையத்தில் 5 தொகுப்பு வீடுகளும், சின்னசோளி பாளையத்தில் 10 தொகுப்பு வீடுகளும் கட்டித்தரப்பட்டுள்ளது. ஜமீன் எளம்பள்ளி ஊராட்சியில் அருந்ததியர் காலனி மக்களுக்கு 2003-2004 ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் பகுதி-1ன்கீழ் மாவட்ட ஊராட்சிக்கான ஒதுக்கீட்டிலிருந்து இரண்டு தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன.



**50—**

## ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்

**வினா எண் 48291—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சி, தந்தியநல்லூர் ஆதிதிராவிடர் தெரு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், அகணி ஊராட்சி, தந்தியநல்லூரில் 1998-99 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர்களுக்கு 20 தொகுப்பு வீடுகளும், இதர பிரிவினருக்கு 20 தொகுப்பு வீடுகளும், 1999-2000 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கு 20 தொகுப்பு வீடுகளும் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டித் தரப்பட்டுள்ளன.

## பன்னிரண்டாம் பட்டியல்

**1—**

## குடிநீர், சாலை மற்றும் மின்சார வசதிகள்

**வினா எண் 36912—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 29

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயிலுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கும், யாத்திரிகர்கள் வசதிக்காகவும், அங்கு குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் மின்சார வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி வட்டம், வைத்தீஸ்வரன்கோயில், அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில் பிரகாரத்தில் மேல்நிலைத் தொட்டி மூலமும், கீழ் கோபுரம் மற்றும் மேல் கோபுரம் வாசல்களில் பேரூராட்சி மூலமும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் கீழவீதி, தென்புறம் நெடுஞ்சாலைத் துறை தார்ச்சாலை உள்ளது. மேல்வீதி வடக்கு வீதிகள் பேரூராட்சியின் மூலம் தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. மேற்காணும் திருக்கோயில் அமைந்துள்ள வைத்தீஸ்வரன்கோயில் ஊரில் புதிய மின்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கோயிலில் வடக்கு தோட்டத்தில் மின்மாற்றி (Transformer) அமைக்கப்பட்டு திருக்கோயிலுக்குத் தேவையான மின்வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

**2—**

## கோயில் குளம் தூர்வாரி, மழைநீரைச் சேகரித்தல்

**வினா எண் 47857—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சியிலுள்ள குறவளூர் உக்கிர நரசிங்கப்பெருமாள் கோயில் குளத்தினை தூர்வாரி, நீர்நிரப்பி, சுற்றுச்சுவர் கட்டி மழைநீரை குளத்தில் சேகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 29]

**விடை—**

**மாண்புமிகு திரு பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சியிலுள்ள குறவளூர், அருள்மிகு உக்கிர நரசிங்கப்பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக, திருக்கோயிலின் எதிர்புறம் 1.5 ஏர் இடத்தில் இருந்த திருக்குளம் தூர்ந்து போய் உள்ளது. இத்திருக்குளத்தினை தூர்வாரி, சுற்றுச்சுவர் கட்டி, ஆழ்குழாய் மூலம் நீர் நிரப்ப சுமார் ரூ.1,50,000/- மதிப்பில் திருக்கோஷ்டியூர் மாதவன் சுவாமிகள் மூலம் உபயமாக செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது செடிகொடிகளை அகற்றி சுமார் 5 அடி ஆழத்திற்கு தூர் வாரப்பட்டுள்ளது.

**3—**

## கோயில் குளத்தினை தூர்வாரி மழைநீரைச் சேகரித்தல்

**வினா எண் 47859—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியிலுள்ள நரசிங்கப்பெருமாள் கோயில் குளத்தினை தூர்வாரி நீர் நிரப்பி, சுற்றுச்சுவர் கட்டி அதிக மழை நீரைச் சேகரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியிலுள்ள அருள்மிகு நரசிங்கப்பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான திருக்குளம் ஏதும்

இல்லை. இத்திருக்கோயிலுக்கு அருகில் அரசு நத்தம் புறம்போக்கில் பழுதடைந்த நிலையில் குளம் ஒன்று உள்ளது. இத்திருக்குளம் இத்திருக்கோயிலுக்குச் சொந்தமானது அல்ல. திருக்கோயில் அனுபோகத்திலும் இல்லை. இருப்பினும் இக்குளத்தை தூர்வாரி, சுற்றுச்சுவர் கட்டி, நீர்நிரப்புவதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4—

## திருக்கோயில் குளங்கள் தூர் வாருதல்

**வினா எண் 51274—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரெங்கம் ஊராட்சி, சென்னியநல்லூரிலுள்ள அருள்மிகு திரௌபதி அம்மன் திருக்கோயிலிலுள்ள அய்யனார் குளம், அம்மன் குளம் மற்றும் தாமரைக் குளம் முதலியவற்றை தூர்வாரி சுத்தப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழித் தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வட ரெங்கம் ஊராட்சி, சென்னியநல்லூரிலுள்ள அருள்மிகு திரௌபதி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக அய்யனார் குளம், அம்மன் குளம், தாமரைக்குளம் மற்றும் நெல்லிக்குட்டை ஆகிய குளங்கள் உள்ளன. மேற்காணும் குளங்களுக்கு வரும் வாய்க்கால்கள் தூர்ந்து போய் விட்டதால், தண்ணீர் வரத்து இல்லாமல் உள்ளது. இத்திருக்கோயிலில் நிதிவசதி இல்லாக் காரணத்தால், ஒரு கால பூசை திட்டத்தின்மூலம் பூசை செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி குளங்களை திருக்கோயில் மூலம் தூர்வார இயலாத சூழலில் 'வறட்சி நிவாரண திட்டத்தின்' கீழ் தூர்வாரி சுத்தப்படுத்தித்தர மாவட்ட ஆட்சியரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.





5—

## முட்புதர்களை அகற்றுதல்

**வினா எண் 25414—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மேல்பகுதியில் அடங்கிய அரசு மருத்துவமனை அருகிலுள்ள முட்புதர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசு மருத்துவமனை வளாகத்தினுள் உள்ள புதர்கள் அகற்றப்பட்டு மருத்துவமனைப் பணியாளர்கள் மூலம் அவ்வப்போது சுத்தம் பேணப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவமனையினை ஒட்டி அமைந்துள்ள மயானத்தில் உள்ள புதர்கள் வால்பாறை பேரூராட்சி நிர்வாகத்தால் அகற்றப்பட்டு விட்டன.

6—

## ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்கும் திட்டம்

**வினா எண் 33683—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 29

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை

**7—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 33812—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மேல்சாத்தம்பூரில் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* தமிழ்நாட்டில் மக்கள்தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1413 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மேல்சாத்தம்பூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**8—**

## மருத்துவர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 35544—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 29]

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி, சுப்பிரமணியபுரம் ஆவுடையார் கோவில் அரசு மருத்துவமனைகளில் புதிதாக மருத்துவர் பணியிடம் உருவாக்கும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அரசு மருத்துவமனை, மணமேல்குடியில் 2 மருத்துவர்களும், 1 சித்த மருத்துவரும் பணியாற்றுகின்றனர். அரசு மருத்துவமனை, சுப்பிரமணியபுரத்தில் 2 மருத்துவர்களும், அரசு மருத்துவமனை, ஆவுடையார்கோவிலில் 2 மருத்துவர்களும் பணியாற்றுகின்றனர். எனவே இந்த மருத்துவமனைகளுக்கு புதியதாக மருத்துவர்கள் பணியிடம் உருவாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**9—**

## மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் எழுப்புதல்

**வினா எண் 37366—திரு எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அவிநாசி அரசு மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் நடப்பாண்டில் அமைத்துத் தரப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* அவிநாசி அரசு மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் எழுப்பும் கருத்துரு தற்போது அரசின் பாசிலனையில் இல்லை.

10—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 38566—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், பல்லவராயன்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1413 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், பல்லவராயன்பத்தை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

11—

## சத்துணவுக் கட்டடம்

**வினா எண் 32227—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆலாலசுந்தரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசுக்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, ஆலாலசுந்தரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு நிதி நிலைக்கேற்ப வரும் நிதி ஆண்டில் புதிய சத்துணவு கூடம் முன்னுரிமை அடிப்படையில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





12—

## சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா எண் 32240—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆதமங்களம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, ஆதமங்களம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு 1997-98 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் ரூ.40,000/- மதிப்பீட்டில் கான்கிரிட் கட்டடம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது அந்தக் கட்டடத்தில்தான் சத்துணவு சமையல் சமைத்து வழங்கப்பட்டு வருகிறது.

13—

## துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம்

**வினா எண் 32241—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தொழுதூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், கற்கோவில் ஊராட்சி, தொழுதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு 1996-97 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சத்துணவு சமையல் கட்டடம் கட்டி

[2004 ஜூலை 29

கொடுக்கப்பட்டு தற்போது சமையல் அந்தக் கட்டடத்தில் சமைக்கப்பட்டு வருகிறது.

**14—**

**சத்துணவுக்கூடம் கட்டுதல்**

**வினா எண் 32247—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பாதரகுடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவு கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, விளந்திடசமுத்திரம் ஊராட்சி, பாதரகுடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு 1997-98 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமையல் கட்டடம் கட்டி கொடுக்கப்பட்டு, தற்போது அந்தக் கூட்டடத்தில் சமையல் சமைக்கப்பட்டு வருகிறது.

**15—**

**தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுத்தல்**

**வினா எண் 32254—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்களம் ஊராட்சியிலுள்ள உதவி பெறும் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 29]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், பெருமங்களம் உதவிபெறும் தொடக்கப் பள்ளிக்கு 2000-2001 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் ஆர்.சி.சி. கான்கிரீட் கட்டடம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

**16—**

**சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம்**

**வினா எண் 32261—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அசுர வட்டாரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, அசுர வட்டாரம், நல்லநாயகபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி சத்துணவு மையத்திற்கு கட்டடம் இல்லை, கீற்றுகொட்டகையில் இயங்கி வருகிறது. நிதி நிலைக்கேற்ப வரும் நிதி ஆண்டில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**17—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32279—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 29

(அ) சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி, ஆலஞ்சேரி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், மருதங்குடி ஊராட்சி, ஆலஞ்சேரி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவு சமையல் கூடம் கட்டிக் கொடுக்க, வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**18—**

**ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம்**

**வினா எண் 3229—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வழுதலைக்குடி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வழுதலைக்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் நல்ல கட்டடமாக உள்ளது. புதிய கட்டடம் தேவை இல்லை.

**19—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32292—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 29]

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் மடவாமேடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, மடவாமேடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு நல்ல சத்துணவுக்கூட கட்டடம் உள்ளது. புதிய கட்டடம் தேவை இல்லை

**20—**

**தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் கட்டிக் கொடுத்தல்**

**வினா எண் 32298—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மத்தலமடையான் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மத்தலமடையான் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் நிதிநிலைகேற்ப வரும் நிதி ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**21—**

**தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32325—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 29

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூட்டடம் கூட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம், 1996-97 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் சமையல் கூடம் கட்டப்பட்டு, அதில் சமையல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**22—**

**ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32327— திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெரியவகுப்பு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்ட அரசுக்குத் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பெரியவகுப்பு உதவிபெறும் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் இல்லை. தனியார் பள்ளி மையத்திற்கு அரசு நிதியில் கட்டடம் கட்டி ஒப்படைக்க அனுமதி இல்லை.

**23—**

**தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32330— திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 29]

(அ) சீர்காழி தொகுதி, முதலைமேடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, முதலைமேடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவு மையக் கட்டடம் இல்லை. தற்காலிகமாக பழுதடைந்த கட்டடத்தில் சமைத்து வழங்கப்படுகிறது. வரும் நிதி ஆண்டில் நிதி நிலைக்கேற்ப கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**24—**

**உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32334—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சோணையம்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, தென்னாம்பட்டினம் ஊராட்சியில் அமைந்துள்ள சோணையம்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவு சமையல்கூடம் 2000-2001 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஆர்.சி.சி. கான்கிரீட் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**25—**

**பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32335—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜுலை 29

*(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆஸ்பெட்டாஸ் ஓட்டினால் கட்டப்பட்ட சத்துணவு சமையல் கூடத்தில் சமைக்கப்பட்டு வருகிறது.*

**26—**

**சத்துணவுக் கூடம் கட்டித் தருதல்**

**வினா எண் 32340—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடசாலில் ரஷ்மானியா உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசுக்கு திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடவாசல் ரஷ்மானியா உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி சத்துணவு மையக் கட்டடப் பள்ளி தாளாளரால் கீற்றுக்கொட்டகை கட்டி வழங்கப்பட்டுள்ளது. சிறப்பு ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*



2004 ஜுலை 29]

**27—**

**புதிய சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32341—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி நகரிலுள்ள சபாநாயக முதலியார் உதவிபெறும் மேல்நிலைப் பள்ளியில் புதிய சத்துணவுக் கட்டடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியத்தைச் சேர்ந்த சபாநாயக முதலியார் உதவிபெறும் மேல்நிலைப் பள்ளியில் தற்போது மங்களூர் டைல்ஸ் ஓட்டினால் கட்டப்பட்ட சத்துணவுக் கூடம் உள்ளது. மேலும், இக்கட்டடத்தை பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஆர்.சி.சி. கட்டடமாகக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**28—**

**மேல்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம்**

**வினா எண் 32342—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

V211,31P04
P04.62.1
226197
சென்னை-600 008
நூலகம்

[2004 ஜூலை 29

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியத்தைச் சேர்ந்த வைத்தீஸ்வரன்கோயில், அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 1996-97 ஆம் ஆண்டு மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ஆர்.சி.சி. கான்கிரிட் சத்துணவு சமையல் கூடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**29—**

## புதிய சத்துணவுக்கூடம் அமைத்தல்

**வினா எண் 32344—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கோபாலசமுத்திரம் ஊராட்சி, ஆயங்குடிப்பள்ளம் வெங்கடேசா உதவிப்பெறும் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கோபாலசமுத்திரம் ஊராட்சி, ஆயங்குடிப்பள்ளம், வெங்கடேசா உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிக்கு நல்ல சத்துணவு கட்டடம் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

**30—**

## நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம்

**வினா எண் 32348—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?



2004 ஜூலை 29]

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓலையாம்புத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு நல்ல சத்துணவு கட்டடம் உள்ளது. புதிய கட்டடம் தேவையில்லை.

**31—**

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32350—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் கூழையார், திருவாலி, தொடுவாய் ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல், கூழையார், தொடுவாய் ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்கு நல்ல சத்துணவுக் கட்டடம் உள்ளது.

**32—**

## சத்துணவு மையக் கட்டடம்

**வினா எண் 32352—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் ஊராட்சியிலுள்ள கீராநல்லூர் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு 1998-99 ஆம் ஆண்டு 10-வது நிதிக் குழு (மாவட்ட ஊராட்சி) திட்டத்தில் சத்துணவு மையக் கட்டடம் கட்டி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், கீராநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு 1997-98 ஆம் ஆண்டு 10-வது நிதிக் குழு திட்டத்தில் சத்துணவு மையக் கட்டடம் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

**33—**

## நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம்

**வினா எண் 32359—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், அன்னப்பேட்டை, புதுத்துறை, மேலச் சாலை, அகரப்பெருந்தோட்டம் ஆகிய ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், அன்னப்பேட்டை, புதுத்துறை, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு 1999-2000 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆர்.சி.சி. கான்கிரீட் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலச் சாலை அகரப்பெருந்தோட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவு சமையல் கூடம் 1999-2000-ல் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆர்.சி.சி. கான்கிரீட் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.





**34—**

## ஊட்டச்சத்து மையம் அமைத்தல்

**வினா எண் 41809—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆர். கிருஷ்ணாபுரம், சிவசக்தி காலனி, சங்கர் நகர், விகேபி நகர், பார்த்தசாரதிபுரம் ஆகிய இடங்களில் புதிதாக ஊட்டச்சத்து மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதியில் ஆர். கிருஷ்ணாபுரத்தில் 18.3.2004 முதல் தனியார் கட்டடத்தில் ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிவசக்தி காலனியில் 1.7.93 முதல் அரசுக் கட்டடத்தில் ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகிறது. சங்கர் நகர், விகேபி நகர்களில் PMGY (Prime Minister's Grama Yojana) முகமை மூலம் இணை உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பார்த்தசாரதிபுரத்தில் 18.3.2004 முதல் தனியார் கட்டடத்தில் ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**35—**

## ஊட்டச்சத்து மையம் கட்டுதல்

**வினா எண் 41814—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஜீவா நகர், வாளவாடி, கண்டியன்கவுண்டன்புதூர், காட்டுபதி ஆகிய இடங்களில் ஊட்டச்சத்து மையம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

[2004 ஜூலை 29

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஜீவா நகரில் 18.3.2004 முதல் தனியார் கட்டடத்தில் ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வாளவாடியில் 1.3.2003 முதல் ஊட்டச்சத்து மையம் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கண்டியன்கவுண்டன்புதூரில் 18.3.2004 முதல் ஊட்டச்சத்து மையம் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காட்டுபதியில் 1.8.2003 முதல் ஊட்டச்சத்து மையம் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

**36—**

## பால்வாடி கட்டடம் கட்டுதல்

**வினா எண் 50043—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், பள்ளிப்பாளையம் ஊராட்சியில் பால்வாடி கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், பள்ளிப்பாளையம் பால்வாடி மையம் 1.3.2003 முதல் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**37—**

## அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம்

**வினா எண் 51227—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 29]

(அ) சீர்காழி ஒன்றியம், காவிரிப்பூம்பட்டினத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, காவிரிப்பூம்பட்டினத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

**38—**

## அங்கன்வாடிகளில் பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 53149—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதியில் அங்கன்வாடிகளில் பணியாளர்கள் நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தற்போது நேரடி நியமனத்திற்கு அரசினால் பொதுவான தடை உத்தரவு நடைமுறையில் உள்ள நிலையில், மையங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்திடலாகாது. மேலும், ஒட்டப்பிடாரம் தொகுதியில் உபரிப் பணியாளர்கள் இருப்பதாலும் தற்போது மேற்படி தொகுதியில் அங்கன்வாடி பணியாளர் புதியதாக பணி நியமனம் செய்ய இயலாது.

**39—**

## ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு இருக்கைகள் வழங்குதல்

**வினா எண் 32732—திரு. டி. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 29

(அ) கரூர் மாவட்டம், புன்னம் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு இருக்கைகள் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், புன்னம் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு 2003-04 ஆம் ஆண்டில் 30 சாய்வு மேசையுடன் கூடிய நீள் இருக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

**40—**

## ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியில் மேஜை, நாற்காலிகள் வழங்குதல்

**வினா எண் 35131—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் ஆதிதிராவிடர் ஆரம்ப பள்ளியில் மேஜை, நாற்காலிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளியில் மேஜை, நாற்காலிகள் போதுமானதாக உள்ளன.



2004 ஜூலை 29]

**41—**

## ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளிக்கு மேஜை, நாற்காலிகள் வழங்குதல்

**வினா எண் 35132—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பட்டவிளாகம் ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியில் மேஜை, நாற்காலிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) பள்ளிக் கட்டடம் கட்டிக்கொடுப்பதற்கும், மேஜை, நாற்காலிகள் வழங்கவும் அரசு முன்வருமா? ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பட்டவிளாகம் ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளியில் தற்போது 111 மாணவ/மாணவிகள் படித்து வருகின்றனர். மூன்று ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். தற்போதுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தேவையான கட்டடம் மற்றும் மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் போதுமானதாக உள்ளன.

**42—**

## ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல்

**வினா எண் 35411—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் அரசு ஆரம்பப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**43—**

### ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளிக்கு வகுப்பறை கட்டிக்கொடுத்தல்

**வினா எண் 35412—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரவேளூர் ஆதிதிராவிடர் ஆரம்ப பள்ளியில் வகுப்பறை கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மாதிரவேளூர் ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளியில் தற்போது 61 மாணவ/மாணவியர் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் இரண்டு ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தற்போதுள்ள கட்டடம் போதுமானதாக உள்ளது.

**44—**

### தாட்கோ நிறுவனத்திற்கு வரப்பெற்ற மூலதனம்

**வினா எண் 42063—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தாட்கோ நிறுவனப் பிரிவிற்கு 2001-2002 ஆம் ஆண்டில் மைய மற்றும் மாநில அரசிடமிருந்து வரப்பெற்ற மூலதனம் எவ்வளவு?

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தின் பிரிவிற்கு தாட்கோ வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தாட்கோ நிறுவன பிரிவிற்கு 2001-2002 ஆம் ஆண்டில் மைய மற்றும் மாநில அரசிடமிருந்து வரப்பெற்ற மூலதனம் (ஒதுக்கீடு) 178.350 இலட்சம். அத்தொகை முழுவதும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களுக்கு தாட்கோ மூலம் கடன் மற்றும் மானியமாக 1143 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

**45—**

### மாணவர்கள் விடுதிக்குச் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல்

**வினா எண் 42784—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், சீர்காழியிலுள்ள அரசு மாணவர்கள் விடுதியைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், சீர்காழி அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு புதிய கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டு 2003–04 ஆம் ஆண்டு முதல் மாணவர்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

46—

## பள்ளிக்கு சமையல்கூடம் கட்டுதல்

**வினா எண் 43007—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், நடுப்பட்டி ஆதிதிராவிடர் பள்ளிக்கு சமையல்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், நடுப்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடர் நலப்பள்ளி ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

47—

## சமையல் எரிவாயு கடன்

**வினா எண் 33929—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கொங்கணாபுரம் மேட்டூர், கொண்டலாம்பட்டி, ஆட்டையாம்பட்டி, கொளத்தூர், பொன்னம்மாபேட்டை கிளைகளில் சமையல் எரிவாயு கடன் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?



(ஆ) கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, கொங்கணாபுரம் கிளையில் 978 நபர்களுக்கும், மேட்டூர் கிளையில் 2415 நபர்களுக்கும், கொண்டலாம்பட்டி கிளையில் 1878 நபர்களுக்கும், ஆட்டையாம்பட்டி கிளையில் 1415 நபர்களுக்கும், கொளத்தூர் கிளையில் 1829 நபர்களுக்கும், பொன்னம்மாபேட்டை கிளையில் 1865 நபர்களுக்கும் ஆக மொத்தம் 10380 நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் 738 நபர்கள். அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ. எண் | கிளையின் பெயர் | நபர்கள் |
|---|---|---|
| 1. | கொங்கணாபுரம் | 50 |
| 2. | மேட்டூர் | 106 |
| 3. | கொண்டாலம்பட்டி | 119 |
| 4. | ஆட்டையாம்பட்டி | 197 |
| 5. | கொளத்தூர் | 13 |
| 6. | பொன்னம்மாபேட்டை | 253 |
| | மொத்தம் | 738 |

48—

## மகளிருக்கு தனி நபர் கடன் வழங்குதல்

**வினா எண் 44078—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டு மே மாதம் முடிய கூட்டுறவு வங்கிகள் மூலம் மாத ஊதியம் பெறும் மகளிருக்கான தனி நபர் கடன் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) வழங்கிய தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டு மே மாதம் முடிய கூட்டுறவு வங்கிகள் மூலமாக 59 பேருக்கு மாத ஊதியம் பெறும் மகளிருக்கான கடன் வழங்கப்பட்டது.

(ஆ) ரூ.9,96,000/-

**49—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 43925—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, சேமங்கியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கரூர் தொகுதி, சேமங்கி கிராமத்தின் அருகில் 4 கி.மீ. தூரத்தில் நொய்யல் கால்நடைக் கிளை நிலையமும் 5 கி.மீ. தூரத்தில் வேலாயுதம்பாளையம் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. அரசு தற்போது செயல்பட்டுவரும் கால்நடைக் கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகவும் கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தி வருகிறது. சேமங்கி கிராமத்தில் தற்போது எந்தவொரு கால்நடை நிலையமும் இல்லாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க இயலாது.





(ஆ) எழாது.

**50—**

## ஒருங்கிணைந்த காட்டுத் தீ தடுப்புத் திட்டம்

**வினா எண் 51106—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் ஒருங்கிணைந்த காட்டுத் தீ தடுப்புத் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஏற்காடு தொகுதியில் ஒருங்கிணைந்த காட்டுத் தீ தடுப்புத் திட்டம் செயல்படுத்துவது குறித்தான கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் காட்டுத் தீ ஏற்படாமல் தடுக்கும்வண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இதுகுறித்து அவசியமான விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு மக்களிடையே தீ தடுப்பு விழிப்புணர்வு மேலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தீ தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அரசிதழில் வருடந்தோறும் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

(ஆ) கருத்துரு ஏதுமில்லாததால் இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2004 ஜூலை 29

## 2. நன்றி நவிலல்

### கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதி பெற்றுத் தந்த முதலமைச்சருக்கு நன்றி

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன குமாரதாஸ்? சொல்லுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நன்றி சொல்வதற்கு அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மருத்துவக் கல்லூரிகளுக்கு 250 மாணவர்களைச் சேர்க்கிறமுகத்தான் அனுமதியைப் பெற்றுத் தந்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிற நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லை எங்களுக்கு எல்லை, குமரி எங்களுக்குத் தொல்லை என்று வசை பாடிக்கொண்டிருந்த கருணாநிதியினுடைய அரசியல் சகாப்தத்தை முடித்து, நெல்லை மட்டுமல்ல, குமரியும் எங்களுக்குச் சொந்தம் என்று சொல்லி அதை நிலைநாட்டுகின்ற முகத்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கன்னியாகுயரி மாவட்டத்திற்கு இந்த மருத்துவக் கல்லூரியைத் தந்ததில் குமரி மாவட்ட மக்கள் சார்பாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும், நன்றி சொல்லி முடியுங்கள். திரு. பச்சைமால். (குறுக்கீடு) போதும், போதும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பச்சைமால் பேசி முடிக்கட்டும்.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஆசாரிப்பள்ளத்தில் இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதி பெற்றுத்தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், குளச்சல் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2004 ஜூலை 29]

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரியில் 300 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனைக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை எண் 219, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 19-11-2002-ன்படி ரூ.5 கோடி அனுமதிக்கப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கின்ற சூழ்நிலையில் இந்த மருத்துவக் கல்லூரிக்குத் தேவைப்படும் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு மேலும் ரூ.45.80 கோடி, தற்போது அரசாணை எண் 244, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-7-2004-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் எங்களுக்கு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி கட்டுவதற்கு அனுமதி தந்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு குமரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றிகள் கோடி, கோடி என்று கூறி இதற்கு உறுதுணையாக இருந்த நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தளவாய் சுந்தரம் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல கட்டடங்கள் கட்டுவதற்கு, துரிதப் பணிகளை மேற்கொண்டிருக்கிற நமது பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு பன்னீர்செல்வம் அண்ணாச்சி அவர்களுக்கும் குமரி மாவட்ட மக்களின் சார்பாக இதயம் கனிந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், நன்றியையும் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-25*

## 3. கவன ஈர்ப்பு

### லால்குடி தொகுதி, மாந்துறை-பூவாளூர் புறவழிச்சாலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.எம். பாலன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. எஸ்.எம். பாலன்.

***திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தொகுதியில் சிமென்ட் ஆலைகளிலிருந்து திருச்சி-சிதம்பரம் சாலையில் செல்லும் கனரக

வாகனங்கள் லால்குடி கடை வீதி வழியாகச் செல்வதால் அடிக்கடி விபத்துகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தவிர்க்க, மாந்துறை நகரிலிருந்து திருமங்கலம், அகலங்கநல்லூர், பூவாலூர் வழியாக புறவழிச்சாலை உடனடியாக அமைக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து." மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## விவர அறிக்கை

லால்குடி நகரத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க திருச்சி-சிதம்பரம் சாலையில் லால்குடி நகரத்திற்கு முன்பாக, கி.மீ. 8.6-ல் பிரிந்து பின்வரும் சாலைப் பகுதிகளின் வாயிலாகப் புறவழிச்சாலை அமைக்க வேண்டும்:

| | | (நீளம் மீட்டரில்) |
|---|---|---|
| 1. | மாந்துறை நகர்-திருமங்கலம் சாலை (கி.மீ. 0/0-4/4) (மாவட்ட இதர சாலை) | 4400 |
| 2. | சிறுதையூர்-திருமங்கலம் சாலை (கி.மீ. 1/6-2/0) (மாவட்ட இதர சாலை) | 400 |
| 3. | கூழையாற்றின் நீர்வழிப்பாதை | 150 |
| 4. | மண்பாதை (புறம்போக்கு) | 400 |
| 5. | அகலங்கநல்லூர் சாலை (கி.மீ. 0/0-2/0) (கரும்பு மேம்பாட்டுத் திட்ட சாலை) | 2000 |
| 6. | திருச்சி-சிதம்பரம் சாலை (கி.மீ. 14/6-14/2) (மாநில நெடுஞ்சாலை எண் 24) | 300 |
| | மொத்தம் | 7650 |





*மேற்கூறிய சாலைப் பகுதிகளின் வழியே புறவழிச்சாலை அமைக்க தோராயமாக ரூ.1,200 இலட்சங்கள் தேவைப்படும். மேற்கூறிய புறவழிச்சாலை அமைக்கும் பணியானது அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப, இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த விவர அறிக்கையைப் படித்தேன். எதிர் வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பணி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இருந்தது. மேற்கூறிய சிதம்பரம் சாலையில் கடைவீதி அமைந்துள்ளது. லால்குடி அரசு மருத்துவமனை, லால்குடி வட்டாட்சியர் அலுவலகம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, நீதிமன்றம், பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சார்பதிவாளர் அலுவலகம் இவை அனைத்தும் 500, 600 மீட்டருக்குள்ளேயே அமைந்துள்ளன. இந்தச் சாலையில் கடைவீதியும் அமைந்துள்ளது. இதனால் தினசரி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. 5 சிமெண்ட் ஆலைகளிலிருந்து கனரக வாகனங்கள் வருகின்றன. இப்பணி, தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. கடை ஏழு வள்ளல்களின் மறு பிறவியாக விளங்கும் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு இதை மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டு, பணி மேற்கொள்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி - சிதம்பரம் நெடுஞ்சாலையானது மாநில நெடுஞ்சாலையாகும். இந்தச் சாலையின் போக்குவரத்துச் செறிவு 15,500 ஆகும். லால்குடி நகரம் திருச்சி - சிதம்பரம் நெடுஞ்சாலையில் கி.மீ. 12/2-ல் அமைந்துள்ளது. மேலும் இந்தச் சாலையில் கி.மீ. 18/2 காட்டூரில் கோத்தாரி சர்க்கரை ஆலை ஒன்றும், கி.மீ. 29-ல் கள்ளக்குடியில் டால்மியா சிமெண்ட் ஆலையும் அமைந்துள்ளன. லால்குடி நகராட்சியின் உள் பகுதியான திருச்சி - சிதம்பரம் சாலை சுமார் 5 கி.மீ. நீளம் உள்ளது. தற்போது அனைத்து கனரக வாகனங்களும் இந்த நகராட்சியின் வழியாகச் செல்கின்றன. தற்போது இந்தச் சாலையின் அகலம் 7 மீட்டர் மட்டுமே உள்ளது. எனவே உள்ளூர் மற்றும் வெளியூர்

செல்லும் போக்குவரத்துக்கு ஏற்ப லால்குடி நகரப் பகுதிக்குள் இருக்கிற 7 மீட்டர் சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறு இல்லை. ஏனெனில், இருபுறமும் கட்டடங்கள் உள்ளன. எனவே வெளியூருக்கு நேராகச் செல்லும் அனைத்து வாகனப் போக்குவரத்துகளும் லால்குடி நகரின் உள்ளே செல்லும்போது உள்ளூர்ப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, லால்குடிக்கு முன்பாக உள்ள மாந்துறையிலிருந்து திருமங்கலம், அகலங்கநல்லூர், பூவாலூர் வழியாக லால்குடி நகரின் இடது புறம் அமைந்துள்ள இதர மாவட்டச் சாலைகளை அபிவிருத்தி செய்து, கூழையாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டி நேராகச் செல்லும் கனரக வாகனங்களை இதன் வழியாக அனுமதித்தால் லால்குடி நகருக்குள், உள்ளூர்ப் போக்குவரத்து இடையூறு இன்றி நடைபெற வாய்ப்பு ஏற்படுகின்றது. இச்சாலையின் நடுவே கூழையாற்றின் இருவழிப்பாதை 150 மீட்டர் நீளத்திற்கு உள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டவும், லால்குடிக்கு இடதுபுறம் அமைந்துள்ள புறவழிச்சாலையில் அமையும் இதர மாவட்டச் சாலைகளை 7 கி.மீ. நீளம் உள்ள ஒருவழிப் பாதையிலிருந்து இரு வழிப் பாதையாக ஆக்கவும் ரூ.4 கோடி தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கின்றது. வரும் நிதி ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், முனைவர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து நான்காவது முதல் நூற்று ஐம்பத்து இரண்டாவது வரையிலான ஒன்பது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்



## 5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 24 — உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்**

(ஆ) **கோரிக்கை எண் 46 — போக்குவரத்துத் துறை**

(இ) **கோரிக்கை எண் 26 — தொழில் துறை**

(ஈ) **கோரிக்கை எண் 5 — வேளாண்மைத் துறை**

(உ) **கோரிக்கை எண் 17 — கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்**

(ஊ) **கோரிக்கை எண் 42 — சிறுதொழில்கள் துறை**

---

### (அ) கோரிக்கை எண் 24—உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24—உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,5,73,47,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 172, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,73,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 201, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவல் துறை அதிகாரிகளுக்கு மற்றத் துறையைப்போல் டீசல் அளவு கொடுக்காமல் அவர்களுக்கு எவ்வளவு தேவைப்படுமோ அந்த அளவு டீசல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,73,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46– போக்குவரத்துத் துறை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.149,93,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,27,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 168, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கியிலிருந்து கோவை, ஊட்டி, கொடைக்கானல், திருவண்ணாமலை, வேளாங்கண்ணி, திருச்செந்தூர் ஆகிய இடங்களுக்கு பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,93,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 251, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் பள்ளிக்கூட நேரத்திற்கும், தொழிற்சாலைகள் நேரத்திற்கும் ஐந்து புதிய வழித்தடங்களில் ஐந்து புதிய பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,93,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 262, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் to செங்கல்பட்டு அகல ரயில் பாதைத் திட்டம் தொடங்கப்படவிருப்பதால் மயிலாடுதுறையிலிருந்து சென்னை நகருக்கு நேரடியாகப் பயணம் செய்யும் வகையில் புதிய சொகுசு அல்லது ஏ.சி. பேருந்துகள் மாலை நேரத்தில் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,93,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 300, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 364, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்து ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து அரசின் மற்ற துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகள் போன்று சலுகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,93,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 26 — தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26— தொழில் துறை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.29,23,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.107,41,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 163, திரு. ப. அரசன்.





**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியில், கடற்கரை ஓரங்களில் கிடைக்கும் ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி, அப்பகுதியில் தொழிற்சாலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,23,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,41,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 232, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "படித்த வேலையற்ற இளைஞர்கள் அதிகமுள்ள தளி தொகுதியில் சிப்காட் தொழிற்சாலை ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,23,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,41,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 345, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா அருகிலுள்ள நாங்குநேரி தாலுகாவிற்குட்பட்ட வாகைகுளத்தில் அமைய உள்ள உயர் தொழில்நுட்பப் பூங்கா விரைவாக ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,23,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,41,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2004 ஜூலை 29

## (ஈ) கோரிக்கை எண் 5 — வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.875,68,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.6,72,78,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 164, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சொட்டுநீர்ப் பாசனத்தின் அவசியம் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.875,68,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 181, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக விவசாயிகளை போலி மருந்து, உரம் கொடுத்து ஏமாற்றும் கும்பலைக் கண்டறிந்து தண்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2004 ஜூலை 29] [திரு. மு. அப்பாவு]

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.875,68,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,78,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 211, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி கெலமங்கலம் ஒன்றியத்தில் உள்ள குந்துமாரனப்பள்ளி, பைரமங்கலம், ஜக்கேரி ஆகிய ஊராட்சிகளில் விவசாயிகளுக்காக இஸ்ரேல் ப்ராஜக்ட்டை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.875,68,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 261, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவிரி டெல்டாவில் தண்ணீர் வரத்து குறைந்துவிட்டதால் மாற்றுப் பயிராகக் கரும்புச் சாகுபடியை ஊக்குவிக்க கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.1,000/- விலை நிர்ணயம் செய்யவும், கரும்பிலிருந்து எத்தனால் தயாரிக்கும் தொழிலை அதிக அளவு விரிவுபடுத்தவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.875,68,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் 17— கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை — கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை– கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள், மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,05,12,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 194, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர்த் துணிக்கு வழங்க வேண்டிய தள்ளுபடி பணம் அரசு வழங்காததால் கதர்த் துறையில் பணியாற்றும் ஏழை எளிய மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்ற உடனடியாக அரசு அதை வழங்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,05,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 166, திரு. ப. அரசன்.



**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கதராடை அணிய ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,05,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 260, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை நகரம், கூறைநாடு பகுதியில், நலிவடைந்த கூறைப் புடவை நெசவுத் தொழிலை சீர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,05,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஊ) கோரிக்கை எண் 42 — சிறுதொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42– சிறுதொழில்கள் துறை. மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.68,08,33,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,43,50,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2004 ஜூலை 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 167, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கியில் சிட்கோ தொழிற்பேட்டை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,08,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,43,50,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 250, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலையற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தளி தொகுதியில் சிறு தொழிற்சாலைகள் (Small Scale Industries) தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,08,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,43,50,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 360, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா, வள்ளியூரில் ஆரம்பிக்க உள்ள SIDCO தொழிற்பேட்டைக்கு 16.56 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை அரசுத் துறை உடனடியாக மாற்றம் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2004 ஜூலை 29] [திரு. மு. அப்பாவு]

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,08,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,43,50,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@@ நான் இந்த மாமன்றத்திலே

@ 225 முதல் 273 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

@@ 275 முதல் 306 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு முன்பு, இரண்டொரு வார்த்தைகள் பொது நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசினுடைய 2004-2005 நிதிநிலை அறிக்கை, உண்மையிலேயே மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது; பாராட்டுகின்றோம். இன்றையதினம், புதிய மத்திய அரசு பட்ஜெட்டை — நிதிநிலை அறிக்கையை — வெளியிட்டிருக்கிறது. அதிலே 10,000 கோடி ரூபாய்க்கு மறைமுக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதை ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழகத்தில் இருக்கிற நிதிநிலை அறிக்கையிலே எந்தப் புதிய வரியும் இல்லை; வரி உயர்வும் இல்லை. ஆகையால் அதை நாங்கள் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும்

@307 முதல் 540 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் IV, V மற்றும் VI ஆக அச்சிடப்பட்டுள்ளன.



ஒலி) நிதியமைச்சர் அவர்கள் பற்றாக்குறையை எப்படியெல்லாம் சமாளிக்கப் போகிறோம் என்பதைப் பற்றி இந்த அவையிலே மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து வர வேண்டிய பணம் இவ்வளவு இருக்கிறது; விற்பனை வரியாக வசூலிக்கப்பட வேண்டிய பணத்தின் மூலமும், மீதி turn over விற்பனை வரி அதிகமாவதனாலே வர வேண்டிய வருமானம் மூலமும் — இவற்றைக் கொண்டு — பற்றாக்குறையைச் சமாளிக்கிறேன் என்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். ஆகையினாலே புதிய வரி கண்டிப்பாக இருக்காது. இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேநேரத்தில் தமிழக மக்களுக்கு மிக முக்கியமான பிரச்சினைகள், அடிப்படைப் பிரச்சினைகள், மூன்று இருக்கின்றன; குடிநீர்ப் பிரச்சினை, கிராம போக்குவரத்துச் சாலைகள், கிராமப்புறத்திலே வேலையில்லாத் திண்டாட்டம். குறிப்பாக இவற்றுக்கு நம்முடைய தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கையிலே மிக ஏராளமான உதவிகளைச் செய்வதற்கு நிதி ஒதுக்கி இருக்க வேண்டும். ஆனால் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே குடிநீர்ப் பிரச்சினை மிக மிகக் கடுமையாக இருக்கிறது. நாளொன்றுக்கு 12,000 லாரிகள் மூலம் ஒரு கோடி ரூபாய் செலவிலே குடிநீர் இங்கே சப்ளை செய்யப்படுகிறது. தமிழக அரசு மிகப் பிரம்மாண்டமான ஏற்பாடு செய்திருப்பது பாராட்ட வேண்டியது. ஆனாலும்கூட வாரத்திற்கு மூன்று நாட்கள்தான் பல பகுதிகளிலே குடிநீர் சப்ளை நடந்துகொண்டிருக்கிறது. இதையெல்லாம் மாற்றுவதற்காகத் தான், சென்னைக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு தனி துரித ஒருங்கிணைப்புத் திட்டத்தைத் தயாரித்து, அதை மார்ச் ஒன்றாம் தேதி முதல் அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கடந்த வாஜ்பாய் அரசு நிர்ணயித்திருந்தது. ஆட்சி மாறியிருந்த போதிலும்கூட, சென்னை மாநகருடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மார்ச் ஒன்றாம் தேதி முதல் செயல்படக்கூடிய அந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசிடம் இந்த அரசு வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். புதிய மத்திய அரசு இதைக் கிடப்பில் போட்டுவிடாமல் விழிப்பாக இருந்து அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-40

நடப்பாண்டிலே கிராம ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்வதற்காக 600 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; வரவேற்கின்றோம். ஆனால் இன்னும் தமிழகத்திலே இருக்கின்ற ஏறக்குறைய இரண்டு இலட்சம் கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இருக்கிறதா என்றால் இல்லை. செய்ய வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன. நம்முடைய திறமைமிக்க முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை ஆக்குகின்ற முயற்சிகளை எடுக்கும்போது, இந்தியாவிலேயே முதல் முதலாக கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் அத்தனை கிராமங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற எல்லையை எட்டுவதற்கு 600 கோடி ரூபாய்க்குப் பதிலாக 1200 கோடி ரூபாய் கிராமத்திலே இருக்கின்ற குடிநீர் சப்ளை திட்டத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

இரண்டாவது, கிராமங்களிலே வேலைவாய்ப்பு இல்லை. நம்முடைய மக்கள், 80 சதவீத மக்கள் கிராமத்திலே வசிக்கிறார்கள், கிராமவாசிகள். அவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்திருக்கிறது. ஆகையினாலே வறுமை இருக்கிறது. இதைப் போக்குவதற்குப் போர்க்கால அடிப்படையிலே நம்முடைய தமிழக அரசு போதிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்; எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை இன்னும் வேகமாக.....

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கிராமப்புறப் பகுதிகளிலே கூடுதல் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேதான் தொலைநோக்குப் பார்வையோடு கடந்த மூன்று ஆண்டுகாலமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாகக் கூடுதல் வேலைவாய்ப்பை வழங்கியிருக்கின்றார்கள். விளிம்புத் தொகை என்கின்ற திட்டத்தின் மூலமாக கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்காகவும், கிராமப்புறத்தில் இருக்கின்ற படித்த, பாமர மக்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்கின்ற அடிப்படையிலேயும், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறையின் மூலமாக விளிம்புத் தொகைத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றோம் என்பதையும், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்





மூலமாக எவ்வளவு பேருக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதையும், விளிம்புத் தொகைத் திட்டம் எவ்வளவு சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு வருகின்றது என்பதையும், என்னுடைய பதிலுரையிலே தெரிவிக்கின்றேன் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதில் எல்லோருக்கும் திருப்தியளிக்கும் என்று நினைக்கின்றேன். அப்படி திருப்தியளிக்காவிட்டால், மறுபடியும் பேச எனக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இரண்டாவது, கிராமப்புறங்களிலே சாலை வசதிகள் மிக மிக இன்றியமையாதவை. கிராமத்திலே விளைகின்ற காய்கறிகளை எடுத்துக்கொண்டு நகர்ப்புறத்திற்குச் சென்று வியாபாரம் செய்வதற்குக்கூட சாலை வசதிகள் போதிய அளவில் இல்லை. அதற்காகப் பொதுவாக சாலை.....

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துவைத்த கருத்துகளிலே, நகர்ப்புறங்களிலே தண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது என்று கூறினார். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்த ஒரு திட்டத்தைத் தீட்டினாலும், அந்தத் திட்டத்தைக் குறை கூறுவதாகவே இருந்த எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள், சென்னை மாநகருக்குத் தண்ணீர் வராது, வராது என்று கூறிக்கொண்டிருந்தார்கள். அப்படி அவர்கள் கூறிக்கொண்டிருந்தபோது, மே திங்களிலே கண்டிப்பாக சென்னை மாநகருக்குத் தண்ணீர் வரும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கூறியதுபோல, மே மாதம் 31 ஆம் தேதி முதல் சென்னை மாநகருக்கு தண்ணீரானது வீராணம் திட்டத்தின் மூலமாக வந்துகொண்டிருக்கிறது. படிப்படியாகத் தண்ணீரின் அளவு உயர்த்தப்பட்டு இன்றைக்கு இத்திட்டத்தின் மூலமாக சென்னைக்கு தினமும் 70 mld தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அன்று முதல், இந்த 3 ஆண்டு காலத்திலே கடுமையான வறட்சி ஏற்பட்டிருந்தாலும் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முனைப்போடு செயல்பட்டதன் காரணமாக, சென்னையிலே இருக்கிற மக்களுக்கு - இந்தக் கடுமையான வறட்சியிலும்கூட — குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு தினமும் 200 mld தண்ணீரை சென்னை மாநகரத்திற்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

[திரு. கே.பி. அன்பழகன்] [2004 ஜூலை 29

அதேபோல, கிராமப்புறங்களிலும் நல்ல தண்ணீர் வழங்க வேண்டும் என்பதற்காக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அதிகமாகச் செம்மைப்படுத்த வேண்டும் என்று கூறினார். இன்றையதினம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசில், இந்த 3 ஆண்டு காலத்திலே எடுத்துக் கொண்டோம் என்றால் அதிகப்படியான நிதிகளைக் குடிநீருக்காக வழங்க வேண்டும் என்ற எண்ணத்திலும், கிராமத்திலே இருக்கிற மக்கள் நல்ல தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகப் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகளானவை அந்தக் குறிப்பிட்ட காலத்திலே முடிவடைய இருக்கின்றனவா என்பதை புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனைப்படி ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட காலத்திலே அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டமானது முடிவடைந்து அந்தக் கிராம மக்களுக்கு நல்ல தண்ணீர் வழங்கப்படும்.

முற்பகல் 11-45

அதேபோல, சாலை வசதி பற்றி எடுத்துச் சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசால் 300 கோடி ரூபாய் கிராமச் சாலைகளுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 150 கோடி ரூபாய் முறையாகச் சாலைகளை மேம்படுத்துவதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. மீதமிருக்கிற 150 கோடியை இன்னும் ஒரு மாத காலத்திற்குள் செலவிடுவதற்காகப் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முனைப்போடு செயல்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லி அமர்கிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** தமிழ்நாட்டிலே கிராமச் சாலைகளைச் சீர்படுத்துவதற்காக இந்த நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையிலே 2160 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் 80 சதவிகிதம் மக்கள் கிராமங்களிலே வசிக்கிறார்கள். கிராமச் சாலைகள் மிக முக்கியமானவை. ரூ.2,160 கோடியிலே 80 சதவிகிதம் பணத்தை அதாவது சுமார் 1,725 கோடி ரூபாயைக் கிராமச் சாலைகளுக்காக மட்டும் ஒதுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தவிர, முந்தைய மத்திய அரசானது மருத்துவ அறிவியல் நிலையம் ஒன்றைத் தமிழ்நாட்டிலே துவக்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறது. ஆகையினாலே அந்த...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட 2,160 கோடி ரூபாய் உலக வங்கியினுடைய நிதியினைப் பற்றிச்



2004 ஜூலை 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சொல்கிறேன். ஆற்காட்டிலிருந்து திருவாரூர் வரைக்கும், நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடி வரைக்கும், 724 கிலோ மீட்டர் சாலைகளை உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக்கவும் மற்றும் தமிழ்நாட்டில் இருக்கிற மாநிலச் சாலைகளையும், மாவட்ட முக்கியச் சாலைகளையும் தரம் உயர்த்தி மேம்படுத்துவதற்காகவும் வாங்கப்பட்ட நிதி அது என்பதனை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே மருத்துவ அறிவியல் நிலையம் ஏற்படுவதனாலே தமிழ்நாட்டிலே மருத்துவப் படிப்பினுடைய தரம் மிக அதிகமாக உயரும். பல்வேறு வசதிகள், நவீன வசதிகள் கொண்டதாக மருத்துவப் படிப்பு — M.B.B.S. படிப்பு—உயரும். ஆகவே மருத்துவ அறிவியல் நிலையம், மத்திய அரசு அனுமதித்திருப்பதைக் கண்டிப்பாக கேட்டுப் பெற்று தமிழகத்திலே அதைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழக அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, நம்முடைய மாநில அரசினுடைய ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளமும் அகவிலைப்படியும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அண்மையிலே மத்திய அரசு, அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற அகவிலையிலே 50 சதவிகிதத்தை அடிப்படைச் சம்பளத்திலே சேர்த்து அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுபோல தமிழகத்திலே இருக்கிற அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படியில் 50 சதவிகிதப் பணத்தை அடிப்படைச் சம்பளத்திலே சேர்த்தால் அவர்கள் பல நன்மைகளைப் பெறுவார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

இப்பொழுது தமிழ்நாட்டிலே maxi cab வேன்கள் மிக அதிகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அதன்மூலம் ஏழை எளியவர்கள் எல்லாம், நடுத்தர வகுப்பைச் சார்ந்த மக்கள் எல்லாம் தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்கு எளிய முறையிலே, குறைந்த செலவிலே பார்ப்பதற்கு ஏதுவாக இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது 24,000 ஆக அதனுடைய வரியை உயர்த்தியிருக்கின்றார்கள். முன்பு 12,000 ரூபாயாக இருந்தது ஓரேயடியாக இரண்டு மடங்கு, அதாவது 24,000 ஆக உயர்த்தப்பட்டுவிட்டது. அதே நேரத்திலே டீசல் விலை உயர்வு; உதிரி பாகங்கள் விலை உயர்வு; இத்தனை விலைவாசி உயர்வினாலே லாபகரமாக வேன் ஓட்டுவதற்கு

முடியாமல், ஒன்றிரண்டு வேன் சொந்தக்காரர்கள் அதை விற்றுவிட்டு, தன்னுடைய சொந்த வேனிலேயே இப்பொழுது டிரைவராகப் பணிபுரிகின்ற அளவிற்கு, அந்தத் தொழில் நசிந்து வருகின்றது. ஆகவே தமிழக அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்வது, முன்பிருந்தபடி 12,000 ரூபாய் என்கின்ற வரியை நீங்கள் விதிக்க வேண்டும். 24,000-த்திலிருந்து, 12,000-ஆகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத்திலிருந்து வேன் மூலம் ஆந்திராவிற்கோ அல்லது கர்நாடக மாநிலத்திற்குச் செல்லும்போது நுழைவு வரி போடுகின்றார்கள். ஆள் ஒன்றுக்கு 220 ரூபாய் வீதம் ஒரு வேனிலே செல்வதற்கு, ஒருமுறை நுழைவிற்கு 2,640 ரூபாய் வசூல் செய்கிறார்கள், நுழைவு வரி என்று. இது மிக அதிகமானது. ஆகையினாலே தமிழ்நாடு அரசு அக்கறையாக, serious ஆக இதை எடுத்துக்கொண்டு ஆந்திரா மற்றும் கர்நாடக அரசுகளிடம் பேசி அதைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். தவிர. . . .

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து ஆந்திரா மற்றும் கர்நாடகா பகுதிகளுக்குச் செல்கின்ற வாகனங்களுக்கு அந்த மாநில அரசுகள்தான் அங்கு நுழைவு வரி விதிக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு ஆந்திராவிலிருந்து வருகின்ற வாகனங்களுக்கோ அல்லது கர்நாடகாவிலிருந்து வருகின்ற வாகனங்களுக்கோ நுழைவு வரி விதிக்கவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தமிழகத்திலிருந்து செல்கின்ற வாகனங்களுக்குக்கூட, அங்கு ஆந்திர மாநில அரசிடமும், கர்நாடக அரசிடமும் இதுகுறித்து தொடர்ந்து தமிழக அரசு அந்த நுழைவு வரி விதிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. அதுபோலவே திருப்பதிக்குச் சென்ற பிறகு, மலைக்குச் செல்லவேண்டுமென்றால் நம்முடைய வேன்களுக்கு எல்லாம் அனுமதியில்லை. வேனிலே சென்றவர்களெல்லாம் பஸ்ஸைப் பிடித்துப் போகவேண்டிய ஒரு கஷ்டமான நிலை இருக்கின்றது. ஆந்திர மாநில அரசை அணுகி அவை அங்கு செல்வதற்கு உள்ள தடையை நீக்க வற்புறுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



வாகன வரியை வசூல் செய்வதிலிருந்து பெறப்படும் பணம் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தனியாக ஒதுக்கப்பட வேண்டும். பிற இனங்களுக்குச் செலவு செய்யக்கூடாது. அப்பொழுதுதான் சர்வதேச நாடுகளுடைய தரத்திற்கு நம்முடைய எல்லா சாலைகளும் உயரும். ஆகையினாலே அதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து வாகனங்களிலிருந்து வருகின்ற வரி வசூலை சாலை மேம்பாட்டிற்கு மட்டும்தான் செலவழிக்க வேண்டுமென்று சொன்னால், அப்பொழுது விற்பனை வரி மூலமாக வசூலிக்கப்படுகின்ற வரிகள் அத்தனையையும் அந்தத் துறைக்கு மட்டும் செலவழிக்க முடியுமா? ஒவ்வொரு துறையிலும் வசூல் பண்ணுகின்ற தொகையை அந்தந்தத் துறைகளுக்கே செலவு செய்வது என்பது நடைமுறை சாத்தியம் இல்லை என்பதை, பொதுமக்களுடைய நலன் கருதி எல்லா வருவாயையும் பொதுமக்களுடைய ஒட்டுமொத்த நன்மைக்குத்தான் பயன்படுத்த முடியும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** போக்குவரத்துத் துறையிலே வசூலாகின்றதை வேறு துறைக்குச் செலவு செய்ய வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆர்.டி.ஓ. மூலம் வாகன வரி வசூலிக்கின்றார்கள். அதை அங்கே சாலைகளுக்கு அதிகமாகச் செலவு செய்தால், சாலை அபிவிருத்தி அடையும். மக்களுக்கும் வசதியாக இருக்கும். போக்குவரத்துக் கழகங்கள் ticket விற்கின்றன. சென்னையிலிருந்து சேலத்திற்கோ அல்லது கோயம்புத்தூருக்கோ போவதற்காக வசூலிக்கின்ற பணத்தைச் சாலைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதைப் புதிய பஸ்கள் வாங்குவதற்கோ அல்லது வேறு பணிகளுக்கோ கண்டிப்பாகப் பயன்படுத்தலாம். Road Tax, road-க்காகப் பயன்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-55*

தவிர, இங்கேயிருந்து பாண்டிச்சேரிக்கு கிழக்குக் கடற்கரை ஓரமாகச் செல்லும்போது முதலில் check post இருந்தது. அங்கே நுழைவதற்கு இங்கேயே கட்டணம் கட்டிவிட்டுப் போகலாம். அந்த check post இப்போது இல்லை; எடுக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அதை அமைக்க வேண்டும்.

அதேபோல, நாகப்பட்டினத்திலிருந்து புதுச்சேரிக்கு காரைக்கால் வழியாக வரும்போது ஒரு check post இருந்தது. அதையும் மீண்டும் அமைக்க வேண்டும். அப்படி அமைத்தால் நுழைவு வரி அங்கேயே கட்டுவதற்கு மக்களுக்கு வசதியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

போக்குவரத்துக் கழக ஊழியர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1-9-2001 ஆம் தேதிய ஒப்பந்தப்படி சம்பள உயர்வு பேச்சுவார்த்தை தொடங்காமல் காலம்தாழ்த்தி வரப்படுகிறது. எனவே தொழிலாளர்கள் நலன் கருதி உடனடியாக முத்தரப்பு பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் 1-4-2003 ஆம் தேதி முதல் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு முறையாக Pension வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

வேளாண்மைத் துறையிலே இப்போது Ethanol, வாகனங்களிலே உபயோகித்து, போக்குவரத்து மிக வசதியாக pollution இல்லாமல் நடைபெற்று வருகிறது. சர்க்கரை ஆலைக் கழிவுநீரிலிருந்து Ethanol தயாரிப்பதற்கு மிக வசதியாக இருக்கின்ற காரணத்தினாலே வேளாண்மைத் துறையிலேயிருந்து சர்க்கரை ஆலைகளுக்குத் தனிக் கடன் உதவியோ வேறு உதவியோ கொடுத்து Ethanol உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு வறட்சிக் காலத்திலோ அல்லது வெள்ளத்தினாலோ ஏற்படுகின்ற இழப்பை ஈடுகட்டுவதற்கு பயிர் Insurance திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஏழை நெசவாளிகளுக்கு இலவச மின்சாரம், குடிசைகளிலே இருக்கின்ற ஏழை நெசவாளிகளுக்கு இலவச மின்சாரத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். வேலை செய்ய முடியாத முதிய நெசவாளிகளுக்கு Pension திட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லி, என்னுடைய தொகுதி பற்றி ஒரு நிமிஷம் சொல்லி முடித்துக்கொள்கின்றேன். பொதுவாக, நம்முடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகின்றது;



வரவேற்கின்றோம். ஆனால் அந்த ஒதுக்கீட்டிலே கிராம நலத் திட்டத்திற்கு ரூ.15 இலட்சமும், பழங்குடி மற்றும் ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் கட்டுவதற்கு ரூ.5 இலட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அது கண்டிப்பாகச் செய்ய வேண்டியதுதான். ஆனால் எங்களைப் போன்று சென்னை மாநகரத்திலே இருக்கின்றவர்களுக்கு இந்தக் கிராமப்புறத் திட்டத்திலே மாணவர் இல்லங்கள், பழங்குடி மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கு வாய்ப்பே இல்லை. ஆகையினாலே அந்த ரூ.15 இலட்சமும், இந்த ரூ.5 இலட்சமும் சேர்த்து ரூ.20 இலட்சத்தைத் தொகுதி மேட்பாட்டுத் திட்டத்திலே பிற பணிகளுக்கு, நல்ல பணிகளுக்கு ஒதுக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். அதற்கு அனுமதியும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நண்பகல் 12-00

கடைசியாக, மயிலாப்பூர், என்னுடைய தொகுதியைப் பற்றி ஓரிரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகின்றேன். பட்டினப்பாக்கத்திற்கு அருகிலே 10 நாட்களுக்கு முன்பு கடல்நீர் இரவு திடீரென்று உள்ளே வந்துவிட்டது. 35 குடிசைகள் அதிலே அழிந்துவிட்டன. அங்கே இருக்கின்ற குடும்பங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். நான் போய்ப் பார்த்தேன். இராயபுரத்திலே கடல்நீர் உள்ளே வந்துகொண்டே இருக்கின்றது. மெரினா கடற்கரையிலே அங்கே மணல் பிரதேசம் அதிகமாகிக்கொண்டே போகின்றது. பட்டினப்பாக்கத்திற்கு தெற்கில் கடல்நீர் உள்ளே வந்துகொண்டே இருக்கின்றது. சென்னையை எப்பொழுது கடல்நீர் கொண்டுபோய்விடுமோ என்ற அபாயம் இருக்கின்றது. இராயபுரத்திலே அணை கட்டியதுபோல, பட்டினப்பாக்கத்திற்கு தெற்கில் கடல் நீர் உள்ளே வராமல் தடுப்பதற்கு ஒரு அணையை, கான்கிரீட் அணையைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

குடிசை மாற்று வாரிய வீடுகள் 25, 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிக்கொடுக்கப்பட்டவை;. மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன; மேல் மாடியிலிருந்து தண்ணீர் ஒழுகிக்கொண்டே இருக்கின்றது. அங்கே ரொம்ப பயங்கரமான நிலையிலே கட்டடம் இருக்கின்றது. அந்தத் தொகுப்பு வீடுகளுக்கு, எங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டத்திலிருந்து பணத்தை எளிதாகக் கொடுப்பதற்கு இந்த மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. கே.என். இலட்சுமணன்] [2004 ஜூலை 29

மயிலாப்பூரிலே கபாலீஸ்வரர் கோவிலுக்கு முன்பு இருக்கின்ற திருக்குளத்திலும், சித்திரக் குளத்திலும் மழை பெய்கின்ற நேரத்திலே தண்ணீர் வருவதற்கு வாய்க்கால் இருக்கின்றது. ஆனால் அதையெல்லாம் போய்ப் பார்த்தால் எல்லாம் மண் அண்டிக் கிடந்து, தண்ணீர் வராமல் இருப்பதுபோல இருக்கின்றது. அதையெல்லாம் தூர்வாரச் செய்து, குளத்தை மட்டுமல்லாமல், வாய்க்காலையும் தூர்வாரச் செய்து தண்ணீர் வரும்படியான ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பக்கிங்காம் கால்வாய், அது கொசுவுடைய சொர்க்கலோகமாக இருக்கின்றது. அதன் கரையிலே வசிக்கின்றவர்களுக்கு மிக சுகாதாரக் கேடுகள்; மலேரியா போன்ற நோய்கள் வந்துகொண்டே இருக்கின்றன. மயிலாப்பூர் தொகுதியிலே மிக அதிகமான நீளத்திற்கு அந்தக் கால்வாய் செல்கின்றது. அதன் இரண்டு கரைகளிலேயும் குடிசை மக்கள் இன்னமும் வசித்துக்கொண்டிருக்கின்றார்கள். அதைப் பார்த்தால் மிக வேதனையாக இருக்கின்றது. ஆகையினால் அந்த பக்கிங்காம் கால்வாயின் இரண்டு கரைகளையும் சிமெண்ட் கரைகள் கட்டி, நீர் ஓடுகின்ற அளவிற்கு அங்கே செய்ய வேண்டும். அது இல்லாமல் அத்தனை குடிசைப் பகுதிகளிலும் கொசுக்களை ஒழிப்பதற்கான புகையை அடிப்பதற்கு ஏற்பாடு செய்துதர வேண்டும்.

தவிர, 2 நாட்களுக்கு முன்பு பட்டினப்பாக்கம் மீனவர்கள் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே குடிப்பதற்குத் தண்ணீர் கொடுத்தார்கள். மிகச் சுவையாக இருந்தது. இது ஏது தண்ணீர், Mineral water-ஆ? அல்லது Metro water-ஆ? என்று கேட்டேன். இல்லை, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான unit இங்கே இருக்கின்றது. அங்கேயிருந்து கொண்டுவந்து சாப்பிடுகிறோம் என்று சொன்னார்கள். ஆகவே சென்னை நகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை விரைவில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசிப் பிணியை விரட்டி அடிப்பதில் மணிமேகலையாய், பாச உணர்வை வெளிப்படுத்துவதில் அன்னை தெரசாவாய், எதிரிகளை துவம்சம் செய்வதில் ஜான்சி ராணியாய் விளங்கும் எங்கள் இதய



2004 ஜூலை 29] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, வேளாண்மைத் துறை, தொழில் துறை, போக்குவரத்துத் துறை, ஊரகத் தொழில் துறை, கைத்தறி, கதர்த் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்கீழ் என்னுடைய விவாதங்களை எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*பிற்பகல் 12-05*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த மானியக் கோரிக்கைகள் விவாதத்தின்மீது பேசுகின்றபோது, உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் நம் கண் முன்னால் தோன்றுகிறது. உழைக்கும் வர்க்கத்திற்கெல்லாம் எடுத்துக்காட்டாய் 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைத்து, உழைப்பதற்கு எனக்கு ஊதியம் தேவையில்லை எனச் சொல்லி, அதை அன்னதானத் திட்டத்திற்கு அள்ளிக் கொடுக்கின்ற எங்கள் அன்புத் தாய் இன்றைக்கு இமயம்போல் நிமிர்ந்து நிற்கின்றார். ஆனால் உழைக்காமலேயே, வாக்களித்த மக்களின் பிரச்சினைகளை மன்றத்தில் எதிரொலிக்காமலேயே ஊதியம் வாங்குகின்ற, ஊரை அடித்து உலையில் போடும் வேலையற்ற கூட்டமும், இந்த மண்ணில்தான் உலா வந்துகொண்டிருக்கிறது. மெழுகுவர்த்தி தன்னை உருக்கிக்கொண்டு இந்த உலகுக்கு ஒளி கொடுப்பதுபோல, தன்னையே வருத்திக்கொண்டு தமிழகத்தை வாழ வைக்கும் எங்கள் இதய தெய்வத்தை, முச்சந்தியில் சபை நடத்தி விமர்சனம் செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மேடையிலே பேசுகின்றபோது அடிக்கடி ஒரு வார்த்தையைச் சொல்வார்கள், நாய் வாலை நிமிர்த்த முடியாது என்று. அதைப்போல அவர்களுடைய குணத்தை மாற்ற முடியாவிட்டாலும்கூட முச்சந்தியில் நின்றுகொண்டு முழங்கிக்கொண்டிருக்கின்ற அந்த மு.க. கூட்டத்தையும், அவர்களோடு இணைந்து செயல்படுகின்ற அந்த காக்கா கூட்டத்தையும் 2006-ல் நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நடுத்தெருவிலே நிற்க வைப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்து மக்களின் உள்ள உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஆட்சி செய்கின்ற முதல்வராக எங்களது அன்புத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலேதான் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2004 ஜூலை 29

தெய்வப் புலவர் என்று போற்றப்படுகின்ற திருவள்ளுவர் உழவர்களின் மேன்மையை எடுத்துக்கூறுகின்றபோது

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்று சொல்கிறார். அதைப்போல விவசாயிகளுடைய உயரிய செயலை எடுத்துக்கூற வந்த எங்கள் தலைவர், மறைந்த தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் "கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி" என்று விவசாயிகளைப் புகழ்ந்து பாடினார். அப்படிப்பட்ட விவசாயிகளுடைய வாட்டத்தைப் போக்க, வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தித் திறனைப் பெருக்க, இலவச மின்சாரத்தை அளிக்கும் நம்முடைய அன்னை அவர்கள், விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று, அந்த மின்சாரக் கட்டணத்தை நாங்களே நேரடியாக மின்சார வாரியத்திற்குச் செலுத்தி விடுகிறோம் என்று சொல்லி, 196 கோடி ரூபாயை அனுமதித்துள்ளார்கள் என்று சொன்னால், விவசாயிகளுடைய வாழ்வில் இன்றைக்கு அம்மா அவர்கள் விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள்.

இயற்கை பொய்த்துவிட்டது, மழை பெய்யவில்லை, என்ன செய்யலாம், எங்கள் தாய் சிந்திக்கிறார். கர்நாடக அரசு தண்ணீர் கொடுக்க மறுக்கிறது, தஞ்சை தரணியிலே வாழ்கின்ற விவசாயிகள் வாடிக் கொண்டிருக்கிறார்கள், என்ன செய்யலாம், சிந்தித்துச் சொல்கிறார். 'குறுகிய காலப் பயிர்களை இடுங்கள், அதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் நானே செய்து தருகிறேன்' என்று சொல்லி, அம்மா அவர்கள் புதிய திட்டங்களை இப்போது அறிவித்திருக்கிறார்கள். காட்டாமணக்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, சர்க்கரைச் சோளம் பயிரிட குறைந்த தண்ணீர் போதும், தேவையான விதைகளைக் கொடுக்கிறேன், நீங்கள் பயிர்களை அறுவடை செய்ததற்குப் பிறகு அதை வாங்கிக்கொள்வதற்கும் நானே ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி கட்டாந்தரையையும் காட்டாமணக்கு ஆக்கி புதிய பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட அறிவியல் அறிஞர்களுக்கெல்லாம் அறிஞராய், எங்கள் அன்னை இந்த உலகத்திலே உலா வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எண்ணம், சிந்தனை, செயல் எல்லாமே மக்களின் முன்னேற்றம்தான் எங்கள் அன்னையைப் பொறுத்தவரையில். நான்



2004 ஜூலை 29] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

கேட்கிறேன். முச்சந்தியிலே கூட்டம் போட்டு, முச்சந்தியிலே பேசிக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் காவிரி தண்ணீரைப் பெறுவதற்காக என்ன முயற்சி செய்திருக்கிறார்கள்? மத்தியிலே அங்கம் வகிக்கிறார்களே, காவிரி நீருக்காக வாதாடுகிறார்களா? தமிழகத்திற்கு நிதியைப் பெற்றுத் தருவதற்காக மத்திய சர்க்காரிடத்திலே, பிரதமரிடத்திலே பேசுகிறார்களா? கிடையாது. தனக்குக் கொடுக்கப்பட்ட மந்திரி சபையிலே ஒரு இலாகா மாற்றப்பட்டவுடன், ஏதோ இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் ஒப்பந்தம் ஏற்பட்டதைப்போல, 'ஜெனார்த்தன ரெட்டி, காங்கிரஸ் கட்சி எங்களை ஏமாற்றிவிட்டது; எனவே எங்களுடைய தி.மு.க. மந்திரிகள் அமைச்சர் பொறுப்பை ஏற்கமாட்டார்கள்' என்று வீரத்தையும், வேகத்தையும் காட்டிய சேப்பாக்கம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், தமிழக மக்களுடைய பிரச்சினைக்காக, தஞ்சைத் தரணியிலே வாழ்கின்ற விவசாயிகளுடைய பிரச்சினையைப் போக்குவதற்காக, நடுவர் நீதிமன்றத்தினுடைய ஆணைப்படி தமிழக அரசுக்குத் தேவையான தண்ணீரை, உரிமையை கர்நாடக அரசு கொடுக்கவில்லை என்றால் நாங்கள் மத்திய அமைச்சர் பதவியிலேயிருந்து விலகுவோம் என்று சொல்வதற்கு, கருணாநிதி அவர்கள் தயாரா என்பதை இன்றைக்கு இந்தத் தமிழ்நாட்டு மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-10*

உட்கார்ந்தால் எழ முடியவில்லை, எழுந்தால் நடக்க முடியவில்லை. இந்தத் தள்ளாத வயதிலும் பதவி வெறிகொண்டு குறுக்கு வழியிலே முதலமைச்சர் நாற்காலியிலே அமர முடியாதா என்று கனவு கண்டுகொண்டிருக்கின்ற பெரியவர் அவர்களே, விழி பழுதானவன் வழிகாட்டுவோரைக் கேலி செய்வதைப்போல, நீங்கள் கேலி செய்துகொண்டிருக்கிறீர்கள். கண்ணை மூடிக்கொண்ட பூனை இந்த உலகமே இருண்டுவிட்டது என்று கற்பனை செய்துகொண்டிருப்பதுபோல, நீங்கள் ஆட்சியிலே இல்லாத காரணத்தினால், எங்கள் தாயினுடைய ஆட்சியைக் குறை சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் எங்கள் இதய தெய்வத்தைப் பொறுத்தவரையில், 'போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்', 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என எங்கள் அன்னை இந்த நாட்டு மக்களுக்காகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்.

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2004 ஜூலை 29

'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்,
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்'

என்று பாடினாரே எங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அதைக் கருத்திலேகொண்டு, வேளாண்மைக் கல்லூரிகளில். பயிலும் மாணவர்களுக்கு காளான் வளர்ப்பு, நாற்றுப் பண்ணை நிர்வாகம், கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு, உயிரியல் உரங்கள் தயாரித்தல், உயிரியல் பூச்சிக் கொல்லிகள் தயாரிப்பு போன்ற வணிக முறையான வேளாண்மைப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்து, 'நீங்கள் மற்றவர்களிடத்திலே கைகட்டி நிற்க வேண்டாம், படித்து முடித்ததற்குப் பிறகு நீங்களே முதலாளிகளாக, தொழில் முனைவோர்களாக இருங்கள்' என்று எங்கள் தாய் இன்றைக்கு இளைய சமுதாயத்திற்கே, மாணவர் சமுதாயத்திற்கே வழிகாட்டியாக விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மானியக் கோரிக்கையினை நான் படித்துப் பார்க்கின்றபொழுது, ஒரு மகிழ்ச்சியான செய்தியைப் பார்த்தேன். மதுரையில் நெல் பயிருக்கென, விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயன் பெறுகின்ற வகையிலே கட்டப்பட்டுள்ள நெல் வணிக வளாகத்தினை இந்த வருடமே திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற செய்தி மதுரை மாவட்ட மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு செயல்படுகின்ற முதலமைச்சர் எங்கள் அன்புத் தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம்'- என்றான் பாரதி. அதை மனதிலே, கருத்திலேகொண்டு எங்கள் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'கூந்தலில் மலர் சூடி வாழும் மங்கையே, நீ குழுவோடு தொழில் செய்து மகிழ்' என்று ஆணையிட்டு, 5 மகளிர் தொழில் பூங்காக்களை அமைப்பதற்கு ஆணையிட்டு, இந்த ஆண்டில் மதுரையில் தொழில் பூங்கா நிறுவப்படும் என அறிவித்துள்ள செய்தி, பெண் சமுதாயமே தலைநிமிர்ந்து பெருமையடைந்து எங்கள் தாய்க்குத் தலை வணங்குகிறது என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



2004 ஜூலை 29] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

கிராமங்களில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் குளியல் சோப்புகளான வேம்பு, சந்தனம், மூலிகை போன்றவற்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக மானியக் கோரிக்கையிலே நான் படித்தேன். மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி. டி.வி. விளம்பரத்தைப் பார்த்து பல வகை சோப்புக்களை வாங்கி ஏமாந்து, தோல் அரிப்பு நோய்க்கு ஆளாகி தவித்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு இது விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய செய்தி. மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நீங்கள் வேம்பு சோப்பைப் பயன்படுத்துகிறீர்களா? சந்தன சோப்பைப் பயன்படுத்துகிறீர்களா? மூலிகை சோப்பைப் பயன்படுத்துகிறீர்களா? இதில் எந்த வகை சோப்பைப் பயன்படுத்தினால் மேனி பொலிவு பெறும்? எந்த வகை சோப்பைப் பயன்படுத்தினால் உடல் நலத்திற்கு, தோலுக்குச் செழுமை சேர்க்கும் என்பதை எல்லாம் நீங்கள் எடுத்துக் கூறினால், நீங்கள் பல வகை சோப்பை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறீர்களே. அதில் ஒரு வகை சோப்பை நாங்களும் பயன்படுத்துவதற்கு வழிகாட்டியாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாகத் தயாரிக்கப்படுகின்ற குளியல் சோப்புக்களை நீங்கள் உபயோகிப்பீர்களேயானால் நீங்கள் நலமோடு, வளமோடு, நோய் நொடியின்றி, அழகோடு பல்லாண்டு பல்லாண்டு வாழ்வீர்கள் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சோப்பே மருந்தா?

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. தொழில் துறையைப் பொறுத்தமட்டில் ஒரு புரட்சியை உண்டாக்கும் முகமாக நம்முடைய மாநிலத்தில் ஒரு மருத்துவப் பூங்காவும், ஜவுளிப் பூங்காவும் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன என்கின்ற செய்தியை நான் படித்தேன். இப்படி ஆராய்கின்றபோது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களே, எங்கள் மதுரை மாவட்டத்திலே எல்லா சாத்தியக்கூறுகளும் சிறப்பாக இருக்கின்றன. மதுரையில் அமைப்பதற்கு

நீங்கள் தயவுசெய்து பார்வையை மதுரை மாவட்டத்திற்குத் திருப்பும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, கேரளா இப்படி நம்முடைய திராவிட நாடு என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்த மாநிலங்களுள் தமிழ்நாட்டிலேதான் போக்குவரத்துக் கட்டணம் மிகவும் குறைவாக இருக்கின்றது என்கின்ற செய்தி மகிழ்ச்சித் தரக் கூடிய செய்தி, பாராட்டத்தக்க செய்தி.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பாலாறும், தேனாறும் ஓடும் என்பதைப் போல மக்களை ஏமாற்றி மத்தியிலே ஆட்சியில் அமர்ந்திருப்பவர்கள், ஆட்சிக்கு வந்தவுடன் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? டீசல் விலையைக் கூட்டியிருக்கிறார்கள், பெட்ரோல் விலையைக் கூட்டியிருக்கிறார்கள். இன்றைக்குக் காலை நான் பத்திரிகையிலே கூடப் படித்தேன். மீண்டும் கூட்டப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது.

இந்த மாமன்றத்தின் மூலமாக சேப்பாக்கம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பெரியவர் கருணாநிதி அவர்களுக்கு ஒட்டுமொத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது, நீங்கள் பொழுது போகாமல் நீங்களே கேள்வி கேட்டுக்கொண்டு, நீங்களே பதில் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, அந்த வெட்டி வேலையை விட்டு விட்டு மக்களுடைய பிரச்சினைகளை டெல்லிக்கு எடுத்துச் சொல்லி, வயதான காலத்திலாவது மக்களுடைய பிரச்சினைகளுக்குச் செவி சாய்க்கும்படி நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

போக்குவரத்துத் துறையிலும் பெண்களால் சாதிக்க முடியும் என்பதை நம்முடைய அன்னை இன்றைக்கு நிரூபித்திருக்கிறார்கள். பெண்ணைப் புல்லாக மிதித்தவர்கள் எல்லாம், பெண்ணைப் பொன்னாக மதிப்பதற்கு வழிவகை செய்தவர் எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் 1991-ல் இந்த நாட்டில் முதன் முதலாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த எங்கள் தாய் 1993 ஆம் ஆண்டில் முதன் முதலாக ஒரு பெண்ணை ஓட்டுநராக நியமித்த எங்கள் அன்பு தெய்வம், இப்போது மீண்டும் அரியணையிலே அமர்ந்ததற்குப் பிறகு, சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தில் மீண்டும் பெண்களை நியமித்திருக்கிறார்கள் என்கின்ற செய்தி, பெண் ஓட்டுநர்கள் கம்பீரமாக உலா வந்து அந்தத் தொழிலிலே ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய செய்தி என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அரசுப் பள்ளிகளில் படித்தாலும் சரி, தனியார் பள்ளிகளில் படித்தாலும் சரி, இலவச பஸ் பாஸ், விடுமுறை நாட்களிலும் உங்களுக்குத் தருகிறேன். இந்த இளம் வயதில் உங்களுக்கு எந்தக் கவலையும் இருக்கக் கூடாது. இந்தப் படிக்கும் வயதில் உங்களுக்கு எந்தக் கஷ்டமும் இருக்கக் கூடாது. உங்கள் கவலையை ஏற்றுக்கொள்வதற்கு உங்கள் சுமையைத் தாங்கிக்கொள்வதற்கு சுமை தாங்கியாக நான் இருக்கிறேன் என்று சொல்லி எங்கள் தாய் அந்தப் பொறுப்புகளை, கஷ்டங்களை தன்னுடைய தலையிலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் மணியடித்து விட்டீர்கள். ஒரு நிமிடம் என்று சொல்லிவிட்டீர்கள். எனவே ஒரேயொரு நிமிடத்தில் என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினையை மட்டும் நான் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மதுரைக்கு அடிக்கடி வருகிறவர், சொந்த மாவட்டத்துக்காரர். இலட்சக்கணக்கான மக்களுடைய பிரச்சினை, வைகை ஆற்றின் கரையோரம் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும் என்பதுதான். கடந்த வருடம்கூட நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலே சொன்னேன். வைகை ஆற்றினுடைய கரையோரப் பகுதியிலே, நீங்கள்கூட வாகனத்திலே வருகின்றபோது கொஞ்சம் அசந்தால்கூட ஆற்றிற்குள்ளே விழக்கூடிய சூழ்நிலை; பலபேர் இரவு நேரங்களிலே அந்தச் சாலையிலே போகின்றபோது ஆற்றிற்குள்ளே விழுந்துவிடுகிறார்கள். எனவே, தயவுசெய்து இலட்சக்கணக்கான மக்களுடைய கோரிக்கையை ஏற்று, வைகை ஆற்றின் கரையோரம் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, குடிசை மாற்று வாரிய, மதுரைக் கோட்டப் பொறியாளர் அவர்கள்—மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்கூட நேற்றைய முன்தினம் இதே சபையிலே உண்மை நிலவரத்தை எடுத்துச் சொன்னார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே பல பேர் பட்டாவிற்கு விண்ணப்பித்திருந்தும், அரசு நிர்ணயித்திருந்த பணத்தைச் செலுத்திருந்தாலும்கூட, அவர்கள் தி.மு.க.காரர்களுக்கு மட்டும்தான்

பட்டா கொடுத்திருக்கிறார்கள். அதில் என்னுடைய தொகுதியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, கரும்பாலை, இந்திரா நகர், பீபிகுளம், அண்ணா நகர் போன்ற பகுதிகளிலேயெல்லாம், கடந்த தி.மு.க. ஆட்சியிலே குடிசை மாற்று வாரியத்திற்கு அரசு நிர்ணயித்த பணத்தைச் செலுத்தியதற்குப் பிறகும்கூட, அவர்கள் பொதுமக்கள், தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் அல்ல என்கின்ற காரணத்தினால் பட்டா வழங்கப்படவில்லை. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியையும் கவனத்தில்கொண்டு வருகின்ற காலகட்டத்தில் பட்டா கொடுக்கின்றபோது முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பணிவான வேண்டுகோள். மதுரை மாநகர் முழுவதும் பாதாளச் சாக்கடைத் திட்டம் மிகச் சிறப்பாக, விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் குழியைத் தோண்டுபவர்கள் அப்படியே போட்டுவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். நாங்கள் குழியிலேயே விழக்கூடிய நிலைமை; பல தடவை அதிகாரிகளிடத்திலே சொல்லிவிட்டோம். அந்தச் சாலையை நீங்கள் பராமரித்துத் தாருங்கள் என்று. அதற்கு அவர்கள் சொல்கிற காரணம் என்ன தெரியுமா? எல்லோரும் பாதாளச் சாக்கடை இணைப்புப் பெற வேண்டும்; இணைப்புப் பெற்றால்தான் நாங்கள் சாலை வசதி செய்து தருவோம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தெருவிலே 300 வீடுகள் இருக்கின்றன என்றால் 200 பேர் பாதாளச் சாக்கடை இணைப்புக்குப் பணம் செலுத்திவிடுகிறார்கள். 100 பேர் கட்ட முடியாத சூழ்நிலையிலே இருக்கின்றபொழுது, அந்தப் பணம் செலுத்த முடியாதவர்களால், மற்றவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே முதலிலே சாலை வசதியை ஏற்படுத்திக் கொடுத்ததற்குப் பிறகு அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் வேறு முறைகளைப் பின்பற்ற வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களே, மயக்க நிபுணர்களும் தியேட்டர் அசிஸ்டெண்டுகளும் குறைவாக இருப்பதாக அங்கே எனக்குத் தகவல் சொன்னார்கள். தயவுசெய்து கருணை காட்டும்படி பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை சீக்கிரப் முடித்துக்கொள்ளுங்கள்.





**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே, மதுரை மிகவும் சிறப்பு பெற்ற மாநகர், மாவட்டம் என்பது உங்களுக்குத் தெரியும். சிலைமானிலேயிருந்து திருப்பரங்குன்றத்திற்கு போகின்றபோது இரண்டு Bus மாறிப் போக வேண்டியிருக்கிறது. பெரியார் Bus stand வந்து அதற்குப் பிறகு திருப்பரங்குன்றம் போக வேண்டியிருக்கிறது. நான்கூட G.M.-உடன் பேசினேன். பேசியும் இன்னும் அவர் பேருந்தை விட வில்லை என்கின்ற தகவல் நேற்று வந்தது. அங்கே Polytechnic இருக்கிறது; Madura College இருக்கிறது; திருப்பரங்குன்றத்தில் உலகப் பிரசித்திபெற்ற நம்முடைய முருகப்பெருமான் இருக்கின்ற அந்தத் திருக்கோயில் இருக்கிறது; தியாகராஜர் பொறியியல் கல்லூரி இருக்கிறது; மன்னர் கல்லூரி இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் கருத்தில்கொண்டு, இரண்டு Bus மாறிப் பயணம் மேற்கொள்கின்ற அந்த மக்களுடைய கவலையையும், பிரச்சினைகளையும் போக்குவதற்காக, சிலைமானிலேயிருந்து திருப்பரங்குன்றத்திற்கு நேரடி service-ஐ ஏற்படுத்தித் தரும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை விமான நிலையத்தைப் பன்னாட்டு விமான நிலையமாக ஆக்கும் பணிகள் துரிதப்படுத்தப்படும் என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அதை இன்னும் வேகமாகத் துரிதப்படுத்தி, மதுரை மக்களுடைய மனதிலே மகிழ்ச்சி உண்டாவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு
இங்கே நீ சிரிக்கும் புன்சிரிப்போ ஆனந்தச் சிரிப்பு

என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினார்களே, அதைப் போல, வெற்றி மமதையில் அங்கே வெளிப்படுத்தும் ஆணவச் சத்தமோ, மத்தாப்பின் பிரகாச ஓசை. அது விரைவில் மறைந்துவிடும்; விரைவில் நின்றுவிடும். இங்கே எங்கள் தாய் எழுப்பும் உரிமைச் சத்தமோ, கடல் அலையின் எழுச்சி ஓசை. அது நிற்காது, ஓயாது. என்றும் எழும்பிக் கொண்டேயிருக்கும். அதற்குத் தடைக் கற்கள் இல்லையெனக் கூறி என் தாயின் பாதம் பணிந்து வணங்கி, மீண்டும் நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வி. அழகம்மாள்.

பிற்பகல் 12-25

**திருமதி வி. அழகம்மாள்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“மண்ணிலார்க்கும் துயரின்றிச் செய்வேன்,
வறுமையென்பதை மண்மிசை மாய்ப்பேன்”

என்ற மகாகவி பாரதியின் வைர வரிகளுக்கேற்ப தமிழகத்து மக்களெல்லாம் துன்பமின்றி, வறுமையின்றி வாழச் செய்வதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் “தாய் என்று தமிழர்க்கு வாய்த்தவரே” தமிழகத்து மக்களெல்லாம் எப்போதும் சேய் அன்போடு அம்மா என்று அழைக்கின்ற எங்கள் அன்னையே! தொழில் துறை, வேளாண்மைத் துறை, கதர்த் துறை, கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள், சிறு தொழில்கள் துறை, உள் துறை இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம், போக்குவரத்துத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களில் நன்றியின் மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், தமிழகம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. தொழில் வளாகங்கள், உணவுப் பூங்காக்கள், ஒருங்கிணைந்த அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியம், சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்கா போன்ற பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைத் தொழில் துறை கண்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அரியலூர், ஆலங்குளம் சிமெண்ட் ஆலைகள் செயல்படத் தொடங்கிய நாளிலிருந்தே முறையே, 118 சதவிகிதமும், 68 சதவிகிதமும் உற்பத்தித் திறன் பயன்பாட்டினை எட்டி சாதனை படைத்துள்ளதைத் தமிழக மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இச்சாதனை மாண்புமிகு அம்மா அவர்களை மட்டுமே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைத் பொறுத்தமட்டில், ‘உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி’ என்று உழவர்களின் முக்கியத்துவம்



பேசப்படுகிறது. நம் நாட்டில் இன்று 60 சதவீதம் பேர் வேளாண்மைத் துறையைச் சார்ந்துள்ளார்கள். வேளாண்மைத் துறையிலே, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மைக் கல்வி போன்றவை வளர்ச்சியைக் கண்டுள்ளன.

‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ தொழில்களி ல முதன்மையான தொழிலாக உழவுத் தொழில் சிறந்து விளங்குவதால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ‘வான்மழை பொய்த்துவிட்டாலும்’ விவசாயிகள் துன்பப்படக்கூடாது என்பதற்காக பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து, தமிழகத்து விவசாயிகளை கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வருகின்றார்கள். நிலத்தடி நீரை உயர்த்துவதற்காக மழைநீர் சேகரிப்புத் திட்டம், ஏழை விவசாயிகள் வயிறார உண்பதற்காக வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், கிணறுகளைப் புனரமைத்தல் போன்ற திட்டங்களுக்கு நிவாரணம் மூலம் முழு மானியமும் வழங்கி விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்துக் காப்பாற்றி வருகிறார்கள். இத்தகைய இரக்க குணமும், தூய அன்பையும் காட்டுவதில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நிகர் அம்மா அவர்கள் மட்டுமே. மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த மிகச் சிறப்பான திட்டம் “விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்” ஆகும். தமிழகத்தில் 11 மாவட்டங்களில் வீணாகக் கிடந்த நிலங்களை மேம்பாட்டுக்கு எடுத்துக்கொண்டு ரூ.3,300 இலட்சம் செலவில் 55,060 எக்டேர் பரப்பளவு நிலங்களைப் பயன்பெறச் செய்துள்ளார்கள்.

சிறுதொழில்கள் துறை என்பது ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், வேளாண் பொருட்களுக்குக் கூடுதல் விலை கிடைக்கவும், ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தவுமான துறை. மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 1 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். இத்திட்டத்தினால் வேலையில்லா இளைஞர்களும், குறிப்பாகப் பெண்களும் பயனடைந்து வருகிறார்கள். சிறுதொழில் துவங்குவதற்காக 2003-2004 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களிலிருந்து 11,172 பேரும், தொழில்நுட்பக் கல்வி பயின்றவர்கள் 8,828 பேரும், பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 5,137 பேரும், ஆக மொத்தம் 25,137 மகளிருக்கு சிறுதொழில் தொடங்க பயிற்சி கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசாகும்.

[திருமதி வி. அழகம்மாள்] [2004 ஜூலை 29

உள் துறை, பணியாளர்கள் சீர்திருத்தத் துறையைப் பொறுத்தமட்டில் நிருவாகச் சீர்திருத்தத்தின் காரணமாக கோப்புகளை ஆய்வு செய்யச் செலவாகும் நேரத்தைக் குறைக்கும்பொருட்டு நிலைதாண்டுதல் முறையை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

கடந்த ஜூலை மாதத்தில் அரசு ஊழியர்கள் ஈடுபட்டிருந்த வேலைநிறுத்தத்தின்போது, அவர்களுக்கு நீதியரசர்கள் தண்டனை வழங்கியுள்ளார்கள் என்றாலும், அம்மா அவர்கள், அவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, தாயுள்ளத்தோடு மீண்டும் அவர்களுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுத்தும், பதவி உயர்வும் அளித்துள்ளார்கள். இதனை அரசு ஊழியர்களும், பொதுமக்களும் பாராட்டி மகிழ்ச்சியடைகின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

கடந்தகால ஆட்சியில் போக்குவரத்துத் துறை மிகவும் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. அம்மா அவர்களின் சீரிய சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக இன்று இலாபத்தில் இயங்கி வருகிறது. பழைய பேருந்துகளை மாற்றியும், புதிய பேருந்துகளை வழங்கியும், பழைய பேருந்துகள் பழுதுபார்க்கப்பட்டும் மிக நல்ல நிலையில் உள்ளதை நாட்டு மக்கள் அறிவார்கள்.

பிற்பகல் *12-30*

மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியபோதிலும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு பஸ் கட்டணத்தை உயர்த்தாமல், மேலும் பல சலுகைகளை அறிவித்துள்ளார்கள். அரசு, தனியார் பள்ளி மாணவ, மாணவியருக்கு எல்லா தினங்களுக்கும் இலவச பஸ் பாஸ் மற்றும் அரசு, தனியார் கல்லூரி மாணவ, மாணவியருக்கு எல்லா நாட்களிலும் 50 சதவீதம் சலுகைக் கட்டணத்தில் பஸ் பாஸ் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதனால் பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றம் கதர்த் துறையைப் பொறுத்தமட்டில், நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடவும், வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும், ஏழை மக்களின் பொருளாதாரத்தை



2004 ஜூலை 29] [திருமதி வி. அழகம்மாள்]

மேம்படுத்தவும் அது உதவியாக உள்ளது. பட்டுத் தொழில், விவசாயத்தைச் சார்ந்த தொழிலாக உள்ளதால் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் 'தமிழக முதல்வர் 15 அம்ச திட்டத்தில்' 7 அம்சங்கள் பட்டு வளர்ச்சிக்குத் தொடர்புடையதாக அமைந்துள்ளன. இவ்வாறாக அனைத்துத் தரப்பினருக்கும் பல்வேறு பயன்களையும் சலுகைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கி வருகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, எனது தொகுதி கோரிக்கைகளை வைக்கிறேன்.

தலைவாசல் தொகுதி, ஆதிதிராவிடர்களும், பழங்குடியின மக்களும், மலைவாழ் மக்களும் மற்றும் மிகவும் பின்தங்கிய மக்களும் வாழ்கின்ற மிகவும் பின்தங்கிய பகுதியாகும். எனவே ஏழை எளிய மாணவிகள் கல்வி பயிலும் வகையில் அங்கு அரசு மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்குத் தேவையான அரசு நிலங்கள் தலைவாசல் — ஆத்தூர் சாலையில், சாலையின் ஓரத்தில் அதிகமாக உள்ளன.

வீரகனூர் பேரூராட்சியில் பொன்னாளி அம்மன் அணை திட்டத்திற்கு பொதுப் பணித் துறையின் மூலம் 4 கோடியே 8.5 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் பல கிராமங்களில் உள்ள விவசாயிகள் பயனடைவதுடன், நிலத்தடி நீரும் உயரும் என்பதனை மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கூறி, இத்திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கெங்கவல்லி ஒன்றியம், கூடமலை கிராமத்தில் நரிப்பாடி - நிலங்கரை சாலையில் சுவேதா நதியின் குறுக்கே பாலம் கட்டித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கெங்கவல்லி வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே வட்டாட்சியர் அலுவலகம் ஒன்றைக் கட்டித் தருமாறு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

கெங்கவல்லி வட்டத்தில் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு காவல் நிலையக் கட்டடம் ஒன்று கட்டித் தர

[திருமதி வி. அழகம்மாள்] [2004 ஜூலை 29

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கெங்கவல்லி வட்டம் 5 பேரூராட்சிகளையும், 30 ஊராட்சிகளையும் கொண்ட பெரிய பகுதியாகும். எனவே கெங்கவல்லியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவாசல் ஒன்றியம், மணிவிழுந்தான் கிராமத்தில் வசிஷ்ட நதியின் குறுக்கே பாலம் கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்துள்ளது. போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அங்கு ஒரு பாலம் கட்டித் தருமாறு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கை ஒன்று; பச்சைமலையில் 32 கிராமங்கள் உள்ளன. அவர்கள் கெங்கவல்லி தாலுகாவிற்கு வர வேண்டும் என்றால் திருச்சி மாவட்டத்திற்குச் சென்றுதான் கெங்கவல்லிக்கு வரவேண்டும். எனவே அவர்கள் நேரடியாகச் செல்வதற்கு, நரிப்பாடியிலிருந்து மாயம்பாடிக்குச் செல்ல 5 கிலோ மீட்டர் தூரம் வனத் துறையின் மூலம் சாலை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவாசல் - பெரம்பலூர் சாலையில் எறையூர் சர்க்கரை ஆலைக்கும், அரியலூர் சிமென்ட் ஆலைக்கும் அடிக்கடி வாகனங்கள் செல்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்கள் விபத்துக்குள்ளாகிறார்கள். எனவே இந்த ஒரு வழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றித் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை, தொழில் துறை, சிறுதொழில்கள் துறை மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியங்களின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியினைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



2004 ஜூலை 29]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி. குறிப்பிட்ட நேரத்தில் பேசிவிட்டீர்கள். திரு. லா. சந்தானம்.

*பிற்பகல் 12-35*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண் துறை, தொழில் துறை, ஊரகத் தொழில் துறை, கதர்த் துறை மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியங்களிலே என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய உள்ளப்பூர்வமான பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாம் எல்லாம் இங்கு சட்டமன்றத்திலே இந்த விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கின்றபோது, அன்பிற்குரிய நண்பர்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் மாநில ஆளுநரைச் சந்தித்து, எதிர்க்கட்சிகள் இல்லாமல் நிறைவேற்றப்படுகின்ற மசோதாக்களுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டாம் என்று சொல்லி மனு கொடுக்கச் சென்றிருக்கிறார்கள். இங்கு அவர்கள் வந்து கலந்துகொள்வதற்கோ, அவர்களுடைய கருத்துகளைக் கூறுவதற்கோ, ஆளும் தரப்பின் சார்பிலே எந்தவிதமான தடையும் விதிக்கப்படவில்லை. அவர்களுக்காகச் சட்டமன்றத்தின் கதவுகள் என்றைக்கும் திறந்தே வைக்கப்பட்டிருக்கிறது என்கின்ற நிலையில், அவர்கள் ஆக்கபூர்வமாக மக்களுக்குச் செய்கின்ற தொண்டினை இங்கு வந்து செய்ய வேண்டுமென்று அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அவர்கள் வகிக்கின்ற மத்திய அரசிலே நான் இருக்கின்ற இயக்கமும் பங்குகொண்டிருக்கின்ற ஓர் இயக்கம் என்கின்ற முறையில், ஜனநாயகத்தை மதிக்கின்ற வகையிலே, இங்கு வந்து கருத்துகளைச் சொல்ல வேண்டும். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் வந்து கலந்துகொள்ளவில்லை என்கின்ற நிலையிலே மட்டும், அது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்று சொல்கின்றவர்கள், தமிழக சட்டமன்றத்திற்கும் அது பொருந்தும் என்கின்ற முறையிலே, ஜனநாயகத்தைக் காப்பாற்றக்கூடிய வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மிக முக்கியமான மானியங்கள் இந்த அவையிலே பரிசீலிக்கப்படுகின்றன.

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்"

என்று சொன்னான் பாரதி. அன்றைக்கேகூட, இன்றைக்கு நமது முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற மாற்றுப் பயிர்த் திட்டத்தை பாரதியார் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

"விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்"

என்று சொல்கின்ற நிலைமையை அன்றைக்கே தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டு காலமாக விவசாயம் என்பது மிகவும் பொய்த்துப் போயிருக்கின்ற அந்த நிலைமையில், இருக்கின்ற நீராதாரத்தைக் கொண்டு, இன்றைக்கு நமக்குக் கிடைக்கின்ற அந்தத் தண்ணீரை வைத்துக்கொண்டு, உரிய முறையிலே பயிர் செய்ய வேண்டுமென்கின்ற நோக்கத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அப்படிப் பயனுள்ள விளைபொருட்களை விளைவித்து விவசாயிகள் பயன்பெற வேண்டுமென்கின்ற வகையில் திட்டங்கள் பல இன்றைக்கு விவசாயத் துறையிலே கூறப்பட்டிருக்கின்றன.

அப்படி விவசாயத் துறையின் மூலமாகக் கூறப்படுகின்ற அந்தத் திட்டங்களுக்கு விதைகள் தயாரித்துத் தருவதிலே மிகக் கவனமாக இருக்க வேண்டும். அப்படிப் பயிரிடுகின்ற விதைகளைப் பொறுத்துத்தான், விவசாயத்தினுடைய பெருக்கம் அமையும் என்கின்ற முறையில் — சென்ற ஆண்டுகூட எடுத்துச்சொன்னேன். நான் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்வது, எங்களுடைய பகுதியிலே பருத்தி விதைகள் வழங்கப்பட்டதிலேகூட சில குளறுபடிகள் இருந்ததன் காரணமாக, அந்தப் பருத்திப் பயிர் நன்றாக வளர்ந்ததே தவிர, உரிய காய்கள் கட்டவில்லை என்கின்ற நிலையிலே, விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, சாலைக்கு வருகின்ற ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் திரு.





சந்தானம் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, தரமான விதைகள் இருக்க வேண்டும்; அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை, ஒரு கருத்தை வலியுறுத்தி இங்கே அமர்ந்திருக்கின்றார். அந்த அடிப்படையிலே, மதுரைக்கு அருகிலே இருக்கின்ற தேனி மாவட்டத்திலே தரமற்ற பருத்தி விதைகள் மூலமாக விவசாயிகள் உழவு செய்து, உழவு செய்ததற்குப் பிறகு அதன்மூலமாக மகசூல் கிடைக்கவில்லை என்ற நிலையில், அந்த விதைகளை வாங்கிய வியாபாரிகளிடத்திலே மறியல் செய்த செய்தியை அறிந்து, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாகத் துறையினுடைய விதைச் சான்று அதிகாரிகளுக்குக் கடுமையான உத்தரவை வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும், இனி வருங்காலங்களிலே எந்தச் சூழ்நிலையிலும் எப்படிப்பட்ட ஒரு கால நிலையிலும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற அந்த விதைகளைத் தரமானதாக, கடுமையான பரிசோதனைக்குப் பிறகுதான் நீங்கள் விற்பனை செய்ய வேண்டும் என்று வேளாண் துறைக்கு, விதைச் சான்றுத் துறைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும், அதனுடைய அடிப்படையிலே தனியார் விதைப் பண்ணைகள் கடுமையாகக் கண்காணிக்கப்படுகின்றன என்பதையும், தனியாருடைய விதை விற்பனை நிலையங்கள் கடுமையாகப் பரிசோதிக்கப்படுகின்றன என்பதையும், நான் இந்த நேரத்திலே மாண்புமிகு மூத்த உறுப்பினர் அருமை அண்ணன் திரு. சந்தானம் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-40*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் அறிந்தவரையிலேகூட இந்த விதைகளெல்லாம் கடந்த காலத்திலே தயாரிக்கப்பட்டவை. அவற்றைத் தவறாக விநியோகித்துவிட்டார்கள் என்கின்ற முறையிலே அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவை எல்லாம் வருகின்ற காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

[திரு. லா. சந்தானம்] [2004 ஜூலை 29

அதுபோலத் தென்னையைப் பாதித்திருக்கின்ற இந்தச் சிலந்தி நோயானது பல ஆண்டுகளாக, ஏறத்தாழ மூன்று நான்கு ஆண்டுகளாக இருக்கிறது. அதற்கு உரிய மருந்தை இன்னும் நாம் கண்டுபிடிக்கவில்லை.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு காலமாக தென்னை மரங்கள் சிலந்தி நோயால் தாக்கப்பட்டு, தென்னை மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிந்து, உடனடியாக கோவை வேளாண் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் அவர்களுக்கு அந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்குண்டான மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆணை வழங்கியதனுடைய அடிப்படையிலே, தற்போது அந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்குண்டான மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அந்த மருந்தை விவசாயப் பெருமக்கள் தென்னை மரத்திற்குத் தெளிப்பதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒன்பதரை கோடி ரூபாய் மானியமாக ஒதுக்கியிருக்கின்றார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே மாமன்றத்திலே இருக்கின்ற மூத்த உறுப்பினருக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு தென்னை மரத்திற்கு 4 ரூபாய் 25 காசு அந்தச் சிலந்தி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, சிலந்திப் பூச்சி வருகின்ற காலங்களிலே தென்னை மரத்தைத் தாக்காமல் இருப்பதற்காக, ஒரு தென்னை மரத்திற்காக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 4 ரூபாய் 25 காசு மானியமாக விவசாயப் பெருமக்களுக்கு வழங்குவதற்காக ஒன்பதரை கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** இந்த மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்த அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி அந்த தென்னை மரத்திலே இருக்கின்ற சிலந்தி நோய் பாதிப்பு நீக்கப்படுமேயானால், தமிழகத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். அதை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது, அரசு உரிய மானியமும் வழங்குகிறது என்கின்ற செய்தியினை விவசாயத் துறையின் மூலமாக இப்படி மருந்து விவசாயிகளுக்கும் சென்றடைகின்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று எல்லா பகுதிகளிலும் விவசாயத் துறையின் மூலமாக எல்லா சொல்லி அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.



2004 ஜூலை 29] [திரு. லா. சந்தானம்]

அடுத்து, தொழில் துறையைப் பொறுத்த அளவிலே எங்களுடைய தென் மாவட்டங்களிலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே இனக் கலவரங்கள் உருவாவதற்குக் காரணமாக இருப்பதே அவர்களுக்கு உரிய வேலைவாய்ப்பில்லை என்பதை நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையிலே ஏற்படுத்தப்பட்ட குழு பரிந்துரை செய்திருக்கிறது. எனவே நானும்கூட இன்றைக்கு கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கிறேன். தென் மாவட்டங்களைப் பொறுத்த அளவிலே மிகப் பெரிய தொழில்களோ, தொழில் பூங்காக்களோ இல்லை என்கின்ற நிலைதான் இருக்கிறது. இதிலே திண்டுக்கல்லிலே ஒரு சிறு தொழிற்பேட்டை இருப்பதாகவும், சிவகங்கையிலே ஒன்று இருப்பதாகவும் நான் அறிகிறேன். மொத்தமாக, ஒட்டுமொத்தமாக விருதுநகர், மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலே தொழில் துறையின் சார்பிலே மிகப் பெரிய தொழிற்சாலைகளோ, தொழிற்பேட்டைகளோ அமைக்கப்படவில்லை என்கின்ற நிலை இருக்கிறது.

இன்றைக்கு வருகின்ற பன்னாட்டு நிறுவனங்கள்கூட சென்னையைச் சுற்றித்தான் அத்தனை தொழில்களையும் உருவாக்கி இருக்கிறார்கள். Hyundai Car Company, Ford company, அதுபோல கண்ணாடித் தொழிற்சாலை, தொழில் பூங்காக்கள் அத்தனையும் சென்னை நகரைச் சுற்றித்தான் அமைந்திருக்கின்றன. தென்பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருகின்ற அளவிலே ஒரு தொழில்கூட ஏற்படுத்தப்படவில்லை என்கிற நிலை உள்ளது.

*பிற்பகல் 12-45*

இந்தத் தொழிலிலே முதலீடு செய்பவர்களெல்லாம் சென்னைக்கு விரும்பி வருகிறார்கள் என்று சொன்னால், இங்கு பன்னாட்டு விமான நிலையம், போக்குவரத்து வசதிகள் இருக்கின்றன என்கின்ற காரணத்தினால்தான் அந்தத் தொழிலை நடத்துவதற்குரிய இடமாக இருக்கிறது என்று பன்னாட்டைச் சார்ந்தவர்களெல்லாம் வந்து, இங்கு தொழிலைத் தொடங்குகிறார்கள். எனவே மதுரையிலே இருக்கின்ற அந்த விமான நிலையத்தைப் பன்னாட்டு விமான நிலையமாக ஆக்குகின்ற முயற்சிகளைத் துரிதமாக அரசு செய்துகொண்டிருக்கிறது. அதை மேலும் துரிதப்படுத்தி அந்த விமான நிலையத்தைப் பன்னாட்டு விமான நிலையமாக ஆக்குவதோடு, தென் பகுதியிலே மதுரையைச் சுற்றி திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற மக்களுக்கெல்லாம் பயன்படுகின்ற வகையிலே ஒரு புதிய

[திரு. லா. சந்தானம்] [2004 ஜூலை 29

தொழிற்சாலையை அங்கு அமைக்க வேண்டுமென்று சொல்லி இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு அரசுத் துறையிலே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆலங்குளத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த சிமெண்ட் தொழிற்சாலையைப் புனரமைக்க வேண்டுமென்று சொல்லி, அந்தப் பகுதி மக்களெல்லாம் நீண்டநாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்; அதை நானும்கூட வைத்திருக்கிறேன். அதை எப்படியாவது முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கு ஓடிக் கொண்டிருக்கிற சிமெண்ட் தொழிற்சாலை நின்றுவிடாத அளவிற்குப் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது அரசினுடைய கடமை என்கின்ற முறையில் புனரமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அந்தப் பகுதியிலே அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை; அதேபோல பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை; மேலூரிலே இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலை இவையெல்லாம் அரசின் சார்பிலே நடக்கின்ற தொழிற்சாலைகளாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் இயக்குவதற்கு அரசு முனைப்போடு செயல்பட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே, வருமானம் ஈட்டித் தருகின்ற அளவிலே கல் குவாரிகளையெல்லாம் ஏலத்திற்குக் கொண்டுவருவதன் மூலமாக அரசுக்கு வருமானமும் கிடைக்கும். அதைப் பொறுத்த அளவிலே, கிராமப்புறங்களிலே இருக்கிற பல தொழிலாளர்கள் தொழிலைப் பெறுகின்ற நிலையும் இருக்கும். எங்களது தொகுதியைப் பொறுத்த அளவிலே, HACA clearance கிடைக்கப் பெறாததன் காரணமாக பல்வேறு குவாரிகள் ஏலம் விடப்படாத நிலையில், அதனால் அரசாங்கத்திற்கு வருமானம் குறைவதோடுகூட, அங்கு நடக்கின்ற நமது அரசு சார்ந்த வேலைகள். கட்டடங்களாக இருந்தாலும் சரி, ரோடுகளுக்கு ஜல்லி வைப்பதாக இருந்தாலும் சரி, அந்த மூலப்பொருட்களைக் கொண்டுவருவதற்கு பல கிலோமீட்டர் தூரம் சென்று, அங்கு நமக்கு அனுமதி அளிக்கப்பட்ட குவாரிகளிலிருந்து எடுத்து வருவதற்கு செலவு அதிகம் ஏற்படுகிறது. அரசுத் துறைகளிலே நடக்கின்ற வேலைகளுக்கு, ஏறத்தாழ 30 கிலோமீட்டர் தொலைவிற்கு அப்பால் சென்று அந்தப் பொருட்களைக் கொண்டுவருகிறபோது, அந்த வேலைகளுடைய மதிப்பீடு



2004 ஜூலை 29] [திரு. லா. சந்தானம்]

ஒன்றுக்கு இரண்டாக ஆகின்ற ஒரு சூழல் இருக்கிறது. எனவே அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற குவாரிகளுக்கெல்லாம் HACA clearance கொடுத்து அரசு அவற்றையெல்லாம் ஏலத்திற்குக் கொண்டுவருமேயானால், அதன் மூலமாக வருவாயை ஈட்டுகின்ற ஒரு நல்ல நிலை ஏற்படும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த அளவிலே, கடந்த காலங்களிலே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளெல்லாம் பயணிகளை நடுவழியிலே, சாலைகளின் ஓரங்களிலே நிறுத்துகின்ற ஓர் அவலமான நிலை இருந்தது. மீண்டும் அந்தப் பயணிகளெல்லாம் எப்படித் தங்களுடைய கிராமங்களுக்குச் செல்வது என்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருந்த அவலமான நிலையை மாற்றி, இன்றைக்கு ஓடுகின்ற பேருந்துகளெல்லாம் ஓரளவிற்குத் தரமாக ஓடுகின்ற நிலையிலும், பயணிகள் பயன்பெறுகின்ற நிலையிலும் அமைந்திருக்கின்றன. அதோடு, போக்குவரத்துக் கழகங்களுக்கு சற்று இலாபத்தை ஈட்டித் தருகின்ற நிலையுள்ளது. அரசினுடைய சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக, திறமையான, சீரான நிர்வாகத்தின் காரணமாக, இன்றைக்கு நலிந்து போயிருந்த அந்தப் போக்குவரத்துக் கழகங்களெல்லாம் ஓரளவிற்கு இலாபத்திலே ஓடுகின்ற ஒரு சூழல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி இலாபத்திலே ஓடுகின்றபோது, நீங்கள் வருமான வரி கட்டுகின்ற ஒரு சூழல்கூட ஏற்படும் என்கின்ற நிலையை மாற்றி, அந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு, கடந்த காலங்களிலே கொடுக்கப்பட்ட போனஸ் போன்றவற்றையெல்லாம், வருகின்ற காலங்களில் கூட்டித் தருவீர்களேயானால், அந்தத் தொழிலாளர்களுடைய அன்பும் ஆதரவும் இந்த அரசுக்கு என்றைக்கும் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகப் புதிய வழித்தடங்களிலே அரசுப் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை என்கின்ற ஒரு நிலை இருந்தது. இப்பொழுது எல்லா கிராமப்புறங்களிலும் நல்ல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களிலே பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக, மிக நேர்த்தியான நல்ல சாலைகள், போக்குவரத்திற்கு வசதியான சாலைகளெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற சாலைகளிலே, தங்களுடைய கிராமங்களுக்கும் பேருந்துகள் வர

வேண்டுமென்று சொல்லி, எல்லா பகுதிகளிலே இருக்கின்ற மக்களும் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே இந்த ஆண்டு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகப் புதியதாக பேருந்து வழித்தடங்கள் நடத்துவதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று..

*முற்பகல் 12–50*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் சொன்னது போலப் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதற்குத் தடை ஏதுமில்லை. ஆனால் அரசினுடைய அனுமதியைப் பெற்று புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கவேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறோமே தவிர ஒட்டுமொத்தமாகத் தடை ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு பொதுமக்களுடைய பிரதிநிதிகள் தங்களுடைய பகுதிக்குப் புதிய வழித்தடங்கள் வேண்டுமென்று கேட்டால், அதை ஆய்வு செய்து தேவையென்று கருதினால் அப்போதைக்கப்போது புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகளை அரசு இயக்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் உங்களுடைய கோரிக்கை எதுவும் இருக்குமானால், அதைக் கொடுத்தால் அதையும் அரசு அன்போடு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மிக்க மகிழ்ச்சி. வருகின்ற காலங்களில் இந்தப் பேருந்துகளை எல்லா பகுதிகளிலும்-எனக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாகத் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையும், வளர்ந்து வருகின்ற இந்தச் சமுதாயத்திற்கு போக்குவரத்து என்பது மிகவும் அவசியம் என்கின்ற முறையிலும், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் சென்றுவருவதற்குக்கூட, நாம் இன்றைக்கு இலவச பஸ் பாஸ், பள்ளி மாணவர்களுக்கு வழங்கியிருக்கின்ற காரணத்தினால், எல்லா பகுதிகளிலும்-இருக்கின்ற மக்களும் அந்தப் போக்குவரத்தை எதிர்பார்க்கிறார்கள். இன்றைக்கு பல மினி பேருந்துகள் இயக்கப்பட்டுக்கொண்டிருந்தாலும், அரசுப் பேருந்துகள்தான் வேண்டும் என்கின்ற நிலை; ஏனென்றால் மாணவர்கள் எல்லாம் இலவசமாகச் சென்றுவருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது அரசுப் பேருந்துகள்தான் என்கின்ற முறையிலே அதை விரும்பிக் கேட்கின்றார்கள்.



சேடப்பட்டி தொகுதியைப் பொறுத்த அளவிலே மல்லபுரம் மயிலாடும்பாறை வழியிலே செல்கின்ற அந்த மலைச் சாலையிலே ஒரு மினி பஸ் விட வேண்டும் என்கின்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்துதர வேண்டுமென்று சொல்லி, இன்னும் 3 அமைச்சர்கள் தங்களுடைய பதிலைச் சொல்ல வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு வழிவிட்டு இந்த வாய்ப்பைத் தந்த பேரவையினுடைய தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் பேசத் தொடங்கியபோது எதிர்க்கட்சியினர் இங்கு வரவேண்டுமென்று அழைத்து இருக்கிறார். ஆனால் நேற்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பேரவைத் தலைவர் எங்களை வா என்று அழைக்கவில்லையே என ஆதங்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தாங்கள் அழைக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டசபை ஒன்றும் பேரவைத் தலைவருடைய கல்யாண வீடு அல்ல. இங்கு வருவதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அது அவர்கள் ஆற்ற வேண்டிய கடமை. அந்தக் கடமையை அவர்கள் புறக்கணிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பம்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*பிற்பகல் 12–55*

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கின்ற பாரத தேசத்திலே 100 கோடியில் ஒருவராய், பாரதி கண்ட புதுமைத் தாயாய் வாழும் எங்கள் அன்னையே, "வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார், மாபெரும் வீரர், மானம் காப்போர் சரித்திரம்தனிலே நிற்கின்றார்" - என்கின்ற வைர வரிகளின் வார்ப்பிடமாக, வீரமகள் பூச்சூட, மானம் ஒரு வாழ்வாக, இந்தியத் துணைக் கண்டத்திலே என்றுகூட நான் சொல்ல மாட்டேன், அகில உலகத்திலே இன்றைக்கு தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவதற்காக, மலை குலைந்தாலும், நிலை குலையாத மாதரசியாக, மக்கள் நலம் பேணிக் காக்க தொடர்ந்து போராடுகின்ற பேரரசியாக,

தமிழகத்தை முன்னேற்றப் பாதையிலே கொண்டு செல்வதற்காக இரவு பகல் பாராமல் அயராமல் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற, ஆறு மொழிகள் பேசக்கூடிய ஆற்றல் மிக்கவரும், ஆறரைக் கோடி தமிழக மக்களின் முதலமைச்சரும், எங்கள் குடும்பத்தினுடைய குலவிளக்குமான டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களைப் பணிவோடு உரித்தாக்கிக் கொண்டு, உலகத்துத் தொழில்கள் எல்லாம் உயர்வுடையன என்றாலும், உழவுத் தொழிலே உலகத் தொழில்களுக்கெல்லாம் தலைமை சார்ந்தது. அந்த உழவுத் தொழிலை மேற்கொள்ளும் உழவர் பெருமக்களே எல்லோருக்கும் அச்சாணியாய் இருப்பார்கள். இந்த உயரிய உண்மையை உணர்ந்த வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருமான்

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மொழிந்ததை நாம் அறிவோம். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு மூத்த உறுப்பினர் அருமை அண்ணன் திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று,

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் – வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம் – வெறும்
வீணருக் குழைத் துடலம் ஓயமாட்டோம்"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதியாரின் வைர வரிகளுக்கு ஏற்ப வேளாண்மைத் துறைக்கும் விவசாயப் பெருமக்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து வேளாண்மை மூலம் உற்பத்தியாகும் வேளாண் பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் பல்வேறு வேளாண் சார்ந்த தொழில்களையும் வேளாண் சார்ந்த உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளையும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி இன்றைக்கு வாழும் பாரதியாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமின்றி, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் வேளாண்மைத் துறையிலே எந்தெந்த நிலைகளிலே முதலிடம் வகிக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே



கோடிட்டுக் காட்டுவது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகின்றேன்.

"வரப்புயர நீருயரும்

நீருயர நெல்லுயரும்

நெல்லுயரக் குடியுயரும்

குடியுயர கோனுயரும்

கோனுயரக் கோலுயர்வான்"

என்ற அவ்வையின் அமுத மொழிக்கேற்ப விவசாயம் உயர்வதற்கு அல்லும் பகலும் பாடுபட்டு வருகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியை, இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத்திற்குத் தேவையானது மழை; தேவையற்றது வறட்சி. இந்த நிலையிலும் காவிரியில் கர்நாடகம் தொடர்ந்து தண்ணீர் திறந்துவிட மறுக்கின்ற துயரம். இவற்றால் விவசாயம் தொடர்ந்து பாதிக்கப்படும் நிலையிலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நடவடிக்கைகளால் விவசாயம் காக்கப்படுகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவசாயம் இன்றைக்குக் காக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு முகராசி கொண்ட மகராசியாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே கோலோச்சி வருகின்ற காரணத்தாலே இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே, தமிழகத்திலே தங்குதடையின்றி மின்சாரம் கிடைக்கின்ற காரணத்தாலும், இன்றைக்கு விவசாயப் பெருமக்களுக்குத் தங்குதடையின்றிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடனுதவி கிடைக்கின்ற ஒரு வாய்ப்பை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி இருப்பதன் மூலமாகவும், கரும்பைப் பொறுத்தமட்டிலே ஒரு ஹெக்டேர் உற்பத்தியிலே நாம்தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதலிடம் வகிக்கின்றோம். அதோடு மட்டுமல்ல, நிலக்கடலை உற்பத்தியிலே, ஒரு ஹெக்டேர் அளவிலே பார்த்தால் இந்திய துணைக் கண்டத்திலேயே நாம்தான் முதலிடம் வகிக்கின்றோம். சோளம், கம்பு, எண்ணெய்வித்து ஆகிய பயிர்களோடு இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே மரவள்ளிக் கிழங்கு, முட்டைக் கோசு..... (குறுக்கீடு) 20 நிமிடங்களிலே முடித்துவிடவேண்டுமென்று பணித்திருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பணிக்கவில்லை. உங்களுக்கு எவ்வளவு நேரம் தேவை என்றுதான் கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எவ்வளவு நேரம் கொடுத்தாலும் பரவாயில்லை. ஒரு மணி நேரம் கொடுத்தால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு மாலையிலும் சட்டப்பேரவை நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே நீங்கள் 40 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** ஆக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு ஹெக்டேருக்கு மரவள்ளிக் கிழங்கை உற்பத்தி செய்வதிலும், முட்டைக் கோசு உற்பத்தி செய்வதிலும், மலர்களை உற்பத்தி செய்வதிலும் நாம் முதலிடம் வகிக்கின்றோம் என்பதையும், வாழை, நெல் உற்பத்தி செய்வதில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி ஆண்டிலே முதலிடத்தை வகிப்போம் என்கின்ற உறுதியையும் உத்தரவாதத்தையும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு விவசாயிகளின் சார்பாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, அந்த அடிப்படையில், இன்றைக்கு நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். தஞ்சாவூருக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்கள் எல்லாம், தஞ்சைத் தரணிக்காக...

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 20 மணித் துளிகளுக்குள்ளே முடித்துவிட்டால், மற்ற அமைச்சர்களும் முடித்துவிடுவார்கள். மதியத்தோடு சட்டமன்றக் கூட்டத்தை முடித்துக்கொள்ளலாம். தாங்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டால், மதியமும் நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும்; மாலையிலும் நடத்தவேண்டி வரும்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** சரி, முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) சரி, முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.



இன்றைக்கு தஞ்சைக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்கிறவர்கள் எல்லாம், தஞ்சைத் தரணிக்கு என்ன செய்தார்கள் என்று நாம் பார்க்கின்றபோது, வேருக்கு வெந்நீரும், விவசாயிக்குக் கண்ணீரும்தானே அவர்கள் கொடுத்த பரிசு. மத்திய அரசிடம் விவசாயிகளுக்காக காவிரி தண்ணீர் கேட்டுப் போராட்டம் நடத்ாதவர்கள் எல்லாம், இன்றைக்கு இலாகாக்கள் கேட்டு 72 மணி நேரம் போராட்டம் நடத்தினார்கள் என்பதுதான் உண்மை. ஆக, காவிரிப் பிரச்சினைக்காக, நாடாளுமன்றத்திலே வெளிநடப்புச் செய்யாத திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணி, பிரச்சினையே இல்லாமல் இருக்கின்ற தமிழகத்தினுடைய சட்டமன்றத்திற்கு வராமல் இருப்பதுதான் வேடிக்கை, விநோதம், வெட்கக்கேடு என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெல்லுக்கும், கரும்பிற்கும் போதிய நீர் இல்லாத நிலையில், அந்நீரைக் காவிரியிலே இருந்து பெற, உண்ணா நோன்பு இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வந்தனை செய்கின்ற இந்த நல்ல சூழ்நிலையிலே, விவசாயிகள் சேற்றிலே கால் வைத்தால்தான் நாம் சோற்றிலே கை வைக்க முடியும். துன்பமும், துயரமும் தொடர்ந்தபோதும், நெற்றி வியர்வை நிலத்தில் விழ, உழைக்கத் தயாராக இருக்கும் அவர்களின் நிலை அறிந்து, நெல், கரும்பு மற்றும் வாழை சாகுபடி செய்ய போதுமான நீர் இல்லாத நிலையிலே இருக்கும் விவசாயிகளுக்கு குறைந்த நீரில் மாற்றுப் பயிர்த் திட்டம் என்கின்ற உயரிய திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள், தீர்க்கதரிசனப் பார்வையோடு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆக, அந்த அடிப்படையிலேதான் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேற்றைக்கு முன்தினம்கூட, மிகத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். Jatropha என்று சொல்லப்படுகின்ற காட்டாமணக்கும், "sweet சொர்க்கம்" (Sweet Sorghum) என்று சொல்லப்படுகின்ற சர்க்கரைச் சோளமும், sweet beet என்று சொல்லப்படுகின்ற சர்க்கரைக் கிழங்கும் பயிரிட வேண்டுமென்கின்ற தொலைநோக்குப் பார்வையோடு இன்றைக்கு மாற்றுப் பயிர்த் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நேற்றைக்கு முன்தினம் தெள்ளத் தெளிவாக, மிகத் தெளிவாக சட்டப் பேரவையிலே அறிவித்திருக்கிறார்கள். ஆக, அந்த அடிப்படையிலே, இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்கள் சொல்லிய கருத்திற்கிணங்க இன்றைக்குத்

தமிழகத்தில் பாலைவனமாக இருக்கின்ற நிலங்களையெல்லாம், சோலைவனமாக ஆக்குகின்ற ஒரு சீரிய நோக்கத்தோடுதான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாற்றுப் பயிர்த் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே ஒரு பழமொழி உண்டு. "இளைத்தவனுக்கு எள்; கொழுத்தவனுக்குக் கொள்" என்று சொல்வார்கள். இளைத்தவனுக்கு எள் என்றால், கிராமத்திலே வறுமையிலே வாடுகின்ற அந்த விவசாயிகள், உடனடியாக வருவாய் பெற வேண்டுமென்றால், 100 நாட்கள் அல்லது 120 நாட்களுக்குள்ளாக விளைகின்ற எள்ளைப் பயிரிட வேண்டும். இதைத்தான் "இளைத்தவனுக்கு எள்" என்பார்கள். "கொழுத்தவனுக்குக் கொள்" என்றால், அந்த விவசாயிகள் சற்று அவர்கள் வாழ்க்கையிலே, நல்ல நிலையிலே இருப்பவர்கள்; பொருளாதார ரீதியாக அவர்கள் வளம் பெற்றிருப்பார்களேயானால், அவர்கள் கொள் விதைப்பார்கள் என்று நம்முடைய கிராமப்புறத்திலே ஒரு பழமொழி உண்டு. ஆக, இன்றைக்கு இளைத்தவனுக்கு எள்ளுக்கோ, கொழுத்தவனுக்குக் கொள்ளுக்கோ என்று இல்லாமல் மாற்றுப் பயிர் திட்டத்தின் மூலமாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சர்க்கரைச் சோளத்தை அறிவித்திருக்கிறார்கள். "Sweet சொர்க்கம்" என்று சொல்லப்படுகின்ற சர்க்கரைச் சோளத்தை, விவசாயப் பெருமக்கள் விவசாயம் செய்தால், 110 அல்லது 120 நாட்களுக்குள்ளாகக் குறைந்த நீராதாரத்தைக் கொண்டு, அவர்கள் 120 நாட்களுக்குள்ளாகவே, அந்த மகசூலைப் பெற்று, தங்களுடைய குடும்பத்திற்கு ஒரு வருவாயை உருவாக்கிக்கொள்ள முடியும் என்கின்ற ஒரு மகத்துவத்தை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்ல. இன்றைக்கு அந்த sweet சொர்க்கம்" (Sweet Sorghum) என்று சொல்லப்படுகின்ற அந்த சர்க்கரைச் சோளத்தைப் பயிரிடுகின்றபோது, விவசாயிகளுக்கு எந்த அளவிற்குப் பயன்கள் கிடைக்கின்றன என்பதையும், குறைவான காலத்திலே, 110 அல்லது 120 நாட்களுக்குள்ளாக கூடுலாக எவ்வளவு வருவாய் கிடைக்கிறது என்பதையும் விரிவாகச் சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தாலும்கூட, நேரத்தின் அருமையைக் கருதி, சுருக்கமாகச் சொல்கிறேன். அதற்குப் பிறகு, 10.5 நாட்கள் அல்லது 6 மாதங்களுக்குள்ளாக சர்க்கரைக் கிழங்கு பயிரிட்டு அவர்கள் அதன்மூலமாகக் குறைந்த நீரிலேயே தங்களுடைய வருவாயை, விவசாயப்



பெருமக்கள் கூடுதலாகப் பெருக்கிக்கொள்ள முடியும் என்கின்ற உயரிய நோக்கத்தை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1.05

அதோடுமட்டுமின்றி, நீண்டகாலப் பயிராக இருக்கின்ற ஜெட்ரோபா என்று சொல்லப்படுகின்ற அந்தக் காட்டாமணக்கு பயிரிடுவோமேயானால்—அதனுடைய ஆயுள் ஏறக்குறைய 30 ஆண்டுக் காலம்—காட்டாமணக்கிலிருந்து மகசூல் கிடைக்கும். இரண்டாவது வருடத்திலிருந்து அந்தக் காட்டாமணக்கிலிருந்து மகசூல் கிடைக்கின்ற காரணத்தாலே நீண்டகாலப் பயிராக விவசாயப் பெருமக்கள் அந்தக் காட்டாமணக்கை விவசாயம் செய்ய வேண்டும் என்கின்ற நிலையிலே இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறுகிய காலப் பயிராகவும், நடு காலப் பயிராகவும், நீண்டகாலப் பயிராகவும் 3 வகைகளிலே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மாற்றுப் பயிர்த் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காட்டாமணக்கு பயிரிடுகின்றபோது அந்தப் பயிருக்குக் குறைந்த நீர் இருந்தாலே போதும். அந்தப் பயிரை, 'ஜெட்ரோபா' என்று சொல்லப்படுகின்ற காட்டாமணக்கை விவசாயப் பெருமக்கள் பயிரிடுகின்றபோது அதனைக் கால்நடைகள் எந்த வகையிலும் சேதப்படுத்துவதில்லை என்பது விவசாயிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. ஏனென்றால் கால்நடைகள் அதைச் சாப்பிடுவதில்லை. அதோடுமட்டுமின்றி, தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கு அதன்மூலமாக வருவாய் கிடைக்கின்ற காரணத்தாலே 30 ஆண்டுகள் அதை நீண்டகாலப் பயிராக அந்தக் காட்டாமணக்கைப் பயிரிடலாம் என்றும், அது ஒரு அழுகும் பொருள் அல்ல, என்றைக்கும் அழுகக்கூடிய நிலையிலே அந்தக் காட்டாமணக்கு இல்லை என்பதையும், காட்டாமணக்கிலிருந்து பயோ டீசல் தயாரிக்கின்ற காரணத்தாலே அதற்கு 100 சதவீத சந்தை எப்போதும் தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல. அகில உலகத்திலேயே அதற்குச் சந்தை வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். காட்டாமணக்கிலிருந்து எண்ணெய் தயாரிக்கப்படுகின்றது. பயோ டீசல் தயாரிக்கப்படுகின்றபோது அதன்மூலம் கிடைக்கக்கூடிய கிளிசரின் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பொருள் சோப்பு தயாரிப்பதற்கு

உபயோகப்படும் என்பதையும், அதற்குப் பிறகு காட்டாமணக்கிலிருந்து எண்ணெய் எடுக்கின்றபோது அதன்மூலம் கிடைக்கின்ற கேக் என்று சொல்லப்படுகின்ற அந்த உரம் பயிர்களுக்கு, விவசாயப் பெருமக்களுக்கு மீண்டும் பயனுள்ள வகையிலே அமையும் என்பதையும் நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காட்டாமணக்கு பயிரிடுவதன் மூலமாக இன்றைக்குப் பெண்களுக்குக் கிராமப்புறங்களிலே பெருமளவு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் சல்ஃபர் புகை இதிலிருந்து அதிகம் வராத காரணத்தாலே சுற்றுப்புறச் சூழலைக் கட்டுப்படுத்துகின்றது, அந்நியச் செலாவணி பெருமளவிலே இதில் மிச்சப்படுகின்ற காரணத்தாலே காட்டாமணக்கைப் பயிரிட வேண்டும் என்று தமிழகத்தில் இருக்கின்ற வேளாண் பெருமக்களுக்குப் பணிவான வேண்டுகோள் விடுக்க இந்த நேரத்திலே நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்கரைச் சோளத்தைப் பொறுத்தவரையிலே, 110 அல்லது 120 நாட்களிலே குறைந்த நீரிலே அதனுடைய வருவாய் கிடைக்கின்றது. ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம். கால்நடைத் தீவனமாக அதைப் பயன்படுத்தலாம். எரிசக்திக்குப் பயன்படுகின்ற எத்தனால் இதன்மூலம் தயாரிக்கலாம்.

சர்க்கரைக் கிழங்கைப் பொறுத்தவரையிலே, அதையும் குறைந்த நீரிலே சாகுபடி செய்யலாம். இந்த சர்க்கரைக் கிழங்கையும், சர்க்கரைச் சோளத்தையும் நாம் உற்பத்தி செய்வதன் மூலமாக தமிழகத்திலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளிலே தொடர்ந்து ஒரு வருட காலம் அந்தச் சர்க்கரை ஆலைகள் தங்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்குண்டான வாய்ப்புகள் இருக்கின்றன. தற்போது கரும்பு அரவை செய்கின்ற காலம் 6 மாத காலமாக இருக்கின்ற காரணத்தால், மீதம் இருக்கின்ற 6 மாத காலங்கள் அந்தச் சர்க்கரை ஆலைகளிலே எந்தப் பணியும் நடைபெறாத சூழ்நிலையிலே இந்த சர்க்கரைச் சோளத்தையும் சர்க்கரைக் கிழங்கையும் பயிரிடுவோமேயானால் ஆண்டு முழுவதும், 365 நாட்களும் சர்க்கரை ஆலைகளிலே பணி நடைபெறும் என்பதையும், சர்க்கரை ஆலைகளிலே பணிபுரிகின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு முழுமையாகக் கிடைக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுக்காக எவ்வளவு பணிகள், 3 ஆண்டு



காலத்திலே செய்து இருக்கிறார்கள் என்பதையும், வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக எவ்வளவு பணிகள் செய்து இருக்கிறார்கள் என்பதையும் அனைவரும் அறிவீர்கள். இன்றைக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அடிப்படையிலே தமிழகம் முழுவதும், 2003–2004 ஆம் ஆண்டிலே 19 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே உள் கட்டமைப்புப் பணிகளுக்காக மட்டும் 10 கோடி ரூபாய் செலவிலே அந்தப் பணிகள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும், கிராமங்களிலே இன்றைக்கு ஏறக்குறைய 2 ஆண்டு காலத்திலே 250 உலர் களங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும்—விவசாயப் பெருமக்கள் அந்த உலர் களங்கள் ஒவ்வொன்றினுடைய மதிப்பு 2 இலட்சம் ரூபாய் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு 250 உலர் களங்களைக் கட்டி இருப்பதன் மூலமாக விவசாயப் பெருமக்களுக்கு மட்டும் அந்த உலர் களங்களிலே நன்மை கிடைப்பதில்லை. அந்தக் கிராமப்புறத்திலே, வறுமைக்கோட்டுக்குக்கீழ் இருக்கின்ற அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் அந்த உலர் களங்கள் பயன்பாட்டுக்கு வந்து இருக்கின்றன என்பதையும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறத்திலே வறுமைக் கோட்டுக்குக்கீழே வாழ்ந்து வருகின்ற ஏழைக் குடும்பங்கள் இன்றைக்குத் தங்களுடைய குடும்பத்திலே ஏதாவது விசேஷங்கள் நிகழ்ந்தால் திருமண மண்டபத்திற்குச் சென்று அங்கே வாடகை கொடுத்து நிகழ்ச்சியை நடத்த முடியாதவர்கள் எல்லாம் இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க கட்டப்பட்டு இருக்கிற அந்தக் களத்தினைப் பயன்படுத்துகிறார்கள். மிகப் பெரிய அளவிலே அந்தக் களம் இருக்கிற காரணத்தாலே, சிமெண்டிலே அந்தக் களம் அமைக்கப்பட்டு இருக்கிற காரணத்தாலே, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து வருகிற ஏழை எளிய பெருமக்கள் தங்களுடைய குடும்பங்களிலே நடைபெறுகிற காதணி விழா போன்ற நிகழ்ச்சிகளுக்கும், தங்களுடைய குடும்பத்திலே இருக்கிற பெண்களின் அந்த நல்ல சம்பவங்களுக்காகவும் அந்தக் களங்களுக்குச் சென்று உணவு வழங்கக்கூடிய நிலை இருக்கிறது. அப்படி நல்ல ஒரு களமாக இன்றைக்கு அந்தக் களம் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–10

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு ஆண்டுகாலத்திலே ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலே 250 உலர்

களங்களைக் கட்டி இருக்கிறார்கள் என்பதையும், 4 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே ஏறக்குறைய ரூபாய் 225,83,000 மதிப்பீட்டிலே உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும், ஊரகக் கிடங்குகள் ஏறக்குறைய ரூ.57.60 இலட்சத்திலே கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தனைக்கும் மேலாக 5 ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலமாக விவசாயப் பெருமக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையிலே அவர்கள் செய்திருக்கிற பணி ஏறக்குறைய ரூ.2287.23 இலட்சம். ஆனால் மூன்று ஆண்டுகாலத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.3,201 இலட்சத்தை செலவு செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இங்கே அமர்ந்து இருக்கிற பத்திரிகைத் துறை நண்பர்கள் 5 ஆண்டுகாலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செய்திருக்கிற பணிகளையும், 3 ஆண்டுகாலத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே எந்த அளவிற்கு அந்தப் பணிகளை எல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தருமபுரி மாவட்டத்திலே, ஓசூரிலே ரூபாய் 24.85 கோடி மதிப்பீட்டிலே கொய் மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல நீலகிரி மாவட்டத்திலே ரூ.15.89 கோடி மதிப்பீட்டிலே இன்றைக்கு மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. தேனி மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே இன்றைக்கு ரூ.24.60 கோடியிலே மாம்பழம் ஏற்றுமதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அந்த அடிப்படையிலே இன்றைக்கு கடலூரிலே முந்திரி வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை உருவாக்குவதற்காக ரூ.10.36 கோடி மதிப்பீட்டிலும், திருச்சியிலே வாழை ஏற்றுமதி செய்வதற்காக ரூ.10 கோடி மதிப்பீட்டிலும் மத்திய அரசினுடைய அனுமதிக்காக கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே வேளாண்மைத் துறையோடு இன்றைக்கு சிறு தொழில் துறையும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகிற காரணத்தாலே—எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு மூத்த உறுப்பினர் அருமைப் பெரியவர் இலட்சுமணன் அவர்கள்



குறிப்பிடுகிறபோது சிறுதொழில் துறையின் மூலமாக இன்றைக்குக் கிராமப்புறங்களிலே எந்த அளவிற்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது என்ற தகவல்களை எல்லாம் விரிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் — இந்தியத் துணைக் கண்டத்திலேயே சிறுதொழில் துறையைப் பொறுத்தமட்டிலே தமிழகம்தான் பரப்பளவினுடைய அடிப்படையிலே முதலிடம் வகிக்கிறது என்பதனை மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உத்தரப்பிரதேச மாநிலம் பெரிய மாநிலமாக இருக்கிற காரணத்தாலே அவர்கள் சிறு தொழில் துறையிலே முதலிடம் வகிக்கிறார்கள். ஆனால் பரப்பளவினுடைய அடிப்படையிலே எடுத்துப் பார்ப்போமேயானால் சிறு தொழில் துறையைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய தமிழகம்தான் முதன்மையாகத் திகழ்ந்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே மட்டும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து வருகிற நல்ல பணிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறு தொழில்களுக்குச் செய்து வருகிற சலுகைகளை எல்லாம் மனதிலே கொண்டு பார்த்தால், இன்றைக்கு ஒட்டுமொத்தமாகத் தமிழகத்திலே மட்டும் 4,74,699 சிறு தொழில்கள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதையும், அதன்மூலமாக நேரடியாக வேலைவாய்ப்பு பெறுபவர்கள் மட்டும் 34,65,302 பேர் என்பதையும், குடிசைத் தொழில்களைப் பொறுத்தமட்டிலே 1,12,842 குடிசைத் தொழில்கள் மூலமாக 2,25,684 பேர்களுக்கு இன்றைக்கு நேரடியாக வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதையும், கைவினைத் தொழில்களைப் பொறுத்தமட்டிலே 1,00,839 கைவினைத் தொழில்கள், அதன்மூலமாக நேரடியாக 2,01,678 பேர் வேலைவாய்ப்பு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான தகவலையும் தெரிவித்துக்கொண்டு, ஒட்டுமொத்தமாக 38,92,664 பேர்களுக்கு சிறுதொழில் துறையின் மூலமாக வேலைவாய்ப்பு வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே மேலும் கூடுதலாக வேலைவாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும்; அப்படி வேலைவாய்ப்புகளைக் கொடுக்க வேண்டுமென்றால் நம்முடைய தமிழகத்திலே இன்றைக்கு மேலும் மேலும் சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டும்.

பிற்பகல் 1–15

சிறு தொழில்களைப் பொறுத்தவரை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டிலே, 2004–2005 ஆம் ஆண்டு 33,000 தொழில்களை தொடங்கவேண்டும் என்று, இலக்கு நிர்ணயித்து இருக்கிறார்கள். குடிசைத் தொழில்கள் பொறுத்த மட்டிலே, 8,000 குடிசைத் தொழில்களைத் துவங்க வேண்டும் என்று டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலக்கு நிர்ணயித்து இருக்கிறார்கள். கைவினைத் தொழில்களைப் பொறுத்தமட்டிலே ஏறக்குறைய 5000 கைவினைத் தொழில்கள், இந்த நிதிநிலை ஆண்டிலேயே பதிவு செய்யப்பட வேண்டும், துவங்கப்பட வேண்டுமென்கின்ற இலக்கை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்து இருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக 2001–2002, 2003–2004 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பைப் பொறுத்தமட்டிலே 20 ஆயிரம் நபர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. 17281 பேருக்கு 2002–2003 ஆம் ஆண்டு பொறுத்தமட்டிலே, ரூபாய் 71.38 கோடி வங்கிகள் மூலமாக சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்குக் கடனுதவி பெற்றுத் தந்து, அங்கே தொழில்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2003–2004 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டிலே, 9,794 பயனாளிகளுக்கு அந்த வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டு, இன்றைக்கு 40.87 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அந்தப் பயிற்சி அளிக்கப்பட்ட சிறு தொழில் முனைவோர்களுக்கு, சிறுதொழில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னமும் செப்டம்பர் மாதத்திற்குள்ளாக — ஏனென்றால் வங்கிகளிலே கொடுக்கப்படுகின்ற காலம் 30–9–2004 என்று இலக்கு இருக்கிற காரணத்தாலே— 30–9–2004–க்குள்ளாக நிச்சயமாக 20,000 என்ற 2003–2004 ஆண்டினுடைய இலக்கை, நாங்கள் அடைவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று மகளிரைப் பொறுத்தமட்டிலே 25,000 மகளிர்க்கு வருடந்தோறும் சிறுதொழில் துறையின் மூலம் நாங்கள் பயிற்சி அளித்து, அந்தப் பயிற்சியின் மூலமாக அவர்களுக்கும் நாங்கள் தொழில் தொடங்குவதற்குண்டான வாய்ப்புகளை உருவாக்கிக்



கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே அதிகமாக தமிழகத்திற்கு வந்து சிறுதொழில்கள் தொடங்குவதற்கு உண்டான வாய்ப்பு எப்படி மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய தமிழகத்திலே மிக எளிதாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் எண்ணுவீர்களேயானால், சிறு தொழில்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றால், அதற்கான சான்றிதழ் பெறவேண்டும். அப்படிச் சான்றிதழ் பெற வேண்டுமென்றால், இந்திய துணைக் கண்டத்திலேயே நான் அறிந்தவரையிலே, எனக்குக் கிடைத்து இருக்கிற தகவலின் அடிப்படையிலே, இந்திய துணைக் கண்டத்திலே, தமிழகத்திலே மட்டும்தான் 226 இணைய தளங்கள் மூலம் தற்காலிக சிறு தொழில் சான்றிதழ் பெறுவதற்கு உண்டான வாய்ப்பை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். யார் ஒருவர் சிறு தொழில் செய்ய வேண்டும் என்று விருப்பம் கொண்டாலும், அடுத்த நிமிடமே தங்களது பகுதிக்கு அருகில் இருக்கின்ற இணைய தளத்திற்குச் சென்று 50 ரூபாய் செலுத்தினால் போதும். 5 நிமிடத்திலே சிறு தொழில் பதிவு செய்து அவர்களுக்கு தற்காலிகச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இந்த உன்னத நோக்கத்தை, உன்னதத் திட்டத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இந்தத் தற்காலிகச் சான்றிதழின் ஆயுள் 5 ஆண்டுகாலம். 5 ஆண்டுகால இந்தத் தற்காலிகச் சான்றிதழ் வைத்தே தொழிலைத் தொடங்கலாம். 5 ஆண்டுகாலம் கழித்துத்தான், நீங்கள் நிரந்தர சான்றிதழ் பெறுவதற்குண்டான வாய்ப்பு இருக்கிறது. உங்களுக்கு எப்படி சூழ்நிலை இருக்கிறதோ, அந்த ஐந்தாண்டு காலத்திலே, அதற்கேற்ப நிரந்தர சான்றிதழ் பெறுவதற்குண்டான வாய்ப்பை இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12–9–2002 ஆம் தேதி அன்று தொடங்கப்பட்ட இந்த இணைய தளத்தின் மூலம் 46,697 சிறு தொழில்களுக்கு—266 இணைய தளத்தின் மூலமாகத் தற்காலிகச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு சிறு தொழில் துறையின் மூலமாக, சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக மகளிர் பயிற்சி மூலமாக,

கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய பெருமக்களுக்கு நாங்கள் வேலைவாய்ப்பு வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

விவசாயப் பெருமக்களுக்கு, அந்த விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அந்த விளை பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கி துவங்கப்பட்டிருக்கிற திட்டத்தின் மூலமாகவும் பல ஆயிரக்கணக்கான, கிராமப்புறங்களில் இருக்கின்ற அந்தத் தாய்மார்களுக்கு, படித்த, பாமர மக்களுக்கு நாங்கள் வேலைவாய்ப்பினை வழங்கிக்கொண்டு இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே மகிழ்ச்சிடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே அமர்ந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் இருக்கைக்கு மேலாக அண்ணல் காந்தியடிகளுடைய திருவுருவப் படம் இருக்கிறது. இன்றைக்கு வாழும் காந்தியாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு ஆதாரத்தோடு நான் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணல் காந்தியடிகள் பெற்றுத் தந்த சுதந்திரத்தை இன்றைக்குக் கட்டிக் காத்துக்கொண்டு இருக்கின்ற தெய்வம், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–20

'தாயகத்தின் சுதந்திரம்தான் எங்கள் கொள்கை; தன்மானம் ஒன்றேதான் எங்கள் செல்வம்' என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினாரே அந்த வார்த்தைகளுக்கு இலக்காக, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலே இருக்கின்ற 542 தொகுதிகளிலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கைதான் வெற்றி பெற்றிருக்கின்றது. எண்ணிக்கையிலே வேண்டுமானால் நாங்கள் குறைந்திருக்கலாம். ஆனால் கொண்ட கொள்கையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே வெற்றி பெற்றிருக்கின்றார்கள். மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு எண்ணிக்கையிலே வேண்டுமானால் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் அவர்கள் கொண்ட கொள்கையிலே இன்றைக்குத் தோற்று இருக்கின்றார்கள். ஆக, அவர்கள் கொண்ட கொள்கை, வேறொருவரைப் பிரதமராக ஆக்க வேண்டும். ஆனால்



இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை இந்தியாவை இந்தியர் ஆள வேண்டும். அதுதான் அம்மா அவர்களுடைய உரிமைக் குரல். அந்த உரிமைக் குரலைத்தான் பட்டி தொட்டிகளில் எல்லாம் முழங்கினார்கள். அந்த உரிமைக் குரலினுடைய அடிப்படையிலேதான் இன்றைக்கு இந்தியாவை இந்தியர் ஆண்டு கொண்டிருக்கின்றார்.

அண்ணல் காந்தியடிகள் அல்லும் பகலும் பாடுபட்டுப் பெற்றுத்தந்த சுதந்திரத்தை இன்றைக்குக் காத்துவருபவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணல் காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலே என்ன சொன்னார்கள்? 'கிராம ராஜ்யமே, இராம ராஜ்யம்' என்பது அண்ணல் காந்தியடிகளுடைய தத்துவமாகும். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு வாழும் காந்தியாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்து வருகின்றார். எப்படி என்றால் இன்றைக்குப் புள்ளிவிவரத்தோடு நான் சுட்டிக்காட்ட வேண்டுமென்றால் 1961 ஆம் ஆண்டு கிராமப்புற மக்கள்தொகையினுடைய எண்ணிக்கை தமிழகத்திலே 73.31 சதவீதம். நகரத்திலே 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகையினுடைய எண்ணிக்கை 26.69 சதவீதம். 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி நீங்கள் பார்ப்பீர்களேயானால் கிராமப் புறத்தினுடைய மக்கள்தொகை 56.1 சதவீதம். நகரப்புறத்தினுடைய மக்கள்தொகையை நீங்கள் பார்ப்பீர்களேயானால் 43.9 சதவீதம். 40 ஆண்டு காலத்திலே கிராமப்புறத்திலேயிருந்து நகரப்புறத்திற்கு 17.21 சதவீதம் இன்றைக்குக் குடியேறியிருக்கின்றார்கள் என்றால் என்ன காரணம்? அவர்கள் சொந்த வீட்டை விட்டு, சொந்த நிலத்தை விட்டு, சொந்தத்தை விட்டு, பந்தத்தை விட்டு, அனைத்தையும் விட்டு, நகரத்திலே குடியேறியிருக்கின்றார்கள் என்றால் என்ன காரணம்? விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற அந்த விளைபொருளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத காரணத்தாலேதான் தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக, தங்களுடைய சொந்த நிலத்தை எல்லாம் அங்கே விட்டுவிட்டு இன்றைக்கு நகரத்தை நோக்கிக் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக, கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்கள், விவசாயப் பெருமக்கள் சேற்றிலே கால் வைத்தால்தான், நாட்டிலே இருக்கின்ற அத்துணை பெருமக்களும் சோற்றிலே கால் வைக்க முடியும். (குறுக்கீடுகள்) மன்னிக்கவும், சோற்றிலே கை வைக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறொன்றும் இல்லை. பசி நேரம், அதனால்தான். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** பசி வந்தால் பத்தும் பறந்துபோய் விடும் என்பது தெரியும். ஆனால் அந்தப் பசிக்கு உணவு கொடுப்பது வேளாண்மைத் துறை; அந்த உணவைப் பெறுவதற்கு உண்டான பணத்தைப் பெறுவதற்கு உதவுவது ஊரகத் தொழில் துறை. அந்த அடிப்படையிலே – மிகச் சுருக்கமாக முடித்துக்கொள்கின்றேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்கள், சோற்றிலே கை வைப்பதற்குக் கொஞ்சம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. லா. சந்தானம்:** செவிக்கு உணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்ற வள்ளுவரது குறளுக்கொப்ப செவிக்கு உணவு கொடுத்துக்கொண்டிருக்கிறார். எனவே வயிற்றுக்கு உணவு பின்பு பார்த்துக்கொள்ளலாம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மூத்த உறுப்பினரவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி. (சிரிப்பு) அறிவிப்புகளை வேண்டுமானால் படித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிப்புகளைப் படிக்கலாம்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** இரண்டே இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். ஆக, நான் முன்னுரையிலே சொல்கின்றபோது பத்திரிகைத் துறை நண்பர்கள்கூடச் சற்று ஏறெடுத்துப் பார்த்தார்கள். இந்திய துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, அகில உலகத்திலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொன்னபோது, அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு பத்திரிகைத் துறை நண்பர்கள் ஏறெடுத்துப் பார்த்தார்கள். நான் ஆதாரத்தோடு, நேரத்தினுடைய அருமை கருதி சுட்டிக்காட்டுகிறேன். இன்றைக்கு குன்னூரிலே Teaserve என்கின்ற மின்னணு ஏல மையத்தை உருவாக்கி இருப்பதன் மூலமாக, இந்திய துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, அகில உலகத்திலேயே தமிழகத்தில்தான் அந்த மின்னணு ஏல மையத்தை Teaserve என்கின்ற நிறுவனத்தை நிறுவியதன் மூலமாக உலகத்திலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கியிருக்கின்றார் டாக்டர் புரட்சித்



தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். உலக அளவிலே 34 நாடுகளிலே பச்சைத் தேயிலையை உற்பத்தி செய்தபோதிலும்கூட, தேயிலையின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட அந்தத் தேயிலைத் தூளை 12 மையங்களிலே ஏலம் விடுகின்ற வகையில் Teaserve என்று சொல்லப்படுகின்ற அந்த மின்னணு ஏல மையத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவங்கியதன் மூலமாக இன்றைக்கு உலகத்திலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தப் புதிய அறிவிப்புகளைக் கேட்பதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் துடிதுடிப்பாக இருக்கிறார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு கீழ்க்கண்ட அறிவிப்புகளை வேளாண்மைத் துறையின் சார்பிலே அறிவிப்பதிலே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

1. விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகப் பயிற்சி: 2003–2004 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி 2,700 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மண் வளத்தினைக் காக்கவும், பயிர்களின் தேவைக்கேற்ப உர நிர்வாகத்தை மேற்கொண்டு, உற்பத்தித் திறனை உயர்த்தவும், சாகுபடிச் செலவைக் குறைக்கவும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி இவ்வாண்டு மேலும் விரிவுபடுத்தப்பட்டு ஒரு மாவட்டத்திற்கு 500 விவசாயிகள் வீதம் 27 மாவட்டங்களில் 13,500 விவசாயிகளுக்கு உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக ரூ.43.20 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

2. வேளாண்மை விரிவாக்க மையங்கள் பழுதுபார்த்தல்: வேளாண்மைத் துறையில் செயல்பட்டு வரும் வேளாண் விரிவாக்க மையங்களில் விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. விதைகள் மற்றும் இடுபொருட்கள் தரத்தை உரிய முறையில் பாதுகாக்க பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு, தற்போது பழுதுபட்ட நிலையில்

..ள்ள 100 வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.100 இலட்சம் செலவில் ..ழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்படும்.

3. வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குத் தார்ப்பாய்கள் வழங்குதல்: வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள விதைகளைப் பாதுகாக்க 200 தார்ப்பாய்கள் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 200 வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு வழங்கப்படும்.

4. வலைதளம் மூலம் பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட உரப் பரிந்துரை: மண் பரிசோதனை புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் பயிர் வாரியாக இடவேண்டிய தழை, மணி மற்றும் சாம்பல் சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்து ஆகியவற்றிற்கான பரிந்துரைகள் கணினி மூலமாக வேளாண்மைப் பல்கலைக்கழக வலைதளத்துடன் இணைக்கப்படும். அதன் அடிப்படையில் கணினி முலம் விவசாயிகள் தங்கள் நிலங்களில் இடவேண்டிய பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட உரப் பரிந்துரைகளைப் பெற முடியும். இதற்கான ஒரு முன்னோடித் திட்டம், மதுரை மாவட்டத்தில் ரூ.5 இலட்சம் செலவில் 2004–2005 ஆம் ஆண்டு வலைதளம் மூலம் கிராமப்புற தொடர்பு சேவைத் திட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும்.

5. இரண்டு மண் ஆய்வு நிலையங்களுக்கு, மண்ணிலுள்ள நுண்ணூட்ட ஆய்விற்கான கருவிகள்—Atomic Absorption Spectro Photo Meters -- வாங்குதல்: மண்ணில் தொடர்ந்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருவதால், நுண்ணூட்டச் சத்துகளின் அளவு குறைந்துள்ளது. பயிர்களின் உற்பத்தித் திறனைக் கணிசமாக உயர்த்துவதில் நுண்ணூட்ட உரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதால் நுண்ணூட்ட உரப் பரிந்துரைக்கான மண் பரிசோதனையை அதிக அளவில் மேற்கொள்ள முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் நீங்கலாக மற்ற அனைத்து மாவட்டங்களிலும் மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துகளை ஆய்வு செய்ய மண் பரிசோதனை நிலையங்களுக்கு 18 Atomic Absorption Spectro Photo Meter கருவிகளை அரசு ஏற்கெனவே வழங்கியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டு சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்ட மண் பரிசோதனை நிலையங்களுக்குத் தேவையான இரண்டு அணுக்கதிர் ஈர்ப்பு அலை நிழற்படமானி கருவிகள் ரூ.20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.



மேலும், பூச்சிமருந்து சட்டம் 1971-ன்கீழ் பூச்சிமருந்து மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக தற்போது ஆடுதுறை, கோயம்புத்தூர், கோவில்பட்டி, காஞ்சிபுரம் மற்றும் திருச்சியில் உள்ள பூச்சி மருந்து ஆய்வகங்களில் உள்ள ஐந்து உயர்தர திரவ கதிர் ஆய்வுமானி கருவிகளுக்குத் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் வாங்க ரூ.4.9 இலட்சம் வழங்கப்படும்.

6. தென்னை நாற்றங்கால்களுக்குப் பாசன வசதிகள் ஏற்படுத்துதல்: தற்போது பிச்சிவாக்கம், கிள்ளிக்குளம், நவ்லாக், பட்டுக்கோட்டை, பரமத்தி வேலூர், செங்கோட்டை, ஆழியார் நகர், மாதவரம், தேவதானம், வெள்ளாளவிடுதி மற்றும் வைகை அணை ஆகிய 11 இடங்களில் செயல்பட்டு வரும் தென்னை நாற்றுப் பண்ணைகளில் போதிய நீர் ஆதாரம் இல்லாததால் இப்பண்ணைகளுக்கு 11 குழாய்க் கிணறு, நீர் மூழ்கி மோட்டார்கள் ரூ.11 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

7. தென்னை நாற்றங்கால்களுக்குப் பாதுகாப்புக் கொட்டகை அமைத்தல்: மாதவரம், பட்டுக்கோட்டை, பிச்சிவாக்கம், மல்லியம் மற்றும் வடகரை ஆகிய அரசு தென்னை நாற்றங்கால்களில் தென்னை நாற்றுகளைப் பாதுகாக்கப் போதிய வசதி இல்லை. மேலும் சிங்கம்புணரி மற்றும் புத்தலம் பண்ணைகளில் பாதுகாப்புக் கூடம் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே புதிதாக 5 பாதுகாப்புக் கூடங்கள் அமைக்கவும், பழுதடைந்த இரண்டு கூடங்களைப் பழுதுபார்க்கவும் ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

8. காஞ்சிபுரம், கடலூர், வேலூர், தருமபுரி, திண்டுக்கல், திருச்சி தஞ்சாவூர், நாமக்கல், சேலம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உள்கட்டமைப்பு வசதிக்ள் மேம்படுத்தப்படும்.

மேலும், மாநிலத்திலேயே முதல் முறையாக திருவண்ணாமலை மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழு இணையத்தின் மேற்பார்வையில் மாவட்ட தோட்டக்கலைப் பண்ணை அமைக்கப்படும். இவ்விரு திட்டங்களுக்கும்..(மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ.120 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலை, உயர் தொழில்நுட்பத்துடன் செவ்வனே செயல்பட ஏதுவாக தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு அமைப்பு ரூ.20 இலட்சம் செலவில் 2004–2005 ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறையில், திட்டப் பணிகளின் செயலாக்கத்தைத் தொடர்ந்து களப் பணி ஆய்வு மேற்கொள்ள, தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர், வேலூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை ஆகியோருக்கு தலா ஒரு கார்/சப்பு வீதம் 2004–2005 ஆம் நிதியாண்டில் வழங்க ரூ.20 இலட்சம் ஒதுக்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம், பல்வேறு நீர்வடிப் பகுதித் திட்டங்களை உயர் தொழில்நுட்பத்துடன் செயல்படுத்த வேண்டி, D50A15 என்ற பாரத் புல்டோசர்களுடன் பொருந்தக்கூடிய Multi Shank Ripper ரூ.16 இலட்சம் செலவிலும், D50A15 பாரத் புல்டோசர்களுடன் பொருந்தக்கூடிய Back Hoe Attachment ரூ.28 இலட்சம் செலவிலும் வாங்கப்படும்.

சென்னை, மதுரை, சேலம், திருவாரூர், வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் தட்பவெப்ப மண்டலங்களுக்குத் தேவையான கணினி உபகரணங்கள், சோதனைக் கருவிகள், நடப்பு நிதியாண்டில் ரூ.41 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு, வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்நீர் பாசன அமைப்புகள் குறித்து விவசாயிகள் பயனடையும் வகையில் செயல் விளக்கம் வழங்கப்படும்.

வேளாண் பொறியியல் துறையின் மூலம் சேலம் மாவட்டத்தில் ரூ.15 இலட்சம் செலவில் ஒரு புவியியல் தகவல் மையம் அமைத்து, அத்தகவல் மையங்களுக்குத் தேவையான கணினி மற்றும் மென்பொருட்கள் வாங்கப்பட்டு, நீர்வடிப் பகுதி மேம்பாடு கண்காணிக்கப்படும்.

ரூ.11.30 இலட்சம் செலவில் 2004–2005ஆம் ஆண்டில் உயரின விதைகளை ஆய்வு செய்திட கோயம்புத்தூர் விதைச் சான்று இயக்குநரகக் கண்ணாடி வீட்டின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். பயிற்சிப் பிரிவிற்கு டிஜிட்டல் காமிரா மற்றும் printing வசதி உபகருவிகள் வாங்கப்படும். கோயம்புத்தூர் விதைச் சான்று இயக்குநரகத்துடன்



இணைந்து மாநில விதைப் பரிசோதனை நிலையத்திற்கு B. TOXIM கண்டுபிடிக்க உபகரணங்கள் மற்றும் 20 KVA ஜெனரேட்டர் வாங்கப்படும். விதைச் சான்றுத் துறையின் பயிற்சிப் பிரிவிற்கு LCD படக் கருவி வாங்கப்படும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலம், வேளாண்மை மற்றும் தரிசு நில மேம்பாட்டிற்காக கழிவு நீரை உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு உகந்த முறையில் நிர்வகித்து மற்றும் நிலத்தடி நீர் பாதிக்கப்படாமல் தரிசு நிலங்களில் பசுமையை உண்டாக்கும் நோக்கத்திற்காக ரூ.6.5 இலட்சம் செலவிடப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலோரப் பகுதிகளில் விவசாயிகளின் பங்கேற்புடன் சீரிய தொழில்நுட்பம் மூலம் உற்பத்தியை அதிகரிக்கும் ஆராய்ச்சிக்காக ரூ.4.25 இலட்சம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலம் செலவிடப்படும்.

கிராமங்களில் கிடைக்கும் பண்ணைக் கழிவுகளையும், மனித வளத்தையும் சரியாகப் பயன்படுத்தி, வேளாண் தொழில்சார்ந்த வேலைவாய்ப்பை உருவாக்க காளான் வளர்ப்பு ஆராய்ச்சித் திட்டத்திற்காக ரூ.3.82 இலட்சம் செலவிடப்படும்.

இயற்கை முறையில் தக்காளி சாகுபடி செய்யவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கிய இலைச்சுருட்டு நோய் எதிர்ப்பு தன்மையுடைய இரண்டு வீரிய ஒட்டு தக்காளி இரகங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காகவும் ரூ.2.83 இலட்சம் தமிழ் நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலம் செலவிடப்படும்.

இன்சுவை நிலக்கடலை உலகச் சந்தையில் அதிக இலாபம் தரக்கூடியதாக இருக்கிறது. சரிவிகித இயற்கை மற்றும் செயற்கை உரங்கள் ஒழுங்காகவும், சீரான முறையிலும், இடுவதன் மூலம் உற்பத்தித் திறனை உயர்த்தி நிலக்கடலையில் நிலையான மகசூல் அடைவதன்மூலம் விவசாயிகளின் வருவாயைப் பெருக்க இயலும். இத்தகைய இன்சுவை நிலக்கடலையின் உற்பத்தித் திறனை உயர்த்த ஏதுவாக, ரூ.3.00 இலட்சம் செலவில் உழவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

உழவர்கள் எளிதில் வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்வி அறிவு பெற வேண்டி ரூ.4.00 இலட்சம் செலவில் கணினி வழிக் கல்வித் திட்டத்தைத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் அதன் துணைக் கல்லூரிகள் மேற்கொள்ளும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின்மூலம் தமிழகத்தின் நீர்த் தேவை மற்றும் பயிர் உற்பத்தியை நிலைப்படுத்துவதற்காக வறட்சி மற்றும் மானாவாரிப் பகுதிகளில் குறைந்த செலவு மற்றும் செலவில்லாப் பயிர் உற்பத்தி மற்றும் பின் அறுவடை பாரம்பரியத் தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து, பட்டியலிட்டு, மிகக் குறைந்த அளவு மழை பெறும் தமிழகத்தின் மேற்குப் பகுதியிலிருந்து சில கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பங்கேற்பு முறைகளின் மூலம் ரூ.2.25 இலட்சம் செலவில் பணிகள் நிறைவேற்றப்படும்.

பட்டு வளர்ச்சித் துறையின் மூலமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்று ஆணை வழங்கியதன் அடிப்படையிலே, உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.500/– வீதம் 1,000 ஏக்கருக்கு ரூ.5.00 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளுக்கு இரு சுழற்சியினப் புழுவளர்ப்புத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க 100 விவசாயிகளுக்கு ரூ.800/– வீதம் ரூ.0.80 இலட்சம் செலவிடப்படும்.

மல்பரி நடவு செய்து புழு வளர்ப்பு மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவிக்க ரூ.1.70 இலட்சம் செலவில் மாவட்ட அளவில் விவசாயிகள் கருத்தரங்குகள் நடத்தப்படும்

ஓசூர் அரசு பட்டு பயிற்சிப் பள்ளியின் செயல்பாட்டினை மேம்படுத்த ரூ.10.00 இலட்சம் செலவில் பயிற்சித் தளவாடங்கள் கொள்முதல் செய்யப்படும்.

துறையின் தகவல் மேலாண்மை முறை ரூ.5.00 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்படும்.

பிற்பகல் 1–35

தரமான தேனை மக்களுக்குத் தரும் நோக்கோடு காதி கிராஃப்ட் மூலம் விற்பனை செய்யப்படும் தேனை, கொள்முதல் செய்யும் இடத்திலேயே பரிசோதனை செய்ய நாகர்கோவில் மற்றும் ஜவ்வாது மலை ஆகிய இடங்களில் தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.2.00 இலட்சத்தில் இரு தேன் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் நிறுவப்படும்.



மாவட்டங்களில் தற்சமயம் பராமரிக்கப்படும் கணக்கு மற்றும் இதர விவரங்களை விரைவாகவும், தாமதமின்றியும் கணினி மூலம் பராமரித்திட 5 மாவட்ட அலுவலகங்களில் ரூ.3.75 இலட்சம் செலவில் 5 கணினிகள் நிறுவப்படும். வாரிய மைய அலுவலகத்தில் வேலைப் பளுவினை எளிமையாக்கவும், விரைந்து செயலாற்றவும், ரூ.1.25 இலட்சம் மதிப்பில் ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் நிறுவப்படும்.

சென்னை எழும்பூரிலுள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை இணைய "பாம்கோலா" மற்றும் "பாம்டா" உற்பத்திப் பிரிவினில் உற்பத்தி செய்யப்படும் "பாம்கோலா" மற்றும் "பாம்டா" குளிர்பான வகைகளை நவீன முறையில் சிறப்பாகத் தயாரிப்பதற்கு ரூ.4.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வாங்கப்படும். இது உற்பத்தியை அதிகரிக்கவும் நவீனப்படுத்தவும் வழிவகுக்கும்.

தருமபுரி மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 200 ஏழை பனைத் தொழில் கைவினைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.3.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 666 ஏழை பனைத்தொழில் கைவினைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.10.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

தமிழக அரசு பயிற்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்திட 2004–2005 ஆம் ஆண்டில் சில தெரிந்தெடுக்கப்பட்ட கலைகளான வெண்கல மணி செய்தல், பஞ்சலோகச் சிலை செய்தல், பித்தளை கலைப் பொருட்கள் செய்தல், தஞ்சைக் கலைத்தட்டு செய்தல், மாவுக்கல் சிற்பங்கள் செய்தல், சந்தன மரச்சிற்பங்கள் செய்தல், பிரம்பு அறைகலப் பொருட்கள் ஆகியவற்றில் ரூ.10.40 இலட்சம் செலவில் ஓராண்டு மற்றும் ஆறு மாத காலப் பயிற்சித் திட்டங்களைத் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் 135 நபர்கள் பயனடைவர்.

கைவினைஞர்கள் பாரம்பரியமான உற்பத்திக்குப் பயன்படுத்தி வரும் கருவிகளுக்குப் பதிலாக நவீனமயமான மற்றும் செம்மைப்படுத்தப்பட்ட கருவிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன்

மூலம் அவர்களது கடின வேலைப்பளு குறைந்து செயல்திறன் அதிகரிக்கும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழக அரசு தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாகத் திட்டமிட்டுள்ளது. இதற்காக 2004–2005 ஆம் ஆண்டில் நவீனமயமாக்கப்பட்ட கருவிகளை வாங்க தமிழக அரசு ரூ.3.00 இலட்சத்தை மானியமாக வழங்கும்.

புதுப்புது வடிவமைப்புகள், நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப பொருட்களை உற்பத்தி செய்தல், வடிவமைப்புத் தரத்தினை உயர்த்துதல் மற்றும் தொழில்நுட்ப உத்திகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின்மூலமாக நிறைவேற்றுவதற்காக தமிழக அரசு 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.7.40 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது

கைத்திறத் தொழில்கள் மேம்பாட்டிற்காக கீழ்க்கண்ட 5 தொகுப்பு அணுகுமுறைகளை கைத்திறத் தொழில்களில் செயலாக்கிட அரசு திட்டமிட்டுள்ளது:

1. பஞ்சலோகச் சிலைகள்
2. பித்தளை கலைப் பொருட்கள்
3. மரச்சிற்பங்கள்
4. கற்சிற்பங்கள் (கருங்கல்)
5. கற்சிற்பங்கள் (மாக்கல்)

இத்தொகுப்பு அணுகுமுறைகள் அமல்படுத்தப்படுவதால் அரசு நலத் திட்டங்கள் கைவினைஞர்களுக்கு நேரடியாகச் சென்றடைவது உறுதி செய்யப்படுகிறது. இதன்மூலம் கைவினைஞர்களின் துயரம் களைய 2004–2005 ஆம் ஆண்டில் கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ரூ.38.00 இலட்சம் நிதி உதவி அளித்து நலத் திட்டங்களின் பலன்கள் கைவினைஞர்களின் குடும்பங்களுக்குச் சென்றடைய சிறப்புற சேவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுதொழில் துறையின் சார்பாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிட ஆணை வழங்கியிருக்கின்றார்கள்:

சிறுதொழில் நிறுவனங்கள் உலகச் சந்தையில் பங்கு கொள்வதற்கு ஏதுவாக அயல்நாட்டில் நடத்தப்படும் தொழில் மற்றும் வர்த்தகப் பொருட்காட்சிகளின் அரங்கு வாடகையில் 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30,000 மாநில அரசு மானியமாக வழங்கும். இத்திட்டம்



தேசிய சிறுதொழில் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் இவ்வாண்டு அலகு ஒன்றுக்கு ரூ.30,000 வீதம் 30 அலகுகளுக்கு மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.9 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொறியியல் தொழில் அலகுகள் உள்நாட்டு மற்றும் உலகச் சந்தையில் நீடித்து நிலைத்து நிற்க தொழில்நுட்ப மேம்பாடு அடைய வேண்டும். இதற்குத் தேவையான இயந்திரங்களை நிறுவி இயக்குவதற்குத் தொழிலாளர்களுக்குப் போதிய தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க வேண்டும். நபர் ஒன்றுக்கு இப்பயிற்சிக்கான கட்டணத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.500/– அரசு மானியமாக வழங்கும். இவ்வாண்டு 500 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர். இத்திட்டத்திற்காக ரூ.2.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி குறித்த அனைத்துத் தகவல்களையும் வழங்க மாவட்ட ஏற்றுமதி வழிகாட்டி மையத்தில் உள்ள துறை அலுவலர்களுக்கு தரமான பயிற்சி அளிப்பது இன்றியமையாததாகும். இப்பயிற்சி தேசிய சிறுதொழில் விரிவாக்கப் பயிற்சி மையம், ஹைதராபாத் போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படும். இவ்வாண்டு 90 அலுவலர்களுக்கு இப்பயிற்சி அளிப்பதற்காக ரூ.9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–40

முதலீட்டாளர்களுக்கு சிறுதொழில் பற்றிய திட்ட விவரங்கள், அரசு சலுகைகள் மற்றும் மானியங்கள் பற்றிய தகவல்களைத் தெரிவித்துத் தொழில் துவங்க ஊக்குவிப்பது அவசியம். அத்தகைய முதலீட்டாளர்கள் பற்றிய விவரங்கள் வங்கிகள் உதவியுடன் சேகரிக்கப்படும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 500 தொழில் முனைவோர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில்முனைவோர் பயிற்சி நிலையங்களில் தீவிர பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு நபருக்கான பயிற்சிக் கட்டணத்தில் 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2,500/– அரசு மானியம் வழங்கும். இவ்வாண்டு இதற்காக அரசின் பங்காக ரூ.12.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட தொழில் மையங்களில் இயங்கிவரும் ஏற்றுமதி வழிகாட்டி மையம் திறம்பட இயங்கி தொழில் முனைவோர்களுக்குத் தேவையான ஏற்றுமதி குறித்த அனைத்து விவரங்களையும் அளிக்க இணைய

தொடர்புடன் கூடிய கணினி வசதி அவசியமாகும். முதற்கட்டமாக இவ்வாண்டு 15 மாவட்டங்களில் இணைய தொடர்புடன் கூடிய கணினி வசதி ஏற்படுத்தப்படும். இதற்கென இவ்வாண்டு ரூ.11.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலையின்றி இருக்கும் இளைய சமுதாயத்தினருக்கு வேலை வாய்ப்பினை வழங்கிட கிருட்டிணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம்—வேப்பாலம்பட்டி கிராமம் மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம்—கல்லூர் கிராமம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஒரு கயிறு தயாரிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படும். ஒவ்வொரு சங்கத்திற்கும் அரசு பங்கு மூலதனமாக ரூ.1 இலட்சம் வழங்கப்படும். இதற்கென இவ்வாண்டு ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆண்டுகளாக இயங்கிவரும் மதுரை மண்டல பரிசோதனை பகுப்பாய்வகம், தென் மாவட்டங்களில் பொதுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் இரும்பு மற்றும் இரும்பு அல்லாத மாதிரிப் பொருட்களைப் பரிசோதனை செய்து வருகிறது. இவ்வாய்வகத்திலுள்ள பழைய மற்றும் பழுதடைந்த கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகளை வாங்கி நிறுவுவதற்கு இவ்வாண்டு ரூ.15.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற மகளிர்க்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை வழங்கி கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள தென்னை நார் மற்றும் கயிறு சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்ய தொழிலாளர்களுக்கு மேம்பட்ட பயிற்சி அளிப்பதுடன், கருவிகள் வாங்குவதற்கு உதவி அளிப்பது அவசியமாகிறது. இதற்காகக் கயிறு வாரியம் ஒரு பெரும் செயல் திட்டம் தயாரித்துள்ளது. தமிழ்நாட்டில் கயிறு வாரியத்துடன் மாநில அரசு இணைந்து இத்திட்டத்தினை இவ்வாண்டு முதல் செயல்படுத்தும். இத்திட்டத்தின்கீழ் 200 நபர்களுக்கு மேம்பட்ட பயிற்சி அளிப்பதற்காக மாநில அரசின் பங்கு ரூ.5.00 இலட்சமும், மோட்டார் பொருத்தப்பட்ட பாரம்பரிய ராட்டைகள் வாங்குவதற்கு ரூ.13.40 இலட்சமும், மதிப்பு கூட்டப்பட்ட கயிறு சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் 30 கயிறு சிறுதொழில் நிறுவனங்களுக்கு மாநில அரசு விளிம்புத் தொகையாக ரூ.20 இலட்சமும், தென்னங்கயிற்றால் நெய்யப்படும் கயிறு வலைகளைப் பயன்படுத்தும் முறை குறித்து செயல்முறை விளக்கம் செய்து காட்ட ரூ.2 இலட்சமும், மதிப்பு



கூட்டப்பட்ட கயிற்றுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் உற்பத்திக் கூடங்களுக்கு நேரில் சென்று பல்வேறு உத்திகளைக் கண்டறிவதற்கான விழிப்புணர்ச்சிப் பயணத்திற்காக மாநில அரசின் பங்காக ரூ.1 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுதொழில் துறை செயல்படுத்தும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மகளிர் தொழில்முனைவோர் திட்டம் போன்ற திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதற்கு போதிய அடிப்படை வசதி செய்து கொடுப்பது அவசியமாகிறது. அதனடிப்படையில் ஊரகப் பகுதிகளுக்குச் சென்றுவர ஏதுவாக 16 மாவட்டத் தொழில் மையங்களுக்கு வாகனங்கள் வாங்குவதற்காக இவ்வாண்டு ரூ.61.99 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு சிறு தேயிலை விவசாயிகளுக்கென விலை நிலை நிறுத்துதல் நிதித் திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் சலுகைகள் பெறுவதற்கு ஒவ்வொரு சிறு தேயிலை பயிரிடுவோர் ரூ.500/– ஆரம்ப சந்தா செலுத்த வேண்டும். தொடர்ந்து தேயிலை விலை வீழ்ச்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சிறு தேயிலை விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பங்கேற்க செலுத்த வேண்டிய தங்களுடைய ஆரம்ப சந்தாத் தொகையான ரூ.500/–ஐச் செலுத்த இயலவில்லை. எனவே சிறு தேயிலை விவசாயிகள் சார்பாக மாநில அரசு ஆரம்ப சந்தாத் தொகையை வழங்க முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்படி 23,000 சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெறுவர். இதற்காக இந்த ஆண்டு ரூ.115 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய துணைக் கண்டத்திலேயே 5 மாநிலங்களிலே தேயிலை உற்பத்தி செய்தாலும்கூட அந்த மாநிலங்களிலே எல்லாம் மாநில அரசுகள் அந்தச் சிறு தேயிலை விவசாயிகளுக்கு வழங்காத இந்த பங்குத் தொகையை இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் வழங்கி இருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட 'சிட்கோவின்' தொழிற்பேட்டைகளிலுள்ள கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதாலும். சரியான பராமரிப்பு இல்லாததாலும் இவற்றை உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்துவது அவசியமாகிறது.

தற்போதுள்ள தொழில் அளவுகள் தொடர்ந்து செயல்படவும், கூடுதல் தொழில் அளவுகள் உருவாகவும், ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மைய அரசு வழங்கும் மானியத்திற்கு இணையாக மாநில அரசு மானியம் வழங்க முடிவு எடுத்துள்ளது. இத்திட்டத்தில் மாநில அரசு பங்கேற்று மைய அரசுக்கு இணையாகச் சமபங்கு அளிப்பதில் இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகின்றது. இவ்வாண்டு இத்திட்டத்திற்காக மட்டும் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலே (குறுக்கீடு) இல்லை ஒன்றும் இல்லை. முடித்துவிடுகிறேன் ஒரே நிமிடத்திலே. எதுவுமே சொல்லவில்லை.

*பிற்பகல் 1–45*

இன்றைக்கு வேளாண்மைத் துறையாக இருந்தாலும், சிறுதொழில் துறையாக இருந்தாலும், கதர் கிராமத் தொழில் துறையாக இருந்தாலும், இந்திய துணைக் கண்டத்திற்கே ஒரு முன்னோடி மாநிலமாக இந்தத் துறைகளை மேம்படுத்துவதற்காக நல்ல ஆலோசனைகளையும், ஆணைகளையும் வழங்கி வருகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொண்டு,

வீர வரலாற்றின் வெற்றித் தலைவியே!

புதிய சரித்திரத்தின் எழிச்சிமிகு தலைவியே!

புதுயுகம் படைக்கும் புரட்சித் தலைவியே!

நலிந்தோர்க்கு நாளும் நன்மை செய்யும் நான்காம் தமிழே!

கடைகோடி தொண்டனையும் கரையேற்றும் கலங்கரை விளக்கே!

கைநாட்டு மனிதனையும் கைதூக்கிவிடும் மனிதாபிமானியே!

கரைந்தோடிய கஜானாவை கரையாமல் காத்து நிற்கும் கற்பகத் தாயே!

தூய தொண்டனுக்கு தாயாய், துயர்மிகு ஏழைக்குத் துயர் துடைக்கும் அன்னையாய்,

தமிழக மக்களுக்கு ஏற்றமிகு திட்டம் வழங்கும் நல் அம்மாவாய், எங்களுக்கு மாதாவாய், பிதாவாய், குருவாய், தெய்வமாய் விளங்கும்



எங்கள் அன்னையின் பாதையில் வேளாண் மற்றும் ஊரகத் தொழில் துறை, கதர் மற்றும் கிராம தொழில் துறையில் வெற்றியைக் காணுவோம், நாளெல்லாம் அவர்தம் கொள்கையில் தர்மத்தைக் காணுவோம் என்கின்ற நிறைவோடு இங்கே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்த வெட்டுத் தீர்மானங்களுக்குப் போதுமான அளவிற்கு நாங்கள் விளக்கங்களை அளித்திருக்கின்றோம் என்பதை நான் சுட்டிக்காட்டி, அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, நேரமின்மை காரணமாக, அவசர அவசரமாக எதைப் பேசுவது எதை விடுவது என்ற ஒரு சூழ்நிலையிலே 'மாண்புமிகு பத்திரிகைத் துறை நண்பர்கள்' என்று குறிப்பிட்டேன். அதைத் தயவுசெய்து திருத்திக்கொண்டு 'மதிப்பிற்குரிய பத்திரிகைத் துறை அன்பர்கள்' எனத் திருத்தம் செய்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வேண்டுகோளைப் பணிவோடு உரித்தாக்கிக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், (குறுக்கீடு) அதுதான் சொன்னேன். இந்த நல்வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும், வாழ்த்துகளையும் உரித்தாக்கிக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரைக்குத் திரையிட்டு விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்போற்றும் தமிழ் விளக்கே! பாரதத்தின் புகழ் விளக்கே! திராவிடத்தின் திருவிளக்கே! தமிழகத்தின் ஒளி விளக்கே! நீங்கள் ஒளி, ஆகையால்தான் இருட்டு எதிரே வர முடியாமல் எங்கோ ஒளிந்திருக்கிறது. எதிரே வந்தால் எங்கே காணாமல் போய்விடுவோமோ என்ற அச்சத்தில் காணாமல் போன காரிருள் மனிதர்கள் ஜனநாயகத்தைக் காணவில்லையென்று சத்தம் போடுகிறார்கள். சபைக்கு வாருங்கள், சபைக்குள் வாருங்கள். சபைக்கு வாருங்கள், சபைக்குள் வாருங்கள் ஜனநாயகம் தெரியும் என்று வெளிச்ச வார்த்தைகளால் அறிவுரை வழங்கும் அறிவு ஜோதியே! அன்பின் பிறப்பிடமே! எங்களின் தாயே! உங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிக்க நாளும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். அதற்கேற்றாற்போல் தமிழக தொழில் துறை, உலக அளவிலும் இந்திய பொருளாதாரத்திலும் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் முதலீட்டினை அதிகரிக்கவும், போதிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடவும் அயராது செயல்பட்டு வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், பார் போற்றும் பன்னாட்டுத் தரம் வாய்ந்த டைசல் பையோ பார்க் என்னும் உயிரி பூங்காவை ரூ.62.80 கோடி திட்ட மதிப்பீட்டில் விரைவில் செயல்படுத்த உள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மென்பொருள் வளர்ச்சி முன்னேற்றத்தினைத் தமிழகத்தில் விரிவுபடுத்திட பழைய மகாபலிபுரம் சாலையில் 6 தடங்களுடன்கூடிய தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதை அமைப்பதற்கான திட்டச் செயலாக்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், விஷ்ணு பேப்ரிக்ஸ் லிமிடெட் என்னும் நிறுவனத்துடன் இணைந்து திருவில்லிப்புத்தூரில் 100 சதவிகித ஏற்றுமதி நோக்குடன், பதினாறு கோடி ரூபாய் திட்ட முதலீட்டில் கண்ணாடி இழைகளாலான துணிகள் மற்றும் ஜியோ டெக்ஸ்டைல்ஸ் தயாரிப்பதற்கான ஆலையின் கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கைத்தறித் தொழிலைக் கண்போல் காத்து, சரித்திரம் படைத்த, தாய்த் தொழில் என்று போற்றிப் புகழ்ந்து பொன்னென வளர்த்து, கைத்தறி நெசவாளர் கவலையைத் தீர்க்கும் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆடை மற்றும் கைத்தறித் துணி ஏற்றுமதியாளர் கூட்டமைப்புடன் ஆடை தயாரிக்கும் நிறுவனங்களுக்கான தொழிற் பூங்காவை முப்பது கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். பதினேழு கோடி ரூபாய் மானியம் கோரி இத்திட்டத்திற்கான செயலாக்க அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசும் இத்திட்டத்திற்குக் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

முதல் முயற்சியாக ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றும் திட்டத்தை, காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் 69 ஹெக்டேர் நிலப்பரப்பில் தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அன்னையின் ஆணையைச் சிரமேற்கொண்டு கடந்த மூன்று வருடங்களாக மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கை காரணமாக இலாபகரமாக வெற்றிப் பாதையில் வீறுநடை போடுகிறது; சுமார் 18,400 பேர்களுக்கு மேல் வேலைவாய்ப்பும், 300 கோடி ரூபாய்க்கு மேல் தொழில் தொடங்கவும் கடனுதவி செய்துள்ளது.

பிற்பகல் 1–50

சொல் புதிது, செயல் புதிது என நாளும் புதுமையைப் புகுத்தும் நம் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் அம்மாவினுடைய வழிகாட்டுதலின்பேரில் தமிழ்நாடு காகித நிறுவனம், தமிழ்நாடு கனிம வள நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாடு மேக்னசைட் தொழிற்சாலை, தமிழ்நாடு கிராஃபைட் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகள் அம்மா அவர்களின் ஆசியோடும், ஆணையோடும், வழிகாட்டுதலின்பேரில் தொடர்ந்து இலாபத்தில் வந்துகொண்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்காவைப் பொறுத்தமட்டிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 9–10–2001–க்குப் பிறகு ATMAC நிறுவனத்திற்கு 1,534 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் 560 ஏக்கர் நிலம் கொடுப்பதற்கு வருவாய்த் துறையிலே கோப்புகள் நிலுவையில் இருக்கின்றன.

15–11–2001 அன்று INFAC குழு நமது அரசு அலுவலர்களுடன் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்தி, 680 கோடி ரூபாய் முதலீடு செய்யப்போவதாக அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கின்றார்கள். அதற்காக தாமிரபரணி ஆற்றிலிருந்து 6.77 Million Gallon தண்ணீர் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள்.

சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு, நாங்குநேரியில் வருகின்ற சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் விரிவான நிதிச் சலுகைகளைப் பெறுகின்ற வகையில், மீண்டும் ஒரு விரிவான சிறப்புப் பொருளாதாரக் கொள்கையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மே மாதம் 2003 ஆம் தேதி வெளியிட்டிருக்கின்றார்கள். இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குப் போக்குவரத்து வசதிக்காக திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி வரை செல்வதற்கு நான்கு

வழி புறவழிச்சாலையை அமைப்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு எழுதி, அதன் அனுமதி பெற்று, இப்பொழுது அடிக்கல்லும் நாட்டப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் ATMAC தொழில் முனைவோர்கள் செப்டம்பர் 11, 2001 அன்று அமெரிக்காவில் நடந்த சம்பவங்களையும், அதற்குப் பிறகு அங்குள்ள சட்டதிட்டங்களின் அடிப்படையிலும், எங்களுக்குச் சற்று காலதாமதம் ஆகிவிட்டது என்று காரணங்களைச் சொன்னார்கள். அவர்கள் நிதி முடிவுகளை விரைவாக மேற்கொள்வதற்கு 29–11–2002, 18–12–2002, 14–1–2003, 25–3–2003, 11–4–2003, 19–5–2003 மற்றும் 22–5–2003 ஆகிய தேதிகளில் e-mail மூலம் அவர்களுக்கு வலியுறுத்தப்பட்டது. அதன்பிறகு, 10–7–2003–ல் நேரில் அழைத்தும் அவர்கள் வரவில்லை. அதற்குண்டான காரணங்களையும் அவர்கள் தெரிவிக்கவில்லை. அவர்தரப்பில் எந்த முன்னேற்றமும் ஏற்படாத சூழ்நிலையில் அரசு 2004 ஜனவரி மாதம் ATMAC நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்ட நிலத்தை ஏன் திரும்பப் பெறக்கூடாது என்கின்ற காரண விளக்கம் கேட்ட பிறகு, அவர்கள் அதற்குப் பிறகு நாங்கள் இன்னும் நிதி முடிவை எட்டவில்லை, எங்களுக்கு இன்னும் 6 மாத காலம் அவகாசம் வேண்டுமென்று அம்மாவிடம் கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அவர்களுக்கு 18–9–2004 வரைக்கும் 6 மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டது. இதற்கிடையில், 8–7–2004 அன்று அமெரிக்க ATMAC தொழில் முனைவோரும், அமெரிக்க ATMAC நிறுவனத்தின் இயக்குநருமான சார்லஸ் V. லூாக்ஸ் என்னை நேரில் சந்தித்து நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்காவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு அம்மாவும் கொடுத்துள்ள ஒத்துழைப்பை நினைத்து மகிழ்ச்சி கொண்டு, மேலும் இத்திட்டப் பணிகளுக்கு விரைவில் விரிவான செயல் திட்டங்கள் அனுப்புவதாக வாக்களித்துச் சென்றிருக்கிறார்கள். அவர்களுடைய பதிலை அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் தென் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் இல்லை என்று சொன்னார்கள். இந்த மாதிரி ATMAC நிறுவனம் போன்ற தொழிற்பேட்டைகள், தொழில்நுட்பப் பூங்காக்கள் வருகின்றபோது இன்னும் சிறப்பான முறையில் அங்கே தொழிற்சாலைகள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களால் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாலே Titanium di–oxide என்ற மிகப் பெரிய தொழிற்சாலையை அங்கே நிறுவுவதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டு



இப்பொழுது feasibility study நடந்துகொண்டிருக்கிறது. இதன்மூலம் கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேருக்கு மேலாக வேலைவாய்ப்பு தருகின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் தென் மாவட்டத்தில் எந்தத் தொழிற்சாலை வந்தாலும் அது உடனடியாக, சென்னைக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதோ, அதே அளவிற்கு திருநெல்வேலிக்கும், மதுரைக்கும் வருவதற்கு – நானும் தென் மாவட்டத்தைச் சார்ந்தவன் என்கின்ற உணர்வில் அதை நான் கண்டிப்பாகச் செய்வதற்கு – முயற்சியை மேற்கொள்வேன் என்பதை நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, HACA Committee–ஐப் பற்றிச் சொன்னார்கள். HACA Committee என்பது வீட்டுவசதித் துறையினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு Committee. அதற்கு 24–3–2003 அன்று மத்திய உதவி பெறும் 14 தாலுகாக்களை ஏற்கெனவே அறிவித்திருந்தது. இதற்குப் பின்பு கிராமத்தில், HACA Committee-யுடன் முன் அனுமதி பெற்று, குவாரிகளை நீங்கள் செய்துகொள்ளலாம். HACA Committee–யில் வீட்டுவசதித் துறை, தொழில் துறை, பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அதற்கு நீங்கள் முன்னனுமதி பெற்றுத் தாராளமாகக் கல்குவாரிகளைச் செய்து, நிறைய கட்டடங்களை உங்கள் தொகுதியிலே கட்டுங்கள் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, (முடித்துவிடலாமா? அறிவிப்புக் கிடையாது) இன்னொரு செய்தியையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-55

சட்டசபைக்கு வராமல் வெளியிலே தினந்தோறும் ஒரு நாடகத்தை அரங்கேற்றி வருபவர்கள் எதிரிக்கட்சிகள்; ஏனென்றால், இங்கே இருப்பவர்கள் எதிர்க்கட்சிகள். அவர்கள் எதிரிக் கட்சிகள். கவர்னரிடம் மனு கொடுக்கப் போயிருக்கிறார்கள். எதற்குத் தெரியுமா? பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே ஆதரிப்பதைச் செயல்படுத்தக்கூடாது, கையெழுத்துப் போடக்கூடாது என்று கவர்னருக்கு மனு கொடுப்பதற்காக இன்றைக்குச் சென்றிருக்கிறார்கள். மத்தியிலே ஆட்சிக்கு வந்தவுடன் எத்தகைய ஆணவப் போக்குடன் இவர்கள் செயல்படுகிறார்கள் என்பதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இப்போது எதிரிக்கட்சியாக இருக்கின்றவர்கள், முன்னாள்

முதலமைச்சராக இருந்தவர்கள், அவர்கள் பழைய காலத்திலே—இங்கே இருக்கின்ற மூத்த உறுப்பினர்களுக்குத் தெரியும்—ஆட்டுக்கு தாடி, நாட்டுக்கு கவர்னர் பதவி என்று கேலி செய்தார்கள் கவர்னரைப் பார்த்து. (குறுக்கீடு) ஆட்டுக்கு தாடி தேவையில்லை, நாட்டுக்கு கவர்னர் பதவி தேவையில்லை என்று சொன்னவர்கள், இப்போது அதே கவர்னரிடம் சென்று மனு கொடுக்கப் போயிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாநில சுயாட்சி தேவை. மாநிலங்களின் அதிகாரத்தில் மத்திய அரசு குறுக்கிடக்கூடாது என்று கூறி வந்தவர்கள், இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சிக்கு எந்த வகையிலெல்லாம் இடையூறு செய்யலாம் என்கிற நோக்கோடு இன்றைக்கு கவர்னர் மாளிகைக்குச் சென்றிருக்கிறார்கள்; சாலையோரம் கூடுகிறார்கள்; வேலையற்றவர்கள் கூடும் சாலையோரம்; இவர்களுக்கு 2006-லும் இதே சாலையோரம்தான் கிடைக்கும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதே போகிறார்களோ, என்னவோ தெரியவில்லை.

சட்டசபையில் ஒரே நேரத்தில் சபாநாயகர் நாற்காலிக்குப் பக்கத்தில் இன்னொருவரை உட்கார வைத்து ஜனநாயகப் படுகொலை செய்தவர்கள் இப்போது ஜனநாயகத்தைப் பற்றி உபதேசம் செய்கின்றார்கள். முதலமைச்சராக இருந்த கருணாநிதி மீது உரிமைப் பிரச்சினை எழுப்பியபோது, புரட்சித் தலைவி மீது இதே சட்டமன்றத்தில் தாக்குதலை நடத்தியவர்கள் இன்றைக்கு ஜனநாயகத்தைப் பற்றி உபதேசம் செய்கின்றார்கள். கவர்னரிடம் இன்றைக்கு மனு கொடுக்கப் போயிருக்கிறார்கள். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் பேசும்போது, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழுமையாகக் கேட்டு அவருக்கு சிரித்தபடியே எழுந்து நின்று பதில் சொல்கின்றார்கள். அதேபோன்று துணைத் தலைவர் துரைமுருகன் அவர்கள் பேசும்போதும் அம்மா அவர்கள் அமர்ந்தபடியே இருந்து, எழுந்து நின்று பதில் சொல்கின்றார்கள். இங்கே ஜனநாயகம் இருக்கிறதா? அவர்களுடைய ஆட்சியில் ஜனநாயகம் இருந்ததா? இல்லை. மத்தியிலே இன்றைக்கு அவர்கள் ஜனநாயகப்படி நடந்து கொண்டிருக்கிறார்களா என்பதை நாட்டு மக்கள்தான் கேட்க வேண்டுமென்று சொல்லி,

"மண்டும் சுயதொழில்கள் கோடி வளர்ப்போம்,
வரும் மக்கள்தொகைக்கு நல்ல வேலை கொடுப்போம்,
அண்டி வருபவருக்கும் சோறு படைப்போம்,
இந்த அகிலத்து நாடுகளுக்கு முன்னிலை வகிப்போம்"



என்று கூறி, தொழில் துறை புரட்சித் துறையாக மாறியிருக்கிறது என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளச் சொல்லிக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். தொழில் துறை அமைச்சர் வழியிலேயே போகலாம் என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்திற்கு ஒரு தலைவர் இருப்பார், விவேகத்திற்கு ஒரு தலைவர் இருப்பார், சத்தியத்திற்கு ஒரு தலைவர் இருப்பார், சரித்திரம் படைக்க ஒரு தலைவர் இருப்பார், தர்மத்திற்கு ஒரு தலைவர் இருப்பார், அன்புக்கு ஒரு தலைவர் இருப்பார், பண்புக்கு ஒரு தலைவர் இருப்பார், அறிவிற்கு ஒரு தலைவர் இருப்பார், ஆற்றலுக்கு ஒரு தலைவர் இருப்பார். இவை அத்தனைக்கும் சேர்த்து ஒரு தலைவர் இருப்பாரா? அப்படி ஒரு தலைவர் இருக்கிறாரா? ஆம். அப்படி ஒரு தலைவி இருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) அவரே இதய தெய்வம் புரட்சித் தலைவி. அத்தனை பண்புகளுக்கும் அவரே தலைவி. அவரே நம் தலைவி. தாய் தராத சிறப்பை, தந்தை தராத தகுதியை ஒரு தலைவி தருவார் என்று, யாரை, எந்தச் சிங்கத்தை, எந்தத் தங்கத்தை இந்த உலகம் போற்றுகிறதோ அந்தப் புண்ணியத் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னடியில் புகழ் மலர் தூவி என் உரையைச் சுருக்கமாகவே தொடங்கி சுருக்கமாகவே முடிக்கிறேன்.

*பிற்பகல் 2-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியிலே செய்திகள் சொல்கின்றபொழுது ஒன்றைப் பார்த்திருப்போம். முதலிலே தலைப்புச் செய்தி என்று சொல்வார்கள். பிறகு, விரிவான செய்தி என்று சொல்வார்கள். மீண்டும் தலைப்புச் செய்தி என்று சொல்வார்கள். நான் அந்த அளவிற்குத் தலைப்புச் செய்திகளோடு விரிவான செய்திகள்

நிறையச் சொல்வதற்கு இருந்தாலும்கூட, நேரத்தின் அருமை கருதித் தலைப்புச் செய்திகளை மட்டுமே சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்ற நிலையைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்தத் துறை எப்படியெல்லாம் சீரழிக்கப்பட்டது என்பதையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏற்பட்ட ஒட்டுமொத்த நட்டத்தையும் நினைவுபடுத்திவிட்டு, அதற்குப் பின்பு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே போக்குவரத்துத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சிகளைப் பற்றி, முன்னேற்றத்தைப் பற்றிச் சொன்னால், சற்றுப் பொருத்தமாக இருக்கும். இந்தத் துறையைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அந்த வகையிலே நாம் பார்க்கப் போனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991–லே முதல் முறையாக ஆட்சிக்கு வருகின்றபோது, அப்போது இந்தத் துறைக்கிருந்த நட்டம் 164.13 கோடி ரூபாய். அதற்குப் பின்பு, 1991–லிருந்து 1996 வரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே, அந்த 5 ஆண்டுகாலத்திலே, அவர்களுடைய ஆட்சியிலே, குறைந்த அளவிலே நட்டம் ஏற்பட்டு அந்த வருடங்களிலே, 5 ஆண்டுகாலத்திலும் 368.85 கோடி ரூபாய்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, கடந்த ஆட்சிக் காலத்திலே, இந்தத் துறை நட்டத்தைச் சந்தித்தது. ஆனால் அதற்குப் பின்பு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1996 முதல் 2001 வரை கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஊதாரித்தனமான ஆட்சியின் காரணமாக, ஊழல் நிறைந்த ஆட்சியின் காரணமாக, தொலைநோக்குப் பார்வை இல்லாத ஆட்சியின் காரணமாக, தீர்க்கதரிசனம் இல்லாத ஆட்சியின் காரணமாக, திட்டமிடுவதிலே திறமை இல்லாததன் காரணமாக, அன்றைக்கு அந்த ஆட்சியிலே ஏற்பட்டிருந்த நட்டம் எவ்வளவு தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, கடந்த 5 ஆண்டுகாலத்திலே மட்டும் 1,498.21 கோடி ரூபாய் அந்த ஆட்சியிலே திரண்ட நட்டம். ஏறத்தாழ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆண்டுக்கு சராசரியாக 300 கோடி ரூபாய் நட்டம் என்ற அளவிலே அந்தத் துறையை நிர்வகித்து வந்தவர்கள்தான் அவர்கள். அதற்குப் பின்பு, மாண்புமிகு அம்மா அவர்கள் இப்பொழுது இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்பு, ஓராண்டு காலத்திலே புரட்சித்



தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி, ஆலோசனையின்படி, அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, இந்தத் துறை மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, சீரமைப்பு நடவடிக்கைகளின் காரணமாக, திறமையான நிர்வாகத்தின் காரணமாக, வெளிப்படையான கொள்முதல் கொள்கையின் காரணமாக; புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்த நட்டத்தைப் படிப்படியாகக் குறைத்து, முதலாண்டில் 98.86 கோடி ரூபாய் என்ற அளவிற்கு மட்டும் நட்டத்தைச் சந்தித்தது. 2001–2002 ஆம் ஆண்டிலே 98.86 கோடி ரூபாய் நட்டம். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு முதலாண்டிலே ஏற்பட்ட நட்டம். அடுத்தபடியாக இரண்டாவது ஆண்டிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே, அவர்களுடைய அறிவுரையின் பேரில், மேலும் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக, போக்குவரத்துத் துறைக்கு இரண்டாவதாண்டு நட்டம் ஏற்பட்டது வெறும் 4.21 கோடி ரூபாய்.

ஆக, அதற்குப் பின்பாக, இப்பொழுது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது அம்மா அவர்களுடைய 3 ஆண்டு ஆட்சிக்காலத்திலே, கடந்த 18 ஆண்டுகளுக்குப் பின்பாக, முதல் முறையாக, நட்டம் என்ற வார்த்தையை நீக்கி, இலாபம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வார்த்தை போக்குவரத்துக் கழகங்களிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு முழு முதற் காரணம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அந்த அளவிலே இன்றைக்கு 3–வது ஆண்டு, இப்பொழுது, இந்த ஆண்டிலே, நடப்பாண்டிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்கு போக்குவரத்துத் துறைக்கு நட்டம் முழுவதுமாகத் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இலாபம் வேண்டுமானால் குறைவாக இருக்கலாமே தவிர, இலாபத்தை நோக்கி நடைபோடத் தொடங்கியிருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக, இந்த ஆண்டிலே போக்குவரத்துத் துறையில் ஒட்டுமொத்தமாக 43 இலட்சம் ரூபாய் இப்போது இலாபத்தை ஈட்டியிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இது ஏதோ இலாபம் ரூ.43 இலட்சம்தானே என்று நீங்கள் நினைக்கக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே ஏற்பட்ட நட்டத்தை

நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடும் பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன். அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே ஏற்பட்ட அந்த நட்டத்தை ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லியிருந்தாலும்கூட, உங்களுக்கு மீண்டும் நினைவூட்டியிருக்கின்றேன். அப்போதுதான் இந்தச் சாதனையை, புரட்சித் தலைவி அம்மாவினுடைய சாதனையை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1,198.21 கோடி ரூபாய் ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் 5 ஆண்டு காலத்திலே, நான் சொன்னது போல, சராசரியாக ஒரு ஆண்டிற்கு 300 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதே கணக்கை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போல நாங்களும் பொறுப்பில்லாமல் ஏதோ ஆட்சியை நடத்தியிருந்தால் இப்பொழுது 3 ஆண்டு காலத்திலும் 900 கோடி ரூபாய் நஷ்டத்தை நாம் சந்தித்திருக்க வேண்டும். இன்றைக்கு 900 கோடி ரூபாய் நஷ்டம் வராமல் காப்பாற்றி, 43 இலட்சம் ரூபாய் இலாபத்தை இப்போது எட்டியிருக்கிறது என்று சொன்னால் இதற்கு முழு முதல் காரணம் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மாவினுடைய திறமையான ஆட்சி; தொலைநோக்குப் பார்வை, திட்டமிடுதல் போன்ற அம்மாவினுடைய திறமையான ஆட்சிக்கு ஒரு சான்று வேண்டும் என்று சொன்னால், போக்குவரத்துத் துறையிலே இதைச் சான்றாக வைத்துக்கொள்ள முடியும்.

பிற்பகல் 2–05

அதேபோல இதற்கு முன்பு 1985–86 ஆம் ஆண்டிலே புரட்சித் தலைவர் காலத்திலே 1 கோடியே 41 இலட்சம் ரூபாய் இலாபம் வந்தது. அதற்குப் பின்பாக 18 ஆண்டுகளுக்குப் பின்பு இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சாதனையைச் சாதித்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல, மற்றொன்றையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சாதனையை எட்டிப் பிடித்திருக்கிறார்கள் என்ற நிலையில், இதற்கிடையே இந்தத் துறை எடுத்திருக்கிற நடவடிக்கைகள் பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இதற்கு முன்பாக மற்றொன்றையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே, தமிழகத்திலேதான் பேருந்துக் கட்டணம் இன்றைக்கும் மிகக் குறைவாக (மேசையைத் தட்டும் ஒலி) வாங்கிக்



கொண்டிருப்பது, மிகக் குறைவாக இருப்பது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலேதான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு ஒப்பீட்டை வேண்டுமானால் இந்த நேரத்திலே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற மற்ற மாநிலங்களில்—குறிப்பாக நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இல்லை. அவர்கள் இருந்தால் அவர்களுக்கு இது நல்ல செய்தியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் ஆளுகின்ற மாநிலத்திலேகூட, மேற்கு வங்காளத்திலேகூட 1 கிலோ மீட்டருக்கு 39 பைசா கட்டணமாக வசூலிக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற இந்தப் புண்ணிய புனித பூமியிலே, தமிழ்நாட்டிலே, 28 பைசாதான் இன்றைக்கும் ஒரு கிலோ மீட்டருக்கு; 28 பைசாதான் (மேசையைத் தட்டும் ஒலி) நாம் கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால்—ஒவ்வொரு மாநிலமாகச் சொல்கிறேன்—கேரளாவிலே 35 பைசா ஒரு கிலோமீட்டருக்கு; ஆந்திரப் பிரதேசத்திலே 35 பைசா; கர்நாடகாவிலே 28.05 பைசா; மேற்கு வங்காளத்தில் 39 பைசா; மகாராஷ்டிரத்தில் 41.83 பைசா; மத்திய பிரதேசத்தில் 40 பைசா; பஞ்சாபில் 39 பைசா; உத்தரபிரதேசத்தில் 38.05 பைசா; இராஜஸ்தானில் 32 பைசா.

இந்தியாவிலேயே இன்றைக்கும் குறைவாக பஸ் கட்டணம் வாங்கிக் கொண்டிருப்பது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலேதான் என்பதைத் தெரிவித்து, இவ்வளவு குறைவான கட்டணத்திலேயும் இவ்வளவு பெரிய சாதனையை எட்டி இருக்கிறோம் என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கும் மேலாக இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையூறாக, ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு, நாட்டினுடைய வளர்ச்சிக்கு இடையூறாக, போக்குவரத்துத் துறைக்குப் பெரும் இடையூறாக இருப்பது, இப்பொழுது இருக்கின்ற மத்திய அரசு. விழித்தெழுந்து நாளிதழைப் பார்த்தால் தினந்தோறும் முதலிலே டீசல் விலை உயர்வு, பெட்ரோல் விலை உயர்வு; அதுவும் சொல்ல மாட்டார்கள்; பகலிலேயிருந்து இது அமலுக்கு வருகிறது என்று சொல்ல மாட்டார்கள். இன்று நள்ளிரவு 12 மணி முதல் இது

அமலுக்கு வரும் என்று ஏதோ நாட்டைப் பிடித்தது போல திடீர் திடீரென்று தினந்தோறும் ஒரு அறிவிப்பு விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டணத்தைச் சீரமைத்ததற்குப் பின்பு, தமிழகத்திலே இந்த இரண்டரை ஆண்டு காலத்திலே மத்திய அரசு ஒரு முறை 2 முறை அல்ல 12 முறை டீசல், பெட்ரோல் விலையை ஏற்றியிருக்கிறார்கள். அந்த 12 முறையிலும் ஏறத்தாழ ரூ.6.42 காசு ஏற்றியிருக்கிறார்கள். இப்பொழுது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே கட்டணத்தைச் சீரமைத்து மாற்றியமைத்ததற்குப் பின்பு, 12 முறை டீசல் கட்டணத்தை ஏற்றியிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக ரூ.6.42 காசு கூடுதலாக ஏற்றியிருக்கிறார்கள்.

1 ரூபாய் டீசல் விலையை ஏற்றினால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டிற்கு 50 கோடி ரூபாய் கூடுதல் செலவு வரும். அந்த வகையிலே மட்டும் பார்த்தால் ஏறத்தாழ இந்த ரூ.6.42 காசு ஏற்றியதற்கு கணக்குப் பார்த்தால் கிட்டத்தட்ட 320, 330 கோடி ரூபாய்க்கு நாம் கூடுதல் செலவைச் சந்தித்திருக்கிறோம். இவ்வளவு டீசல் விலை உயர்வினால், மத்திய அரசினால், நமக்கு ஏற்பட்ட கூடுதல் செலவு ஏறத்தாழ 300 கோடி ரூபாய். இந்த 300, 320 கோடி ரூபாயையும் தாண்டி, அதற்குப் பின்பு இந்த இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

அதோடு மட்டுமல்ல. சுருக்கமாக இன்னும் ஒன்றே ஒன்றைச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதையெல்லாம் கணக்குப் பார்த்தால், மத்திய அரசின் டீசல் விலை உயர்வையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினுடைய—இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் —போக்குவரத்துத் துறை மற்ற மாநிலங்களுக்கு முதன்மைத் துறையாக, சிறந்த துறையாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிடச் சான்று வேறு எதுவும் வேண்டுமா என்பதை, காலியாக இருக்கின்ற எதிர்க்கட்சி நண்பர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு மட்டுமல்ல. இதற்கிடையிலே இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே மாணவ, மாணவிகளுக்கு இலவச Bus pass-களை வழங்கி வந்தார்கள். அதிலும்கூட, பல்வேறு மாணவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, பொதுமக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, பொதுமக்களுடைய நலனுக்காக நடைபெறுகின்ற அரசு என்கின்ற காரணத்தினால்— பொது மக்களுடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்ற ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே மேலும் (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளி வேலைநாட்களுக்கு மட்டும் இலவச Bus pass வழங்கிக் கொண்டிருந்ததை—இப்போது விடுமுறை நாட்களிலும் மாணவ, மாணவிகள் இலவசமாகப் பேருந்திலே பயணம் செய்யலாம் என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) முறையிலே தாயுள்ளத்தோடு இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக இன்றைக்கு மாணவர் சமுதாயமே புரட்சித் தலைவி அம்மா அவர்களை நன்றியோடு போற்றிப் பாராட்டிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இலவச பேருந்துப் பயணச் சீட்டிற்கு மட்டும், இதற்கு முன்பு சென்ற ஆண்டிலே நாம் வழங்கியதன் மூலமாக போக்குவரத்துத் துறைக்கு ஏறத்தாழ 430 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது கூடுதலாக— மன்னிக்கவும், ஒரு திருத்தம். 254 கோடி ரூபாய் போக்குவரத்துத் துறைக்கு இலவச Bus பயணத்தினால் கூடுதல் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது—ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது 176 கோடி ரூபாய் அளவுக்குக் கூடுதலாகச் சலுகையை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வேலை நாட்கள் மட்டுமல்ல. விடுமுறை நாட்களிலும், மற்ற நாட்களிலும் இலவச Bus பயணத்திற்குச் சலுகை வழங்கியதன் காரணமாகவும் மற்றும் அரசுப் பள்ளிகளுக்கு மட்டுமல்ல, அரசு நிதியுதவி பெறுகின்ற மற்றும் நிதியுதவி பெறாத அனைத்துப் பள்ளிகளுக்கும் இந்தச் சலுகையை வழங்கியதன் காரணமாக—ஒன்றைக் கவனிக்க வேண்டும். இதற்கு முன்பு அரசுப் பள்ளிகளுக்கும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கும் மட்டும்தான் இலவசப் பேருந்துச் சலுகை இருந்தது. ஆனால் இப்போது அரசுப் பள்ளிகளோடு அரசு நிதியுதவி பெறுகிற மற்றும் பெறாத பள்ளிகள்

அனைத்திற்கும் இலவச Bus pass-ஐ மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இதற்காக மட்டும்—176 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, மற்றொன்றையும் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிருவாகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. மற்றும் ஒரேயொரு நிகழ்ச்சியை மட்டும் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரை போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு ஆலோசனையை இந்தத் துறைக்கு வழங்கினார்கள். போக்குவரத்துத் துறை இன்றைக்கு Indian Oil Corporation போன்ற மத்திய அரசு நடத்துகின்ற அந்த Oil, எண்ணெய் நிறுவனங்களிடம் நீங்கள் எண்ணெய் வாங்குகிறீர்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே Indian Oil Corporation-க்கு மிகப் பெரிய Customer போக்குவரத்துக் கழகம்தான். ஆகவே மிகப் பெரிய அளவிலே நீங்கள் கொள்முதல் செய்வதால் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி விலையிலே ஏன் சலுகை பெறக்கூடாது என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் ஆலோசனை வழங்கினார்கள். அந்த ஆலோசனையின் அடிப்படையிலே நமது துறை மேற்கொண்ட நடவடிக்கைகள், துறை உயர் அதிகாரிகளும் மேற்கொண்ட கடுமையான முயற்சிக்குப் பின்பு Indian Oil Corporation மற்றும் இந்திய அரசினுடைய எண்ணெய் நிறுவனங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அதன் பலனாக இப்போது ஒரு கிலோலிட்டர் டீசலுக்கு ஏறத்தாழ 700 ரூபாய் அளவுக்கு விலையைக் குறைப்பதற்கு ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனுடைய மொத்தத் தொகை எவ்வளவு என்று சொன்னால், ஏறத்தாழ ஆண்டுக்கு 36 கோடி ரூபாய் போக்குவரத்துக் கழகங்களுக்கு மிச்சப்படுகிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு, அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும் இந்த ஆலோசனையை வழங்கியிருக்கவில்லை என்று சொன்னால், இந்த 36 கோடி ரூபாயை நாம் மிச்சப்படுத்தியிருக்க முடியாது. ஆகவே இப்படிப்பட்ட தீர்க்கதரிசனமான ஆலோசனைகளை வழங்கியதன் மூலமாக இந்தப் போக்குவரத்துத் துறை இந்த ஆண்டு மட்டும் டீசல் பொறுத்தவரையில் 36 கோடி ரூபாயைச் சேமித்திருக்கிறார்கள்.



பிற்பகல் 2-15

இன்னும் சொல்லப்போனால், அம்மா அவர்கள் கொடுத்த ஒவ்வொரு ஆலோசனையின்படி ஒவ்வொரு துறையிலும் 20 கோடி ரூபாய், 30 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய், 2 கோடி ரூபாய் என்ற அளவிற்கு நாங்கள் சேமிப்பை எட்டியிருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல நேரத்தின் அருமை கருதி ஒவ்வொரு துறையிலும் சேமித்து இருப்பதை விளக்கமாகச் சொல்ல நேரமில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த ஆலோசனையின்படி—ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் ஒரு ஆலோசனையிலே—நாம் எடுத்த நடவடிக்கைக்கு 36 கோடி ரூபாய் நமக்கு மிச்சம். அதுபோல பல்வேறு ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். அந்த ஒவ்வொரு ஆலோசனையின்பேரிலும் இந்தத் துறை மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக இன்றைக்கு மொத்தமாக பல கோடி ரூபாயை இந்தத் துறை மிச்சப்படுத்தியிருக்கிறது. அதனுடைய விளைவாகத்தான் இன்றைக்கு இந்த இலாபத்தை எட்டியிருக்கிறோம் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவேதான் இந்த இலாபத்திற்குக் காரணம் முழு முதற்காரணம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. இன்றைக்கு போக்குவரத்திலுள்ள உள் துறையைப் பொறுத்தவரையில், ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மனிதாபிமானம் மிக்க தலைவி இந்தியாவிலேயே ஒருவர் இருக்கிறார் என்று சொன்னால், அவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு காலையிலே, கேள்வி—பதில் நேரத்திலே திரு. ராதாரவி அவர்கள் விபத்துகளைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே இந்தியாவிலேயே வாகனங்கள் அதிகமாக இருக்கின்ற மாநிலங்களிலே ஒன்று தமிழ்நாடு; ஏறத்தாழ 72 லட்சம் வாகனங்கள் இங்கே இருக்கின்றன. ஆண்டுக்கு 4½ லட்சம் வாகனங்கள் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகின்றன. அந்த அளவுக்கு இன்றைக்கு வாகனங்கள் அதிகமாக உள்ள மாநிலம் தமிழ்நாடு. அதனால் இன்றைக்கு விபத்துகள் சற்று அதிகரித்துக் கொண்டே வருவதை அறிந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், இதற்காக தொலைநோக்குப் பார்வையோடு,

தீர்க்கதரிசனத்தோடு, மனிதாபிமானத்தோடு அதைத் தடுத்து நிறுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். அப்படியே அந்த முயற்சிகளையும் மீறி விபத்துகள் நடந்து விட்டால், விலைமதிப்பற்ற அந்த உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இந்தியாவிலேயே முதல்முறையாக விபத்து அவசர சிகிச்சை மையங்களை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, இப்போது 70 மையங்கள் தமிழகத்திலே சிறப்பாக இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த மையத்தைத் தொடங்கி வைத்து 1 வருடம் 7 மாதங்கள் ஆகிறது. இந்த 19 மாத காலத்திலே நடந்த மொத்த விபத்துகள் 7,422. இந்த 7,422 விபத்துகளிலும் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய முயற்சியின் காரணமாக, எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த விபத்திலே காப்பாற்றப்பட்ட விலை மதிப்புமிக்க உயிர்களின் எண்ணிக்கை மட்டும் 9,395. விலை மதிப்புமிக்க உயிர்களை இந்தத் திட்டத்தின் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 9,395 உயிர்கள் இந்த விபத்து அவசர சிகிச்சை மையங்களின் மூலமாகக் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. அந்த 9,395 உயிர்களையும், இன்றைக்கு இரட்சித்துக் காப்பாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, விபத்துகளிலே காயமடைந்த 8,967 பேர்களை இலவசமாக அந்த விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, அவர்களையும் காப்பாற்றியிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் மனிதாபிமானம் மிக்க தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதற்கு, இந்தச் சம்பவம், இந்த நிகழ்ச்சி ஓர் உதாரணம். இதைப் பார்த்துத்தான் மற்ற மாநிலங்களும் பின்பற்றி, இந்த விபத்து அவசர சிகிச்சை மையங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலிருந்து இங்கு வந்து பார்த்து எப்படிச் செயல்படுகிறது என்பதையெல்லாம் பார்த்துச் செல்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவேதான் இந்தியாவிலே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை ஆக்குவேன் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சூளுரை ஏற்றதை, இன்றைக்கு இந்தத் துறையிலே நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.



அதோடுமட்டுமின்றி, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்புகளை அறிவிப்பதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று கீழ்க்கண்ட அறிவிப்புகளை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்:

(1) ஈரோட்டில் சாலைப் போக்குவரத்து நிறுவன பொறியியல் கல்லூரியில் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் 1,500 பார்வையாளர்கள் அமரக்கூடிய அரங்கம் ஒன்று கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (2) ஈரோட்டில் சாலைப் போக்குவரத்து நிறுவன பொறியியல் கல்லூரியில் சுமார் 20 இலட்சம் செலவில் கலந்தாய்வுக் கூடம் மற்றும் விருந்தினர் மாளிகை கட்ட ஏற்பாடு செய்யப்படும். (3) – இது முக்கிய அறிவிப்பு – அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் 60 வயது முதிர்ந்த மூத்த குடிமக்கள் முன்பதிவு செய்யும்போது, தங்களது வயதுச் சான்றிதழைக் காண்பித்து பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை பெறலாம். மூத்த குடிமக்களை மதிக்கக்கூடிய ஒப்புயர்வற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு, மூத்த குடிமக்களுக்கு வழங்கியிருக்கின்ற இந்தச் சலுகை ஓர் எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–20

அதேபோல அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் குழுவாகப் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் 8 நபர்கள் கொண்ட குழுவினர் முன்பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவீதம் சலுகை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் பொறுத்த அளவிலே சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் சோதனைக்களம் ஏற்படுத்துவதற்காக 17 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு Fax கருவிகள் வாங்குவது, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு 15 ஒளியச்சு இயந்திரங்கள் – Xerox machines – வழங்குவது, பணத்திற்கு

ஒப்புகை வழங்கும் 20 இயந்திரங்கள் cash trac machines வழங்குவது. முதல் கட்டத்தில் கணினிமயமாக்கப்பட்ட அலுவலகங்களுக்கு 17 மின் உற்பத்தி இயந்திரங்கள் generators வாங்குதல், சென்னை மாநிலப் போக்குவரத்து அதிகாரி அலுவலகத்தில் இரண்டு துணை ஆணையர்களுக்கு தொலைபேசி இணைப்பு வசதிகள் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளுக்காக ரூ.13.54 இலட்சத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல் கணினிமயமாக்க மென்பொருட்கள் வாங்குவதற்காக 3 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நல்ல நிகழ்ச்சிகளுக்காக, வளர்ச்சிப் பணிகளுக்காக, இன்றைக்கு நிதியொதுக்கீடு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அரசன் அவர்கள் அறந்தாங்கியிலிருந்து தமிழகத்திலே இருக்கின்ற, ஏறத்தாழ அனைத்து ஊர்களுக்கும் நேரடிப் பேருந்து வசதி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் மறந்துவிட்டார். அவர் அறந்தாங்கியிலிருந்து பக்கத்து பிரதேசத்திலுடைய தலைநகர் போபாலுக்கு நேரடி பஸ்ஸைக் கேட்காமல் விட்டுவிட்டாரோ என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே அவர் அதை மட்டும் கேட்க மறந்துவிட்டாரோ என்று நான் கருதுகிறேன். ஆனாலும்கூட (குறுக்கீடுகள்) அவருடைய கோரிக்கைகளை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தளி தொகுதி உறுப்பினரும் அவருடைய தொகுதியிலே பல்வேறு பேருந்து வசதிகள் வேண்டும் என்று கேட்டிருக்கிறார், அவருக்கும் பல்வேறு பேருந்து வசதிகள் எல்லாம்; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஒப்புதலைப் பெற்று, பல்வேறு வழித்தடங்களிலே ஏற்கெனவே பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், மேலும் கேட்டிருப்பதைப் பொறுத்தவரை—கேளுங்கள்



கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வதுபோல்— கேட்காமலே கொடுக்கின்றவர் என்பதற்கு உதாரணமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த உறுப்பினர் கேட்காமலேயே அந்தத் தொகுதியிலே பல வழித்தடங்களை ஏற்படுத்துவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் இங்கே கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களில் கேட்டிருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையும் இந்த அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பாவு அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மினி பேருந்துகளைத் தனியார் மூலமாக இயக்குவதற்கும், வழித்தடங்களை கூடுதலாக்க வேண்டும் என்றும் ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார். அவருடைய கருத்தும் இன்றைக்கு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை அன்போடு நிறைவேற்றித் தரவேண்டும் என்று உங்களை அன்போடும் பணிவோடும் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Settlement 2001–லே போட்டார்கள்; தொழிலாளர்களுக்கான settlement. இப்போது 2004 ஆகிவிட்டது. தொழிலாளர்களுக்காக ஏதாவது மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எல்லாம் தனியாக வைத்துக்கொள்ளலாம். தங்களுடைய நேரத்தை வெகுவாகக் குறைத்துக்கொண்டு மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலுரை வழங்கிய மூன்று அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

பிற்பகல் 2-25

## (அ) கோரிக்கை எண் 24 - உள்துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24 - உள்துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"உள் துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.45,73,47,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.





## (ஆ) கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.149,93,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,27,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(இ) கோரிக்கை எண் 26 – தொழில் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26 – தொழில் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.29,23,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.107,41,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



**(ஈ) கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.875,68,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.6,72,78,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(உ) கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,05,12,000/– க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ) கோரிக்கை எண் 42 – சிறுதொழில்கள் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42 – சிறுதொழில்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.68,08,33,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,43,50,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-07-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை. [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்திய சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

81. 2002–2003 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

82. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)



83. 2001–2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

84. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

85. 2002–2003 ஆம் ஆண்டிற்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

86. 2002–2003 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

87. 2002–2003 ஆம் ஆண்டிற்கான திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

88. 2002–2003 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

89. 2002–2003 ஆம் ஆண்டிற்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

90. 2002–2003 ஆம் ஆண்டிற்கான காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2004 ஜூலை 29

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

92. 2002—2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

93. 2002—2003 ஆம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

94. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள்.

95. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள்.

96. மானியக் கோரிக்கை எண் 26 தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

97. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2003—2004. (தமிழ், ஆங்கிலம்)

98. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

99. மானியக் கோரிக்கை எண் 5 — வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

100. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

101. புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பங்கள், 2003 என்னும் சிறுநூல். (தமிழ், ஆங்கிலம்)

102. மானியக் கோரிக்கை எண் 17 — பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)



2004 ஜூலை 29]

103. பட்டு வளர்ச்சி துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2003—2004. (தமிழ், ஆங்கிலம்)

104. பட்டு வளர்ச்சி துறையின் "மக்கள் சாசனம்" 2004. (தமிழ், ஆங்கிலம்)

105. மானியக் கோரிக்கை எண் 42 — சிறு தொழில்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

106. சிறு தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

107. மானியக் கோரிக்கை எண் 24 — உள் துறை — இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் — நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

108. மானியக் கோரிக்கை எண் 46 — போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

109. போக்குவரத்துத் துறை பற்றிய "மக்கள் சாசனம்" 2004. (தமிழ், ஆங்கிலம்)

110. போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன் ஆய்வு, 2004—2005. (தமிழ், ஆங்கிலம்)

111. 1991—92 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

112. 1991—92 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

113. 1991—92 ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

114. 1992—93 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

115. 1992—93 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

116. 1992—93 ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

117. 1993—94 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

118. 1993—94 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

119. 1993—94 ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

120. 1994—95 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

121. 1994—95 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

122. 1994—95 ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

123. 1995—96 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

124. 1995—96 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

125. 1995—96 ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

126. 1996—97 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

127. 1996—97 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)



128. 1996—97 ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

129. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

130. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

131. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்தி நான்காவது அறிக்கை. (2003—2004)

132. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை. (2003—2004)

133. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்தி ஆறாவது அறிக்கை. (2003—2004)

134. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்தி ஏழாவது அறிக்கை. (2003—2004)

135. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்தி எட்டாவது அறிக்கை. (2003—2004)

136. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்தி ஒன்பதாவது அறிக்கை. (2003—2004)

137. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பதாவது அறிக்கை. (2003—2004)

138. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தி ஒன்றாவது அறிக்கை. (2003—2004)

139. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை. (2003—2004)

---

2004 ஜூலை 29]

## இணைப்பு - I

*(131 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 24

## உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005

### 1. சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம்

மக்களின் மேம்பாட்டிற்கு திறன் வாய்ந்த, பாதுகாப்பான மற்றும் இடையறாத போக்குவரத்து அமைப்பு அடிப்படையானதாகும். இது நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். பல்லாண்டுகளுக்கு முன் போக்குவரத்து அமைப்பில் இரயில் போக்குவரத்து சிறப்பிடம் பெற்றிருந்தது. அண்மைக்காலத்தில் சாலைகளின் வழியே சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து மிகப் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. தற்போது மக்கள் நெடுந்தொலைவுப் பயணங்களை பெருமளவில் சாலை வழியாக மேற்கொள்கின்றனர். பல மாநிலங்களின் எல்லைகளைக் கடந்து செல்லும் கச்சாப்பொருட்கள், உற்பத்தி பொருட்கள், வேளாண் விளை பொருட்கள் ஆகியவற்றின் அளவு கடந்த சில ஆண்டுகளாக பன்மடங்கு பெருகியுள்ளது. எனவே, பல்வேறுபட்ட வாகனங்களின் தேவை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. இத் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் வாகனங்களை தேவையான அளவில் ஈடுபடுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. அதே சமயத்தில் ஒழுங்கான, நெரிசலற்ற மற்றும் விபத்தில்லா பயணத்தையும் உறுதி செய்தல் வேண்டும். அது மட்டுமன்றி, வாகனங்களின் புகையினால் மாசு ஏற்படுவதையும் கட்டுப்படுத்த வேண்டும். இவை, போக்குவரத்து கொள்கைக்கு மிகப்பெரும் சவாலாக அமைந்துள்ளது. இவற்றை நிறைவேற்ற, சட்டரீதியான மற்றும் சட்டம் சாரா திறன்வாய்ந்த சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

போக்குவரத்துத் துறை மேற்சொன்ன குறிக்கோளை அடைய விழையும் முறைமைகள் பின்வரும் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2. நிருவாக அமைப்பு

போக்குவரத்து துறை போக்குவரத்து ஆணையரின் தலைமையில், உள்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. போக்குவரத்து ஆணையரே, தமிழ்நாட்டின் மாநில போக்குவரத்து அதிகாரியாகவும் (State Transport Authority) செயல்படுகிறார். சென்னை நகரில், இணைப் போக்குவரத்து ஆணையர் (நகரம்) வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகவும் (Regional Transport Authority), அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டங்களில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். வட்டாரப் போக்குவரத்து அதிகாரி மற்றும் மாநில போக்குவரத்து அதிகாரி ஆகியவர்களின் ஆணைகளின் மீதான மேல் முறையீடுகளும், மறு ஆய்வு மனுக்களும் சென்னை மாநில போக்குவரத்து மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தால் பரிசீலிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 46 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 40 பகுதி அலுவலகங்களும், இவையன்றி 10 தணிக்கைச் சாவடிகளும் செயல்பட்டு வருகின்றன.

## 3. செயல்பாடுகள்

1988 ஆம் ஆண்டு மத்திய அரசு மோட்டார் வாகனச் சட்டம், 1989 ஆம் ஆண்டு மத்திய அரசின் மோட்டார் வாகன விதிகள், 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், மற்றும் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம் மற்றும் விதிகள் ஆகியவற்றை போக்குவரத்துத் துறை நிருவகிக்கிறது. அத்துடன் இயக்கூர்திகளைப் பதிவு செய்தல், போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்குதல், ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமங்கள் வழங்குதல், விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல், கட்டணங்களையும் வரிகளையும் வசூல் செய்தல், வாகனங்களின் புகையினால் மாசு ஏற்படுவதை கட்டுப்படுத்துதல், சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றல் மற்றும் போக்குவரத்து சார்ந்த இதர பணிகளும் இத்துறையின் முக்கிய பணிகளாகும்.



## 4. 31.03.2004 நிலவரப்படி மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை


| | |
|---|---|
| **போக்குவரத்து வாகனங்கள்** | |
| **(அ) பயணிப் பேருந்துகள்** | |
| மாநில போக்குவரத்து கழகங்களால் இயக்கப்படுபவை | 16,994 |
| தனியாரால் இயக்கப்படுபவை | 6,531 |
| சிற்றுந்துகள் | 3,816 |
| மொத்தம் | 27,341 |
| **(ஆ) ஒப்பந்த ஊர்திகள்** | |
| ஆட்டோ ரிக்ஷா (சென்னை நகரம் : 37714) | 1,19,937 |
| சாதாரண டாக்ஸி | 886 |
| மோட்டார் கேப் (மாநில அனுமதி) | 36,388 |
| மோட்டார் கேப் (தேசிய அனுமதி) | 4,655 |
| மேக்ஸி கேப் (மாநில அனுமதி) | 24,835 |
| மேக்ஸி கேப் (தேசிய அனுமதி) | 883 |
| ஆம்னி பேருந்து (மாநில அனுமதி) | 318 |
| ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி) | 143 |
| மொத்தம் | 1,88,045 |
| **(இ) மற்றவை** | |
| தனியார் சேவை வாகனங்கள் | 4,374 |
| பள்ளிப் பேருந்துகள் | 5,706 |
| ஆம்புலன்ஸ் | 2,772 |
| தீயணைப்பு வாகனங்கள் | 785 |
| மொத்தம் | 13,637 |
| **(ஈ) சரக்கு வாகனங்கள்** | |
| லாரிகள் (மாநில அனுமதி) | 1,07,186 |
| லாரிகள் (தேசிய அனுமதி) | 26,068 |
| டிராக்டர் மற்றும் டிரெய்லர் | 38,263 |
| இலகு ரக வாகனங்கள் | 62,240 |
| ஆர்டிகுலேட்டட் வாகனங்கள் | 9,392 |
| மொத்தம் | 2,43,149 |
| **போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை** | **4,72,172** |

| | |
|---|---|
| **போக்குவரத்து அல்லாத வாகனங்கள்** | |
| **(அ) இரு சக்கர வாகனங்கள்** | |
| மோட்டார் சைக்கிள் | 18,83,849 |
| ஸ்கூட்டர் | 9,11,076 |
| மோப்பெட்டுகள் | 27,52,830 |
| மொத்தம் | 55,47,755 |
| **(ஆ) மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்கள்** | |
| மோட்டார் கார் | 5,64,949 |
| ஈப்பு | 39,290 |
| மூன்று சக்கர வாகனம் (தனியார் ஆட்டோ) | 4,083 |
| ஸ்டேஷன் வேகன் | 2,456 |
| டிராக்டர் | 76,058 |
| மூன்று சக்கர வாகனம் (உரிமத்திற்கு உட்படாதவை) | 23,336 |
| நான்கு சக்கர வாகனம் (ரிக் மற்றும் கட்டிடம் கட்டும் உபகரண வாகனங்கள்) | 5,874 |
| ரோட் ரோலர் | 494 |
| மற்றவை | 16,006 |
| போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | 62,80,301 |
| **போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்கள்** | — |
| போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | 4,72,172 |
| போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | 62,80,301 |
| **மாநிலத்தில் உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை** | **67,52,473** |

[2004 ஜூலை 29

### 5. தமிழ்நாட்டில் சாலைகளில் ஓடும் வாகனங்களின் வளர்ச்சி

1999 ஆம் ஆண்டு முதல் வாகன வளர்ச்சி






2004 ஜூலை 29]

தமிழகத்தில் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கீழ்வரும் அட்டவணையில் விவரங்கள் அனைத்தும் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு (மார்ச் 31ம் தேதிய நிலவரப்படி | போக்குவரத்து வாகனங்கள் | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | இருசக்கர வாகனங்கள் | மற்றவை | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1999 | 368922 | 3214068 | 487744 | 4070734 |
| 2000 | 399300 | 3679525 | 528403 | 4607228 |
| 2001 | 421365 | 4163002 | 577715 | 5162082 |
| 2002 | 432106 | 4600565 | 625426 | 5658097 |
| 2003 | 457448 | 5073643 | 677946 | 6209037 |
| 2004 | 472172 | 5547755 | 732546 | 6752473 |

### 6. போக்குவரத்துத் துறையை கணினிமயமாக்குதல்

போக்குவரத்துத் துறையின் அனைத்து பணிகளையும் கணினி மூலம் செயல்பட வைப்பது ஒரு பெரிய மின் ஆளுகை முயற்சியாகும். இப் பணி முழுமையாக செயல்படுத்தப்படும்போது, பொது மக்களும் வாகன உரிமையாளர்களும் துரிதமான, திறமையான மற்றும் இடரில்லா சேவையை பெறுவர். தற்போது 17 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. ஒரு மென்பொருள் நிறுவனம் உருவாக்கிய மென்பொருளை பயன்படுத்தி இந்த அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சமீபத்தில் தேசிய தகவல் மையம் (NIC) இந்தியா முழுமையும் தொடர்பு கொண்டு செயல்படும் வகையில் பொதுவான கணினி மென்பொருள் அமைப்பினை உருவாக்கியுள்ளது. இதன் அடிப்படையில் இவ்வரசும் தேசிய தகவல் மையம் (NIC) உருவாக்கிய கணினி மென்பொருள் இணைப்பிற்கு மாற்றிக்கொள்ள முடிவெடுத்துள்ளது. கணினி வன் பொருட்கள் போக்குவரத்து துறையின் பிற அலுவலகங்களுக்கும் வாங்குவது இறுதியாக்கப்பட்டதும், கணினி

வழி பயன்பாடு முழுவதும் தேசிய தகவல் மையத்தின் (NIC) மென்பொருள்கீழ் கொண்டு வரப்படும். கணினி வன்பொருள் வாங்குவதற்கான மொத்த மதிப்பீடு ரூ.17 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

## 7. ஓட்டுநர் தேர்ச்சித் தளங்கள் அமைத்தல்

ஓட்டுநர் உரிமம் வழங்கும் முன் விண்ணப்பதாரரின் வாகன ஓட்டும் திறனை சிறந்த வகையில் சோதனை செய்ய வேண்டும். இதற்காக அவர்களின் ஓட்டும் திறனைக் கணிக்கும் வகையில் பழகுநர் உரிமம் மற்றும் நிரந்தர உரிமம் வழங்குவதற்கு முன் கடுமையான சோதனை முறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தற்போது விண்ணப்பதாரர்களுக்கு ஓட்டும் திறனில் பயிற்சி அளிப்பதற்காக மாநிலம் முழுவதும் பயிற்சிப் பள்ளிகள் (Driving schools) இயங்கி வருகின்றன. தகுதியான பயிற்சியாளரையும், கற்பதற்குத் தேவையான உபகரணங்களையும் முழுமையாக கொண்டிராத பள்ளிகளால் உயர் தரமான பயிற்சியை அளிக்க இயலாது. எனவே, இப்பள்ளிகளை போக்குவரத்துத் துறை அதிகாரிகள் திடீர் சோதனை செய்கின்றனர். தேவையான உபகரணங்கள், பயிற்சியாளர்கள் இல்லாத மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றாத பயிற்சி பள்ளிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுகின்றது.

அரசு, ஓட்டுநர் தேர்ச்சித் தளங்களை தருமபுரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாமக்கல், விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய நகரங்களில் அமைத்துள்ளது. பெரம்பலூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, கரூர், வேலூர், திருச்சி மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் ஓட்டுநர் தேர்ச்சித் தளங்கள் அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. மேலும் சேலம், மதுரை மற்றும் திருப்பூர் ஆகிய நகரங்களில் 2004–05 ஆம் ஆண்டில் புதிய தேர்ச்சித் தளங்கள் அமைக்கப்படவுள்ளன. சென்னை–தரமணியில் சாலை போக்குவரத்து நிறுவனம் (IRT) ஒரு நவீன தேர்ச்சித் தளத்தை நிறுவி வருகிறது. இது, சென்னை நகரிலுள்ள எட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் ஓட்டுநர் உரிமத்திற்காக விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்களின் திறனை பரிசோதிப்பதற்காக பயன்படுத்தப்படும். தேனியில் புதிய தேர்ச்சித் தளம் அமைக்க தகுந்த இடத்தைக் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், குறைந்தபட்சம் ஒரு தேர்ச்சித் தளமாவது அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் ஓட்டும் திறன் வாய்ந்தவர்களுக்கு மட்டுமே ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட வேண்டும் என்பதேயாகும்.



## 8. வரிவிதிப்பு

1974 ஆம் ஆண்டு தமிழநாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின்கீழ் மோட்டார் வாகனங்களுக்கு வரி விதிக்கப்படுகிறது. வாகன வகை, வாகனங்களின் எடை, இருக்கைகளின் எண்ணிக்கை, இயந்திர சக்தி போன்றவற்றின் அடிப்படையில் வாகனங்களுக்கு வரி விதிக்கப்படுகிறது. வரி விதிப்பு முறை பின்வருமாறு:

| வாகன வகை | வரி விதிப்பு முறை |
|---|---|
| சிற்றுந்து (மினி பஸ்) | இருக்கைகள் எண்ணிக்கை அடிப்படையில் |
| பெருநகர் பேருந்துகள் | இருக்கைகள் எண்ணிக்கை அடிப்படையில் |
| நகரப் பேருந்துகள் | இருக்கைகள் எண்ணிக்கை அடிப்படையில் |
| புறநகர் மற்றும் விரைவுப் பேருந்துகள் | இருக்கைகள் எண்ணிக்கை அடிப்படையில் |
| ஆம்னிப் பேருந்து | இருக்கைகள் எண்ணிக்கை அடிப்படையில் |
| மேக்ஸி கேப் | இருக்கைகள் எண்ணிக்கை அடிப்படையில் |
| தனியார் சேவை வாகனங்கள் | இருக்கைகள் எண்ணிக்கை அடிப்படையில் |
| ஆட்டோ ரிக்ஷா/ சாதாரண வாடகைக் கார்/ சுற்றுலா வாடகைக் கார் | 5 ஆண்டு கால வரி (அனுமதி காலம் முடியும் வரை) |
| சரக்கு வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட சுமை ஏற்றும் திறன் அடிப்படையில் |
| இரு சக்கர வாகனங்கள் | இயந்திரங்களின் சக்தி அடிப்படையில் ஆயுட்கால வரி |
| நான்கு சக்கர வாகனங்கள் (போக்குவரத்து அல்லாதவை) | வாகன விலை அடிப்படையில் ஆயுட்கால வரி |


[2004 ஜூலை 29

| | |
|---|---|
| பசுமை வரி (போக்குவரத்து அல்லாத வாகனங்கள்) | பதிவு செய்த நாளிலிருந்து 15 வருடங்கள் முடிவடைந்த பின்னர். |
| பசுமை வரி (போக்குவரத்து வாகனங்கள்) | பதிவு செய்த நாளிலிருந்து 7 வருடங்கள் முடிவடைந்த பின்னர். |

## 9. வருவாய்

போக்குவரத்துத் துறை மாநில அரசின் அதிக வருவாய் ஈட்டும் ஒரு துறையாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் வரிகள் மற்றும் கட்டணங்கள் வாயிலாக இத்துறை ஈட்டிய மொத்த வருவாய் மற்றும் 2004–05–ல் எதிர்பார்க்கப்படும் வருவாய் ஆகியவை கீழே உள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன:-

**1999–2000–ஆம் ஆண்டு முதல் ஈட்டிய வருவாயின் வளர்ச்சி**
**(ரூபாய் கோடிகளில்)**






2004 ஜூலை 29]

| ஆண்டு | (ரூபாய் கோடிகளில்) |
|---|---|
| 1999-2000 | 581.45 |
| 2000-2001 | 592.37 |
| 2001-2002 | 648.43 |
| 2002-2003 | 750.00 |
| 2003-2004 | 931.24 |
| 2004-2005 | 1104.61 |

## 10. சாலை பாதுகாப்புக் குழு

மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 215, அனைத்து சாலைப் பாதுகாப்பு குறித்த பணிகளை மேற்கொள்ள ஒரு மாநில அளவிலான சாலை பாதுகாப்புக் குழு அமைக்க வழி செய்கிறது. தமிழ்நாட்டில் மாநில சாலைப் பாதுகாப்புக் குழு 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதுவரை மாநில சாலைப் பாதுகாப்புக் குழு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வந்தது. எனினும், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிக்கும்பொருட்டு இக்குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இக் குழுவில் தலைமைச் செயலரும் மற்ற துறைச் செயலர்களும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், உள் துறைச் செயலர் தலைமையில், மூத்த அலுவலர்களைக் கொண்டு செயல்படும் ஒரு குழு, மேற்கூறிய மாநில சாலைப் பாதுகாப்புக் குழுவின் முடிவுகளை செயல்படுத்தும் பணிகளை ஆய்வு செய்கிறது. மேலும் இக் குழு துறைகளிடையே சாலைப் பாதுகாப்புப் பணிகளை ஒருங்கிணைக்கும் பணிகளையும், புதிய சாலைப் பாதுகாப்பு யுக்திகளை அறிமுகப்படுத்தும் பணிகளையும் மேற்கொள்கிறது.

மாவட்ட அளவில் இயங்கும் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. இக் குழுக்கள், சாலை விபத்துக்களை கட்டுப்படுத்துதல் மற்றும் இடையூறற்ற பயணங்களை உறுதி செய்ய யுக்திகள் உருவாக்குதல் ஆகியவைகளை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றன.

[2004 ஜூலை 29

## 11. சாலைப் பாதுகாப்பு நிதி

துறையின் வரவு—செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத சாலைப் பாதுகாப்பு திட்டங்களுக்கு நிதி வழங்க ஏதுவாக 'சாலைப் பாதுகாப்பு நிதி' ஒன்றினை அரசு ஏற்படுத்தியுள்ளது. இணக்கக் கட்டணம் மற்றும் அபராதத் தொகை ஆகியவற்றிலிருந்து இந்நிதிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உள் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினால் இந்த நிதி நிருவகிக்கப்படுகிறது.

கடந்த 4 ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் சாலை பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | நிதி ஒதுக்கீட்டின் அளவு |
|---|---|
| 2000-2001 | ரூ. 2 கோடி |
| 2001-2002 | ரூ. 3.75 கோடி |
| 2002-2003 | ரூ. 5 கோடி |
| 2003-2004 | ரூ. 5 கோடி |
| 2004-2005 | ரூ. 5 கோடி |

அரசுத் துறைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் வகுக்கும் சாலைப் பாதுகாப்பு திட்டங்களுக்கு இந் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கடந்த வருடம் சாலைகளில் மின் சமிக்ஞைகளை (Traffic Signal) நிறுவவும், சாலைகள் மற்றும் சாலை சந்திப்புகளை பொறியியல் ரீதியாக முன்னேற்றவும், சாலை விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்யவும் மற்றும் சாலை ரோந்து வாகன திட்டங்களுக்கும் இந் நிதியிலிருந்து உதவி வழங்கப்பட்டது.

## 12. அவசர சாலை விபத்து நிவாரண மையங்கள்

மாநிலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அசாதாரணமான வளர்ச்சியினை எட்டியுள்ள நிலையில், சாலைகளில் பாதுகாப்பினை ஏற்படுத்துவது என்பது மிகவும் கடினமான ஒன்றாகியுள்ளது. எனவே, சாலைப் பாதுகாப்பு செயல்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, இதன்



2004 ஜூலை 29]

அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலை வழித்தடங்களில் 50 கி.மீ. இடைவெளிக்கு ஒன்றாக 80 விபத்து நிவாரண மையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது 67 மையங்கள் முழுவீச்சில் இயங்கி வருகின்றன. அவற்றுள், 36 மையங்களுக்கான செலவினம் தனியார் மருத்துவமனை மற்றும் நிறுவனங்களாலும் 31 மையங்களுக்கான செலவினத்தின் ஒரு பகுதி அரசாலும் ஏற்கப்படுகிறது. மீதமுள்ள 13 மையங்கள் விரைவில் செயல்படும்.

விபத்தில் பாதிப்புக்குள்ளானோரை மீட்பதற்கென்றே ஒவ்வொரு மையமும் தனித்தனியே ஒரு ஆம்புலன்ஸ் வாகனத்தை கொண்டுள்ளது. இதில் மிக அத்தியாவசியமான மருந்துகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர் ஒருவரும், ஓட்டுநர் ஒருவரும் நாள்முழுவதும் தயார் நிலையில் இருப்பர். இது தவிர, கட்டணமின்றித் தகவல் தெரிவிக்கும் வகையில் '1033' என்ற நான்கு இலக்கத் தொலைபேசி வசதி ஒவ்வொரு மையத்திற்கும் செய்து தரப்பட்டுள்ளது. விபத்து குறித்த தகவல் கிடைக்கப்பெற்றவுடன் விபத்து நடந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் விரைந்து சென்று விபத்துக்குள்ளானவர்களின் உயிரைக் காக்கும் பொருட்டு முதலுதவிப் பணிகளை மேற்கொள்ளுகின்றன. பலத்த காயமடைந்தோர் உரிய முதலுதவிக்குப் பின்னர் இலவசமாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு தீவிர சிகிச்சைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். 2002–ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2004–ஆம் ஆண்டு மே வரையிலான காலத்தில் மட்டும் உரிய காலத்தில் சேவையாற்றியதன் மூலம் 9395 பேர்கள் இம்மையங்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். மேலும் 7422 பேர் ஆரம்ப சிகிச்சைக்குப் பின்னர் மேல் சிகிச்சைக்காக மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்த தகவல்களை செல்போன்கள் மற்றும் தொலைபேசிகள் வாயிலாக உடனடியாக தெரிவிக்கும் வகையில் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் தகவல் மையம் (Call centre) ஒன்று அமைக்கப்படவுள்ளது. இத்தகவல் மையம் 24 மணி நேரமும் தொடர்ந்து இயங்கக் கூடியதாக இருக்கும். நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் ஒருவர் விபத்தினைப் பார்த்த மாத்திரத்திலேயே செல்போன் மூலம் தகவல் மையத்தைத் தொடர்பு கொள்ள இயலும். இம் மையம் நினைவில் நிற்கக்கூடிய ஒரு சில செல்போன் எண்களையும் தொலைபேசி எண்களையும் கொண்டிருக்கும். விபத்து குறித்த தகவல் பெறப்பட்ட உடனேயே, அருகிலுள்ள அவசர விபத்து நிவாரண மையத்தையும் நெடுஞ்சாலை ரோந்துப் பிரிவையும் இத் தகவல் மையம் எச்சரிக்கை

[2004 ஜுலை 29

செய்யும். இத்தகைய ஏற்பாட்டின் மூலம் பயணி ஒருவர் விபத்து குறித்துத் தகவல் அளிக்கவும் அதன் மூலம் உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் வசதி ஏற்படும்.

## 13. விபத்துக்குள்ளானவர்கட்கு நிவாரணம் வழங்குதல்

1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம், சாலை விபத்தில் பலியானவர்களுக்கு அவர்களுடைய வயது, வருவாய் ஈட்டும் திறன் மற்றும் விபத்தின் தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நஷ்ட ஈடு வழங்க வகை செய்கிறது. விபத்துக்கு காரணமானவர்கள் எவராயிருந்தாலும் அதனைக் கருத்தில் கொள்ளாமல் இறந்தவர்களுக்கு குறைந்தபட்ச நிவாரணம் வழங்கவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. இதைத் தவிர, சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கோ அல்லது உறவினர்களுக்கோ முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து உடனடி நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் தொகை வருவாய் கோட்ட அலுவலரால் வழங்கப்படுகிறது. அத்தொகை கீழ்க்கண்ட அளவில் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) இறப்பு | – | ரூ.10,000/- |
| 2) நிரந்தர செயலிழப்பு | – | ரூ. 6,000/- |
| 3) ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | – | ரூ.4,000/- |
| 4) ஏனைய சிறு காயங்கள் | – | ரூ.500/- |

2004-2005 ஆம் நிதியாண்டில் விபத்தில் பலியானவர்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசுப் போக்குவரத்து பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களில் பாதிக்கப்-பட்டோரின் குடும்பங்களுக்கும், பரிதாப நேர்வுகளில் இதர வாகனங்களினால் விபத்துக்குள்ளானவர்களுக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1) இறப்பு | – | ரூ.50,000/- |
| 2) பலத்த காயம் | – | ரூ.15,000/- |
| 3) சிறு காயம் | – | ரூ. 6,000/- |



2004 ஜுலை 29]

## 14. மாசு கட்டுப்பாடு

மோட்டார் வாகனங்கள் வெளியிடும் புகையின் அளவு 1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதிகளில் வரையறுக்கப் பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்டு, ஓராண்டுக்கும் மேற்பட்ட வாகனங்கள் மாசு கட்டுப்பாட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. சென்னை மாநகரில் சரக்கு வாகனங்களின் புகை வெளியேற்றும் அளவை சோதனை செய்ய தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் மூன்று சோதனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர, செங்கல்பட்டு, திண்டுக்கல் மற்றும் நீலகிரி ஆகிய இடங்களிலும் இவ்வாரியத்தால் 5 சோதனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 8 நிலையங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சோதனை மையங்கள் தவிர, சென்னையிலும் மற்றும் இதர நகரங்களிலும் 231 தனியார் புகைச்சோதனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் வெளியிடும் புகையளவு சோதனை செய்யப்பட்டு, அவை வெளியிடும் புகையின் அளவு குறிப்பிட்ட அளவுகளுக்குள் இருந்தால், 'புகையளவு கட்டுப்பாட்டில் உள்ளது' என்ற சான்றிதழ் வாகனங்களுக்கு வழங்கப்படுகிறது. தனியார் புகைச் சோதனை மையங்கள் சரியான முறையில் புகையளவினை சோதனை செய்ய, அவைகள் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்று அரசால் அண்மையில் அறிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் மூலம் மாசு கட்டுப்பாடு சோதனை உகந்த முறையில் நிறைவேற்றப்படுவதுடன், வாகனங்களை சோதனை மையங்களுக்கு கொண்டு செல்லாமலும், முறையாக சோதனை செய்யாமல் சான்றிதழ் வழங்குவதும் தடுக்கப்படுகிறது.

வாகனங்களினால் ஏற்படும் மாசு, சுற்றுச்சூழலுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக, காற்றில் உள்ள மாசினைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. எல்.பி.ஜி எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் சென்னையில் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டு வருகின்றன. வாகனங்களில் எல்.பி.ஜி எரிபொருளை எரிசக்தியாக உபயோகப்படுத்த வாகன ஓட்டிகள் / உரிமையாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். தகுதிச்சான்று பெற வரும் போக்குவரத்து வாகனங்கள் முழுமையாக சோதனை செய்யப்படுவதால் புகையை அளவுக்கு அதிகமாக வெளியிடும் வாகனங்கள் தகுதிச்சான்று பெற இயலாது. பழைய வாகனங்களினால் ஏற்படும் மாசு அதிகமாக

இருப்பது தெரியவந்துள்ளதால், வெவ்வேறு போக்குவரத்து வாகனங்களுக்கான வயது வரம்பை நிர்ணயிக்க மத்திய அரசுக்கு இவ்வரசு பரிந்துரை செய்ய கருதியுள்ளது.

## 15. 2004-2005-ல் பிற முயற்சிகள்

தொடர்ந்து நடக்கும் சிறப்புப் பணிகளுடன் இத்துறை கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்களை பகுதி-II திட்டத்தின்கீழ் பொதுமக்களின் நலன் கருதியும், அலுவலகங்களை நவீனமயமாக்கவும் 2004-2005 ஆம் ஆண்டில் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சேலம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் சோதனை தளம் ஏற்படுத்துதல் | 17.65 |
| 2 | வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு 10 பேக்ஸ் கருவிகள் வழங்குதல் | 1.80 |
| 3 | வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்காக 15 ஒளியச்சு இயந்திரங்கள் (Xerox machines) வழங்குதல் | 18.75 |
| 4 | பணத்திற்கு ஒப்புகை வழங்கும் 20 இயந்திரங்கள் (Cash track machines) வாங்குதல் | 10.00 |
| 5 | முதல் கட்டத்தில் கணினி மயமாக்கப்பட்ட அலுவலகங்களுக்கு 17 மின் உற்பத்தி இயந்திரங்கள் (Generators) வாங்குதல் | 12.75 |
| 6 | சென்னை, மாநிலப் போக்குவரத்து அதிகாரி அலுவலகத்தில் இரண்டு துணை ஆணையாளர்களுக்கு தொலைபேசி இணைப்பு வசதிகள் வழங்குதல் | 0.24 |
| 7 | கணினி மயமாக்க, வன்பொருள்கள் வாங்குதல் | 500.00 |

## 16. முடிவுரை

நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு போக்குவரத்துத் துறை மிக முக்கிய பங்கு ஆற்றி வருகிறது. எனவே, இத்துறையை நவீன தொழில்நுட்ப ரீதியிலும் தகவல் தொழில்நுட்ப ரீதியிலும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை, இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது.



இத்துறையின் நடைமுறைகள் எளிமையாகவும், இடர்பாடற்றதாகவும் இருக்க வேண்டும் என்றும் அரசு விரும்புகிறது. வாகன உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களின் தேவைகளை முற்றிலும் நிறைவு செய்யும் வகையில் செயல்படுவதே இத்துறையின் நோக்கமாகும். இதுவரை இது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளினால் நல்ல பலன்கள் விளைந்துள்ளன. இனி வரும் நாட்களில் இந்த முயற்சிகள் மேலும் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

---

## இணைப்பு - II

*(131 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005

### 1.0 முன்னுரை

போக்குவரத்து என்பது மக்களை இணைப்பது மட்டுமின்றி முன்னேற்றத்திற்கும் பயன்படக்கூடிய ஓர் இன்றியமையாத வசதியாகும். மக்களின் முன்னேற்றம், வசதி, வேகம் மற்றும் பாதுகாப்புமிக்க போக்குவரத்தையே சார்ந்திருந்துள்ளது என்பதே வரலாறு. சாலைப் போக்குவரத்து மற்ற எந்தவகைச் சமகாலப் போக்குவரத்து சாதனங்களைவிடவும் மிக நெருங்கி வரும் வாய்ப்பைப் பெற்றிருப்பதால், தற்கால உலகில் அது முதன்மை இடத்தை வகிக்கிறது.

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் 7 போக்குவரத்துக் கழகங்களும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு மற்றும் சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஆகியவையும், மோட்டார் வாகன பராமரிப்புத் துறையும் உள்ளன.

இதைத் தவிர, மத்திய அரசுத் துறைகளான இரயில்வே, அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு, விமானப் போக்குவரத்து ஆகிய துறைகள், தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்கள் தொடர்பாக மாநில அரசின் ஒருங்கிணைக்கும் முகமையாக போக்குவரத்துத் துறை செயல்படுகிறது

### 2.0 அரசு போக்குவரத்துக் கழகங்கள்

2.1 தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு வரை அரசு போக்குவரத்து இயக்கம் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. பின்னர், 1956 ஆம் ஆண்டின் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களிடம் 1971 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது.

[2004 ஜூலை 29

1976–ல் பட்டாபிராமன் குழுவும், 1990–ல் தில்லைநாயகம் குழுவும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைக்கத் தந்த பரிந்துரைகள் முடிந்தவரை செயல்படுத்தப்பட்டன.

**2.2** 31–03–2004 ஆம் நாள் நிலவரப்படி அரசு போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் மற்றும் செயல்திறன்கள் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சென்னை மாநகரப் பேருந்துகள் | 2554 |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 5633 |
| புறநகர் பேருந்துகள் | 5807 |
| விரைவுப் பேருந்துகள் | |
| மாநிலத்திற்குள் | 525 |
| வெளிமாநிலங்களுக்கு | 278 |
| மலைப் பகுதி பேருந்துகள் | 519 |
| மொத்த பேருந்துகள் | 15316 |
| உபரி பேருந்துகள் | 1348 |
| மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை | 16664 |

| | | |
|---|---|---|
| 2. | ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் | 63.90 (இலட்சம் கி.மீ) |
| 3. | நாளொன்றுக்கு ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை | 160.33 (இலட்சம்) |
| 4. | பேருந்துகளின் உபயோகம் | 92.17% |
| 5. | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்பு பேருந்துகள் நீங்கலாக) | 97.82% |
| 6. | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்பு பேருந்துகளையும் சேர்த்து) | 101.74% |



2004 ஜூலை 29]

| | | |
|---|---|---|
| 7. | பயணிகளின் பயன்பாடு | |
| | அ) மாநகரம் மற்றும் நகரம் | 64.23% |
| | ஆ) புறநகர் | 84.79% |
| | இ) விரைவுப் பேருந்து | 75.67% |
| | ஈ) மலைப் பகுதி | 97.60% |
| | **மொத்தத்தில்** | **80.57%** |
| 8. | பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.23 |
| 9. | விபத்துக்கள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.32 |
| | மொத்த விபத்துக்கள் | 7537 |
| | உயிரிழப்பு விபத்துக்கள் | 1269 |
| | இறந்தவர்களின் எண்ணிக்கை | 1446 |
| 10. | எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) | |
| | அ) மாநகரம் மற்றும் நகரம் | 4.27 |
| | ஆ) புறநகர் | 4.65 |
| | இ) விரைவு | 4.46 |
| | ஈ) மலைப் பகுதி | 3.51 |
| | சராசரியாக | 4.42 |
| 11. | 10,000 கிலோ மீட்டருக்கு என்ஜின் ஆயில் | 9.58 லிட்டர் |
| 12. | கழிவு செய்யப்பட்ட உருளையின் ஓட்டம் | 1.58 இலட்சம் கி.மீ. |
| 13. | புதுப்பிக்கப்பட்ட உருளைப் பட்டையின் விகிதம் | 4.06 |
| 14. | ஒரு பேருந்துக்கு பணியாளர்கள் (பணிமனை உட்பட) | 7.02 |

## 2.3 போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்தல்

போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவினைக் குறைக்கவும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களிடையே பேருந்து இயக்கத்தில் தேவையற்ற போட்டியினைத் தவிர்க்கவும் 21 போக்குவரத்துக் கழகங்களை 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்க அரசு திட்டமிட்டது. மத்திய அரசும் போக்குவரத்துக் கழகங்களின் ஒருங்கிணைப்பினை அறிவிக்கை செய்தது. ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வஎண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப் பிற்கு பிறகு கழகத்தின் பெயா | ஒருங்கிணைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | மாநகர போக்குவரத்துக் கழகம் (சென்னை - கோட்டம் 1), சென்னை. | 1 மாநகர போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிட், சென்னை. | 10.1.2001 |
| 2 | மாநகர போக்குவரத்துக் கழகம் (சென்னை - கோட்டம் 2), சென்னை. | | |
| 3 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம் 1), சென்னை. | 2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிட், சென்னை. | 12.1.2002 |
| 4 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம் 2), சென்னை. | | |



| | | | |
|---|---|---|---|
| 13. | தமிழ்நாட்டில் தென்னை நார் தொழில் முனைவோருக்காக கேரளத்தில் மேற்கொள்ளப்படும் பயிற்சி சுற்றுப் பயணம் | 2.00 | 1.00 |
| 14. | சிட்கோ ஒருங்கிணைந்த அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் பேட்டையை மேம்படுத்தல் | 100.00 | 100.00 |
| 15. | மாவட்ட தொழில் மையங்களுக்கு வண்டிகள் வாங்குதல் | 61.99 | 61.99 |
| 16. | சிறிய அளவிலான தேயிலை தோட்டக்காரர்கள் தேயிலை விலை நிர்ணய நிதிய உறுப்பினர்களாவதற்கு நிதியுதவி | 115.00 | 115.00 |
| | **மொத்தம்** | **396.03** | **379.78** |

**5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

(அ) கோரிக்கை எண் 24 – உள் துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை
(இ) கோரிக்கை எண் 26 – தொழில் துறை
(ஈ) கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை
(உ) கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர்,கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்
(ஊ) கோரிக்கை எண் 42 – சிறு தொழில்கள் துறை
} 121-218

*மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் 121, 122, 131, 138, 139, 164, 199-211
*மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் 124, 131-132, 193-199
*மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன் 126, 128, 129, 132, 135-136, 147, 158-159, 160, 165
திரு. கே.என். இலட்சுமணன் 132-142
*திருமதி வளர்மதி ஜெபராஜ் 142-151
*திருமதி வி. அழகம்மாள் 152-157
திரு. லா. சந்தானம் 157-165

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 218-223




2004 ஜூலை 29]

| வஎண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப் பிற்கு பிறகு கழகத்தின் பெயா | ஒருங்கிணைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 5 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம் 1), விழுப்புரம். | 3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட், விழுப்புரம். | 30.12.2003 |
| 6 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம் 2), வேலூர் | | |
| 7 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம் 3), காஞ்சிபுரம். | | |
| 8 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம் 1). சேலம். | 4 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட், சேலம். | 30.12.2003 |
| 9 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம் 2). தருமபுரி. | | |

[2004 ஜூலை 29

| வ.எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப் பிற்கு பிறகு கழகத்தின் பெயா | ஒருங்கிணைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 10 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம் 1), கோவை. | 5 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், கோவை | 30.12.2003 |
| 11 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம் 2), ஈரோடு. | | |
| 12 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம் 3), உதகமண்டலம் | | 7.11.2000 |
| 13 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம் 1), கும்பகோணம் | 6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம் | 30.12.2003 |
| 14 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம் 2), திருச்சி. | | |
| 15 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம் 3), காரைக்குடி | | |
| 16 | தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம் 4), புதுக்கோட்டை | | |



2004 ஜூலை 29]

| வ.எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப் பிற்கு பிறகு கழகத்தின் பெயா | ஒருங்கிணைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 17 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம் 1), மதுரை | 7 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், மதுரை | 6.1.2004 |
| 18 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம் 2), திருநெல்வேலி. | | |
| 19 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம் 3), நாகர்கோவில் | | |
| 20 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம் 4), திண்டுக்கல் | | |
| 21 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம் 5), விருதுநகர் | | |

## 3.0 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை

3.1 அரசு போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் செலவும், இயக்கச் செலவும் அதிகரித்ததன் காரணமாக, ஒட்டுமொத்த செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரித்தன. மாறாக, பேருந்துப் பயணக் கட்டணம் மாற்றியமைக்கப்படாததால் வருவாய் அதிகரிக்கவில்லை. அதனால், போக்குவரத்துக் கழகங்கள் செயல்படத் தொடங்கியது முதல், மார்ச் 2004 (தணிக்கைக்கு முன்) வரை ஏற்பட்டு வந்த மொத்த இழப்பு ரூபாய் 2166.39 கோடி ஆகும். இத்தகைய இழப்பிற்கு காரணம் வருவாய்க்கும் செலவினங்களுக்கும் உள்ள பெரிய இடைவெளியாகும்.

2002–03 நிதியாண்டில், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.4.21 கோடி இழப்பு ஏற்பட்டது. 2003–2004–ல் எண்ணெய் நிறுவனங்கள் அதிவேக டீசல் எண்ணெய் விலையினை அடிக்கடி உயர்த்தியதன் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.32.13 கோடி அளவுக்கு (தணிக்கைக்கு முன்பு) இழப்பு ஏற்படலாம்.

### 3.2 அதிவேக டீசல் மற்றும் மசகெண்ணெய் பயன்பாடு

2002–2003 ஆம் ஆண்டில் ஒரு லிட்டர் அதிவேக டீசலுக்கு 4.37 கி.மீ. இயக்கப்பட்டது. எரிபொருள் சிக்கன நடவடிக்கை காரணமாக 2003–2004 ஆம் ஆண்டில் 4.45 கி.மீ. ஆக அது உயர்ந்துள்ளது. டீசல் இயக்கத் திறன் மேம்பாடு காரணமாக 2003–2004–ல் சுமாராக ரூ.23.15 கோடி சேமிக்கப்பட்டுள்ளது. என்ஜின் ஆயில் உபயோகம் 10,000 கி.மீ. இயக்கத்திற்கு 11.09 லிட்டரிலிருந்து 9.58 ஆக நடப்பாண்டில் குறைந்துள்ளது.

### 3.3 டீசல் விலை அதிகரிப்பு

உலக அளவில் பெட்ரோலிய எண்ணெய் பொருட்களின் விலை மாறுபடுவதன் அடிப்படையில், டீசல் மற்றும் பெட்ரோலிய பொருட்களின் விலையை மைய அரசு மாற்றி அமைக்கின்றது. ஆனால், அவ்விலை உயர்விற்கேற்ப, தமிழகத்தில் பேருந்து கட்டணங்கள் உயர்த்தப்படுவதில்லை. 2002–03 ஆம் ஆண்டில் ரூ.1060.27 கோடியாக இருந்த டீசல் பயன்படுத்துவதற்கான செலவினம், 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.1186.20 கோடியாக (தணிக்கைக்கு முன்) உயர்ந்துள்ளது.

### 3.4 சலுகை அடிப்படையில் அதிவேக டீசல் இந்திய ஆயில் நிறுவனத்திடம் வாங்குதல்

இந்திய ஆயில் நிறுவனம் தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு சலுகை அடிப்படையில் அதிவேக டீசல் வழங்குவது தொடர்பாக அந்நிறுவனத்துடன் 7 போக்குவரத்துக் கழகங்களும் ஒப்பந்தம்





செய்து கொண்டுள்ளன. ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளின்படி இந்திய ஆயில் நிறுவனம் 1 கிலோ லிட்டருக்கு ரூ.700.00 என்ற சலுகையின் அடிப்படையில் 1-10-2003 முதல் 30-9-2004 வரை அதிவேக டீசலை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. இதைத் தவிரவும், அந்நிறுவனம் தங்கள் செலவிலேயே எரிபொருள் வசதிகளை நவீன தொழில் நுட்பங்களுக்கேற்ப மேம்படுத்தவும், தற்பொழுதுள்ள நிழற்குடை, நடைமேடைகளையும் மேம்படுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளது. மற்ற எண்ணெய் நிறுவனங்கள், அதாவது பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனங்கள், இதுபோன்ற சலுகைகளை வழங்க முன்வந்துள்ளன. மேற்கண்ட சலுகைகளினால் எரிபொருள் செலவில் ஒரு ஆண்டிற்கு சுமார் ரூ.36.00 கோடி தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களினால் சேமிக்கப்படுகிறது.

### 3.5 நிர்வாகச் செலவு அதிகரிப்பு

போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு, நேரடி பேச்சுவார்த்தை மூலம், ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. 1-9-98 முதல் செயல்படுத்தப்படும் ஒப்பந்தத்தின்படி, சராசரியாக ஒரு பணியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.835 கூடுதலாக அளிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட மொத்த கூடுதல் செலவினம், ஓராண்டிற்கு ரூ.231 கோடியாகும். பேருந்து இயக்க வருவாயில், நிர்வாகச் செலவினம் 38 முதல் 53 சதவீதமாகும்.

பணியாளர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு இல்லையாயினும் நிர்வாக செலவினம் ஒவ்வொரு வருடமும் கடுமையாக உயர்ந்துள்ளது. 1991–92 ஆம் ஆண்டில் ரூ.388 கோடியாக இருந்த நிர்வாகச் செலவினம், 2003–2004 ஆம் ஆண்டில் (தணிக்கைக்கு முன்), ரூ.1395.45 கோடியாக உயர்ந்துள்ளது.

### 3.6 செலவினத்தை உள்ளடக்கும் அளவு

நிர்வாகச் செலவு அதிகரிப்பு, டீசல் மற்றும் இடுபொருள் விலை அதிகரிப்பு இவற்றிற்கு தகுந்தாற்போல், போக்குவரத்துக் கழகங்களால் வருவாயை அதிகப்படுத்த இயலவில்லை. 2001 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பேருந்து கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டபின், மைய அரசு உலக அளவில் எண்ணெய் பொருட்களின் விலை மாற்றத்தையொட்டி அடிக்கடி எரிபொருட்களின் விலையை அதிகப்படுத்தியுள்ளது. எனினும், டிசம்பர் 2001–க்குப் பின் பேருந்து கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை. எனவே, வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையேயுள்ள இடைவெளி தொடர்கிறது.

[2004 ஜூலை 29

### 3.7 நிலுவையில் உள்ள கடன் பொறுப்புகள்

போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து செயல்பட அதிகமாக அக்கழகங்கள் வெளிக்கடன் பெற வேண்டி உள்ளது. விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு சட்ட ரீதியாக செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகை வழங்குவதையும், எரிபொருள் மற்றும் உதிரி பாகங்கள் வழங்கும் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்துவதையும் தள்ளிப்போட வேண்டியுள்ளது. அரசு போக்குவரத்துக் கழகங்கள் கடன் சுமையில் சிக்குண்டுள்ளன. அதிக அளவில் கடன் சுமையில் போக்குவரத்துக் கழகங்கள் உள்ள நிலையில் நிதி நிறுவனங்கள் மேலும் நிதி உதவி வழங்க முன்வரவில்லை.

எரிபொருள், உதிரி பாகங்கள் ஆகியவற்றிற்காக பட்ட கடன்களை செலுத்த வேண்டிய மற்றும் சட்டபூர்வமாக செலுத்தப்பட வேண்டிய தொகை ஆகியவை உயர்ந்து கொண்டே வருவதன் காரணமாக, போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. 31.03.2004-ல் போக்குவரத்துக் கழகங்களின் கடன் பொறுப்புகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

| விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|
| உயர் வேக டீசல் எண்ணெய் மற்றும் மசகு எண்ணெய் | 68.02 |
| உதிரி பாகங்கள் உருளிகள் மற்றவை வழங்கியவர்களுக்கு | 26.02 |
| விபத்து இழப்பீடாக நீதி மன்றங்களில் செலுத்த வேண்டியது | 75.71 |
| சட்ட ரீதியாக செலுத்தப்பட வேண்டிய வருங்கால வைப்பு நிதி, பணிக் கொடை மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 319.10 |
| இதர இனங்கள் | 3.99 |
| மொத்தம் | 492.84 |



2004 ஜூலை 29]

நிதி நெருக்கடியின் காரணத்தினால் பேருந்துகளின் இயக்கத்தைச் சீராக வைப்பதற்கான வயது முதிர்ந்த பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்கவும், போதிய உதிரி பாகங்களை கொள்முதல் செய்யவும் இயலவில்லை.

கடந்த ஆண்டுகளில், மார்ச் 2004 முடிய போக்குவரத்துக் கழகங்கள் அடைந்த தொடர் நட்டம் ரூ.2166.39 கோடியாகும். போக்குவரத்துக் கழகங்கள் 31-03-2004 முடிய செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.492.84 கோடியாகும். போக்குவரத்துக் கழகங்கள் வாங்கிய டீசல், உதிரி பாகங்கள், சட்டரீதியாகச் செலுத்த வேண்டிய தொகை மற்றும் விபத்து ஈட்டுத் தொகையும் இதில் அடங்கும். நிதி நிறுவனங்களிடமிருந்து இப்போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற கடன், 31-03-2004 அன்றைய நிலவரப்படி ரூ.844.82 கோடி நிலுவையில் உள்ளது. நிதி நெருக்கடியின் காரணமாக பல போக்குவரத்துக் கழகங்கள், கடன் மற்றும் வட்டித் தொகை போன்றவற்றை குறித்த காலத்தில் செலுத்த முடியவில்லை. நடப்பாண்டில் தவணை தவறிய கடன் தொகை மார்ச் 2004 வரை மட்டும் ரூபாய் 273.64 கோடி நிலுவையாக உள்ளது. 1995-96-ல் கட்டிய வட்டித் தொகை ரூ.77.77 கோடி. ஆனால், 2003-2004-ல் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூ.114.60 கோடியாக உயர்ந்துள்ளது.

### 4.0 பழைய பேருந்துகளைக் கழித்தல் மற்றும் அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்குதல்

4-4-2004 அன்று ஆளுநர் நிகழ்த்திய உரையில் இரண்டு கட்டமாக ஏறக்குறைய 2500 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் மாற்றம் செய்யப்பட உள்ளன என அறிவிக்கப்பட்டது. 2,375 பேருந்துகள் உடனடியாக மாற்றப்பட வேண்டிய சூழ்நிலையில் உள்ளதாக போக்குவரத்துக் கழகங்களால் தெரிவிக்கப்பட்டு உள்ளன. போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து கடன் உதவி பெற்று 2003-2004 வருடத்தில் 1050 பேருந்துகள் வாங்க திட்டமிடப்பட்டது. இத்திட்டமானது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 2005 மார்ச் வரையில் இரண்டாம் கட்ட நிலையாக 1325 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்கப்படும்.

### 4.1 பேருந்து அடிச்சட்டங்கள் வாங்குதல்

2003-2004 ஆம் ஆண்டில் 500 பேருந்துகளுக்கான அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளி முறையில் 550 பேருந்து அடிச்சட்டங்கள் வாங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை

[2004 ஜூலை 29

மாநகர போக்குவரத்துக் கழகம் 147 யூரோ-II என்ஜின் பொருத்தப்பட்ட பேருந்துகளை அறிமுகப்படுத்தியுள்ளது. சென்னை நகரில் சுற்றுப்புறச் சூழல் கெடுதலை இது குறைத்துள்ளது. வயதான மற்றும் ஊனமுற்ற பயணிகள், குழந்தைகள் நலனைக் கருதி 10 தாழ்தளப் பேருந்துகள் சென்னை மாநகரத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.

### 4.2 பேருந்து பழுது நீக்குதல்

பேருந்து கூண்டுகள் பழுது பார்ப்பதற்கும் மற்றும் இயந்திரப் பழுதுகள் பார்ப்பதற்கென மட்டுமே ரூ.30.00 கோடியை (ரூபாய் முப்பது கோடி மட்டும்) போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு வழங்கியுள்ளது. 5,316 பேருந்துகள் பெரும் பழுதுகள் பார்க்கப்படவேண்டியவை என கண்டறியப்பட்டு, அவற்றில் 4,032 பேருந்துகள் பழுதுபார்த்து சரிசெய்யப்பட்டுவிட்டன. 80 பேருந்துகள் குறித்த பழுது பார்க்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளன. பேருந்துகள் பழுதுபார்ப்பதற்காக அரசு வழங்கிய ரூ.30.00 கோடியில் இந்த வகையில் இதுவரை ரூ.25.07 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 5.0 மற்ற மாநிலங்களில் உள்ள பேருந்து பயணக் கட்டண அமைப்புடன் ஒப்பீடு

திரண்ட கடுமையான இழப்புகள், பேருந்து இயக்கத்திற்குத் தேவையான இடுபொருட்களின் விலையுயர்வு அரசு போக்குவரத்துக் கழகங்களை கடுமையான நிதிநெருக்கடிக்கு தள்ளிய நிலை பயணக் கட்டணத்தை மாற்றியமைக்கும் அவசியத்தை ஏற்படுத்தியது. வெளிநிதி உதவியை எதிர்பாராது தன்னிறைவாக தனது செயல்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில், தமிழக அரசு 25-10-99-க்குப் பின்னர் உயர்த்தப்படாமல் இருந்த பேருந்து கட்டணத்தை 6-12-2001 முதல் சிறிதளவு உயர்த்தி சீரமைத்தது.

அதன் பிறகும், ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடும் பொழுது, தமிழ்நாட்டில்தான் பேருந்துக் கட்டணம் மிகவும் குறைவாக உள்ளது. புறநகர் சேவைக்கான தற்போதைய பேருந்து கட்டண விகிதம் அண்டைய மாநிலங்களின் பேருந்து கட்டண விகிதத்துடன் ஒப்பிடப்பட்டு அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:



2004 ஜூலை 29]

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமுலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | புறநகர் (குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிற்பவை) | புறநகர் (விரைவு) | சொகுசு | அதி சொகுசு |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 6.12.2001 | 28 | — | — | 32 | 38 |
| ஆந்திரா | 4.2.2003 | 35 | — | 40 | 45 | 52 |
| கேரளா | 1.10.2001 | 35 | 43 | 46 | 54 | 63 |
| கர்நாடகம் | 1.5.2003 | 28.50 | — | 37.25 | 42.50 | 50.75 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டணங்கள் மிகவும் குறைவு என்பது தெளிவாகும்.

### 6.0 சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துக்களைத் தவிர்த்தல்

போக்குவரத்துக் கழகங்கள் வழங்க வேண்டியுள்ள விபத்து இழப்பீட்டுத் தொகை 1991-92 ஆம் ஆண்டில் ரூ.16.03 கோடியாக இருந்தது. 2003-2004 ஆம் ஆண்டில் (தணிக்கைக்கு முன்) ரூ.114.60 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே, அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கு, முக்கியத்துவம் தரப்பட்டு தக்க மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு பாதுகாப்பான, சிக்கனமான, சிறப்பான போக்குவரத்து இயக்கத்தை அளிப்பதற்கு அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது. விபத்துகளை தடுப்பதில் ஓட்டுநர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். முறையான புத்தொளிப் பயிற்சி, யோகா பயிற்சி, பாதுகாப்பு மருந்தகங்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் பாதுகாப்பு குறித்து அறிவுறுத்தும் வகுப்புகள், பாதுகாப்பாக ஓட்டுதலுக்கு பரிசுத் திட்டங்கள், தொடர்ந்து 10 ஆண்டு காலத்திற்கு விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ஒரு சிறப்பு ஊதிய உயர்வு முதலியன, விபத்தினைத் தவிர்த்து பாதுகாப்பாக ஓட்டுநர்கள் இயக்குவதை உறுதி செய்யும்பொருட்டு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் எடுத்த சில நடவடிக்கைகளாகும். அரசு போக்குவரத்துக் கழகங்கள் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற திறமை வாய்ந்த இளைஞர்களைத்

தேர்வு செய்து, அவர்களுக்கு 12 வாரங்களுக்கு கனரக மோட்டார் வாகனங்களை இயக்குதல், பேருந்தில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்த்தல், மற்றும் முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் தீவிர பயிற்சிகள் ஆகியவற்றை சாலைப் போக்குவரத்து நிறுவனம் அளிக்கின்றது. அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகளில் இப்பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. தமிழ்நாடு அரசு, போக்குவரத்துக் கழகங்களில் கனரக வாகன ஓட்டுநர்களாக நியமனம் பெறுவதற்குரிய குறைந்தபட்ச கல்வித் தகுதியை 8ஆம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி/பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சில போக்குவரத்துக் கழகங்களில் நெடுந்தூரப் பேருந்துகளில் இரவுப் பணியில் ஈடுபடும் ஓட்டுநர்களின் சிரமத்தினையும், பயணிகளின் பாதுகாப்பினையும் கருதி தேவையான தடங்களில் இரண்டு ஓட்டுநர்களை பணியில் ஈடுபடுத்தும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

## 6.1 பெண் ஓட்டுநர்கள் நியமனம்

1993 ஆம் ஆண்டில் முதன் முதலில் நாகர்கோவிலில் பெண் ஓட்டுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டில், மாநகரப் போக்குவரத்துக் கழகம் (சென்னை), சென்னை, இரண்டு பெண் ஓட்டுநர்களை நியமித்துள்ளது.

## 7.0 விபத்துக்குறைவு விவரம்

பாதுகாப்பான இயக்கத்திற்கு தொடர்ந்து எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால் விபத்துக்கள் விழுக்காடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

| விபரம் | 2001-2002 | 2002- 2003 | 2003-2004 |
|---|---|---|---|
| மொத்த விபத்து குறியீடு (ஒரு லட்சம் கி.மீ இயக்கத்திற்கு) | 0.37 | 0.31 | 0.32 |
| உயிர் இழப்பு விபத்து | 1322 | 1242 | 1269 |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 1661 | 1488 | 1446 |



## 8.0 பயணிகளுக்கான வசதிகள்

சென்னையிலும், இதர முக்கிய நகரங்களிலும் பல பேருந்து நிறுத்தங்களிலும், பேருந்து நிலையங்களிலும் இரவு நேரப் பயணிகளின் பாதுகாப்பு கருதி மின்னொளி விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு சக்கர வாகனங்களை, பேருந்து நிலையங்களில் நிறுத்தி பேருந்து பயணத்தைத் தொடர்வதற்கு இயலும் வகையில், சில பேருந்து நிலையங்களில் போதுமான இடங்களை மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஒதுக்கியுள்ளது. சென்னையிலிருந்து புறநகர், வெகுதூரப் பேருந்துகள் இயக்கப்படுதல், புதிதாக கோயம்பேட்டில் அமைக்கப்பட்ட சென்னை புறநகர் பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பயணிகளின் நலன் கருதி, புதிய பேருந்து நிலையத்தை சென்னையிலுள்ள அனைத்துப் பகுதிகளுடன் இணைக்கும் வகையில், பல புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இதுவரை சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி போக்குவரத்துக்கு இடையூறாக சாலைகளில் நிறுத்தப்பட்டிருந்த மாநகரப் பேருந்துகள் அனைத்தும், பழைய வெளியூர் மற்றும் மாநில விரைவு போக்குவரத்துக் கழக பேருந்து நிலையங்களுக்குள் நிறுத்தப்பட்டு பயணிகளின் பாதுகாப்பும், நலனும் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த அளவு குறைக்கப்பட்டுள்ளது.

## 9.0 பயணச் சலுகைகள்

தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய பின்வரும் தரப்பினருக்கு பயணச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

1. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் சட்டப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள்.
2. மாணவர்கள்
3. அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்கள்
4. மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திர போராட்ட வீரர்கள் மற்றும் எல்லை/மொழி போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவை மனைவியர்

[2004 ஜூலை 29

மற்றும் வாரிசுதாரர்கள், தமிழ் மொழியினை காக்கும் பொருட்டு மொழிப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக அரசிடமிருந்து மொழிக்காவலர் நிதி உதவி பெறுபவர்களின் மனைவி அல்லது கணவர் மற்றும் வயதடையாத வாரிசுதாரர்கள்.

5. புற்று நோயாளிகள், உடல் ஊனமுற்றோர், காதுகேளாதோர் மற்றும் கண்பார்வையற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்

6. நாடகக் கலைஞர்கள்

## 9.1 மாணவர் பயணச் சலுகை

அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் நோக்குடனும், அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்திற்கு உண்மையான பொருள் கொடுக்கும் நோக்குடனும் 2004 ஜூன் திங்கள் முதல் நாள் முதல் தொடங்கும் கல்வியாண்டு முதல், 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உள்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவர் மாணவியர்கள் அனைவருக்கும் அவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கும் பள்ளியிலிருந்து வீட்டிற்கும் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய இலவசப் பேருந்து பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இலவச பேருந்து பயணச்சீட்டுகள், எல்லா விடுமுறை நாட்களும் உட்பட அனைத்து நாட்களுக்கும் செல்லுபடியாகும். இதேபோன்று, தனியார் கல்லூரிகள் உட்பட அனைத்து கல்லூரிகளிலும் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் வீட்டிலிருந்து கல்லூரிக்கும், தொழில் நுட்ப பயிலகம், தொழிற்பயற்சி நிலையம், தனியார் கலைக் கல்லூரிக்கும், பின் அவ்விடத்திலிருந்து வீட்டிற்கும், போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம்செய்ய 50% சலுகை கட்டண பேருந்து சீட்டுகள் 2004 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 முதல் வழங்கப்படுகின்றன. இந்தச் சலுகை விடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களுக்கும் பொருந்தும். மேலும், சென்னை மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் நூலகத்திற்குச் சென்று பின் வீட்டிற்கு பயணிக்க 60 மாற்று டோக்கன்கள் வரை வழங்கப்படுகின்றன.

மாணவர் பயணச் சலுகையினால் 2003–2004ஆம் ஆண்டில் 19,14,288 மாணவர்கள் பயன் பெற்றனர். 1—6—2004 முதல் மாணவர் பயணச் சலுகையின்கீழ் கூடுதலாக பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை



2004 ஜூலை 29]

5,68,908 ஆகும். மாணவர் பயணச் சலுகைத் திட்டத்தின்கீழ் மொத்தம் 24,83,196 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு அளிக்கவேண்டிய உதவித் தொகை ரூ.291.41 கோடியாகும். மாணவர்களிடமிருந்து போக்குவரத்துக் கழகங்கள் வசூலிக்கும் தொகை ரூ.17.55 கோடியாகும். மீதமுள்ள ரூ.176.08 கோடி போக்குவரத்துக் கழகங்களால் சமுதாயச் சேவையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. போக்குவரத்துக் கழகங்கள் சலுகைக் கட்டணமாக வசூலிக்கும் தொகை மற்றும் அரசு வழங்கும் இழப்பீடு போக, மீதமுள்ள சலுகைக் கட்டண செலவுத் தொகையினை அக்கழகங்களே சமுதாயச் சேவையாக வழக்கமாக ஏற்றுக்கொள்கின்றன.

## 10.0 பயணிகளுக்குச் சலுகைகள்

பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுப் பயணிகளின் நலன் கருதி, மாதாந்திரப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதற்கு பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகளில் மாதத்தின் எல்லா நாட்களிலும், இருப்பிடத்திலிருந்து செல்லுமிடத்திற்குச் சென்று வர குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிறுத்தும் பேருந்துகளில் 40 நடைகளுக்குரிய கட்டண விகிதம் மாதாந்திரக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

## 10.1 விருப்பம் போல பயணம் செய்யும் கட்டணச் சீட்டுகள் (மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும்)

கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் பயணிகள் தங்கள் விருப்பம் போல் மாநகரத்தில் எங்கு வேண்டுமானாலும் பயணச் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பயணம் செய்யலாம்:

1) ஒரு நாள் பயணச் சீட்டு ரூ.30

2) வாராந்திரப் பயணச் சீட்டு ரூ.160

3) மாதாந்திரப் பயணச் சீட்டு ரூ.600

## 10.2 இணைய தளம் அமைத்தல் மற்றும் கணிணி மூலம் முன்பதிவு செய்தல்

ஒவ்வொரு போக்குவரத்துக் கழகங்களுக்கென தனியாக ஒரு இணைய தளம் ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்துக் கழகங்களைப் பற்றிய விவரங்கள்

அனைத்தும் இதன் மூலம் பொதுமக்கள் எளிதாக அறிந்து கொள்ளும்படி வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், வெகுதூரம் பயணம் செய்யும் பயணிகளின் வசதியை முன்னிட்டு கணிணி மூலம் முன்பதிவு செய்யும் வசதி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 10.3 திரும்பி வர முன் பதிவுக் கட்டணச் சலுகை

அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இருக்கை முன்பதிவு செய்பவர்கள், சேரும் இடத்திலிருந்து புறப்படும் இடம் வரை திரும்ப வரவும், ஒரே நேரத்தில் முன்பதிவு செய்தால் அவர்களுக்கு மொத்த பயணக்கட்டணத்தில் 10 சதவிகிதம் கழிவு வழங்கப்படுகிறது.

## 10.4 வெளிமாநில பயணத்திற்கு சலுகை

வெளி மாநிலத்திற்கு இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இருக்கை முன்பதிவு செய்பவர்கள் சென்னையில் வசிக்கும் இடத்திலிருந்து சென்னை புறநகர் பேருந்து நிலையம் செல்ல மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

## 10.5 சுற்றுலா மற்றும் புனித இடங்களுக்கு பயணம் மேற்கொள்ள பேருந்துகள்

சுற்றுலா மற்றும் புனித இடங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் வசதிக்காக, ஒப்பந்த ஊர்தி என்ற முறையில் இயக்கப்படும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் வாடகைக் கட்டணம் ஏற்கனவே உள்ள ரூ.6,500/-க்கு பதிலாக நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஒப்பந்த வாடகையாக ரூ.3,500/- வசூலிக்கப்படுகிறது.

## 11. 0 தொழிலாளர் நலத் திட்டங்கள்

போக்குவரத்துக் கழகங்கள் அதன் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலம் பேண, கீழ்க்கண்ட நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன:

1. பணி அடிப்படையிலான சிறப்பு சம்பள உயர்வு
2. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவச பயண அனுமதிச் சீட்டு வழங்குதல்



3. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதிகள்
4. கல்விப் படிகள்
5. ஊதியம் சார்ந்த படிகள்
6. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்
7. சீருடைகள்
8. குடும்பநல நிதி
9. திருமணக் கடன்
10. திருப்பான் படி (Steering Allowance)
11. விருப்ப ஓய்வூதியத் திட்டம்
12. விடுப்புப் பயன்கள்
13. விடுமுறை விடுதி
14. சிறப்பு நல நிதித் திட்டம்
15. ஊழியர்களின் பிள்ளைகளுக்காக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்கள்
16. தொழிலாளர் ஓய்வு கால சேமநல நிதித் திட்டம்
17. அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
18. இறுதிச் சடங்கு செலவுகள்

## 12.0 பேருந்து இயக்கத்தினைப் படிப்படியாக தாராளமயமாக்குதல்

2002–2003ஆம் ஆண்டில் சில குறிப்பிட்ட தடப் பேருந்துகள் மற்றும் இயக்கம் படிப்படியாகத் தாராளமயமாக்கப்படும் என்று அரசு கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டது.

தாராளமயமாக்குவதற்குரிய நடைமுறைகளைக் கண்டறிய அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து தனியார் உரிமையாளர்களுக்கு

திறந்த ஒப்புந்தப்புள்ளிகளின் அடிப்படையில் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள உரிமங்கள், தேசியமயமாக்கப்படும் பகுதி திட்டத்திலிருந்து விலக்கப்படும் வகையில் பகுதி திட்டத்தை மாற்றியமைக்க பகுதி திட்டத்தின் திருத்தப்பட்ட வரைவு அறிவிக்கை 12-11-2002 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது. சிலர் இந்த வரைவு அறிவிக்கையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்து உள்ளனர். அவை நிலுவையில் உள்ளன. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகு உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

### 12.1 சிக்கன நடவடிக்கைகள்

நிர்வாகச் செலவைக் கட்டுப்படுத்தும் பொருட்டு போக்குவரத்துக் கழகங்களால் பல்வேறு சிக்கன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. புதிதாக பணியாளர்களை பணியில் அமர்த்துவது, (ஓய்வுபெற்ற பணியாளர்கள் இடத்திற்கு பணியாளர் அமர்த்துவது உட்பட) நிறுத்தப்பட்டுள்ளது.

2. புதிதாக பணியிடங்களை உருவாக்குவது எல்லா பிரிவுகளிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

3. நிர்வாக அளவில் அலுவலர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

### 12.2 மக்கள் நீதிமன்றம்

விபத்து இழப்பீட்டு செலவினை கட்டுப்படுத்தவும், விரைவாக இழப்பீடு வழங்கவும் லோக் அதாலத் முறையில் இரு தரப்பினரும் சம்மதித்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் காரணமாக அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒரு வருடத்தில் ரூ.3.00 கோடி செலவினம் குறைந்துள்ளது.

### 12.3 இயக்கத்தில் சாதனை

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 15,316 மற்றும் மாற்றுப் பேருந்துகள் எண்ணிக்கை 1,348 ஆகும். சென்ற ஆண்டு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் மொத்த இயக்க தூரம் 233.24 கோடி கி.மீ. ஆகும். அதற்கு முந்தைய ஆண்டுடன் இதனை ஒப்பிடுகையில் 3.87 கோடி கி.மீ.



அதிகம் இயங்கியுள்ளது. 2002–2003–ல் 100.88 சதவீதமாக இருந்த மொத்த கி.மீ. செயல்பாட்டுத்திறன், 2003–2004–ல் 101.74 சதவீதமாக உயர்ந்தது.

### 12.4 பேருந்து ஒன்றிற்கான பணியாளர் விகிதத்தில் திருத்தம்

பேருந்து ஒன்றிற்கான பணியாளர் குறித்த நிலை விகிதம் 7.5லிருந்து 6.5 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

### 12.5 பயணக்கட்டண வசூலில் சாதனை

2003–2004 ஆம் ஆண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கைகள் காரணமாக, போக்குவரத்துக் கழகங்கள் தொடங்கப்பட்ட நாள் முதற்கொண்டு, ஒரே நாளில் வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகையில், மிக அதிகத் தொகையான ரூ.12.73 கோடி, 24.5.2004 அன்று வசூலாகி சாதனை புரிந்துள்ளன. 24.5.2004 நாளைய வசூல் தொகை, கழகம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| போக்குவரத்துக் கழகங்கள் | மொத்த வசூல்தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| மாநகரப் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிட்., சென்னை. | 114.62 |
| அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிட்., சென்னை. | 82.03 |
| அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட்., விழுப்புரம். | 275.18 |
| அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., சேலம். | 125.55 |
| அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிட்., கோயம்புத்தூர். | 187.45 |
| அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., கும்பகோணம் | 226.16 |
| அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., மதுரை. | 262.08 |
| மொத்தம் | 1273.07 |

[2004 ஜூலை 29

## 12.6 முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடை வழங்கியது

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்திற்கொண்டும், வரிவிலக்கு பெறுவதற்காகவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம், நவம்பர் 2003-ல் ரூபாய் ஒரு கோடி நன்கொடை வழங்கியுள்ளது.

## 13.0 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

மாநில போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளுக்கு அடிச்சட்டங்கள் வாங்கவும், பேருந்து மேற்கூடு கட்டுமானப் பணிகளுக்கும், பணிமனைகள் நிறுவுவதற்கும், நடைமுறை மூலதனத்திற்கும், குறைந்த வட்டியில் நிதி உதவி வழங்கும் பொருட்டு பொது வைப்பீடுகள் திரட்டி கடன் வழங்க ஏதுவாக, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் வங்கிசாரா நிறுவனமாக ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டு, தவணை முறையில் அசல் மற்றும் வட்டியை திருப்பி செலுத்தும் வகையில் நிதி உதவி அளிக்கும் நிறுவனமாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.70 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.61.73 கோடியில், அரசின் பங்களிப்பு ரூ.43.03 கோடியாகவும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு ரூ. 18.70 கோடியாகவும் உள்ளன.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இலாபத்தை ஈட்டி வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டிய இலாபம் பின்வருமாறு:



2004 ஜூலை 29]

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டி தள்ளுபடிக்கு முந்தைய ஆதாயம் | வட்டி தள்ளுபடி செய்தது | வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் ஆதாயம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய ஆதாயம் |
|---|---|---|---|---|---|
| 1999-2000 | 2134.58 | - | 2134.58 | 900.00 | 1234.58 |
| 2000-2001 | 1821.38 | - | 1821.38 | 800.00 | 1021.38 |
| 2001-2002 | 3408.40 | 2223.00 | 1185.40 | 490.00 | 695.40 |
| 2002-2003 | *2576.62 | 1781.00 | 795.62 | 255.82 | 539.80 |
| 2003-2004 (தணிக்கைக்கு உட்பட்டது) | 2756.37 | 2206.37 | 550.00 | 197.31 | 352.69 |

* தற்போதைய கடன் நிலுவைகள் அனைத்தும் மறு சீரமைப்பு செய்யப்பட்டபோது கடன்களின் வட்டி வீதங்கள் 1.4.2002 முதல் குறைக்கப்பட்டதாலும், காலங்கடந்த செலுத்தாத வட்டி மீது வட்டியும் அபராத வட்டியும் வசூலிப்பது கைவிடப்பட்ட காரணத்தாலும் இத்தொகை மாறியுள்ளது.

[2004 ஜூலை 29

31-03-2004 ஆம் நாளன்று இந்நிறுவனத்திலுள்ள வைப்புத் தொகை ரூ.829.25 கோடிகளாகும். தமிழ் நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31-03-2004 வரை ரூ.5124.21 கோடி நிதி உதவி அளித்திருக்கிறது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் உதவியுடன் தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் இதுநாள் வரை 33,119 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.

## 14.0 பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூபாய் 5 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும் ரூபாய் 2 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடனும் தமிழக அரசின் முழு சொந்த நிறுவனமாக தொடங்கப்பட்டது. பின்பு, 2000 ஆம் ஆண்டு மே மாதம் இந்நிறுவனத்திற்காக செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 10 இலட்சமாகவும், அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தற்போது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தலைவர் உள்ளிட்ட ஏழு இயக்குநர்கள் கொண்ட குழுவின் மேற்பார்வையில் இயங்குகிறது. இப்பணிக் குழு முழுநேர தொழில்முறை நிர்வாக இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு, கணினி மென்பொருள் தயாரித்தல், நிர்வாக சேவை, தகவல் மற்றும் தொழில் நுட்பவியல், போக்குவரத்துப் பணி ஆகிய துறைகளில் ஆலோசனை வழங்கும் பணிகளை மேற்கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனம் அந்தந்த துறைகளில் தகுதியும் அனுபவமும் கொண்ட சிறந்த ஆலோசகர்கள் அடங்கிய குழுவின் ஆதரவோடு இயங்கி வருகிறது. மேலும் இந்நிறுவனம் சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்தும் ஓய்வு பெற்ற அரசு செயல் அலுவலர்களிடமிருந்தும், வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு, அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர்கள் / விரிவுரையாளர்களின் சேவையையும் பணியின் தன்மை மற்றும் தேவைக்கேற்ப பயன்படுத்தி செயல்பட்டு வருகிறது. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு புதிய பணிகளை பெறுவதற்காக முன்அனுபவமும் மற்றும் திறமையும் வாய்ந்த ஆலோசனை நிறுவனங்களுடன் சேர்ந்து கூட்டு முயற்சியாக பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கேற்று வருகிறது.



2004 ஜூலை 29]

இத்தொழிலில் போட்டியிருந்தபோதிலும், பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு 1984 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் படிப்படியாக முன்னேறி வருகின்றது. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சாலைப் போக்குவரத்து துறையில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, நிர்வாக சேவை போன்ற துறைகளில் அதிக அளவில் சேவையை விரிவுபடுத்தும் வாய்ப்பு உள்ளது. நிதி ஆதாரங்களில் தட்டுப்பாடு இருந்தபோதிலும், இப்பகுதிகளில் வணிகத்தை விரிவுபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மிகப்பெரிய அளவில் மதிப்புடைய திட்டப்பணிகளை பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க ஏதுவாக நிதி ஆதாரங்களை மேம்படுத்த பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழுவின் மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

## 15.0 சாலைப் போக்குவரத்து நிறுவனம்

சாலைப் போக்குவரத்து நிறுவனமானது 1860 ஆம் ஆண்டு இந்திய சங்கங்களின் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம் 2003–2004 ஆண்டில் தனது 28 வது ஆண்டு பணியில் அடியெடுத்து வைத்து தொடர்ந்து பணி செய்து வருகின்றது. இது சாலைப் போக்குவரத்து தொடர்புள்ள பிரச்சினைகளைப்பற்றி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளையும், அரசு போக்குவரத்துக் கழகங்களில் கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் தரக்கட்டுப்பாட்டிற்காக பரிசோதித்து மதிப்பீட்டறிக்கை தருவது மற்றும் பலதரப்பட்ட பயிற்சி அளிக்கப்படுவதில் மிகப் பெரிய அளவில் ஈடுபட்டு வருகிறது.

சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி 1984 ஆம் ஆண்டில் இந்நிறுவன ஆதரவில் ஈரோட்டில் துவக்கப்பட்டது. இதுவரை 3,523 பொறியியல் பட்டதாரிகள் (பி.இ), 159 கணினி பயன்பாட்டியலில் முதுகலை பட்டதாரிகளும் (எம்.சி.ஏ) இந்த பொறியியல் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றுள்ளனர். 1986–ல் தீட்டப்பட்ட திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பெருந்துறை மருத்துவக் கல்லூரி 1992–93 ஆம் கல்வியாண்டிலிருந்து சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் (பெருந்துறையில்) செயல்பட்டு வருகின்றது. இதுவரை இக்கல்லூரி 674 மருத்துவர்களை உருவாக்கியுள்ளது. இது தவிர சாலைப் போக்குவரத்து நிறுவனம் குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளை 1992–93 ஆம் ஆண்டிலிருந்து நடத்தி வருகிறது.

[2004 ஜூலை 29

பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் 50 சதவீத இடங்களை பொதுப் பிரிவிலும், மீதமுள்ள இடங்கள் அனைத்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தினால் சேர்க்கப்படுகின்றனர். பெருந்துறை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் மொத்தமுள்ள 60-ல் 36 இடங்கள் பொதுவாகவும் மீதமுள்ள 24 இடங்கள் அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் தகுதி அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன. இடங்களின் எண்ணிக்கையை 100ஆக உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து கல்வி நிறுவனங்களும், அனைத்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் வழங்கிய வட்டியில்லாக் கடனாக தரும் வைப்புத் தொகையின் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மேற்கண்ட அனைத்து கல்லூரிகளுக்கும் ஏற்படும் மூலதன செலவுகளை அனைத்து போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்படும் சிறப்பு மூலதன பங்குத் தொகையைக் கொண்டு ஈடு செய்யப்படுகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம், கும்மிடிபூண்டியில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி ஒன்றும் மற்றும் தமிழகத்தில் 14 மண்டல பயிற்சி மையங்கள் மூலமாகவும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியை அளித்து வருகிறது. 2002-2003 ஆண்டு வரை 37,515 நபர்கள் ஓட்டுநர்களாக பயிற்சி பெற்றுள்ளனர். இந்த வருடத்தில் 589 மாணவர்கள் ஓட்டுநர் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் இருசக்கர வாகன ஓட்டுநர் மற்றும் சிறுவாகன ஓட்டுநர் பயிற்சி மையம் ஒன்றை சென்னை தரமணியில் சாலைப் போக்குவரத்து நிறுவனம் தொடங்கியுள்ளது. திருச்சிராப்பள்ளியில் இலகுரக வாகன ஓட்டுநர் மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் ஒன்று 1997ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், மேல்கூடுகள், டயர், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள், பிஸ்டன் அசெம்பிளி, பயணச்சீட்டு அச்சிடுதல் ஆகியவைகளை வாங்குவதற்கு விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்து தர, சாலைப் போக்குவரத்து நிறுவனம் இணைப்பு அலுவலகமாக செயல்படுகிறது.



2004 ஜூலை 29]

## 16.0 தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை

தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை பணித் துறையாக செயலாற்றி வருகிறது. இத்துறை மாநிலத்திலுள்ள சுமார் 10,100 அரசுத் துறை வாகனங்களுக்கு பழுதுநீக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்துறையில் இப்பணிக்கென மாநிலத்தின் மாவட்டத் தலைநகரங்களில் 20 தானியங்கிப் பணிமனைகளும், சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் ஒரு பணிமனையும் செயல்பட்டு வருகின்றன. மேலும் மாவட்டப் பணிமனைகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட மூன்று மண்டலத் துணை இயக்ககங்கள் சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

அரசுத் துறை வாகனங்களுக்கு எரிபொருள், மசகு எண்ணெய் வழங்கும்பொருட்டு சென்னையில் இரண்டு எரிபொருள் வழங்கு நிலையங்கள் (ஒன்று நந்தனம், பிறிதொன்று சென்னை, தலைமைச் செயலக வளாகத்தில்) மற்றும் தஞ்சாவூர், மதுரை, சேலம், கோவை, திருச்சி, தருமபுரி, கடலூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஒவ்வொரு எரிபொருள் வழங்கு நிலையமும் என மொத்தம் பத்து எரிபொருள் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

## 17.0 இரயில்வே மற்றும் அஞ்சல் துறை ஆகியவற்றின் ஒருங்கிணைக்கும் முகமை

மத்திய அரசு துறைகளான இரயில்வே, அஞ்சல், தொலை தொடர்பு மற்றும் விமான போக்குவரத்து ஆகிய துறைகள் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்களை மாநில அரசின் ஒருங்கிணைக்கும் முகமையாக போக்குவரத்துத் துறை செயல்படுகிறது. அத்துறைகள் தமிழகத்தில் செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான நிலங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையர் ஆகியோருடன் ஒருங்கிணைந்து கையகப்படுத்தப்பட்டு, அத்துறைகளுக்கு வழங்கப்பட்டு திட்டங்கள் செயல்பட உறுதுணையாக போக்குவரத்துத் துறை இயங்குகின்றது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே இரயில்வே துறையால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தவிர, கீழ்க்குறிப்பிட்ட திட்டங்கள், திட்டச் செலவுகளில் 50 : 50 என்ற விகிதத்தில் தமிழக அரசு தனது பங்கினை ஏற்று செயல்படுத்தப்படுகின்றன.

[2004 ஜுலை 29

## இரயில் பாதை மாற்றம்

## திட்டத்திற்கான தொகை

| | |
|---|---|
| கடலூர் - விருத்தாச்சலம் - சேலம் | ரூ. 261.00 கோடி (தொழில் துறையால் நிறைவேற்றப்படும் திட்டம்) |
| சென்னை கடற்கரை - தாம்பரம் (12 சந்திக் கடவுகளை, மேம்பாலங்கள், கீழ்ப்பாலங்களாக மாற்றுவது உட்பட) | ரூ. 622.52 கோடி (போக்குவரத்துத் துறையால் மேற்கொள்ளப்படும்) |
| <u>புதிய வழித்தடம்</u><br>அதிவேக போக்குவரத்து வசதி (சென்னை கடற்கரை- வேளச்சேரி) | இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக 3-ல் 2 பங்கு, இரயில்வேத் துறையின் பங்காக மீதமுள்ள 3-ல் 1 பங்கு என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (வீட்டு வசதித் துறையின் மூலம்) |

இம்மாநிலத்தில் புதிய இரயில்பாதைகள் அமைப்பது. மீட்டர் கேஜ் இருப்புப் பாதைகளை அகல இரயில்பாதையாக மாற்றுவது, இரயில் பாதைகளை விரிவாக்கம் செய்தல், இரயில் வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களை விரைவில் நிறைவேற்றும்படி மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஏற்கெனவே நடைபெற்றுவரும் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி தமிழ்நாடு அரசு, இரயில்வே அமைச்சகத்தினைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், ஒரு கணினி முன்பதிவு மையம் அமைத்திட அண்மையில் இரயில்வே அமைச்சகம் கொள்கை முடிவு எடுத்துள்ளது. இரயில் நிலையம் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் கணினி முன்பதிவு மையம் அமைத்திட அத்துறை மாநில அரசு இலவசமாக இடம் தரவேண்டும் என கேட்டிருந்தது.



2004 ஜுலை 29]

இரயில்வேத் துறையின் வேண்டுகோளுக்கிணங்க செஞ்சியில் கணினி முன்பதிவு மையம் அமைக்க 600 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடத்தினை இரயில்வேத் துறைக்கு இலவசமாக வழங்க தமிழக அரசு இசைவளித்துள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருடன் இரயில்வேத் துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு தேவையான கட்டடத்தை தெரிவு செய்த பின், கணினி முன்பதிவு மையம் செயல்படத் தொடங்கும்.

எழும்பூர் இரயில் நிலையங்களை உயர்த்தப்பட்ட இருவழிப்பாதை மூலம் இணைக்க இரயில்வேத் துறை முடிவெடுத்துள்ளது. இதற்காகும் திட்டச் செலவு ரூ.90.44 கோடியாகும். இத்திட்டத்திற்காக சுமார் 7,300 சதுர மீட்டர் நிலத்தினை இலவசமாக தமிழ்நாடு அரசு அளிப்பது பற்றிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்களுக்காக 2004—2005 ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிதி இரயில்வேத் துறையால் ஒதுக்கப்பட்டுள்ளது:

| வரிசை எண் | விவரங்கள் | 2004—2005 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | <u>புதிய பாதைகள்</u><br>கரூர்-சேலம் புதிய இரயில்பாதை | 10.12 |
| | <u>அகல இரயில்பாதையாக மாற்றுதல்.</u> | |
| 2. | கடலூர்-சேலம் | 10.00 |
| 3. | திருச்சி-நாகூர்-காரைக்கால் | 15.90 |
| 4. | தஞ்சாவூர்-விழுப்புரம் | 15.00 |
| 5. | கொல்லம்-திருநெல்வேலி-திருச்செந்தூர் மற்றும் தென்காசி-விருதுநகர் | 31.00 |
| 6. | விழுப்புரம்-காட்பாடி | 1.00 |
| 7. | விழுப்புரம்-பாண்டிச்சேரி | 11.20 |
| 8. | மதுரை-ராமேஸ்வரம் | 35.00 |

[2004 ஜூலை 29

| | | |
|---|---|---|
| 9. | திருச்சி—மானாமதுரை | 15.00 |
| 10 | <u>இருவழிப்பாதை அமைத்தல்</u><br>இருகூர்-கோயம்புத்தூர் | 7.00 |
| 11. | அத்திப்பட்டு-கொருக்குப்பேட்டை | 6.00 |
| 12. | பட்டாபிராம்-திருவள்ளூர்-நான்காவது மற்றும் திருவள்ளூர் அரக்கோணம்-மூன்றாவது வழிப்பாதை அமைத்தல். | 6.00 |
| 13. | அம்பாத்துறை-கொடை ரோடு | 2.06 |
| 14. | சென்னை கடற்கரை-கொருக்குப்பேட்டை | 5.00 |
| 15. | மதுரை-திண்டுக்கல் | 0.10 |
| 16. | சென்னை கடற்கரை-அத்திப்பட்டு நான்காவது பாதை அமைத்தல் | 5.00 |
| 17. | <u>மாநகர போக்குவரத்துத் திட்டம்</u><br>திருமயிலை-வேளச்சேரி-(இரண்டாம் கட்டம்) | 10.00 |
| 18. | சென்னை கடற்கரை-தாம்பரம்-செங்கல்பட்டு -அகல இரயில் பாதையாக மாற்றுதல். | 30.00 |

தென்னக ரயில்வே சென்னை தாம்பரத்திற்கும் எழும்பூருக்கும் இடையே மீட்டர்கேஜ் இருப்புப் பாதையை அகலப்பாதையாக மாற்றும் திட்டத்தினை மேற்கொள்வதால், 1.7.2004 முதல் மீட்டர் கேஜ் தொடர்வண்டிகள் இயக்குவது நிறுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக தாம்பரத்திற்கும் எழும்பூருக்கும் இடையே போதுமான அதிக பேருந்துகளை இயக்க வேண்டும் என தென்னக இரயில்வே சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தினைக் கேட்டுக்கொண்டது. அதன்படி, 1.7.2004 முதல் சென்னை தாம்பரம், பல்லாவரம் மற்றும் கிண்டியிலிருந்து சைதாப்பேட்டை மற்றும் பாரிமுனைக்கும், இடையிலுள்ள இரயில்வே நிலையங்களுக்கிடையேயும் போதுமான அதிக சிறப்புப் பேருந்துகளை மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.



2004 ஜூலை 29]

## 17.1 விமான தள விரிவாக்கம்

மாநில அரசின் தொடர்முயற்சியின் காரணமாகவும், போக்குவரத்து வளர்ச்சியின் காரணமாகவும், இந்திய விமான நிலைய ஆணையம், கோயம்புத்தூர் விமான நிலையத்தின் ஓடுபாதையை விரிவுபடுத்தவும், ஓடுபாதையில் மின் விளக்கு வசதியை ஏற்படுத்தவும் தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் ஏர் பஸ், போயிங் வகை பெரிய விமானங்களை இவ்விமான நிலையத்தில் இயக்க முடியும்.

மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கும், கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கென 45.96 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெருகிவரும் மக்கள் தேவை மற்றும் தொழில் கட்டமைப்புகளின் வளர்ச்சி இவற்றை கருத்திற்கொண்டு சேலம் மற்றும் தூத்துக்குடி நிலையங்கள் இயக்கத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென இவ்வரசு மைய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென தஞ்சாவூரில் புதிய விமான நிலையம் அமைக்கப்பட வேண்டுமெனவும் இவ்வரசு மைய அரசை அணுகி உள்ளது.

## 17.2 சென்னை விமான பறக்கும் குழாம்

தமிழக அரசு, சென்னை விமான பறக்கும் குழாமிற்கு நிர்ணயிக்கப்பட்ட உதவித்தொகையாக ஓர் ஆண்டிற்கு ரூ. 3.80 இலட்சம் வழங்கி வருகிறது. மேலும், விமான எரிபொருள் உதவித் தொகையாக ஓராண்டிற்கு ரூ. 3.72 இலட்சம் வழங்கப்படுகிறது.

## 18.0 நிறைவுரை

இந்தியாவில் முதன்மை மாநிலமாகத் திகழ தமிழ்நாடு எடுத்து வரும் முயற்சிகளின் பாதையாக போக்குவரத்துத் துறை உள்ளது. மாநிலத்தின் முழு பொருளாதார வளத்தையும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் நவீன திறமையான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்துத் திட்டம் அவசியம் என இத்துறை நம்புகிறது. பல கட்டுப்பாடுகள் உள்ள போதிலும் மக்களுக்கு நல்ல போக்குவரத்து வசதியை அளிக்கும் முயற்சியில் தளர்வின்றி இத்துறை செயல்படும்.

[2004 ஜூலை 29

## மானியக் கோரிக்கை எண் 46

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு

## 2004–2005

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 126,90,98 | 24 | 126,91,22 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 23,02,17 | 5,03 | 23,07,20 |
| | மொத்தம் | 149,93,15 | 5,27 | 149,98,42 |



2004 ஜூலை 29]

## மானியக் கோரிக்கை எண் 46

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு

## 2004-2005

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் திட்டத்தில் சேராதது | 126,90,98 | -- | 126,90,98 |
| | மாநிலத்திட்டம் | -- | 24 | 24 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை திட்டத்தில் சேராதது | 20,42,76 | 1 | 20,42,77 |
| | மாநிலத் திட்டம் | 2,59,41 | 502 | 2,64,43 |
| | மொத்தம் | 149,93,15 | 527 | 149,98,42 |

## இணைப்பு - III

(131 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

# மானியக் கோரிக்கை எண் 26 — தொழில் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2004–2005

## முன்னுரை

தமிழ்நாடு, அதனுடைய வலுவானதும் பற்பல தொழிலுக்கு ஏற்றதுமான தொழில் கட்டமைப்பு வசதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதாலும், தொழில்நுட்ப தகுதி நிரம்பிய மனிதவளம் மிகுந்து கொண்டுள்ளதாலும், தொழில் தொடங்க சாதகமான சூழ்நிலையையும் கொண்டுள்ளதாலும், அதிகமான அளவில் தொழில் முனைவோரை ஈர்க்கின்றது.

கடந்த சில மாதங்களாக இரண்டாம் நிலை பிரிவுத் தொழில் மீண்டும் புனரமைக்கப்படும் என்கிற நன்னம்பிக்கை தென்படுகிறது. சுரங்கம், உலோகமற்ற கனிமப்பொருள், ஊர்தி உதிரி பாகங்கள், மின்சாரக் கருவித் தொழில்கள் போன்ற துணை நிலை பிரிவுகள் வலுவான வளர்ச்சி அடைந்துள்ளன. அதே நேரத்தில் வேறு சில துறைகளில் நிலைமை நேர்மாறாக உள்ளது. மத்திய அரசு சில குறிப்பிட்ட நாடுகளுடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் காரணமாகவும், தடையில்லா வணிக உடன்படிக்கை மேற்கொண்டதாலும், வர்த்தக ரீதியில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்நிலையில் அனைத்து பிரிவுகளின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்புகளும், பலதரப்பட்ட தொழில் குழுக்கள் தயாரித்த மற்றும் தயாரிக்கப்பட வேண்டிய பகுத்தாய்வுகளும் கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும்.

புதிய தொழில் கொள்கையை 2003ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இந்த அரசு வெளியிட்டது. புதிய தொழில்களின் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில் தற்போதைய தொழில் அடிப்படைகளை ஒருங்கிணைத்து செயல்படுவது தொழில் கொள்கையின் நோக்கமாகும். இக்குறிக்கோள்களை அடைந்திடத் தேவையான போதெல்லாம் தொழில் அமைப்புகளை கலந்தாலோசித்து உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், பொதுத் துறை நிறுவனங்களை மேம்படுத்துதல், தொழிலாளர் சட்டச் சீர்திருத்தம், நிதி

நிர்வாக சீர்திருத்தம், நடைமுறைகளை சீரமைத்து எளிமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை அரசு திட்டமிட்டு வருகிறது.

இத்துறையைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசின் செயல்பாடுகள் அடுத்து வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து, பொது மற்றும் தனியார் பங்கேற்பினை அரவணைத்து மாநிலத்தில் தொழில் வளர்ச்சியினை மேம்பாடடையச் செய்துள்ளது. தனிப்பட்ட தொழில் முனைவோர், நன்கு அறிமுகமான தொழில் நிறுவனங்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறை முயற்சியில் பலவகை உற்பத்தியை தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் உட்கட்டமைப்புக்கான முனைப்பினையும் இந்நிறுவனம் ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதுவரையில் டிட்கோ நிறுவனம், 100-க்கும் மேற்பட்ட திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தியுள்ளது. மேலும் 29 தொழில் திட்டங்கள் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. 2004 மார்ச் 31 ஆம் நாள் நிலவரப்படி, இருபத்தி மூன்று கூட்டு நிறுவனங்களில் தனக்கிருந்த பங்கினை திரும்பப் பெற்றுக்கொண்டுள்ளது. பிற நிதி நிறுவனங்களுடன் இணைந்து நிறுவப்பட்ட முயற்சி முதலீடு நிதியைக் கொண்டு டிட்கோ நிறுவனம் தொழில் முதலீடுகளில் துணிகர முயற்சிகளுக்கு துணை புரிந்து வருகிறது. டிட்கோ, ஒரு வங்கியில்லா நிதி நிறுவனமாகச் செயல்பட்டு, பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதிகளைப் பெற்று வருகிறது. 31-3-2004 வரையில் ரூ.276.01.கோடி வைப்பு நிதியாகப் பெற்றுள்ளது. 23-2-2004 முதல், டிட்கோ நிறுவனத்தை ஒரு பொது நிதி நிறுவனமாக, மத்திய அரசு அறிவித்துள்ளது.

உலகளவிலும் இந்தியப் பொருளாதாரத்திலும் ஏற்பட்டு வருகின்ற குறிப்பிடத்தக்க மாற்றங்கள், ஏற்றுமதி சந்தையில் புதுப்புது வாய்ப்புகளை உருவாக்குகின்றன. அதே நேரத்தில், அதிக அளவில் தமிழ்நாட்டில் முதலீடுகளைக் கவர்ந்து ஈர்ப்பதும், போதிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட அதிக அளவிலான உள்நாட்டு முதலீடுகளைப் பெறுவதிலும் இடர்கள் ஏற்படுகின்றன. இந்தக் குறிக்கோள்களை அடைந்திட, டிட்கோ நிறுவனம், ஒவ்வொரு துறைக்குமான உட்கட்டமைப்பு மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு செயல்படுத்த முனைந்து வருகிறது.





### உட்கட்டமைப்பு திட்டங்கள்

2004-05 ஆம் ஆண்டில் டிட்கோவின் இணைத் துறை நிறுவனமான அசென்டாஸ் ஐ.டி. பார்க் (சென்னை) லிமிடெட், ஒரு பெரிய தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கான கட்டுமானப் பணிகளைத் துவங்கவுள்ளது.

டிட்கோவின் புதிய முயற்சியாக, டைசல் பயோ பார்க் என்னும் உயிரி பூங்கா ரூ.62.50 கோடி திட்ட மதிப்பீட்டில், விரைவில் செயல்படத் துவங்கவுள்ளது. இது ஒரு உலகத்தரம் வாய்ந்த உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு வழிகோலுவதாக அமையும். டைசல் வாடகைதாரர்களுக்கு வழங்கப்படும் ஆராய்ச்சிக் கூட இடவசதி உயிர் காப்புத்தரம்-2 நிலை கொண்டதாகும். (Bio-Safety Level-2 ) (BSL-2).

சில கட்டமைப்பு வசதிகளுக்காக இரப்பர் வாரியத்தின் உறுதியான பொறுப்பின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழில்கள் பூங்காவை செயல்படுத்துவதற்கு அக்ஸா டெக்னாலஜி நிறுவனத்துடன், டிட்கோ நிறுவனம் கூட்டு முயற்சி ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொண்டுள்ளது. கட்டடப் பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

எண்ணூரில் சிறப்பு பொருளாதார மையம் செயல்படுத்துவதற்காக சிறப்பு குறிக்கோள் அமைப்பு (Special Purpose Vehicle) ஒன்று ஏற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கொள்கையளவில் அனுமதி கிடைத்தவுடன் திட்டப் பணிகள் துவங்கப்படும். இம்மாநிலத்தில், ஒரு மருத்துவப் பூங்காவும் (Pharma Park), ஜவுளிப் பூங்காவும் (டெக்ஸ்டைல் பூங்கா) அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

பழைய மகாபலிபுரம் சாலையில் 6 தடங்களுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதை அமைப்பதற்கான திட்ட செயலாக்கப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

### மற்ற திட்டங்கள்

டிட்கோவுடன் இணைந்து விஷ்ணு பேப்ரிக்ஸ் லிமிடெட் என்னும் நிறுவனம், திருவில்லிப்புத்தூரில் 100 சதவிகித ஏற்றுமதி நோக்குடன், ரூ.16.00 கோடி திட்ட முதலீட்டில், கண்ணாடி இழைகளாலான துணிகள் மற்றும் ஜியோ டெக்ஸ்டைல்ஸ் தயாரிப்பதற்கான ஆலையின் கட்டடப் பணிகள் துவங்கியுள்ளன. இந்த நிறுவனம் 2004 இறுதியில் உற்பத்தியைத் துவங்கும்.

53-200—20

ஈரோடு நர்மதா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம், ரூ76.87 கோடி திட்டச் செலவில், டிட்கோவுடன் இணைந்து செயல்படுத்திவரும் துணிகளை பதப்படுத்தும் நவீன ஆலையின் வணிக உற்பத்தி 2004–2005–ல் துவங்கும்.

இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டு நிறுவனமான தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம், சென்னை, நந்தம்பாக்கத்திலுள்ள சென்னை வர்த்தக மையத்தில் அமைத்து வரும் ஆயிரத்தி ஐநூறு இருக்கை வசதி கொண்ட உலகத்தரம் வாய்ந்த கருத்தரங்கு மையமும் ஒரு பல்நோக்கு அரங்கமும் 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிட்கோ நிறுவனம், ஐ.எல். & எப்.எஸ். எனப்படும் உட்கட்டமைப்பு குத்தகை நிதிசேவை நிறுவனத்துடன் சேர்ந்து 'தமிழ்நாடு இன்ஃபோடெக் நிதி' மற்றும் 'இந்தியா ஆட்டோ ஆன்சிலரி நிதி' என்ற இரு முயற்சி முதலீடு நிதிகளைத் துவக்கியுள்ளது. அவை இதுவரை முறையே ஏழு மற்றும் எட்டு அலகுகளுக்கு முயற்சி முதலீடு நிதியினை அளித்துள்ளது. தற்போது, டிட்கோ மற்றும் ஐ.எல். & எப்.எஸ். நிறுவனம், உயிர் அறிவியல் நிறுவனங்களுக்கு (Life Sciences Enterprise) உதவி செய்வதற்காக ஒரு மூன்றாவது முதலீட்டு நிதியைத் துவக்க உள்ளது.

மாறிவரும் வணிக சூழ்நிலைத் தேவைகளை எதிர்கொள்ளும் பொருட்டு, டிட்கோ அதனுடைய வினைமுறை திறத்தினை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் அதனை மறு சீரமைப்பதற்குத் தேவையான உதவிகளை அரசு தொடர்ந்து அளித்து வரும்.

## தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டில் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெரிய தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் ஆகும். சிப்காட் நிறுவனம் அதனுடைய முக்கிய நோக்கங்களை கீழ்க்கண்ட வழிவகைகளில் செயல்படுத்தி வருகிறது:

அ) தொழில் வளாகங்கள்/பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்களை மேம்படுத்தி, பராமரித்து விற்பனை செய்தல்

ஆ) மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை செயல்படுத்துதல்



தவணைக் கடன் வழங்கும் பணிகள் யாவும் 1–4–2000 முதல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டதால், இந்நிறுவனம், ஏற்கெனவே வழங்கப்பட்ட தவணைக் கடன் நிலுவைகளை வசூலிப்பதிலும் வளர்ச்சிப் பணியிலும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் 31–3–2004 வரை கையகப்படுத்திய, மேம்படுத்தி விற்பனை செய்த நிலங்களின் பரப்பளவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ஏக்கரில்)

| | | |
|---|---|---|
| கையகப்படுத்தப்பட்ட மொத்த பரப்பளவு | – | 21343.73 |
| ஒதுக்கீடு செய்யக்கூடிய மொத்த பரப்பளவு | – | 15957.29 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த பரப்பளவு | – | 6764.26 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட அலகுகள் எண்ணிக்கை | – | 1131.00 |
| வளர்ச்சிப் பணிக்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை | – | ரூ.31645.00 இலட்சம் |

## 2004–05 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

(ஏக்கரில்)

| | | |
|---|---|---|
| கையகப்படுத்தப்பட உள்ள பரப்பளவு | – | 2744.71 |
| மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பரப்பளவு | – | 901.00 |
| விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ள பரப்பளவு | – | 785.00 |
| மேம்பாட்டிற்காக செலவிடப்பட உள்ள தொகை | – | 1902.00 இலட்சம் |

## சிப்காட் தொழில் வளாகங்கள்/பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்கள்

சிப்காட் நிறுவனம் பன்னிரெண்டு மாவட்டங்களில் மொத்தம் பதினேழு தொழில் வளாகங்கள்/பூங்காக்கள்/வளர்ச்சி மையங்களை மேம்படுத்தி உள்ளது. இந்த தொழில் வளாகங்கள் முதலியன பின்வரும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | தொழில் வளாகங்கள்/ பூங்காக்கள்/வளர்ச்சி மையங்கள் அமையப்பட்டுள்ள இடங்கள் | மாவட்டத்தின் பெயர் | மொத்த நிலப்பரப்( (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1. | இராணிப்பேட்டை | வேலூர் | 1663.97 |
| 2. | ஓசூர் | கிருஷ்ணகிரி | 2410.71 |
| 3. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 421.10 |
| 4. | மானாமதுரை | சிவகங்கை | 492.07 |
| 5. | கும்மிடிப்பூண்டி | திருவள்ளூர் | 1257.08 |
| 6. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 2707.86 |
| 7. | கடலூர் | கடலூர் | 712.27 |
| | கடலூர் தொழிற் பூங்கா | கடலூர் | 1266.00 |
| 8. | இருங்காட்டுக்கோட்டை | காஞ்சிபுரம் | 1843.68 |
| 9. | திருப்பெரும்புதூர் | காஞ்சிபுரம் | 2469.00 |
| 10. | சிறுசேரி (தகவல் தொழில்நுட்பப் பூங்கா) | காஞ்சிபுரம் | 980.00 |
| 11. | நிலக்கோட்டை | திண்டுக்கல் | 386.21 |
| 12. | பர்கூர் | கிருஷ்ணகிரி | 1348.00 |
| 13. | ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற்பூங்கா, கும்மிடிப்பூண்டி | திருவள்ளூர் | 224.11 |
| 14. | பெருந்துறை | ஈரோடு | 2751.98 |
| 15. | கங்கைகொண்டான் | திருநெல்வேலி | 2038.33 |
| 16. | ஓரகடம் | காஞ்சிபுரம் | 2043.00 |
| 17. | செய்யார் | திருவண்ணாமலை | 631.00 |

**II. உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு திட்டங்களை செயல்படுத்தும் பணிகள்**

சிப்காட் நிறுவனம் பின்வரும் சிறப்பு கட்டமைப்பு வசதி மேம்பாடு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது:





**அ) மத்திய அரசின் திட்டங்கள்**

**உணவுப்பூங்கா, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்**

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிப்காட் நிலக்கோட்டை தொழில் வளாகத்தில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பளவில் ரூ.13.00 கோடி செலவில் ஒரு உணவு பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கு தேவையான மத்திய அரசின் பங்கு மானியமாக ரூபாய் 3.25 கோடிக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நிலக்கோட்டை உணவுப் பூங்கா லிமிடெட் என்ற பெயரில் சிறப்பு குறிக்கோள் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

**ஆடை தயாரிப்பு தொழிற் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை, காஞ்சிபுரம்**

சிப்காட் நிறுவனம் ஆடை மற்றும் கைத்தறித் துணி ஏற்றுமதியாளர் கூட்டமைப்புடன் ஆடை தயாரிக்கும் நிறுவனங்களுக்கான தொழிற் பூங்காவை செயல்படுத்த முனைந்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூபாய் 24 கோடி. இந்தத் திட்டத்திற்கான செயலாக்க அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ரூ.17.00 கோடி மானியம் கோரப்பட்டுள்ளது.

**கயிறு தொழில் மற்றும் தோல் தொழில்களுக்கான மேம்பாட்டு திட்டம்**

சிப்காட் நிறுவனம், கயிறு மற்றும் தோல் தொழில்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதியினை மத்திய அரசு மற்றும் பொது, தனியார் கூட்டுப் பயனீட்டாளர்கள் நிதி உதவியுடன் செயல்பட வசதி செய்து கொடுக்கும். தோல் தொழில்களுக்கான தொழில் பிரிவுகள், ஆம்பூரிலும், கயிறு தொழில்களுக்கான தொழில் பிரிவுகள் சேலம் மற்றும் தருமபுரி மாவட்டத்திலும் அமைக்க திட்ட முன்மொழிவுகள் அனுமதிக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**ஆ. தமிழக அரசின் திட்டங்கள்**

**சுற்றுச்சூழல் சார்ந்த தொழில் பூங்கா, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்**

சுற்றுச்சூழல் சார்ந்த பூங்காவை ரூபாய் 5.00 கோடி செலவில் அமைத்திட 50 ஏக்கர் நிலம் நிலக்கோட்டையில் உள்ள சிப்காட் தொழில்

வளாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றுச்சூழல் சார்ந்த தொழில் பூங்காவானது மூலிகை, தோட்டக்கலை, உயிரி தொழில்நுட்பம், மறுபயன்பாட்டு எரிசக்தி முதலிய துறைகளைச் சார்ந்த தொழிற்சாலைகளை உருவாக்கிட வழிவகுக்கும். இந்தத் திட்டத்தை செயல்படுத்த சிறப்பு குறிக்கோள் அமைப்பு விரைவில் ஏற்படுத்தப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

**ஒருங்கிணைந்த அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியம் – சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்கா**

2003–04 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் தெரிவித்த அறிவிப்புக்கு இணங்க, சிப்காட் நிறுவனம் சென்னைக்கு அருகே சிறுசேரியிலுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ஒருங்கிணைந்த அறிவுத் திறன் நகரியம் ஒன்றினை அமைத்திட சிங்கப்பூரைச் சேர்ந்த திருவாளர் லீ கிம் டா ஹோல்டிங்ஸ் என்கிற கூட்டமைப்பினை தேர்வு செய்துள்ளது. இந்தத் திட்டத்தினை 103 ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்திட தமிழக அரசும், லீ கிம் டா ஹோல்டிங், சிங்கப்பூர் கூட்டமைப்பு நிறுவனமும் புரிந்துணர் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டுள்ளன. இதற்காக, சிங்கப்பூர் கூட்டமைப்பு நிறுவனமும் இந்திய பங்குதாரர் ஒருவரும் சேர்ந்து சிங்கப்பூர் ரியலிட்டி பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு இந்திய நிறுவனத்தைத் தொடங்கியுள்ளனர். இதன் தொடர்பாக சிப்காட் நிறுவனம் இதுவரை 61.93 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒருங்கிணைந்த அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியத்தை உருவாக்குவதற்கு தேவையான பெருந்திட்டம் ஒன்று முடிவு நிலையில் உள்ளது. மேலும் இதற்கான கட்டுமானப் பணிகள் 2004 செப்டம்பர் முதல் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பொதுநலத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய தொழிற்சாலை கழிவுகளை அகற்றும் திட்டம் – மேலக்கோட்டையூர், காஞ்சிபுரம் மாவட்டம்**

ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலை கழிவுகளை அகற்றும் திட்டத்திற்கு, பொருத்தமான இடமாக காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர் கிராமத்தில் உள்ள 68.920 ஹெக்டேர் நிலப்பரப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு தொழிற் கழிவு மேலாண்மை சங்கம், தனது அமைப்பாக தமிழ்நாடு கழிவு மேலாண்மை லிமிடெட் என்ற சிறப்பு குறிக்கோள் நிறுவனத்தினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்கான அரசாணை (நிலை) எண் 251, வருவாய், நாள் 27-5-2004 மூலம் சிப்காட் நிறுவனத்திற்கு மேலகோட்டையூர் என்ற இடத்தில் 68.92.0 ஹெக்டேர் நிலம் உரிம மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



**தற்போது செயல்பட்டு வரும் தொழில் வளாகங்களை மேம்படுத்துதல்**

முதலீட்டாளர்களுக்கு அதிக வாய்ப்புள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் பேட்டைகளை கூட்டாண்மை அடிப்படையில் நிர்வகிக்க, தொழில் கூட்டமைப்பினை, ஈடுபடுத்தி சிப்காட் நிறுவனம் இத்தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும். சிப்காட் நிறுவனமும், தொழிற் கூட்டமைப்பு பிரதிநிதிகளும் இராணிப்பேட்டை மற்றும் ஓசூர் தொழில் வளாகங்களை ஆய்வு செய்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பகுதிகளை கண்டறிந்துள்ளது. ஓசூர் தொழில் வளாகத்திற்கு சுமார் ரூபாய் 610 இலட்சமும் இராணிப்பேட்டை தொழில் வளாகத்திற்கு சுமார் ரூபாய் 450 இலட்சமும் இந்த உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டத்திற்கு தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு தேவையான பங்கீட்டு முறைப் பற்றி கணக்கிடப்பட்டு வருகிறது. தொழில் கூட்டமைப்பின் நிதி பங்கீடு குறித்த கருத்துக்களை அறிந்த பிறகு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) இந்திய நிறுமங்கள் சட்டத்தின்கீழ் 1949 ஆம் ஆண்டில் ஒரு நிறுமமாக உருவாக்கப்பட்டது. இது நாட்டில் உள்ள பழமையான நிதி நிறுவனங்களில் ஒன்றாகும். இக்கழகம் தொடக்க காலத்திலிருந்தே தொழில்களை மேம்படுத்தவும் வளர்ச்சியடையச் செய்யவும் குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள சிறிய தொழில்கள் வளர்ச்சியடைய மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

இக்கழகம் தற்பொழுது புதிய தொழில்கள் நிறுவ நிலம் வாங்குதல், கட்டடம் கட்டுதல், தளவாடம் மற்றும் இயந்திரம் வாங்குவதற்கு ரூ.800 இலட்சம் வரை காலக் கடன் வழங்குகிறது. இதுமட்டுமின்றி, தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் ஏற்கெனவேயுள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், நவீனமயமாக்குவதற்கும், நிதி உதவி அளிக்கிறது.

[2004 ஜூலை 29

இக்கழகத்தினால் வழங்கப்படும் பெரும்பான்மையான நிதியுதவி காலக் கடன்களேயாகும். இக்கழகத்தின் பெருவாரியான காலவரையுடன் கூடிய கடனுதவிகளில் பெரும்பகுதியை தகுதிவாய்ந்த சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு கிடைக்குச் செய்வதாகும். முதல் சந்ததியினர் என்ற பிரிவிற்குள் வரும் தொழில் முனைவோரின் சுய வேலை வாய்ப்பிற்கு உதவும் நோக்குடன். தேசிய மூலதனப் பங்குத் திட்டம் (NEF), முன்னாள் இராணுவ வீரர்களுக்கு சுய வேலைவாய்ப்பு நிதி திட்டம் (SEMFEX), மகளிர் தொழில்முனைவோருக்கு மகிளா உதய நிதித் திட்டம் போன்ற பல திட்டங்களின்கீழ் இந்நிறுவனம் நிதியுதவி அளித்து வருகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்குதல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி போன்ற மறு நிதியுதவி திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் சிறுதொழில் நவீனமயமாக்கப்படுவதற்கு இக்கழகம் பெரும்பங்கு ஆற்றி வருகிறது. துணை அலகுகள் மற்றும் சேவை பிரிவு திட்டங்கள் உள்ளிட்ட சிறு தொழில்களை நவீனமயமாக்குவதற்கும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கும் சலுகை வட்டி விகிதமான 11.25/11.5 விழுக்காடு வட்டி விகிதத்தில் "தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கும் மறு நிதி வசதி" திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது.

தொழில்நுட்ப மேம்பாடு திட்டத்தின்கீழ் ஜவுளி மற்றும் சணல் தொழில்களுக்கு மட்டும் கிடைக்கக்கூடிய 5 விழுக்காடு வட்டி மானியத்துடன் 9.5 விழுக்காடு /10 விழுக்காடு என்ற வட்டி சலுகையில் சிறிய மற்றும் நடுத்தர அலகுகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. கணினி பயிற்சி நிலையங்கள் அமைப்பதற்கும் வேறு தகவல் தொழில் நுட்ப திட்டத்திற்கும் நிதியுதவி வழங்குவது மட்டுமல்லாது சேமிப்புக் கிடங்குகள், மருத்துவமனைகள், சமுதாயக் கூடங்கள், வணிக வளாகங்கள், உணவு விடுதிகள் போன்ற சேவை பிரிவுகளுக்கும் நிதி உதவியளிக்கப்படுகிறது.

மேலும் (அ) தொழில்நுட்பவியல் மேம்பாடு/நவீனப்படுத்துதலுக்காக பெறப்படும் காலக் கடனுக்காகவும், (ஆ) தேசிய சமபங்கு நிதியுதவித் திட்டத்தின்கீழ் பெறப்படும் காலக் கடனுக்காகவும் (இ) ISO சான்றிதழ் பெறுவதற்கெனவும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு நிமித்தமாக பெறப்படும் காலக் கடனுக்காகவும், வட்டி மானியச் சலுகையினை தமிழக அரசு விரிவுபடுத்தியுள்ளது. 01-04-2003 முதல் இயங்கி வரும் இத்திட்டத்தின் கீழ் உயர்ந்த அளவாக 3 சதவிகிதம் வரை வட்டி மானியம் அளித்து வட்டி விகிதம் குறைக்கப்படுகிறது.



2004 ஜூலை 29]

இக்கழகம் சிறு தொழில்கள் பயனடையும் நோக்குடன் கீழ்க்காணும் திட்டங்கள் மற்றும் சலுகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது:

**திட்டங்கள்**

1. குத்தகை/தவணைக் கொள்முதல் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக தளவாடங்கள் நிதியுதவித் திட்டம், நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் தொழில்களுக்கு மூலதனப் பொருள்/ தளவாடங்கள் வாங்க உதவும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2003–04 ஆம் ஆண்டில் 7 தொழில் நிறுவனங்கள் ரூ.2.71 கோடி நிதியுதவி பெற்று பயனடைந்துள்ளன.

2. கடன் சார்ந்த மூலதன மானியத் திட்டத்தின் (CLCSS)கீழ் 21 பிரிவுகள் அடங்கிய சிறுதொழில்கள், தொழில்நுட்ப மேம்பாடடைய, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு முகவராக இயங்குகிறது. இத்திட்டத்தின்கீழான கடன் தொகை மீது 12% மூலதன மானியம் ரூபாய் 4.80 இலட்சத்திற்கு மிகைப்படாமல் வழங்கப்படுகிறது. மேலும் இந்நிறுவனம், திருத்தியமைக்கப்பட்ட கடன் சார்ந்த மூலதன மானியத் திட்டம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டம் ஆகியவைகளின்கீழ் ஜவுளி மற்றும் சணல் சிறுதொழில்களை நவீனப்படுத்தி மேம்பாடடையச் செய்யும் திட்டத்தின் முகவராகவும் செயல்படுகிறது. இதன்கீழ் 12% கடன் சார்ந்த மூலதன மானியமாக தகுதியுள்ள முதலீட்டின் மீது அல்லது 5% வட்டி மானியம் இதில் எது தொழில் பிரிவுக்கு பயன்பெறும் வகையில் உள்ளதோ அதனை தொழில் மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 2003–04 ஆம் ஆண்டில், 19 தொழில் நிறுவனங்கள் ரூ.20.11 கோடி நிதியுதவி பெற்று பயனடைந்துள்ளன.

விசைத்தறி தொழிலை நவீனமயப்படுத்துவதற்கு வசதியாக, முன்பு 12% முதலீட்டு மானியமாக வழங்கப்பட்ட நிதியுதவித் திட்டத்தினை மாற்றி அமைத்து தொழில்நுட்பவியல் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் கடன் சார்ந்த மூலதன மானிய திட்டங்களின்கீழ் 20% முதலீட்டு மானியம் அல்லது ரூ.12

லட்சம் அல்லது 5% வட்டி மானியம் இதில் எது அதிகப் பயன் தருகிறதோ அது அளிக்கப்படுகிறது.

3. தமிழ்நாடு அரசு அறிவித்தபடி, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை செயல்முறைப்படுத்தும் இடைப்பட்ட முகவராக தமிழ்நாடு முதலீட்டு கழகம் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் வேளாண்மையைச் சார்ந்த சிறு தொழில் மேம்பாடடையச் செய்யும் வகையில் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரத்திலும் குறைந்தபட்ச மூலதன முதலீடாக ரூ.1.00 கோடியை ஒரு வட்டாரத்திற்கு என அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.2.01 கோடியை 31 அலகுகளுக்கு மானியமாக அனுமதியளித்துள்ளது.

4. சுய தேவைக்காக காற்றாலை மின்சக்தித் திட்டங்களுக்கு மரபுசாரா எரிசக்தியை பயன்படுத்தி உற்பத்தி செலவை குறைக்கும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிறப்பு வட்டிவிகிதமான 12.5% விழுக்காட்டில் நிதியுதவி வழங்குகிறது.

5. சிறுதொழில்களின் விற்பனை மற்றும் ஏற்றுமதி திறமைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன் அவைகளின் நிர்வாக திறமையின் தரத்தை மேம்படுத்தி ISO 9000 என்ற தர வரிசையில் தொழில் நிறுவனங்கள் தர சான்றிதழைப் பெறுவதற்கு புதியதொரு (RISO 9000) திட்டத்தினை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் உதவி பெறும் அலகுகள் ISO தர சான்றிதழ் பெறுவதற்கு செலவிடும் தொகையில் ரூ.75,000/–க்கு மிகைப்படாமல், 75 விழுக்காடு இந்திய அரசு அளிக்கும் ஊக்கத் தொகை/மானியமாக பெற தகுதி பெறுகின்றன.

6. தமிழ்நாடு மின்வாரியத்திற்குத் தேவையான பொருட்கள் வழங்கும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் அவை வழங்கும் பட்டிகளின் மதிப்பின் மீது நிதியுதவியினை அளிக்க பட்டி நிதியுதவித் திட்டம் (Bill Finance Scheme) என்ற புதியத் திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2003–04 ஆம் ஆண்டில் ரூ.36.40 கோடி உதவி அனுமதியளித்துள்ளது.



**சலுகைகள்**

1. அ. ரூ.10.00 இலட்சம் வரை வழங்கப்பட்ட கடன் நிலுவைக்கு, திருத்தி அமைக்கப்பட்ட ஒரே தவணையில் நிலுவைத் தொகை செலுத்தும் திட்டத்தின்கீழ், வேறுபாடு காணாமலும், விருப்புரிமையின்றியும், சலுகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்கீழ் ரூ.5.00 இலட்சம் வரை கடன் பெற்றவர்கள் ஒரே தவணையாக அசல் நிலுவை தொகை மற்றும் இதர நிலுவையினை செலுத்தி கணக்கை பைசல் செய்ய அனுமதிக்கப்பட்டது. தவிரவும் ரூ.5.00 இலட்சத்திற்கு மேலும் ரூ.10.00 இலட்சத்திற்கு குறைவாகவும் கடன் பெற்ற நிறுவனங்கள் எந்த தேதியில் இவர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை "சந்தேக கடன்" என்று வகைபடுத்தப்பட்டதோ அந்த தேதி வரையிலான அசல் நிலுவை, வட்டி மற்றும் இதர பாக்கிகளை ஒரே தவணையில் செலுத்தி கணக்கை பைசல் செய்ய அனுமதிக்கப்பட்டது. 31–3–2004 வரை நடைமுறையிலிருந்த இத்திட்டத்தின்கீழ் 1,822 அலகுகள் பயன் பெற்றுள்ளன.

ஆ. இதனைத் தவிர, ரூ.10.00 இலட்சத்திற்கும் மேல் நிலுவையிருந்த காலக் கடன்/குறுகிய காலக்கடன்/குத்தகை நிதி போன்ற இனங்களில் நிலுவைத் தொகையினை ஒரே தவணையாக செலுத்துபவர்களுக்கு ஒரே தவணையில் செலுத்தும் (One Time Settlement) திட்டத்தினை செயல்படுத்தியது. 27–02–2004 வரை அமலிலிருந்த இத்திட்டத்தின்கீழ் 127 நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.

2. ஏற்கெனவே கடன்பெற்றவர்களுக்காக, சுழற்சி முறைத் திட்டத்தை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 31–12–2003 வரை செயல்படுத்தியது. இதன் மூலம் ஏற்கெனவேயுள்ள கடனாளிகளுக்கு கடன் வட்டி வீதம் 15.25% மற்றும் 16% ஆக முறையே சிறுதொழில் மற்றும் சிறுதொழில் அல்லாத பிரிவுகளுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,733 நிறுவனங்கள் பயன் அடைந்துள்ளன.

3. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் மீதான வட்டி விகிதத்தை மறுசீரமைப்பு செய்ததன் பயனாக 01–06–2004–லிருந்து 0.25% முதல் 1% வரை கடன் மீதான வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 29

கடந்த இரண்டு வருடங்களாக செலவினங்களைக் குறைக்க இந்நிறுவனம் மேற்கொண்ட முயற்சிகள் மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகளினால் இயக்க ஆதாயமாக ஏறத்தாழ ரூ.1.61 கோடியை இக்கழகம் 2003–04 ஆம் ஆண்டில் ஈட்டியுள்ளது.

## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

தமிழ்நாடு அரசு 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை நிறுமங்கள் சட்டம் 1956-ன்கீழ் ஒரு பொதுத் துறை நிறுவனமாக நிறுவியது. நாட்டின் வனவளம் விரும்பத்தக்க அளவிலிருந்து மிகவும் குறைந்துள்ளதால், இந்நிறுவனம், கரும்புச் சக்கையை முதன்மை மூலப் பொருளாகப் பயன்படுத்தி ஆண்டுதோறும் 50,000 டன் செய்தித்தாளையும் 40,000 டன் அச்சு, எழுதுதாளையும் தயாரிப்பதற்காக தொடங்கப்பட்டது.

இந்த ஆலை ரூ.239 கோடி மூலதனச் செலவில் நிறுவப்பட்டு, 1985 ஆம் ஆண்டு வணிக அளவிலான உற்பத்தியைத் துவக்கியது. உலக வங்கி இத்திட்டத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவி வழங்கியது.

கரும்புச் சக்கையை கொள்முதல் செய்ய இந்நிறுவனம் ஒரு தனித்தன்மை கொண்ட பண்டமாற்று முறையைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்நிறுவனம் ஐந்து சர்க்கரை ஆலைகளில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி கொண்டு இயக்கப்படும் கொதிகலன்களை இயக்கி, நீராவியை தயாரித்து இச்சர்க்கரை ஆலைகளுக்கு அளித்து கரும்புச் சக்கையை பெற்று வருகிறது. மேலும், இந்நிறுவனம் சந்தையில் கிடைக்கும் உபரி கரும்புச் சக்கையையும் கொள்முதல் செய்து வருகிறது.

இந்நிறுவனம் ரூ.600 கோடி மூலதனச் செலவில் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 90,000 டன்னிலிருந்து 1,80,000 டன்னாக இரட்டிப்பாக்கியது. இந்த விரிவாக்கத் திட்டம் 1996 ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கப்பட்டது. இத்திட்டச் செலவு ரூ.600 கோடியில் ஒரு பகுதி முதலீடாக ரூ.216 கோடி, நிறுவனத்தின் முதல் பொது சமபங்கு வெளியீட்டின் மூலம் 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திரட்டப்பட்டது. இத்திட்டத்தின் மீதமுள்ள முதலீட்டுத் தொகை, இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கடன், நிறுவனத்தில் இருந்த உபரி உள்நிதி ஆதாரம் மற்றும் உலக வங்கி அளித்த 7.5 மில்லியன் அமெரிக்க டாலர் நேரடி கடனுதவி ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டது.



2004 ஜூலை 29]

இந்நிறுவனம், 2001–2003 ஆம் ஆண்டுகளில் ரூ.150 கோடி செலவில் காகித இயந்திரங்களை மேம்படுத்தி உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 1,80,000 டன்னிலிருந்து 2,30,000 டன்னாக உயர்த்தியது. இதற்கான மொத்த நிதி ஆதாரத்தையும் நிறுவனம் உள்நிதி ஆதாரம் மூலமாகவே பெற்றது. இந்த மேம்படுத்துதலின் மூலம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஒரே இடத்தில் அமையப் பெற்ற மிகப் பெரிய காகித ஆலையாகவும் அச்சு மற்றும் எழுது காகித தயாரிப்புத் திறனில் நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் உள்ள நிறுவனமாகவும் விளங்குகிறது.

இந்நிறுவனம் மேலும் மூன்று சர்க்கரை ஆலைகளுடன் பண்டமாற்று முறையில் கரும்புச் சக்கையைப் பெற உடன்படிக்கை மேற்கொண்டுள்ளது. இச்சர்க்கரை ஆலைகளில் இந்நிறுவனத்தின் கொதிகலன்கள் நிறுவப்படவில்லை. கரும்புச் சக்கைக்கு பதிலாக இச்சர்க்கரை ஆலைகளுக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிறுவனம் 1,741 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையையும் ஏறத்தாழ 5,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளித்துள்ளது.

2003–2004 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் 79 விழுக்காடு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி 1,82,215 மெ. டன் செய்தித்தாள் மற்றும் எழுது அச்சு காகிதத்தை உற்பத்தி செய்து ரூ.68.58 கோடி இலாபம் (வரிக்கு முன்) ஈட்டியுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 27.5 விழுக்காடு ஈவுத்தொகை அறிவித்தது. 2003–2004 ஆம் ஆண்டுக்கு இயக்குநர்கள் குழு 27.5 விழுக்காடு ஈவுத்தொகை சிபாரிசு செய்துள்ளது.

ஏற்றுமதி தொடங்கிய 1995 ஆம் ஆண்டு முதல், இன்று வரை இந்நிறுவனம் மொத்தம் 1,58,966 மெ. டன் மரம் சாரா அச்சு மற்றும் எழுதுதாளை ஏற்றுமதி செய்து ரூ.426.15 கோடி அந்நியச் செலவாணியை ஈட்டியுள்ளது.

மரபுசாரா மின் உற்பத்தியிலும் இந்நிறுவனம் பெரும் பங்கு வகித்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தேவர்குளத்திலும், பெருங்குடியிலும் காற்று சக்தியால் மரபு சாரா மின்சாரம் உற்பத்தி செய்ய ரூ.47.69 கோடி மூலதன செலவில் 15 மெ.வாட் திறன் கொண்ட ஒரு காற்றாலை பண்ணையை நிறுவியது. இக்காற்றாலையின் திறன் 31–03–2001 முதல் 15 மெ.வாட்டிலிருந்து 18 மெ.வாட்டாக

அதிகரிக்கப்பட்டது. சமீபத்தில் மேலும் 3.75 மெ.வாட் திறன் கொண்ட காற்றாலைகளை நிறுவியதன் மூலம் நிறுவனத்தின் மொத்த காற்றுப் பண்ணை உற்பத்தித் திறன் 21.75 மெ.வாட்டாக உயர்ந்துள்ளது. 2003–04 ஆம் ஆண்டில் 286.68 இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் தொகுப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இந்நிறுவனம் 2003–04 ஆம் ஆண்டு எடுத்துள்ள முயற்சிகள்

I. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் உலக வங்கியிலிருந்து வாங்கிய 45 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள அதிக வட்டி வீதம் கொண்ட பல நாணயக்கடனை, அதே தொகைக்கு ஒரே நாணய அமெரிக்க டாலர் கடனாக மாற்றியுள்ளது. இதன் மூலம் டிசம்பர் 2002 மற்றும் மார்ச் 2004க்கு இடைப்பட்ட காலத்தில் நிறுவனத்திற்கு கடன் சுமை 5.40 மில்லியன் அமெரிக்க டாலரும் (ரூ.23.57 கோடி), நிதிச் செலவுகளில் 2.75 மில்லியன் அமெரிக்க டாலரும் (ரூ.11.97 கோடி) குறைந்துள்ளது.

II. 2003–04 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 30, 098 மெ. டன் மரம்சாரா அச்சு மற்றும் எழுது காகிதத்தை ரூ.87.24 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதி செய்துள்ளது. வரும் ஆண்டுகளில் ஏற்றுமதி விற்பனையை மேலும் அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கையில் நிறுவனம் உள்ளது.

III. ஒரு டன் காகித உற்பத்திக்கு 1999–2000-ல் 124 கிலோ லிட்டராக இருந்த தண்ணீரின் நுகர்வு 2002–2003-ல் 10.5 கிலோ லிட்டராக குறைக்கப்பட்டது. 2003–2004 தண்ணீரின் நுகர்வு 83 கிலோ லிட்டராக மேலும் குறைக்கப்பட்டது. ஆற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீரில் 80 விழுக்காடு, சுத்திகரிக்கப்பட்ட நீராக, பாசனத்திற்கு திருப்பி அளிக்கப்படுகிறது.

IV. ரூ.35 கோடி செலவில் ஆப்பக்கூடலில் உள்ள சக்தி சர்க்கரை ஆலையில் 85 TPH உயர் அழுத்த கொதிகலன்கள் இரண்டை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நிறுவியுள்ளது. இந்த கொதிகலன்கள் இந்த வருடத்தில் செயல்படத் துவங்கின. இதன் மூலம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சக்தி சர்க்கரை நிறுவனத்திற்கு நீராவியை வழங்கி அதற்கு பதிலாக கரும்புச் சக்கையை பெற்றுக்கொள்ளும். இத்திட்டம் சக்தி சர்க்கரை நிறுவனத்திடமிருந்து ஆண்டொன்றுக்கு மூன்று இலட்சம் டன் கரும்புச் சக்கையை இந்நிறுவனம் கொள்முதல் செய்ய உதவும்.





V. சுண்ணாம்புச் சூளையில் உலை எண்ணெய்க்குப் பதிலாக மீத்தேன் வாயுவை பயன்படுத்தும் வகையில் பயோமெத்தனேசன் தளவாடம் ஒன்றை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் துவக்கியுள்ளது. 17-06-2003 முதல் 31-03-2004 வரை 41,44,669 கன மீட்டர் மீத்தேன் வாயு உற்பத்தி செய்யப்பட்டு சுண்ணாம்பு சூளையில் 2,165.56 கி. கொதிகலன் எண்ணெய்க்கு பதிலாக உபயோகப்படுத்தப்பட்டது. இதனால் ரூ.248.12 இலட்சம் மதிப்புள்ள கொதிகலன் எண்ணெய் சேமிக்கப்பட்டது.

VI. 2003–04 ஆம் ஆண்டில் 981 இலட்சம் யூனிட்டுக்கள் உபரி மின்சாரத்தை (டர்போ ஜெனரேட்டர் மற்றும் காற்றாலை பண்ணையிலிருந்து பெறப்பட்டது) தமிழ்நாடு மின்வாரியத் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

VII. மரபுசார்ந்த கரும்புச் சக்கைக்குப் பதிலாக காட்டு வகை கரும்பைப் பயிர் செய்யும் பணியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் உள்ளது. குறைந்த அளவு சர்க்கரையும் அதிக அளவு நார்ப்பொருளும் அடங்கிய காட்டு வகை கரும்பினை விளைவிக்க குறைந்த அளவே நீர் தேவைப்படுகிறது. மேலும் மிக அதிகமான அளவில் பயிரிடுவதற்கு ஏற்றதுமாகும்.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமாக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) நிறுவப்பட்டது. ஆலங்குளத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1970 இல் சிமெண்ட் தொழிற்சாலை நிறுவப்பட்டது. பின்னர் அதன் நிர்வாகத்தை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) ஏற்றுக்கொண்டது. அதனையடுத்து தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் அரியலூரில் மேலும் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தியது. 1979 ஆம் ஆண்டு அங்கு சிமெண்ட் உற்பத்தி தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் 1981 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் கல்நார் சிமெண்ட் தகடு (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்) தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும், மாயனூரில் 1984 ஆம் ஆண்டில் கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை (ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப்ஸ்)

ஒன்றையும் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், 1989இல் கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில் இயங்காமலிருந்த கற்குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலையை, தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து எடுத்துக் கொண்டது. டிட்கோ நிறுவனம் தனது பங்குகளை அரசுக்கு மாற்றி அளித்ததால் 31-12-1994 முதல் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரசு நிறுவனமாக ஆக்கப்பட்டது.

அரியலூர் சிமெண்ட் ஆலை செயல்பட தொடங்கியதிலிருந்து முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு 2003–2004 ஆம் நிதியாண்டில் அதிகப்படியாக 118% உற்பத்தித் திறன் பயன்பாட்டினை எட்டி சாதனை படைத்துள்ளது. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை 2003–2004 ஆம் ஆண்டில் ஒரேயொரு சூளையை இயக்கி 68% உற்பத்தித் திறன் பயன்பாட்டினை எட்டியுள்ளது. 2004–05ஆம் நிதியாண்டில் அரியலூர் சிமெண்ட் ஆலை ISO:9001-2000 தர மேலாண்மை முறைக்கான சான்றிதழ் பெற மனு செய்ய வாய்ப்புள்ளது. குறைவான மின்சாரம் மற்றும் நிலக்கரி செலவு, செயல்முறை இயக்கங்களில் ஏற்படுத்தப்பட்ட அனுகூலமான முறைகள் மற்றும் சுண்ணாம்புக்கல் வெட்டியெடுத்தல், சிமெண்ட் மற்றும் நிலக்கரி போக்குவரத்து ஆகிய இனங்களின் செயல்முறையினை பெரிதும் உகந்த அளவிற்கு உயர்த்தி செயல்திறனை இந்த ஆலை அதிகப்படுத்தியுள்ளது.

கல்நார் தகடு ஆலை, சந்தையில் ஏற்பட்டுள்ள கடுமையான போட்டிகளுக்கிடையேயும் தனது செலவினங்களை சரிக்கட்டும் அளவிற்கு இயங்கி வருகின்றது. கற்குழாய் ஆலை கணிசமான வழங்கு ஆணையுடன் இயக்கத்தைத் தொடங்கியுள்ள நிலையில், கல்நார் சிமெண்ட் குழாய் ஆலை இயக்கமின்றி இந்நிறுவனத்திற்கு தொடர்ந்து நட்டம் ஏற்படுத்தி வருகிறது.

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய பல்வேறு வகையான கனிமங்களை அறிவியல் முறையில் வணிக ரீதியாக வெட்டியெடுத்து கிராமப் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் முக்கிய நோக்கத்துடன் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு கனிம நிறுவனம் நிறுவப்பட்டது.

இந்நிறுவனம் கறுப்பு, வெள்ளை, பாரடைசோ மற்றும் பல வண்ணப் பாறைகளையும் உயர்வகை கனிமங்களான கிராபைட், குவார்ட்ஸ்,





பெல்ட்ஸ்பர், சுண்ணாம்புக்கல், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் கனிமங்களையும் வெட்டியெடுத்து வாடிக்கையாளர்கள் மனநிறைவடையும் வகையில் விற்பனை செய்து வருகிறது.

2003–2004 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் ரூ.90.00 கோடிக்கு விற்பனை செய்து (தணிக்கைக்குட்பட்டது) புதிய சாதனையை ஏற்படுத்தியதோடு, ரூ.3.50 கோடி நிகர ஆதாயம் (தணிக்கைக்குட்பட்டது) ஈட்டியுள்ளது.

### நவீன இயந்திரங்கள்

குவாரிகளை நவீனமயமாக்குவதற்காக 2003–04 ஆம் ஆண்டில் ரூ.2.85 கோடி முதலீட்டில் நீராற்றலால் இயக்கப்படுகிற (ஹைட்ராலிக்) இயந்திரங்கள், வைரக்கம்பி அரம், தானியங்கி துளையிடும் இயந்திரங்கள் முதலான நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வியந்திரங்களை குவாரிகளிலும், சுரங்கங்களிலும் பயன்படுத்தியதால் உற்பத்தித் திறன் அதிகரித்து உற்பத்திச் செலவு, வெகுவாக குறைத்ததுடன், சுற்றுச்சூழல் நேயமிக்க நடைமுறை வழக்கங்களை அதிகமான அளவு பயன்படுத்தவும் வகை செய்துள்ளது.

### தொழிற்சாலைகளின் வளர்ச்சி

#### (i) சிவகங்கை கிராஃபைட் செழுமைப்படுத்தும் தொழிற்சாலை

2003–04 ஆம் ஆண்டில் கிராபைட் செழுமைப்படுத்தும் தொழிற்சாலையில் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தியதன் பயனாக கிராபைட் உற்பத்தி சீராக்கப்பட்டு சென்ற ஆண்டு பெறப்பட்ட 73.62 விழுக்காடைக் காட்டிலும், 2003–04 ஆம் ஆண்டில் 79 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இதனால் செழுமைப்படுத்தப்பட்ட கிராபைட்டின் விற்பனை ஒரு புதிய சாதனை அளவான ரூ.7.77 கோடியை (தணிக்கைக்குட்பட்டது) 2003–04 ஆம் ஆண்டில் எட்டியுள்ளது. இத்தொழிற்சாலை 2003–04ஆம் ஆண்டில் ரூ.102 இலட்சம்(தணிக்கைக்குட்பட்டது) மொத்த ஆதாயமாகவும் ரூ.7 இலட்சம், (தணிக்கைக்கு உட்பட்டது) நிகர ஆதாயத்தையும் ஈட்டியுள்ளது.

#### (ii) மணலியிலுள்ள கிரானைட் தொழிற்சாலை

மணலி கிரானைட் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை முழுவதும் பயன்படுத்தியதால் ஆக்கப்பெற்ற கிரானைட் பொருட்களான அறுத்த கிரானைட் பலகைகள் மற்றும் மெருகேற்றப்பட்ட பல்வேறு

தடிமன்களிலான பலகைகளின் விற்பனையும் அதிகரித்து 2003–04 ஆம் ஆண்டில் ரூ.4.30 கோடி (தணிக்கைக்குட்பட்டது) க்கு விற்பனை செய்து ரூ.3.92 இலட்சம் (தணிக்கைக்குட்பட்டது) நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. இத்தொழிற்சாலையில் உள்ள சில இயந்திரங்கள் நடப்பு ஆண்டில் நவீனப்படுத்தப்படவுள்ளன.

### (iii) மாதேப்பள்ளியிலுள்ள கிரானைட் ஒடுகள் தொழிற்சாலை

ரூ.2 கோடி செலவில் ஒரு புதிய பன்முக அறுக்கும் திறம் கொண்ட இயந்திரம், ஒரு அளவைக் குறியீடு இயந்திரமும் 2002–2003ல் நிறுவப்பட்டு இத்தொழிற்சாலையின் ஒரு பகுதி நவீனமயமாக்கப்பட்டுள்ளது. இதனால் சென்ற ஆண்டில் 21,300 ச.மீட்டராக இருந்த உற்பத்தித் திறன் 2003–04 ஆம் ஆண்டில் 33,600 சதுர மீட்டர் ஆக அதிகரித்துள்ளது.

**புதிய திட்டங்கள்**

(i) சென்னைக்கு அருகில் உள்ள இருங்காட்டுக் கோட்டையில் நிறுவப்படவுள்ள அறுத்து மெருகிடப்பட்ட தரமான கிரானைட் பலகைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கான நடைமுறைக்குகந்த தொழில் நுட்ப பொருளாதார அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

(ii) சென்னைக்கு அருகில் உள்ள எர்ணாவூரில் கிரானைட் ஓடுகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடம் நிறுவ திட்டம் உள்ளது.

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காகவும், அதைக் கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துடனும் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் பொதுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், சேலத்தில் நிறுவப்பட்டது. ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்வதற்காக ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை ஒன்று 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நிலைச்சூளை, மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்கிறது. 2003–2004 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 55,954 மெட்ரிக் டன் கச்சா மேக்னசைட் உற்பத்தி செய்து கடந்த ஆண்டு இருப்பையும் சேர்த்து 64,932 மெட்ரிக் டன் விற்பனை செய்துள்ளது.



2004–2005 ஆம் ஆண்டிற்கான விற்பனைக் குறியீடு பின்வருமாறு:-

| | உற்பத்தி (மெட்ரிக் டன்கள்) | விற்பனை (மெட்ரிக் டன்கள்) |
|---|---|---|
| கச்சா மேக்னசைட் | 66,000 | 66,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 26,000 | 26,000 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 13,500 | 13.500 |

உற்பத்திச் செலவினைக் குறைக்கும் பொருட்டு இந்நிறுவனம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:-

1. டிசம்பர் 2003இல் 171 பணியாளர்கள் தன்னார்வ ஓய்வுத் திட்டத்தின் மூலம் ஓய்வு பெற்றதினால் மாதத்திற்கு ரூ.10.38 இலட்சம் அளவிற்கு பணியாளர்கள் செலவு குறைந்துள்ளது.
2. 'கன்வேயர் பெல்ட்' மூலம் மேக்னசைட் அள்ளும் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.
3. பர்னஸ் ஆயிலுடன் பெட்ரோலியம் கோக் பயன்படுத்தி இரட்டை எரிபொருள் உபயோகப்படுத்தும் பர்னர் முறை விரைவில் நிறுவப்படும்.

மேற்கூறிய நடவடிக்கைகளினால் 2004–05 இல் இந்நிறுவனம் உற்பத்திச் செலவைக் குறைத்து தனது செயல்திறனை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) 1983 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்நிறுவனம் வணிகரீதியான வெடிமருந்துகள், வெடித் திரி மற்றும் வெடி ஊக்கிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம் நலிவு அடைந்ததால் 1992 செப்டம்பர் மாதம் தொழில் மற்றும் நிதி சீரமைப்பு குழுமத்திடம் (BIFR) பதிவு செய்யப்பட்டது.

இந்நிறுவனம் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்குத் தரவேண்டிய கடன் தொகை முழுவதையும் ஓரே தவணை முறையில் செலுத்தி அடைத்துவிட்டது. எனவே, அக்டோபர் மாதம் 2001–ல் தொழில்

மற்றும் நிதி சீரமைப்பு கழகத்திடமிருந்து விடுபட்டது. 2002–03–ல் இந்நிறுவனம் ரூ.14.44 கோடி அளவிற்கு விற்பனை செய்து ரூ.5.51 கோடி நிகர இலாபம் ஈட்டியது. டிசம்பர் 2003–ல் ஐ.எஸ்.ஓ. 9001:2000 தர சான்றிதழையும் பெற்றுள்ளது.

இந்நிறுவனம் எமல்சன் வகை வெடிமருந்துகளை உற்பத்தி செய்யும் பிரிவை சுமார் ரூ.5.4 கோடியளவில் தொடங்கியுள்ளது. தற்பொழுது, எல்லாவிதமான எமல்சன் வெடிமருந்துகளை இந்நிறுவனம் உற்பத்தி செய்து வருகிறது. இந்த எமல்சன் வெடிமருந்துகள் தற்பொழுது சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்நிறுவனம் மின்சாரம் இல்லா வெடி ஊக்கிகளை தயாரிக்கும் பிரிவையும் தொடங்கியுள்ளது. இவ்வகை வெடி ஊக்கிகள் தற்பொழுது பல்வேறு சுரங்கங்களில் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

மத்திய அரசு என்.ஜி. வகை (Nitroglycerine) வெடிமருந்துகளை 01–04–2004 முதல் தடை செய்துள்ளது. எனவே, கோல் இந்தியா நிறுவனம் (Coal India Limited), சிங்கரேனி நிறுவனம் (Singareni Collieries Company Limited) மற்றும் ஏனைய அரசு நிறுவனங்கள் என்.ஜி. வெடிமருந்து பொருட்கள் உபயோகப்படுத்துவதை பிப்ரவரி 2004 முதல் நிறுத்திவிட்டன. டெல் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் 70 சதவீதத்திற்கு மேலான விற்பனை என்.ஜி. வெடிமருந்துகளின் மூலமாகவே கிடைத்து வருகிறது. இருப்பினும், 2003–04–ல் இந்நிறுவனம் சுமார் ரூ.42.57 கோடி அளவிற்கு விற்பனை செய்து, ரூ.34.72 இலட்சங்கள் (தணிக்கை செய்யப்படாதது) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

வரும் 2004–05 நிதி ஆண்டில் இந்நிறுவனம் சிறிய விட்டமுள்ள எமல்சன் வெடிமருந்துகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க திட்டம் தீட்டியுள்ளது. அதைபோல வெடி ஊக்கி பிரிவின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டங்கள் நிறுவனத்தின் விற்பனையை அதிகப்படுத்தவும், என்.ஜி. வெடிமருந்து பிரிவில் பணி செய்த பணியாட்களை தொடர்ந்து பணியில் நீட்டிக்கவும் உதவும். இந்நிறுவனம் மேலும் ஐ.எஸ்.ஓ. 14001 மற்றும் 18001 தர சான்றிதழ்களையும் பெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது.

## சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் (எஸ்.எஸ்.எல்) 1956 ஆம் ஆண்டு தனியார் துறையில் சரக்கு இரயில் பெட்டிகள், இரும்பு கட்டுமானங்கள்



தயாரிப்பதற்காக தொடங்கப்பட்டது. தொழிலாளர் பிரச்சினைகள் காரணமாக 1969–70–ல் மூடப்பட்டது. எனவே இதில் பணிபுரிந்த சுமார் 1,200 ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்தினை தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டது.

2. 1988–89 முதல் இந்நிறுவனத்தில் தொடர் இழப்பு ஏற்பட்டது. எதிர்மறையான நிகர மதிப்பின் காரணமாக 1992 ஆம் ஆண்டு இந்நிறுவனம் தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமத்தின் (BIFR) ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. இக் குழுமத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் புனரமைப்புத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. எனினும், மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் இந்நிறுவனம் புத்துயிர் பெற இயலவில்லை.

3. திரு. எஸ்.வி.எஸ். ராகவன் அவர்கள் தலைமையிலான மாநில பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவானது 31–3–98 அன்றைய நிலையில் தமிழ்நாடு அரசு சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் நிறுவனத்தின் நிலையினை மதிப்பீடு செய்யுமாறு பரிந்துரை செய்தது. மேலும் மாநில அரசின் நிதி உதவியின்றி, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் தன்னை நிலைநிறுத்த முடியாவிட்டால், நிறுவனத்தை மூடிவிட வேண்டும் என்றும், அதன் அசையா சொத்துக்களை சந்தை நிலவர மதிப்பின்படி விற்றுவிட வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. சந்தையில் கடுமையான போட்டி நிலவியதாலும் தொழிலில் ஏற்பட்ட மந்த நிலை காரணமாகவும் இநநிறுவனத்தின் மறுசீரமைப்பு முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

4. 22–3–2002 அன்று சென்னையில் நடைபெற்ற தொழில் மற்றும் நிதி புனரமைப்பு குழுமக் கூட்டத்தில், இந்நிறுவனத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட புனரமைப்புத் திட்டம் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது. எனவே, குழுமத்தின் செயல்முறை முகமையான (Operating Agency) பாரத ஸ்டேட் வங்கி, நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை மாற்றுதல் போன்ற நடவடிக்கைத் தொடர்பான விளம்பரத்தை வெளியிடுமாறு பணிக்கப்பட்டது. அதற்கிணங்க, பாரத ஸ்டேட் வங்கி, 6–8–2002 அன்று நிர்வாகப் பொறுப்பை மாற்றுதல்/ எடுத்துக் கொள்ளுதல்/குத்தகை விடுதல் போன்றவற்றிற்கான விளம்பரத்தை வெளியிட்டது. பெறப்பட்ட விருப்பறிவிப்புகள் குழுமத்திற்கு (BIFR) அனுப்பப்பட்டுள்ளன. இதன் தொடர்பான இறுதியான ஆணைகள் குழுமத்தினரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

பணியாளர்களின் எண்ணிக்கையினைக் குறைக்கும் பொருட்டு, பெரும்பான்மையான பணியாளர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்டனர். நிறுவனத்தின் எஞ்சியுள்ள பணிகளை கவனிக்கும் பொருட்டு 20 ஊழியர்கள் மட்டும் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

இராமநாதபுரம் மாவட்ட கடற்கரையோர பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு 1974 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தினை தொழிற்சாலைகளுக்கு தேவையான உப்பு மற்றும் அதன் உபபொருள்களை தயாரிக்கும் நோக்குடன் நிறுவப்பட்டது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் கல் உப்பு மற்றும் உதிரி அயோடைஸ்டு உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்து தனது விளைப் பொருட்கள் மூலம் மாற்று உற்பத்திக்கு வகை செய்துள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் புரோமின் உற்பத்தி செய்வதற்குரிய தொழிற்சாலையை தனியார் துறை பங்கேற்புடன் நிறுவ திட்டமிட்டுள்ளது.

இந்நிறுவனம் இதுவரை தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 5,524 ஏக்கர் மொத்த பரப்பளவில் 3,210 ஏக்கர் பரப்பளவினை உப்பு உற்பத்திக்காக, மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் மேம்படுத்தியும் ஆண்டொன்றிற்கு 2 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றும் உள்ளது.

இந்நிறுவனம் 1990–91 ஆம் ஆண்டிலிருந்து இலாபம் ஈட்டி வருகின்றது. 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டுகளில் ஈவுப்பங்குத் தொகை குத்தகைத் தொகை மற்றும் கூடுதல் உரிய கட்டணமாக முறையே ரூ.174.93 இலட்சம் மற்றும் 171.71 இலட்சம் அரசுக்கு வழங்கியுள்ளது. மேலும் 2003–2004 ஆம் ஆண்டில் நிகர இலாபமாக ரூ.32.36 இலட்சம் (தோராயமாக) ஈட்டியுள்ளது. இதே ஆண்டில் ரூ.48.10 இலட்சம் உரிய கட்டணமாக (Additional Royalty) அரசுக்கு வழங்கியுள்ளது.

குளோர் அல்கலி பிரிவு உற்பத்திக்கு தேவையான தொழிற்சாலைக்கு உகந்த உப்பு தேவையில் சரிவு ஏற்பட்டு இருப்பதால், தமிழ்நாடு உப்பு நிறுவனம் திரண்ட, வலிய விற்பனை வினைமுறை திறன்களினால்



அண்டை மாநிலங்களில் முனைந்து பொது விநியோக முறையின் மூலமாகவும் மதிய உணவுத் திட்டத்தின் வாயிலாகவும் அயோடைஸ்டு அரசு உப்பு விற்பனையில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் முதன் முறையாக 2003–2004 ஆம் ஆண்டில் கர்நாடக மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களில் பொது விநியோகத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டத்தின் மூலமாக அயோடின் கலந்த உப்பை வழங்குவதற்கான ஆணை பெற்றது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் சுமார் ரூ.79 இலட்சம் மதிப்புள்ள 3,834 டன்கள் அயோடின் கலந்த உப்பை 2003–2004 ஆம் ஆண்டில் விநியோகித்து உள்ளது. இதைப் போலவே ஆந்திர அரசிடமிருந்து எட்டு மாவட்டத்திற்கு அயோடின் கலந்த உப்பை பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்குவது தொடர்பாக ஆணை பெற்றுள்ளது. மேற்கூறிய முயற்சிகளினால் கூடுதலாக வருடத்திற்கு 15,000 டன்கள் ரூ.3.65 கோடி மதிப்புள்ள அயோடின் கலந்த உப்பை விற்பனை செய்வதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டத்தின் மூலம் அயோடின் கலந்த அரசு உப்பு தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இந்த சீரிய முயற்சியை அனைத்து நாட்டுகளின் அமைப்புகளான "யுனிசெப்", கனடாவிலுள்ள நிறுவனமான மைக்ரோ நியூட்ரியன்ட் இனிஷியேடிவ் மற்றும் அயோடின் பற்றாக்குறையினால் ஏற்படும் குறைகளை கட்டுப்படுத்தும் பன்னாட்டு மன்றமும் மிகவும் பாராட்டியுள்ளன.

தென் மாநிலங்களில் அதிக அளவு அயோடின் கலந்த உப்பு விற்பனை செய்வதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பதினால், தமிழ்நாடு உப்பு நிறுவனம் மைக்ரோ நியூட்ரியன்ட் (Micronutrient) இனிசியேட்டிவ் நிறுவனத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி செரிவூட்டப்பட்ட உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (அயோடின் (ம) இரும்புச்சத்து கலந்த உப்பு) உற்பத்தியை தற்போதுள்ள தயாரிப்பு வசதியுடன் மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.

கனடாவிலுள்ள மைக்ரோ நியூட்ரியண்ட் இனிஷியேட்டிவ் நிறுவனம் வழங்கிய மானிய உதவி ரூபாய் 90 இலட்சத்தை இருவித செறிவூட்டப்பட்ட உப்பு தயாரிக்கும் திட்டத்திற்கும் மற்றும் முழு மேம்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய திட்டங்களைத் தவிர இந்நிறுவனம் வாலிநோக்கத்தில்
ரூ.2 கோடி முதலீட்டில் தனியார் துறை பங்கேற்புடன் புரோமின்
தயாரிக்கும் தொழிற்சாலையை துவங்குவதற்குத் தேவையான அனைத்து
முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இத்திட்டப் பணிகள்
2004–2005–ல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு வருவாய் மற்றும்
கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

மத்திய அரசு "நமக் மஜ்தூர் ஆவாஜ் யோஜனா" திட்டத்தின் மூலம்
உப்பளத் தொழிலாளர்கள் குடியிருப்பதற்கு வீட்டு வசதி ஏற்படுத்தித்தர
முன் வந்துள்ளது. இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி, தமிழ்நாடு உப்பு
நிறுவனம் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வாலிநோக்கத்திலுள்ள
ரூ.1.2 கோடியில் 250 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு விரிவான
அறிக்கையை மத்திய அரசிற்கு அனுப்பி, மத்திய அரசும் இதற்கு ஒப்புதல்
அளித்துள்ளது. மத்திய அரசின் மதிப்பீட்டின்படி ஒரு குடியிருப்பின்
கட்டுமானச் செலவு ரூ.50,000/– ஆகும். இதில் 70 விழுக்காட்டினை
அதாவது ரூ.35,000/– மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். மீதமுள்ள
கட்டுமானத் தொகை பயன்பெறும் உப்பளத் தொழிலாளர்களால்
ஏற்றுக்கொள்ளப்படும். தமிழ்நாடு உப்பு நிறுவனம் 250 குடியிருப்புகளைக்
கட்டுவதற்கு தேவையான நிலத்தினை ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளை
மேற்கொண்டுள்ளது. மத்திய அரசு ரூ.43.75 இலட்சம் முதல் மற்றும்
இரண்டாவது தவணையாக இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.
கட்டுமானப் பணிகள் 2004–2005 ஆம் ஆண்டில் முடிக்கப்படும் என
எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான தொழில் முதலீட்டாளரைக்
கவரும் வண்ணம் 1992 ஜனவரி திங்களில் தமிழ்நாடு தொழில்
வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (கைடன்ஸ்)
ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் துவக்கத்திலிருந்து இதுவரை ரூ.8000
கோடி முதலீட்டில் 44 பெரும் முதலீட்டுப் பிரேரணைகளை ஈர்த்துள்ளது.

இந்நிறுவனம் துவங்கப்பட்ட 1992 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழில்
வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு
தொழில் முதலீட்டுக் கழகம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும்



தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகிய ஐந்து நிறுவனங்கள் தலா ரூ.5
இலட்சம் வருடாந்திர நிதி பங்களிப்பாக வழங்க அரசு உத்தரவிட்டது.

நிர்வாகச் செலவுகள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகள்
கூடுதலாக உள்ளதால் இந்நிதி போதுமானதாக இல்லை. சட்டமன்றப்
பேரவையின் கடந்த வரவு–செலவு கூட்டத் தொடரில்
அறிவிக்கப்பட்டதற்கிணங்க கைடன்ஸ் நிறுவனம் வலுப்படுத்தப்பட்டு
அதனுடைய செயல்பாடுகள் மற்றும் சேவை வகைகள் மேம்படுத்தப்படும்.
2004–2005 நிதியாண்டிற்கு தொடரா செலவினமாக ரூ.15 இலட்சமும்,
தொடர் செலவினமாக வருடத்திற்கு ரூ.20 இலட்சம் வீதம் 2004–2005
முதல் மூன்றாண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

புவியியல் மற்றும் சுரங்கத் துறையானது கனிம நிர்வாகம், கனிம
ஆய்வு மற்றும் கனிம மேம்பாடு ஆகிய பணிகளில் ஈடுபடுத்திக்
கொண்டுள்ளது.

கனிம நிர்வாகத்தின்கீழ் சிறு மற்றும் பெருங்கனிமங்களை
வெட்டியெடுக்க கனிம விதிகளின்படி சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது.
கனிம வள நிர்வாகம் என்பது சட்டத்திற்குப் புறம்பாக கனிமங்களை
வெட்டியெடுப்பது, அவற்றைக் கடத்துவது போன்ற குற்றங்களை தடுப்பதை
உள்ளடக்கியதாகும். இத்துறை மரபு வழி ஆய்வுகளுடன் நவீனகால
வழிமுறைகளைக் கொண்டு கனிம இருப்புகளை ஆய்வுசெய்து அவற்றை
மதிப்பீடு செய்வதுடன் மேலும் புதிய கனிமங்களுக்கான ஆய்வுகளையும்
மேற்கொண்டு வருகிறது.

மாநிலத்தில் மலைப் பகுதிகளான நீலகிரி மற்றும் திண்டுக்கல்
மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் பகுதிகளில் புவி நுட்பவியல்
ஆய்வுகள் மேற்கொண்டு அப்பகுதியின் வளர்ச்சிக்கும், நிலச்சரிவு
ஏற்படாமல் இருக்க வழிவகுக்கவும், கட்டுமானப் பணிகட்கும் ஆய்வுகள்
மேற்கொண்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் தக்க அறிவுரைகள் வழங்கி
வருகிறது.

கனிம மேம்பாட்டின் பொருட்டு இத்துறையானது, தமிழ்நாட்டில்
உள்ள கனிமங்களை மேம்படுத்தவும், கனிமம் சார்ந்த தொழிற்சாலைகள்
அமைக்கவும், பல்வேறு அமைப்புகளில் கலந்துகொண்டுள்ளது.

[2004 ஜூலை 29

**கனிம நிர்வாகம்**

பட்டா நிலங்களில் உள்ள பெருங்கனிமங்களுக்கு குத்தகை வழங்கும் அதிகாரம் புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசு நிலங்களில் உள்ள பெருங்கனிமங்களுக்கும், முன்னோட்ட ஆய்வு அனுமதி, கனிம ஆய்வு உரிமம் மற்றும் குத்தகை வழங்கும் அதிகாரம் அரசிடம் உள்ளது. கிரானைட்டிற்கு குவாரி குத்தகை வழங்கும் அதிகாரமும் அரசிடமே உள்ளது.

இத்துறையின் ஆணையருக்கு, மாவட்ட ஆட்சியர்களால் கிரானைட் மற்றும் சிறு கனிமங்களான ஆற்றுமணல், கல் மற்றும் சரளைக்கல் ஆகிய கனிமங்களின்மீது வழங்கப்படும் ஆணையின்மீது மேல்முறையீடு செய்யும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அவற்றின்மீது ஆணை வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. கனிமத் துறை ஆணையரின் ஆணைகளை மறு ஆய்வு செய்யும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது.

முக்கியமான கொள்கை முடிவாக, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டும் ஆற்றுப்படுகைகளில் வரைமுறையின்றி மணல் அள்ளுவதைத் தடுக்கும் பொருட்டும் ஆற்றுப்படுகைகளில் மணல் எடுக்கும் அதிகாரத்தை மாநில அரசு பொதுப் பணித் துறையிடம் ஒப்படைத்துள்ளது.

**கனிம ஆய்வு**

இத்துறை தனது முக்கிய பணியாக புதிய கனிம இருப்புகளைக் கண்டறிதல், கண்டறியப்பட்ட கனிம இருப்புகளின் சுற்றுப்பகுதிகளில் அதன் தொடர்ச்சியைக் கண்டறிதல் ஆகிய ஆய்வுகளை மேற்கொள்கிறது. நமது மாநிலத்தில் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டப் பகுதிகளில் உள்ள சுண்ணாம்புப் படிவங்கள் குறித்த இருப்புகளை அறிய விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் ஏற்றுமதிக்குகந்த கிரானைட் கற்கள் இருப்பு குறித்த மதிப்பீடு ஆய்வும், கொடைக்கானல் மற்றும் நீலகிரி மலைப் பகுதிகளில் புவி தொழில்நுட்ப ஆய்வுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துறையின் தலைமையகத்தில் 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.16.80 இலட்சத்தில் புவியியல் தகவல் மையம் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டு, தற்போது அம்மையம் இயங்கி வருகின்றது.



2004 ஜூலை 29]

**மேம்பாட்டுப் பணி**

தமிழ்நாட்டில் உள்ள கனிம வளங்களை மேம்படுத்தும் நோக்குடன் 2004–2005 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நிகழ்வுகளில் பங்குபெற்று தமிழ்நாட்டில் உள்ள கனிம வளங்களைச் செம்மையாகப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**புதிய திட்டப் பணிகள் – 2004–2005**

1. தற்போது நடைமுறையில் உள்ள புவியியல் தகவல் மையம், புதிய நவீன தொழில்நுட்பங்களுடன் 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.22.30 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படவுள்ளது.

2. தமிழ்நாட்டில் தற்போதுள்ள கனிமச் செறிவு அடங்கிய தொகுப்பினைத் தயாரித்து வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பானது, கனிமத்தினைக் கொண்டு தொழிற்சாலை அமைக்க முன்வரும் தொழில் முனைவோர்க்கு பயனுள்ள வழிகாட்டியாக அமையும்.

**கனிம வருவாய்**

நமது மாநிலத்திற்கு இத்துறையின் சீரிய கனிம நிர்வாகத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலமாக ஈட்டப்பட்ட வருவாய் பின்வருமாறு:-

| ஆண்டு | ரூபாய் (கோடிகளில்) |
|---|---|
| 1999-2000 | 124.86 |
| 2000-2001 | 163.12 |
| 2001-2002 | 254.26 |
| 2002-2003 | 317.20 |
| 2003-2004 | 474.81 |

இத்துறையினால், வரும் ஆண்டுகளில் செம்மையான கனிம நிர்வாகத்தின் நடவடிக்கைகள் மூலமாகவும், கனிம தொழிற்சார்ந்த நிறுவனங்களை ஊக்குவிப்பது மற்றும் வழிகாட்டுதல் மூலமும், மேலும் புதிய கனிம ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மூலமும் வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## சர்க்கரைத் தொழில்

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் ஒரு முக்கியமான வேளாண் சார்ந்த தொழிலாக உள்ளது. இத்தொழில் இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில், குறிப்பாக கிராமப்புறப் பொருளாதார முக்கியப் பங்கு வகிக்கிறது. சர்க்கரைத் தொழில், பல்லாயிரக்கணக்கான கிரமப்புற மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், கரும்பு சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் இதர பணிகள் மூலம் பல இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கும், வேளாண் தொழிலாளர்களுக்கும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை அளிக்கிறது. தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும் 3 ஆலைகள் பொதுத் துறையிலும், 19 ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. மாநிலத்தில் நிலவி வரும் வறட்சி காரணமாக கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் 2003–2004 ஆம் ஆண்டில் கரும்பு வரத்து குறைந்துள்ளது. மேலும் உற்பத்திச் செலவுடன் ஒப்பிடுகையில் சர்க்கரை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு சர்க்கரைத் துறை நெருக்கடியில் உள்ளது. ஆனால் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில், 2002–2003 பருவத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய கரும்பு விலை நிலுவையை முழுவதுமாகக் கொடுப்பதற்கு அரசு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலுவைத் தொகை முழுமையாகக் கொடுக்கப்பட்டது. 2003–04 பருவத்திற்கான கரும்பு விலை நிலுவையில் மேற்படி ஆலைகளில் பெரும்பாலும் கொடுத்து முடிக்கப்பட்டுள்ளது.

2002–2003 அரவைப் பருவத்தில், 14 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 2 பொதுத் துறை ஆலைகள் மற்றும் 19 தனியார் துறை சர்க்கரை ஆலைகள் சேர்ந்து 166.36 இலட்சம் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டு, 16.43 இலட்சம் டன்கள் சர்க்ரையை 9.87 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்துள்ளன. 2003–2004 அரவைப் பருவத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து கூட்டுறவு, பொது மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் 30–4–2004 வரை 81.83 இலட்சம் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டு 8.17 இலட்சம் டன்கள் சர்க்கரையை 9.99 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில்



உற்பத்தி செய்துள்ளன. 2002–2003 பருவத்தில் இவ்வாலைகளின் அரவைத்திறன் 98 விழுக்காடாக இருந்தது. இது 2003–2004 பருவத்தில் சாதகமற்ற பருவ நிலை காரணமாக 53 விழுக்காடாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்

2002–2003 ஆம் அரவைப் பருவத்தில் 14 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலும் அரவை மேற்கொள்ளப்பட்டு 52.81 இலட்சம் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டு 5.26 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

2003–2004 ஆம் அரவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலுள்ள 19 சர்க்கரை ஆலைகளில் 16 சர்க்கரை ஆலைகள் மட்டும் அரவையை மேற்கொள்ள உள்ளன. இவ்வாலைகள், 28.05 இலட்சம் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டு 2.78 இலட்சம் டன்கள் சர்க்கரையை 9.91 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்துள்ளன. தற்போது இவ்வனைத்து ஆலைகளிலும் அரவை நிறுத்தப்பட்டுள்ளது.

### கரும்புச் சக்கை

சர்க்கரை ஆலைகள் தாங்கள் உற்பத்தி செய்யும் உப பொருளான கரும்புச் சக்கையை நீராவி மூலம் எரிசக்தி உற்பத்தி செய்ய பயன்படுத்தி ஆலையை இயக்குகின்றன. உபரி கரும்புச் சக்கையை தமிழ்நாடு காகித நிறுவனத்திற்கு விற்பனை செய்து வருகிறது.

### இணைமின் உற்பத்தி

கூட்டுறவுத் துறையில் மூன்று சர்க்கரை ஆலைகள் அதாவது, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை (சேத்தியாதோப்பு), செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை (அனக்காவூர்) மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை (அரூர்) ஆகியவை இணைமின் உற்பத்தி நிலையங்களை அமைத்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றன. இந்த ஆலைகளில் உற்பத்தியாகும் உபரியான மின்சாரம், தமிழ்நாடு மின்சார வாரிய தொகுப்பிற்கு விற்கப்பட்டு வருகிறது. தனியார் துறையில் 12 தனியார் சர்க்கரை ஆலைகளில் இணைமின் உற்பத்தி செய்யப்படுகின்றது.

### கருப்பஞ்சாறு கசண்டு

தமிழ்நாட்டில் கூட்டுறவு / பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2002–2003 அரவைப் பருவத்தில் 2.18 இலட்சம் டன்கள் கரும்புச் சாறு

கசண்டு உற்பத்தி செய்துள்ளன. 2003-2004 பருவத்தில் கரும்புச் சாறு கசண்டு உற்பத்தி 1.26 இலட்சம் டன்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வடிப்பகங்கள்**

தமிழ்நாட்டில் 10 சர்க்கரை ஆலைகளில் வடிப்பகங்கள் இயங்கி வருகின்றன. 10 வடிப்பகங்களில் இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் சேலம் மற்றும் அமராவதி வடிப்பகங்கள் 2002-2003 ஆம் நிதி ஆண்டில் 11,794 கிலோ லிட்டரும், 2003-2004 ஆம் பருவத்தில் 16,668 கிலோ லிட்டரும் எரிசாராயம் உற்பத்தி செய்துள்ளது.

...



## இணைப்பு - IV

(132 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005

## அத்தியாயம் - 1

**முகவுரை**

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

-திருவள்ளுவர்

### 1. தமிழ்நாட்டில் வேளாண்மை–ஒரு கண்ணோட்டம்

#### 1.1 உலக வேளாண்மை நிலை

வளர்ந்து வரும் நாடுகளில், நாட்டின் மொத்த உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் வேளாண்மை இந்நாடுகளில் மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கின்றது. இதில் மற்ற பிரிவுகளை வேளாண்மை விஞ்சுகிறது. ஆயினும் ஏழை நாடுகளில் 1950–களில் நாட்டின் மொத்த உற்பத்தியில் வேளாண்மையின் பங்கானது 50 விழுக்காட்டிற்கும் அதிகம் என்ற நிலையில் இருந்து, 1980–களில் 29 விழுக்காடு என்ற அளவிற்கு குறைந்து, அதன் பின்னர் இப்போது 26 விழுக்காட்டிற்குச் சரிந்துள்ளது. இதற்கு மாறாக, பணக்கார நாடுகளில், மொத்த வருமானத்தில் வேளாண்மையின் பங்கு 1980–களில் மிகக் குறைந்த அளவான மூன்று சதவீதத்தில் இருந்து, 1990–களில் மேலும் குறைந்து இரண்டு சதவீதமாக உள்ளது. (உலக வங்கி, 2000).

[2004 ஜூலை 29

**2. வளரும் பொருளாதாரங்களில் வேளாண்மையின் நிலை—பொருளாதார இடைமாறுபாட்டு கோட்பாடு**

2.1 ஒரு நாட்டின் பொருளாதாரம், வளர்ச்சியடைந்து முழுமை பெறுகையில் வேளாண்மையின் பங்கு தொழிற் துறையின் பங்கோடு ஒப்பிடும்போது தொழிற் துறையின் பங்கைவிட மொத்த உற்பத்தியில் குறைந்து காணப்படும். தொழில்கள் மற்றும் சேவைத் துறைகளின் பங்கு அதிகம் காணப்படுகிறது. இது ஒரு நாடு வளர்ச்சி அடைந்த பொருளாதாரத்தைப் பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்ய ஒரு முக்கிய அளவுகோல் ஆகும். அதாவது தொழில் துறையில் முன்னேறி அதனையும் தாண்டி தொழில் துறை வளர்ச்சி கடந்த பொருளாதாரத்தில் மிகவும் முன்னேறிய நாடாக உள்ளதா என்பதை அறியலாம். பொதுவாக வளர்ந்த மற்றும் முதிர்ந்த நாடுகளின் மொத்த வருமானத்தில் சேவைத் துறையின் பங்கு மிகப் பெரும்பான்மையாக மாறுகிறது.

2.2 வளர்ந்து வரும் நாடுகளில், வேளாண்மையைச் சார்ந்துள்ள மக்கள் தொகை மிகப் பெரும்பான்மையாக உள்ளது. ஆனால் வளர்ந்த நாடுகளில் கிராமப்புறங்களில் வாழ்வோரின் எண்ணிக்கையோ 26 விழுக்காடு என்ற அளவிலேயே உள்ளது. இந்த எண்ணிக்கை வளரும் நாடுகளில் குறிப்பாக தொழில் வளர்ச்சி வேகமாக உள்ள வளரும் நாடுகளில் கூட சற்றேறக்குறைய 40 விழுக்காடு என்ற அளவிலேயே உள்ளது. இந்நிலையில் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பங்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் 1990ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஐந்து விழுக்காடு என்றுள்ள அதே வேளையில், குறைந்த வருவாய் உள்ள வளரும் நாடுகளில் இது 68 விழுக்காடு என்ற அளவில் உள்ளது. (உலக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, ரோம்) ஏழை மக்கள் பெருமளவில் கிராமப்புறங்களில் தங்கள் வருமான ஆதாரத்திற்கு வேளாண்மையைப் பெரிதும் சார்ந்திருப்பதாலும் இந்நாடுகளின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மை திறவுகோலாக உள்ளதாலும், வேளாண்மையில் அரசின் தலையீடு இந்நாடுகளில் அதிக பரவலாக உள்ளது.

**3. இந்தியாவில் வேளாண்மை**

3.1 இந்தியாவிலும், 1950 ஆம் ஆண்டுகளில் நாட்டின் மொத்த வருமானத்தில் வேளாண்மையின் பங்கு 51.3 விழுக்காடாக இருந்தது. (வேளாண்மை பற்றிய ஒரு சுருக்கம், 1967, இந்திய அரசு).. இந்தியா விரைவில் கச்சாப்பொருட்கள் உற்பத்தி செய்யும் நாட்டிலிருந்து



2004 ஜூலை 29]

தொழிற்சாலைகளில் பொருட்களை உற்பத்தி செய்யும் நாடாக மாறி பொருளாதார வளர்ச்சியின் இறுதிக் கட்டமான சேவைப் பிரிவால் நடத்தப்படும் பொருளாதாரம் கொண்ட நாடாக மாறிவிட்டது. 1990 ஆம் ஆண்டுகளின் மத்தியில் பொருளாதார வளர்ச்சி விகிதங்கள் முதலில் அதிகமாக உயர்ந்து, இது படிப்படியாகக் குறைந்து 2000-01—ல் 4 சதவீதமாகவும், 2001-02-ல் 5.4 சதவீதமாகவும் இருந்தது. இந்த வளர்ச்சி விகிதங்கள் கூட வேளாண்மை அல்லது தொழில் வளர்ச்சி அதிகரிப்பினால் இல்லை. (இவ்விரண்டு பிரிவுகளும்தான் பெரும்பான்மை மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கின்றன) ஆனால் இவ்வளர்ச்சி, சேவைத் துறையின் வளாச்சியின் மூலம் எட்டப்பட்டதாகும். நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தில் வேளாண்மை மற்றும் தொழிற் பிரிவுகளின் பங்கு குறைந்து, சேவைப் பிரிவு பொருளாதாரத்தின் முக்கிய அங்கமாக வெளிவந்தது. இந்தியாவில், நாட்டின் மொத்த வருமானத்தில் வேளாண்மையின் பங்கு கடந்த 10 ஆண்டுகளில் (1993-94 மற்றும் 2002-03—க்கிடையே) 31 சதவீதம் என்ற அளவில் இருந்து 22 சதவீதமாகக் குறைந்துள்ளது (ஏக்னாமிக் டைம்ஸ், நாளிதழ் 26 அக்டோபர், 2003). வேளாண்மை வளர்ச்சியும் 1991-92 முடிந்த பத்தாண்டுகளில் 4.2 சதவீதத்தில் இருந்து -1992-93 முதல் 1999-2000 வரையான காலத்தில் 3.7 சதவீதமாகக் குறைந்துவிட்டது. அதிலும் குறிப்பாக, உணவு தானியங்கள் உற்பத்தி ஆண்டு வளர்ச்சி விகிதம் 2.9 என்ற அளவில் இருந்து 2.00 ஆகக் குறைந்துவிட்டது. மேலும், சிறு தானியங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதம் பூஜ்ஜியத்துக்கும் குறைவாக எதிர்மறையாக அமைந்துள்ளது. மேலும், முக்கிய தானியமான அரிசியின் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 3.7—லிருந்து 2.2 ஆக குறைந்தது. (வேளாண் புள்ளியியல் - ஒரு கண்ணோட்டம், 1992-93, 1999-2000, இந்திய அரசு)

3.3 அரசின் கொள்கைகளைப் பொறுத்தவரை, நிலம், பாசன நீர் மற்றும் வேளாண்மைக்கான நிதி ஆதாரம் ஆகிய மூன்றினை சமாளிப்பதன் மூலம்தான் நாட்டில் முன்னேற்றம் காண முடியும். இத்துடன், கட்டமைப்பு வசதிகளில் முதலீடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கவில்லையெனில் வேளாண்மை வளர்ச்சி விகிதம் ஓரளவுக்கே இருக்கும். பருவ நிலை மாற்றங்களினால் வேளாண் உற்பத்தியின்மீது ஏற்படும் பாதிப்பு கவலை அளிக்கிறது. பசுமைப் புரட்சிக்குப் பிந்தைய காலத்தில், வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சி, ஒரு சம நிலையை எட்டியிருக்கிறது. ஆகவே, இன்றைய கால கட்டத்தில் நாம்

[2004 ஜூலை 29

எதிர்கொள்ள வேண்டிய சவால்கள், சத்தான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதும், அவை நியாயமான விலையில் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் மேலும் தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்து உலகச் சந்தையில் போட்டியிட ஏதுவாக விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களைச் சொல்லித் தருவதும் ஆகும்.

### 4. தமிழ்நாட்டில் வேளாண்மையின் நிலை

*4.1* பொருளாதார வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி என்ற நிலையை எட்டுவதில் இந்திய மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாடு அதிவேகமாக முன்னேறியுள்ளது. 1980—களில், மாநிலத்தின் மொத்த வருமானத்தில் வேளாண்மையின் பங்கு 24.57 விழுக்காடு என்ற நிலையில் இருந்து, 1990—களில் 21.85 விழுக்காடாகக் குறைந்து அது தற்போது 16.88 விழுக்காடாக உள்ளது. (தமிழ் நாடு - ஒரு பொருளியல் கண்ணோட்டம், தமிழ் நாடு அரசு) ஆயினும் பொருளாதாரத்தில் வளர்ந்து முதிர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாடு மற்றும் மாநிலத்தில் மொத்த வருமானத்தில் வேளாண்மையின் பங்கு குறையும்போது, வேலைவாய்ப்புக்காக வேளாண்மையைச் சார்ந்திருப்போரின் அளவும் குறைவதான நிலை இன்னும் எட்டப்படவில்லை. இன்றைய நாள் வரை மொத்த மக்கள்தொகையில் சற்றேறக்குறைய 60 சதவீதம் பேர், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வேளாண்மையைச் சார்ந்திருக்கின்றனர். ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வேளாண்மைத் துறையின் வளர்ச்சி முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. கடந்த ஆண்டுகளில் தொடர்ந்து பருவ மழை பொய்த்ததனால் வேளாண்மை உற்பத்தி குறைந்தாலும் கூட, உணவு பாதுகாப்பு என்ற நிலையை நாம் கிட்டத்தட்ட அடைந்துள்ளோம்.

### 5. மாறிவரும் சூழ்நிலை

*5.1* வணிக தாராளமயமாக்கல் கொள்கைகள் பல வாய்ப்புகளைத் தந்தாலும் அவை பல்வேறு சவால்களையும் உள்ளடக்கியிருக்கின்றன. குறிப்பாக, ஏற்றுமதி - இறக்குமதிக்கான அளவுகோல் தடைகள் முழுவதுமாக நீக்கப்பட்டுள்ள நிலையில், இறக்குமதி வரிகளை தொடர்ந்து குறைப்பது உள்நாட்டு வேளாண் உற்பத்திக்குப் பெருத்த சவாலாக இருக்கின்றன. ஆனால், மாநிலத்திலிருந்து வேளாண் பொருட்களின் ஏற்றுமதிக்கு அதிகரிக்கும் வாய்ப்புகளை மறுக்க முடியாது. இத்தகைய



2004 ஜூலை 29]

சூழ்நிலையில், வேளாண் பொருட்களுக்கு வளர்ந்து வரும் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து, உற்பத்திச் செலவைக் குறைத்து, விளைபொருளின் தரத்தை அதிகரித்து சர்வதேசச் சந்தையிலும் போட்டியிட திட்டமிட்ட வினை முறைத் திறன்கள் தேவை.

### 6. உலக வர்த்தக அமைப்பும் வேளாண்மையும்–இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் மீதான தாக்கம்

*6.1* இந்தியாவின் சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடைகளாக விளங்குபவை, வளாந்த நாடுகளின் கட்டுப்பாடுகளுடன் கூடிய இறக்குமதிக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், அதாவது (இறக்குமதி வரி அல்லாத) நடைமுறைக்கு ஒவ்வாத சுகாதார தரக்கட்டுப்பாடுகள், வளர்ந்த நாடுகளின் ஏற்றுமதியாளர்களுக்கு அந்நாடுகளால் தரப்படும் ஏற்றுமதி பொருட்களுக்கான மானியங்கள் (வேளாண் ஏற்றுமதி மானியங்கள், வேளாண் ஏற்றுமதிக்கு நிதி அளிப்பதில் முன்னுரிமை திட்டங்கள்) குறைந்த உற்பத்தி விலைக்கான நிகரான வரி விதித்து விலை ஏற்றுதல் மற்றும் செயலெதிர் நிர்ணயங்கள் மற்றும் இதர தடைகள் ஆகியவையாகும்.

*6.2* இந்தியாவைப் பொறுத்தவரை, காய்கறி, பழங்கள், உயிர் வாழ்வினங்கள், பயறு வகைகள், பதனிட்ட உணவுப்பொருட்கள், கோதுமை மாவு, வெள்ளைச் சர்க்கரை, கொக்கோ, கொப்பரை, முந்திரி போன்றவற்றிற்கு இறக்குமதி வரி, உலக வர்த்தக நிறுவனம் நிர்ணயம் செய்துள்ள அதிகபட்ச அளவில் இருந்து சராசரியாக பாதிக்கும் குறைவே ஆகும். ஏற்கெனவே உலக வர்த்தக அமைப்பு நிர்ணயம் செய்த அதிகபட்ச இறக்குமதி வரி அல்லது அதற்கு 7.5 சதவிகித அளவு விதிக்கப்படும். இந்தியாவில் அதிகம் உற்பத்தியாகும் வேளாண் விளைபொருட்களான, உருளைக் கிழங்கு, அரிசி, கோதுமை, சிறு தானியங்கள், தானிய தயாரிப்புகள், சோயா எண்ணெய் மற்றும் காட்டுக் கடுகெண்ணெய் இவற்றுடன் மாமிசம், கோழிப் பொருட்கள் போன்றவை, இறக்குமதியால் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

*6.3* "தோகா" வில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில், வேளாண்மைக்கான வரைவு குறிப்பு, வளர்ந்து வரும் நாடுகள், இறக்குமதி வரிகளை 25 சதவீதம் குறைத்து, அதிகபட்ச இறக்குமதி வரி 60-120 சதவீதத்துக்குள் இருக்குமாறு வலியுறுத்துகிறது. இந்தியா போன்ற நாடுகளைப் பொறுத்தவரை கோதுமை, அரிசி மற்றும் சிறு தானியங்கள்

(மக்காச்சோளம் உள்பட) மீது இறக்குமதி வரி குறைப்பு செய்ய வேண்டி வரும். உணவு எண்ணையைப் பொறுத்தவரை அதிகபட்ச இறக்குமதி வரியான 300 விழுக்காட்டைக் குறைப்பது குறித்துப் பேச முன்வரலாம். ஆயினும் அதற்குப் பதிலாக இந்தியாவின் வர்த்தகக் கூட்டு நாடுகள் அதிகபட்ச பிரதிபலன் உண்டாகும் வகையில் சலுகைகள் அளிக்கின்றதா என்று பேச்சுவார்த்தைகளில் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

6.1 இந்தியா மற்றும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அரிசி, பருத்தி, பழங்கள், காய்கறிகள், மிளகாய், புளி மற்றும் வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் போட்டியிடும் நிலையில் உள்ளன. ஆயினும் மேலும் போட்டியிட உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையிலும், விளைபொருட்களின் தரம் அதிகரிக்கும் வகையிலும், தொழில்நுட்பங்களை உருவாக்கித் தருவது மிகவும் முக்கியவத்துவம் வாயந்ததாக உள்ளது.

## 7. தமிழ்நாட்டில் வேளாண்மையின் வளர்ச்சி

7.1 தமிழ்நாட்டில் 1980-களில் மற்றும் 1990-களின் முற்பகுதியில் வேளாண்மை வளர்ச்சி ஆண்டுக்கு 4.08 சதவீதம் என்ற அளவில் இருந்தது. தொழில் துறையுடனும், சேவைப் பிரிவுடனும் ஒப்பிடும் அளவு வேளாண் வளர்ச்சி இருந்தது. அதே சமயம், தொழில் உற்பத்தி வளர்ச்சி மற்றும் சேவைகள் துறையின் வளர்ச்சி முறையே, 1.49 சதவீதம் மற்றும் 6.91 சதவீதமாக இருந்தன. ஆனால் 1990-களின் பிற்பகுதியில், தொழில்கள் மற்றும் சேவைகள் துறையின் வளர்ச்சி விகிதம் 4.97 மற்றும் 10.20 என அதிகரித்தபோது வேளாண்மை வளர்ச்சி விகிதம் வெகுவாகக் குறைந்து 1.23 என்ற அளவில் இருந்தது. இது வளர்ந்து முதிர்ச்சி அடைந்த பொருளாதார நிலையைக் காட்டுகிறது. (தமிழ்நாடு, ஒரு பொருளியல் கண்ணோட்டம், 1999-2000, தமிழக அரசு)

7.2 இதற்கு முக்கியக் காரணம், பெருமளவில் பயிர் செய்யப்படும் வேளாண் விளைபொருட்களின் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1980 ஆம் ஆண்டு நிலையோடு ஒப்பிடும்போது 1990 ஆம் ஆண்டுகளில் மிகவும் குறைந்ததே ஆகும். இக்காலகட்டத்தில் நெல் உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 4.82-லிருந்து 1.90-க்கு குறைந்தது. பிற தானியங்களைப் பொறுத்தவரை இது 1.57 முதல் 4.80 விழுக்காடு என்ற நிலையில் இருந்து -1.02 முதல் -2.33 விழுக்காடு என்ற அளவுக்குக் குறைந்தது. பயறு வகைகள் மற்றும் எண்ணைய் வித்துக்களின் உற்பத்தி வளர்ச்சி விகிதமும்





இதே போன்று குறைந்தது. ஆயினும் 1980 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், அனைத்து உணவு தானிய மொத்த உற்பத்தி 5.6 மில்லியன் மெட்ரிக் டன்கள் என்ற அளவில் இருந்து 7.7 மில்லியன் மெட்ரிக் டன்கள் என்ற அளவுக்கு உயர்ந்தது. (பயிர் மற்றும் பருவ அறிக்கை, 1980-2002, தமிழ் நாடு அரசு)

## 8. வேளாண்மைக்கு குறைந்து வரும் நில மற்றும் நீர் ஆதாரங்கள்

8.1 தமிழ்நாட்டில், கடந்த 10 ஆண்டுகளில், நிகரப் பயிர் செய்யப்படும் பரப்பு தொடர்ந்து குறைந்து 1990-91-ல், 60 லட்சம் எக்டேர் என்ற நிலையில் இருந்து 2001-2002-ல் 52 லட்சம் எக்டேராக இருந்தது. மொத்தப் பயிர் செய்யப்படும் பரப்பும் இந்த 10 ஆண்டுகளில் 66 லட்சம் எக்டேரில் இருந்து 62 லட்சம் எக்டேராக குறைந்துவிட்டது. முதற் பிரிவான கச்சாப் பொருட்கள் உற்பத்தி செய்யும் பொருளாதாரத்திலிருந்து மூன்றாம் பிரிவால் வழி நடத்தப்படும் பொருளாதாரமாக மாறுவதும், பெருகி வரும் நகர்ப்புற விரிவாக்கமும், இதற்கு முக்கியக் காரணங்கள் எனக் கூறலாம். (பயிர் மற்றும் பருவ அறிக்கை, 1990-91, 2001-2002, தமிழ் நாடு அரசு)

8.2 கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பெறப்படும் மழை அளவும் சாதகமாக இல்லை. நீண்ட கால சராசரி அளவான 967.2 மி. மீட்டரை விட குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே உள்ளது. (கடந்த ஐந்தாண்டுகளின் மழை அளவைக் கொண்டு நிர்ணயிக்கப்படும் மாறக்கூடிய சராசரி அளவு) தற்போதைய ஆண்டிற்கு முன்னதான 2001 ஆம் ஆண்டு - இது 20 சதவீதம் குறைவாகவும், 2002 ஆம் ஆண்டு 22 சதவீதம் குறைவாகவும் இருந்தது. இத்துடன் காவிரி தண்ணீரின் நிலையற்ற நிலை, நிலைமையை மேலும் மோசமாக்கியது . நிலத்தடி நீர் ஆதாரங்களும் விரைந்து குறைந்து வருகின்றன. மாநிலத்தில் மொத்தம் உள்ள 385 வட்டாரங்களில், 288-ல் நிலத்தடி நீர் உபயோகம், சேமிக்கும் அளவை விட, மிக அதிகமாகவோ அல்லது கவலையுறும் நிலையிலோ உள்ளது. (கருப்பு அல்லது சாம்பல்)

8.3 ஆகவே, குறைந்துவரும் விவசாய விளை நிலங்கள் (விவசாயம் செய்யக்கூடிய நிலம் - நிகர சாகுபடிப் பரப்பு, மொத்த தரிசுகள் மற்றும் சீர்திருத்தப்பட வேண்டிய பாழ்பட்ட விளைநிலம் உள்பட பரப்பு பத்தாண்டு காலத்தில் 81.61 இலட்சம் எக்டேரிலிருந்து 79.94 இலட்சம் எக்டேர்களாகக் குறைந்துள்ளது), நீர் ஆதாரங்கள் ஆகியன, தமிழ்நாட்டில்

விவசாயம் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளை தெளிவாகக் காட்டுகின்றன. இத்தகைய ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

8.4 ஆகவேதான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களிடம் பாசன நீர்த் தேவை குறைவாகவும் அதே நேரத்தில் ஓரளவு நியாயமான நிகர வருமானத்தைத் தரக்கூடிய மாற்றுப் பயிர் சாகுபடியை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகிறார்கள்.

## 9. நம்பிக்கைத் துளிகள்

9.1 தமிழ்நாட்டில், வேளாண்மைச் சூழ்நிலை கடினமாக இருந்தாலும்கூட, பலதரப்பட்ட பயிர்களின் மகசூலில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடமோ அல்லது கிட்டத்தட்ட முதலிடமோ வகிக்கிறது. அகில இந்திய பல்வேறு பயிர்களின் உற்பத்தி ஒப்பீடு நிலையானது, தமிழ்நாடு நிலக்கடலையில் முதலிடத்தை வகிப்பதையும், மொத்த எண்ணெய்வித்துப் பயிர்கள், கரும்பு, சோளம் மற்றும் கம்பு ஆகிய பயிர்கள் மகசூலில் நாம் முதல் நிலையும், ஒரு எக்டேருக்கான மகசூல் முறையே, 1,765 கிலோ, 1,500 கிலோ, 107.29 டன், 1,010 கிலோ, 1,518 கிலோ என்பதை தெரிவிக்கின்றது. நெல் மகசூலில் பஞ்சாப் மாநிலத்துக்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலையில் உள்ளது. (3,415 கிலோ/ஒரு எக்டேருக்கு) (வேளாண் புள்ளியியல் - ஒரு கண்ணோட்டம், 2002, இந்திய அரசு)

9.2 சாதனைகள் என்று எடுத்துக் கொண்டால், தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி நன்மதிப்புமிக்க நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. 2002-03 ஆம் ஆண்டில் பழங்கள், காய்கறிகள் மற்றும் மொத்தத் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி முறையே, 45.85 லட்சம் டன்கள், 48.13 லட்சம் டன்கள் மற்றும் 110.04 லட்சம் டன்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. 2003-04 ஆம் ஆண்டில் இப்பயிர்களின் உற்பத்தி, முறையே 5.26 விழுக்காடு, 9.74 விழுக்காடு மற்றும் 9.08 விழுக்காடு அதிகரித்து, 48.26, 52.82, 120.03 லட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது (பயிர் மற்றும் பருவ அறிக்கை, 2002, தமிழ்நாடு அரசு)

9.3 இத்தகையதொரு நம்பிக்கையான சூழ்நிலை, சற்றே மாறுபட்ட அணுகுமுறையை மேற்கொண்டால், (பன்னாட்டுத் தொழில் சொல்





தொகுதியில்) சூழ்நிலையை சமாளித்து வெற்றி காண முடியும் என்பதையே குறிக்கிறது. இதில் வெற்றிக்கு திறவுகோல், இன்றைய பிரச்சினையான சூழ்நிலையை, எவ்வாறு சரியாக உணர்ந்து, கணித்து சரியான கொள்கைகளை மேற்கொள்வதன் மூலம் நம்மை தயார் செய்து கொண்டு அக்கொள்கைகள் பாரம்பரிய பயிர்களிலிருந்து மாறுபட்ட ஒரு பலதரப்பட்டப் பயிர்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதுடன் தேவையான இடுபொருட்கள், குறிப்பாக நல்ல தரமான விதைகளை, உற்பத்தியாகும் பொருட்களை, விரைந்து கெடக்கூடிய காய்கறி, பழங்கள் மற்றும் நீண்ட காலம் வைத்துக் கொள்ளக்கூடிய விளைபொருட்களை சரியான முறையில் சேமிக்கவும், விற்பனை செய்யவும், உதவுகிறோம் என்பதைப் பொறுத்து அமையும்.

9.4 சமீபத்திய மாதங்களில் தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி செய்யும் பரப்பு சுமார் 20 லட்சம் எக்டேரில் இருந்து சுமார் 13-14 லட்சம் எக்டேராகக் குறைந்து அதன் காரணமாக நெல் உற்பத்தி குறைந்தபோதும் கூட, மாநிலத்தின் பல பகுதிகளில் விற்பனைக்கு வரும் அரிசியின் அளவு பெரிதாகக் குறையவும் இல்லை, இதனால் அரிசி விலை பெரிதாக உயரவும் இல்லை. இதற்குக் காரணம் தாராள மயமாக்கல் கொள்கை பின்பற்றப்படும் இன்றையச் சூழ்நிலையில், அண்டைய மாநிலங்களில் இருந்து அரிசி தமிழ்நாட்டுச் சந்தைகளுக்குக் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுவதேயாகும். மற்றும் பரப்பு குறைந்தபோதும் உற்பத்தித் திறன் உயர்வால் உற்பத்திக் குறைவு அதே விகிதத்தில் இல்லை. இது, நாம் உற்பத்தி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை பெருமளவு குறைத்துவிட்டோம் என்பதைச் சுட்டிக்காட்டும் அதே வேளையில், தேசிய அளவிலும், உலக அளவிலும் விரிந்துவிட்ட சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள, சேமிப்பிற்கான வழிவகைகள் மற்றும் விற்பனைச் சவால்கள் முனைந்து எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் குறிக்கிறது.

9.5 மொத்தத்தில், நமது குறிக்கோள், வேளாண்மைப் பொருட்கள் உற்பத்தியில் 4 சதவீத ஆண்டு வளர்ச்சியையும், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியில் 8 சதவீத ஆண்டு வளர்ச்சியையும் 10—வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எட்டுவதாகும். (2002-2007)

## 10. வேளாண் வளர்ச்சிக்கான கொள்கைகளில் புதிய முடிவுகள்

10.1 தமிழ்நாடு வேளாண்மைச் சூழலின் தற்போதைய நிலையை பகுத்தறிந்ததன் பேரில் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியவை.

- ☑ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மாற்றுப் பயிர் திட்டத்தை, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வேளாண் பருவ மண்டலங்களுக்குப் பொருந்தும் வகையில் தயார் செய்து விரைந்து செயல்படுத்துதல். அந்தந்த மண்டலத்திற்கேற்ற பயிர்கள் அதாவது மண்டல வாரியான பயிர் திட்டம்.
- ☑ குறைந்துவரும் பாசன நீர் ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு, பாசன நீர் உபயோகத்தைச் சிக்கனப்படுத்தும் வகையிலும், பாசன நீர் உபயோகத் திறனை மேம்படுத்தும் வகையிலும், விவசாய நிலங்களில் சிறிய பாசன நீர் சேமிப்பு அமைப்புகளை அமைத்தல் மற்றும் சொட்டு நீர்-தெளிப்பு நீர் பாசன முறைகளான நுண்நீர் பாசனத்தை அதிகப் பரப்பளவில் விவசாயிகள் மேற்கொள்ள ஏதுவாக திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- ☑ பாழ்பட்ட விளைநிலங்களைச் சீர்படுத்துதல் மற்றும் தரிசு நிலங்களை சாகுபடியின் கீழ் கொண்டுவருதல்.
- ☑ பாசன நீர் அதிகம் உபயோகிக்கும் பயிர்களின் பரப்பைக் குறைத்தல்/தவிர்த்தல்
- ☑ அறிவியல் ரீதியில் பாசன நீர் பயன்பாட்டினை வலியுறுத்தி மழைநீர் சேகரிப்பின் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயர வழிவகை செய்தல்.
- ☑ பல்வேறு வேளாண் பருவ மண்டலங்களுக்கு ஏற்ப பல்வேறு பயிர்வகைகளின் பயன்பாடுகளை தேசிய மற்றும் பன்னாட்டு சந்தைகளிலும் பெறத்தக்க லாபங்களுக்கு ஏற்ற வகையில் பல்வேறு பயிர் வகைகளை பயிரிட ஏதுவாக உள்ள செய்திகளைச் சேகரித்து மதிப்பீடு செய்தல்.
- ☑ மண் வளத்தை மேம்படுத்துவதற்கு தக்க பயிர்களைப் பின்பற்றி பசுந்தாள் உரப் பயிர்களை, சுழற்சி முறையில் சேர்த்து. சற்றேறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, நுட்பமான முறையில் ஒரு வகைப் பயிரைப் பயிரிட்டு பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்க்கிருமிகளின் வாழ்க்கை முறையை தொடர இயலாமல் செய்வதற்காக திட்டமிட்டுச் சேர்த்தல்.
- ☑ பண்ணைக் கழிவுகள் மற்றும் பிற கழிவுகளை உரமாக்கி பயிர் உற்பத்திக்காக, மண்ணில் போதுமான அளவு அங்ககப் பொருட்களின் அளவை அதிகரிக்கச் செய்தல்





- ☑ மண்புழு உரம் தயாரிப்பு, "பஞ்சகவ்யா" மற்றும் "மட்கா கார்ட்" தயாரிப்பு மற்றும் உபயோகத்தை அதிகரிக்கச் செய்து இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்துதல்.
- ☑ தோட்டக்கலைப் பயிர்களை அதி துல்லியமான வேளாண் முறையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தல், அறுவடைக்குப் பிந்திய செய் நுட்பங்கள் மற்றும் மேலாண்மை முறைகளை மேற்கொள்ளுதல்.
- ☑ ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மேலாண்மை ஆகியவற்றிலான, பாசன நீர் நிர்வாகத்தின் மூலம் மண்ணின் தன்மையைப் பாதுகாத்து உற்பத்தியைப் பெருக்குவதுடன், மண் பரிசோதனையை செறிந்த உபகரணங்கள் மூலம் துல்லியமாகக் கணக்கிட்டு அதனை, தகவல் தொழில்நுட்பங்கள் உதவியுடன் விவசாயிகளை உடன் சென்றடையுமாறு செய்தல்.
- ☑ பயிர் வகைகளை பட்டத்திற்கேற்ப மண் மற்றும் நீர் வளத்தைப் பாதிக்காத வகையிலும் சந்தைக்குத் தரமான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வினைமுறைத் திறன்களைக் கையாளுதல்.
- ☑ தமிழகத்திலும். பிற மாநிலங்களிலும் நிலவும் வேளாண் விளைபொருட்களின் விலை விவரங்களை அறிந்து நாள்தோறும் வழங்கிடுவதற்கு உத்வேகம் அளித்தல்.
- ☑ பெருந்தகவல் சாதனமான அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி, கேபிள் டி.வி. அலைவரிசைகள், தமிழ் செய்தித்தாள்கள் போன்றவற்றில் முக்கிய வேளாண் பொருட்களின் விலை விவரங்களும் விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைபொருட்கள் விற்பதற்கு ஏற்ற செய்திகளையும் தர பெருமளவில் பயன்படுத்துதல்.
- ☑ ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், விற்பனைக் குழுக்களும், வியாபாரிகளின் முகவரிகளையும், அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட எல்லை தொடர்பான தகவல்களையும் வெளியிடுவது மற்றும் இவ்வலுவலகங்களின் அறிவிப்புப் பலகைகளில் வைப்பதன் மூலம் விவசாயிகள் தங்களின் பொருட்களை எளிதில் யாரிடம் விற்பது போன்ற முடிவுகளை மேற்கொள்ள முடியும். மேலும் தேசிய

அளவிலும் உலக அளவிலும் உள்ள சந்தைகளிலும் உள்ள விலை நிலவரங்களையும் அறிவிப்புப் பலகைகளில் தெரியப்படுத்தலாம் மற்றும் தரவகத்திலும் வெளியிடலாம்.

☑ வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள், அகில உலகச் சந்தைகளின் தேவைகளை அறிந்து அதன் மூலம் நம்மிடையே உள்ள குறிப்பிட்ட, பெருமளவில் உள்ள பயிர்களில் உள்ள திறன்களை சந்தைப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

*10.2* துறைசார்ந்த பணிகளுடன் மேற்சொன்ன முயற்சிகளை வலியுறுத்தி உலகச் சந்தையில் விற்க இணைத்துச் செயல்படும்பொழுது. வேளாண் குடிமக்கள் தங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான தற்போதைய நிலைமையைச் சமாளித்து மாறிவரும் உற்பத்திச் சூழலுக்குகேற்ப தங்களை மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். நாளடைவில் தற்போதைய உண்மை நிலவரத்தைப் படிப்படியாக உணரவும் அதற்கேற்ப தங்களை தயார்படுத்திக் கொள்ளவும் பின்னர் பயன்படவும் வழிவகுக்கும். இப்பணி முயற்சியின் மூலம் வேளாண் துறையில் நெகிழ்வும் தாக்கங்களை தாங்கிக்கொள்ளும் திறனும் ஏற்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு சந்தைநோக்குடன் செயல்பட ஏதுவாகும். அதே நேரத்தில் உணவுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும். நாளடைவில் இதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாய்ப்புகளைப் பெருக்கி உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்ளவும், வர்த்தகம் சார்ந்த விளைபொருட்களை உற்பத்தி செய்திட வாய்ப்புகளும் கிட்டும்.





# அத்தியாயம்-2

# வேளாண்மை

## 1. முன்னுரை:

பெருகிவரும் மக்கட்தொகையின் உணவுத் தேவையை நிறைவு செய்வதிலும், வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருட்களின் தேவையை எதிர்கொள்வதிலும், கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும் வேளாண்மைத் துறை முக்கிய இடத்தை வகிக்கிறது.

தமிழ்நாட்டின் மொத்த பரப்பு 1.3 இலட்சம் சதுர கி.மீ ஆகும். இதில் மொத்த பயிரிடும் பரப்பு 63 லட்சம் எக்டேர் ஆகும். சராசரி நில உடைமைப் பரப்பு தொடர்ந்து குறைந்து வந்து தற்போது 0.93 எக்டேராக உள்ளது. அகில இந்திய அளவில் ஒப்பிடும்போது இது 1.55 எக்டேர் ஆகும். மேலும் மொத்தம் 80 இலட்சம் நில உடைமைதாரர்களில் 59.51 இலட்சம் நிலஉடைமைதாரர்கள் 1 எக்டேருக்குக் குறைவாகவும், 12.3 இலட்சம் நில உடைமைதாரர்கள் 1-2 எக்டேர் நில உடைமை கொண்டவர்களாகவும் உள்ளனர். பயிரிடும் திறன் ஏறத்தாழ 119 விழுக்காடு ஆகவும், பாசன திறன் ஏறத்தாழ 120 விழுக்காடாகவும் உள்ளது.

### 1.1 நிலப் பயன்பாடு:

கடந்த பத்து ஆண்டுகளில் தமிழகத்தின் நிலப் பயன்பாடு மற்றும் பயிரிடும் திறன் விவரம் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளது.

[2004 ஜூலை 29

**தமிழ்நாட்டின் நிலப் பயன்பாடு/பயிரிடும் திறன் (இலட்சம் எக்டர்)**

| வ. எண் | விவரம் | 1990-91 | 1995-96 | 2000-01 | 2001-02 | 2002-03 |
|---|---|---|---|---|---|---|
| 1 | மொத்த பரப்பு | 130.19 | 130.04 | 129.91 | 129.91 | 129.91 |
| 2 | பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்கள் | 2.90 | 3.48 | 3.52 | 3.87 | 3.89 |
| 3 | நடப்புத் தரிசு நிலங்கள் | 12.49 | 12.93 | 11.34 | 10.26 | 15.02 |
| 4 | இதர தரிசு நிலங்கள் | 10.44 | 11.30 | 12.28 | 14.09 | 14.91 |
| 5 | நிகர பயிரிடப்பட்ட பரப்பு | 55.78 | 53.42 | 53.03 | 51.72 | 45.90 |
| 6 | பயிரிடுவதற்கேற்ற பரப்பு(2+3+4+5) | 81.61 | 81.13 | 80.17 | 79.94 | 79.72 |
| 7 | ஒருமுறைக்கு மேல் விதைக்கப்பட்ட பரப்பு | 10.53 | 9.25 | 10.34 | 10.53 | 6.01 |
| 8 | மொத்த பயிரிடப்பட்ட பரப்பு (5+7) | 66.32 | 62.67 | 63.38 | 62.26 | 51.91 |
| 9 | பயிரிடு திறன் | 118.90 | 117.30 | 119.50 | 120.3 | 113.10 |
| 10 | நிகர பயிரிடப்பட்ட பரப்புக்கும் பயிரிடுவதற்கு ஏற்ற பரப்புக்கும் உள்ள விகிதம் (5/6%) (பயிரிடுவதற்கேற்ற பரப்பு பயன்பாட்டு விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது) | 68.34 | 65.84 | 66.15 | 64.70 | 57.60 |

ஆதாரம்: பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை ஆணையரிடமிருந்து பெறப்பட்ட "தமிழ்நாட்டிற்கான மேம்பாட்டு அறிகுறிகள்" மற்றும் "பருவம் மற்றும் பயிர்நிலை அறிக்கை"

நிகர மற்றும் மொத்த பயிரிடப்பட்ட பரப்பு குறைந்து வருவது மேற்கண்ட அட்டவணையில் உள்ள புள்ளிவிவரம் மூலம் தெளிவாகத் தெரிகிறது. நகர்ப்புறங்களின் வளர்ச்சி மற்றும் மாறுபட்ட மழை அளவு ஆகியவை இக்குறைபாட்டிற்கு முக்கியக் காரணமாக அமைகின்றன.



2004 ஜூலை 29]

நிகர பயிரிடும் பரப்பு கடந்த 10 ஆண்டுகளில் 55.78 இலட்சம் எக்டேரிலிருந்து 45.90 இலட்சம் எக்டேராகக் குறைந்துள்ளது. பயிரிடுவதற்கேற்ற பரப்பு 81.61 இலட்சம் எக்டேரிலிருந்து சுமார் 79.72 இலட்சம் ஆகக் குறைந்துள்ளது. பயிரிடும் திறன் 118 முதல் 120 விழுக்காடாக நிலைத்திருந்து 2002-03–ல் 113.1 விழுக்காடு ஆக மேலும் குறைந்தது. மொத்த பயிரிடப்பட்ட பரப்பு 66 இலட்சம் எக்டேரிலிருந்து 51 இலட்சம் எக்டேருக்குச் சற்று மேல் என்ற நிலைக்கு குறைந்துள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் பயிரிடுவதற்கேற்ற பரப்பான ஏறத்தாழ 80 இலட்சம் எக்டேர் என்ற அளவினை நெருங்கக் கூட இயலவில்லை.

வேளாண்மைத் துறையானது, வருவாய் மற்றும் புள்ளியியல் துறையுடன் இணைந்து 2003 ஆம் ஆண்டு ஆகஸ்டு செப்டம்பர் கால அளவில் (2001-2002 நிலவரப்படி) அனைத்து மாவட்டங்களிலும் (நீலகிரி மற்றும் சென்னை நீங்கலாக) தரிசு மற்றும் பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்கள் பற்றிய ஆய்வை மேற்கொண்டது.

இந்த ஆய்வு, தரிசு நிலங்களைத் துல்லியமாக கணிக்கவும், தரிசு நிலங்களைப் பசுமை நிலங்களாக மாற்றுவதற்கான திட்டம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்தவும் வழிவகை செய்கிறது.

**1.2 தமிழ்நாடு வேளாண் உற்பத்தி பற்றிய கண்ணோட்டம்:**

தமிழ்நாடு விவசாயிகள் மாறி வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தை நிலவரம் ஆகியவற்றுடன் அதிக ஈடுபாடு கொண்டு ஏற்பவர்களாக இருப்பதால் வேளாண் உற்பத்தியில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்துள்ள ஒரு மாநிலமாக உள்ளது. வேளாண்மையை இலாபகரமாகச் செயல்படுத்தவும், அண்மைக் கால ஆண்டுகளில் நிலையான வேளாண் முன்னேற்றத்தை அடைவதற்கும் கொள்கைச் சூழலை உருவாக்கி தேவையான உதவிகளையும் வழங்குவதில் அரசு உறுதுணையாக இருந்து வருகிறது.

இம்மாநிலத்தில் வேளாண்மைச் செயல்பாட்டு விவரம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 29

(கிலோ/எக்டேர்)

| பயிர் | சராசரி விளைச்சல் | | அதிகபட்ச விளைச்சல் | தமிழ்நாட்டின் நிலை |
|---|---|---|---|---|
| | இந்தியா | தமிழ்நாடு | | |
| அரிசி | 1913 | 3415 | 3506 (பஞ்சாப்) | 2ஆம் இடம் |
| சோளம் | 772 | 1010 | 1010 (தமிழ்நாடு) | முதல் இடம் |
| கம்பு | 719 | 1518 | 1518 (தமிழ்நாடு) | முதல் இடம் |
| துவரை | 616 | 710 | 1301 (பீகார்) | 4 ஆம் இடம் |
| மொத்த உணவு தானியங்கள் | 1636 | 2262 | 4032 (பஞ்சாப்) | 3 ஆம் இடம் |
| மொத்த எண்ணெய் வித்துக்கள் | 791 | 1500 | 1500 (தமிழ்நாடு) | முதல் இடம் |
| நிலக்கடலை | 924 | 1765 | 1765 (தமிழ்நாடு) | முதல் இடம் |
| பருத்தி | 191 | 285 | 430 (பஞ்சாப்) | 4 ஆம் இடம் |
| கரும்பு | 69636 | 107285 | 107285 (தமிழ்நாடு) | முதல் இடம் |

ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் கூடுதல் உபரி நீர்ப்பாசனம் பெறும் பகுதிகளில் அதிகபட்ச விளைச்சல் 5 முதல் 5.5 மெடன்/எக்டேர் பெறப்பட்டுள்ளது. எனினும் வறட்சி நிலை காரணமாக விளைச்சல் இந்த அளவைவிடக் குறைவாக உள்ளது. ஆனால் தென்காசி பகுதியில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை உபயோகித்து ராபி 2004—ல் 10.5 மெடன்/எக்டேர் நெல் உற்பத்தியை அடைந்துள்ளோம்.

### 1.3 பிரச்சினைகள் மற்றும் இடர்பாடுகள்:

மாநிலத்தில் வேளாண்மையில் நிலையான வளர்ச்சி அடைவதில் உள்ள முக்கிய இடர்பாடுகள் வருமாறு:-

- நகர்ப்புற விரிவாக்கத்தினால் விளைநிலங்கள் பரப்பில் பாதிப்பு
- பிரிவுபட்ட நில உடைமை அளவு
- அடிக்கடி பொய்த்துவிடும் பருவமழை மற்றும் சீரான மழை பொழிவு இல்லாதிருத்தல்
- அளவிற்கு மீறிய பயன்பாட்டினால் நிலத்தடி நீர் குறைதல் மற்றும் மறு செறிவூட்டுதல் இல்லாத நிலை



2004 ஜூலை 29]

- தரிசு நிலப் பரப்பு அதிகரித்தல்
- நிலத்தின் தரம் பாதிப்பு (பிரச்சினை நிலங்கள்)
- தீவிர பயிரிடும் முறைகள், மரபு வழி பயிரிடும் முறைகள், குறிப்பாக மரபு வழி நீர்ப்பாசனம் மற்றும் உரமிடுதல் ஆகியவற்றைக் கடைபிடித்தல் காரணமாக மண்ணின் வளம் மற்றும் சத்துக்களின் நிலை குறைந்துவருதல்
- நீர்மட்டம் குறைந்திருப்பதன் காரணமாக ஆற்றுநீர் திறந்துவிடுவதில் நிலையற்ற தன்மை
- மானாவாரி நிலங்களில் பயிரிடுவதில் போதிய கவனம் செலுத்தாத நிலை (பயிரிடும் பரப்பில் 52 விழுக்காடு மானாவாரி)
- தொடர்ந்துவரும் விற்பனை சிக்கல்கள்
- கடந்த மூன்று ஆண்டுகளாக நிலவிவரும் கடும் வறட்சி நிலை

### 1.4 வினைமுறைத் திறம்

வேளாண் உற்பத்தியில் நிலையான வளர்ச்சியை அடைய அரசு மேற்கொள்ளும் முக்கிய வினைமுறைத் திறங்கள் வருமாறு:-

- அதிக பரப்பிலுள்ள தரிசு நிலங்களைப் பசுமை ஆக்குதல். இந்த விரிவான திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.
- பரந்த விரிவுபடுத்தப்பட்ட மானாவாரி நில மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களை நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைத்து அதனை மக்கள் பங்கேற்கும் மக்கள் இயக்கமாக மேற்கொள்ளுதல்.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி குறைந்த நீரைக்கொண்டு அதிக வருமானம் தரக்கூடிய மாற்றுப் பயிர் பயிரிடும் முறைகளைக் கடைபிடிக்கச் செய்தல். பருவமழை பாதிப்பு, பாசனத்திற்குக் கால்வாய்களில் நீர் பெறுவதில் உள்ள நிலையற்ற தன்மை மற்றும் குறைந்துவரும் நிலத்தடி நீரின் அளவு போன்ற கடினமான நிலைமையைச் சமாளிக்க ஏழு வேளாண் தட்பவெப்ப மண்டல வாரியாக இயல்பான, மிதமான வறட்சி

மற்றும் கடுமையான வறட்சிக் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பயிரிடும் முறைகள் மண்டல வாரியாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

- நம்பகத்தன்மை வாய்ந்த வணிகம் மற்றும் நிலையான, நியாயமான விலை பெறும் நிலையை உருவாக்க விவசாயிகள் மற்றும் தொழில் துறைக்கு இடையே உள்ள தொடர்பை மேம்படுத்துதல்.

- இயற்கை பண்ணைய அணுகுமுறை மூலம் மண்ணின் வளத்தைப் பாதுகாத்தல், தேவைக்கேற்ப (மண் பரிசோதனை அடிப்படையில்) பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட உரமிடுதல் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தினை மேற்கொள்ளுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பரிந்துரையின்படி இலை வண்ண அட்டைத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் நெற்பயிரில் தழைச் சத்து மேலாண்மையைத் தமிழ்நாட்டில் அதிகம் நெல் பயிரிடும் பகுதிகளில் மேற்கொள்ளுதல்.

- மிகத் துல்லிய வேளாண்மையின் ஓர் அங்கமாக உரம் பற்றிய பரிந்துரை முடிவுகளை வழங்கும் முறையை மேற்கொள்ளுதல்.

- குறைந்த அளவு நீரைக் கொண்டு திருந்திய நெல் பயிரிடும் தொழில்நுட்பத்தைக் கடைபிடித்துப் பெருமளவில் நெல் பயிரிடுதலை மேற்கொள்ளுதல்.

- வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குக் குறைந்த நீர் உள்ள சூழ்நிலையில் பயிரிடக்கூடிய நெல் இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு இரகங்களை மேம்படுத்துதல் மற்றும் அனைவரும் அறியும்படி செய்தல்.

- உளி, கலப்பை மற்றும் பாத்தி உழவு மூலம் மண்ணின் கடினமான படிமத்தை உடைத்து அதன் மூலம் மண்ணில் காற்று மற்றும் நீர்ப் பிடிப்புத் தன்மையை மேம்படுத்தி பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் மானாவாரி நிலங்களில் ஈரப்பதத்தை பாதுகாத்தல்.





- பூஜ்ஜிய உழவு முறையை செயல்விளக்க அடிப்படையில் மண் அரிமானத்தைக் குறைக்கவும், நீர் மற்றும் நிலவளத்தைப் பாதுகாக்கவும், உற்பத்தித் திறனைப் பெருக்கவும் அறிமுகப்படுத்துதல்.

- நவீன மானாவாரிப் பண்ணைத் தொழில்நுட்பங்கள் மூலம் மானாவாரிப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதல்.

- ஒருங்கிணைந்த தீவிர பண்ணைய பயிரிடும் முறைகளை மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் நிலையான வருமானம் பெற வகை செய்தல்.

- உயிர் உரங்கள் இடுவதன் மூலம் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மற்றும் மரபு வழி தொழில்நுட்பங்களான பஞ்சகவ்யா, மட்கா பாதுகாப்பு முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் இயற்கை பண்ணையத்தின் ஒரு அங்கமாகக் கூடுதல் ஊட்டச்சத்து பெறுவதோடு இயற்கைக் கொல்லியாகவும் பயன்தரும் வகையில் உபயோகப்படுத்துவது ஊக்குவிக்கப்படும் இயற்கை பண்ணையத்திற்கான கொள்கை ஒன்று உருவாக்கப்படுகிறது.

- பெருமளவில் நுண்பாசன முறைகளைக் கடைபிடித்துச் சிக்கனமாக நீரைப் பயன்படுத்துதல் மற்றும் நீர் அறுவடை தொழில்நுட்பங்களை மேற்கொள்வதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல்.

- பயிர் உற்பத்தித் தொழில்நுட்பங்களை விரைவாக வழங்குதல்.

- கோடைப் பாசனபருவம் மற்றும் நெல் தரிசில் பயிரிடப்படும் பருத்தி, எண்ணெய்ப் பனை போன்ற பயிர்களின் பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க ஒப்பந்தப் பண்ணை முறைகளை ஊக்குவித்தல்.

- மக்காச்சோள உற்பத்தித் திறனை இரு மடங்காக உயர்த்த முயற்சித்தல்.

- மண்ணில் உள்ள இயற்கை அங்ககப் பொருட்களின் அளவை அதிகப்படுத்த மடக்கி உழுதல் போன்ற முறைகளை மேற்கொள்ளுதல்.

- கடுமையான வறட்சிக் காலங்களில் வடகிழக்கு மண்டலத்தில் மாற்றுப் பயிர் பயிரிடுதலுக்கு கோதுமைப் பயிர்கள் அறிமுகப்படுத்துவதை கருதுதல்.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சர்க்கரைக் கிழங்கை அதிக வெப்பமுள்ள தட்பவெப்ப பகுதிகளில் அனுசரணை ஆராய்ச்சி தளைகளை அமைத்து பயிரிட முடியுமா என ஆராய திட்டமிடப்பட்டுள்ளது. ஏனென்றால், சர்க்கரைக் கிழங்கு கரும்பை விட சர்க்கரை மாற்றுத் திறன் அதிகம் கொண்டதாக விளங்குகிறது.

**2. பருவநிலை மற்றும் பயிரிடுதலுக்கான வாய்ப்பு வளம்:**

தமிழ்நாட்டின் வேளாண்மை, தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழை, தேவையான நீர் காவிரியில் திறந்துவிடுதல் மற்றும் பெரிய நீர்த்தேக்கங்களில் போதுமான நீர் இருப்பு ஆகியவற்றைப் பெரிதும் சார்ந்துள்ளது. தென்மேற்குப் பருவ மழையைச் சாதகமாகக் கொண்டு பெருமளவு நிலப்பரப்பில் எண்ணெய்வித்து, பயறு மற்றும் பருத்திப் பயிர்கள் மானாவாரிப் பயிர்களாக இம்மாநிலத்தில் பயிரிடப்படுகின்றன. நெற்பயிர் பொதுவாக இறைவைப் பயிராக பயிரிடப்படுகிறது என்றாலும் புழுதிகால் பயிராக காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்மேற்குப் பருவ மழையைக் கொண்டு விதைப்பு செய்யப்பட்டு, பின்னர் ஏரி நீர்ப்பாசனம் மூலம் பயிரிடுதல் மேற்கொள்ளப்படுகிறது. நிலத்தடி நீரை மறுசெறிவூட்டவும், நீர்த் தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் நீர் இருப்பை அதிகரிக்கவும், வடகிழக்குப் பருவ மழை முக்கிய பங்கு வகித்து டிசம்பர்-சனவரி மாதங்களில் வேளாண்மைப் பயிர் சாகுபடி மேற்கொள்ள உதவியாக உள்ளது.

**2.1 மழைப் பொழிவு விவரம்:**

தமிழகத்தில் 2003 ஆம் ஆண்டு பெறப்பட்ட மழை அளவை இயல்பான மழை அளவு மற்றும் 2002-இல் பெறப்பட்ட மழை அளவுடன் ஒப்பீடு செய்து விவரம் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.



மில்லி மீட்டரில்

| வ. எண் | பருவம்/மாதம் | இயல்பான மழைப் பொழிவு | பெய்த மழை | | வேறுபாடு/ விழுக்காடு | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2002 | 2003 | இயல்பு மழையுடன் | கடந்த ஆண்டு மழையுடன் |
| 1 | குளிர் காலம் (சனவரி—பிப்ரவரி) | 36.7 | 70.0 | 8.7 | (-) 76.2 | (-) 87.5 |
| 2 | கோடைக் காலம் (மார்ச்—மே) | 134.2 | 85.8 | 124.9 | (-) 6.9 | (+) 45.5 |
| 3 | தென்மேற்குப் பருவம் (ஜூன்—செப்டம்பர்) | 331.6 | 185.4 | 329.7 | (-) 0.5 | (+) 77.8 |
| 4 | வடகிழக்குப் பருவம் (அக்டோபர்—டிசம்பர்) | 464.7 | 407.2 | 404.5 | (-) 12.9 | (-) 0.6 |
| | மொத்தம் | 967.2 | 748.4 (2003) | 867.8 (2004) | (-) 10.2 | (+) 15.9 |
| 1 | குளிர் காலம் (ஜன — பிப்) | 37.5 | 8.7 | 12.1 | (-) 67.7 | (+) 39.1 |
| 2 | கோடைக் காலம் (மார்ச்—மே) | 127.5 | 124.9 | 283.4 | (+) 122.3 | (+) 126.9 |

இயல்பான மழை அளவுடன் ஒப்பிடும்போது 2003 ஆம் ஆண்டு பெறப்பட்ட மழை அளவு ஏறக்குறைய சராசரி மழை அளவிற்கு 10.2 விழுக்காடு மட்டுமே குறைவாகப் பெறப்பட்டுள்ளது. இருப்பினும் 2003 ஆம் ஆண்டு பெறப்பட்ட மழை அளவை 2002 ஆம் ஆண்டு மழை அளவுடன் ஒப்பிடுகையில் 15 விழுக்காடு கூடுதலாகப் பெறப்பட்டபோதிலும் செப்டம்பர் (40.3 விழுக்காடு குறைவு) மற்றும் டிசம்பர் (76.4 விழுக்காடு குறைவு) ஆகிய மாதங்களில் குறைவாகப் பெறப்பட்டதால் சம்பா பயிர் அதிக அளவு நீர்த் தட்டுப்பாட்டிற்கு உள்ளானது.

[2004 ஜூலை 29

கடந்த ஆறு ஆண்டுகளாகப் பெறப்பட்ட மழை விவரம் வருமாறு:-

| ஆண்டு | மழையளவு | ஆண்டு | மழையளவு | |
|---|---|---|---|---|
| 1998 | 1036.4 மிமீ | 2001 | 774.7 மிமீ | இயல்பான மழை அளவு 967.2 மி.மீ. |
| 1999 | 837.3 மிமீ | 2002 | 748.4 மிமீ | |
| 2000 | 847.5 மிமீ | 2003 | 867.8 மிமீ | |

2003 ஆம் ஆண்டில் முக்கியமான மாதங்களில் மழைக் குறைவு ஏற்பட்டதனாலும், கடந்த 2 ஆண்டுகளில் (2001 மற்றும் 2002 மட்டுமின்றி, மேலும் 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் மழை அளவு இயல்பான மழையை விடக் குறைவு) குறைவான மழை பெறப்பட்டதாலும் நீர்த்தேக்கங்களில் குறைந்த அளவே நீர் இருப்பு உள்ளது. மேலும் நிலத்தடி நீரின் அளவும் மிகவும் குறைந்துள்ளது. இவை அனைத்தும் ஒட்டுமொத்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## 2.2 பயிர் நிலவரம் 2003–2004:

டெல்டா மாவட்டங்களில் குறுவை நெற்பயிர் இயல்பான பயிரிடும் பரப்பான 2.074 இலட்சம் எக்டேருக்குப் பதிலாக 0.46 இலட்சம் எக்டேர் மட்டுமே பயிர் செய்யப்பட்டதால் மிக அதிக அளவில் 80 விழுக்காடு பயிரிடும் பரப்பு குறைந்துள்ளது. இதேபோல் சம்பா பருவத்தில் இயல்பான பயிரிடும் பரப்பான 3.72 இலட்சம் எக்டேருக்குப் பதிலாக 3.529 இலட்சம் எக்டேர் பயிர் செய்யப்பட்டது. இதில் 1.241 இலட்சம் எக்டேரில் நேரடி விதைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்ட பயிரிடும் பரப்பும் அடங்கும். 2002 ஆம் ஆண்டு நீர்த் தேவையைக் குறைக்க நேரடி விதைப்புத் தொழில்நுட்பத்தை விவசாயிகளிடையே துறை பரிந்துரை செய்ததால், இத்தொழில்நுட்பம் குறிப்பிடத்தக்க வகையில் பிரபலம் அடைந்துள்ளது. இம்மாவட்டங்களில் தாளடிப் பருவத்தில் இயல்பான பயிரிடும் பரப்பான 1.770 இலட்சம் எக்டேருக்குப் பதிலாக 0.423 இலட்சம் எக்டேர் மட்டுமே பயிரிடப்பட்டது. இதன் விளைவாக டெல்டா மாவட்டங்களில் இயல்பான பயிரிடும் பரப்பான 7.564 லட்சம் எக்டருக்குப் பதிலாக 4.412 இலட்சம் எக்டேர் மட்டுமே நெல் பயிரிடப்பட்டது. இந்நிலையில் ஜூன் 12ஆம் தேதி வழக்கமாக திறந்துவிடப்படும் மேட்டூர் அணை நீர், குறைவாக இருந்த காரணத்தினால் 7–10–20003 அன்று திறக்கப்பட்டு 5–1–2004 இல் நீர் இன்மையால் மூடப்பட்டது. இந்நிலையில் அறுவடைக்கு வந்த நெற்பயிர்கள் நீரின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டன.



2004 ஜூலை 29]

கடந்த 4 ஆண்டுகளாக மழை குறைவாக மற்றும் சீராக, பரவலாகப் பெறப்படாத நிலையில் நீர்த்தேக்கங்களில் நீர் குறைந்ததோடு நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துள்ளதை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாற்றுப்பயிர் திட்டத்தினை அறிவித்தார்கள். அதன்படி மாற்றுப்பயிர் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தியது. நீர் அதிகம் தேவைப்படும் நெல் மற்றும் கரும்புப் பயிர்களுக்குப் பதிலாகச் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற பிற பயிர்களைப் பயிரிட விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்தகைய முயற்சி இக்கட்டான இயற்கைச் சூழ்நிலையில் பயிர் செய்யும் திறனைக் குறிப்பிட்ட அளவு உயர்த்தி நிலையான வருமானத்தை விவசாயிகள் பெற வகை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மற்றும் துறைத் தலைவர்களின் ஆலோசனையுடன் ஏழு தட்பவெப்ப மண்டலங்களுக்கும் மாற்றுப் பயிர் திட்டம் அணுகுமுறை தயாரித்து அதற்கான செயல் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

31–3–2004 முடிய முக்கியப் பயிர்களின் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | பயிர்கள் | பயிரிடும் பரப்பு (இலட்சம் எக்டேரில்) | | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | அரிசி | 20.00 | 14.008 | 73.58 | 47.380 |
| 2 | சிறுதானியங்கள் | 10.00 | 11.900 | 13.15 | 14.602 |
| 3 | பயறு வகைகள் | 7.20 | 7.926 | 3.12 | 3.400 |
| | மொத்த உணவு தானியங்கள் | 37.20 | 33.834 | 89.85 | 65.382 |
| 4 | பருத்தி (இலட்சம் பொதிகள்) | 2.50 | 0.988 | 5.40 | 1.770 |
| 5 | கரும்பு (வெல்லமாக) | 3.00 | 1.920 | 33.65 | 20.92 |
| 6 | எண்ணெய்வித்துக்கள் | 9.50 | 8.011 | 16.07 | 12.530 |

2004-2005 ஆம் ஆண்டில் சாதகமான சூழ்நிலையை எதிர்பார்த்து நிர்ணயிக்கப்பட்ட இலக்கு கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

[2004 ஜூலை 29

| வ. எண் | பயிர் | பயிரிடும் பரப்பு (இலட்சம் எக்டேர்) | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | அரிசி | 20.00 | 75.00 |
| 2 | சிறுதானியங்கள் | 11.00 | 14.85 |
| 3 | பயறு வகைகள் | 7.50 | 3.38 |
| | மொத்த உணவு தானியங்கள் | 38.50 | 93.23 |
| 4 | பருத்தி (இலட்சம் பொதிகள்) | 2.50 | 5.62 |
| 5 | கரும்பு (வெல்லமாக) | 3.00 | 35.00 |
| 6 | எண்ணெய்வித்துக்கள் | 10.00 | 17.00 |

அதன்படி, 2004-2005 ஆம் ஆண்டில் தடைகளைக் கடந்து நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைந்து அதிக உற்பத்தியை எட்ட பின்வரும் திட்டங்களும் செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

**2.3 பாசனம் மற்றும் வேளாண்மை உற்பத்தி தொடர்பாக மின்சார பம்பு செட்டுகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை:**

2003 ஆம் ஆண்டு தமிழகத்தில் வேளாண்மைத் துறையால் அனைத்து மாவட்டங்களிலும் 14,58,205 மின்சார பம்புசெட்டுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் அடிப்படையில், மின்சார பம்புசெட்டுகளைப் பயன்படுத்தும் விவசாயிகள் மாற்றுப் பயிர் சாகுபடி மேற்கொள்வதன் மூலம் பயிர் சாகுபடி திறனை உயர்த்தவும் மற்றும் எரிசக்தி உருவாக்கும் தொழில்நுட்பத்தைக் கடைபிடித்து நிலையான வருமானத்தை அடையவும் திட்டம் வகுக்கப்பட்டது. இப்பகுதிகளில் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறைகளை மேற்கொள்வதில் அதிக கவனம் செலுத்தப்படும்.

## 3. மாநிலத் திட்டங்கள்:

### 3.1 இடுபொருள் திட்டங்கள்:

#### *3.1.1 விதைகள்*

தரமான விதைகள், குறிப்பாக வீரிய ஒட்டு இரகம் மற்றும் புதிய இரகங்களைக் குறித்த காலத்தில் அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பயிர்களின் உற்பத்தித் திறன் விதைகளின் மரபு வழித் தூய்மை மற்றும் புறத்தூய்மை ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதில் தரமான விதைகளின் பங்கைக் கருத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட விதை மாற்று வீதத்தின் அடிப்படையில் வேளாண் துறை சான்று விதைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.



2004 ஜூலை 29]

**விதை உற்பத்தி நடவடிக்கைகள் வருமாறு:**

(அ) கருவிதை உற்பத்தி, மாநில இரகங்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலமும், தேசிய இரகங்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மூலமும் மேற்கொள்ளப் படுகிறது.

(ஆ) ஆதாரவிதை உற்பத்தி 37 மாநில அரசு விதைப் பண்ணைகள், 5 மாநில அரசு எண்ணெய்வித்துப் பண்ணைகள் மற்றும் வம்பன் என்ற இடத்தில் உள்ள ஒரு பயறு விதைப் பண்ணை, ஆகியன மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

(இ) சான்றுவிதை உற்பத்தி விவசாயிகளின் நிலங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

வேளாண்மைத் துறை ஆதாரவிதை உற்பத்தி, சான்றுவிதை உற்பத்திப் பணிகளுடன் அவற்றை வழங்கும் பணிகளையும் மேற்கொள்கிறது. விதைச்சான்றுத் துறை மூலம் விதைகளின் தரம் உறுதிசெய்யப்படுகிறது.

**தமிழகத்தில் வேளாண்மைத் துறை கடைப்பிடிக்கவுள்ள விதைமாற்று விழுக்காடு.**

| வ. எண் | பயிர் | அரசு அறுதியிட உள்ள விதைமாற்று விழுக்காடு |
|---|---|---|
| 1 | நெல் | 17 |
| 2 | சிறுதானியங்கள் | 7 |
| 3 | பயறுவகைகள் | 12.5 |
| 4 | பருத்தி—மானாவாரி | 10 |
| | பருத்தி—இறவை | 15 |
| 5 | மணிலா | 5 |
| 6 | எள் | 15 |
| 7 | சூரியகாந்தி | 50 |
| 8 | ஆமணக்கு | 30 |
| 9 | சோயாபீன்ஸ் | 20 |

[2004 ஜூலை 29

2003-2004 ஆம் ஆண்டு கொள்முதல் மற்றும் வழங்கலில் பொருள் சாதனை மற்றும் 2004-2005 திட்டங்கள் வருமாறு:

| வஎண் / பயிர் | 2003–2004 | | | | 2004–2005 திட்ட இலக்கு | |
|---|---|---|---|---|---|---|
| | கொள்முதல் | | விநியோகம் | | | |
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | கொள் முதல் | விநியோகம் |
| 1. நெல் | 9000* | 9040 | 17000 | 12985 | !7000 | 17000 |
| 2. சிறுதானியங்கள் | 400 | 335 | 400 | 351 | 400 | 400 |
| 3. பயறு வகைகள் | 1900 | 1204 | 1900 | 1273 | 1900 | 1900 |
| 4. எண்ணெய்வித்து | 4654 | 3310 | 4654 | 3127 | 7208 | 7208 |
| 5. பருத்தி | 283* | 156 | 283* | 163 | 367 | 367 |
| * (திருத்தப்பட்டது) | | | | | | |

அரசு விதைப்பண்ணை மற்றும் விவசாயிகளின் நிலங்களில் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதை மற்றும் சான்று விதைகளைச் சுத்திகரிப்பு செய்ய 16 பெரிய, 2 நடுத்தர மற்றும் 56 சிறிய விதைச் சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை ஆண்டிற்கு 28,200 மெ.டன் விதைகளைச் சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்டவையாகும். 2003-2004 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், அம்பாசமுத்திரம், மேட்டூர் அணை, சத்தியமங்கலம், அண்ணாபண்ணை, அரூர், ஓசூர், திருப்பதிசாரம் மற்றும் வந்தவாசி ஆகிய 9 இடங்களில் ரூ.20.87 இலட்சம் செலவில் பழைய சுத்திகரிப்பு இயந்திரங்களுக்குப் பதிலாக 9 புதிய விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பயிர்களின் சான்று விதைகள் விவசாயிகளுக்கு 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது. ரூ.27.88 இலட்சம் செலவில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விதைகளின் ஈரப்பதத்தை ஆய்வு செய்து அவற்றை முறையாகச் சேமித்து வைத்து, தரத்தை உறுதிசெய்யும் வகையில் 103 ஈரமானிகளும், 1,575 மர அட்டகங்களும் வழங்கப்பட்டன.

பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் உள்ள 100 வேளாண்மை விரிவாக்க மையங்களைப் பழுதுபார்க்கும் பணி ரூ.100 இலட்சம் செலவில் 2004-2005 ஆம் ஆண்டு புதிய திட்டமாக மேற்கொள்ளப்படும். மேலும் 2004-2005 ஆம் ஆண்டு ரூ.10.00 இலட்சம் செலவில் விதைகளைப் பாதுகாக்கவும், உலர்த்தவும், புகையூட்டம் இடவும்



2004 ஜூலை 29]

200 வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குத் தார்ப்பாய்கள் புதிய திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

**3.2 மண் அளவை மற்றும் நிலப் பயன்பாட்டு அமைப்பு:**

கள ஆய்வுகள் மற்றும் பரிசோதனைக் கூட ஆய்வுகள் மூலம் ஒரு பகுதியிலுள்ள மண்ணின் தன்மை, உருவாக்கவியல், அதன் இயற்பியல் மற்றும் வேதியியல் குணங்கள் ஆகியவை கண்டறியப்பட்டு பன்னாட்டுத் தரத்திற்கு ஏற்ப மண்ணை வகைப்படுத்தி, நில அமைப்பியலின்படி வரைபடம் தயாரித்து பல்வேறு வகையான பயன்பாடுகளை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வமைப்பு கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கி வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் அறுதியிடப்பட்ட கள ஆய்வு இலக்கான 1.10 இலட்சம் எக்டேருக்கு பதிலாக 1.11 இலட்சம் எக்டர் சாதனை அடையப்பெற்றுள்ளது. வரும் 2004-2005 ஆம் ஆண்டில் விரிவான மண் வகையீட்டுப் பணியாக 1.10 இலட்சம் எக்டேர் பரப்பில் செயல்பட இலக்கு அறுதியிடப்பட்டுள்ளது.

**3.3 களர் உவர் நிலங்கள் சீராக்கம்:**

நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 1,600 எக்டேர் பரப்பில் நிலச் சீராக்கம் செய்ய களர் உவர் நில சீராக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டு 1,155 எக்டேரில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு நிலச் சீராக்கத் திட்டம் 1,600 எக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்படும்.

**3.4 மண் பரிசோதனை நிலையங்கள்:**

மண்ணில் உள்ள சத்துக்களின் அடிப்படையில் குறிப்பிட்ட பகுதிக்கான உரப் பரிந்துரைகளை விவசாயிகளுக்கு அளித்திட மாநிலம் முழுவதும் 19 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. மண் பரிசோதனை நிலையங்கள் மூலமாக 4.4 இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் ஆய்வகங்கள் மூலமாக 2.13 இலட்சம் மண் மாதிரிகளும் 2003-2004 ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்டன.

[2004 ஜூலை 29

2003-2004 ஆம் ஆண்டில் மண் பரிசோதனை ஆய்வகங்களுக்கு ரூ.80.00 இலட்சம் செலவில் நவீன வசதிமிக்க அணுக்கதிர் ஈர்ப்பு அலை நிழல் படமானி வாங்கப்பட்டு அவை மேம்படுத்தப்பட்டன. 2004-2005 ஆம் ஆண்டு மண் பரிசோதனை நிலையங்கள் மூலமாக 5.28 இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் ஆய்வகங்கள் மூலம் 2.82 இலட்சம் மாதிரிகளும் ஆய்வு செய்யப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆய்வு நிலையங்கள் உர பரிந்துரைகளை வழங்குவதுடன் பிரச்சினைக்குரிய மண் வளங்களை சீராக்க பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கிராம அளவிலான மண்வள அட்டவணை தயாரித்தல் மற்றும் பாசன நீர் தரத்தை ஆய்வு செய்து உரிய பரிந்துரைகளை வழங்குதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. நடமாடும் மண் ஆய்வகங்கள் பிரச்சார சாதனமாக அமைந்து கிராம ஏற்புத் திட்டம், மண் ஆய்வு முகாம்கள் மற்றும் பொருட்காட்சிகள் ஆகியவை மூலம் மண்வளம், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூர மேலாண்மை ஆகிய தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதில் உறுதுணை புரிகின்றன. மேலும் குடுமியான்மலையில் செயல்பட்டு வரும் மத்திய தரக்கட்டுப்பாடு ஆய்வகம் தலைமை நிலையமாகச் செயல்பட்டு வேளாண் துறையில் உள்ள அனைத்து ஆய்வகங்களின் பரிசோதனைத் திறனைத் துல்லியமாகக் கண்காணிப்பதுடன், பரிசோதனைக்கூட அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கு உரிய பயிற்சியையும் வழங்கி வருகிறது. ஆய்வுக் கூடங்களின் ஆய்வக முடிவுகள் தரமான தனியார் ஆய்வுக்கூடங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆய்வுக்கூட முடிவுகளுடன் ஒப்பீடு செய்து இடையிடையே சரிபார்க்கப்படுகிறது.

### 3.5 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்:

உரக் கட்டுப்பாடுச் சட்டம், 1985-ல் விதிக்கப்பட்ட தரத்தின் அடிப்படையில், நல்ல தரமான உரங்களும் எருவும் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் உர ஆய்வாளர்கள், கலப்பு உரம் தயாரிக்கும் மொத்த மற்றும் சில்லரை விற்பனை மையங்களிலிருந்து உர மாதிரிகளை எடுக்கின்றனர். மாநிலத்தில் 14 அங்கீகரிக்கப்பட்ட உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் உள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் 17,219 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. 2004-2005 ஆம் ஆண்டில் 16,800 மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் தரமான உரங்கள் வழங்குவதை உறுதி செய்ய தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு உரக்கட்டுப்பாடு சட்டம் 1985—ஐச் செயல்படுத்துகிறது.



2004 ஜூலை 29]

### 3.6. பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வகங்கள்:

தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய மாநிலத்தில் 9 பூச்சிக்கொல்லி மருந்தாய்வகங்கள் செயல்படுகின்றன. 2003–2004 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட 13,860 மாதிரிகளுக்குப் பதிலாக 14,121 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்ய பல்வேறு சில்லறை விற்பனை நிலையங்களிலிருந்து பூச்சிக்கொல்லி மருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு 13,860 பூச்சி மருந்து மாதிரிகளை 2004–2005 ஆம் ஆண்டு ஆய்வுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வில் துல்லியமான ஆய்வு விவரம் பெற, தற்போதுள்ள உயர்தர திரவ கதிர் ஆய்வுமானி கருவிகளுக்குத் தேவையான உதிரி பாகங்களையும் வாங்க 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.4.9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.7. உரங்கள்:

பல்வேறு பயிர்களின் இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு இரகங்கள் முழுமையான உற்பத்தி ஆற்றலை அடைய தரமான உரங்களைச் சரியான நேரத்தில், சரியான அளவில் இடுவது அவசியமானதாகும். பயிர் சாகுபடிப் பருவத்தில் தேவையான அளவு உரங்கள் தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய உர உற்பத்தியையும், உரிய நேரத்தில் அவை வழங்கப்படுவதையும் வேளாண்மைத் துறை கண்காணித்து வருகிறது. தரக் கட்டுப்பாட்டு ஆணையினை அமல்படுத்தவும், அதன் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்தவும், தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று இத்துறையில் இயங்கி வருகிறது.

2003–2004 ஆம் ஆண்டு வேதியியல் உரம் வழங்கல் மற்றும் 2004–2005 ஆம் ஆண்டிற்கான திட்ட விவரம் வருமாறு:

இலட்சம் மெட்ரிக் டன்னில்

| சத்துக்கள் | 2003-2004 | | 2004-2005 ஆம் ஆண்டுக்கான திட்டம் |
|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | |
| தழைச்சத்து | 5.35 | 4.27 | 5.40 |
| மணிச்சத்து | 2.28 | 1.89 | 2.31 |
| சாம்பல்சத்து | 2.22 | 2.06 | 2.24 |
| மொத்தம் | 9.85 | 8.22 | 9.95 |

[2004 ஜூலை 29

இயற்கைப் பண்ணையத்தில் பன்னாடு அளவில் உள்ள முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு உற்பத்தியில் இழப்பு ஏற்படாத வகையில் மிகக் கவனத்துடன் தேர்வு செய்யப்பட்ட வேதியியல் உரங்களின் பயன்பாட்டிற்கு மாற்றாக உயிர் உரம் மற்றும் இயற்கை உரங்களை இடுவதன் மூலம் இயற்கைப் பண்ணையத்திற்குப் பன்னாடு அளவில் உள்ள முக்கியத்துவத்திற்கு இணையான நிலை ஏற்படும்.

### 3.8 நுண்ணூட்ட உரங்கள்:

நிலையான உற்பத்தியை அடைய, தழை, மணி மற்றும் சாம்பல் ஆகிய பேரூட்டச் சத்துக்கள் இடுவது மட்டுமின்றி சரியான அளவு நுண்ணூட்டச் சத்துக்களையும் இடுவது அவசியம் என நவீனக் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன. 2003-2004 ஆம் ஆண்டு வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள மண்ணின் பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் நிலை குறித்த வரைபடம் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டு 35,115 மண் மாதிரிகளில் நுண்ணூட்டச் சத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு, இழந்த ஊட்ட சத்துக்களைச் சமன் செய்ய உரிய பரிந்துரை வழங்கப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டிலும் மண் பரிசோதனை அடிப்படையில் பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை இட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் இத்துறை கவனம் செலுத்தும். சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் நீங்கலாக மற்ற அனைத்து மாவட்டங்களிலும் நுண்ணூட்டச் சத்துக்களை ஆய்வுசெய்ய மண் பரிசோதனை நிலையங்களுக்கு இத்துறை ஏற்கெனவே 18 அணுக்கதிர் ஈர்ப்பு அலை நிழற்படமானி கருவிகளை வழங்கி உள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு மேலும் இரண்டு அணுக்கதிர் ஈர்ப்பு அலை நிழற்படமானி கருவிகள் சிவகங்கை மாவட்ட மண் பரிசோதனை ஆய்வகத்திற்கும், அருப்புக்கோட்டை நடமாடும் மண் ஆய்வகத்திற்கும் ரூ.20.00 இலட்சம் செலவில் வழங்கப்படும். மேலும் மண்ணின் நுண்ணூட்டச் சத்தினை ஆய்வு செய்ய அணுக்கதிர் ஈர்ப்பு அலை நிழற்படமானி மற்றும் பிற கருவிகள் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகிறது.

பல்வேறு பயிர்களுக்கு ஏற்ற நுண் ஊட்டக் கலவைகளைக் குடுமியான்மலையில் இயங்கிவரும் உற்பத்தி மையம் மூலம் இத்துறை உற்பத்தி செய்துவருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு பயிர்களுக்குத் தேவையான 1,250 மெ.டன் நுண்ணூட்ட உரக் கலவை உற்பத்தி



2004 ஜூலை 29]

செய்யப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.9 உரப் பரிந்துரைக்கான முடிவு தாங்கும் முறை: (DSSIFER)

தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மண்ணின் நிலை குறித்த புள்ளிவிவரங்களை மேம்படுத்தி அதன் அடிப்படையில் பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் இடுவதற்கான பரிந்துரைகளை விவசாயிகளுக்கு வழங்க இத்துறை முழு முயற்சி மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையங்களைக் கணினிகள் மூலம் இணைத்து விவசாயிகள் பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட உரப் பரிந்துரை பெறுவதற்குத் தொலைநோக்குத் திட்டம் ஒன்று இத்துறையில் உள்ளது. இத்திட்டம் துல்லிய பண்ணையத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படும். இந்த உரப் பரிந்துரைக்கான முடிவு தாங்கும் முறை (DSSIFER) மேலும் மேம்படுத்தப்பட்டு, பயிர் சாகுபடி முறைகள், நிலச் சீராக்கம் மற்றும் பயிர் உற்பத்தித் தொழில் நுட்பங்கள் முதலியவை குறித்து விவசாயிகளுக்குத் தேவையான பரிந்துரைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். 2004-2005 ஆம் ஆண்டில் மதுரை மாவட்ட "ராசி" திட்டத்துடன் இணைந்து ரூ.5 இலட்சம் செலவில் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3.10 இயற்கைப் பண்ணையம்:

கடந்த முப்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தீவிர சாகுபடி மூலம் மண் வளம் பாதிக்கப்பட்டுள்ளது. வேதியியல் உரங்களின் பயன்பாடு பெருகிய நிலையில் இயற்கை உரமிடும் முறை கடந்த காலங்களில் குறைந்துள்ளது. எனினும் மண்ணில் போதுமான அளவு இயற்கை உரங்கள் மண்ணின் ஈரத்தைப் பாதுகாக்கவும், நுண்ணுயிரிகளின் செயல் அதிகரிப்பதன் மூலம் கிடைக்காத நிலையில் உள்ள சத்துக்கள் பயிருக்கு கிடைக்கச் செய்வதற்கும், மண்ணில் அடிப்படைச் சத்துக்களை வழங்கவும், மண்ணில் இயற்கை உரங்கள் போதிய அளவு இருக்க

வேண்டும். இயற்கை உரமிடல், பசுந்தாளுரமிடல் மற்றும் உயிர் உரங்கள் இடுதல் ஆகியவற்றைப் பற்றி விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இத்துறை முயற்சி மேற்கொண்டு வருகிறது. இயற்கை உர உற்பத்தி மற்றும் உரமிடல் குறித்து விவசாயிகள் அறிந்து அதனைக் கடைபிடிப்பதை உறுதி செய்யும் வகையில் பண்ணைக் கழிவுகளிலிருந்து புளூரோட்டஸ் கொண்டு மக்கு உரம் தயாரித்தல், மண்புழு உரமிடல், மடக்கி உழுதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றன.

இயற்கைப் பண்ணையத் தொழில்நுட்பத்தை ஊக்குவிக்க இத்துறை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பின்வருமாறு:-

### 3.10.1 உயிர் உரங்கள்:

விதை நேர்த்தி, நாற்றங்கால் மற்றும் நடவு வயல்களில் உயிர் உரங்கள் இடுவதை இத்துறை பரிந்துரை செய்கிறது. உயிர் உரங்கள் காற்றில் உள்ள தழைச் சத்தினை நிலைநிறுத்தி அதிகப்படுத்தவும் மண்ணில் கிடைக்காத நிலையில் உள்ள மணி சத்தினைப் பயிர்களுக்குக் கிடைக்கும் நிலைக்குக் கொண்டுவரவும் உறுதுணை புரிகிறது. கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் செயல்படும் 6 உயிர் உர உற்பத்தி மையங்கள் மூலமாக ஆண்டுதோறும் 1,400 மெடன் உயிர் உரங்கள் 200 கிராம் பை என்ற அளவில் 70 இலட்சம் பைகள் உற்பத்தி செய்யப்பட்டு துறை மூலம் வழங்கப்படுகின்றன.

2003-2004 ஆம் ஆண்டில் உயிர் உர உற்பத்தியில் அடைந்த முன்னேற்றம் மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுக்கான திட்ட விவரம் வருமாறு:

(அலகு மெடன்)

| வ. எண் | பெயர் | 2003-2004 | | 2004-2005 ஆம் ஆண்டுக்கான திட்டம் |
|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | |
| 1 | ரைசோபியம் | 280 | 209 | 280 |
| 2 | அசோஸ்பைரில்லம் | 800 | 781 | 800 |
| 3 | பாஸ்போபாக்டீரியம் | 320 | 409 | 320 |
| | மொத்தம் | 1400 | 1399 | 1400 |



### 3.10.2 நீலப்பச்சைப் பாசி மற்றும் அசோலா:

ஆண்டுதோறும் 500 மெடன் நீலப்பச்சைப் பாசி மற்றும் 500 மெடன் அசோலா உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நீலப்பச்சைப் பாசி மற்றும் அசோலா காற்றில் உள்ள தழைச்சத்தினை ஈர்த்துப் பயிர்களுக்குக் கிடைக்கச்செய்கிறது. இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.10.3புளூரோட்டஸ் கொண்டு பண்ணைக் கழிவுகளை கம்போஸ்ட் உரமாக்கல் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கும் திட்டம்:

சட்டமன்றத்தில் அறிவித்தபடி, 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.2.80 இலட்சம் செலவில் புளூரோட்டஸ் கொண்டு பண்ணைக் கழிவுகளிலிருந்து கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் புளூரோட்டஸ் பூஞ்சாணம், யூரியா மற்றும் இது தொடர்பாக பிரசுரங்கள் ஆகியவை கொண்ட ரூ.140 மதிப்புள்ள 2,000 சிறுதளை பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இது சுற்றுச்சூழல் இணக்கக் கழிவுகளான தென்னை நார் போன்றவற்றைப் பயனுள்ள உரமாக மாற்றுகிறது.

சட்டமன்றத்தில் அறிவித்ததன் அடிப்படையில் மண்புழு உரம் தயாரிப்பதற்கான திட்டம் ரூ.4.05 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இத்தொழில்நுட்பத்தை பலருக்கும் தெரியப்படுத்த 5,000 விவசாயிகளுக்குப் பயிற்சியும், 100 செயல் விளக்கப் பயிற்சிகளும் நடத்தப்பட்டன. 2004-2005 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.10.4 பசுந்தாளுர விதை உற்பத்தி மற்றும் வழங்கல்:

மண் வளத்தினை அதிகப்படுத்த பசுந்தாளுரமிடல் அவசியமாகிறது. தீவிர பயிர்செய் முறைகளைக் கடைபிடிக்கும்போது விவசாயிகள் பசுந்தாளுரப் பயிரிடுதலைத் தவிர்த்து விடுகின்றனர். பசுந்தாள் உரத்தினை இட்டு மடக்கி உழும் பழமையான முறை அதிக முக்கியத்துவம் அளித்துப் பெருமளவில் மேற்கொள்ளப்பட வேண்டும். 2003-2004 ஆம் ஆண்டில் 25 விழுக்காட்டு மானியத்தில் 125 மெ.டன் பசுந்தாளுர விதை உற்பத்தி செய்து வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 144 மெடன் பசுந்தாளுர விதைகள் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் ஒதுக்கீடான ரூ.2.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்ட நடவடிக்கைகளை 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடரத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3.10.5 ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தினைப் பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி:**

2003-2004 ஆம் ஆண்டு மாவட்டத்திற்கு 100 விவசாயிகள் வீதம் 27 மாவட்டங்களைச் சார்ந்த 2,700 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் பற்றிப் பயிற்சி அளிக்க ரூ.8.64 இலட்சம் ஒதுக்கீட்டில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் 27 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு 500 விவசாயிகள் வீதம் 13,500 விவசாயிகள் பயனுறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுச் செயல்படுத்தப்படும். 270 பயிற்சி வகுப்புகளில் ஒரு பயிற்சிக்கு 50 விவசாயிகள் வீதம் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்படும். 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயற்படுத்த, ரூ.43.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**3.11. பயறு விதை கிராமத் திட்டம்:**

பயறு உற்பத்தித் திறனை எக்டேருக்கு 450 கிலோவிலிருந்து 650 கிலோவாக உயர்த்தும் நோக்கில் 2003-2004 ஆம் ஆண்டில் பயறு விதை கிராமத் திட்டம் ரூ.106.25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 17 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு 10 கிராமங்கள் வீதம் ஒவ்வொரு கிராமத்திலும் 100 எக்டேர் பரப்பில் பெருவிளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது. பயறு விதை வழங்கல், இலை மீது டிஏபி கரைசல் தெளித்தல், பண்ணைக் குட்டைகள் வெட்டுதல் மற்றும் பயறு உடைக்கும் நிலையங்கள் அமைத்தல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தில் பொருள் மற்றும் நிதி ஒதுக்கீட்டின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் அடைந்த முன்னேற்ற விவரம் வருமாறு:



| வ ...ண் | செயல்பாடு | 2003–2004 | | | |
|---|---|---|---|---|---|
| | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. | பெருவிளக்கப் பண்ணை | | | | |
| | அ. பயறு சாகுபடி (எக்டேரில்) | 17000 | 18568 | - | - |
| | ஆ. விதை வழங்கல் (மெ.டன்) | 340 | 376 | 51.00 | 50.76 |
| | இ. டிஏபி தெளித்தல் (மெ.டன்) | 153 | 155 | 11.05 | 11.19 |
| 2. | பண்ணைக் குட்டைகள் (எண்ணிக்கை) | 170 | 174 | 42.50 | 42.44 |
| 3. | பயறு உடைக்கும் கருவி (எண்ணிக்கை) | 17 | 17 | 1.70 | 1.67 |
| | மொத்தம் | | | 106.25 | 106.06 |

**.12 பயிர்ப் பாதுகாப்பு**

**.12.1 ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மூலம் பூச்சி நோய் கட்டுப்பாடு:**

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களைச் சீரிய
ற்றும் சுற்றுச்சூழலுக்கு இணக்கமான முறையில் மேற்கொண்டு
ூச்சி நோய்களைக் கட்டுப்படுத்துவதில் தமிழகம் முன்னோடி
ாநிலமாக விளங்குகிறது. நட்புப் பூச்சிகள் மற்றும் பயிரைத் தாக்கும்
ூச்சிகளைச் சரியாகக் கண்டறியவும், நட்புப் பூச்சிகளைக் காக்கவும்,
ட்புப் பூச்சிகள் மற்றும் பயிரைத் தாக்கும் பூச்சிகளின் அதிக பட்ச
ிகித அளவுகள் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில்நுட்பப்
யிற்சிகள் மூலமாக விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன. முழு
யிர்ப் பருவத்தில் அளிக்கப்படும் இத்தகைய பயிற்சிகள்
ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தைப்
பெருமளவில் கடைபிடிக்கவும், பூச்சிக்கொல்லிகள் பயன்பாட்டைக்
றைக்கவும் வழிவகுக்கின்றன. சுற்றுச்சூழலுக்கு இணக்கமான,
றைந்த செலவின வினைமுறை திறன்களான பஞ்சகவ்யா மற்றும்
ட்கா போன்ற மரபுவழி பூச்சிநோய்க் கட்டுப்பாட்டு முறைகள்
அனைவரும் அறியும்படி செய்யப்படும்.

### 3.12.2 பூச்சி நோய்க் கண்காணிப்பு:

மாநிலத்தில் முறையான பூச்சிநோய்க் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பூச்சிநோய்களின் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. பூச்சிநோய்க் கண்காணிப்புப் புள்ளி விவரங்கள் காலமுறைதோறும் 7,356 இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு அவற்றை ஆய்வுசெய்து விவசாயிகளுக்கு உதவும் வகையில் பூச்சிநோய்த் தாக்குதல் குறித்து முன்னறிவிப்பு வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டு பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உணவுப் பயிர்களின் 32.78 இலட்சம் எக்டேர் பரப்பிலும், உணவுசாராப் பயிர்களில் 17.7 இலட்சம் எக்டேர் பரப்பிலும், விதை நேர்த்தி 26.3 இலட்சம் எக்டேர் பரப்பிலும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.12.3 பயிர் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு திட்டம்:

தேசிய திட்டங்களான தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம், தேசியப் பயறு வகைகள் மேம்பாட்டுத் திட்டம், எண்ணெய்வித்துகள் பெருக்குத் திட்டம் ஆகிய திட்டங்களுக்குத் தேவையான உயிரியல் கட்டுப்பாடுக் காரணிகளும், உயிரியல் பூச்சிக்கொல்லி மருந்துகளும் இத்திட்டத்தில் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்குத் தரமான பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்கும் நோக்குடன் 14,121 பூச்சிக் கொல்லி மருந்து மாதிரிகள் தனியார் விற்பனை மையங்கள் மற்றும் உற்பத்தி மையங்களிலிருந்தும் எடுக்கப்பட்டு 9 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களில் ஆய்வு செய்யப்பட்டு, பூச்சிக்கொல்லி மருந்து கட்டுப்பாடு சட்டம் 1968-ன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 3.12.4 மத்திய அரசு உதவி பெறும் திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு:

வயல்வெளிப் பள்ளி அணுகுமுறை விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக உள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு, உணவுப்பொருட்களில் பூச்சி மருந்துகளின் நச்சுத் தன்மை, பூச்சிகளின் மறுபெருக்கம் ஆகியவற்றினால் ஏற்படும் கேட்டினைக் குறைத்து உயிரியல்



முறைகளின் மூலம் பூச்சி மேலாண்மையைக் குறைந்த செலவில் மேற்கொண்டு உற்பத்தியை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டம் (அரிசி), மக்காச்சோளம் மேம்பாட்டுக்கான விரைவுத் திட்டம், எண்ணெய்வித்துப் பெருக்குத் திட்டம், தேசியப் பயறு வகை மேம்பாட்டுத் திட்டம், பருத்தித் தொழில்நுட்பவியல் குழு-II போன்ற மத்திய அரசின் உதவி பெறும் திட்டங்கள் அனைவரும் அறியும்படி செய்யப்படுகின்றன.

2003-2004 ஆம் ஆண்டில் பின்வரும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்கள் மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்பட்டன:

| வ. எண் | ஆக்கக் கூறுகளின் பெயர் | பொருள் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| 1 | தானிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் | 1500 | 1500 |
| 2 | பருத்தித் தொழில்நுட்பவியல் குழு—II திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் | 70 | 70 |
| 3 | மக்காச்சோள மேம்பாட்டுக்கான விரைவுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் | 30 | 30 |
| 4 | எண்ணெய்வித்துப் பெருக்குத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் | 1667 | 1667 |
| 5 | தேசிய பயறு வகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல் விளக்கங்கள் | 534 | 536 |

மேற்கண்ட ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்கள் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2004 ஜூலை 29

## 3.13 தென்னை மேம்பாட்டுத் திட்டம்

1984-85 ஆம் ஆண்டில் 1.39 இலட்சம் எக்டேராக இருந்த தென்னை பயிரிடும் பரப்பு, 2002-2003 ஆம் ஆண்டில் 3.46 இலட்சம் எக்டேராக உயர்ந்தது. மொத்த பயிரிடும் பரப்பில் தென்னை பயிரிடும் பரப்பு 6.7 விழுக்காடு. தென்னை பயிரிடும் பரப்பை அதிகரிக்க சிறிதளவே வாய்ப்பு உள்ளது. எனவே பல்வேறு தென்னை மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் புதிய ஊட்டச்சத்து மற்றும் பூச்சிநோய் மேலாண்மை மூலம் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தவிர பலன்தராத மற்றும் நோய் பாதிக்கப்பட்ட மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி அதற்குப் பதிலாகத் தரமான கன்றுகளை நடுதலும் பரிந்துரைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் விவசாயிகளுக்குத் தேவையான நெட்டை, நெட்டை x குட்டைக் கன்றுகள் 22 தென்னை நாற்றுப் பண்ணைகள் மற்றும் 2 தாய் மர தோட்டங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. நெட்டைக் கன்று ஒன்று ரூ.12/- வீதமும், நெட்டை x குட்டைக் கன்று ரூ.20/- வீதமும் மற்றும் குட்டை x நெட்டை கன்று ரூ.75/- வீதமும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

அண்மைக்கால ஆண்டுகளில் குட்டை x நெட்டைத் தென்னங் கன்றுகளின் தேவை அதிகரித்து வருகிறது. எனவே குட்டை x நெட்டை வீரிய ஒட்டுக் கன்றுகளின் தேவையை நிறைவு செய்ய பாசன வசதியுள்ள 8 தென்னை நாற்றுப் பண்ணைகளில், குட்டை x நெட்டை வீரிய ஒட்டுக் கன்றுகளின் உற்பத்தியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குட்டை தாய் மரங்களின் எண்ணிக்கை அரசு/தனியார் நாற்றுப் பண்ணைகளிலும், குறிப்பாக கேரளா, கர்நாடகா மாநிலங்களிலுள்ள தென்னை மேம்பாட்டு வாரிய சான்று பெற்ற பண்ணைகளிலும் குறைவாகவே இருந்ததால் கொள்முதல் குறைபாடு ஏற்பட்டது.

2003-2004 ஆம் ஆண்டு நெற்று கொள்முதல் மற்றும் தென்னங் கன்றுகள் வழங்கும் சாதனை மற்றும் 2004-2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள திட்டம் வருமாறு:



2004 ஜூலை 29]

| வ எண் | இரகம்/ வீரிய ஒட்டு இரகம் | 2003–2004 | | | | 2004–2005க்கான திட்ட இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்திய இலக்கு | | சாதனை | | | |
| | | நெற்று கொள் முதல் | கன்றுகள் வழங்கல் | நெற்று கொள் முதல் | கன்றுகள் வழங்கல் | நெற்று கொள் முதல் | கன்றுகள் வழங்கல் |
| 1. | நெட்டை | 3.00 | 2.25 | 2.990 | 4.74 | 3.00 | 2.25 |
| 2. | நெட்டை x குட்டை | 3.85 | 2.10 | 3.686 | 4.16 | 3.20 | 2.24 |
| 3. | குட்டை x நெட்டை | 0.98 | 0.18 | 0.017 | 0.12 | 1.00 | 0.35 |
| | மொத்தம் | 7.83 | 4.53 | 6.693 | 9.02 | 7.20 | 4.84 |

2004-2005 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தொடர்ந்து நிலவிய வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் குறைந்துள்ளதால் தென்னை நாற்றுப் பண்ணைகளுக்குப் பாசன வசதி அளித்தல் அவசியமாகிறது. எனவே 2004-2005 ஆம் ஆண்டில் பிச்சிவாக்கம், கிள்ளிகுளம், நவ்லாக், பட்டுக்கோட்டை, பரமத்திவேலூர், செங்கோட்டை, ஆழியார் நகர், மாதவரம், தேவதானம், வெள்ளாளவிடுதி மற்றும் வைகை அணை ஆகிய இடங்களில் இயங்கி வரும் தென்னை நாற்றுப் பண்ணைகளுக்கு ரூ.11 இலட்சம் செலவில் நீர் மூழ்கி மோட்டாருடன் கூடிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துப் பாசன வசதி அளிக்க ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

நேரடி சூரிய ஒளி மற்றும் கால்நடைத் தொந்தரவுகளிலிருந்து தென்னை நாற்றங்காலில் உற்பத்தி செய்யப்படும் தென்னங்கன்றுகள் பாதுகாக்கப்பட வேண்டும். 2004-2005 ஆம் ஆண்டு, மாதவரம், பட்டுக்கோட்டை, பிச்சிவாக்கம், மல்லியம் மற்றும் வடகரை ஆகிய 5 தென்னை நாற்றுப் பண்ணைகளில் புதிய பாதுகாப்புக் கொட்டகைகள் அமைக்கவும், சிங்கம்புணரி மற்றும் புத்தளம் பண்ணைகளில் தற்போது உள்ள பாதுகாப்புக் கொட்டகைகளைப் பழுதுபார்க்கவும் புதிய திட்டம் ஒன்று ரூ.20 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

[2004 ஜூலை 29

### 3.14.1 பருத்தி மேம்பாட்டுத் திட்டம்:

காஞ்சிபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாகப் பிற பகுதிகளில் தரமான விதை வழங்கவும், தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கவும் பருத்தி பயிருக்கான மாநிலத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2003-04 ஆம் ஆண்டில் அடைந்த முன்னேற்றம் மற்றும் 2004-05 ஆம் ஆண்டுக்கான திட்டம் ஆகியவை வருமாறு:

| வ. எண் | விவரம் | அலகு | 2003–2004 | | 2004–2005 ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | சாதனை | |
| 1. | உயர் மற்றும் வீரிய இரக சாகுபடிப் பரப்பு | இல.எக்டேர் | 2.50 | 0.988 | 2.50 |
| 2. | பஞ்சு உற்பத்தி | இல.பொதி | 5.40 | 1.77 | 5.62 |
| 3. | சான்றிட்ட விதை உற்பத்தி | குவிண்டால் | 2830 | 1560 | 3670 |
| 4. | சான்றிட்ட விதை வழங்கல் | குவிண்டால் | 2830 | 1630 | 3670 |
| 5. | விதை கொள்முதல் (நிதி) | ரூ.இலட்சம் | 102.00 | 79.484 | 106.43 |
| 6. | என்பிவி நச்சுயிரி வழங்கல் | எக்டேர் | 1500 | 1520 | 1500 |
| 7. | என்பிவி நச்சுயிரி வழங்கல் (நிதி) | ரூ.இலட்சம் | 0.60 | 0.592 | 0.60 |

இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

### 3.14.2 மாநில பருத்திக் குழுமம் அமைத்தல்:

தொன்றுதொட்டுப் பயிரிடப்படும் பகுதிகளில் பருத்தி பயிரிடுவதை நிலைப்படுத்தவும், பருத்தி பயிரிடாப் பகுதிகளில் இதனை ஊக்குவிக்கவும், மத்திய அரசு மாநிலப் பருத்திக் குழுமம் ஒன்றினை அமைத்து அதன் மூலம் தேசிய அளவில் உள்ள பல்வேறு உற்பத்திப் பொருட்கள் மேம்பாட்டுக் குழும நடவடிக்கைகளை செயல்படுத்துவது இதன் நோக்கம் ஆகும்.



2004 ஜூலை 29]

மாநிலப் பருத்திக் குழுமத்திற்கு உதவிட வேளாண்மை ஆணையரைத் தலைவராகக் கொண்ட "உள்ளடக்கிய குழுமம்" ஒன்றும் அமைக்கப்பட்டது.

### 3.14.3 வாழை/கரும்புப் பயிர்களில் ஊடுபயிராகப் பருத்தி உற்பத்தித் திட்டம்:

2003-2004 ஆம் ஆண்டு பருத்தியை வாழை/கரும்பு பயிர்களில் ஊடு பயிராகச் சாகுபடி செய்ய 16 மாவட்டங்களில் ரூ.5.00 இலட்சம் செலவில் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டது.. இத்திட்டத்தின்கீழ் எக்டேருக்கு ரூ.500/- என்ற அளவில் இடுபொருட்கள் வழங்கி 1,000 எக்டேர் பரப்பில் ஊடுபயிராக பருத்தியை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டு ரூ.5.0 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

### 3.15 கரும்பு மேம்பாட்டுத் திட்டம்:

சர்க்கரை உற்பத்தியில் உலகில் பிரேசில் நாட்டிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது நிலையில் உள்ளது. தேசிய அளவில் கரும்பு பயிரிடப்படும் பரப்பான 43 இலட்சம் எக்டேர் பரப்பில் 3 இலட்சம் எக்டேர் பரப்பு அதாவது 7 விழுக்காடு பரப்பு தமிழகத்தில் உள்ளது. தமிழக உற்பத்தி 320 இலட்சம் மெ.டன்களாகும். இது தேசிய உற்பத்தியான 3,010 இலட்சம் மெ.டன்களில் 10.6 விழுக்காடாகும். கரும்பு விளைச்சலில் இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. தேசிய அளவிலான கரும்பு விளைச்சல் 70 மெ.டன்/எக்டேர் என்ற அளவில் இருக்கும்பொழுது தமிழகத்தில் சராசரி கரும்பு விளைச்சல் 107.3 மெ.டன்/எக்டேர் ஆகும். கரும்பு பரப்பினை அதிகரிக்கும் வாய்ப்பு மிகக் குறைவாக உள்ளது. மேலும் இப்பயிருக்கு அதிக நீர்த் தேவை இருப்பதால் இதனை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே உற்பத்தித் திறனை உயர்த்துவதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நோக்குடன் கரும்பு மேம்பாட்டுத் திட்டம் தூத்துக்குடி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

[2004 ஜூலை 29

2003-2004 ஆம் ஆண்டு முன்னேற்றம் மற்றும் 2004-2005 ஆம் ஆண்டு திட்ட விவரம் வருமாறு:-

| வ. எண் | விவரம் | அலகு | 2003–2004 | | 2004–2005 ஆம் ஆண்டிற்கான திட்டம் |
|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | சாதனை | |
| 1. | உற்பத்தி பரப்பு | இல.எக்டேர் | 3.00 | 1.92 | 3.00 |
| 2.. | உற்பத்தி (வெல்லமாக) | இல.மெ.டன் | 33.65 | 20.92 | 35.00 |
| 3. | ஒட்டுண்ணி விடுதல் | எக்டேர் | 10500 | 10848 | 10500 |

இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.15.1 பொதுத் துறை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்:

#### 3.15.1.1 2004–2005 ஆம் ஆண்டிற்கான கரும்பு பயிரிடுதல் மற்றும் உற்பத்தித் திறன்:

பொதுத் துறை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 2004-2005 ஆம் ஆண்டிற்கு சுமார் 51,000 எக்டேரில் கரும்பு பதிவு செய்யப்படவுள்ளது. 2003-2004 ஆம் அரவைப் பருவம் முடிவுற்ற நிலையில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளால் 28 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. இது 43 சதவிகித பயன்பாட்டுத் திறனாகும். 2004-2005 ஆம் அரவைப் பருவத்தில் சுமார் 40.60 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் சர்க்கரை ஆலைகளால் 2003-2004 ஆம் அரவைப் பருவம் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் 30-4-2004 அன்று வரை 53.89 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. இந்த அரவைப் பருவத்தின் இறுதியில் தனியார் சர்க்கரை ஆலைகளால் சுமார் 62.00 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படும் கரும்பு சராசரி உற்பத்தித் திறன் ஒரு எக்டேருக்கு சுமார் 72 டன்கள் ஆகும். இருப்பினும் உற்பத்தித்



2004 ஜூலை 29]

திறனைப் பெருக்கும் முறைகளைக் கையாண்டு எக்டேருக்கு 100 டன்களாக அதிகப்படுத்த வாய்ப்புள்ளது. மாநிலத்தில் பெறப்படும் சராசரி விளைச்சலைக் காட்டிலும் குறைவாக விளைச்சல் பெறப்படும் ஆலைப் பகுதிகளில் விளைச்சலை அதிகப்படுத்த கரும்பு இனப் பெருக்கு நிலையம் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

#### 3.15.1.2 – சர்க்கரை கட்டுமானத்தை அதிகப்படுத்த செயல் திட்டம்

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 2003-2004 அரவைப் பருவத்தில் கிடைக்கப் பெற்ற எக்டேருக்கு 68 டன்கள் கரும்பு மகசூல், 9.91 சதவீதச் சர்க்கரை கட்டுமானம் மற்றும் அரவை செய்த 28 இலட்சம் டன்கள் என்ற நிலையிலிருந்து 2004-2005 கரும்பு அரவைப் பருவத்தில் எக்டேருக்கு 72 டன்கள் கரும்பு மகசூலும் 10 சதவீத சர்க்கரைக் கட்டுமானம் மற்றும் 62 சதவீத பயன்பாட்டுத் திறனுக்குத் தேவையான 40.60 இலட்சம் டன்கள் கரும்பினைப் பெற செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட இலக்கினை அடைய பண்ணை அளவில் பின்வரும் வினை முறைத்திறன் கடைபிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1. உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதல் மற்றும் அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு இரகங்கள் பயிரிடப்படும் பரப்பை அதிகப்படுத்துதல்
2. சொட்டு நீர்ப்பாசனத்தை மேம்படுத்துதல்
3. உயிரின உரங்கள் மற்றும் உயிரின பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துதல்
4. உயிர் உரம், மண்புழு கழிவு உரம், ஆலைக் கழிவினை பயன்படுத்துதல்
5. வறட்சியை சமாளிக்கும் வழிமுறைகளைப் பயன்படுத்துதல்

#### 3.15.1.3 சர்க்கரை கட்டுமானமும் அதிக சர்க்கரைச் சத்துள்ள ரகங்களும்

ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்துவதில், அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு ரகங்கள் முக்கிய பங்கு வகித்து உற்பத்திச் செலவினைக் குறைக்கின்றன. 2003-2004 ஆம் அரவைப் பருவத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு இரகங்கள் சுமார் 84 சதவீத அளவிற்கு அரவை

[2004 ஜூலை 29

செய்யப்பட்டுள்ளதைக் காட்டிலும் 2004-2005 அரவைப் பருவத்தில் அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பின் அரவை 90 சதவீதம் அளவிற்கு உயருமென்றும், 2003-2004 அரவைப் பருவத்தில் கிடைக்கப்பெற்ற சராசரி சர்க்கரைக் கட்டுமானம் 9.91 என்ற சதவீதத்தைக் காட்டிலும், 2004-2005 அரவைப் பருவத்தில் சராசரி சர்க்கரைக் கட்டுமானம் 10 சதவீதமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அரவை செய்யப்படவுள்ள கரும்பின் அளவான 28.00 இலட்சம் டன் கரும்பினை அதிகரித்து அடுத்த அரவைப் பருவத்தில் மொத்தம் 40.60 இலட்சம் டன்கள் அரவை செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

*3.15.1.4* **கரும்பு பயிரிட சொட்டுநீர்ப் பாசனம்**

நீர்வளம் தற்போது அரிதாகி விட்டதாலும் வழக்கமான நீர்ப்பாசன முறைகளால் அதிக அளவு தண்ணீர் செலவாவதால், தண்ணீரை சேமித்து அதிகப் பரப்பளவில் கரும்பு பயிரிடுவதற்கு ஏதுவாக கரும்புக்கு சொட்டு நீர்ப்பாசன முறையைப் பின்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கரும்பு பயிரிடுதலில் தண்ணீரை சேமிக்கவும், மேலும் அதிகப் பரப்பில் பயிரிடவும் ஏதுவாக சொட்டு நீர்ப்பாசன முறையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.. சொட்டு நீர்ப்பாசன முறையை அமைத்திட கரும்பு மேல்வரி நிதியிலிருந்து விவசாயிகளுக்கு மானியம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசன முறையைச் செயல்படுத்திட ரூ.10.00 இலட்சம் நிதியை கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய கரும்பு மேல்வரி பயன்பாட்டுக் குழுவால் சிபாரிசு செய்யப்பட்டு இத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

*3.15.2* **உயிர் உரங்கள் மற்றும் உயிர்ப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துதல்:**

தாவரங்கள் பெரும் நுண்ணுயிர் சத்துக்களை அதிகப்படுத்த உயிர் உரங்கள் பயன்படுகின்றன. அசிடோபாக்டர் மற்றும் பாஸ்போபாக்டீரியம் ஆகிய உயிர் உரங்களைப் பயன்படுத்தி முறையே வான் வெளியிலுள்ள நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ்ஸை மண்ணில் நிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயிர் உரங்களைப் பயன்படுத்துவதால் இரசாயன உரங்களின் தேவை குறைந்து அதன் மூலம் உற்பத்திச் செலவு குறைகிறது.

அனைத்து பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கும் 'ட்ரைகோகிராமா' மற்றும் 'என்பிவி' போன்ற உயிரினப் பூச்சிக்கொல்லிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயிரினப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால், கரும்பு பயிரிடுவதில் பொருளாதாரத்தில் நிலைத்த தன்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்



2004 ஜூலை 29]

ஏற்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள உயிரியல் கட்டுப்பாடு ஆராய்ச்சி ஆய்வகத்தை வலுப்படுத்துவதன் மூலம் போதுமான அளவில் உயிரினப் பூச்சிக்கொல்லிகள் வழங்குவது உறுதி செய்யப்படும்.

*3.15.2.1* **மக்கிய உயிர் உரம்:**

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளில் கிடைக்கும் ஆலைக் கழிவு மண் சுமார் 2 இலட்சம் டன்கள் ஆகும். வடிப்பகங்களில் கிடைக்கும் ஆலைக் கழிவு நீர் (spent wash) மற்றும் சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கழிவு மண் (press mud) கொண்டு மக்கிய உயிர் உரம் தயாரிக்கப்படுகிறது. தற்போது சேலம் மற்றும் அமராவதி ஆகிய இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மட்டுமே உள்ள வடிப்பகங்களில் மொத்தமுள்ள 25,000 டன்கள் ஆலை கழிவு மண், உயிர் உரமாக மாற்றப்பட்டு (அதாவது 11,000 டன் மக்கிய உயிர் உரம்) விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

*3.15.2.2* **மண்புழு கழிவு உரம்:**

வடிப்பகங்கள் இல்லாத மற்ற கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ஆலைக் கழிவு மண்ணை பயன்படுத்தி மண்புழு உரமாக தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் மண்புழு உரம், கரும்பு மற்றும் மற்ற பயிர்களின் உற்பத்தி திறனை அதிகப்படுத்துவதில் நல்ல விளைவை ஏற்படுத்துவதைக் காட்டியுள்ளது. நிலத்தைப் பண்படுத்துவதற்கும் நிலத்தின் ஈரத் தன்மையைப் பாதுகாக்கும் திறனை அதிகப்படுத்துவதற்கும் மண்புழு உரம் பயன்படுகிறது. இத்திட்டத்தை திருத்தணி, செய்யாறு மற்றும் செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வெற்றிகரமாக கையாண்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை பிற ஆலைகளில் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆலைக் கழிவு மண்ணுடன் உயிர் உரத்தைக் கலந்து ஊட்டமேற்றிய கழிவு மண்ணாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் இத்திட்டத்தை மேற்கொண்டு சத்தூட்டப்பட்ட கழிவு மண்ணை விவசாயிகளுக்கு விநியோகித்து கரும்பின் தரமும் மகசூலும் உயர்த்தப்படவுள்ளன. இதே போன்று ஆலைக் கழிவு மண்ணுடன் காய்ந்த கரும்பு சோகைகள் (Cane Trash) கலக்கப்பட்டு ஆலைகளின் கரும்புப் பண்ணையிலேயே மக்கிய கரும்புச் சோகை உரம் (Trash Compost) தயாரிக்கப்படுகிறது.

[2004 ஜூலை 29

### 3.15.3 கரும்பு விலை நிர்ணயம் (2003–2004 அரவைப் பருவம் கரும்பு விலை)

மத்திய அரசு 2003-2004 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.730/- என சட்டபூர்வ குறைந்தபட்ச விலையாக நிர்ணயித்துள்ளது. இந்த அறிவிப்பினை எதிர்த்து தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சம்மேளனம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இடைக்கால தடை விதித்து 8.5 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.655/- வீதம் வழங்க உத்திரவிட்டுள்ளது.

### 3.15.4 கரும்பு மேல்வரி வசூல் மற்றும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்

*3.15.4.1* மாநில அரசால் செயல்படுத்தப்படும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்குமிடையே இணைப்புச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் கரும்பு போக்குவரத்து எளிதாக இருக்கவும் முறையாக சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பினை ஏற்றிச் செல்லவும் விவசாயிகளுக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு சட்டம் 1949-ன்படி உள்ளூர் பகுதியைத் தவிர வெளியிலிருந்து ஆலைகளுக்கு அரவைக்காக கொண்டுவரப்படும் கரும்பின் மீது கரும்பு மேல்வரியாக டன் ஒன்றுக்கு ரூ.5/- வீதம் வசூலித்து இந்நிதி கரும்புச் சாலை அபிவிருத்தி திட்டத்திற்கு பயன்படுத்தப் படுகின்றது.

*3.15.4.2* கடந்த நான்காண்டுகளில் கரும்பு மேல்வரி வசூலிக்கப்பட்ட விவரம், சாலை அமைத்தல் மற்றும் பராமரிப்புக்கு மேற்கொண்ட செலவு விவரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | கரும்பு மேல்வரி வசூலித்தது | புதிய சாலைகள் அமைக்க | சாலையின் நீளம் (கி.மீ.) | பராமரிப்புப் பணிகள் செய்ய | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| 2000-2001 | 997.29 | 500.07 | 59.000 | 231.36 | 731.43 |
| 2001-2002 | 872.94 | 236.45 | 62.440 | 97.54 | 333.99 |
| 2002-2003 | 613.00 | 500.00 | 68.595 | 200.00 | 700.00 |
| 2003-2004 (31.3.2004 முடிய) | 500.33 | 602.00 | 43.210 | 200.00 | 802.00 |



2004 ஜூலை 29]

### 3.16 உழவர் பயிற்சி நிலையங்கள்

உழவர்கள், பண்ணை மகளிர் மற்றும் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்து அதன் மூலம் பயிர் உற்பத்தியைப் பெருக்க மாநிலத்தில் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. காஞ்சிபுரம், திண்டிவனம், நவ்லாக், சேலம், தருமபுரி, பவானி, லால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை மற்றும் திருப்பதிசாரம் ஆகிய இடங்களில் இவை செயல்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் கிராம அளவில் அடிப்படைப் பயிற்சி, களப்பயிற்சிச் செயல் விளக்கங்கள் அளிக்கப்படுவதுடன் தொழில்நுட்பங்கள், பண்ணைச் செய்திகள், வானொலி, விரிவாக்க நடவடிக்கைகளான தினசரிகள் மற்றும் செய்திக் கடிதங்கள் மூலம் உடனுக்குடன் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. உழவர் தினவிழா வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுடன் இணைந்து நடத்தப்பட்டு அதில் பெருமளவில் கலந்துகொள்ளும் விவசாயிகளின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதுடன் வயல் பிரச்சினைகளுக்கு தீர்வும் காணப்படுகிறது. ஆண்டுதோறும் சுற்றுலாவாக வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்கள், முன்னோடி விவசாயிகளின் செயல்விளக்க வயல்கள் ஆகியவற்றிற்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு, பல்வேறு வேளாண் தட்பவெப்ப மண்டலங்களுக்கு ஏற்ற நவீன தொழில் நுட்பங்களின் வளர்ச்சியை அவர்கள் நேரில் கண்டு தெரிந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் 4,000 உழவர்கள் இதன் மூலம் பயனடைகின்றனர்.

இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற சாதனை மற்றும் 2004-2005 ஆம் ஆண்டிற்கான இலக்கு விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | இனங்கள்(அலகு) | 2003–2004 | | 2004–2005 ஆம் ஆண்டுக்கான இலக்கு |
|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | |
| 1 | ஆண், பெண் விவசாயிகளுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 264 | 267 | 264 |
| 2 | உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 120 | 120 | 120 |

[2004 ஜூலை 29

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வயல்வெளிச் செயல் விளக்கம் (எண்) | 1320 | 1320 | 1320 |
| 4 | மாதிரிக் செயல் விளக்கம் (எண்) | 528 | 528 | 528 |
| 5 | நிதிச் சாதனை (ரூபாய் இலட்சத்தில்) | 6.57 | 6.544 | 5.650 |

இது மட்டுமன்றி தேசிய அளவில் நடைபெறும் பணி புட்டறை கூட்டங்கள் மற்றும் இதர சிறப்புப் பயிற்சிகளில் இத்துறையின் அலுவலர்களைக் கலந்துகொள்ளச் செய்வதன் மூலம் புதிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப விவரங்களைப் பெற வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### 3.17 மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்):

வேளாண் துறையின்கீழ் பணியாற்றி வரும் விரிவாக்க அலுவலர்கள் மென்மேலும் சிறந்த முறையில் பணியாற்றிட நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்பு மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளித்திடும் நோக்கோடு குடுமியான்மலையில் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் இயங்கி வருகிறது. அரசு சாரா நிறுவனங்கள் வேளாண் மாணவர்கள், தொடர்புடைய பிற துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்நிலையத்தின் மூலம் 2003-2004 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட பயிற்சி விவரங்கள் பின்வருமாறு:

(எண்கள்)

| வ. எண் | பயிற்சி விவரம் | பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| 1 | அலுவலக நிர்வாகப் பயிற்சி | 180 | 178 |
| 2 | அலுவலக மேலாண்மைப் பயிற்சி | 180 | 179 |
| 3 | கணிப்பொறிப் பயிற்சி | 120 | 122 |
| 4 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி | 180 | 181 |
| | மொத்தம் | 660 | 660 |



2004 ஜூலை 29]

*2004—2005 திட்ட விவரம் வருமாறு:*

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | பயிற்சி விவரம் | பயிற்சியாளர் எண்ணிக்கை | நிதி |
|---|---|---|---|
| 1 | மாற்றுப் பயிர் சாகுபடி | 200 | 0.990 |
| 2 | இயற்கை பண்ணையம் | 200 | 0.990 |
| 3 | திருந்திய நெல் சாகுபடி | 200 | 0.990 |
| 4 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி | 200 | 0.990 |
| 5 | கிராம பங்கேற்பு அணுகுமுறை பயிற்சி | 200 | 0.940 |
| 6 | பண்ணைக் கருவிகள் பயிற்சி | 200 | 0.990 |
| 7 | சுய உதவிக் குழு பயிற்சி | 200 | 0.990 |
| 8 | கணினி பயிற்சி | 200 | 1.800 |
| 9 | அலுவலர்களுக்கான நிர்வாகப் பயிற்சி | 200 | 0.940 |
| | மொத்தம் | 1800 | 9.620 |

### 3.18 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு உயர் தொழில்நுட்பப் பயிற்சி

2003-2004 ஆம் ஆண்டில், புகழ்மிக்க வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வர்த்தகத் துறையைச் சார்ந்த 1,400 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.15 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க அரசு ஒப்புதல் அளித்தது. நவீனத் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பவியல், உயிரித் தொழில்நுட்பவியல், துல்லியப் பண்ணையம், சந்தை நிலவரங்கள், உயர் தொழில்நுட்பத் தோட்டக் கலை, திசு வளர்ப்பு, கிராமப் பங்கேற்பு அணுகுமுறை, உலக வர்த்தக நிறுவனம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் வேளாண்மைப் பொருட்களுக்கு மதிப்பூட்டுதல் போன்ற தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் வழங்கும் தலைப்புகள் இப்பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்திட்ட முன்னேற்ற விவரம் வருமாறு:

[2004 ஜூலை 29

| வ. எண் | இனம் | 2003-2004 | | | |
|---|---|---|---|---|---|
| | | பொருள் | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. | தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சி (எண்) | 1400 | 1400 | 15.00 | 15.00 |

### 3.19. மாவட்டத் தகவல் மையங்கள்

நாகப்பட்டினம், தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, தருமபுரி, காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, வேலூர் மற்றும் சென்னை ஆகிய 10 மாவட்டத் தலைமையிடங்களில் ரூ.20 இலட்சம் செலவில் மாவட்டத் தகவல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த விவரங்களையும், பயிர் உற்பத்தித் தொழில்நுட்பங்களையும், வணிக நிலவரத் தகவல்கள் முதலியவற்றையும் தகவல் தொழில்நுட்பங்கள் மூலம் உழவர் சமுதாயத்திற்கு வழங்கும் வகையில் இம்மாவட்டத் தகவல் மையங்கள் இயங்குகின்றன. இவை கணினி இணையத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

### 3.20. பயிர் விளைச்சல் போட்டி

நவீன வேளாண் தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து நெல், மணிலா, சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகிய பயிர்களில் உற்பத்தித் திறனை உயர்த்த விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பயிர்விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் இடம் | இரண்டாம் இடம் | முதல் இடம் | இரண்டாம் இடம் |
| நெல் மற்றும் மணிலா | 25,000 | 15,000 | 8,000 | 4,000 |
| பிற பயிர்கள் | 8,000 | 4,000 | 4,000 | 2,000 |



2004 ஜூலை 29]

மாநில அளவிலான போட்டிக்கு நுழைவுக் கட்டணம் நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.100-ம் பிற பயிர்களுக்கு ரூ.50-ம் மாவட்ட அளவிலான போட்டிக்கு நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.50-ம், பிற பயிர்களுக்கு ரூ.25-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.11.07 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

### 3.21. 7.5 குதிரைத் திறன் உள்ள விசை இறவைகள் வழங்கும் திட்டம்

2003-2004 ஆம் ஆண்டு தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் டெல்டா விவசாய சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த விவசாயிகளுக்குப் பாசன நீர் அளிப்பதை உறுதி செய்ய ரூ.50.81 இலட்சம் செலவில், 1,300 எண்ணெய் பொறிகள் (7.5 குதிரைத் திறன்) விசை இறவைகளுடன் வழங்க அரசு அனுமதி வழங்கியது. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் செலவிடப்பட்டு 1,300 எண்கள் எண்ணெய் பொறிகள் வழங்கப்பட்டன. இத்திட்டம் கிராம மேம்பாட்டுத் திட்டமான பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் - ஊரக வளர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சார்ந்த சுய உதவிக் குழுக்களுக்கு 100 விழுக்காடு மானியம் மத்திய மாநில அரசுகளின் சமநிதிப் பங்கேற்புடன் வழங்கப்படுகிறது. பிற சுய உதவிக் குழுக்களுக்கு மத்திய அரசு 50 விழுக்காடு மானியமும், மாநில அரசு 25 விழுக்காடு மானியமும் மீதமுள்ள 25 சதவீதம் தொகைக்கு விவசாயிகள் கடன் பெறத் தேவையான உதவிகளும் அளிக்கப்படுகின்றன.

### 3.22. பத்து மாவட்டங்களில் தற்போதுள்ள கணினி நிலை உயர்த்தல்

அரசின் புதிய கொள்கைகளின்படி தகவல் தொழில்நுட்பங்கள் வேளாண் விரிவாக்கப் பணிகளுக்குப் பயன்படுவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு நவீனத் தொழில்நுட்பங்கள் விரிவான முறையில் விரைவாக விரிவாக்கப் பணியாளர்களிடையேயும் அவர்களின் வாடிக்கையாளர்களான விவசாயிகளிடையேயும் பரிமாற்றம் செய்யப்பட வேண்டும்.

1994-1995 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வாங்கப்பட்ட கணினிகள் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.17.50 இலட்சம் செலவில் மாநிலத் தலைமையிடத்திலும் 10 மாவட்டங்களிலும் நவீன திறன் வடிவமைப்புடன் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

## 3.23 வேளாண் மருந்தகங்கள் மற்றும் வேளாண் வணிகம்

வேலையில்லா வேளாண் பட்டதாரிகளுக்கு வேளாண் மருந்தகங்கள் மற்றும் வேளாண் வணிக மையங்கள் அமைக்கத் தேவையான நிதியுதவி செய்ய நபார்டு வங்கி ஒரு திட்டம் வகுத்துள்ளது. இத்திட்டம் தற்போதுள்ள விரிவாக்கப் பணிக்குத் துணையாகவும், தொழில்நுட்பப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதாகவும், மேலும் பெரும்பான்மையான விவசாயிகள் இடுபொருட்கள் மற்றும் சேவைக்கு நம்பியிருக்கும் மாநில நிறுவனங்களுக்குத் துணை ஆதாரமாகவும் விளங்குகிறது. மேலும் இத்திட்டம் வேலையில்லா வேளாண் பட்டதாரிகளின் துணிவுமிக்க முயற்சிக்கு மிகச் சிறந்த வாய்ப்பினை அளிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் வேளாண் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்க மூன்று மையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவையாவன:

| | | பயிற்சி பெற்ற நபர்கள் |
|---|---|---|
| 1 | இயக்குநர், கார்ட்ஸ், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 41 |
| 2 | பன்னாட்டு உயிரித் தொழில்நுட்பவியல் மற்றும் நச்சியல் நிறுவனம், பட்டபை, காஞ்சிபுரம் மாவட்டம் | 43 |
| 3. | வேளாண் மருந்தக மேம்பாட்டுப் பொறுப்பாட்சி நிலையம், கொடைக்கானல் | 16 |

இம்மாநிலத்தில் மேற்படி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற வேளாண் பட்டதாரிகள் வங்கிக் கடன் உதவி பெற்றோ, சொந்த நிதியினைக் கொண்டோ வேளாண் மருந்தகங்களையும், வேளாண் வணிக மையங்களையும் அமைத்து வருகின்றனர். அதன் விவரம் வருமாறு:





வேளாண் மருந்தகங்கள் மற்றும் வேளாண் வணிக மையங்களை 55 பேர் நிறுவியுள்ளனர். இதில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் 5 பேர் கடன் பெற்றுள்ளனர். 11 பேர் கடன் உதவிக்கு விண்ணப்பித்து அவை ஒப்பளிப்புச் செய்யப்படவுள்ளன. மீதம் உள்ள 39 பேர் சுயநிதியை கொண்டு ஏற்கெனவே துவங்கியுள்ளனர்.

2004-2005 ஆம் ஆண்டிலும் மேலும் அதிகப்படியான வேளாண் மருந்தகங்கள் மற்றும் வேளாண் வணிக மையங்கள் நபார்டு வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்கள் உதவியுடன் அமைக்கப்பட ஊந்துகை அளிக்கப்படும்.

## 4. மத்திய அரசின் முழு நிதி உதவி பெறும் திட்டங்கள்/ மத்திய-மாநில அரசு சார்புத் திட்டங்கள்

### 4.1 விவசாயிகள் பரிவர்த்தனைத் திட்டம்

பிற மாநிலங்களிலுள்ள விவசாயிகள் கடைபிடிக்கும் தொழில்நுட்பங்களையும் சாகுபடி முறைகளையும் அறிந்துகொள்ளும் நோக்குடன் விவசாயிகள் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ் 20 பேர் அடங்கிய குழுக்களாக விவசாயிகள் பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். 2003-2004 ஆம் ஆண்டு மத்திய அரசு மார்ச் 2004 இல் ரூ.2 இலட்சம் வழங்கியது. நிதியாண்டு முடிவடையும் தருவாயில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதால் மறுமதிப்பீட்டு ஆணை மத்திய அரசிடமிருந்து தற்போது பெறப்பட்டு விவசாயிகள் சுற்றுலாவுக்கு அனுப்பப்பட உள்ளனர். பயணச் செலவுகளை ஈடு செய்ய 20 பேர் அடங்கிய ஒவ்வொரு விவசாயக் குழுவிற்கும் ரூ.50,000 வீதம் ரூ.2.50 இலட்சம் மத்திய அரசால் 2004-2005 ஆம் ஆண்டிற்கு ஒப்பளிப்பு பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவிலும் 20 விவசாயிகளைக் கொண்ட 5 குழுக்கள் பிற மாநிலங்களுக்குப் பல்வேறு பயிர்களின் சாகுபடி முறைகளை அறிந்துவர அனுப்பப்பட உள்ளனர்.

### 4.2 பேரியல் மேலாண்மைச் செயல்திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய – மாநில அரசு சார்புத் திட்டங்கள்

மாநிலங்களின் தேவை மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் உழவர் சமுதாய நிலையை உயர்த்த மாநில அரசுகள் தேவைக்கேற்ப

[2004 ஜூலை 29

திட்டம் வகுத்துக்கொள்ளும் வகையில் பேரியல் மேலாண்மைத் திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டங்களின்கீழ் செலவினங்களை மத்திய மாநில அரசுகள் முறையே 90:10 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. மத்திய அரசின் 90 விழுக்காடு நிதிப் பங்கீட்டில் 80 விழுக்காடு மானியமாகவும் 20 விழுக்காடு மாநில அரசுக்குக் கடனாகவும் வழங்கப்படுகின்றன. பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்ட விவரங்கள் வருமாறு:

### 4.2.1. தானிய மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் அரிசி முக்கியமாகப் பயிரிடப்படும் பகுதிகளில் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தானிய உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நெல் மற்றும் சிறுதானியப் பயிர்களில் உற்பத்தித் திறனை உயர்த்தும் முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

2003-2004 ஆம் ஆண்டு இன வாரியான முன்னேற்ற விவரம் வருமாறு:-

| வ. எண் | இனம் | அலகு | 2003—2004 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ.இலட்சம்) | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | சான்றிட்ட நெல் விதை வழங்கல் (கிலோ ஒன்றுக்கு ரூ.2 வீதம்) | மெ.டன் | 4,433 | 4,310 | 88.65 | 86.056 |
| 2 | சான்றிட்ட சிறுதானிய விதை வழங்கல் (கிலோ ஒன்றுக்கு ரூ.2 வீதம்) | மெ.டன் | 300 | 220 | 6.00 | 4.396 |
| 3 | 0.4 எக்டேர் வீரிய ஒட்டு நெல் செயல் விளக்கம் (ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ.1000 வீதம்) | எண் | 4,500 | 4,500 | 45.00 | 45.00 |
| 4 | உற்பத்தித் தொழில்நுட்ப செய்முறை திடல் (எக்டேருக்கு ரூ.2,500 வீதம்) | எக்டேர் | 1,000 | 1,030 | 25.00 | 25.756 |
| 5 | உயிர் உரங்கள் விநியோகம் (எக்டேருக்கு 18 பொட்டலங்கள் 25 விழுக்காடு மானியத்தில்) | எக்டேர் | 70,000 | 73,619 | 15.75 | 16.756 |
| 6 | சிறுதானியங்களுக்கு நுண்ணூட்டச் சத்து வழங்கல் (25 விழுக்காடு மானியத்தில்) | எக்டேர் | 37,000 | 49,673 | 27.75 | 25.208 |
| 7 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல் விளக்கம் மற்றும் பயிற்சி (ஒன்றுக்கு ரூ.6,000 வீதம்) | எண் | 1500 | 1500 | 90.00 | 89.508 |
| 8 | விளம்பரம், கருத்தரங்குகள், மாநில முன்பருவக் கருத்தரங்கு | | | | 40.00 | 39.888 |
| 9 | எரிபொருள் மற்றும் சில்லரைச் செலவினம் | | | | 20.51 | 20.479 |
| 10 | நெல் சிறுதானியச் சாகுபடி குறித்த விவசாயிகள் பயிற்சி | எண் | 500 | 499 | 25.00 | 24.950 |
| | மொத்தம் | | | | 383.66 | 377.997 |



2004 ஜூலை 29]

இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதோடு திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

### 4.2.2. செயல்திட்டத்தின்கீழ் கரும்பு பெருக்குத் திட்டம்

பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நிலையான உற்பத்தி மேம்பாட்டிற்கான கரும்பு பெருக்குத் திட்டம் இராமநாதபுரம், தூத்துக்குடி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்துக் கரும்பு விளையும் மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. சாகுபடி பரப்பை அதிகப்படுத்தாமல் தொடர்ந்து பல காலமாகக் கரும்பு சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் நிலையான உற்பத்தியை அடைய உற்பத்தித் திறனை உயர்த்துவதில் முழு கவனம் செலுத்தப்படும். 2003-2004 ஆம் ஆண்டு இத்திட்டம் வேளாண்மைத் துறை மூலம் ரூ.8.5 இலட்சம் செலவிலும், வேளாண் பொறியியல் துறை மூலம் ரூ.2.5 இலட்சம் செலவிலும் செயல்படுத்தப்படுகிறது. (மொத்த ஒதுக்கீடு ரூ.11.00 இலட்சம்)

2003-2004 ஆம் ஆண்டில் இன வாரியாக செயல் மற்றும் பொருள் இலக்கு சாதனை விவரங்கள் வருமாறு:

[2004 ஜூலை 29

| வ. எண் | இனம் | அலகு | 2003-2004 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | வயல் விளக்கம் | எக்டேர் | 80 | 80 | 4.00 | 4.000 |
| 2 | மாநில அளவில் பயிற்சி | எண் | 2 | 2 | 0.25 | 0.250 |
| 3 | விவசாயிகளுக்கான பயிற்சி | எண் | 40 | 40 | 2.00 | 2.000 |
| 4 | கரும்பு ஒட்டுண்ணி விடுதல் | எக்டேர் | 4,000 | 4,000 | 0.40 | 0.396 |
| 5 | சில்லரைச் செலவினம் | | | | 1.85 | 1.831 |
| | மொத்தம் | | | | 8.50 | 8.477 |

இத்திட்டம் 2001-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

### 4.2.3. சமச்சீர் மற்றும் ஒருங்கிணைந்த உரப் பயன்பாட்டுத் திட்டம்

பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு மண் மற்றும் உர மேலாண்மை குறித்து ஒரு பயிற்சிக்கு 30 அலுவலர்கள் வீதம் 12 பயிற்சிகள் நடத்தப்படும். மொத்தத்தில் ரூ.1.20 இலட்சம் செலவில் 360 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் பரிசோதனைக் கூடங்களில் துல்லியமாக ஆய்வுகள் மேற்கொள்வதை உறுதி செய்யத் தேவையான துணைக் கருவிகளும் பிற சாதனங்களும் ரூ.80 இலட்சத்திற்கு வழங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டது.

2004-2005 ஆம் ஆண்டு ரூ.22.50 இலட்சம் ஒதுக்கீட்டில் அலுவலர் பயிற்சி, இலை வண்ண அட்டைகள் மற்றும் மண்வள அட்டைகள் வழங்குதல் மற்றும் மண் வரைபடம் அச்சடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3. மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் – தொழில்நுட்பவியல் குழுமத் திட்டங்கள்

#### 4.3.1. தீவிர மக்காச்சோள உற்பத்திப் பெருக்குத் திட்டம்

கோழிப் பண்ணைகளுக்குத் தீவனமாகவும் பதப்படுத்தப்பட்ட பொருள்கள் மக்களுக்கு உணவாகவும் அதிக அளவு



2004 ஜூலை 29]

பயன்படுத்தப்படுவதால் மக்காச்சோளத்தின் தேவை அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது. விவசாயிகள் மக்காச்சோள உற்பத்தி மூலம் அதிக இலாபம் பெறமுடியும் என்பதால் மக்காச்சோள உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை பெருக்கும் நோக்கத்துடன் இப்பயிர் சாகுபடிக்கேற்ற மாவட்டங்களான கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, தருமபுரி, நாமக்கல், பெரம்பலூர், விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செலவை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இவை தவிர, விவசாயிகளுக்கு விதை சிறுதளைகள் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட்டு அதற்கான முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்கிறது.

2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்ட முன்னேற்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | வயல் விளக்கம் | எக்டேர் | 1306 | 1306 | 13.06 | 13.060 |
| 2 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல் விளக்கம் | எண் | 30 | 30 | 1.80 | 1.800 |
| 3 | உழவர் பயிற்சி | எண் | 47 | 47 | 2.35 | 2.350 |
| 4 | வேளாண் கருவிகள் விநியோகம் | எண் | 25 | 25 | 0.80 | 0.800 |
| 5 | மின்னணு சாதனங்கள் மூலம் விளம்பரம் | | - | - | 1.52 | 1.520 |
| 6 | சில்லரைச் செலவினம் | | - | - | 0.94 | 0.940 |
| 7 | விதை சிறுதளை செயல் விளக்கம் (100 விழுக்காடு மத்திய அரசு மானியம்) வீரிய ஒட்டு இரகங்கள் | எண் | 667 | 667 | 0.40 | 0.400 |
| | மொத்தம் | | - | - | 20.87 | 20.870 |

[2004 ஜூலை 29

### 4.3.2 தேசிய பயறுவகை உற்பத்திப் பெருக்குத் திட்டம்

பயறுவகைகளின் உற்பத்தியை உயர்த்தி, தேவை மற்றும் உற்பத்திக்கு இடையிலான இடைவெளியினைக் குறைக்கவும், இறக்குமதியைக் குறைக்கவும் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தேசியப் பயறுவகை உற்பத்திப் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் பயறுவகை பயிர்கள் குறுகிய கால மற்றும் குறைந்த நீர்த் தேவையுள்ள பயிராக இருப்பதுடன் பல்வேறு தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ப விவசாயிகளுக்குக் கணிசமான வருவாய் தரக்கூடிய பயிராகவும் உள்ளது. மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தில் பயறுவகைச் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

2003-2004 ஆம் ஆண்டில் இனவாரியாகப் பொருள் மற்றும் நிதி இலக்குகள் மற்றும் சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி (ரூஇலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு 03-04 | சாதனை | இலக்கு 03-04 | சாதனை |
| 1 | வல்லுநர் விதை உற்பத்தி | (குவி) | 100 | 89.99 | 4.00 | 4.048 |
| 2 | ஆதார விதை உற்பத்தி | (குவி) | 1000 | 1133.88 | 5.00 | 5.643 |
| 3 | விதை கிராமம்/சான்று விதை உற்பத்தி | (குவி) | 8000 | 7820.778 | 40.00 | 39.064 |
| 4 | பெருவிளக்கப் பண்ணை | (எக்) | 364 | 695.5 | 8.00 | 7.818 |
| 5 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கத் திடல் | (எக்) | 534 | 536 | 8.00 | 7.997 |
| 6 | பயிற்சி | (எண்) | 20 | 20 | 3.00 | 3.00 |
| 7 | ரைசோபியம் நுண்ணுயிர் கலவை வழங்கல் | (எக்) | 8000 | 24759 | 4.00 | 4.380 |
| 8 | பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வழங்கல் | (எண்) | 246 | 489 | 4.00 | 3.987 |
| 9 | ஜிப்சம் வழங்கல் | (எக்) | 1200 | 4796.42 | 6.00 | 6.00 |
| 10 | என்பிவி வழங்கல் | (எக்) | 800 | 833.6 | 2.00 | 1.983 |
| 11 | பணியாளர் சம்பளம் | | | | 8.00 | 6.874 |
| | மொத்தம் | | | | 92.00 | 90.794 |



2004 ஜூலை 29]

### 4.3.3 எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம்

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தொழில்நுட்பக் குழும அணுகுமுறையின்கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டத்தில் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்குத் தேவையான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டன.

2003–2004 ஆம் ஆண்டு இத்திட்டச் சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு 03-04 | சாதனை | இலக்கு 03-04 | சாதனை |
| 1 | வல்லுநர் விதைகள் வாங்குதல் | குவி | 400 | 494.68 | 6.00 | 6.855 |
| 2 | ஆதார விதை உற்பத்தி | குவி | 5400 | 9224.19 | 27.000 | 34.895 |
| 3 | சான்றிட்ட விதை உற்பத்தி | குவி | 16994 | 17421 | 84.970 | 86.870 |
| 4 | சான்றிட்ட விதை வழங்கல் | குவி | 17875 | 22279 | 143.000 | 131.670 |
| 5 | உள்கட்டமைப்பு வசதிகள் | | - | - | 1.690 | 1.698 |
| 6 | பெருவிளக்கப் பண்ணை | (எண்) | 750 | 882 | 15.000 | 14.958 |
| 7 | ரைசோபியம் நுண்ணுயிர் வழங்கல் | (எக்) | 22014 | 36488 | 11.007 | 11.936 |
| 8 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல் விளக்கம் | (எக்) | 1667 | 1667 | 25.000 | 25.000 |
| 9 | ஜிப்சம் விநியோகம் | (எக்) | 10000 | 13959 | 50.000 | 49.831 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | பண்ணைக் கருவிகள் வழங்கல் | (எண்) | 129 | 127 | 3.000 | 2.952 |
| 11 | பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் வழங்கல் | (எண்) | 572 | 1336 | 12.000 | 11.976 |
| 12 | நுண்ணூட்டக் கலவை வழங்கல் | (எக்) | 6000 | 8613 | 12.000 | 12.512 |
| 13 | விவசாயிகள் பயிற்சி | (எண்) | 154 | 154 | 23.000 | 23.000 |
| 14 | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் | (எண்) | 30 | 28 | 4.000 | 3.793 |
| 15 | சம்பளம் மற்றும் பிற படிகள் | | - | - | 45.00 | 50.739 |
| | மொத்தம் | | - | - | 462.667 | 468.685 |

### 4.3.4 எண்ணெய்ப் பனைச் சாகுபடி திட்டம்

எண்ணெய்ப் பனைச் சாகுபடியை உயர்த்த மத்திய அரசு சார்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டத்தின் பரப்பு விரிவாக்கம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 8 மாவட்டங்களில் 2004-2005 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும். சமையல் எண்ணெய்த் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்கும் வகையில் விவசாயிகளுக்கு எண்ணெய்ப் பனைச் சாகுபடியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எண்ணெய்ப் பனை நடவுக்கு மொத்த மானியமாக எக்டேர் ஒன்றுக்கு ரூ.15,500 வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். எண்ணெய் பிழிதல் மற்றும் சுத்திகரிப்புப் பணிகள் ஆகியன "எண்ணெய்ப் பனைச் சட்டத்தின்"கீழ் ஒழுங்குபடுத்தப் படுகின்றன.

மேலும் இந்தத் திட்டத்தைப் பிற மாவட்டங்களில் ஒப்பந்தப் பண்ணைய முறையில் தொழில் முனைவோர் மற்றும் விவசாயிகளிடையே ஒரு பொருத்தமான ஒப்பந்தம் ஏற்படுத்துவதன்மூலம் விரிவுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில்





9,000 எக்டேர் பரப்பில் எண்ணெய்ப் பனைச் சாகுபடி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு இதில் இதுவரை 1,294 எக்டேர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு 1,200 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய் பிழியும் செயல் விளக்க ஆலை ஒன்று பெரம்பலூர் மாவட்டம் அரியலூர் வட்டம் வாரணவாசி கிராமத்தில் காவேரி பாமாயில் நிறுவனத்தினரால் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆலை ஒரு மணிக்கு 2.5 மெட்ரன் பிழிதிறன் கொண்டதாக உள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் ரூ.210 இலட்சம் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவேரி பாமாயில் நிறுவனம் இந்த ஆலையை நிறுவி செயல்பாட்டுச் சோதனையை ஆகஸ்டு 2003-ல் முடித்து தற்போது பழக்குலைகளிலிருந்து எண்ணெய் பிழியப்பட்டு வருகிறது.

இனவாரியாக 2003-04 ஆம் ஆண்டு திட்டச் சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு 03-04 | சாதனை | இலக்கு 03-04 | சாதனை |
| | திட்ட முன்னோடி நடவடிக்கைகள் (எக்டேர்) | | | | | |
| 1 | அ. முதல் கட்டம் | | 800 | 959 | 24.00 | 28.762 |
| | ஆ இரண்டாம் கட்டம் | | 800 | 724 | 19.20 | 16.591 |
| 2 | சாகுபடி பரப்பு விரிவாக்கம் | (எக்டேர்) | 800 | 724 | 56.00 | 50.240 |
| 3 | பயிற்சி கல்வி | | - | - | 1.00 | 0.805 |
| | சுற்றுலா | | | - | 2.44 | 2.429 |
| 4 | விளம்பரம் | | | | | |
| 5 | சாகுபடிப் பயிர் பராமரிப்பு மானியம் | (எக்டேர்) | | | | |
| | அ. இரண்டாம் ஆண்டு | | 570 | 337 | 13.96 | 8.259 |
| | ஆ மூன்றாம் ஆண்டு | | 454 | 189 | 12.71 | 5.289 |
| | இ. நான்காம் ஆண்டு | | 242 | 97 | 7.87 | 3.149 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | சொட்டு நீர்ப் பாசனம் | | | | | |
| | அ. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ சிறு/மிகச் சிறு விவசாயிகள் | | 20 | 8 | 1.48 | 0.592 |
| | ஆ. பிற விவசாயிகள் | | 75 | 8 | 3.90 | 0.416 |
| | மொத்தம் | | | | 142.56 | 116.532 |

மத்திய அரசு, எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயிர்களில் தொழில்நுட்பவியல் குழு திட்டங்களான தீவிர மக்காச்சோள உற்பத்தித் திட்டம், தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம், எண்ணெய் வித்துக்கள் பெருக்குத் திட்டம், எண்ணெய்ப் பனை சாகுபடித் திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து 2004-2005 ஆம் ஆண்டு முதல் "ஐசோபாம்" எனும் திட்டமாக செயல்படுத்தவிருக்கிறது.

### 4.3.5 சிறுகுழுமம் 2–ன்கீழ் தீவிர பருத்தி உற்பத்திப் பெருக்குத் திட்டம்

பருத்தித் தொழில்நுட்பக் குழுவியல் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தீவிர பருத்தி உற்பத்திப் பெருக்குத் திட்டம் முக்கிய இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை வழங்கி, குறிப்பாக ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை நடவடிக்கைகளைச் செயல்படுத்தி பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

2003-2004 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ.298.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

2003-2004 ஆம் ஆண்டில் இனவாரியான சாதனை விவரம் பின்வருமாறு:



| வ எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | சான்றிட்ட விதை வழங்கல் ஒரு குவிண்டாலுக்கு ரூ.1,000 வீதம் | (குவி) | 1,000 | 684.74 | 10.00 | 6.846 |
| 2 | வயல் விளக்கத் திடல்கள் ஒரு எக்டேருக்கு ரூ.2,500 வீதம் | (எக்) | 1,720 | 1,748 | 43.00 | 42.995 |
| 3 | விரிவாக்கப் பணியாளர்கள் பயிற்சி ஒவ்வொன்றும் ரூ.15,000 வீதம் | (எண்) | 20 | 20 | 3.00 | 2.980 |
| 4 | விவசாயிகள் பயிற்சி ஒவ்வொன்றும் ரூ.10,000 வீதம் | (எண்) | 450 | 450 | 45.00 | 45.000 |
| 5 | மாவட்டங்களில் பூச்சி மற்றும் நோய்க் கண்காணிப்பு | (எண்) | 14 | 14 | 35.00 | 34.900 |
| 6 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நிருபணம் மற்றும் பயிற்சி ஒரு பயிற்சிக்கு ரூ.85,000 வீதம் | (எண்) | 70 | 70 | 59.50 | 59.067 |
| 7 | உயிரியல் காரணிகள் வழங்கல் எக்டேருக்கு ரூ.300 வீதம் | (எக்.) | 6000 | 7392 | 18.00 | 17.929 |
| 8 | கைத்தெளிப்பான் மற்றும் தூவுவான்கள் வழங்கல் ஒன்றுக்கு ரூ.700 வீதம் | (எண்) | 1,100 | 1,850 | 7.70 | 9.349 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விசைத் தெளிப்பான்கள் மற்றும் தூவுவான்கள் ஒவ்வொன்றும் ரூ.1,500 வீதம் | (எண்) | 400 | 336 | 6.00 | 5.140 |
| 10 | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கல் | (எண்) | 100 | 98 | 12.50 | 12.266 |
| 11 | சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கல் | (எக்) | 25 | 25 | 6.25 | 6.021 |
| 12 | சில்லரைச் செலவினம் | | | | 12.80 | 12.728 |
| 13 | உயிரியல் ஆய்வகத் துணைக் கருவிகள் வாங்குதல் | (எண்) | 2 | 2 | 40.00 | 39.993 |
| | மொத்தம் | | | | 298.75 | 295.214 |

2004-2005 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.4 தென்னை வளர்ச்சி வாரியம் நிதியுதவி அளிக்கும்/செயல்படுத்தும் திட்டங்கள்

### *4.4.1.* தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கம்

தென்னை சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் தென்னை வளர்ச்சி வாரிய திட்டமாக 100 விழுக்காடு நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முதல் ஆண்டில் கன்றுகளின் விலை, குழி எடுத்தல், நடவு மற்றும் பிற செலவுகளுக்காக எக்டேர் ஒன்றுக்கு ரூ.4,000 மானியமாக வழங்கப்படுகிறது. இரண்டாம் ஆண்டில் பராமரிப்புச் செலவுக்காக மேலும் ரூ.4,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் எக்டேர் ஒன்றுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.8,000 வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் தென்னை வளர்ச்சி வாரியம் தேவைக்கேற்ற உதவி புரிந்தது.

இதுதவிர, மாநிலத்தில் தனியார் தென்னை நாற்றங்காலுக்கு பண்ணைகளை ஊக்குவிக்கும் வகையில் சிறிய தென்னை நாற்றங்கால் ஒன்றுக்கு ரூ.3.00 இலட்சம் வீதமும், பெரிய தென்னை நாற்றங்கால்களுக்கு ரூ.6.00 இலட்சம் வீதமும் நிதியுதவிகளை தென்னை வளர்ச்சி வாரியம் வழங்கிவருகிறது. 2004-2005 ஆம் ஆண்டிலும் தேவைக்கேற்ற உதவி வழங்கப்படும்.





### 4.4.2 தென்னை வளர்ப்பில் உற்பத்தி அதிகரிப்பிற்கான ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் தென்னை வளர்ச்சி வாரியம் மூலமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வயதான மற்றும் நோய் தாக்கிய மரங்களை அகற்றுதல், செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல், இயற்கை உரக் குழிகள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு தென்னைப் பயிர் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2003-2004 ஆம் ஆண்டில் இனவாரி முன்னேற்றம் பின்வருமாறு:

| வ. எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு 2003-2004 | சாதனை | இலக்கு 2003-2004 | சாதனை |
| 1 | நோயுற்ற மரங்களின் மேலாண்மை | (எண்) | 20,000 | 20,000 | 50.00 | 50.00 |
| 2 | செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல் | (எக்டேர்) | 325 | 332 | 67.375 | 67.20 |
| 3 | இயற்கை உரக்குழிகள் | (எண்) | 100 | 100 | 20.000 | 20.00 |
| | மொத்தம் | | | | 137.375 | 137.20 |

இத்திட்டம் 2004-05 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.4.3 நவ்லாக் பண்ணையில் நெட்டை x குட்டை தென்னங் கன்றுகள் உற்பத்தி மற்றும் வழங்கல்:

நெட்டை x குட்டைத் தென்னங்கன்றுகள் உறபத்தி மையம் வேலூர் மாவட்டத்திலுள்ள நவ்லாக்கில் 50,000 நெட்டை x குட்டை மற்றும் 50,000 குட்டை x நெட்டை கன்றுகள் உற்பத்தி செய்ய ரூ.24.80 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினை மாநில அரசும் தென்னை வளர்ச்சி வாரியமும் முறையே 50:50 என்ற விகிதத்தில் மேற்கொண்டு 2003-2004 ஆம் ஆண்டில் 54,000 நெட்டை x குட்டை மற்றும் 40,000 குட்டை x நெட்டைத் தென்னங்கன்றுகள் ரூ.19.31 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

2004-2005 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2004 ஜூலை 29

### 4.4.4 தென்னையில் காண்டாமிருக வண்டு மற்றும் செம்பனை வண்டினைக் கட்டுப்படுத்துதல்:

தென்னையைத் தாக்கும் காண்டாமிருக வண்டு மற்றும் செம்பனை வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்த இன ஈர்ப்புப் பொறியை வழங்க தென்னை வளர்ச்சி வாரியம் ரூ.2.5 இலட்சம் செலவில் ஒரு திட்டத்தை மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்கியது. இந்த இன ஈர்ப்புப் பொறிகள் மத்திய மலைப்பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்திடமிருந்து பெறப்பட்டு வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

### 4.5 தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் மேம்பாடு வாரிய நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள்:

அரசு விதைப்பண்ணைகளில் 50,000 சொர்க்க மரக்கன்றுகளை உற்பத்தி செய்ய தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் மேம்பாட்டு வாரியம் ரூ.3 இலட்சம் நிதியுதவியினை வழங்கியுள்ளது. முசாவாக்கம், நவலாக் மற்றும் பஞ்சுப்பேட்டையில் உள்ள அரசு விதைப்பண்ணைகளில் 1,600 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. மீதமுள்ள கன்றுகள் உற்பத்திக்கு விதைகள் இல்லாததால் பெங்களூரிலிருந்து வேலூர், வேளாண்மை இணை இயக்குநர் 600 கன்றுகளை கொள்முதல் செய்துள்ளார். காஞ்சிபுரம் வேளாண்மை இணை இயக்குநர் 400 கன்றுகளை ஜூலை 2004-ல் பெறவுள்ளார். இக்கன்றுகள் ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் அரசு விதைப் பண்ணைகளில் நடவு செய்யப்படும்.

## 5. டான்காப் மறுசீரமைப்பு

### 5.1 டான்காப்–லிருந்து வேளாண் விரிவாக்கப் பிரிவினை மாற்றுதல்

அரசு நிலையாணை எண் 112 வேளாண்மைத் (எண்ணெய்வித்து) துறை, நாள் 1.6.2002-ன்படி, டான்காப்-லிருந்து வேளாண் விரிவாக்கப் பிரிவு வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. டான்காப் நிறுவனத்தால் இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த பல்வேறு திட்டங்கள் 21 மாவட்டங்களில் 6 மண்டல அலுவலகங்கள், ஒரு மண்டல உழவியல் மையம் மற்றும் பயிற்சி மையத்தின்மூலம் தொடர்ந்து செயல் படுத்தப்படும். இத்திட்டங்கள் 21 விவசாயிகள் மன்றம் மற்றும் 335 எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஒரு இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப் படுகின்றன. எண்ணெய் வித்து உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு



2004 ஜூலை 29]

இலட்சமாக உயர்த்தி வேளாண் மருந்தகங்களுடன் ஒருங்கிணைத்து அனைத்துத் திட்டங்களையும் அவர்களைக்கொண்டு செயல்படுத்திட நடப்பு ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2 மண்டல உழவியல் மற்றும் பயிற்சி மையம்:

இந்த மண்டல உழவியல் மற்றும் பயிற்சி மையம் நெய்வேலியில் 120 எக்டேர் பரப்பில் செயல்பட்டு வருகிறது. இது மாநிலத்திற்குத் தேவையான எண்ணெய் வித்துப் பயிர்களுக்கான வல்லுநர் விதைத் தேவையை நிறைவு செய்து வருகிறது. இந்த மையம் தேசிய வேளாண் ஆராய்ச்சிக்கான ஆலோசனைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மாநிலத்திற்குத் தேவையான எண்ணெய் வித்து பயிர்களுக்கான வல்லுநர் விதைகளை உற்பத்தி செய்து வருகிறது. ஒரு பயிற்சி மையமும் அந்தப் பண்ணையில் செயல்பட்டு வருகிறது. இந்த மையம் 2003-2004 ஆம் ஆண்டு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் 1,000 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கியது. இந்த மையம் எண்ணெய்ப் பனை மற்றும் காட்டாமணக்குத் திட்டங்களில் விவசாயிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மையத்தின் செயல்பாடுகள் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### 5.3 மண்டல அலுவலகங்கள்

திருவண்ணாமலை, செய்யாறு, விருத்தாசலம், மதுரை, ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மண்டல அலுவலகங்கள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் எண்ணெய் வித்துத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் ரூ.33.66 இலட்சம் செலவிடப்பட்டது.

### 5.4 காட்டாமணக்கு (ஜெட்ரோபா)

தரிசு நிலங்களில் தாவர எரிபொருள் தர வல்ல காட்டாமணக்குச் சாகுபடியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எடுக்கப்படும் எண்ணெயை 20 விழுக்காடு வரை டீசலுடன் கலந்து பம்புசெட்டுகள், டிராக்டர்கள், ஆழ்துளைக் கிணறுகள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தலாம். வேளாண் துறை பொருத்தமான இடங்களில் சாகுபடிப் பரப்பினைப் பெருமளவில் அதிகரிக்கத் தேவையான விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளும்.

[2004 ஜூலை 29

**6. உலக வர்த்தக நிறுவன விதிமுறைகளின்படி மறு ஒருங்கிணைப்பு (வேளாண் ஒப்பந்தம்)**

உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தம் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறிந்து உதவும் வகையில் வேளாண்மை விரிவாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது. 2003-ல் நடைபெற்ற உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தம் தொடர்பான கருத்தரங்கப் பரிந்துரையின்படி, ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனியே கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப்பட்டு அந்தக் கருத்தரங்கு நடவடிக்கைகளை அரசின் ஆய்விற்குப் பரிந்துரைத்து அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

**7. உழவர்களின் அமைப்பு**

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்ட இருப்பதைக் கருத்தில் கொண்டு அதன் உறுப்பினர்களை வட்ட அளவிலான விவசாயிகள் அமைப்பிற்கு மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட அளவில் அவர்களை ஒருங்கிணைத்து ஒரு தன்னார்வ அமைப்பாக வேளாண்மை விரிவாக்கப் பிரிவின்கீழ் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும், தற்போது வேளாண்மை ஆணையரின் கட்டுப்பாட்டில் செயல்படுத்தப்படுவது போல ஒரு குடையின்கீழ் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களின்மூலம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



2004 ஜூலை 29]

## அத்தியாயம் - 3

## தோட்டக்கலை

**1. முன்னுரை**

தமிழ்நாடு, தோட்டக்கலையில் தேசியப் பரப்பளவில் 5.7 விழுக்காட்டைக் கொண்டு, தேசிய தோட்டக்கலை விளைபொருள் உற்பத்தியில் 7.7 விழுக்காடு பங்களிப்பை அளித்துத் தோட்டக்கலை வளர்ச்சியில் முன்னிலையில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு, பல்வேறு தோட்டக்கலை சார்ந்த விளைபொருட்களான பழங்கள், காய்கறிகள், நறுமணச்சுவைப் பயிர்கள், மலைப்பயிர்கள், மலர்கள் மற்றும் மூலிகைப் பயிர்களுக்கு ஏற்ற வெவ்வேறு விதமான வேளாண் தட்பவெப்ப நிலைகளைக் கொண்டுள்ளது.

இம்மாநிலத்தில், தோட்டக்கலை வளர்ச்சிக்கு ஏதுவாக, அதிக அளவில், தரிசு நிலங்களும், சரிவரப் பயன்படுத்தப்படாத நிலங்களும் உள்ளன. தமிழ்நாடு 1,000 கி.மீ அளவிற்கு நெடிய கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ளது. முந்திரி, தென்னை மற்றும் வெப்ப மண்டல ஆர்க்கிட்டுகள் (வண்ண மலர்ச்செடி வகைகள்) முதலியவற்றைப் பயிரிடச் சாதகமாக இக்கடலோரப் பகுதி அமைந்துள்ளது. தென் தமிழ்நாடு மா மற்றும் திராட்சை போன்ற பயிர்களின் இடைப்பருவக் காய்ப்பிற்கான மூல வாய்ப்பு வளத்தைப் பெற்றுள்ளது.

விவசாயிகளிடம், உயர் மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி குறித்து அதிக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 8 விழுக்காடு ஆண்டு வளர்ச்சியைத் தோட்டக்கலைத் துறையில் அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் இம்மாநிலம் சந்தித்த கடுமையான வறட்சியின் காரணமாக, தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு வெகுவாகக் குறைந்தது. குறிப்பாக, மரவள்ளி, மஞ்சள், வாழை, மிளகாய் மற்றும் வெங்காயம் போன்ற பயிர்களின் சாகுபடி பரப்பு குறைந்தது. இருப்பினும் 2002-2003 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்கள் வழக்கமான சாகுபடி பரப்பான 8.52 இலட்சம் எக்டேரில் இருந்து சற்று குறைந்து 8.05 இலட்சம் எக்டேராக இருந்தது. 2003-2004 ஆம் ஆண்டில் பருவமழை பொய்த்த போதிலும், தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு ஏறத்தாழ 8.50 இலட்சம் எக்டேராக இருக்கும் என

[2004 ஜூலை 29

எதிர்பார்க்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் 9.50 இலட்சம் எக்டேர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு-

| வ. எண் | பயிர் வகை | 2002-2003 (தற்காலிகம்) | | | 2003-2004 (மதிப்பிடப்பட்டது) | | | 2004-2005 (திட்டமிடப்பட்டது) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் |
| 1 | பழங்கள் | 2.27 | 45.85 | 20.20 | 2.32 | 48.26 | 20.80 | 2.51 | 52.96 | 21.10 |
| 2 | காய்கறிகள் | 1.71 | 48.13 | 28.15 | 1.86 | 52.82 | 28.40 | 2.15 | 61.49 | 28.60 |
| 3 | நறுமண சுவைப் பொருட்கள் | 1.46 | 6.25 | 4.28 | 1.62 | 6.95 | 4.29 | 1.98 | 8.51 | 4.30 |
| 4 | மலைப்பயிர்கள் | 2.35 | 7.57 | 3.32 | 2.39 | 9.25 | 3.87 | 2.50 | 9.75 | 3.90 |
| 5 | மலர்கள் | 0.18 | 1.44 | 8.00 | 0.20 | 1.65 | 8.25 | 0.21 | 1.79 | 8.50 |
| 6 | மூலிகைப் பயிர்கள் | 0.08 | 0.80 | 10.00 | 0.11 | 1.10 | 10.00 | 0.15 | 1.50 | 10.00 |
| மொத்தம் (அனைத்து பயிர்கள்) | | 8.05 | 110.04 | | 8.50 | 120.03 | | 9.50 | 136.00 | |

## 2. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

அண்மைக் காலமாக வேளாண்மையில் தோட்டக்கலை ஒரு வளர்ச்சி அங்கமாக உருவாகி வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு, தோட்டக்கலைப் பயிர்களான, பழங்கள், காய்கறிகள், மலர்கள் மற்றும் மருந்துப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கும், இவற்றிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்திக்கும், இவற்றைச் சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் "தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தை" அறிவித்துள்ளது.

தோட்டக்கலை வளர்ச்சிக்கெனத் தனி இயக்கம் ஒன்றை 2003 ஆம் ஆண்டில் ஏற்படுத்தி, இந்தியாவிலேயே தோட்டக்கலை வளர்ச்சிக்காகத் தனி இயக்கம் அமைத்த முதல் மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பொருட்களின் உற்பத்தியை 2011-2012 ஆம் ஆண்டில் இரட்டிப்பாக்க இலக்கிடப்பட்டுள்ளது.



2004 ஜூலை 29]

### இயக்கத்தின் குறிக்கோள்கள்

1. சமச்சீர் ஊட்ட வள மேலாண்மை மூலமாக உற்பத்தியைப் பெருக்குதல்.
2. தரமான நடவுச் செடிகளின் உற்பத்தியை ஒழுங்குபடுத்தவும், அவை வழங்கப்படுவதைச் சீராக்கவும் உரிய வழிமுறைகளை உருவாக்குதல் மற்றும் தேவையின் அடிப்படையிலான ஆராய்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
3. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, முக்கியமாக பாதுகாப்பு மற்றும் விற்பனைக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
4. நவீன தொழில்நுட்ப முறைகளை முனைப்புடன் கையாள விவசாயச் சங்கங்களை ஊக்குவித்தல்.

தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின் பணிகளைக் கண்காணித்து அவற்றை மேம்படுத்தத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு ஆளுகைக் குழு (Governing Body) அமைக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலர் அவர்கள் இக்குழுவின் துணைத் தலைவராக உள்ளார். மேலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசுச் செயலாளர்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்த மூத்த அலுவலர்கள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர், தேசிய தோட்டக்கலை வாரியம் (National Horticulture Board), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமம் (APEDA), முதலிய அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

### 2.1. பயிர் வளர்ச்சி இயக்கங்கள்-வினைமுறை திறன்கள்

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் முக்கியத் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட பயிர் வாரியான வளர்ச்சி இயக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதிக வாய்ப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களான மா, வாழை, முந்திரி, மரவள்ளி, குளிர்காலக் காய்கறிகள், மலர்கள் மற்றும் மூலிகைப்

பயிர்களுக்கு இயக்கத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும். இயக்கத்தின் பொதுவான உத்திகளாவன:-

1. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பூச்சி மேலாண்மையைக் கடைப்பிடித்தல்
2. விவசாயிகளுக்குப் புதிய தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல்
3. செயல்விளக்கப் பாத்திகள் அமைத்தல்
4. நுண்ணீர்ப் பாசன முறைகள் அமைப்பதன் மூலம் அதிகத் திறன் கொண்ட பாசன மேலாண்மையைச் செயல் படுத்துதல்
5. அதிக மகசூல் தரக்கூடியதும் ஏற்றுமதிக்கு உகந்ததுமான பயிர் இரகங்களின் சாகுபடிப் பரப்பினை விரிவாக்கம் செய்தல்

இத்திட்டத்தின்மூலம் மா, முந்திரி ஆகியவைகளில், பழைய இரகங்களுக்குப் பதில் அதிக மகசூல் தரக்கூடிய புதிய இரகங்களைப் பயிரிடுதல், வாழையில் திசு வளர்ப்புக் கன்றுகளைப் பயன்படுத்துதல், அடர்நடவு மற்றும் அறுவடைக்குப்பின் கையாளும் மேலாண்மை, மரவள்ளிப் பயிரில் நச்சுயிரி இல்லாத இடங்களைத் தேர்ந்தெடுத்து நச்சுயிரி தாக்காத, இரகங்களைப் பயிரிடுதல், வறட்சியைத் தாங்கக்கூடிய தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல், மரவள்ளிக் கிழங்கிலிருந்து புது வகையான பொருட்கள் உற்பத்தியை ஊக்குவித்தல், மலர்ச் சாகுபடியில், வணிக ரீதியான மரபு வழி மலர்கள் மற்றும் கொய்மலர்கள் ஆகியவற்றின் சாகுபடியை ஊக்குவித்தல், மூலிகைப் பயிரில், தமிழ்நாட்டிலுள்ள வேளாண் பருவ நிலைக்குத் தக்கவாறு பல்வேறு மூலிகைப் பயிர்களின் சாகுபடியைப் பரப்புதல், மூலிகை நறுமணப் பயிர்களிலிருந்து எண்ணெய் எடுக்கும் வடி உலைகள் (Distillation Units) அமைக்க ஊக்குவித்தல் ஆகிய வினைமுறை திறன்கள் கையாளப்படும்.

## 3. விவசாயிகளுக்குப் பயிற்சி

நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்துகொள்ளும் பொருட்டு, சுற்றுலாவுடன் கூடிய பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில், சுமார் 10,000 விவசாயிகள், நாட்டில் உள்ள பல்வேறு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி





மையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்குத் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி, மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், கேரளா ஆகிய வெளி மாநிலங்களுக்கும் விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்கு உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை, நுண்ணீர்ப் பாசனம், திசு வளர்ப்புச் செடிகள், வறட்சிப் பகுதிகளில் தோட்டக்கலைப் பயிர்ச் சாகுபடி முறைகள் போன்ற தொழில்நுட்பங்கள் கற்பிக்கப்பட்டன.

### 3.1. விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி

இத்துறையின் விரிவாக்க அலுவலர்களுக்கும், தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் புதிய தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. சுமார் 500 விரிவாக்க அலுவலர்களுக்கு மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா போன்ற வெளி மாநிலங்களிலும், 900 கள அலுவலர்களுக்கு மாநிலத்திற்குள்ளேயும் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டிலும் இத்தகைய பயிற்சித் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

## 4. மாநில அரசுத் திட்டங்கள்

2003-2004 ஆம் ஆண்டில் பின்வரும் மாநில அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்
2. ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம்
3. மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம்
4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மேற்படித் திட்டங்கள் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டங்களில் கீழ்வரும் இனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்:

➢ ஊட்டச்சத்து மேலாண்மை, நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை ஆகிய உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து உயர் விளைச்சல் வீரிய இரகப் பயிர்களைச் சாகுபடி செய்தல்.

[2004 ஜூலை 29

- பகுதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவித்தல்.

- பழ வகைகளில் மா, நெல்லி, கொய்யா, சப்போட்டா ஆகிய பயிர்களுக்கும் நறுமணப் பயிரில் வெனிலா பயிருக்கும் முக்கியத்துவம் வழங்குதல், அதிக மகசூல் அளிக்கக் கூடியதும் ஏற்றுமதிக்கு உகந்ததுமான பயிர் இரகங்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.

- காய்கறிகளில், விவசாயிகளுக்கு அதிக இலாபம் தரக்கூடிய உயர் விளைச்சல்/வீரிய இரகக் காய்கறி வகைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்.

- ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தில், ஒவ்வொரு பயனாளிக்கும் 50 விழுக்காடு மானியத்தில், பழச் செடிகளுக்காக அதிகபட்சம் 1 ஹெக்டேருக்கும், காய்கறி மற்றும் மலர் இனங்களில் 0.50 ஹெக்டேர் பரப்பிற்கும் மானியம் வழங்குதல்.

- தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் அதிகம் வாழும் பகுதிகளான சேர்வராயன் மலைப்பகுதி, அருனூத்துமலை, பச்சைமலை, கொல்லிமலை, சித்தேரி மலை, ஜவ்வாது மலை, கல்ராயன் மலை ஆகிய பகுதிகளில் கிடைக்கும் நீர் வளத்தைப் பயன்படுத்தி தனிப் பழத் தோட்டங்களை அமைக்கப் பழங்குடி விவசாயிகளை ஊக்குவித்தல்.

- பழங்குடி மக்களின் பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 75 விழுக்காடு மானியத்தில், அவர்களுக்குத் தோட்டக்கலை நடவுச் செடிகள் வழங்குதல்.

- மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் நீர்வடி பகுதி அணுகு முறைகளைக் கையாண்டு செயல்படுத்துதல்.

- மண் அரிப்பினைத் தடுக்கவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் நிலத்திற்கேற்ற பயிர் வகைகளைத் தெரிவு செய்து சாகுபடி செய்தல்.



2004 ஜூலை 29]

- மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் 25 முதல் 50 விழுக்காடு மானியத்தில், தோட்டக்கலை நடவுப் பொருட்கள் வழங்குதல்.

- துறையின், 55 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உயர் இரக மரபு வழி ஒட்டுச் செடிகளை உற்பத்தி செய்து பல்வேறு திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்குதல்.

- நவீன தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் வகையில் தோட்டக்கலைத் துறை விரிவாக்க அலுவலர்களுக்கு குடுமியான்மலையில் (புதுக்கோட்டை மாவட்டம்) மத்திய தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் பயிற்சி அளித்தல்.

- மாதவரம் (சென்னை) தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் 10 புதிய மாணவர்களுக்கு இரண்டாண்டு பட்டயப் படிப்பில் பயிற்சி அளித்தல்.

## 4.1. நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தர மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில், அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தேயிலை விலை வீழ்ச்சியின் காரணமாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர்துடைக்க தரமான தேயிலையை உற்பத்தி செய்து அதன் மூலம் அவர்களுக்கு அதிக விலை கிடைக்க இத்துறை விரைவு நடவடிக்கையை மேற்கொண்டது. இதற்காக 2002-2003 முதல் தேயிலை வாரியத்தின் நிதி உதவியுடன் கீழ்க்கண்டுள்ள இனங்களில் இத்திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது:

1. பரந்த அடிப்படையில் தேயிலைச் செடி தரம் மேம்பாடு
2. கிராம விழிப்புணர்வு முகாம்கள்

இத்திட்டத்திற்காக 90 விரிவாக்கப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மற்றும் மைராடா (MYRADA) என்ற பிரபல தொண்டு நிறுவனத்தின் மேற்பார்வையில் விவசாயிகளுக்கு நவீன தேயிலைச் சாகுபடி முறைகள் கற்றுத் தரப்படுகின்றன. விவசாயிகளிடம் இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. இத்தகைய முயற்சிகள்மூலம் பசுந்தேயிலையின் விலை உயர்ந்துள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரையில் ரூ.3.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது தேயிலை வாரியத்தின் உதவியுடன் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.2. நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப்பயிர்த் திட்டம்

தேயிலை விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப்பயிர்த் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பல அடுக்குப் பயிர்ச் சாகுபடி (Multitier Cropping) முறையின் மூலம், சில்வர் ஓக் (Silver Oak), மிளகு, ஏலம், கமலா ஆரஞ்சு (Mandarin Orange) ஆகிய பயிர்களைத் தேயிலையுடன் பயிரிட விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் நிலவும், வேளாண் தட்ப வெப்ப நிலையைக் கருத்தில் கொண்டு, புதிய வகைப் பயிர்களான 'மெக்கடமியா' மற்றும் 'பீக்கன்கொட்டை' ஆகிய பயிர்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. சோதனை அடிப்படையில், இப்பயிர்களை நஞ்சநாடு மற்றும் 'கோல்கிளைன்' அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் வளர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் விவசாயிகள் நிலங்களில் அறிமுகப் படுத்தப்படும். நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப்பயிர் சாகுபடியை மேம்படுத்த அரசு ரூ.50.00 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.3. தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் (Tamilnadu Precision Farming Project)

கடந்த நிதிநிலை கூட்டத் தொடரில் அறிவித்தபடி நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு 100 எக்டேர்களில் பாசன நீரைச் சிக்கனப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தருமபுரி மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டங்களில் "தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம்" என்ற சிறப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டமானது மூன்றாண்டுகளில் ரூ.720.60 இலட்சத்தில் செயல்படுத்தப்படும்.

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியில் சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம், உரப்பாசனம் முதலிய உயர் தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு அதன் மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனைப் பெருக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் 1,000 ஏக்கர் விவசாயிகளின் நிலங்களில் உயர் தொழில்நுட்ப முறைகளின்படி மரவள்ளி, சீமை



வெள்ளரி, வீரிய இரகத் தக்காளி, மிளகாய், கேப்சிகம், பாப்ரிக்கா, வெள்ளை வெங்காயம், வெண்டை, முட்டைக்கோஸ், காலிபிளவர், பேபிகார்ன் முதலிய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும்.

முதலாமாண்டு 100 எக்டேர் பரப்பிலும், இரண்டாமாண்டு 200 எக்டேர் பரப்பிலும், மூன்றாமாண்டு 100 எக்டேர் பரப்பிலும் முறையே ரூ.208.59 இலட்சம், ரூ.316.16 இலட்சம் மற்றும் ரூ.195.85 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் செயல் திட்ட அடிப்படையில் (Turn Key Project) செயல்படுத்தப்படும். இத்திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த தோட்டக்கலைத் துறை, வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மாவட்ட நிர்வாகம் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படும்.

இத்திட்டம் மூலம், முதலாண்டு தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு முதல் பருவ சாகுபடி செய்ய ஆகும் செலவுக்கு முழு மானியம் வழங்கப்படும். இரண்டாமாண்டு தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளிடம் பயிரிடப்படும் செலவில் 10 விழுக்காடும், மூன்றாமாண்டு தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளிடம் பயிரிடப்படும் செலவில் 20 விழுக்காடும் வசூலிக்கப்படும்.

## 5. மாநில மற்றும் மைய அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்கள்

பின்வரும் மாநில மற்றும் மைய அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்கள் 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன:

1. ஒருங்கிணைந்த முந்திரி வளர்ச்சித் திட்டம்
2. ஒருங்கிணைந்த பழப்பயிர் வளர்ச்சித் திட்டம்
3. ஒருங்கிணைந்த நறுமண சுவைப்பயிர் வளர்ச்சித் திட்டம்
4. ஒருங்கிணைந்த காய்கறி வளர்ச்சித் திட்டம்
5. ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் வாசனைப்பயிர் வளர்ச்சித் திட்டம்
6. ஒருங்கிணைந்த கோக்கோ வளர்ச்சித் திட்டம்

7. வணிக மலர் வளர்ச்சித் திட்டம்

8. காளான் வளர்ச்சித் திட்டம்

9. தோட்டக்கலை விரிவாக்கத்தில் குழைமப் பொருட்கள் உபயோகம்

10. தோட்டக்கலை வளர்ச்சியில் புதுமைத் திட்டங்கள்

மேற்படி அனைத்துத் திட்டங்களும் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டங்களின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:-

* மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, பலா, நாவல் போன்ற பழப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
* அதிக மகசூல் அளிக்கக் கூடியதும் ஏற்றுமதிக்கு உகந்ததுமான பயிர் இரகங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* நடவுச் செடிகள், உயிரி இடுபொருட்கள் ஆகியவை 25 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
* வீரிய மற்றும் உயர் விளைச்சல் இரக காய்கறி விதைகளைக் கொண்டு விவசாயிகளின் வயல்களில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படும்.
* வீரிய மற்றும் உயர் விளைச்சல் இரகக் காய்கறி விதைகள் 25 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.
* மல்லிகை, முல்லை, ரோஜா, சம்பங்கி, சாமந்தி, கனகாம்பரம் போன்ற பாரம்பரிய மலர் வகைகளில் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்படும்.
* ஏற்றுமதிக்குகந்த கொய் மலர்களான ரோஜா, கார்னேஷன், ஜெர்பரா, கிளாடியோலஸ், சாமந்தி, ஆந்தூரியம், லில்லி, ஆர்க்கிட் போன்றவைகளின் உற்பத்திக்கு முக்கியத்துவம் தரப்படும்.
* வணிக மலர்ச் சாகுபடிக்கு 25 விழுக்காடு மானியத்தில் விதைகள் மற்றும் நடவுச் செடிகள் வழங்கப்படும்.
* நிழல்வலைக் கூடாரங்கள் மற்றும் பசுமைக்குடில்கள் அமைத்திட விவசாயிகளுக்கு 25 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.





* பழனி மலைப்பகுதிகளில் மலைவாழைச் சாகுபடிக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் திசு வாழைக் கன்றுகள் விவசாயிகளுக்கு 25 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.
* தோட்டப் பயிர்களில் முந்திரிப் பயிர்ப் பரப்பு விரிவாக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் கோவை, திண்டுக்கல் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கோக்கோ பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்படும்.
* தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் மாநில தோட்டக்கலைப் பண்ணைகளில் சொட்டு நீர்ப் பாசனத்துடன் அடர் பயிர் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படும்.
* ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள தமிழ்நாட்டின் முக்கிய மூலிகைப் பயிர்களான மருந்து கூர்க்கன், நித்தியகல்யாணி, சென்னா, கண்வலிக் கிழங்கு, அஸ்வகந்தி மற்றும் நறுமணப் பயிர்களான எலுமிச்சைப்புல், சிட்ரோநெல்லா, பாமரோசா, ரோஸ்மேரி முதலியவற்றின் சாகுபடிக்கு முக்கியத்துவம் தரப்படும்.
* குறைந்த கலோரி சத்துள்ள சீனித் துளசி (Stevia) சாகுபடியைப் பிரபலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
* காளான் உற்பத்தியில் 2,000 பண்ணை மகளிருக்கு உயர் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படும்.

## 6. சிறப்பு முயற்சிகள்

### 6.1. மாதிரித் தோட்டக்கலை கிராமங்கள்

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 100 மாதிரித் தோட்டக்கலைக் கிராமங்கள் அமைக்கப்பட உள்ளன. இக்கிராமங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உயர் மதிப்புடைய காய்கறிகள், திசு வாழை, முந்திரி, மலர்கள் மற்றும் மூலிகைப் பயிர்கள் ஆகியவற்றைப் பயிர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.2. தோட்டக்கலை சுய உதவிக் குழுக்கள்

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 1,000 தோட்டக்கலை சுய உதவிக் குழுக்களை அமைத்து அவற்றின் மூலம் நவீன சாகுபடித் தொழில்நுட்பங்களைப் பரப்ப திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் தோட்டக்கலைத் துறையின் தொழில்நுட்ப அலுவலர்கள் மூலம் தோட்டக்கலை சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 6.3. விதை மற்றும் நாற்றங்கால் கிராமங்கள்

தனியார் துறையில் தரமான விதைகள் மற்றும் நடவுச் செடிகளை உற்பத்தி செய்யும் நோக்குடன் சில தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இவர்களுக்குத் தரமான விதைகள் உற்பத்தி, பல்வகையான தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் ஒட்டுக்கட்டுதல் போன்றவற்றில் உரிய பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி நிலையம் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலையங்களின் உதவியுடன் அளிக்கப்படும். இந்த மாதிரிக் கிராமங்கள் அவற்றையொட்டிய பிற கிராம விவசாயிகளுக்கு அறிவு மையங்களாக அமையும்.

## 6.4. புதிய இரகங்களை அறிமுகப்படுத்துதல்

ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள மா, சப்போட்டா, நெல்லி ஆகிவற்றில் புதிய இரகங்களைத் தேர்வு செய்து அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நடவு செய்து அவற்றிலிருந்து தரமான செடிகளை உற்பத்தி செய்து அவற்றை விவசாயிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 6.5. உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை

பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை ஆகும். உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை முறைகளான நுண்ணீர்ப் பாசனம், பசுமைக்குடில் மற்றும் நிழல் வலைக்குடில்களில் சாகுபடி செய்தல், திசு வளர்ப்புச் செடிகள், உயர்ரக விதைகள்/நடவுச் செடிகள், அடர் நடவு மற்றும் உயர் தொழில்நுட்ப இயந்திரங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## 6.6. இயற்கை பண்ணையம்

உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய வேதியற் பொருட்கள் அடங்கிய உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்து "இயற்கை பண்ணைய முறைக்கு" மாற விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை உரங்களான வேம்பு அடிப்படையிலான பொருட்கள், மண்புழு உரம் (Vermi Compost) மற்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (Azospirillium), பாஸ்போ பாக்டீரியா (phosphobacteria) ஆகியவற்றைப் பயன்படுத்துவது ஊக்குவிக்கப்படுகிறது. இக்கருத்தின் அடிப்படையில் 2004-2005 ஆம் ஆண்டில் இயற்கை பண்ணையத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். மேலும் 'பஞ்சகவ்யா' மற்றும் 'மட்கா கார்ட்' (Mutka Guard) ஆகியவற்றைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படும்.

## 6.7. விவசாயிகள் பங்கேற்கும் பசுமைக் கிராமச் செயல்விளக்கத் திட்டம்

இத்திட்டம் பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டு செயல்படுத்தப்படும்.

(அ) நச்சுத் தன்மையற்ற உணவுப்பொருள் உற்பத்தியை ஊக்குவித்தல்.

(ஆ) நிலைத்த உற்பத்தித் திறனை, குறிப்பாக மண் வளப்பாதுகாப்பை உறுதி செய்தல்.

(இ) நுகர்வோருக்கு இயற்கை வேளாண் முறைப்படி சாகுபடி செய்த பொருட்கள் கிடைக்க உறுதி செய்தல்.

(ஈ) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் மாதிரி இயற்கை உர கிராமங்கள் அமைக்கப்படும். இவை, 6 மாவட்டங்களைச் சேர்ந்த 100 கிராமங்களில் மூன்றாண்டு காலத்தில் அமைக்கப்படும். விவசாயிகள் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியவை இப்பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆகியவற்றுடன் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும். இத்திட்டதிற்கான மதிப்பீடு ரூ.63.44 இலட்சமாகும்.

[2004 ஜுலை 29

**6.8. தோட்டக்கலைப் பயிர்களுக்கான வணிகரீதியான திசு வளர்ப்பு மையங்கள் அமைத்தல்**

இத்திட்டம் கீழ்க்கண்ட நோக்கத்துடன் செயல்படுத்தப்படும்.

i) விவசாயிகளுக்கு வழங்குவதற்காக தோட்டக் கலை நடவுச்செடிகளை அதிக அளவில் வணிக ரீதியில் உற்பத்தி செய்தல்.

ii) நோயற்ற, தரமான தோட்டக்கலை நடவுச் செடிகளை உற்பத்தி செய்து, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தினரால் ரூ.73.84 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் மூன்றாண்டுகளுக்கு கோயம்புத்தூரில் செயல்படுத்தப்படும். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் ஒருங்கிணைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**6.9. விவசாயிகள் பங்கேற்கும் மூலிகைப் பயிர்கள் உற்பத்திச் செயல் விளக்கத் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் முறைப்படுத்தப்பட்ட சாகுபடி முறைகளைக் கையாண்டு உள்நாட்டுத் தேவைக்கும், ஏற்றுமதிக்கும் உகந்த தரம் வாய்ந்த மூலிகைப் பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள். மூலிகைப் பொருட்களை விற்பனை செய்வதில் உள்ள சிக்கல்களைக் களைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டம் ரூ.168.60 இலட்சம் மொத்தச் செலவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தினால், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண் வணிக விற்பனைத் துறை ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 6 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 60 கிராமங்களில் 1,500 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்பட உள்ளது.

**6.10. தமிழ்நாட்டில் செடி உற்பத்தி மற்றும் நாற்றங்கால் மேம்பாட்டினை முறைப்படுத்துதல்**

இத்திட்டம், விவசாயக் குழுக்களை ஈடுபடுத்தி, நாற்றங்கால் கிராமங்கள் அமைத்து அவற்றின் மூலம் அசல் மரபியல் தரத்துடன் கூடிய தோட்டக்கலை நடவுப்பொருள்களை உற்பத்தி செய்து, நடவுக் காலத்தில் விவசாயிகளுக்கு வழங்குவது ஊக்குவிக்கப்படும். இத்திட்டம்,



2004 ஜுலை 29]

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் ரூ.70.74 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் ஒருங்கிணைப்புடன் மூன்றாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும்.

**6.11. அரிய மர இனங்களைப் பாதுகாத்தல் – சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமைத் திட்ட இயக்கம்**

"பசுமைத் திட்டத்தின்" ஒரு முக்கியக் கூறு அரிய செடி/மர இனங்களைப் பாதுகாத்தல் ஆகும். ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் தொன்மை வாய்ந்த மரங்கள் தற்போதும் "ஸ்தல விருட்சங்களாக"க் கோவில்களில் காணப்படுகின்றன. இவ்வரிய செடி இனங்களைப் பாதுகாக்கவும் மரம் மற்றும் வனத்தின் மகத்துவத்தை உணர்த்தவும் நம் முன்னோர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியேயாகும். இஃது பண்டைய கால நாகரிகத்தின் சுற்றுச்சூழல் விழிப்புணர்விற்குத் தக்கதொரு சான்றாகும்.

எடுத்துக்காட்டாக, கொடுமுடியில் உள்ள ஒரு மரத்தில் ஒவ்வொரு கிளையிலும் ஒவ்வொரு வகையான பழங்கள் உள்ளன. முதுமையினால் அழிந்துவரும் இவ்வகை அரிய செடி/மர இனங்களை உயர் தொழில்நுட்ப திசு வளர்ப்பு முறையில் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி தோட்டக்கலைத் துறையால் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் திசு வளர்ப்பு ஆய்வகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும்.

**7. பகுதி 2 திட்டங்கள் (2004–2005)**

பகுதி-2 திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**7.1 தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (Tamilnadu Horticulture Development Agency)**

'தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை' என்ற தனி அமைப்பு பின்வரும் குறிக்கோள்களுடன் ஏற்படுத்தப்பட உள்ளது:-

(1) உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை மற்றும் துல்லிய பண்ணை நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

(2) தோட்டக்கலை வளர்ச்சிக்காகப் பொது மற்றும் தனியார் கூட்டுமுறைப் பங்களிப்பினை ஊக்குவித்தல்.

[2004 ஜூலை 29

(3) தோட்டக்கலை நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் அறியச் செய்தல்.

(4) அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மூலம் தாய்வழி நடவுச் செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தினை சீராக்குதல்.

(5) தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழான திட்டங்கள் உட்பட பல்வேறு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களை உரிய முகமைகளிடமிருந்து நிதி உதவி பெற்றுச் செயல்படுத்துதல்.

இம்முகமை, தோட்டக்கலை வளர்ச்சியின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஒரு "சிறப்பு செயல் ஊர்தியாகத்" திகழும்.

## 7.2. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

2003-2004 ஆம் ஆண்டில் கோவை மாவட்டம் கண்ணம்பாளையத்தில் புதிதாக ஒரு அரசு தோட்டக்கலைப் பண்ணை அமைக்கப்படுவதற்காக ரூ.15.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. மேலும், 2003-2004 ஆம் ஆண்டில் 25 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. இதுபோல, 2004-2005 ஆம் ஆண்டிலும் ரூ.120.00 இலட்சம் செலவில் 28 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினைப் பயன்படுத்தி அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உள்ள தற்போதைய நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தவும், கூடுதலான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் அதன்மூலம் மரபு வழி மற்றும் வீரிய ஒட்டு ரக நடவுச்செடிகளை உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. இலக்கு மற்றும் சாதனை

மாநில அரசுத் திட்டங்கள், மாநில-மைய அரசுப் பகிர்வு முறைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான 2003-2004 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் 2004-2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:-



2004 ஜூலை 29]

**2003-2004 ஆம் ஆண்டிற்கான ஒப்பளிக்கப்பட்ட தொகை மற்றும் சாதனை, 2004-2005 ஆம் ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட நிதி ஒதுக்கிடு**

**அலகு - ரூபாய் இலட்சங்களில்**

| வ. எண் | திட்டம் | 2003-2004 | | 2004-2005 |
|---|---|---|---|---|
| | | ஒப்பளிக் கப்பட்ட தொகை | மார்ச் 2004 வரையான சாதனை | முன்மொழி யப்பட்ட நிதி ஒதுக்கீடு |
| அ | மாநிலத் திட்டங்கள் | | | |
| 1 | ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் | 750.32 | 739.603 | 766.26 |
| 2 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் | 40.03 | 40.03 | 39.33 |
| 3 | மேற்குத் தொடர்ச்சிமலை வளர்ச்சித் திட்டம் | 138.371 | 129.085 | 135.48 |
| 4 | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 287.73 | 280.880 | 315.00 |
| 5* | தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் | 200.00 | 66.80 | 316.16 |
| 6 | தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் | 2.00 | 1.95 | 210.00 |
| 7 | நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர்த் திட்டம் | 50.00 | 50.00 | 50.00 |
| 8 | பகுதி-2 திட்டங்கள் | 120.00 | 117.790 | 120.00 |
| 9 | தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை | - | | 20.00 |
| | **மொத்தம்** | **1588.451** | **1426.138** | **1972.23** |
| | * அரசு ஆணை 23.01.2004-ல் வழங்கப்பட்டது | | | |
| ஆ | மாநில-மைய அரசுப் பகிர்வு முறைத் திட்டங்கள் | | | |
| 1 | ஒருங்கிணைந்த முந்திரி வளர்ச்சித் திட்டம் | 271.98 | 230.787 | 153.00 |
| 2 | ஒருங்கிணைந்த பழப்பயிர்கள் வளர்ச்சித் திட்டம் | 311.77 | 297.536 | 200.00 |
| 3 | ஒருங்கிணைந்த நறுமண கலைப் பயிர் வளர்ச்சித் திட்டம் | 188.75 | 188.286 | 60.00 |
| 4 | ஒருங்கிணைந்த காய்கறிப் பயிர்கள் வளர்ச்சித் திட்டம் | 260.50 | 260.490 | 210.00 |
| 5 | ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் வாசனைப் பயிர்கள் வளர்ச்சித் திட்டம் | 48.00 | 47.995 | 52.50 |
| 6 | ஒருங்கிணைந்த கோக்கோ வளர்ச்சித் திட்டம் | 18.00 | 17.981 | 12.00 |
| 7 | வணிகமலரியல் வளர்ச்சித் திட்டம் | 172.00 | 170.983 | 114.00 |
| 8 | காளான் வளர்ச்சித்திட்டம் | 10.00 | 10.00 | 10.00 |
| 9 | தோட்டக்கலை விரிவாக்கத்தில் பிளாஸ்டிக்கின் உபயோகம் | 46.00 | 43.895 | 14.50 |
| 10 | தோட்டக்கலை வளர்ச்சியில் புதுமைத் திட்டங்கள் | 73.00 | 47.126 | 90.00 |
| | மொத்தம் | 1400.00 | 1315.079 | 916.00 |
| 11 | 2003-04 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட 2004-05 ஆம் ஆண்டுக்கு முன் கொண்டுவரப்பட்ட தொகை | - | - | 84.00 |
| | மொத்தம் | 1400.00 | 1315.079 | 1000.00 |
| | **பெரு மொத்தம் (அ+ஆ)** | **2988.451** | **2741.217** | **2972.23** |

[2004 ஜுலை 29

## 9. முக்கிய திட்டக் கோட்பாடுகள் 2004-2005

- √ உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை மற்றும் துல்லிய பண்ணைப் பணிகளுக்கு முக்கியத்துவமளித்தல்.
- √ நுண்ணீர்ப் பாசனம் மற்றும் உரப்பாசனம் மூலம் பயிர்ப் பரப்பு விரிவாக்கம்.
- √ நீர் ஆதாரம் அதிகம் தேவைப்படும் பயிர்களின் பரப்பை நிலைப்படுத்தி வறட்சியைத் தாங்கும் தோட்டக்கலைப் பயிர் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்துதல் மற்றும் திறமையான நீர் மேலாண்மை மீது கவனம் செலுத்துதல்.
- √ தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் தோட்டக்கலைப் பயிர்ப் பரப்பு விரிவாக்கத் திட்டங்கள்.
- √ அரசு மற்றும் தனியார் அமைப்புகளில் தரமான விதைகள்/ ஒட்டு வீரிய நடவுச் செடிகள் உற்பத்தி முறையை வலிமைப்படுத்தல்.
- √ ஏற்றுமதிக் கண்ணோட்டத்துடன் இயற்கை பண்ணையத்தினை மேம்படுத்துதல்
- √ குறிப்பிட்ட பயிர்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைத்தல்.
- √ தனியார் மற்றும் அரசு கூட்டுமுறைப் பங்களிப்பை ஊக்குவித்தல்.
- √ ஒப்பந்த மற்றும் கூட்டாண்மைப் பண்ணையத்தை மேம்படுத்துதல்.
- √ விவசாயிகளுக்கு, குறிப்பாகப் பெண் விவசாயிகளுக்கு அதிகாரமளிப்பதை ஊக்குவித்தல்.
- √ சுற்றுலாவுடன் கூடிய பயிற்சியின் மூலம் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அளித்தல்.
- √ மின்னனு ஆளுமை (e-Governance) மற்றும் மனிதவள மேம்பாடு மூலம் விரிவாக்க அலுவலர்களுக்கு அதிக திறன் கொண்ட பயிற்சி அளித்தல்.
- √ புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் வேளாண் சார்ந்த தொழில்களை மேம்படுத்துதல்.
- √ அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பைக் குறைத்தல்.



2004 ஜுலை 29]

### அட்டவணை

### தமிழ்நாட்டிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | பண்ணை பெயர் | இடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | அதோப | ஆணைக்கட்டி | 12.00 |
| 2 | கோயம்புத்தூர் | அதோப | கல்லார் | 8.72 |
| 3 | கோயம்புத்தூர் | அதோப | கண்ணம்பாளையம் | 27.66 |
| 4 | கடலூர் | அதோப | நெய்வேலி | 40.48 |
| 5 | கடலூர் | அதோப | விருத்தாசலம் | 10.53 |
| 6 | தர்மபுரி | அதோப | திம்மாபுரம் | 9.89 |
| 7 | தர்மபுரி | அதோப | ஜீனூர் | 122.38 |
| 8 | திண்டுக்கல் | அதோப | கொடைக்கானல் | 5.16 |
| 9 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா | கொடைக்கானல் | 8.30 |
| 10 | திண்டுக்கல் | அதோப | தாண்டிக்குடி | 5.45 |
| 11 | திண்டுக்கல் | அதோப | ரெட்டியார்சத்திரம் | 5.33 |
| 12 | திண்டுக்கல் | அதோப | சிறுமலை | 202.47 |
| 13 | காஞ்சிபுரம் | அதோப | ஆத்தூர் | 12.24 |
| 14 | காஞ்சிபுரம் | அதோப | விச்சந்தாங்கல் | 22.96 |
| 15 | காஞ்சிபுரம் | அதோப | மேல்கதிர்பூர் | 42.12 |
| 16 | காஞ்சிபுரம் | அதோப | மேலொட்டிவாக்கம் | 20.36 |
| 17 | கன்னியாகுமரி | அதோப | கன்னியாகுமரி | 12.80 |
| 18 | கன்னியாகுமரி | அதோப | பேச்சிப்பாறை | 6.07 |
| 19 | நாமக்கல் | அதோப | செம்மேடு | 11.62 |
| 20 | நாமக்கல் | அதோப | படசோலை | 28.14 |
| 21 | புதுக்கோட்டை | அதோப | குடுமியான்மலை | 118.68 |
| 22 | புதுக்கோட்டை | மாபெரும் பழப்பண்ணை | வல்லத்திராக்கோட்டை | 521.20 |
| 23 | புதுக்கோட்டை | அதோப | நாட்டுமங்கலம் | 53.02 |
| 24 | சேலம் | அதோப | ஏற்காடு | 10.12 |
| 25 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை | கருமந்துறை | 419.77 |
| 26 | சேலம் | அதோப | மணியார்குண்டம் | 100.00 |
| 27 | சேலம் | காவிஉமை | கருமந்துறை | 5.49 |
| 28 | சேலம் | அதோப | கருமந்துறை | 39.35 |
| 29 | சேலம் | அதோப | முள்ளுவாடி | 48.20 |
| 30 | சேலம் | அதோப | சிறுமலை (அறுநூத்துமலை) | 8.10 |
| 31 | சிவகங்கை | அதோப | தேவகோட்டை | 81.20 |
| 32 | சிவகங்கை | அதோப | நேமம் | 38.77 |
| 33 | தஞ்சாவூர் | அதோப | ஆடுதுறை | 8.80 |
| 34 | தஞ்சாவூர் | அதோப | மருங்குளம் | 10.58 |
| 35 | உதகை | அதோப | பர்லியார் | 6.25 |

[2004 ஜூலை 29

| வ. எண் | மாவட்டம் | பண்ணை பெயர் | இடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|---|
| 36 | உதகை | அதோப | காட்டேரி | 18.96 |
| 37 | உதகை | அதோப | குன்னூர் | 4.05 |
| 38 | உதகை | பழவியல் நிலையம் | குன்னூர் | 6.52 |
| 39 | உதகை | சிம்ஸ் பூங்கா | குன்னூர் | 12.14 |
| 40 | உதகை | அதோப | தொட்டபெட்டா | 4.00 |
| 41 | உதகை | அதோப | தும்மனட்டி | 9.80 |
| 42 | உதகை | அதோப | விஜயநகரம் | 14.40 |
| 43 | உதகை | அரசு தாவரவியல்பூங்கா | உதகை | 22.00 |
| 44 | உதகை | அதோப | நஞ்சநாடு | 85.18 |
| 45 | உதகை | அதோப | தேவாலா | 80.00 |
| 46 | தேனி | அதோப | பெரியகுளம் | 9.31 |
| 47 | திருவள்ளூர் | அதோப | மாதவரம் | 5.76 |
| 48 | திருவள்ளூர் | அதோபு | பிச்சிவாக்கம் | 40.43 |
| 49 | திருநெல்வேலி | அதோப | குற்றாலம் | 14.89 |
| 50 | கரூர் | அதோப | முதலைப்பட்டி | 23.96 |
| 51 | வேலூர் | அதோப | தகரக்குப்பம் | 34.40 |
| 52 | வேலூர் | அதோப | கூடப்பட்டு | 10.40 |
| 53 | வேலூர் | அதோப | நல்லாக் | 84.45 |
| 54 | விருதுநகர் | அதோப | பூவானி | 9.57 |
| 55 | விருதுநகர் | மாபெரும் பழப்பண்ணை | ஸ்ரீவில்லிபுத்தூர் | 46.27 |
| | கூடுதல் | | | 2620.70 |

அதோப – அரசு தோட்டக்கலைப் பண்ணை

காவிஉமை – காய்கறிவிதை உற்பத்தி மையம்



2004 ஜூலை 29]

## அத்தியாயம் – 4

## வேளாண்மைப் பொறியியல்

### 1. முன்னுரை:–

பாசன நீர் மேம்பாடும், மண்வளப் பாதுகாப்பும் இரண்டாம் பசுமைப் புரட்சிக்குத் திறவுகோலாக அமைந்தவை. முறையான தொழில்நுட்பங்கள் மூலம் "நீர்வளப் பாதுகாப்பினை" உறுதி செய்வதே வேளாண்மைப் பொறியியல் துறையின் குறிக்கோளாகும். மழை நீர் சேகரிப்பு, துல்லிய மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் அடிப்படையில் பயிர் வளர்ப்பு, புவியியல் தகவல் தொழில்நுட்பங்கள் மூலம் கண்காணித்தல் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மழைத் துளியையும் சேமித்தல், குறைந்த நீரில் கூடுதல் சாகுபடி, வேளாண்மைக்குத் தேவையான பாசன நீரை உறுதி செய்தல் என்ற இலக்குகளை நெருங்கிட வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுகிறது.

தமிழ்நாட்டின் நிலம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் எனும் பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டுள்ளது. வேளாண் உற்பத்தியைத் தளராமல் தொடர்ந்து அதிகரிப்பதற்கான பங்களிப்பில் "நீர்வடிப்பகுதி மேலாண்மை" மற்றும் "பாசன நீர் மேலாண்மை" ஆகியன இத்துறையின் இரு முக்கியக் குறிக்கோள்கள் ஆகும். வேளாண்மைப் பொறியியல் துறை பல்வேறு மத்திய, மாநில மற்றும் வெளிநாட்டு உதவியுடன் இயங்கும் திட்டங்களை, பின்வரும் குறிக்கோளுடன் செயல்படுத்தி வருகிறது.

- நீர் வடிப்பகுதிகளில் முக்கியமாக மானாவாரி நிலங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் மண் அரிப்பைத் தடுத்தல், மண்ணில் ஈரப்பதத்தைக் காத்தல் மற்றும் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குதல்.
- நதிப் பள்ளத்தாக்குகளின் நீர்பிடிப்புப் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள், மற்றும் மலைப் பகுதிகள் / பழங்குடியினர் வாழும் பகுதிகளில் முறையான நில உபயோக முறைகளை ஊக்குவித்தும் மண் அரிப்பைத் தடுத்தும் மண்ணின் வளத்தை மேம்படுத்துதல்.
- பயன்பாட்டில் இல்லாத மற்றும் தரம் குன்றிய நிலங்களை நிலவியல் தகவல் முறை போன்ற உயர்ந்த தொழில்

நுட்பத்தைப் பயன்படுத்தி முறையான நிலப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்.

* பாசனப் பகுதிகளில் நீர் உபயோகத்தினை மேம்படுத்தியும், சமநீர்ப் பங்கீட்டினை உறுதி செய்தும் நீடித்த நிலையான நீர் நிர்வாகத்திற்கு விவசாய அமைப்புகளை உருவாக்குதல்.
* நிலத்தடி நீர்வளம் தொடர்ந்து நிலையாக உள்ள இடங்களில் நிலத்தடி நீரை வெளிக்கொண்டு வந்து புதிய பாசன வசதி உருவாக்கி நீர்ப்பாசனத்தை நிலைப்படுத்துதல்.
* நீர் உபயோகத் திறனை மேம்படுத்திடும் வகையில், சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் அமைத்தும் ஒருங்கிணைந்த பண்ணையம் முறையில் துல்லிய உயர் தொழில்நுட்ப பண்ணைய தொழில்நுட்பத்தை பரவச் செய்தல்.
* நிலம் சமன்படுத்துதல், நிலம் சீரமைத்தல், உழவுப் பணிகள், நிலம் பண்படுத்தல், சேற்றுழவு, கதிர் அறுவடை போன்ற பல்வேறு வேளாண்மைச் சாகுபடிப் பணிகளை குறித்த காலத்தில் மேற்கொள்ள பண்ணைகளுக்கு விசைத்தன்மை வழங்குதல்.
* தற்பொழுது செயல்பட்டு வரும் மின் இறவைகளின் மின் திறனை அதிகப்படுத்தி, சாகுபடிச் செலவினத்தைக் குறைப்பதிலும் மின்சக்தி வீணாவதைத் தடுத்தல்.
* மழைநீர் சேகரிப்பை ஊக்குவித்து நிலத்தடி நீர்வளம் பெருகிட உதவுதல்.

## 2. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

### 2.1 பண்ணைக்குட்டைகள் அமைத்தல் மற்றும் வறண்ட கிணறுகளைச் சீரமைத்து புத்துயிர் ஊட்டுதல் போன்ற மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் மூலம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

#### 2.1.1 மழைநீர் சேகரிப்பு

அண்மைக் காலமாக, கிணற்றுப் பாசனம் மூலம் பயன்பெறும் பரப்பு அதிகமாகி வருகிறது. இந்த மாநிலத்தில் பல பகுதிகளில் நிலத்தடி நீரை மிக அதிகமாகப் பயன்படுத்துவதால், நிலத்தடி நீர் மட்டம் இறவை





இயந்திரங்களின் இழுவைச் சக்திக்கும் மிகவும் கீழே குறைந்துகொண்டே வருகிறது. சில பகுதிகளில் 1,000 அடிக்கும் கீழே குழாய்க் கிணறு அமைப்பதால், நிலத்தடி நீர் எடுப்பது சுரங்கம் அமைப்பது போல் உள்ளது. கிணற்றுப் பாசனப் பகுதிகளில் நிலத்தடி நீர் சுரண்டப்படுவதால், சிறப்பான மழைநீர் சேகரிப்பதற்கும் மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கும் நுட்பங்கள் தேவைப்படுகின்றன.

மழைநீர் சேகரிப்புப் பணிகளை ஊக்குவிப்பதன் மூலம் இந்த அரசு வறட்சிக்கு இலக்காகும் வேளாண்மையைக் காப்பாற்றி வருகிறது. பண்ணைக்குட்டைகள் அமைத்தல், பொய்த்துப்போன, வறண்ட, பாழடைந்த கிணறுகளைச் சீரமைத்தல் ஆகிய பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 8,833 பண்ணைக் குட்டைகள் ரூ.2,561.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

2004-2005 ஆம் ஆண்டிலும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் / நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களில் மழைநீர் சேகரிப்புப் பணிகளுக்கு தொடர்ந்து முக்கியத்துவம் வழங்கப்படும்.

#### 2.1.2 வறண்ட, பழுதடைந்த உபயோகப்படுத்தப்படாத கிணறுகளை முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் சீரமைத்தல்

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களில் 50,000 வறண்ட, பயன்படுத்தப்படாத பாழடைந்த கிணறுகளை, வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் ரூ.100 கோடி செலவில் சீரமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் ரூ.10 கோடி செலவினத்தில் (ரூ.2.5 கோடி நிதி, ரூ.7.5 கோடி அரிசி) 5,000 உபயோகமற்ற, பயன்படுத்தப்படாத வறண்ட கிணறுகளை முதல் கட்டமாக சீரமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 1,50,000 கிணறுகளில் பணி மேற்கொள்ளப்படும். 2,093 கிணறுகள் ரூ.264.37 இலட்சம் செலவில் 2003-2004 ஆம் ஆண்டில் சீரமைக்கப்பட்டது.

#### 2.1.3 ஆழ உழும் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்:

ஆழ உழுவது மண்ணில் ஈரப்பதத்தை மேம்படுத்துவதுடன், மழைநீர் நீண்டநாட்களுக்கு தங்க வசதி செய்யும். இது மண்ணில் காற்றோட்டத்தை மேம்படுத்தி வேர்கள் சிறப்பாக இறங்க வழி செய்யும்.

எனவே ஆழ உழவு தொழில்நுட்பத்தை அதிக அளவில் செயல்முறை விளக்கங்கள் மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.2 பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு

பழங்குடி இனத்தைச் சேர்ந்த விவசாயிகளின் பொருளாதார நிலையை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவருவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். மண்வளப் பாதுகாப்பு மூலம் மண்ணின் ஈரத்தன்மையைப் பெருக்கி, நிலப்பயன்பாட்டைச் சீரமைத்து நில உற்பத்தித் திறனை பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வேலூர் மற்றும் திருவண்ணாமலையைச் சார்ந்த பல துறைகளை இணைத்து பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளை ஒருங்கிணைத்து முன்னேற்றம் காண ஐவ்வாது மலைப் பகுதிகளிலும், சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள கல்ராயன் மலைப் பகுதிகளிலும், சேலம் மாவட்டத்திலுள்ள சேர்வராயன் மலைப் பகுதிகளிலும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள சித்தேரி மலைப் பகுதிகளிலும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலைப் பகுதிகளிலும், திருச்சி மாவட்டப் பச்சை மலைப் பகுதிகளிலும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அரசின் செலவில் இப்பழங்குடியின மக்கள் பகுதிகளில் நிலச் சமன்பாடு, சமஉயர கல் வரப்புகள், தாவர வேலிகள் மற்றும் தடுப்பு அணைகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், சீரமைத்த நிலங்களில் விவசாயம் செய்யவும் வழி வகுக்கிறது. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.92.90 இலட்சம் செலவில் 715 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டில் 631 எக்டேர் நிலப்பரப்பில் இத்திட்டத்தின்கீழ் பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.3 நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு

நீர்த்தேக்கங்களில் வண்டல்படிவதால் அவற்றின் கொள்ளளவு குறைந்து பாசனப் பரப்பு, மின் உற்பத்தி போன்றவை பாதிக்கப்பட்டு, நீர்த்தேக்கங்களின் ஆயுட்காலம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் அரிமானம் மற்றும் முறையற்ற நிலப் பயன்பாடு ஆகியவற்றால், நீர்த் தேக்கங்களில் வண்டல் சேர்கிறது. நீர்த் தேக்கங்களில் வண்டல் சேர்வதைக் குறைத்திட வைகை மற்றும் தென்பெண்ணை ஆற்று நீர்ப்பிடிப்புக்கான பல பகுதிகளில் மண்வளப்



பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய மண் மற்றும் நிலப் பயன்பாட்டு அளவை நிறுவனம் கண்டறிந்து முன்னுரிமைப் படுத்திய நீர்வடிப் பகுதிகளில், பணிகள் ஒவ்வொரு நீர்வடிப் பகுதி வாரியாக மேற்கொள்ளப்படுகின்றன. மழை அளவு, மண்ணரிப்பு நிலை, மண்ணின் உட்கூறு, சரிவு, இடஅமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.644.19 இலட்சம் செலவில் தேனி மாவட்டத்திலுள்ள வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் தருமபுரி மாவட்டத்திலுள்ள தென்பெண்ணை ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் 3,812 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணை ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 6,480 எக்டேர் பரப்பில் ரூ.700.00 இலட்சம் செலவில் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.4 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில், மண்வளப் பாதுகாப்பு ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப் படுகின்றன. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.374.61 இலட்சம் செலவில் 2,121 எக்டேர் நிலப்பரப்பில் எட்டு மாவட்டங்களில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டில் எட்டு மாவட்டங்களில் 2,986 எக்டேர் பரப்பில் ரூ.374.36 இலட்சம் செலவில் பணிகளைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.5 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டம் 75 நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்வடிப் பகுதிகளில், மிகவும் முக்கியத்துவம் உள்ள நீர்வடிப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மண்வளப் பாதுகாப்புப் பணிகளுடன் நிலச்சரிவு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்புப் பணிகள் இன்று 100% மானியத்தில் செயல் படுத்தப்படுகின்றன. தனியார் நிலங்களில் செய்யப்படும் பணிகளுக்குப் பயனாளிகளின் பங்காக 10% பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளுக்கும்

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன உழவர்களின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு 5% பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. நிலச்சரிவு தடுப்புப் பணிகளுக்கு 100% மானியம் வழங்கப்படுகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.295.48 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.357.51 இலட்சம் செலவில் 605 எக்டேர் பரப்பில் இப்பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தற்பொழுது நிலச்சரிவு ஏற்படும் பகுதிகளில் சிமெண்ட் கலவை மூலம் தடுப்புக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது இயற்கைக்கு முரணான அணுகுமுறையாகும். இதை மாற்றி கயிறு தரை விரிப்பான் மற்றும் கயிறு வலைகள் ஆகியவற்றை அடித்து அதற்கு ஏற்ற தாவரங்களை வளர்த்து இயற்கையோடு ஒட்டி நிலச்சரிவுகளை தடுக்கும் அணுகுமுறை பின்பற்றப்படும்.

## 2.6 நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதிகளில் கடலோர மணல் மேடிட்ட நிலங்கள் மற்றும் உவர் நில சீரமைப்புக்கான முன்னோடித் திட்டம்:

நாகை மாவட்டத்தில் மணல் மேடிட்ட கடலோரப் பகுதிகளில் நிலத்தடியில் உவர் நீருக்கு மேலே நல்ல நீர் உள்ளது. வேதாரண்யம் கால்வாய் பகுதிகளில் கடல்நீர் புகுந்துள்ளது. நாகை மற்றும் வேதாரண்யம் கடலோரப் பகுதிகள் நல்ல இயற்கை வளம் கொண்டுள்ளது. இப்பகுதிகள் கடல்நீர் நிலத்தடி நீரில் புகுவதாலும், தட்ப வெட்ப நிலையாலும் பாதிக்கப்பட்டுள்ளன. அறிவியல் முறைப்படி, மணல் மேடிட்ட நிலங்களையும் கடலோர சமவெளிப் பகுதிகளையும் உவர் நிலம் மற்றும் சதுப்பு நிலங்களையும் மேம்படுத்திடுவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். வேளாண்மைச் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதன் மூலம் இப்பகுதி மக்களின் வாழ்வியல் ஆதாரத்தை மேம்படுத்திட வாய்ப்புகள் உள்ளன.

**திட்டத்தின் நோக்கம்:**

1. மணல் மேடிட்ட சாகுபடி நிலங்களை மேம்படுத்துதல்
2. உவர் நிலங்களை சீரமைத்தல்
3. வடிகால் பிரச்சினை உள்ள சதுப்பு நிலங்களில் நில நிர்வாகம்
4. காற்றரிப்பு மூலம் ஏற்படுகின்ற கடலோர மணல் மேடுகளின் ஆக்கிரமிப்பைத் தடுத்து விவசாயத்தைப் பெருக்க வழி வகைகள் செய்தல்



5. நல்ல நிலையில் உள்ள கடலோர நிலத்தடி நீரில் கடல் நீர் உட்புகாமல் பாதுகாத்து முறையாகப் பயன்படுத்துதல். இது மேல்மட்டத்திலுள்ள நிலத்தடி நீரை சேகரிக்க குறைந்த ஆழம் உள்ள கிணறுகள் அமைப்பதன் மூலமும், நுண்ணிய நீர்ப்பாசனம் அமைப்பதன் மூலமும் செய்யப்படும்.

விளைச்சலைப் பெருக்குவதற்காக மத்திய அரசு மற்றும் விவசாயிகளின் பங்கேற்புடன் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையுடன் மூன்று வருடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.1.20 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக 2,000 எக்டேர் பரப்பில் ரூ.43.76 இலட்சம் செலவில் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.47.014 இலட்சம் செலவில் பணிகள் தொடரப்படும்.

## 2.7 மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் களர் நிலச் சீராக்கத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள களர் நிலங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்க, மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் களர் நிலச் சீராக்கத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளுக்கு 5,000 எக்டேர் நிலப் பரப்பில் ரூ.690 இலட்சத்திற்கு மிகாமல் செயலாக்க அனுமதி வழங்கியுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் 929.24 எக்டேர் களர் நிலங்கள் ரூ.19.28 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் 1,527 எக்டேர் களர் நிலம் ரூ.50 இலட்சம் செலவில் சீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# 3 தொலை உணர்வு

## 3.1 வேளாண் பொறியியல் துறையில் தொலை உணர்வு மற்றும் நிலவியல் தகவல் அமைப்பு:–

நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் வேளாண் பொறியியல் துறையின் தொலை உணர்வு மையம் வழங்கி வருகிறது. நீர்வடிப் பகுதியிலுள்ள புவியியல், உள்கட்டமைப்பு, நீர்வடிப் பகுதிக் குறியீடுகள், மண் அரிமானம், நிலப் பயன்பாடு போன்ற தகவல்களின் அடிப்படையில், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில்

தகுதி நிலை அறிக்கைகள் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தகுதி நிலை அறிக்கைகள் வழங்கும் முன்னுரிமை அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள நீர்வடிப் பகுதிகள் தேர்வு செய்யப்படுகின்றன. அண்ணா பல்கலைக்கழகத்தினால் இம்மையம் ஆராய்ச்சி மையமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. முனைவர் பட்டம் மற்றும் மூதறிவியல் பட்டப்படிப்பினை துறைப் பணியாளர்கள் புறப்பதிவு அடிப்படையில் இம்மையத்தின் மூலமாக மேற்கொள்ளலாம். அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பணிகளையும் இம்மையம் வழிகாட்டிடலாம்.

மாநில நிலப் பயன்பாட்டுக் குழுமம் எல்லா மாவட்டங்களின் நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு மற்றும் மண்ணின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கும் பணியை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வழங்கியுள்ளது. இவ்வரைபடங்கள் மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

சேலம் மற்றும் தேனி மாவட்டங்களில் பண்டைய தமிழ் மரபு அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை போன்ற நிலப்பிரிவுகளின் அடிப்படையில் தொலை உணர்வு மற்றும் நிலவியல் தொடர்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.2 தேனி மாவட்டத்தில் நிலவியல் தகவல் மையம்

தேனி மாவட்டத்தில் நிலவியல் தகவல் அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது நீர்வடிப்பகுதியிலுள்ள அனைத்து நிலவளங்களைப் பற்றிய விவரங்களைத் தயாரிக்கவும், சிறு நீர்வடிப் பகுதிகளில் செய்யப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் பற்றிய விவரங்களைச் சேர்க்கவும் நிலவியல் தகவலமைப்பு மென்பொருள் பயன்படுகிறது.

நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மானாவாரி பகுதிக்கான தேசிய நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய நீர்வடிப்பகுதித் திட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் இத்துறையில் செயல்படுத்தப்படுகின்றன. நீர்வடிப் பகுதிகளைப் பற்றிய பல்வேறு தகவல்களை 1:10,000 அளவில், நிலவியல் தகவல் அமைப்பு ரீதியாக உருவாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நுண் நீர்வடிப் பகுதிக்கும் அடிப்படை அளவிலான நில வரம்புகள், புல எண், நில



உபயோகம், மண் வகை, பயிர் வகை விவரங்கள் வரைபடங்களாக தொகுக்கப்பட உள்ளன. நுண் நீர்வடிப்பகுதி அளவில் மண் அரிப்பு மற்றும் மழைநீர் வெளியேற்றம் தொகுக்கப்பட்டு மண்வளப் பாதுகாப்புப் பணிகள் வடிவமைக்கப்படும்.

### 4. நுண்ணிய நீர்ப்பாசனம்:

தமிழ்நாட்டில், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் ஆகிய நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் வேளாண்மைப் பொறியியல் துறையினால் 1985–1986 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 51.70 விழுக்காட்டுப் பாசன நிலங்கள் ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம் மற்றும் கிணற்றுப் பாசனம் மூலம் பயன்பெறுகின்றன. கிணற்றுப் பாசனத்தின் நெருக்கடியைக் குறைக்கவும். பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் நுண்ணிய நீர்ப்பாசன முறைகளான சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனங்களுக்கு 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் அனைத்து விவசாயிகளுக்கும் அனைத்துப் பயிர்களுக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள சொட்டு நீர்ப்பாசனம் (உரமிடல் மற்றும் களைக்கொல்லி) முறைகள் இத்திட்டத்தின் மூலமாகச் செயல்படுத்தப்படும்.

2003–2004 ஆம் ஆண்டில் விவசாய நிலங்களில் 21,237 எக்டேர் பரப்பில் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டு ரூ.12.10 கோடி மானியமாக வழங்கப்பட்டது.

2004–2005 ஆம் ஆண்டிற்கான நிதி மதிப்பீட்டில் ரூ.57 கோடி நுண்ணிய நீர்ப்பாசனத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்

பயிரிடப்படாத நிலங்களைச் சீரமைத்து உழவு செய்தல், பண்படுத்தல், கோடைஉழவு மற்றும் கதிர் அறுவடை செய்தல் போன்ற இயந்திர சாகுபடிப் பணிகளை மேற்கொள்வதில் வேளாண்மைப் பொறியியல் துறை விவசாயிகளுக்கு உதவி வருகிறது. பயிரிடப்படாத நிலங்களைச் சீரமைத்து விளைநிலங்களாக மாற்றிட இத்துறையில் 109 மண் தள்ளும் இயந்திரங்கள், மேலும் உழவு செய்தல் மற்றும் அது தொடர்பான பணிகளைச் செய்திட 122 உழுவைகள், நான்கு நவீன அறுவடை இயந்திரங்களும் உள்ளன.

வேளாண்மையில் இயந்திரங்களைப் புகுத்துவதன் மூலம்

- கூடுதலாக பண்ணைச் சக்தியை வழங்கிடவும்
- வேளாண் பணியாளர்களின் வேலைப் பளுவைக் குறைக்கவும்
- வேளாண் பணிகளை உரிய காலத்தில் முடித்திடவும்
- வேளாண் உற்பத்தியை பெருக்கிடவும் முடியும்.

வேளாண் உற்பத்தியைப் பெருக்க கீழ்க்கண்ட உத்திகள் பின்பற்றப்படும்.

1. உழவர்களுக்கு உழுவைகள், விசை உழுவைகள், கதிரடிக்கும் இயந்திரங்கள், நாற்று நடும் கருவிகள் மற்றும் தானியங்கிக் கதிரறுப்பான்கள் வழங்குதல்
2. வேளாண் மண்டலங்கள் முழுவதும் மேம்படுத்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பண்ணைக் கருவிகளைச் செயல்முறை மூலம் விளக்குதல்
3. உழவர்களுக்கு மண் தள்ளும் இயந்திரம், உழுவை மற்றும் கதிரடிக்கும் கருவிகளை வாடகை மூலம் வழங்குதல்

2003–2004 ஆம் ஆண்டில் 609 விசை உழுவைகள், 105 உழுவைகள், 11 கதிரடிக்கும் கருவிகள், 2 தானியங்கி நாற்று நடும் கருவிகள் மற்றும் 1 தானியங்கிக் கதிரறுப்பானும் ரூ.192.35 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டிலும் இப்பணி ரூ.150 இலட்சம் மான்யத்தில் தொடர திட்டமிடப்பட்டுள்ளது. உளிக்கலப்பை, உழவு இல்லா விதைக் கருவி, ரோட்டவேட்டர், தானியங்கி அறுவடைக் கருவி, தானியங்கி நெல் நாற்று நடும் கருவி, மணிலா அறுவடை இயந்திரம் போன்ற பண்ணை நூதனக் கருவிகள் மானியத்தில் வழங்கப்படும். இதனால் புதிய பயிர்செய்யும் முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

### 5.1. செயற்கை மழை:

டெல்டா மாவட்டங்களில் குடிநீர் வசதியை மேம்படுத்தவும், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களைக் காத்திடவும், பெய்யும் மழை அளவை அதிகரிக்க செயற்கை மழை (Cloud seeding) உண்டாக்க அரசு முயற்சி எடுத்துள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக மொத்தம் ரூ.2.00 இலட்சம் செலவில் செயற்கை மழைக் கருவிகள் 20 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உள்ள கருவிகள் மூலம் ஈரப்பதம் நிறைந்த சூல்கொண்ட கருமேகங்களைச் செயற்கை



மழை முறையில் வெள்ளி அயோடைடு பயன்படுத்தி மழை பொழிவிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இந்தச் சிக்கனமான செயற்கை மழை முறை நன்முறையில் வெற்றி பெற்று டெல்டா மாவட்டங்களில் பெரும் மழையைத் தருவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 6. நீர்வள மேம்பாடு

### 6.1 குழாய்க் கிணறுத் திட்டம்

நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல், தற்போதுள்ள பாசனப் பரப்பை நிலைப்படுத்துதல் மற்றும் நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து நிலப்பரப்பு நீரையும் இணைத்து பாசனத்திற்கு உபயோகிக்க தூண்டுதல் போன்றவை சிறுபாசனத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டின் பாசன நீர் ஆதாரங்கள் முழுவதும் பயன்படுத்தப்பட்ட நிலையில் பாசனத்திற்கு நிலத்தடி நீரையே சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தல், வறண்டு போன கிணறுகளை புணரமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் நில நீர் ஆய்வுக் கருவி மற்றும் மின்னியல் ஆய்வுக் கருவி ஆகியன உழவர்களுக்கு, நீர் ஊற்று இருக்குமிடம், கிணறு அமைக்கும் இடம் முதலியன கண்டறிய வழங்கப்படுகின்றன. விசைத்துளைக் கருவி, சிறு விசைத்துளைக் கருவி, கைத்துளைக் கருவி, பாறை வெடிக் கருவி, நீள்துளைக் கருவி மற்றும் காற்றமுத்தக் கருவி போன்ற இயந்திரங்கள், விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. இப்பணிகளுக்காக இத்துறையிடம் பல்வகையான சிறுபாசன இயந்திரங்கள் உள்ளன. 2003–2004 ஆம் ஆண்டில் 4,976 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் நிலத்தடி நீர் வளம் உள்ள இடங்களில் இத்திட்டம் தொடரப்பட்டு 4,000 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

### 6.2 பாசன நீர் மேலாண்மை – பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மைய மாநில அரசுகள் பகிர்ந்து செயல்படுத்தும் திட்டம்)

#### 6.2.1 பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசின் நிதியுதவியுடன் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் சமப் பங்கீடு அடிப்படையில் (50:50) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் காவிரிப் பாசனப் பகுதி, பரம்பிக்குளம் ஆழியார்

திட்டம், தாமிரபரணி நீர்தேக்கத் திட்டம், பாலாறு–பொரந்தலாறு திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் தொப்பையாறு திட்டம் முதலிய பகுதிகளில் செயலாக்கப்படுகின்றன. கீழ்பவானித் திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம், பெரியார் வைகைத் திட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம், அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் கோதையார் சித்தார் பட்டணங்கால் திட்டம் முதலியன முடிவடைந்துள்ளன. மீதமுள்ள திட்டங்கள், மத்திய அரசு ஒப்பளித்துள்ள கால அளவிற்குள் முடிவடையும்.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ்க்காணும் உட்கூறுகள் (Components) உள்ளன:

- பண்ணை மேம்பாட்டுத் திட்டம்
- சுழற்சி முறை நீர்ப்பாசனம்
- விவசாயிகள் பங்கேற்புடன் பாசன மேலாண்மை

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புல வடிகால்கள், நீர் தேங்கும் நிலங்கள், களர் உவர் நிலங்கள் சீரமைக்கப்படுகின்றன.

மதகு (Sluice)-க்குக்கீழ் பாசனம் பெறும் நிலங்களுக்குப் பாசன நீர் மேலாண்மைக் கொள்கையை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது. வேளாண் உற்பத்தியில் மதகுக்குக்கீழ் பாசனம் பெறும் விவசாயிகளின் பட்டா நிலங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே பயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்க, உகந்த நீர் அளவைப் பயன்படுத்தும் நீர் மேலாண்மையைச் செயல்படுத்துவது அவசியமாகிறது.

### 6.2.1.1 பண்ணை மேம்பாட்டுத் திட்டம்

தலை மடை விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்வதோடு அவர்களின் குறுக்கீடு இல்லாமல் கடைமடை விவசாயிகளுக்குப் பாசன நீர் வழங்கவும் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. ஒவ்வொரு மதகின் மூலம் பாசனம் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் இதன்மூலம் பாசன நீர் சமமாகப் பங்கிட்டு அளிக்கப்படுகிறது. உகந்த நீர் வழங்கும் கோட்பாட்டின் மூலம் நீர் பங்கீடு செயலாக்கப்படுகிறது. காவிரிப் பாசனப் பகுதி உள்ளிட்ட அனைத்துப் பாசனப் பகுதிகளிலும் ஒரு எக்டேருக்கு ரூ.6,000 வீதம் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. காவிரிப் பாசனப் பகுதியின் பழைய அணைக்கட்டுப் பகுதியில் எக்டேருக்கு ரூ.2,650 வீதம் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்படுகின்றன.



வேளாண்மைப் பொறியியல் துறை பண்ணை மேம்பாட்டுப் பணியில் கீழ்க் குறித்தவாறு கட்டுமான வசதிகளை மேற்கொள்கிறது:

| கட்டுமான வசதிகள் | பயன்கள் |
|---|---|
| கட்டட வாய்க்கால்கள் அமைத்தல் | நீர் ஓட்ட நேரத்தைக் குறைத்தல், வீணாக நிலத்துக்குள் நீர் ஊடுருவலைத் தடுத்தல் |
| புதிய பண்ணை வாய்க்கால்கள் | ஒவ்வொரு வயலுக்கும் நீரைக் கொண்டு செல்ல வழி வகுத்தல் |
| பிரிவுத் தொட்டிகள் மற்றும் பகிர்மானத் தொட்டிகள் | தேவைக்கேற்ப நீரைப் பிரித்து பகிர்ந்து அளித்து நீர்ப்பயன்பாட்டை எளிதாக்குதல். |
| சரிவுக் கட்டுமானங்கள் | இரு வயல்களுக்கிடையே 0.30 மீட்டருக்கு மேல் மட்டம் கூடும்போது, நீரோட்டத்தினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுத்தல், வாய்க்கால்களில் நீர் தேங்குவதைத் தடுத்தல். |
| படுகை அணை கட்டுதல் (Bed dams) | உயர்மட்டத்தில் உள்ள நிலங்களுக்கு, தடுப்பு மூடிகளைப் (Shutter) பயன்படுத்தி நீரை உயர்த்திப் பாசன வசதி செய்தல். |

10.97 இலட்சம் எக்டேர் பரப்பில் உள்ள பாசனப் பகுதிகளில், 31.03.2004 வரை, 12 பாசனப் பகுதித் திட்டங்களில் ஏறத்தாழ 9.87 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 6.2.1.2 சுழற்சிமுறை நீர்ப்பாசனம்

சுழற்சிமுறை நீர்ப்பாசனம் அல்லது வாரபந்தி என்பது குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட நேரத்தில், விவசாயிகளின் நிலப்பரப்பிற்கு ஏற்ப நீரைப் பகிர்ந்து பாசனம் செய்வது ஆகும். இந்தச் சுழற்சிமுறைப் பாசனத்திற்கான கால அட்டவணை வேளாண் பொறியியல் துறை மூலம் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்று, விவசாயிகளிடம் ஒப்படைப்பு செய்தபின் தயாரித்து அளிக்கப்படுகிறது. 1984–1985 ஆம் ஆண்டில், கீழ்பவானித் திட்டம், காவிரிப் பாசனப் பகுதித் திட்டம் மற்றும் பெரியாறு–வைகை பாசனத் திட்டம் ஆகிய பகுதிகளில் முதன்முதலாக நீர் சுழற்சிமுறைப் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது.

[2004 ஜூலை 29

தமிழகத்தில் 31.3.2004 வரை ஒன்பது பாசனப் பகுதித் திட்டங்களின் மூலம் 8.92 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில், சுழற்சிமுறை நீர்ப்பாசனம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் 34,150 எக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுத் திட்டப் பணிகளும் 78,150 எக்டேர் பரப்பில் சுழற்சிமுறை நீர்ப்பாசனத் திட்டப் பணிகளும் ரூ.5,077.87 இலட்சம் செலவில் நிறைவேற்றிட திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.2.1.3 விவசாயிகள் பங்கேற்புடன் பாசன மேலாண்மை

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயலாக்குவதற்கு விவசாயிகளின் பங்கேற்பு முக்கியமானது. பயிர்களின் தேவைக்கேற்ப, சரியான அளவு நீர், பகிர்ந்தளிக்கப்பட விவசாயிகள் பங்கேற்பு அவசியம். இப்பணியில் கடந்த 20 ஆண்டுகளாக வேளாண் பொறியியல் துறை மிகவும் தீவிரமாக இயங்கி வருகிறது. இதன்மூலம் துறையிடமிருந்து விவசாயச் சங்கங்களிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும் பணி தற்பொழுது செயலாக்கப்படுகிறது. விவசாயிகளின் ஒருமித்த செயல்பாட்டினை நெறிப்படுத்த மூன்று அடுக்கு சங்கம் அமைக்கும் முறை நடைமுறையில் உள்ளது.

விவசாயிகள் சங்கம் – மதகு அளவில்

விவசாயிகள் குழு (Council) – பிரிவுக் கால்வாய் அளவில்

விவசாயிகள் பேரவை (Federation) – திட்ட அளவில்

### 6.2.1.4 விவசாயக் குழுக்களுக்கான மேலாண்மை மானியம்/ விவசாயக் குழுக்களுக்கு நிதியுதவி

அமைக்கப்பட்ட விவசாயச் சங்கங்கள்/குழுக்கள் நீண்ட காலம் நிலைபெற்றிருப்பதற்காகவும், சமமான நீர்ப்பங்கீட்டிற்கான சுழற்சிமுறைப் பாசனத் திட்டத்தைத் தொடர்வதற்காகவும் பதிவு செய்யப்பட்ட விவசாயக் குழுக்களுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.450.00 என்ற அளவில் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இச்செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் சமமாக ஏற்கின்றன. விவசாயிகளும் எக்டேருக்கு ரூ.50 வீதம் தங்கள் பங்காகக் கொடுக்க வேண்டும்.

இதுவரை பதிவு செய்யப்பட்ட 632 விவசாயிகள் குழுக்களில் (Farmers' Councils) 597 விவசாயிகள் குழுக்களுக்கு மார்ச் 2004 வரை



2004 ஜூலை 29]

மேலாண்மை மானியமாக ரூ.1,478.95 இலட்சம் உருவாக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் பராமரிப்புக்காக வழங்கப்பட்டுள்ளன.

### 6.2.2 உலக வங்கி உதவியுடன் இயங்கும் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் அனுமா நதி வடிநிலப் பகுதியில் பாசன மேலாண்மை முனைப்புத் திட்டம்

பாசன மேலாண்மை முனைப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உலக வங்கி நிதியுடன் செயற்படுத்த நீர் ஆதார ஒருங்கிணைப்புத் திட்ட உரிமைக் குழு ஏற்பளித்துள்ளது. இது அனுமா நதி வடிநிலத்திற்குரிய ஒருங்கிணைந்த புதிய அணுகுமுறையாகும். ரூ.1.50 கோடி செலவில் இத்திட்டத்தை 149 எக்டேர் பரப்பில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த முன்னோடித் திட்டம் உயர் வேளாண்மைத் தொழில்நுட்பங்களும், நீரைச் சேமிப்பதற்கான தொழில் நுட்பங்களும், உயர் தொழில்நுட்ப பண்ணைய முறைகளும், ஒவ்வொரு பண்ணை அளவிலும் உற்பத்தித் திறன் பெருக்கவும் மற்றும் உற்பத்தித் தரம் மேம்படுவதற்கும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் இத்திட்டத்தின் மூலம் செயல் விளக்கம் செய்யப்படவுள்ளன.

### 6.2.2.1. திருநெல்வேலி மாவட்டத்தின் அனுமா நதி வடிநிலப் பகுதி முன்மாதிரி மறுசீரமைப்புத் திட்டம்

பாசன மேலாண்மை செறிவூட்டும் திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில் அனுமா நதி துணை வடிநிலப் பாசனப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நவீன வேளாண்மைத் தொழில்நுட்பங்களைச் செயல் விளக்கம் மூலம் கற்பிக்கவும், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும் ரூ.2.255 இலட்சம் மதிப்பீட்டில் இந்நிதியாண்டில் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அனுமா நதி துணை வடிநிலப் பாசனப் பகுதி 3,382.64 எக்டேர் பாசனப் பரப்பு கொண்டது. இது 50 ஏரிகளுடன் 14 அணைக்கட்டுகளைக் கொண்டது. இதனில் 3,000 எக்டேர் பரப்பளவில் நவீன வேளாண் மறு சீரமைப்பு முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்தத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

## 7. வேளாண்மைக்குப் பயன்படும் விசை இறைப்பான்களின் திறனை மேம்படுத்தும் திட்டம்

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் விசை இறைப்பான்கள் பழமையானவையாக இருப்பதாலும், தேவைக்கு அதிகமான சக்திவாய்ந்த

பம்புகள் பயன்படுத்தப்படுவதாலும், மின் சக்திப் பயன்பாட்டுத் திறன் மிகக் குறைவாக உள்ளது. இதனால் இவ்விசை இறைப்பான்கள் குதிரை சக்திக்குக் குறைவான தண்ணீரையே வெளிக்கொண்டு வருகின்றன. இதல்லாமல், மின்சாரத் தொடர்புகள், சுவிட்சுகள், இதர சாதனங்கள் முறைப்படி அமைக்கப்படாததாலும் மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மின்சாரப் பயன்பாட்டுத் திறனை உயர்த்திடும் வகையில்:

1. பழைய விசை இறைப்பான்கள் செட்டுகளுக்குப் பதிலாக இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தால் தரம் உறுதியிடப்பட்ட புதிய தொழில்நுட்பமுள்ள விசை இறைப்பான்களை அமைத்தல்.

2. உரிய மின்சாரத் தொடர்புகள், சாதனங்கள், நில மின் கம்பி அமைத்தல்.

3. கிணற்றைச் சுற்றி நீர் சேகரிப்பு மேற்கொண்டு நிலத்தடி நீர் வளத்தை அதிகரித்தல்.

4. சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து, நீர்த் தேவையைக் குறைத்து, மின்சாரப் பயன்பாட்டைக் குறைத்திடுதல்.

5. நிலத்தடி நீர்ப் பயன்பாட்டை 40 விழுக்காடு குறைத்திடுதல்.

6. உர நிர்வாகம் மற்றும் களைக் கொல்லி நிர்வாகத்தைச் சொட்டு நீர்ப்பாசனத்துடன் இணைத்து விவசாயிகள் கூடுதல் வருவாயை எட்டச் செய்தல்.

7. ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம், திருத்திய பயிர் சாகுபடி முறைகளைக் கையாண்டு மின்சாரச் செலவு, நீர்ப் பயன்பாடு, உரம் மற்றும் களைக் கொல்லிப் பயன்பாட்டைக் குறைத்து இலாபத்தை அதிகரித்தல்

மேற்கண்ட வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் நிலத்தடி நீர்வளம் குன்றிய கருப்பு மற்றும் சாம்பல் வட்டாரங்களில் விசை இறைப்பான்களின் திறனை மேம்படுத்தும் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது.



இப்பணிகளின் முன்னோடித் திட்டமாக 2003–2004 ஆம் ஆண்டில் தேனி, கோயம்புத்தூர், விழுப்புரம் மாவட்டங்களில் 3 மின்பிரிவுகள் பகுதிகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டு இதுவரை 34 விசை இறைப்பான்களின் உபயோகிக்கும் திறன் ரூ.11.12 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் 10,000 விசை இறைப்பான்களின் திறனை ரூ.61 கோடி செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 29

# அத்தியாயம் 5

## விரிவான தரிசு நிலத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட கூட்டத்தொடரில் 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை 5 ஆண்டு காலத்தில் உபயோகத்தின் கீழ்க்கொண்டு வருவதற்காகத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு மிகப் பெரிய திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டம் இரண்டு அங்கங்களைக் கொண்டது.

i. மக்கள் பங்கேற்புடன் நீர்வடிப் பகுதியை மேம்படுத்துதல்.

ii. கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக் குழுக்களின் இணையங்கள் போன்றவற்றின் மூலம் அரசின் தரிசு நிலங்களை மேம்படுத்துதல்.

### மக்கள் பங்கேற்புடன்கூடிய நீர்வடிப் பகுதி மேம்பாடு

இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டு முதல், விவசாயிகளின் பட்டா நிலங்களில் நுண் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான அரசு மானிய ஒதுக்கீடு ஒரு எக்டேருக்கு ரூ.8,500/- ஆகும். 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் தமிழகத்தின் 10 மாவட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டமாக 55,000 எக்டேர் இலக்குடன் ரூ.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. அந்த நிதியாண்டில் 21,771 எக்டேர் நிலப்பரப்பில் 23,66,074 கன்றுகள் நடப்பட்டன. அதில் 15,39,267 வேளாண் காடுகள் தொடர்பான கன்றுகளும், 8,26,807 பழக்கன்றுகளும் அடக்கம். மாவட்டவாரியான விவரங்கள் இணைப்பு-1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த 10 முன்னோடி மாவட்டங்களுடன் மேலும் 13 மாவட்டங்களுக்கு (தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, மதுரை, கோவை, ஈரோடு, கரூர், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், திருவள்ளூர், தருமபுரி, காஞ்சிபுரம்) இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டில் 50,000 எக்டேர் நிலப்பரப்பில் தொடர்ந்து விரிவாக்கப்பட்டது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.25 கோடியாகும்.



2004 ஜூலை 29]

*2003-2004 ஆம் ஆண்டில் 31-3-2004 முடிய 23,600 எக்டேர் நிலப்பரப்பில் 10 முன்னோடி மாவட்டங்களில் 25,00,067 மரக்கன்றுகள் நடப்பட்டன. (6,87,013 வேளாண் காடுகள் தொடர்பான கன்றுகள்; 18,13,054 பழக்கன்றுகள்) மாவட்ட வாரியான விவரங்கள் இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.*

*புதிய 13 மாவட்டங்களில் தொடக்கப் பணிகளாக மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு, கிராம அளவில் கிராம முன்னேற்ற சங்கங்கள் அமைக்கும் பணிகள் முடிவுபெற்றுள்ளன. தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் மக்கள் பங்கேற்புடன் கிராமத்தின் வளங்கள் மற்றும் தரிசு நிலங்கள் கண்டறியும் பணி முடிக்கப்பட்டு, நுழைவுப் பணிகள், விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்யும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

*2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி 60,000 எக்டேர் நிலப்பரப்பில் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் இதற்கான நிதி முதலீடு ரூ.50 கோடியாகும்.*

*2004-2005 ஆண்டிற்கு மாவட்டவாரியான இலக்கு (எக்டேர்)*

| வ. எண் | மாவட்டம் | மரக்கன்றுகள் பரப்பு | தீவனப்பயிர்கள் பரப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 2100 | 400 | 2500 |
| 2 | புதுக்கோட்டை | 2400 | 300 | 2700 |
| 3 | திண்டுக்கல் | 2100 | 300 | 2400 |
| 4 | வேலூர் | 2400 | 200 | 2600 |
| 5 | திருவண்ணாமலை | 2100 | 200 | 2300 |
| 6 | சேலம் | 2400 | 400 | 2800 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 3000 | 200 | 3200 |
| 8 | தேனி | 2400 | 20 | 2420 |
| 9 | இராமநாதபுரம் | 2400 | 10 | 2410 |
| 10 | நாமக்கல் | 1800 | 400 | 2200 |
| 11 | தூத்துக்குடி | 2100 | 200 | 2300 |

[2004 ஜூலை 29

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | விருதுநகர் | 3000 | 50 | 3050 |
| 13 | சிவகங்கை | 2100 | 100 | 2200 |
| 14 | மதுரை | 2400 | 20 | 2420 |
| 15 | கோயம்புத்தூர் | 2100 | 50 | 2150 |
| 16 | ஈரோடு | 3000 | 210 | 3210 |
| 17 | கரூர் | 3000 | 500 | 3500 |
| 18 | பெரம்பலூர் | 2100 | 600 | 2700 |
| 19 | விழுப்புரம் | 2400 | 200 | 2600 |
| 20 | கடலூர் | 2400 | 50 | 2450 |
| 21 | திருவள்ளூர் | 2100 | 350 | 2450 |
| 22 | தருமபுரி | 2100 | 620 | 2720 |
| 23 | காஞ்சிபுரம் | 2100 | 620 | 2720 |
| | **மொத்தம்** | **54,000** | **6,000** | **60,000** |

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / திட்ட அலுவலர்கள் மற்றும் வேளாண் இணை இயக்குநர்கள் தொடர்புடைய தங்கள் மாவட்டத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டு முதல் தேவையான தோட்டப்பயிர் மற்றும் வேளாண் காடுகள் தொடர்பான மொத்த கன்றுகளில் 25 விழுக்காடளவிற்கு திறமையான, பட்டறிவு வாய்ந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் இணையங்கள் மூலமாகவும் அந்தந்த மாவட்டத்திலேயே தயாரித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்விதைக் கன்றுகள் உரிய தரத்துடனும் தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் இயக்குநர் மற்றும் வனத் துறையின் முதன்மை வனப் பாதுகாவலர் இறுதியிடும் உற்பத்தி விலைக்கு மிகாமலும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற அனுமதி, வேளாண் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு விதைப்பண்ணைகள், எண்ணெய் வித்துப் பண்ணைகள், தென்னை நாற்றங்கால் பண்ணைகள் மற்றும் பயறுப் பண்ணைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நன்முறையில் திட்டம் செயல்படுத்தப்படுவதோடு கீழ்க்கண்ட குறிக்கோள்களும் நிறைவேற வாய்ப்புள்ளது:-

1. உரிய நேரத்தில் பருவ மழை பெய்த உடனேயே விவசாயிகளுக்கு விதைக் கன்றுகள் வழங்கப்படுதல்
2. விதைக் கன்றுகளை எடுத்து வருவதற்கான போக்குவரத்துச் செலவினைப் பெருமளவில் மிச்சப்படுத்தலாம்
3. விவசாயிகளின் தேவைக்கேற்ற செடிவகைகளைக் கணக்கிட்டு அதற்கேற்றவாறு நாற்றங்கால்களை அமைத்து செடிகளை வழங்க இயலும்



2004 ஜூலை 29]

4. பட்டுப்போன செடிகளுக்குப் பதிலாக 10 சத நாற்றுகளை சுலபமாக கொடுப்பதற்கான வாய்ப்புகள்
5. பருவ மழை தவறியதால் நடவு செய்யாமல் உள்ள விதைக் கன்றுகளை அடுத்த பருவம் வரை பட்டுப்போகாமல் நன்முறையில் பராமரிக்கும் வாய்ப்பு
6. விவசாயிகளுக்குத் தேவையான உரிய வயதுடைய நாற்றுகளை வழங்குதல்
7. மேலும் தேவையான மாக்கன்றுகள், வரும் ஜூலை 2004-ல் மழைக்காலம் தொடங்கும்போது நடவு செய்யத் தயாராக இருக்கும் வகையில் உற்பத்தி செய்ய முன் நடவடிக்கை எடுக்கப்படுதல்

மேற்கண்ட 25% செடிகள் போக மீதியுள்ள 75% செடிகளை (தோட்டப்பயிர் மற்றும் வேளாண் காடுகள் தொடர்பான விதைக் கன்றுகள்) தோட்டக்கலை மற்றும் மலைத் தோட்டப்பயிர் துறை, வனத் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் டாப்கார்ன் திருச்சி ஆகிய நிறுவனங்கள் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாடு முகமைகள் மற்றும் வேளாண் இணை இயக்குநர்களே நேரடியாகக் கொள்முதல் செய்து கொள்ளலாம்.

## அரசின் தரிசு நிலங்களைக் கூட்டாண்மை நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடும் திட்டம்

இத்திட்டம் (சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர) தமிழகத்தின் பிற அனைத்து மாவட்டங்களிலும் 2002–2003 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுமங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் இணையங்கள் ஆகியவற்றுக்கு 30 வருடக் குத்தகைக்கு விடப்படுவதற்காக அரசின் தரிசு நிலங்கள் 8 எக்டேர் நிலப்பரப்புக்கு உட்பட்டது என்றும், 8 எக்டேர் மற்றும் அதற்கும் மிகையானது என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்ட நிலைக் குழு குத்தகை கோரும் இந்நிறுவனங்களின் விண்ணப்பங்களைப் பரிசீலித்து 8 எக்டேர் நிலப்பரப்புக்குட்பட்ட நிலங்களைத் தகுதியான நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடுகிறது. 8 எக்டேர் நிலப்பரப்புக்கு மிகையான நிலப்பரப்புகளைக் கோரும் விண்ணப்பங்கள் யாவும் மேற்கண்ட குழுவால்

[2004 ஜூலை 29

பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரின் தலைமையில் செயல்படும் மாநில அளவிலான உயர்மட்டக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்படும். உயர்மட்டக் குழு காலமுறையாகக் கூடி இவ்விண்ணப்பங்களையும், தொடர்பான நிறுவனங்களின் திட்ட விவரங்களையும் பரிசீலனை செய்து நிலங்களை ஒதுக்கீடு செய்யும்.

இதுகாறும், உயர்மட்டக் குழு சென்ற வருடத்தில் 5 முறை கூடி 1,054,055 எக்டேர் நிலப்பரப்பு அரசு நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்காக அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. விதிக் குறிப்பு உடன்பாடு அதாவது மாதிரிக் குத்தகை ஆவண நகல்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பப்பட்டு, நிறுவனங்களுடன் குத்தகை ஒப்பந்தம் செய்யும் பணி தற்போது முன்னேற்றத்தில் உள்ளது.

## இணைப்பு I

### உழவு, குழியெடுத்தல் மற்றும் செடி நடவுப் பணிகள் முன்னேற்ற அறிக்கை 2002–2003

| மாவட்டத் தின் பெயர் | இலக்கு (எக்டேரில்) | உழவுப் பணி (எக்டேரில்) | குழி எடுத்தல் (எண்கள்) | செடி நடவுசெய்தல் (எண்கள்) | | | நடவு செய்த பரப்பு (எக்டேர்) | | | சாதனை விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வேளாண் காடுகள் | தோட்டக்கலை | மொத்தம் | வேளாண் காடுகள் | தோட்டக்கலை | மொத்தம் | |
| வேலூர் | 6000 | 2480 | 144200 | 51400 | 88800 | 140200 | 514 | 888 | 1402 | 23.4 |
| தி.மலை | 7500 | 2166 | 404100 | 337200 | 66300 | 403500 | 3372 | 663 | 4035 | 53.8 |
| சேலம் | 7000 | 3250 | 332201 | 167791 | 137199 | 304990 | 1620 | 1442 | 3062 | 43.7 |
| நாமக்கல் | 5000 | 4438 | 317113 | 177725 | 71905 | 249630 | 1749 | 719 | 2468 | 49.4 |
| திண்டுக்கல் | 4500 | 3825 | 192815 | 24056 | 124454 | 148510 | 240 | 1245 | 1485 | 33.0 |
| தேனி | 3500 | 1575 | 109250 | 50300 | 38000 | 88300 | 503 | 380 | 883 | 25.2 |
| திருச்சி | 6500 | 3363 | 360987 | 275470 | 36250 | 311720 | 2096 | 362 | 2458 | 37.8 |
| புதுக்கோட்டை | 4500 | 1784 | 279026 | 176620 | 88406 | 265026 | 789 | 720 | 1509 | 33.5 |
| இராமநாதபுரம் | 2500 | 1528 | 182545 | 104195 | 43689 | 147884 | 1021 | 436 | 1457 | 58.3 |
| திருநெல்வேலி | 8000 | 2430 | 330920 | 174510 | 131804 | 306314 | 1692 | 1320 | 3012 | 37.7 |
| மொத்தம் | 55000 | 26839 | 2653157 | 1539267 | 826807 | 2366074 | 13596 | 8175 | 21771 | 39.6 |



2004 ஜூலை 29]

## இணைப்பு II

### உழவு, குழியெடுத்தல் மற்றும் செடி நடவுப் பணிகள் முன்னேற்ற அறிக்கை 2003–2004

*(31–03–2004 முடிய)*

| மாவட்டத் தின் பெயர் | இலக்கு (எக்டேரில்) | உழவுப் பணி (எக்டேரில்) | குழி எடுத்தல் (எண்கள்) | செடி நடவுசெய்தல் (எண்கள்) | | | நடவு செய்த பரப்பு (எக்டேரில்) | | | சாதனை விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வேளாண் காடுகள் | தோட்டக்கலை | மொத்தம் | வேளாண் காடுகள் | தோட்டக்கலை | மொத்தம் | |
| வேலூர் | 3516 | 2056 | 200800 | 20665 | 150315 | 170980 | 207 | 1503 | 1710 | 48.6 |
| தி.மலை | 3472 | 2554 | 271700 | 98225 | 165226 | 263451 | 982 | 1652 | 2634 | 75.9 |
| சேலம் | 3938 | 2943 | 294360 | 88616 | 175009 | 263625 | 886 | 1750 | 2636 | 66.9 |
| நாமக்கல் | 2747 | 697 | 192087 | 94200 | 144800 | 239000 | 942 | 1448 | 2390 | 87.0 |
| திண்டுக்கல் | 2489 | 1586 | 151400 | 20975 | 127718 | 148693 | 195 | 1177 | 1372 | 55.1 |
| தேனி | 2467 | 2220 | 235275 | 60390 | 129820 | 190210 | 604 | 1114 | 1718 | 69.6 |
| திருச்சி | 4024 | 3503 | 308700 | 129650 | 121094 | 250744 | 1297 | 1211 | 2508 | 62.3 |
| புதுக்கோட்டை | 3592 | 3900 | 392583 | 86912 | 312336 | 399248 | 869 | 2723 | 3592 | 100.0 |
| இராமநாதபுரம் | 2545 | 1974 | 226980 | 58560 | 168420 | 226980 | 585 | 1384 | 1969 | 77.4 |
| திருநெல்வேலி | 4439 | 4049 | 419560 | 28820 | 318316 | 347136 | 288 | 2783 | 3071 | 69.2 |
| மொத்தம் | 33229 | 25482 | 2693445 | 687013 | 1813054 | 2500067 | 6855 | 16745 | 23600 | 71.0 |

### வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (வஇபதி) ஒரு ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டமாகும். இத்திட்டம் 1972–1973 முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் முக்கிய நோக்கம் நீர்வடிப் பகுதிகளிலுள்ள இயற்கை வளங்களான நிலம், நீர் முதலியவைகளை சீரிய முறையில் பயன்படுத்தி வறட்சியின் சீற்றத்தைக் குறைப்பதுடன், நில வளம் மேலும் சீர் கெடாமல் தவிர்ப்பதுமாகும். மேலும், இத்திட்டம் வேளாண்மை சாரா பணிகளின் மூலமும் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவுகிறது. இத்திட்டம் நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் மக்களின் பங்கேற்போடு மத்திய அரசின் திருத்திய வழிகாட்டியின்படி 1995–1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நீர்வடிப் பகுதியும் தோராயமாக 500 ஹெக்டேர் நிலப்பரப்பைக் கொண்டது.

தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் 80 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டச் செலவினை 31-3-1999 வரை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தன. 1-4-1999 முதல் மைய அரசு மாநில அரசுகளின் பங்கு முறையே 75:25 என்ற விகிதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 1-4-2000 முதல், ஒரு ஹெக்டேருக்கான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுச் செலவு ரூ.6,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டச் செயலாக்க காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் அணி வாரியாக ஒப்பளிப்பு செய்யப்படுகின்றன. முதல் அணியில் 207 நீர்வடிப் பகுதிகள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு 1995 முதல் 2000 வரை ரூ.5,920.25 இலட்சங்கள் செலவில் 1,18,911 ஹெக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. (இரண்டு, மூன்று மற்றும் ஆறாவது அணிகளில் தமிழகத்திற்கென நீர்வடிப் பகுதிகள் திட்டம் எதுவும் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை).

ஒவ்வொரு அணியிலும், ஒப்பளிப்பு செய்யப்பட்ட நீர்வடிப் பகுதிகள், மொத்த நிதி ஒதுக்கீடு, மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்பட்ட நிதி மற்றும் செலவின தகவல்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

## வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| அணி மற்றும் திட்ட காலம் | நீர் வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு | | | நிதி வழங்கியது | | | ஏப்ரல் 2004 முடிய செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 4-ம் அணி (1998-99 முதல் 2002-03 வரை) | 103 | 1030.00 | 1030.00 | 2060.00 | 861.39 | 860.97 | 1722.36 | 1637.599 (95%) |
| இணைப்புகள் 419 2004 ஜூலை 29] | | | | | | | | |
| 5-ம் அணி (1999-2000 முதல் 2003-04 வரை) | 299 | 4485.00 | 1495.00 | 5980.00 | 3070.30 | 1023.64 | 4093.94 | 3775.821 (92%) |
| 7-ம் அணி (2001-02 முதல் 2005-06 வரை) | 61 | 1372.50 | 457.50 | 1830.00 | 431.25 | 143.87 | 575.12 | 507.011 (88%) |
| 8-ம் அணி (2002-03 முதல் 2006-07 வரை) | 144 | 3240.00 | 1080.00 | 4320.00 | 879.87 | 293.28 | 1173.15 | 977.421 (83%) |
| 9-ம் அணி (2003-04 முதல் 2007-08 வரை) | 160 | 3600.00 | 1200.00 | 4800.00 | 540.00 | 180.00 | 720.00 | 435.067 (60%) |
| மொத்தம் | 767 | 13727.50 | 5262.50 | 18990.00 | 5782.81 | 2501.76 | 8284.57 | 7332.919 (89%) |

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளின் திட்டத்திற்காக 2003–2004 ஆம் ஆண்டில் மைய அரசு ரூ.2,128 இலட்சங்களும், மாநில அரசு ரூ.881 இலட்சங்களும் விடுவித்துள்ளன.

## ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் 1993–1994 முதல் செயல்படுத்தப்படுகிறது. நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத வட்டாரங்களில் வனம் அல்லாத தரிசு நிலங்களை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு எக்டேருக்கான செலவினம் ரூ.4,000/- என இருந்தது. 1–1–2000 முதல் ரூ.6,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் நிலவள ஆதாரங்கள் துறையின் 100 சதவீத மானியத்தில் இத்திட்டம் 1-4-2000 முதல் 31–3–2000 வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. 1–4–2000 முதல் இத்திட்டத்திற்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் 11 : 1 (ஒரு எக்டேருக்கான செலவினத்தில் மத்திய அரசின் பங்கு ரூ.5,500/– மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.500/–) என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன.

மைய அரசு இத்திட்டத்தின்கீழ் 1993–1994 முதல் 2003–2004 வரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்த 41 ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதில்

[2004 ஜூலை 29

மூன்று திட்டங்கள் (1) புதுக்கோட்டை (2) கடலூர் மற்றும் (3) திருவண்ணாமலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. ஐந்து திட்டங்கள் (1) ஈரோடு–1, (2) சிவகங்கை–1, (3) வேலூர்–1 (4) கோயம்புத்தூர்–1 மற்றும் (5) திண்டுக்கல்–1 முடிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது செயலாக்கத்தில் இருக்கும் 33 திட்டங்களின் விவரங்கள் அட்டவணை–3–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், 2003–2004 ஆம் ஆண்டில் பின்வரும் 11 மாவட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள் ரூ.3,300 லட்சம் (மைய அரசு ரூ.3025 லட்சங்கள், மாநில அரசு ரூ.275 லட்சங்கள்) ஒதுக்கீட்டில் 5,50.50 ஹெக்டேர் பரப்பளவு 2003–2004 முதல் 2007–2008 வரையில் பயன் பெறும் வகையில் செயலாக்கத்திற்கு ஒப்பளிப்பு அளித்துள்ளது.

(1) கோயம்புத்தூர்
(2) தருமபுரி
(3) திண்டுக்கல்
(4) காஞ்சிபுரம்
(5) மதுரை (மேற்கு)
(6) இராமநாதபுரம்
(7) சேலம்
(8) தேனி
(9) திருவள்ளூர்
(10) திருவண்ணாமலை
(11) விழுப்புரம் (மேற்கு)



2004 ஜூலை 29]

## அட்டவணை 3

## ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் மற்றும் திட்டக் காலம் | திட்டப் பரப்பு | நிதி ஒதுக்கீடு | | | விடுவிக்கப்பட்ட நிதி | | | செலவு 30.4.04 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 1. | கோயம் புத்தூர் –2 1998–99 – 2002–03 | 9339 | 362.32 | -- | 362.32 | 286.17 | -- | 286.17 | 268.22 |
| 2 | சேலம்–1 1999–2000 – 2003–04 | 5000 | 200.00 | -- | 200.00 | 180.00 | -- | 180.00 | 145.13 |
| 3 | நாமக்கல்–1 1999–2000 – 2003–04 | 5105 | 204.20 | -- | 204.20 | 182.12 | -- | 182.12 | 178.10 |
| 4. | தேனி–1 1999–2000 – 2003–04 | 5156 | 206.94 | -- | 206.94 | 133.32 | -- | 133.32 | 123.70 |
| 5 | கரூர்–1 1999–2000 – 2003–04 | 11606 | 464.24 | -- | 464.24 | 416.29 | -- | 416.29 | 403.61 |
| 6. | கடலூர்–2 1999–2000 – 2003–04 | 5580 | 223.20 | -- | 223.20 | 221.46 | -- | 221.46 | 196.09 |
| 7 | விருதுநகர் 1999–2000 – 2003–04 | 5300 | 212.00 | -- | 212.00 | 136.97 | -- | 136.97 | 118.82 |
| 8. | இராமநாத புரம் 1999–2000 – 2003–04 | 5000 | 200.00 | -- | 200.00 | 131.44 | -- | 131.44 | 122.49 |
| 9. | திருநெல் வேலி 1999–2000 – 2003–04 | 12753 | 400.00 | -- | 400.00 | 260.00 | -- | 260.00 | 238.21 |
| 10. | மதுரை–1 2000–01 – 2004–05 | 5100 | 280.50 | 25.50 | 306.00 | 84.16 | 7.65 | 91.81 | 91.81 |
| 11. | பெரம்பலூர் 2000–01 – 2004–05 | 10000 | 550.00 | 50.00 | 600.00 | 82.50 | 7.50 | 90.00 | 65.25 |

| வ. எண் | மாவட்டம் மற்றும் திட்டக் காலம் | திட்டப் பரப்பு | நிதி ஒதுக்கீடு | | | விடுவிக்கப்பட்ட நிதி | | | செலவு 30.4.04 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 12 | தர்மபுரி-1 2000-01 - 2004-05 | 9500 | 522.50 | 47.50 | 570.00 | 235.14 | 21.39 | 256.53 | 233.03 |
| 13 | புதுக் கோட்டை-2 2000-01 - 2004-05 | 11685 | 642.67 | 58.43 | 701.10 | 289.20 | 17.54 | 306.74 | 244.41 |
| 14 | திருச்சி 2000-01 - 2004-05 | 12100 | 665.50 | 60.50 | 726.00 | 299.49 | 27.21 | 326.70 | 305.20 |
| 15 | ஈரோடு-2 2000-01 - 2004-05 | 5529 | 304.10 | 27.65 | 331.75 | 134.21 | 12.20 | 146.41 | 146.41 |
| 16 | திண்டுக் கல்-2 2000-01 - 2004-05 | 10045 | 552.48 | 50.22 | 602.70 | 330.42 | 30.04 | 360.46 | 357.29 |
| 17 | சிவகங்கை-2 2000-01 - 2004-05 | 10078 | 550.00 | 50.00 | 600.00 | 165.00 | 15.00 | 180.00 | 180.00 |
| 18 | தூத்துக்குடி 2000-01 - 2004-05 | 7500 | 412.50 | 37.50 | 450.00 | 123.75 | 11.24 | 134.99 | 120.08 |
| 19 | கரூர்-2 2001-02 - 2005-06 | 6016 | 330.89 | 30.07 | 360.96 | 148.89 | 13.46 | 162.35 | 96.05 |
| 20 | விழுப்புரம்-1 2001-02 - 2005-06 | 4668 | 257.00 | 23.00 | 280.00 | 76.00 | 6.91 | 82.91 | 73.41 |
| 21 | வேலூர்-2 2001-02 - 2005-06 | 6500 | 357.50 | 32.50 | 390.00 | 160.17 | 9.68 | 169.85 | 96.94 |
| 22 | நாமக்கல்-2 2001-02 - 2005-06 | 6159 | 338.74 | 30.80 | 369.54 | 101.48 | 9.23 | 110.71 | 92.12 |
| 23 | கோயம் புத்தூர்-3 2003-04 - 2007-08 | 5050 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 17.93 |



| வ. எண் | மாவட்டம் மற்றும் திட்டக் காலம் | திட்டப் பரப்பு | நிதி ஒதுக்கீடு | | | விடுவிக்கப்பட்ட நிதி | | | செலவு 30.4.04 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 24 | தருமபுரி-2 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 32.11 |
| 25 | திண்டுக்கல்-3 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 41.62 |
| 26 | காஞ்சிபுரம்-1 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | NA |
| 27 | மதுரை-2 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 41.00 |
| 28 | இராமநாதபுரம்2 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 27.50 |
| 29 | சேலம் -2 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 41.00 |
| 30 | தேனி-2 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 0.00 |
| 31 | திருவண்ணா மலை 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 37.56 |
| 32 | திருவள்ளூர் 2003-04- 07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 12.00 |
| 33 | விழுப்புரம்-2 2003-04-07-08 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | -- | 41.25 | NA |
| | மொத்தம் | 224769 | 11262.28 | 798.67 | 12060.95 | 4631.93 | 226.55 | 4858.45 | 4147.09 |

இந்திய அரசமைப்புச் சட்டம் 73-வது திருத்தத்திற்கிணங்க, மத்திய அரசு இத்திட்டங்களின் செயல்பாட்டினை பஞ்சாயத்து ராஜ் கட்டமைப்பின் மூலம் கடந்த ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. ஹரியாலி வழிகாட்டியின்படி 2003-2004 ஆம் ஆண்டு முதல் புதிதாக ஒப்பளிப்பு செய்யப்படும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, கிராம ஊராட்சிகள் மூலம் செயலாக்கத்திற்காக வழங்கப்படும். இதுகாறும் திட்டங்களின் செயல்பாட்டினை மேற்கொண்டு வந்த கிராம நீர்வடி சங்கங்களுக்கு பதிலாக கிராம ஊராட்சிகள் இத்திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பினை ஏற்கும்.

[2004 ஜூலை 29

## மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நவ்ப்ரா)

மாநிலத்திலுள்ள நீர்வடிப் பகுதிகளில் இயற்கைத் தாவர வளத்தின் உற்பத்தியை நிலைப்படுத்தவும், சுற்றுச்சூழல் சமநிலையை மீளப்பெறவும், மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நவ்ப்ரா) ஒரு மத்திய அரசு சார்புத் திட்டமாக 1990–1991 முதல் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1) கடலூர் 2) விழுப்புரம் 3) வேலூர் 4) திருவண்ணாமலை 5) சேலம் 6) நாமக்கல் 7) தருமபுரி 8) கோயம்புத்தூர் 9) ஈரோடு 10) திருச்சிராப்பள்ளி 11) கரூர் 12) பெரம்பலூர் 13) புதுக்கோட்டை 14) மதுரை 15) தேனி 16) திண்டுக்கல் 17) சிவகங்கை 18) விருதுநகர், 19) திருநெல்வேலி ஆகிய 19 மாவட்டங்களில் உள்ள 84 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. திட்டம் செயல்படுத்தத் துவங்கியதிலிருந்து 2,26,645 எக்டேரில் இத்திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.73.293 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, திருத்தியமைக்கப்பட்ட நவ்ப்ரா நீர்வடிப் பகுதி மானாவாரி வேளாண்மை முறை (வாராசா 'ஜன்சபாகிதா') என்ற பெயரில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2002–2003 முதல் 2006–2007 வரை செயல்படுத்தப்படுகிறது. புதிய வழிமுறைகளின்படி நீர்வடிப் பகுதிகளில் திட்டமிடுதல், செயல்படுத்துதல், வரன்முறைப்படுத்துதல் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் பராமரிப்பு ஆகிய பணிகளைக் கிராம நீர்வடிப் பகுதிச் சமுதாயப் பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:–

1. இயற்கை வளங்கள் மற்றும் அவற்றின் பயன்பாட்டினைப் பாதுகாத்தல், மேம்படுத்தியும் நிலைப்படுத்தியும் நிருவகித்தல்.
2. வேளாண் உற்பத்தித் திறனையும், உற்பத்தியையும் நிலைப்படுத்தித் தொடர்ந்து உயர்த்துதல்.
3. சாகுபடிக்கு தகுதியற்ற மிகவும் மோசமான மானாவாரிச் சுற்றுச்சூழல் பகுதிகளில் மரப்பயிர்கள், புதர்கள் மற்றும் புல்களை வளர்த்து பசுமையை ஏற்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் சமநிலையை மீளப் பெறுதல்
4. நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் உள்ளிட்ட கிராமபபுற மக்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.



2004 ஜூலை 29]

இந்தத் திருத்திய நவ்ப்ரா பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டம் ஒரு பெரிய மத்திய அரசு சார்புத் திட்டமாகும். இத்திட்டச் செலவில் மத்திய அரசு 90 விழுக்காட்டையும் மாநில அரசு மீதமுள்ள 10 விழுக்காட்டையும் ஏற்கின்றன. மத்திய அரசின் 90 விழுக்காட்டில் 80 விழுக்காடு உதவியாகவும் மீதமுள்ள 20 விழுக்காடு கடனாகவும் இருக்கும். இத்திட்டம் 30 விழுக்காட்டிற்குக் குறைவாக நீர்ப்பாசன வசதி உள்ள பகுதிகளில் சாகுபடிக்கு ஏற்ற மற்றும் சாகுபடிக்கு தகுதியற்ற நிலங்களில் செயல்படுத்தப்படுகிறது.

தற்போது இந்தத் திருத்தியமைக்கப்பட்ட திட்டம் தமிழகத்தில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கன்னியாகுமரி, நீலகிரி, சென்னை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் தவிர ஏனைய 23 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 763 நீர்வடிப் பகுதிகள் (ஒவ்வொன்றும் 500 எக்டேர் வீதம்) தெரிவு செய்யப்பட்டு 3,81,500 எக்டேர் பரப்பில் 23 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டிற்கு 8 விழுக்காட்டிற்கும் கீழ் சரிவுள்ள பகுதிகளில் எக்டேருக்கு ரூ.4,500 வீதமும் 8 விழுக்காட்டிற்கு மேல் சரிவுள்ள பகுதிகளில் எக்டேருக்கு ரூ.6,000 வீதமும் வழங்க அறுதியிடப்பட்டுள்ளது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் திட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.171.589 கோடியாக அறுதியிடப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டு திட்டச் சாதனை பின்வருமாறு :–

| வ. எண் | இனம் | 2003–2004 | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| 1 | திட்ட இனங்கள் செயல்படுத்தப்படும் பரப்பு (எக்) | 33,888 | 33888 |
| 2 | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | 1525.00 | 1525.00 |

**2004—2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் 44,444 எக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்படும்.**

### 2003–2004–ல் செயல்படுத்தப்பட்ட பணிகள்

**மேலாண்மை இனங்கள்**

1. சுய உதவிக் குழுக்கள், பயனாளிகள் குழுக்கள், நீர்ப்பிடிப்புப் பகுதிச் சங்கம் நீர்ப்பிடிப்புப் பகுதிக் குழு ஆகிய நான்கு விதமான குழுக்கள் அமைத்தல்.

[2004 ஜூலை 29

2. நீர்வடிப் பகுதிகளில் நீர்வடிப் பகுதி மேலாண்மைக் குழு அலுவலகம் அமைத்தல்

3. நீர்வடிப் பகுதிச் சங்கங்களைப் பதிவு செய்தல்

4. ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் சமுதாய அமைப்பு ஏற்படுத்தல்

5. மாநில/மாவட்ட/நீர்பிரிமுகடு அளவில் ஒருங்கிணைப்புப் பயிற்சி, கிராமப் பங்கேற்பு அணுகுமுறைப் பயிற்சி, தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி ஆகிய பயிற்சிகள் நடத்துதல்.

6. நீர்வடிப் பகுதி சங்கச் செயலர் மற்றும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுக் குழுத் தலைவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்.

7. அரசு சாரா நிறுவனமான "மைராடா" மூலம் குழுவாகப் பயணம் மேற்கொண்டு தொழில்நுட்ப வெளிப்பாடு அடைதல்.

8. நீர்வடி கிராமங்களில் விளம்பரம் மற்றும் தகவல், கணக்குப் பதிவேடுகள் அச்சடித்து வழங்கல்

9. ஒவ்வொரு நீர்வடிப் பகுதிக்கும் ஆரம்பநிலை நடவடிக்கைகளை இறுதி செய்து ஒப்பளித்தல்.

இவை முடிவடையும் பல்வேறு நிலைகளில் உள்ளது.

**உற்பத்திப் பெருக்க இனங்களின் கீழ் 2004–2005 ஆம் ஆண்டு செயல் நடவடிக்கைகள்:**

1. கிராமப் பங்கேற்பு அணுகுமுறை மூலம் செயல் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் தயாரித்தல். நீர்வடி சங்கம் மற்றும் மாவட்ட நீர்வடிப் பகுதிக் குழு ஏற்பளித்த நிதியினை நீர்வடிப் பகுதி சங்கத்திற்கு நேரடியாகச் செயலாக்கத்திற்கு வழங்குதல்.

2. தேவைக்கேற்ற பயிர்த் திட்டங்களான மாற்றுப் பயிர், கலப்புப் பயிர், ஊடு பயிர் அடுக்கு பயிர்ச் சாகுபடி முறைகள் நீர்வடி குழுக்களின் உதவியுடன் தரிசு நிலங்களுக்கு வகுக்கப்பட்டு பயிர் சாகுபடித் திறனை அதிகரித்தல்.



2004 ஜூலை 29]

3. நீர்வடிப் பகுதிகளில் கிராமப் பங்கேற்பு முறையின் அடிப்படையில் இயற்கை ஆதாரங்களைப் பராமரித்தல், நீர் அறுவடை செய்தல், குறிப்பிட்ட பகுதிக்குத் தேவையான புதிய கட்டடங்கள் கட்டுதல்.

4. புதிய கண்டுபிடிப்பு நடவடிக்கைகள்:— ஒவ்வொரு நீர்வடிப் பகுதியிலும் மண்புழு உரமாக்கல், இயற்கை வேளாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், வீரிய ஒட்டு இரகங்களை அறிமுகப்படுத்துதல், பயறுவகைகள், தீவனப் பயிர்கள், மரக் கன்றுகள், மரப் பயிர்கள் போன்ற பல பயிர் சாகுபடி, சிறுதானியங்கள், பயறு வகைகள், ஜெட்ரோபா போன்றவற்றைத் தனிப் பயிராகவும் வரப்புப் பயிராகவும் ஊடு பயிராகவும் சாகுபடி செய்தல், சாகுபடி நிலங்களில் மூங்கில் வளர்த்தல் முதலியன.

5. புதிய கண்டுபிடிப்புகளைச் செயல்படுத்தும் விவசாயிகளை அடையாளம் காணுதல், பருவத்திற்கும், நீர்வடிப் பகுதிக்கும், தேவைக்கும் ஏற்ப வறண்ட நிலங்களில் இயற்கை வள மேலாண்மையின்கீழ் மண் மற்றும் ஈரப்பதத்தை பாதுகாத்தல் ஆகியவற்றைச் செயல்படுத்துதல் (மத்திய அரசு வழிமுறைகளின் 98 ஆவது பத்தி). இவற்றில்

(1) சிறு நிலங்களில் சிறு படுகை, சிறு குட்டை, தோண்டு குட்டைகள் அமைத்தல்

(2) தனிக் கற்கள் மற்றும் தாவரத் தடுப்பு அணை அமைத்தல்

(3) தாவரம் / கற்கள் கொண்டு கரைகளைப் பலப்படுத்துதல்

(4) வடிகால் வசதி மூலம் நீர் சேகரித்தல்; அதனால் நிலத்தடி நீர் மறுசெறிவூட்டல்

(5) சமகோடு வரப்பில் தாவரத் தடுப்புகள், மரத் தடுப்பணைகள் அமைத்தல்

(6) மண் அறுவடை அமைப்பு முதலிய மேற்கொள்ளப்படும்.

[2004 ஜூலை 29

## அத்தியாயம் – 6

## வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

### 1. முன்னுரை

தமிழகத்தின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு இலக்கைப் பேணுதலுக்கும் ஏற்றுமதிக்கு ஏற்றபடி வேளாண் விளைபொருட்களைப் பயிரிடவும் தமிழகத்திலுள்ள வேளாண்மை அடிப்படை ஆதார வளங்களைக் கண்டறிந்து கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடையும் நோக்கிலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தனது வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில், தீவிர முனைப்புக் காட்டி வருகின்றது. தமிழகத்தில் வேளாண்மையின் தோற்றம் புதிய பிரச்சினைகளுடனும் அறைகூவல்களுடனும் விரைவான மாற்றத்தைப் பெற்றுள்ளது. முக்கியமாக, பயிர் வகைகளில் உற்பத்தித் திறன் ஒரே அளவில் நிலைத்துள்ளது. நீர்வளம் குறைந்து வருகின்றது. பயிரிடப்படும் நில அளவும் குறைந்து வருகின்றது. மொத்தப் பயிர் சாகுபடி பரப்பளவு மற்றும் பாசனப் பரப்பளவில் சிறிது குறைவும் ஏற்பட்டுள்ளது. மேலும், உணவு தட்டுப்பாடு என்ற நிலை மாறி சந்தை உபரி உற்பத்தி நிலை ஏற்பட்டு, இதனை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வெற்றிகரமாக சந்தைப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இவ்வாறான சூழ்நிலைகளை சமாளிக்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தனது வினை–முறைத் திறன்களை மாற்றியமைத்துக் கொண்டு வருகிறது.

### 2. கல்வி

பல்கலைக்கழகத்தின் ஆக்கக்கூறுகளாக ஏழு வளாகங்களில் அமைந்துள்ள பத்து கல்லூரிகளில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல் மற்றும் மனையியல் ஆகியவற்றில் இளம் அறிவியல் மற்றும் வேளாண் பொறியியல் பட்டப்படிப்பினையும் அளித்து வருகின்றது. (இணைப்பு 1) இதுதவிர உணவுப்பொருள் பதனம் செய் பொறியியல்' வேளாண் உயிரியல் தொழில்நுட்பம், தோட்டக்கலை ஆகிய மூன்று தன்னாதரவு இளம் தொழில்நுட்பவியல்' பாடங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழக வேளாண்மையை நவீனப்படுத்த வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் நவீன தொழில்நுட்ப திறமை கொண்ட



2004 ஜூலை 29]

மனிதவளம் மிகவும் அவசியம். இத்தேவையை நிறைவு செய்வதற்காக இப்பல்கலைக்கழகம் படிப்பு பிரிவுகளில் பாடத்திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு கீழ்க்காணும் பயிற்சிகளை அளித்து வருகின்றது.

1. இளநிலை மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடத்திலும் மாறுதல் செய்யப்பட்டு அவற்றில் செய்முறை திறனுடைய பகுதி சேர்க்கப்பட்டு மாணவர்களின் அறிவை களப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2. காளான் வளர்ப்பு, நாற்றுப் பண்ணை நிருவாகம், கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு, உயிரியல் உரங்கள் தயாரித்தல், உயிரியல் பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பு போன்ற வணிக முறையிலான வேளாண்மைப் பாடங்கள் மாணவர் களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதுடன் பிறரிடம் சென்று பணியாற்றும் எண்ணத்தைக் கைவிட்டு தங்கள் காலிலேயே நிற்க முடியும் என மெய்ப்பிக்கும் வகையில் அவர்களைச் சுயதொழில் முனைவோர்களாக மாற்றுகின்றன.

3. முன்னேற்றமடைந்துள்ள உழவர்கள், அரசு வளர்ச்சித் துறைகளிலுள்ள அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்துவதால் மாணவர்கள் வேளாண்மையில் பங்குடையோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை அறிந்துகொள்ள வழி வகுக்கின்றது.

4. ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின்கீழ் மாணவர்கள் உழவர்களுடன் 10.5 நாட்கள் தங்கி விவசாய உண்மை நிலைகளை நேரடியாக அறிந்துகொள்ள வாய்ப்பு அளிக்கின்றது.

5. மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் வண்ணம் அவர்களுக்கு சிறப்புப் பாடங்கள், பொது அறிவு மற்றும் ஆங்கில மொழி அறிவிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இப்பல்கலைக்கழகத்தில் மூதறிவியல் பட்டப்படிப்பில் 22 பாடப்பிரிவுகளிலும், முனைவர் பட்டப்படிப்பில் 20 பாடப் பிரிவுகளிலும் (வேளாண்மை மற்றும் சார்ந்தவை) கல்வி வழங்கப்படுகின்றது. மூதறிவியல் பாடத்திட்டத்தில் மாணவர்கள் ஆராய்ச்சிப் பிரச்சினைகள் தேர்ந்தெடுக்கும் பொழுது உழவர்கள் எதிர்கொள்ளும் களப் பிரச்சினைகளையே கருத்தில் கொள்ளப்படுகின்றது. இவ்வாராய்ச்சி முடிவுகள் உழவர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் செய்யப்படுகின்றன.

## 3. ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அறிவியலாளர்கள் 440 ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாராய்ச்சிகளுக்கான நிதியுதவியினை மாநில மற்றும் நடுவண் அரசுகள், அரசின் பிற நிறுவனங்கள், தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் அளித்து வருகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தன் கீழுள்ள ஏழு கல்லூரிகள், 32 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 13 வேளாண் தொழில்நுட்ப விரிவாக்க மையங்கள் மூலமாக தமிழகத்தின் ஏழு வேளாண் வானிலை மண்டலங்களின் பகுதி சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் வண்ணம் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகின்றது (இணைப்பு II).

### 3.1 எதிர்காலத் திட்டங்கள்

கீழ்க்கண்ட நோக்கங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்

- முக்கிய வேளாண் பயிர்கள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட தோட்டப்பயிர்களிலும், பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு ஆற்றல் வாய்ந்த இரகங்கள் மற்றும் முதல் நிலை வீரிய ஒட்டு வகைகளை உருவாக்குதல்.
- நுகர்வோர் விரும்பும் தன்மை கொண்ட வீரிய ஒட்டு நெல் இரகங்களை உருவாக்குதல்.
- காய்ப்புழுவிற்கு எதிர்ப்புத்தன்மை கொண்ட பருத்தி வீரிய ஒட்டு இரகங்களை உருவாக்குதல்.
- சாம்பல் பூசண நோய் எதிர்ப்புத்தன்மை கொண்ட வீரிய ஒட்டு மக்காச் சோள இரகங்களை உருவாக்குதல்.



- அதிக எண்ணெய் வளம் கொண்ட வீரிய ஒட்டு சூரியகாந்தி இரகங்களைக் கண்டறிதல்.
- வறட்சி மற்றும் தேமல் நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட பாசிப்பயறு மற்றும் உளுந்து வகைகளை உருவாக்குதல்.
- பயிரிடக்கூடிய தரிசு நிலங்கள் பெரும் பகுதியாக அமைவதால் தோட்டக்கலை மற்றும் வனவியலில் பழ மரங்கள் மற்றும் தச்சுக்குப் பயன்படும் மற்றும் பயன்படாத மர இரகங்களை அடையாளங்கண்டு அவற்றை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- மூலிகைப் பயிர்கட்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். முக்கியமான மூலிகைப் பயிர்களான மருந்துக் கூர்க்கன்கிழங்கு, அமுக்கரான் கிழங்கு, கீழாநெல்லி, கண் வலிக்கிழங்கு மற்றும் நில வேம்பு ஆகியவற்றை சாகுபடி செய்ய ஏற்ற தரமிகுந்த தொழில் நுட்பங்களைக் கண்டறிவதுடன் அவற்றினின்று கார வேதியியல் பொருட்கள் மற்றும் இரண்டாம் நிலைப் பொருட்களை வடித்தெடுக்கும் வழிமுறைகளைக் கண்டறிதல்.
- எரிபொருள் எண்ணெய் வளம் கொண்ட காட்டாமணக்கு போன்ற உயிரியல் எரிபொருட்கள் கொண்ட மர இரகங்களின் சாகுபடித் தொழில்நுட்பங்களைத் தரப்படுத்துதல் மற்றும் இப்பயிர்களிலுள்ள எரிபொருள் எண்ணெய்களைத் திறமான முறையில் பிரித்தெடுக்கும் வழிவகைகளைக் கண்டறிதல்.
- தமிழ்நாட்டிலுள்ள ஏழு வேளாண் வானிலை மண்டலங்களிலுள்ள அதிக வறட்சி, மிதமான வறட்சி மற்றும் இயல்பான பருவநிலை சூழல்கட்கு ஏற்ற மாற்றுப் பயிர் உத்திகளை உருவாக்குதல். இவ்வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒரு திட்டக்குறிப்பு தயாரித்து இதன் மூலம் மாறுபட்ட சூழ்நிலைகளில் கடைப்பிடிக்க வேண்டிய பயிர்த் திட்டங்களை உருவாக்கி இத்திட்டங்கள் வேளாண் துறையினருடன் கலந்து, நடைமுறைப்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- மாநிலத்தில் பயிர் உற்பத்தியை இரட்டிப்பாக்கத் தேவையான உத்தியை மேம்படுத்துதல்.

- 2004–2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ள 11 புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் மானாவாரிப் பகுதியில் நெல் உற்பத்தி அளவினை அதிகமாக்குதல், குடிலுக்கு வெளியே காளான் தயாரிக்கும் முறைகளை ஏற்படுத்துதல், உயிரியல் எரிபொருளுக்கு மூலப் பொருளான காட்டாமணக்குப் பயிருக்கு ஏற்ற சாகுபடித் தொழில்நுட்பங்கள் உருவாக்குதல், வேதி மூலப் பொருட்கள் இல்லாத பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைக் கண்டறிதல், சுற்றுச்சூழல் பாதிக்காத கழிவு நீர் நிர்வாகம், மானாவாரி நிலங்களுக்கேற்ற செலவில்லா அல்லது குறைந்த செலவு கொண்ட தொழில் நுட்பங்கள் பற்றிய தகவல் பதிவு செய்தல், ஏற்றுமதித் தேவைக்கு ஏற்ற பயிர் உற்பத்தியினைப் பெருக்கும் பொருட்டு பயிர்த் திட்டங்களை மாற்றியமைத்தல் ஆகியன வலியுறுத்தப்பட்டுள்ளன.

## 4. கொள்கை முடிவு ஆய்வுகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண்மைப் பயிர்ச்சூழல், மழை அளவு, மாநிலத்தில் வேளாண்மையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி வேகம் ஆகியவற்றை அவ்வப்பொழுது அளவிட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் வெவ்வேறு வேளாண் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி வேளாண் துறைக்கு அளித்து, அவை வேளாண் துறை விரிவாக்கப் பணியாளர்களுடன் விவாதிக்கப்பட்டு, பின் அரசின் கொள்கை முடிவுகளில் சேமிக்கப்படுகின்றது.

## 5. விரிவாக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை விரிவாக்கக் கல்வி மையம் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகளின் மூலம் வெளிப்படும் புதிய தொழில்நுட்பங்களை வேளாண் பெருமக்களுக்கும், தமிழக வேளாண் துறை விரிவாக்கப் பணியாளர்கட்கும் தனது ஐந்து வேளாண் அறிவியல் மையங்கள், ஐந்து பயிர் மருத்துவ மையங்கள், தகவல் தொடர்பு மையம் மற்றும் பயிற்சிப் பிரிவு மூலமாக உடனடியாகச் சென்றடையும் பொறுப்பினை சிறப்புடன் ஆற்றிவருகின்றது. (இணைப்பு III) கோயம்புத்தூரில் அமைந்துள்ள தகவல் தொடர்பு மையம் புதிய கண்டுபிடிப்புகளை உழவர்கட்குச் சென்றடைய வானொலி, நாளிதழ்கள், வேளாண் பத்திரிகைகள், பிரசுரங்கள், ஒளி நாடா நிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி போன்ற தகவல் தொடர்பு



சாதனங்கள் மூலம் பரப்பி வருகின்றது. மேலும் வானொலி, வேளாண்மைப் பள்ளி மற்றும் அஞ்சல் வழிக்கல்வி மூலமாகவும் உழவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அறிவியலாளர்களின் ஆலோசனைகள் மூலமாக தமிழ்நாட்டின் நிகர பாசனப் பரப்பில் 5 சதவீத நிலப்பரப்பினைச் சொட்டு நீர்ப்பாசனத்தின்கீழ் கொண்டு வரவும் 2.5 சதவீத நிலப்பரப்பினை உர நீர்ப்பாசன முறைக்கு கொண்டு வரவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- உழவர்களிடையே "துல்லிய வேளாண்மையில்" நம்பிக்கையும் ஈடுபாடும் ஏற்படுத்தும் வண்ணம் முழுமையான அணுகுமுறையினை மேற்கொண்டு குறைந்த செலவில் நிறைந்த வருவாயினைப் பெறுவதற்கான வழிமுறைகள் செயல் விளக்கம் செய்து காட்டப்படும்.
- வரும் பசலி ஆண்டில் அறிவியல் பயிற்சி மூலமாக 2.5 சதவீத நெல் சாகுப்படிப் பரப்பினை திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து கிடைக்கும் நீர் அளவினைக் கொண்டு நெல் உற்பத்தியை நிலைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட பல்வேறு பண்ணைக் கருவிகள் பற்றிய தகவல்களை உழவர்களிடையே பரப்பிட பெரிய அளவிலான வேளாண் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.
- மண் வளத்தினைப் பெருக்கி விளைச்சலை அதிகப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்புழு உரம் (அங்கக உரம்) தயாரிக்கும் தொழில்நுட்பத்தினைப் பரப்புதல்.
- நெல்லுக்குத் தேவையான தழைச்சத்தினைக் கணக்கிட இலை வண்ண அட்டையைப் பயன்படுத்துவதைப் பரப்புதல்.
- தமிழ்நாட்டில் உள்ள நீர் வளத்திற்கு ஏற்ற நெல் இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு வகைகளை உருவாக்கிப் பரப்புதல்.
- அரசு வேளாண் பொறியியல் துறையுடன் இணைந்து உரமுடன் கூடிய சொட்டு நீர்ப்பாசன முறை மற்றும் உவர் நீரிலிருந்து

[2004 ஜூலை 29

பாசன நீரைப் பிரித்தெடுக்கும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துதல்.

- பருத்தி சாகுபடிப் பரப்பினையும் விளைச்சலையும் அதிகரித்தல் மற்றும் வேளாண்மைத் துறையின் ஒத்துழைப்புடன் மக்காச் சோளத்தின் உற்பத்தியினை இரட்டிப்பாக்குதல்.
- அரசு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையுடன் இணைந்து மூலிகைப் பயிர்கள் சாகுபடி பற்றிச் செயல் விளக்கம் அளித்தல், பசுமைக் கிராமத் திட்டச் செயல் விளக்கம் அமைத்தல், வணிக முறையில் திசுவளர்ப்பு ஆய்வுக்கூடம் நிறுவுதல், பயிர்ப்பெருக்கங்களை ஒழுங்கு முறைப்படுத்தி நாற்றுப் பண்ணைகள் நிறுவுதல் ஆகியன மேற்கொள்ளல்.
- தமிழக வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் நிதியுதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அங்காடி புலன் ஆய்வு மையம் அமைத்தல்.

## 5.1 தொலைக்கல்வி

தொலைக்கல்வித் திட்டத்தின் மூலமாக வணிக முக்கியத்துவம் வாய்ந்த காளான் வளர்ப்பு, மூலிகைப் பயிர் உற்பத்தி, வணிக மற்றும் அலங்கார தோட்டம் அமைத்தல் மற்றும் இயற்கை நிலக்காட்சி அமைத்தல் போன்ற பாடங்களில் ஆறு மாத கால சான்றிதழ் பாடத் திட்டங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 5.2 புதிய பயிற்சிகள்

- ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்
- மழைநீர் சேகரிப்பும் தரிசு நில மேம்பாடும்
- கிராம அளவில் வேளாண் விளைபொருட்களின் மதிப்பினை உயர்த்துதல்
- அறுவடைக்குப் பிந்திய செய் நேர்த்தி மற்றும் சேமிப்பு முறைகள்
- வேளாண் மகளிரிடையே தலைமையேற்று வழிநடத்தும் பண்புகளை உருவாக்குதல் மற்றும் கிராமப்புற கழிவு நீர்ப் பண்ணைகள்



2004 ஜூலை 29]

## இணைப்பு I

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கல்லூரிகள்

| தொடர் எண் | கல்லூரி |
|---|---|
| 1. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் – 641 003 |
| 2. | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் – 641 003 |
| 3. | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் – 641 003 |
| 4. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை – 625 104 |
| 5. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் – 628 252 |
| 6. | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம் – 625 604 |
| 7. | அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாவலூர் குட்டப்பட்டு, திருச்சி – 620 009 |
| 8. | வனஇயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம் – 641 301 |
| 9. | மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை – 625 104 |
| 10. | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர், திருச்சி – 621 712 |

## இணைப்பு II

### ஆராய்ச்சி நிலையங்கள்

| | |
|---|---|
| 1. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் – 628 501 |
| 2. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி – 627 701 |
| 3. | பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிபுத்தூர் – 626 125 |
| 4. | மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர் – 635 112 |
| 5. | மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை – 626 107 |
| 6. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், ஆழியார்நகர் – 642 101 |
| 7. | நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம் – 627 401 |
| 8. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கூடலூர் – 643 212 |
| 9. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல் – 624 103 |
| 10. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை – 625 512 |
| 11. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி – 623 707 |
| 12. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை – 629 161 |
| 13. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம் – 629 901 |
| 14. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், இராமநாதபுரம் – 623 501 |
| 15. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், சந்தியூர் – 636 203 |
| 16. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை – 624 602 |

[2004 ஜூலை 29

| | |
|---|---|
| 17. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு – 636 602 |
| 18. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம் – 643 001 |
| 19. | எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் – 602 002 |
| 20. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர் – 607 001 |
| 21. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி – 639 115 |
| 22. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர் – 635 806 |
| 23. | தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம் – 614 906 |
| 24. | மண் மற்றும் நீர் நிர்வாக ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர் – 613 501 |
| 25. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் – 632 104 |
| 26. | நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர் – 602 025 |
| 27. | மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம் – 606 001 |
| 28. | தேசியப் பயறு வகை ஆராய்ச்சி நிலையம், வம்பன் – 622 303 |
| 29. | காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர் – 607 113 |
| 30. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை – 614 602 |
| 31. | தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101 |
| 32. | மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர் – 636 117 |

## இணைப்பு III

***பயிர் மருத்துவ மையங்கள்***

1) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் – 628 252
2) பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிப்புத்தூர் – 626 125
3) நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர் – 602 025
4) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் – 632 104
5) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் – 628 501

***வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (கிரிஷி விக்யான் கேந்திரா)***

1) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் – 641 003
2) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை – 625 104
3) மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம் – 606 001
4) கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி – 639 115
5) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், சந்தியூர் – 636 203



2004 ஜூலை 29]

# அத்தியாயம் – 7

## விதைச் சான்றளிப்புத் துறை

### 1. முன்னுரை

தரமான வித்தே தரமான விளைச்சலுக்கு அடிப்படையாகும். வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க விதை அடிப்படையான மற்றும் மிக முக்கிய இடுபொருளாகும். தரமான விதை உற்பத்திக்கு அரசால் ஆண்டுதோறும் அளிக்கப்படும் கூடுதல் முக்கியத்துவம் காரணமாக மாநிலத்தில் விதைத் தொழில் வேகமாக வளர்ந்து வருகிறது. தரமான விதைகளின் உற்பத்தியைப் பெருக்குகிறது. உழவர்களின் நலன் காக்க ஓர் வலுவான விதை உற்பத்தி மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு மிகவும் அவசியமானது. வேளாண்மை உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்க போதிய அளவு தரமான விதைகளை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்வது அவசியம். இதனை அடைய இத்துறை விதைச் சான்றளிப்பு, விதைத் தரக்கட்டுப்பாடு, விதைப் பரிசோதனை மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள், உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களுக்கான பயிற்சி முதலிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 2. விதைச் சான்றளிப்பு

தரமான மற்றும் இனத்தூய்மை கொண்ட விதை உற்பத்தியை தேவையான அளவில் குறிப்பாக உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுக்களில் மேற்கொள்ள ஊக்குவிக்கவே விதைச் சான்றளிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இக்குறிக்கோளை அடைய விதைச் சான்றளிப்புத் துறை இந்திய விதைகள் சட்டம், 1966–ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட இரக விதைகளில் சான்றளிப்புப் பணிகளை விதை விதிகள் 1968–ன் அடிப்படையில் மேற்கொண்டு மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் சான்று விதைகளின் தரத்தை உறுதி செய்கிறது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளில் 18,000 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி 24,452 மெட்ரிக் டன்களாக அதிகரித்தது. பின்னர் 2002–2003 ஆம் ஆண்டில் 41,325 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. கடந்த பத்து

ஆண்டுகளில் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி இரு மடங்காக அதிகரித்துள்ளபோதிலும் மொத்த விதைத் தேவையில் பத்து விழுக்காடு மட்டுமே சான்றளிக்கப்பட்ட விதைகள் மூலம் நிறைவு செய்யப்படுகிறது. இதுதவிர சுமார் ஆறு விழுக்காடு விதைத் தேவை உண்மையான முகப்புச்சீட்டு விதைகள் மூலம் நிறைவு செய்யப்படுகிறது.

கடந்த கால அனுபவங்களின்படி, தனியார் மூலம் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியை ஊக்குவிப்பதனால், மொத்தச் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்க இயலும் என அறியப்படுகிறது, மேலும் தனியார் நிறுவனங்கள் வீரிய ஒட்டு இரகங்களைக் கொணர்ந்துள்ளன. இவை சில சமயங்களில் பொதுத் துறை நிறுவனங்களின் இரகங்களைவிட நன்றாக உள்ளன. எனவே இவ்விதைகளுக்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. பொதுத் துறை நிறுவனங்களின் இரகங்களுக்கும் நல்ல தேவை இருப்பதனால் சில தனியார் நிறுவனங்கள் அவற்றை உற்பத்தி செய்து விநியோகம் செய்கின்றன. எனவே சான்றளிக்கப்பட்ட விதை மற்றும் விநியோகத்தை அதிகரிக்க உற்பத்திக்கும் தேவைக்கும் உள்ள இடைவெளியை நிறைவு செய்ய தனியார் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க கவனம் செலுத்த வேண்டும். 2003–2004 ஆண்டு இலக்கான 45,000 மெட்ரிக் டன்களுக்கு 41,331 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் 46,500 மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்றளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3. விதைத் தரக் கட்டுப்பாடு

விதை வேளாண்மையின் அடிப்படை இடுபொருளாகும். விதைத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் விதை விற்பனை நிலையங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து, வழங்குவதற்காக வைக்கப்பட்டிருக்கும் விதைகளில் மாதிரிகள் எடுத்து விதைப் பரிசோதனை செய்து உழவர்களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டியது முக்கியமானதாகும். தனியார் விதை உற்பத்தி அதிகரித்துவரும் இந்நிலையில் இப்பணி மிக முக்கியமானதாகும். விதை மாதிரிகள் எடுத்து, அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. விதைப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தரக் குறைவான விதை வழங்கப்படும் நிகழ்வுகள் கண்டறியப்பட்டு உரியவர்கள்மீது துறை அல்லது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விதைகள் சட்டம் 1966, விதை விதிகள்,





1968 மற்றும் விதை (கட்டுப்பாடு) ஆணை, 1983 ஆகியவற்றின் அடிப்படையில் இத்துறையின் விதை ஆய்வுப் பிரிவு விதைத் தரக் கட்டுப்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983–ன்படி விதை விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை உரிமங்களும் வழங்கப்படுகின்றன.

விதை ஆய்வுத் திட்டத்தின்கீழ் 1990–1991 வரையிலான காலக்கட்டத்தில் சுமார் 10,000 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இது தொண்ணூறுகளின் முற்பகுதியில் அதிகரித்து எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் விற்பனை நிலைய ஆய்வுகள் 26,322 ஆக அதிகரித்துள்ளது. ஒன்பதாவது திட்ட ஆண்டுகளில் இதே நிலை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. விற்பனை இடங்கள் அதிகரித்த போதிலும் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு விதை விற்பனை நிலையங்களும் இரண்டு முறை மட்டுமே ஆய்விடப்பட்டு வந்த நிலையிலிருந்து தற்சமயம் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து முறை ஆய்வு செய்யப்படுகிறது. 2002–2003 ஆம் ஆண்டில் விதை விற்பனை நிலையங்களில் 29,371 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 20,775 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டு இலக்கான 27,000 விதை விற்பனை நிலைய ஆய்வு என்ற ஆண்டு இலக்குக்கு 29,382 ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கான விதை மாதிரிகள் எடுக்கும் இனத்தில் ஆண்டு இலக்கான 21,000–க்கு 21,685 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் 28,800 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் செய்து 21,500 விதை மாதிரிகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4. விதைப் பரிசோதனை

நவீன வேளாண்மையில் விதைப் பரிசோதனைத் திட்டம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்திட்டத்தில் விதைகளின் தரத்தை அறிய முளைப்புத் திறன், புறச்சுத்தம், ஈரப்பதம், விதை நலம் மற்றும் பிற இரக கலவன்கள் கண்டறியப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் விதைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. விதைச் சான்றளிப்பு மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டுப் பணிகளை உரிய முறையில் செயல்படுத்த விதைப் பரிசோதனைத் திட்டம் அவசியமானது. விதைப் பரிசோதனை நிலையங்களில் அலுவலர் ரீதியான சான்று விதை மற்றும் ஆய்வு விதை மாதிரிகள் மட்டுமன்றி உழவர்களிடமிருந்தும், விற்பனையாளர்

களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. 2002–2003 ஆம் ஆண்டில் 51,193 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டு இலக்கான 56,000 விதை மாதிரிகளுக்கு 47,991 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் 60,000 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. விதைகளின் இனத்தூய்மையை அறிய விதைச் சான்று இயக்ககத்திலுள்ள கண்ணாடி ஆய்வகத்திலும், கண்ணம்பாளையம் (கோயம்புத்தூர்) பண்ணையிலும் பயிர் வளர்ப்புப் பரிசோதனை செய்யப்படுகிறது. இப்பரிசோதனையானது தாயாதி மற்றும் வீரிய பருத்தி, ஆதாரநிலை பருத்தி, வீரிய ஆமணக்கு ஆகிய பயிர் விதைகளின் சான்றளிப்புக்கு முன்னதாகச் செய்யப்படுகிறது. விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகளும் இனத்தூய்மைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

## 5. பயிற்சி

தரமான விதை உற்பத்தியையும் வழங்குதலையும் ஊக்குவிக்க இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலமாகக் கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகள் நடத்தப்படுகின்றன:

### 5.1 புத்தறிவுப் பயிற்சி

இத்துறையில் புதிதாகப் பணியேற்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு விதைச் சான்றளிப்பு நடைமுறை, வயல் ஆய்வுகள், பயிர் இரக குணாதிசயங்கள் கண்டறிதல், விதைச்சுத்தி, விதை மாதிரி எடுத்தல், சான்றட்டை பொருத்துதல், விதைப் பரிசோதனை மற்றும் விதைத் தரக் கட்டுப்பாடு குறித்த நடைமுறைகளில் பயிற்சி யளிக்கப்படுகிறது.

### 5.2 புத்தாக்கப் பயிற்சி

இத்துறையில் ஏற்கெனவே பணியாற்றும் அலுவலர்களுக்குப் புதிய விதை உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் கண்டறிதல் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது.





### 5.3 விதை உற்பத்தியாளர் பயிற்சி

விதை உற்பத்தியாளர்களுக்கு விதை உற்பத்தி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி பெரும்பாலும் விதை உற்பத்தி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளை உள்ளடக்கியதாகும்.

### 5.4 விதை விற்பனையாளர்களுக்குத் தரக் கட்டுப்பாட்டுப் பயிற்சி

விதை விற்பனையில் விதைத் தரம் பேணிக்காத்தல் தொடர்பாகவும், விதை இருப்பு வைப்பதிலும் விற்பனை செய்வதிலும் கையாள வேண்டிய நெறிமுறைகள் குறித்தும், விதைப் பிரிவை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான சட்டங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பல்வேறு பயிற்சிகளின்கீழ் பயனடைவோர் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. 2001–2002 ஆம் ஆண்டில் 25,591 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. 2002–2003 இல் 27,706 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டு இலக்கான 26,000–க்கு 28,680 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் 27,000 பேருக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. 2003–2004 ஆம் ஆண்டின் சாதனைகள்

2003–2004 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 4.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், விதை சந்தைப் புலனாய்வு மற்றும் தேவை அறிதல் மையம் அமைக்க ரூபாய் 1.00 இலட்சமும், பயிற்சிப் பிரிவிற்கு துணைக் கருவிகள் (ஜெராக்ஸ் கருவி) வாங்க ரூபாய் 1.75 இலட்சமும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூபாய் 1.61 இலட்சமும் (தருமபுரி விதைப் பரிசோதனை நிலையத்திற்குப் பாதுகாப்புச் சுவர் மற்றும் இனத்தூய்மைப் பண்ணைக் கிணற்றுக்கான கைப்பிடிச்சுவர் கட்டுதல்) பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 7. 2004–2005 ஆம் ஆண்டுத் திட்டம்

2004–2005 ஆம் ஆண்டில் விதை தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அடிப்படை வசதிகளை அதிகரிக்கச் செய்ய, ரூபாய் 2.00 இலட்சத்தில்

கண்ணாடி ஆய்வகம் மேம்படுத்தப்படவும், ரூபாய் 4.78 இலட்சத்தில் பிடி. பயிர் ஆய்வுக்கான எலைசா கிட் வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. விதைப் பரிசோதனைத் திறனை அதிகரிக்க ரூபாய் 1.60 இலட்சம் (மினி ஜெனரேட்டர்) ஒதுக்கப்பட உள்ளது. டிஜிட்டல் கேமரா மற்றும் எல்.சி.டி. /புரொஜக்டர் வழங்கவும், தொலைத்தொடர்பு வசதிகளை அதிகரிக்கவும், ரூபாய் 2.32 இலட்சம் ஒதுக்கப்பட உள்ளது. இயக்ககத்தின் மின் வசதி மேம்பாட்டுக்காக ரூபாய் 0.60 இலட்சம் ஒதுக்கப்பட உள்ளது.

### அட்டவணை 1

### சான்று செய்த விதை அளவு மெ.டன்.

| வ. எண் | பயிர் | 2002-03 | | 2003-04 | | 2004-05 |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | திட்டம் |
| 1 | நெல் | 35570 | 34824 | 36750 | 35014 | 37700 |
| 2 | ரக சிறு தானியம் | 450 | 543 | 450 | 495 | 450 |
| 3 | வீரிய சிறு தானியம் | 30 | 10 | 50 | 4 | 50 |
| 4 | ரக பருத்தி | 1900 | 1197 | 2000 | 1111 | 2200 |
| 5 | வீரிய பருத்தி | 150 | 263 | 150 | 14 | 150 |
| 6 | பயறு வகை | 1700 | 1353 | 1800 | 1515 | 2000 |
| 7 | எண்ணெய்வித்து | 3600 | 3056 | 3700 | 3102 | 3850 |
| 8 | காய்கறிகள் | 100 | 79 | 100 | 76 | 100 |
| | மொத்தம் | 43500 | 41325 | 45000 | 41331 | 46500 |

### அட்டவணை 2

### *விதை ஆய்வு*

| வ. எண் | பயிர் | 2002-03 | | 2003-04 | | 2004-05 |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | திட்டம் |
| 1 | விற்பனை நிலைய ஆய்வுகள் | 27000 | 29371 | 27600 | 29382 | 28800 |
| 2 | விதை மாதிரிகள் எடுத்தது | 20500 | 20775 | 21000 | 21685 | 21500 |



### அட்டவணை 3

### *விதைப் பரிசோதனை*

| வ. எண் | பயிர் | 2002-03 | | 2003-04 | | 2004-05 |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | திட்டம் |
| 1 | விதைப்பகுப்பாய்வு பரிசோதனை செய்தது | 52000 | 51193 | 56000 | 47991 | 60000 |

### அட்டவணை 4

### *விதைச் சான்று பயிற்சி*

| வ. எண் | பயிர் | 2002-03 | | 2003-04 | | 2004-05 |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | திட்டம் |
| 1 | பயனாளிகள் | 25000 | 27706 | 26000 | 28680 | 27000 |

### இணைப்பு

### *விதைச் சான்றளிப்புப் பகுதிகள்*

| தொடர் எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு |
| 3 | சேலம் | சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | விழுப்புரம் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | திருவண்ணாமலை | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |

[2004 ஜூலை 29

## விதை ஆய்வுப் பகுதிகள்

| தொடர் எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு, நாமக்கல் |
| 3 | சேலம் | சேலம் மற்றும் தருமபுரி |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | கடலூர் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |


## விதைப் பரிசோதனை நிலையங்கள்


| தொடர் எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி |
| 2 | மதுரை | மதுரை, தேனி,திண்டுக்கல்,விருதுநகர்,இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 3 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 4 | தருமபுரி | தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 7 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவள்ளூர் |





2004 ஜூலை 29]

## விதைச் சான்றளிப்புத் துறை – திட்டங்கள் செயலாக்கம்



## அத்தியாயம் – 8

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

### 1. முன்னுரை

பசுமைப் புரட்சி மூலம் பல முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உணவு தானிய உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு எய்திட இயன்றது. அதே வேளையில், மாநிலத்தில் வேளாண் விற்பனையை மேம்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கிராமங்களின் வளர்ச்சியிலும், நாட்டின் கிராமப் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதிலும், வேளாண் அங்காடிகளின் உள்கட்டமைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் செயல்திறன் மேம்படுவதற்குச் சாகுபடி எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு விற்பனையும் முக்கியமாகத் திகழ்கிறது. தேசிய வேளாண் குழுவின் அறிக்கையின்படி (12–வது அறிக்கை) வேளாண்மை விற்பனை என்பது ஒரு விளைபொருளை உற்பத்தி செய்திட முடிவெடுக்கும்போதே தொடங்குகிறது. மேலும், வேளாண்மை விற்பனை என்பது அங்காடி முறையில் அனைத்து வேளாண் கூறுகளையும் உள்ளடக்கியது என்பதோடு அறுவடைக்கு முன்னும் பின்னும் செய்கின்ற செய்நேர்த்திகள், விளைபொருளை ஓரிடத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பது, தரம் பிரிப்பது, சேமிப்பது மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது மற்றும் வழங்குவது ஆகியவற்றையும் கொண்டது. இந்நடவடிக்கைகள் வேளாண் விளைபொருளுக்கு மதிப்பினைக் கூட்டுகின்றது.

இதனைக் கருத்தில்கொண்டு வேளாண் விற்பனைக்கான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கும்பொருட்டும் மற்றும் வேளாண் விளைபொருள் வணிகத்தை ஒழுங்குபடுத்தும்பொருட்டும், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 மற்றும் விதிகள் 1991–ஐ உருவாக்கியது. இச்சட்டம் 1959 ஆம் ஆண்டில் இயற்றிய சட்டத்திற்கு மாற்றாகக் கொண்டுவரப்பட்டது.

வேளாண்மை விற்பனையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறை 1977 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகின்றது. வேளாண் விளைபொருட்களை





விற்பனை செய்வதோடு மட்டுமன்றி உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி ஆகிய பொறுப்புகள் கூடுதலாக வழங்கப்பட்டு இத்துறையின் பெயர் 2001 முதல் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையென மாற்றம் செய்யப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முக்கியச் செயல்பாடுகள்:

1. விவசாயிகள் நலன் கருதி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருள் விற்பது மற்றும் வாங்குவது போன்ற செயல்களை ஒழுங்குபடுத்துதல்.
2. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக விற்பனை செய்வதனால் அடையும் பயன்களைப்பற்றி விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணி மூலம் அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.
3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுவரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவிலான விளைபொருட்களைத் தரம் பிரித்து, ஆதாயமான விலை கிடைத்திட உதவுதல்.
4. வேளாண் பொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் பொருட்கள் மற்றும் வனப்பொருட்கள் ஆகியவற்றிற்கு நுகர்வோர் பயன்பெறும் வகையில் அக்மார்க் தர முத்திரை வழங்கும் திட்டத்தினை அமலாக்குதல்.
5. வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைப்பதன் மூலம் ஏற்றுமதி செய்யும் வேளாண் விளைபொருட்களின் பரப்பினை அதிகரித்தல், அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை குறித்த விவரங்களை அளித்தல், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் சர்வதேசச் சந்தையில் நிலவும் விலை விவரத்தை ஒருங்கிணைத்து அளித்தல்.
6. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்குச் சரியான விலை கிடைக்க உறுதி செய்திட, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய குளிர்பதனக் கிட்டங்கிகளை அமைத்தல்

(பண்ணையிலிருந்து சந்தை வரை குளிர்படுத்தும் தொடர் அமைத்தல்).

7. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவப்பட முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

## 1.1 விற்பனைக் குழுக்கள்

தமிழ்நாட்டில் தற்போது 20 விற்பனைக் குழுக்கள் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விற்பனைக் குழுக்கள் சனவரி 2003 முதல் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுடனும் மற்றும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன.

## 1.2 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 20 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 273 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், 15 துணை விற்பனைக் கூடங்கள், 15 சோதனைச் சாவடிகள், 108 ஊரகக் கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சாத்தான்குளத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படுமென அறிவித்ததைத் தொடர்ந்து, 30—08—2003 அன்று தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை ஒருசேர விற்பனைக்கூட வளாகத்தில் கூட்டி விளைபொருள் விற்கும் செயல்களை முறைப்படுத்தி, மறைமுக ஏலமுறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்றுத் தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

விளைபொருள் மதிப்பில் 1 விழுக்காட்டளவு விற்பனைக் கட்டணமாக வணிகர்களிடம் வசூலிக்கப்படுகிறது. வணிகர்கள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஆற்றப்படும் பணிகளுக்காக உற்பத்தியாளர்/விற்பனை செய்வோரிடம் எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை





விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.2.1 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வழங்கப்படும் சேவைகள்

சரியான எடை, கிட்டங்கி வசதி, வங்கி வசதி, உடனடியாகப் பணம் வழங்கல், அங்காடி விலை விவர நிலவரம் அறிய வாய்ப்பு, விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, குடிநீர் வசதி, வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி, இலவச மருத்துவ வசதி, இடுபொருள் மையம், எளிதில் பணம் வழங்கும் வசதி, தொலைபேசி மற்றும் நிகரி வசதி போன்ற பல வசதிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக் குழு வாரியான உள்கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் அட்டவணை 2—ல் கொடுக்கப்பட்டுள்ளன.

#### 1.2.1.1 விளைபொருட்கள் அறிவிக்கை செய்தல்

இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 40 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

#### 1.2.1.2 வணிகமுறைத் தரம் பிரித்தல்

உற்பத்தியாளர்களின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ற சரியான விலை கிடைக்க உதவும் நோக்கத்துடன் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 96 வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தித் தரம் பிரிப்பு மையங்கள், 1 புகையிலைத் தரம் பிரிப்பு மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும் கிராமங்களில் விவசாயிகளின் பொருட்களுக்கும் வணிகமுறையாகத் தரம் பிரிக்கப்படுகிறது. இம்மையங்கள் தற்போது 'அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பத் தகவல் மையம்' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இம்மையங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பப் பணி பற்றி விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கிறார்கள்.

### 1.2.1.3 விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன்

சிறு/மிகச் சிறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் பாதிப்பு ஏற்படுத்தும் விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கிட்டங்கிகளில் 6 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, அதிகபட்சமாக ரூ. 50,000/– வரை பெறலாம்.

### 1.2.1.4 வியாபாரிகளுக்குப் பொருளீட்டுக் கடன்

விவசாயிகளிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு உடனடியாகப் பணம் வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில் உரிமம் பெற்ற வணிகர்களுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்படுகின்றது. கொள்முதல் செய்யப்படும் விளைபொருட்களின் மதிப்பில் 50 விழுக்காடு அல்லது ரூபாய் ஒரு இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை பொருளீட்டுக் கடனாக வழங்கப்படுகின்றது. வணிகர்கள் அதிகபட்சமாக 3 மாத காலத்திற்குப் பொருட்களை இருப்பில் வைத்திடலாம்.

## 1.3 தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள், விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமுற்றாலோ ரூ.75,000/– வரை உதவி வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது ஊனமுற்றாலோ, விவசாயியால் நியமிக்கப்பட்ட நபர்/குத்தகைதாரர் மானியத் தொகையினைப் பெறுவதற்கு தகுதியுடையவராகிறார். அவ்வாறு யாரையேனும் நியமனம் செய்யப்படாத நிலையில் குடும்பத்தில் உள்ள சட்டபூர்வமான வாரிசுதாரருக்கு ஒட்டுமொத்த மானியத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், ஒருவருக்கு வருடத்திற்குத் தவணைக் கட்டணமாக ரூ.10/–ஐ உரிய விற்பனைக் குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சமபங்காகச் செலுத்துகின்றன.



## 1.4 அக்மார்க் தரம் பிரித்தல்

"அக்மார்க்" என்பது உணவுப்பண்டங்களின் தரத்திற்கு அளிக்கப்படும் முத்திரையாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும் மற்றும் 1 முதன்மை ஆய்வகமும், 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 'அக்மார்க்' தரம் பிரிப்பின்கீழ், மையத் தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப்பண்டங்களுக்கும், மையத் தொகுப்பிற்கு உட்படாத உணவுப்பண்டங்களுக்கும், தரம் பிரிக்கும் பணியானது பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு உணவுப்பண்டங்கள் தரம் மற்றும் தன்மை அடிப்படையிலான 'அக்மார்க்' முத்திரைச் சீட்டுகள் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மேற்பார்வையில் வழங்கப்படுகின்றன.

## 1.5 கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்

அறுவடைக்குப்பின் ஏற்படும் தானிய இழப்பினைக் குறைக்கும் வகையில் இத்துறையின் மூலமாகக் கிராமங்களில் உலர் களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் திட்டமாகும். இதுவரை ரூ. 10.21 கோடி செலவில் 580 உலர் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, 2003–2004 ஆம் நிதியாண்டில் ரூ. 3.00 கோடி செலவில் 150 உலர் களங்கள் அமைக்கும் பணி எஞ்சியுள்ள பணிகாரணமாக இன்னும் நடைபெற்று வருகின்றது.

# 2. வணிக வளாகம் அமைத்தல்

## 2.1 நெல் வணிக வளாகம்:

ரூ.12.60 கோடி செலவில் மதுரையில் நெல் பயிருக்கென விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயன் பெறும் வகையில் நெல் வணிக வளாகம் கட்டுமானப் பணி நடைபெற்று முடிவுறும் தறுவாயில் உள்ளது.

# 3. வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம்

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதில் சந்தையறிவுத் திறம் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. விவசாயிகள் பல்வேறு

[2004 ஜூலை 29

சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரத்தினை அறிவதன் மூலம் அவர்களின் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலை பெற ஏதுவாகின்றது. இதனைக் கருத்தில்கொண்டு, அனைத்து வசதிகளுடன்கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்களை ரூ. 45.00 இலட்சம் செலவில் 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் அரசு ஆணை பெறப்பட்டு, நடப்பு ஆண்டில் ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இம்மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்தின் வெற்றி மற்றும் பயன் அடிப்படையில் இத்திட்டமானது விரிவுபடுத்தப்படும்.

## 4. வேளாண் ஏற்றுமதி மண்டலம்

### 4.1 வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டது

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் குறிப்பிட்ட வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக கீழ்க்காணும் மூன்று இடங்களில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

#### 4.1.1 தருமபுரி மாவட்டத்தில் கொய் மலர் ஏற்றுமதி மண்டலம்

கொய் மலருக்கென தருமபுரி மாவட்டம் ஓசூரில் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. டிட்கோ நிறுவனமும் மற்றும் தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள "டான்ஃப்ளோரா" என்ற கூட்டு நிறுவனம் உள்கட்டமைப்பு வசதிகளான பதப்படுத்தும் தொழிலகம், பொது விற்பனை வசதி ஆகியவற்றை ஏற்படுத்தித் தருதல், மலர் மையங்களுக்கான நிலத்தினைக் குத்தகைக்கு அளித்தல் போன்ற வசதிகளை அளிக்கும். இந்த மையம் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக விரைவில் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

#### 4.1.2 நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார் பங்கேற்பில் நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உடன்பாட்டுக் குறிப்பில் அபிடா நிறுவனமும் தமிழ்நாடு அரசு வேளாண் துறையும் 6–2–2003–ல் கையெழுத்திட்டன. இந்த ஏற்றுமதி மண்டலத்தில் குளிர்பதனக்



2004 ஜூலை 29]

கிட்டங்கிகள், குளிரூட்டப்பட்ட ஊர்தி, பொதுவான அங்காடி வசதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

#### 4.1.3 தேனி மாவட்டத்தில் மாம்பழத்திற்கான ஏற்றுமதி மண்டலம்

மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக தனியார் பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உடன்பாட்டுக் குறிப்பில் அபிடா நிறுவனமும், தமிழ்நாடு அரசு வேளாண் துறையும் 6–2–2003–ல் கையெழுத்திட்டன. இந்த வேளாண் ஏற்றுமதி மண்டலத்தில் சேகரிப்பு மையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், குளிர்பதனக் கிட்டங்கி அமைத்தல் போன்ற வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

### 4.2 வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

#### 4.2.1 கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம்

முந்திரிக்கென கடலூர் மாவட்டத்தில் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக தனியார் துறை பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான கருத்துரு அரசு மூலமாக மைய அரசின் அபிடா நிறுவனத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

#### 4.2.2 திருச்சி மாவட்டத்தில் வாழைக்கான ஏற்றுமதி மண்டலம்

வாழைக்கென திருச்சி மாவட்டத்தில் ரூ.10.00 கோடி திட்டச் செலவில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக தனியார் துறை பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான கருத்துரு அரசு மூலமாக மைய அரசின் அபிடா நிறுவனத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 5. குளிர்பதன வைப்பு அலகு அமைத்தல்

வேளாண் விளைபொருட்களில், குறிப்பாக பழங்கள் மற்றும் காய்கறிகளில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திடும் நோக்கில் கீழ்க்காணும் இடங்களில் தனியார் துறை மூலம் குளிர்பதன வைப்பு அலகுகள் அமைத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது:

[2004 ஜூலை 29

* திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம்
* திருச்சிராப்பள்ளி
* வேலூர்
* சேலம் மாவட்டத்தில் தலைவாசல்
* கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை
* திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டு
* விருதுநகர்
* தூத்துக்குடி மாவட்டத்தில் விளாத்திக்குளம்
* தேனி மாவட்டத்தில் சின்னமனூர்

இந்த ஒன்பது இடங்களில் ஒட்டன்சத்திரம், உடுமலைப்பேட்டை மற்றும் திருச்சிராப்பள்ளியில் குளிர்பதன வைப்பு அலகுகள் அமைத்திட தனியார் நிறுவனங்களை துறை தெரிவு செய்துள்ளது.

## 6. உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள்

விவசாயிகளுக்கு நிலையான நியாய விலையை உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் உறுதியளித்ததனைத் தொடர்ந்து உணவு பதப்படுத்தும் தொழில் தற்போது வளர்ச்சி பெற்று வருவதுடன் பதப்படுத்தப்பட்ட வகையில் நுகர்வோருக்கு, ஆண்டு முழுவதும் உணவுப் பண்டங்கள் கிடைப்பதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. இதன் மூலம் பெருமளவில் உணவுப்பொருள் இழப்பும் தவிர்க்கப்படுகிறது. விவசாயிகள் தாமான பதப்படுத்துதலுக்கேற்ப விளைபொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் அவர்களுக்குக் கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்பு கிடைக்கின்றது. நிலக்கோட்டை தொழிற்பேட்டையில் (திண்டுக்கல் மாவட்டம்) அரசு நிலையாணை எண் 23, வேளாண்மை (வே.வி.3) துறை, நாள் 23–01–2004–ன்படி ரூ.13.00 கோடி செலவில் உணவுப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் ரூ.94.70 கோடி முதலீட்டுத் தொகையில் 71 உணவு பதப்படுத்தும்



2004 ஜூலை 29]

தொழிலகங்களுக்கு ரூ. 10.94 கோடி முதலீட்டு மானியத் தொகை பெற மைய அரசின் உணவு பதப்படுத்தும் அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் முக்கியப் பணிகள் வருமாறு:

### 7.1. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள மையங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்வதால் கிடைக்கும் ஆதாயங்கள் குறித்த விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளைச் செய்து வருகிறது.

### 7.2. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்

சேலத்தை மையமாகக் கொண்டு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறைப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின் மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 7.3. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் விற்பனை அறக்கட்டளை இருக்கை அமைத்தல்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக் கல்வி மையத்திற்கு ரூ. 50.00 இலட்சம் வைப்பு நிதியாக அளித்து ஒரு அறக்கட்டளை இருக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியிலிருந்து பெறப்படும் வட்டியின் மூலம் பல ஆராய்ச்சிகளும், பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

## 7.4. கட்டுமானப் பணிகள்

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், ஊரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணம் வழங்கல் அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உட்புறச் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 7.5.விற்பனை மேம்பாட்டு நிதி

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தமக்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்கு பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 30 விழுக்காடு, சந்தை மேம்பாட்டு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலிருந்து விற்பனை மேம்பாடுகளுக்கான விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

## 8. விலை முன்னறிவிப்பு, ஏற்றுமதி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி – இறக்குமதி ஆராய்ச்சி

### 8.1 தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம் தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்துதல்

அரசாணை எண் 170, வேளாண்மை (வே.வி.3) துறை, நாள் 25–01–2004–ன்படி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம், தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேசச் சந்தையில் முக்கிய விளைபொருட்களுக்கான முந்தைய, தற்போதைய விலை விவரங்களைச் சேகரித்து . அவற்றை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் எதிர்கால ஏற்றுமதிக்கான விலையை முன்னறிவிப்பு செய்தல், ஏற்றுமதிக்கு உகந்த நாடுகளைக் கண்டறிதல் போன்ற பணிகளை இப்பிரிவு மேற்கொள்ளும். இப்பணிகளுக்கான



மேற்படி பிரிவு தேவைப்படும்பொழுது தேசிய மற்றும் சர்வதேசச் சந்தைகளை நேரடியாகப் பார்வையிட்டு, தேர்வு செய்யும். மேலும், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம் மற்றும் தகவல் சேகரிக்கும் பிரிவால் கண்டறியப்பட்ட உள்நாடு மற்றும் வெளிநாடு சந்தைகளில் விளைபொருட்களுக்கு எதிர்வரும் மாதங்களில் நிலவக்கூடிய விலை விவரங்களைக் கண்டறிந்து அவ்விவரங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யப்படும். இதுதவிர, அண்டை மாநிலங்களில் முக்கிய விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரங்களை அறிந்து விவசாயிகளுக்குத் தெரிவிப்பதன் மூலம், விவசாயிகள் அவர்களுடைய விளைபொருள்களுக்கு நல்ல விலை பெறவும், பருவத்திற்கேற்ற பயிர்களைத் தேர்வு செய்யவும், அவர்களுடைய விளைபொருட்களைக் குறித்த நேரத்தில் விற்பனை செய்யவும் வழிவகை செய்யப்படும்.

ஏற்றுமதியாளர்கள் தங்களது விளைபொருட்களை ஏற்றுமதி செய்வது குறித்து, யாரை அணுக வேண்டும், எங்கு அணுக வேண்டும் என்பன போன்ற விவரங்கள் அளிக்கப்படும். ஏற்றுமதியில் ஏற்படும் பிரச்சினைகள், ஏற்றுமதிப் பொருள்கள் தொடர்புடைய முகவர்கள் வாயிலாகத் தீர்க்கப்படும். இந்த தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்த முதலாண்டிற்கு ரூ. 20.00 இலட்சமும், இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு முறையே ரூ. 12.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் பணி, வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில் இதனைத் தொடர்வதற்காக மாற்று நிதி ஆதாரங்களைக் கொண்டு இத்தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு தொடரப்படும்.

## 9. மஞ்சள் வணிக வளாகம்

ஈரோடு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள இடத்தில் ரூ36.32 கோடி மொத்த செலவில் ஒரு புதிய மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது. இவ்வளாகத்தில் நவீன உள்கட்டமைப்பு வசதிகளான தகவல் தொடர்பு' மையம், பரிவர்த்தனைக் கூடங்கள், வங்கி, அக்மார்க் தரக் கட்டுப்பாடு, ஆய்வகம், விவசாயிகள் ஓய்வு எடுக்க வசதி போன்றவை இடம் பெறும். இதில் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் ஈரோடு விற்பனைக் குழுவின் நிதியிலிருந்து ரூ. 11.32 கோடி முதலீடு செய்யப்படும்,

## அட்டவணை–1

### மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், சோதனைச் சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலை தரம் பிரிப்பு மையம் விவரங்கள்

(எண்களில்)

| வ.எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | துணை விற்பனைக் கூடங்கள் | சோதனைச் சாவடிகள் | ஊரகக் கிட்டங்கிகள் | வணிகமுறை தரம் பிரிப்பு மையம் | பருத்தி தரம் பிரிப்பு மையம் | புகையிலை தரம் பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 14 | 1 | 2 | 5 | 7 | - | - |
| 2 | வேலூர் | 12 | - | - | 4 | 5 | - | - |
| 3 | தி.மலை | 16 | -- | -- | 7 | 10 | -- | -- |
| 4 | கடலூர் | 10 | 1 | -- | 5 | 6 | -- | -- |
| 5 | விழுப்புரம் | 18 | -- | -- | 7 | 13 | 1 | -- |
| 6 | சேலம் | 19 | -- | -- | 2 | 6 | -- | -- |
| 7 | தர்மபுரி | 16 | -- | 2 | 4 | 5 | -- | -- |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 5 | -- | 12 | 2 | 3 | -- |
| 9 | ஈரோடு | 25 | 6 | 1 | 7 | 10 | 2 | -- |
| 10 | திருச்சி | 19 | 2 | 4 | 10 | 4 | -- | 1 |
| 11 | தஞ்சாவூர் | 13 | -- | 2 | 4 | 3 | -- | -- |
| 12 | புதுக்கோட்டை | 10 | -- | 1 | 2 | 2 | -- | -- |
| 13 | மதுரை | 6 | -- | -- | 2 | 2 | -- | -- |
| 14 | இராமநாதபுரம் | 20 | -- | 1 | 10 | 6 | 1 | -- |
| 15 | திருநெல்வேலி | 20 | -- | -- | 13 | 6 | 3 | -- |
| 16 | கன்னியாகுமரி | 6 | -- | 2 | 5 | 2 | -- | -- |
| 17 | தேனி | 7 | -- | -- | 1 | 1 | 1 | -- |
| 18 | திண்டுக்கல் | 8 | -- | -- | 5 | 4 | -- | -- |
| 19 | நாகப்பட்டினம் | 8 | -- | -- | 1 | 1 | -- | -- |
| 20 | திருவாரூர் | 8 | -- | -- | 2 | 1 | -- | -- |
| | மொத்தம் | 273 | 15 | 15 | 108 | 96 | 11 | 1 |



## அட்டவணை–2

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள உள்கட்டமைப்பு வசதிகள்

(எண்களில்)

| வ. எண் | விற்பனைக் குழுக்கள் | சொந்த நிலம் | கிட்டங்கி | ஊரகக் கிட்டங்கி | பரிவர்த்தனைக் கூடம் | உலர் களம் | விவசாயிகள் ஓய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7 | -- | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2 | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3 | தி.மலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4 | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5 | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6 | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | -- | 4 | 3 |
| 7 | தர்மபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9 | ஈரோடு | 14 | 12 | 9 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10 | திருச்சி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11 | தஞ்சாவூர் | 10 | 11 | 4 | 17 | 7 | 6 | 9 | 9 |
| 12 | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13 | மதுரை | 4 | -- | 2 | 1 | 3 | 3 | 2 | 3 |
| 14 | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15 | திருநெல்வேலி | 15 | 3 | 12 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16 | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| 17 | தேனி | 4 | -- | 2 | 3 | 6 | 1 | 3 | 4 |
| 18 | திண்டுக்கல் | 6 | 1 | 4 | 6 | 7 | -- | 5 | 5 |
| 19 | நாகப்பட்டினம் | 1 | 1 | 1 | 2 | 1 | -- | 1 | 1 |
| 20 | திருவாரூர் | 1 | -- | 2 | 1 | 1 | 2 | 1 | 1 |
| | மொத்தம் | 167 | 129 | 108 | 194 | 158 | 68 | 171 | 143 |

## அட்டவணை-3

### விற்பனைக் குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

| 1. காஞ்சீபுரம் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 1. வேலூர் | 1. திருவண்ணாமலை |
| 2. திருத்தணி | 2. திருப்பத்தூர் | 2. ஆரணி |
| 3. திருவள்ளூர் | 3. ஆற்காடு | 3. வந்தவாசி |
| 4. செங்குன்றம் | 4. அரக்கோணம் | 4. சேத்துப்பட்டு |
| 5. மதுராந்தகம் | 5. வாணியம்பாடி | 5. செய்யார் |
| 6. உத்திரமேரூர் | 6. காவேரிப்பாக்கம் | 6. போளூர் |
| 7. பொன்னேரி | 7. குடியாத்தம் | 7. செங்கம் |
| 8. திருக்கழுக்குன்றம் | 8. கலவை | 8. புதுப்பாளையம் |
| 9. சுங்குவார்சத்திரம் | 9. அம்மூர் | 9. வாணாபுரம் |
| 10. பள்ளிப்பட்டு | 10. காட்பாடி | 10. வேட்டவலம் |
| 11. ஊத்துக்கோட்டை | 11. ஆம்பூர் | 11. தெள்ளார் |
| 12. அச்சிறுப்பாக்கம் | 12. திமிரி | 12. மங்கல மாமண்டூர் |
| 13. கும்மிடிப்பூண்டி | | 13. தேசூர் |
| 14. நசரத்பேட்டை | | 14. பெரணமல்லூர் |
| | | 15. தூசி |
| | | 16. கீழ்பென்னாத்தூர். |

| 4. கடலூர் | 5. விழுப்புரம் | |
|---|---|---|
| 1. விருத்தாசலம் | 1. திண்டிவனம் | 11. மணலூர்பேட்டை |
| 2. கடலூர் | 2. திருக்கோவிலூர் | 12. அவலூர்பேட்டை |
| 3. பண்ருட்டி | 3. உளுந்தூர்பேட்டை | 13. மரக்காணம் |
| 4. திட்டக்குடி | 4. விழுப்புரம் | 14. விக்கிரவாண்டி |
| 5. காட்டுமன்னார் கோவில் | 5. சின்னசேலம் | 15. அனந்தபுரம் |
| 6. சிதம்பரம் | 6. கள்ளக்குறிச்சி | 16. வளத்தி |
| 7. குறிஞ்சிப்பாடி | 7. செஞ்சி | 17. மூங்கில்துரைப்பட்டு |
| 8. சேத்தியாதோப்பு | 8. தியாகதுர்கம் | 18. கிளியனூர் |
| 9. ஸ்ரீமுஷ்ணம் | 9. சங்கராபுரம் | |
| 10. புவனகிரி | 10. திருவெண்ணெய் நல்லூர் | |



| 6. சேலம் | 7. தர்மபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| 1. சேலம் | 1. தர்மபுரி | 1. திருப்பூர் |
| 2. ஆத்தூர் | 2. கிருஷ்ணகிரி | 2. அவிநாசி |
| 3. நாமக்கல் | 3. ஒசூர் | 3. சேவூர் |
| 4. இராசிபுரம் | 4. கெலமங்கலம் | 4. அன்னூர் |
| 5. திருச்செங்கோடு | 5. பாலக்கோடு | 5. காரமடை |
| 6. சங்ககிரி | 6. பெண்ணாகரம் | 6. கோயம்புத்தூர் |
| 7. கொங்கணாபுரம் | 7. போச்சம்பள்ளி | 7. சூலூர் |
| 8. கொளத்தூர் | 8. காவேரிப்பட்டினம் | 8. பல்லடம் |
| 9. வேலூர் | 9. ஊத்தங்கரை | 9. உடுமலைப்பேட்டை |
| 10. மேச்சேரி | 10. அரூர் | 10. ஆனைமலை |
| 11. வாழப்பாடி | 11. பாப்பிரெட்டிப்பட்டி | 11. பொள்ளாச்சி |
| 12. தம்மம்பட்டி | 12. கொளத்தூர் | 12. மலையடிப்பாளையம் |
| 13. நாமகிரிப்பேட்டை | 13. பர்கூர் | 13. நெகமம் |
| 14. தலைவாசல் | 14. இராயகோட்டை | 14. கிணத்துக்கடவு |
| 15. ஓமலூர் | 15. தென்கனிக்கோட்டை | 15. தொண்டாமுத்தூர் |
| 16. காடையம்பட்டி | 16. பாப்பாப்பட்டி | 16. மடத்துக்குளம் |
| 17. கெங்கவல்லி | | 17. பெதப்பம்பட்டி |
| 18. கருமந்துறை | | 18. பொங்கலூர் |
| 19. சோளக்காடு | | |

[2004 ஜூலை 29

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 1. ஈரோடு | 1. ஜெயங்கொண்டம் | 1. அதிராம்பட்டினம் |
| 2. அவல்பூந்துறை | 2. கரூர் | 2. அம்மாப்பேட்டை |
| 3. கொடுமுடி | 3. அரியலூர் | 3. பூதலூர் |
| 4. சிவகிரி | 4. மணப்பாறை | 4. கும்பகோணம் |
| 5. சித்தோடு | 5. ஆண்டிமடம் | 5. மதுக்கூர் |
| 6. பவானி | 6. துறையூர் | 6. ஒரத்தநாடு |
| 7. பூதப்பாடி | 7. பெரம்பலூர் | 7. பட்டுக்கோட்டை |
| 8. அந்தியூர் | 8. லால்குடி | 8. பாபநாசம் |
| 9. மயிலம்பாடி | 9. திருச்சிராப்பள்ளி | 9. பேராவூரணி |
| 10. கவுந்தப்பாடி | 10. தொட்டியம் | 10. தஞ்சாவூர் |
| 11. கோபி | 11. மணச்சநல்லூர் | 11. வல்லம் |
| 12. நம்பியூர் | 12. குளித்தலை | 12. திருப்பனந்தாள் |
| 13. வெள்ளக்கோவில் | 13. துவரங்குறிச்சி | 13. பாப்பாநாடு |
| 14. சத்தியமங்கலம் | 14. இரும்பூதிப்பட்டி | |
| 15. புஞ்சைபுளியம்பட்டி | 15. சின்னதாராபுரம் | |
| 16. தாளவாடி | 16. புள்ளம்பாடி | |
| 17. பெருந்துறை | 17. தாத்தையங்கார் பேட்டை | |
| 18. குன்னத்தூர் | 18. மேலணைக்குழி | |
| 19. காங்கேயம் | 19. அரும்பாவூர் | |
| 20. வெள்ளாங்கோவில் | | |
| 21. தாராபுரம் | | |
| 22. மூலனூர் | | |
| 23. அலங்கியம் | | |
| 24. முத்தூர் | | |
| 25. எழுமாத்தூர் | | |



2004 ஜூலை 29]

| 12. புதுக்கோட்டை | 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|---|
| 1. ஆலங்குடி | 1. திருமங்கலம் | 1. விருதுநகர் |
| 2. அறந்தாங்கி | 2. உசிலம்பட்டி | 2. இராஜபாளையம் |
| 3. புதுக்கோட்டை | 3. மேலூர் | 3. சாத்தூர் |
| 4. கந்தர்வக்கோட்டை | 4. மதுரை | 4. அருப்புக்கோட்டை |
| 5. ஆவுடையார்கோவில் | 5. டி.கல்லுப்பட்டி | 5. ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 6. கீரனூர் | 6. வாடிப்பட்டி | 6. வத்திராயிருப்பு |
| 7. கீரமங்கலம் | | 7. வெம்பக்கோட்டை |
| 8. பொன்னமராவதி | | 8. சிவகங்கை |
| 9. இலுப்பூர் | | 9. திருபுவனம் |
| 10. கரம்பக்குடி | | 10. மானாமதுரை |
| | | 11. சிங்கம்புணரி |
| | | 12. காரைக்குடி |
| | | 13. இளையான்குடி |
| | | 14. தேவக்கோட்டை |
| | | 15. இராமநாதபுரம் |
| | | 16. பரமக்குடி |
| | | 17. கமுதி |
| | | 18. திருவாடானை |
| | | 19. இராசசிங்கமங்கலம் |
| | | 20. முதுகுளத்தூர் |

| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி | 17. தேனி |
|---|---|---|
| 1. கோவில்பட்டி | 1. ஈத்தாமொழி | 1. தேனி |
| 2. சங்கரன்கோவில் | 2. வடசேரி | 2. கம்பம் |
| 3. தூத்துக்குடி | 3. களியக்காவிளை | 3. போடிநாயக்கனூர் |
| 4. புதூர் | 4. திங்கள்சந்தை | 4. சின்னமனூர் |
| 5. கடம்பூர் | 5. குலசேகரம் | 5. ஆண்டிப்பட்டி |
| 6. கழுகுமலை | 6. தொடுவட்டி | 6. உத்தமபாளையம் |
| 7. தென்காசி | | 7. பெரியகுளம் |
| 8. அம்பாசமுத்திரம் | | |
| 9. வள்ளியூர் | | |
| 10. ஸ்ரீவைகுண்டம் | | |
| 11. திருநெல்வேலி | | |
| 12. விளாத்திகுளம் | | |
| 13. கடையநல்லூர் | | |
| 14. திசையன்விளை | | |
| 15. பாவூர்சத்திரம் | | |
| 16. திருவேங்கடம் | | |
| 17. எட்டையபுரம் | | |
| 18. சிவகிரி | | |
| 19. ஆலங்குளம் | | |
| 20. சாத்தான்குளம் | | |

| 18. திண்டுக்கல் | 19. நாகப்பட்டினம் | 20 திருவாரூர் |
|---|---|---|
| 1. திண்டுக்கல் | 1. கீவளூர் | 1. வலங்கைமான் |
| 2. ஒட்டன்சத்திரம் | 2. குத்தாலம் | 2. கொரடாச்சேரி |
| 3. பழநி | 3. மயிலாடுதுறை | 3. மன்னார்குடி |
| 4. நத்தம் | 4. நாகப்பட்டினம் | 4. பூந்தோட்டம் |
| 5. வத்தலகுண்டு | 5. செம்பனார்கோவில் | 5. வடுவூர் |
| 6. கோபால்பட்டி | 6. சீர்காழி | 6. குடவாசல் |
| 7. வடமதுரை | 7. வேதாரண்யம் | 7. திருவாரூர் |
| 8. வேடசந்தூர் | 8. திருப்பூண்டி | 8. திருத்துறைப்பூண்டி |



## அட்டவணை–4

### தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|---|
| 1 | சென்னை | சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையரகத்தில் அமைந்துள்ள முதன்மை ஆய்வகம் |
| .2 | வேலூர் | வேலூர் |
| 3 | கடலூர் | கடலூர் |
| 4 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி–1 |
| | | திருச்சிராப்பள்ளி–2 |
| 6 | கரூர் | கரூர் |
| 7 | மதுரை | மதுரை–1 |
| | | மதுரை–2 |
| 8 | தேனி | தேனி |
| 9 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10 | விருதுநகர் | விருதுநகர் |
| 11 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13 | கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14 | சேலம் | சேலம் |
| 15 | தர்மபுரி | தர்மபுரி |
| 16 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17 | ஈரோடு | பெருந்துறை, ஈரோடு–1, ஈரோடு–2, காங்கேயம்–1, காங்கேயம்–2, வெள்ளக்கோவில், சித்தோடு |

## அத்தியாயம் – 9

## மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்புகள்

### தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம்–வரையறுக்கப்பட்டது (டேன்ஹோப்)

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் - வரையறுக்கப்பட்டது (டேன்ஹோப்) 1995 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு தொடக்கக் கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983–ன்கீழ் பதிவு செய்யப்பட்டு 1–1–1995 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பணிகளை ஊக்குவித்து நல்ல வணிகத் தொடர்பினை ஏற்படுத்தி மேம்பாடடையச் செய்வதுதான் இத்துறையின் தலையாய நோக்கமாகும். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் இயக்குநர் இந்நிறுவனத்தின் தனி அலுவலர் ஆவார். தமிழ்நாடு மாநிலம் முழுவதும் இந்நிறுவனத்தின் செயல்பாடு இருந்துவருகிறது. தோட்டக்கலை இணை இயக்குநர் இதன் மேலாண்மை இயக்குநர் ஆவார்.

இந்நாளில் 3,870 தோட்டக்கலை விவசாயிகள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். அவர்களால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3.87 இலட்சம். இச்சங்கம் 2001–2002 முதல் 2003–2004 வரையிலான மூன்றாண்டு காலத்தில் பின்வரும் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 2001–2002 | – | ரூ.38.97 இலட்சம் |
| 2002–2003 | – | ரூ.79.18 இலட்சம் (தோட்டக்கலைத் துறைக்கு 50.28 இலட்சம் மதிப்புள்ள முந்திரிக் கன்றுகளை வழங்கியதையும் உள்ளடக்கியது) |
| 2003–2004 | – | ரூ.31.06 இலட்சம் |

மலர்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலமாக அனுமதிக்கப் பட்டுள்ள நீலகிரி மாவட்டத்தில் 2003-2004 ஆம் ஆண்டில் மலர்



சாகுபடியாளர்கள் பயனடையும் வகையில் குளிர்பதன அறை ஏற்படுத்தவும், குளிரூட்டப்பட்ட வாகனம் ஒன்றைக் கொள்முதல் செய்யவும் ரூ.24.00 இலட்சம் நிதி உதவி கோரி புது தில்லியிலுள்ள வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்திற்குக் (APEDA) கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

தற்பொழுது சுய உதவிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்வதைக் கருத்திற்கொண்டும் அவர்களது உற்பத்தியினை விற்பனை செய்வதற்கு உதவிடும் வகையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

குழு அடிப்படையிலான தோட்டக்கலை மேம்பாட்டுப் பணிகளை வலுப்படுத்த டேன்ஹோப் முக்கியத்துவம் அளிக்கும்.

[2004 ஜூலை 29

## கோரிக்கை எண் 5 வேளாண்மைத் துறை 2004–2005

## 2004–2005–ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றி மதிப்பீடு

## 2004–2005 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ...

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கூடுதல் |
|---|---|---|---|
| மானியக் கோரிக்கை—அனுமதித்தது | 875,68,13 | 6,72,78 | 88,40,91 |
| மொத்த தொகை—சாட்டியது | 3 | | 3 |

| கணக்குத் தலைப்பு | 2002–03 கணக்குகள் | 2003–04 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2003–04 திருத்த மதிப்பீடு | 2004–05 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 2059 பொதுப் பணிகள் | 42,43 | 84,59 | 90,00 | 1,15,00 |
| 2401 பயிர் வளர்ப்பு | 280,05,41 | 348,61,76 | 442,31,93 | 580,27,04 |
| 2402 மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 47,55,15 | 76,80,73 | 79,06,37 | 90,26,63 |
| 2415 வேளாண் ஆராய்ச்சியும் கல்வியும் | 63,09,02 | 64,61,82 | 60,21,70 | 73,52,89 |
| 2435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 31,97,09 | 37,04,06 | 34,05,01 | 36,83,31 |
| 2501 ஊரக வளர்ச்சி சிறப்பு திட்டங்கள் | 5,38,85 | 11,00,00 | 6,00,00 | 7,00,00 |
| 2551 மலைப் பகுதிகள் | 5,35,20 | 14,20,51 | 11,00,75 | 13,42,09 |
| 2702 சிறுபாசனம் | 7,77,17 | 9,52,34 | 7,74,59 | 8,19,71 |
| 2705 பாசனப் பகுதி மேம்பாடு | 45,96,76 | 50,12,93 | 49,56,11 | 50,88,52 |
| 3451 தலைமைச் செயலகம்—பொருளாதாரப் பணிகள் | 3,27,51 | 3,77,89 | 3,63,18 | 3,87,13 |
| 4401 பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 4,44,42 | 5,77,26 | 5,89,03 | 6,05,77 |
| 4415 வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி குறித்த மூலதனச் செலவு | 62 | 1 | 30,35 | 1 |
| 4435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 22 | . | 1 | 7,00 |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | | 1 | . | . |
| 6401 பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 3,24,79 | 55 | 55 | |



2004 ஜூலை 29]

## கோரிக்கை 5 – வேளாண்மைத் துறை

## 2004–05 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

## ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

(ரூபாய் இலட்சத்தில்)

| | துறைத் தலைவர் | | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 05 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 10,87,97 | - | 10,87,97 |
| 05 02 | வேளாண்மை இயக்ககம் | அனுமதித்தது | 290,66,64 | 1,00,11 | 291,66,75 |
| 05 03 | வேளாண்மை விற்பனை இயக்ககம் | அனுமதித்தது | 23,83,43 | 7,00 | 23,90,43 |
| 05 04 | விதைச் சான்று இயக்ககம் | சாட்டியது | 1 | - | 1 |
| | | அனுமதித்தது | 9,16,70 | - | 9,16,70 |
| 05 05 | தோட்டக்கலை, பலைத் தோட்டப் பயிர்கள் | சாட்டியது | 1 | - | 1 |
| | | அனுமதித்தது | 243,16,20 | 4,45,67 | 247,61,87 |
| 05 06 | வேளாண்மைப் பொறியியல் | சாட்டியது | 1 | - | 1 |
| | | அனுமதித்தது | 243,16,20 | 4,45,67 | 247,61,87 |
| 05 07 | வேளாண் பொறியியல் மற்றும் பணிகள் கூட்டுறவு இணைப்பகம் | அனுமதித்தது | 11,61 | - | 11,61 |
| 05 08 | வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 70,39,98 | - | 70,39,98 |
| 05 09 | வருவாய் நிருவாக ஆணையரகம் | அனுமதித்தது | 175,70,00 | - | 175,70,00 |
| | மொத்தம் | சாட்டியது | 3 | - | 3 |
| | | அனுமதித்தது | 875,68,13 | 67278 | 882,40,91 |

[2004 ஜூலை 29 .

## 2004–05 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ எண் | திட்டப் பணிகள் விபரம் | மொத்தம் |
|---|---|---|
| | **வேளாண்மை** | |
| 1 | பழைய வேளாண்மை விரிவாக்க மையங்களை பழுதுபார்த்தல் | 100.00 |
| 2 | நுண்முறை பண்ணைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இரசாயன உரங்கள் பற்றிய பரிந்துரைக்குரிய (DSSIFER) ஆதரவு ஏற்பாட்டை செயல்படுத்தல் | 25.00 |
| 3 | ஆசு தென்னங்கன்று வளர்ப்புத் திட்டத்தில் மூழ்கு நிலை மோட்டார் பொருத்தப்பட்ட துளைக் கிணறுகளை அமைத்தல் | 11.00 |
| 4 | உழவர் பயிற்சி மையங்கள் மூலம் விவசாயிகளிடையே [illegible] திட்டத்தை பிரபலப்படுத்தல் | 43.20 |
| 5 | தற்போதுள்ள (எச்பிஎல்சி)—க்கு தேவையான உதிரிபாகங்களையும் துணை பாகங்களையும் வாங்குதல் | 4.90 |
| 6 | தென்னங்கன்றுகளுக்கான பாதுகாப்புக் கொட்டகைகள் அமைத்தலும், தற்போது இருக்கும் கட்டடங்களில் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதலும் | 20.00 |
| 7 | வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு தார்பாலின்கள் வழங்குதல் | 10.00 |
| | **மொத்தம்** | **214.10** |
| | **தோட்டக்கலை** | |
| 8 | மாநிலத் தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் | 120.00 |
| 9 | தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு முகவரமைப்பு | 20.00 |
| | **மொத்தம்** | **140.00** |
| | **வேளாண்மை பொறியியல்** | |
| 10 | பழைய வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வாங்குதல் | 20.00 |
| 11 | ஆழ உழவு தொழில்நுட்பத்தை பரப்புதல் | 44.00 |
| 12 | செயல் முறை விளக்கத் திட்டம் மற்றும் பரிசோதனைத் திட்டம் | 41.00 |
| 13 | சேலம் மாவட்டத்தில் நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுக்காக Global Information System ஏற்படுத்துதல் | 15.00 |
| 14 | தலைமையிடத்திலும் (தலைமைப் பொறியாளர் அலுவலகம்) அனைத்து மண்டலங்களிலும் (கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்) GIS மையத்தை நிலை உயர்த்தல் | 16.20 |
| | **மொத்தம்** | **136.20** |



2004 ஜூலை 29]

| வ எண் | திட்டப் பணிகளின் விபரம் | மொத்தம் |
|---|---|---|
| | **விதைச் சான்றளிப்பு** | |
| 15 | சோதனை செய்வதற்காக இயக்ககத்தில் உள்ள கண்ணாடி அறையை நிலை உயர்த்த வகை செய்தல் | 2.00 |
| 16 | நிழல்பட நகல் எடுக்கும் வசதியுள்ள டிஜிட்டல் கேமிரா வழங்குதல் | 1.00 |
| 17 | கோயம்புத்தூர், மாநில விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடத்தில் எலிசா சிறுதளைப் பையைப் பயன்படுத்தி BT நச்சினை கண்டுபிடிப்பதற்கு வசதிகள் செய்து கொடுத்தல் | 4.78 |
| 18 | எல் சி டி ப்ரொஜெக்டர் வழங்குவதன் மூலம் விதைச் சான்றளிப்பு துறையின் பயிற்சிப் பிரிவை வலுப்படுத்தல் | 1.25 |
| 19 | கோயம்புத்தூர் விதைச் சான்றளிப்பு இயக்குநர் அலுவலகத்தில் முதன்மை மின் அமைப்பை புதுப்பித்தலும் (power line) மின்வழங்கு அமைப்பை வலுப்படுத்தலும் | 0.60 |
| 20 | கோயம்புத்தூர் விதைச் சான்றளிப்பு இயக்ககத்துடன் இணைந்த சிறிய அளவிலான விதை பரிசோதனை ஆய்வுக் கூடத்திற்கு மின் உற்பத்தி இயந்திரம் வாங்குதல் | 1.60 |
| 21 | விதைச் சான்றளிப்பு இயக்ககத்திலுள்ள பயிற்சியாளர் இல்லத்திற்கு தொலைபேசி வசதி செய்து கொடுத்தல் | 0.07 |
| | **மொத்தம்** | **11.30** |
| | **வேளாண்மை பல்கலைக்கழகம்** | |
| 22 | வேளாண்மை மற்றும் தரிசு நில மேம்பாட்டிற்காக கழிவு நீரை உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு உகந்த முறையில் நிருவகித்தல் | 6.50 |
| 23 | இராமநாதபுரம் CSRC இராமநாதபுரம் கடற்கரை மாவட்டங்களில் மானாவாரிப் பகுதிகளில் அரிசி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் ஆராய்ச்சியில் உழவர்களைப் பங்கு பெறச் செய்தல் | 4.25 |
| 24 | கோசுக்கீரை வகை காய்கறிப் பயிர்களில் பூச்சிகள் கட்டுப்பாட்டு நிருவாகத்தில் இரசாயன உரங்கள் அல்லாத முறைகளைப் பயன்படுத்துதல்—வேளாண் பூச்சியியல் துறை, கோயம்புத்தூர் | 3.00 |
| 25 | நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம், அரிசியில் விதைக் கரு மற்றும் இனப் பெருக்க விதைகள் உற்பத்தியை வலுப்படுத்துவதற்கான திட்டம் | 4.00 |

| வ எண் | திட்டப் பணிகளின் விபரம் | மொத்தம் |
|---|---|---|
| 26 | தமிழ்நாட்டிலுள்ள வறட்சிப் பகுதிகளில் நீடித்தவகையிலான நீர் மற்றும் பயிர் விளைச்சலுக்கான குறைந்த செலவிலான மற்றும் செலவு ஏதுமில்லாத பயிரிடும் முறை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப உத்திகள்—திட்டம் மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், கோயம்புத்தூர் | 2.25 |
| 27 | வெளியில் வைக்கோலில் காளான் வளர்ப்பதற்கான முறையை ஏற்படுத்துதல்—தாவர நோக்குறி ஆய்வுத் துறை, கோயம்புத்தூர் | 3.82 |
| 28 | காட்டாமணக்கு 'Jatropha curcas' பயிரில் பயிர் எண்ணிக்கை மற்றும் ஊட்டச்சத்துத் தேவையை நிலைப்படுத்தி உயர் விளைச்சல் மற்றும் தரத்தினை அடைதல் | 3.41 |
| 29 | பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்காமல் தக்காளி பயிரிடுவதைப் பிரபலமாக்குதல், வேளாண் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட நோய் எதிர்ப்பு திறன்கொண்ட கலப்பினங்களைப் பயன்படுத்தல் | 2.83 |
| 30 | ஆழியார்நகர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் ஆகிய கல்லூரிகள் மூலம் உழவர்களுக்கான தகவல் தளம் அடிப்படையில் அமைந்த கலந்தாய்வுக் கட்டமைப்புப் பணி | 3.00 |
| 31 | கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் ஆகிய கல்லூரிகள் மூலம் உழவர்களுக்கான தகவல் தளம் அடிப்படையில் அமைந்த கலந்தாய்வுக் கட்டமைப்புப் பணி | 4.00 |
| 32 | வருமானம் மற்றும் வேலைவாய்ப்பை நிலைப்படுத்துவதற்காக வேளாண்மையை ஏற்றுமதி நோக்கில் அமைந்த வணிகமயமாக்குவது தொடர்பாக பயிரிடும் முறையில் வளவாய்ப்பு மாற்றம் | 2.92 |
| | மொத்தம் | 39.98 |
| | பெரு மொத்தம் | 541.58 |



# இணைப்பு - V

*(132 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2004–2005

### பட்டு வளர்ச்சித் துறை

*1.1* தமிழகத்திலுள்ள அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே தமிழக அரசின் கொள்கையாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்ச திட்டத்தினை செயல்படுத்தும்போது இத்தொலைநோக்கினை அடைய முடியும். பட்டுத் தொழில் விவசாயத்தைச் சார்ந்த தொழிலாதலால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்ச திட்டத்தில் 7 அம்சங்கள் பட்டு வளர்ச்சித் துறையின் செயல்பாடுகளுக்கு தொடர்புடையதாகும். அவை;

அ) **தொடர் பசுமைப் புரட்சி:** பண்ணைஉற்பத்தியை அதிகரித்தல் – அதிக மகசூல் தரும் மல்பரி, ரகங்களை சாகுபடி செய்வதன் மூலம் அடைய இயலும்.

ஆ) **நீர்வளப் பாதுகாப்பு:** பாசனத்திற்கு போதுமான தண்ணீர்–மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகளை நிறுவுவதன் மூலம் அடைய முடியும்.

இ) **வாழ்வாதாரப் பாதுகாப்பு:** அனைவருக்கும் வேலை–மல்பரி தோட்டப் பராமரிப்பு, பட்டுப் புழு வளர்த்தல் மற்றும் பட்டு நூற்பு ஆகிய பட்டு வளர்ப்புத் தொழில்களில் வேலைவாய்ப்பினை உருவாக்கி ஊக்குவிக்க இயலும்.

ஈ) **எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு:** பட்டு விவசாயிகளுக்கு பயிற்சியின் மூலம் புதிய தொழில்நுட்பங்களுக்கு முக்கியத்துவம் மற்றும் திறன் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்ய முடியும்.

உ) பாலின நேர்மை நெறி: பாலினப் பாகுபாட்டை நீக்குதல் பட்டு வளர்ப்புத் தொழிலுக்குத் தேவையான பணியாட்களில் 60 சதவீதம் பெண்கள் ஆவர்.

ஊ) ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை: ஒப்பளிப்பு பெறப்பட்ட திட்டங்களின் மூலம் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / குறிப்பிடப்படாத பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி உதவியளிக்க இயலும்.

எ) அதிவிரைவு தொழில்நுட்ப முன்னேற்றம்: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவித்தல் – பட்டு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதன் மூலம் விஞ்ஞானிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்கி தொடர்பு ஏற்படுத்த முடியும்.

**1.2 பட்டு வளர்ச்சித் துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:**

அ) அதிக மகசூல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தல்.

ஆ) மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப் புழு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

இ) நோயற்ற, தரமான பட்டு முட்டைகள் விநியோகம் செய்வதை உறுதிப்படுத்துதல்.

ஈ) கூடுதல் பட்டுக் கூடுகள் உற்பத்தி மற்றும் பட்டுப் புழு வளர்ப்பில் நோய்த்தடுப்பிற்கு தொழில்நுட்ப உதவிகளை விரிவுபடுத்துதல்.

உ) பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டு விற்பனைக்கு அங்காடி வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.

ஊ) பட்டு விவசாயிகள், மேம்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க வசதி செய்து தருதல்.

எ) சொட்டு நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல், தனியாக புழுவளர்ப்பு மனை அமைத்தல், நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் இளம்புழு வளர்ப்பு மையங்களை ஏற்படுத்துதல் போன்ற செயல்பாடுகளுக்கு உதவியளித்த



1.3 மொழிவாரி மாநிலமாக மறுசீரமைப்பு செய்யப்பட்ட 1956 ஆம் ஆண்டிற்குப் பிறகு மாநிலத்திலுள்ள தாளவாடி மற்றும் ஓசூர் பகுதிகளில் குறைந்த அளவில் பட்டுத் தொழில் செய்யப்பட்டது. 1977–78 ஆம் ஆண்டுகளில் வீரிய கலப்பின முட்டைத் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன் விளைவாக அதிக பட்டுக்கூடு அறுவடை செய்யப்பட்டதால் சமவெளிப் பகுதிகளில் இத்தொழில் பிரபலமாயிற்று. தீவிர பட்டு அபிவிருத்தித் திட்ட செயல்பாட்டின் பயனாக வேலைவாய்ப்பினை உருவாக்கி, விவசாயிகளுக்கு காலமுறைதோறும் வருவாயை ஈட்டி தருவதால், தமிழக அரசு இத்தொழிலை அபிவிருத்தி செய்ய, சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனித் துறையாக செயல்பட தீர்மானிக்கப்பட்டு ஏப்ரல் 1979 முதல் செயல்பட்டு வருகிறது. திட்டங்கள் தயாரித்து அரசுக்கு அனுப்பி ஒப்பளிப்புப் பெற்று செயல்படுத்த, இயக்ககத்தில் இணை இயக்குநர், துணை இயக்குநர் போன்ற தொழில்நுட்ப அலுவலர்களும் கணக்குகளை கண்காணிக்க கணக்கு அலுவலரும், தொழிற் கூட்டுறவு அலகுகளைப் பராமரிக்க தொழிற் கூட்டுறவு அலுவலரும் உள்ளனர். வெவ்வேறு திட்டங்களைச் செயல்படுத்த ஐந்து மண்டல அலுவலகங்களும் 26 உதவி இயக்குநர் அலுவலகங்களும் உள்ளன. மாநிலத்தின் மொத்த விதை ஒருங்கிணைப்பினைக் கண்காணிக்க, ஓசூரில் ஒரு துணை இயக்குநர் உள்ளார். ஓசூர் பட்டுப் பயிற்சிப் பள்ளியில், ஒரு துணை இயக்குநர்/ முதல்வர் மற்றும் கச்சாப்பட்டினை கொள்முதல் செய்ய காஞ்சிபுரம் பட்டுப் பரிமாற்றகத்தில் ஒரு துணை இயக்குநர் உள்ளனர்.

1.4 பட்டு வளர்ச்சித் துறை ஆரம்பித்த பிறகு, உள்கட்டமைப்பு வசதிகளான பட்டுவிதைப் பண்ணைகள், பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய பட்டுக்கூடு அங்காடிகள், பயிற்சி அளிப்பதற்கு விவசாயிகள் தகவல் மையங்கள், விவசாயிகள் பயிற்சி மையங்கள், பட்டு நூற்பு பயிற்சி மையங்கள், பட்டு நூற்பு நிலையங்கள், பட்டு முறுக்கேற்றும் மையங்கள், தொழில்நுட்ப உதவிக்கு தொழில்நுட்ப சேவை மையங்கள் முதலியவை பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்கு நிறுவப்பட்டு கீழ்க்காணும் பல்வேறு திட்ட செயல்பாடுகளின் மூலம் அதிக பரப்பில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டது:

அ) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

ஆ) ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

இ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

ஈ) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

உ) சுவிஸ் கூட்டுறவு அபிவிருத்தித் திட்டம்

ஊ) உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் மற்றும் பல.

பட்டு நூல், பட்டுக்கூடுகளின் விலை மற்றும் அதன் ஸ்திரத்தன்மை ஆகியவையே பட்டுத் தொழில் அபிவிருத்திக்கு காரணமாக அமைகிறது.

2002-2003 ஆம் ஆண்டு, பட்டுத் தொழிலின் ஒரு நீர்ப்பிரி முகடாக எடுத்துக் கொள்ள வேண்டும். பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டின் விலை உள்நாட்டுச் சந்தையில் வெகுவாக குறைந்து அதன்மூலம் பட்டு விவசாயிகளும், பட்டு நூற்பாளர்களும் நேரடியாக பாதிக்கப்பட்டனர். இந்த எதிர்பாராத, திடீர் மற்றும் விலை வீழ்ச்சி, பட்டுத் தொழிலை குறிப்பிடத்தக்க அளவு பாதித்து அதன் விளைவாக பல பட்டு நூற்பு அலகுகள் மூடும் நிலைக்கும் அதிக அளவு மல்பரித் தோட்டங்கள் அப்புறப்படுத்தவும் நேரிட்டது. இறக்குமதி செய்யப்பட்ட சீனப் பட்டும் அதன் விலையும் உள்நாட்டு பட்டுக்கூடு மற்றும் பட்டின் விலையை பாதித்தது. இருப்பினும் பட்டு ஆராய்ச்சி மையங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய இருசுழற்சியின வீரிய கலப்பினங்களாலும், மத்திய பட்டு வாரிய நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டங்களை மாநிலத்தில் செயல்படுத்துவதாலும் மல்பரி பரப்பு நிலைப்படுத்தப்பட்டு, உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்பட்டது. இருப்பினும் நிலையான வறட்சி மற்றும் போதுமான மழையின்மையின் காரணமாக மல்பரி சாகுபடி பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பட்டு விவசாயிகளுக்கு 2002–2003 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணமாக ரூ.75.92 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டது.

**2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள்**

2.1 தொடர் பசுமைப் புரட்சி: அதிக மகசூல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்தல்.



குறிப்பிட்ட அலகு பரப்பில் இலை உற்பத்தியை அதிகரிக்க, மேம்படுத்தப்பட்ட மல்பரி இனங்களான வி1, எம்ஆர்.2 மற்றும் எஸ். வகைகளை மாநிலத்தில் சாகுபடி செய்வது அவசியமாகும். இவ்வினங்கள் மல்பரி இலைகளின் ஊட்டச்சத்து மதிப்பினை அதிகரிப்பதோடு இருசுழற்சியின புழு வளர்ப்புக்கு உகந்ததாகவும் உள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில், பகுதி–2 திட்டங்கள், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் முதலிய திட்டங்களின் மூலம் 1,140 ஏக்கரில் அதிக மகசூல் தரும் மல்பரி இனங்களை சாகுபடி செய்து பண்ணைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.2 நீர்வளப் பாதுகாப்பு: மல்பரி தோட்டங்களில் சொட்டுநீர்ப் பாசன அமைப்பினை நிறுவுதல்.

கிடைக்கக்கூடிய நீரைப் பாதுகாத்து பயனுள்ள வகையில் பயன்படுத்துவது அவசியமாகும். திறந்தவெளிக் கிணறு, ஆழ்துளைக் கிணறு மற்றும் பம்ப் செட்டுகள் ஆகியவை பாசனத்திற்கு முக்கிய ஆதாரங்களாகும்.

2004–2005 ஆம் ஆண்டில் மத்திய பட்டு வாரிய நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டத்தின்கீழ் 400.00 ஏக்கர் மல்பரி பரப்பில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

2.3 வாழ்வாதாரப் பாதுகாப்பு: வேலை வாய்ப்பு உருவாக்கம்.

ஒரு ஹெக்டேர் மல்பரி சாகுபடியின் மூலம் மல்பரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல், பட்டு நூற்பு மற்றும் பட்டு பதனிடுதல் போன்ற செயல்பாடுகளில் வருடம் முழுவதும் 12–13 நபர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பினை உருவாக்க முடியும் என கணக்கிடப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் 1,140 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்து, 5,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**2.4 எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு:** பட்டு விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல்.

மல்பரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல், நோய்த்தடுப்பு மேலாண்மை மற்றும் பட்டு நூற்பு போன்ற செயல்பாடுகளில், புதிய தொழில்நுட்பங்களை முறையாக கடைப்பிடித்து தொழிலில் முன்னேற்றம் அடைய விவசாயிகளுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட வேண்டியது மிக அவசியமாகிறது. சீரான புழுப் பொரிப்புக்கு, முட்டை அடைகாத்தல், இளம்புழு வளர்ப்பு மேற்கொள்ளுதல், முதிர் புழுவளர்ப்பு, புழுக்கள் தோலுரிப்பின் போதும் கூடு கட்டும்போதும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவை குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

2004–2005 ஆம் ஆண்டில் 100 விவசாயிகளுக்கு, பகுதி-2 திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கவும். புழுவளர்ப்பு தளவாடங்கள் விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.5 பாலின நேர்மை நெறி:** பாலின பாகுபாட்டை நீக்குதல்.

மல்பரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் பட்டு நூற்பு செய்தல் போன்ற செயல்பாடுகளில் மகளிரின் பங்கு 60 சதவீதம் என்பது பட்டு வளர்ப்புத் தொழிலின் முக்கிய அம்சமாகும். மகளிர் குழு அமைத்து, குழுவிற்கு தலைமை பொறுப்பு ஏற்கவும், குழு பொருளாதார மேம்பாடு, முடிவு எடுக்கும் திறன், பட்டுத் தொழிலின் மூலம் கிடைக்கும் வருவாயை தங்களது பெயரில் சேமிப்புக் கணக்கில் சேர்த்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட மகளிரை ஊக்குவிக்க வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளில் கிராமப்புற மகளிரை அதிக அளவில் நிலையான பொருளாதாரத்தை தரக்கூடிய பட்டுத் தொழிலில் ஈடுபடச் செய்வதன் மூலம் உற்பத்தியாளர் என்ற வகையில் அவர்தம் குடும்பத்திற்கும் துறைக்கும் பயன் அளிக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் அரசு வழங்கும் வெவ்வேறு திட்டங்களில் மகளிருக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்தல், சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல், புழு வளர்ப்பு மனை அமைத்தல், புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் பட்டு வளர்ப்பின் பல்வேறு செயல்பாடுகளில் பயிற்சி



அளித்தல் போன்ற திட்டங்களில் மகளிருக்கு உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**2.6 ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை:** ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

பட்டுத் தொழில், குடும்பம் சார்ந்த தொழிலாதலால் பட்டுத் தொழிலின் செயல்பாடுகளில் குடும்ப உறுப்பினர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். ஒடுக்கப்பட்ட மக்களான ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களுடைய குடும்பங்களுக்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன.

2004–2005 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களின் மூலம், ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த மக்களை ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது

| வ. எண் | திட்ட செயல்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்தல் | 800 |
| 2. | பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் | 400 |
| 3. | சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவ உதவியளித்தல் | 300 |
| 4. | தனியாக புழுவளர்ப்பு மனை அமைக்க உதவியளிதத்ல் | 270 |
| 5. | நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய உதவியளித்தல் | 270 |
| மொத்தம் | | 2040 |

2.7 **அதிவிரைவு தொழில்நுட்ப முன்னேற்றம்–ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.**

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவன தொழில்நுட்ப உதவியுடன், ஜூலை 2002 முதல் இருசுழற்சியின புழு வளர்ப்பு பகுதி–3 திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனம் மற்றும் மத்திய பட்டு வாரியம் ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்புடன் ஜூலை 2002 முதல் 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் நோக்கம் உலகத் தரத்திற்கு இணையான இருசுழற்சியின பட்டினை உற்பத்தி செய்வதே ஆகும்.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும் பகுதி–3 திட்டம் கிருட்டிணகிரி மாவட்டத்திலுள்ள ஓசூர், கிருட்டிணகிரி, தருமபுரி மாவட்டத்திலுள்ள பாப்பிரெட்டிப்பட்டி, ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் ஆகிய நான்கு தொழில்நுட்ப சேவை மைய பகுதிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்துறை இரு சுழற்சியின முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்ய கோயம்புத்தூரில் உள்ள பட்டு வித்தகமும், பி2 விதைப் புழு வளர்ப்பு செய்ய கிருட்டிணகிரி மாவட்டத்திலுள்ள ஆவலப்பள்ளி பட்டுப் பண்ணையும், விவசாயிகளுக்கும் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க கிருட்டிணகிரி மாவட்டத்திலுள்ள ஓசூர் பட்டுப் பயிற்சிப் பள்ளியும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்ட அரசு அலகுகளை மேம்படுத்த, ஜப்பான் பன்னாட்டு நிதி நிறுவனம் மற்றும் மத்திய பட்டு வாரியம் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்ட சில புழுவளர்ப்புத் தளவாடங்கள் ஜப்பான் பன்னாட்டு நிதி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பட்டு வளர்ச்சித் துறையும் குறிப்பிட்ட சில புழுவளர்ப்புத் தளவாடங்களை வழங்கியுள்ளது.

3. **அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்:**

3.1 பட்டு உற்பத்தி மற்றும் பட்டு விற்பனை ஆகியவை கர்நாடகா மாநிலத்தில் பெங்களூரைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயே பெரும்பாலும் நடைபெறுவதால், தமிழகத்தில் பட்டு நூற்புத் தொழில் மந்தமாக உள்ளது. மேலும் இதனை பகுப்பாய்வு செய்ததில் கச்சாப் பட்டு விற்பனையிலுள்ள சிரமங்களே தமிழகத்தில் பட்டு நூற்புத் தொழிலின் மந்த நிலைக்குக் காரணமென அறியப்பட்டது. பெருமளவில் பட்டினை நுகரும் மையங்களான ஆரணி, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகியவை கர்நாடகாவிலிருந்து பட்டினை கொள்முதல் செய்து கொள்கின்றன.





3.2 உற்பத்தி செய்யப்படும் பட்டினை மாநிலத்திலேயே விற்பனை செய்ய அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரத்தில் 9-1-1991 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து பட்டு நூற்பாளர்களும் தாங்கள் உற்பத்தி செய்த பட்டினை விற்பனை செய்ய அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரத்திற்குக் கொண்டு வருகின்றனர். அனைத்து பட்டு நூல் தொகுதிகளும் மத்திய பட்டு வாரியத்தால் நிறுவப்பட்டுள்ள பட்டு பதனிடுதல் மற்றும் சோதனை மையம், காஞ்சிபுரத்தில் பரிசோதிக்கப்படுகிறது. கர்நாடகா மாநிலத்தில் நிலவும் பட்டின் சராசரி விலையினை அடிப்படை விலையாகக் கொண்டு தரத்தின் அடிப்படையில் குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டு பின்னர் ஏலத்திற்கு வைக்கப்படுகிறது. டான்சில்க், பட்டு நூற்பாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பட்டு முறுக்காளர்கள் மற்றும் இதர பட்டு நுகர்வோர்கள் இந்த ஏலத்தில் கலந்துகொள்கின்றனர். பட்டு பரிமாற்றகம், பட்டு நூற்பாளர்களுக்கு உடனடியாக பட்டு நூலுக்குரிய தொகை வழங்க உறுதி செய்கிறது.

3.3 அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் செயல்பாடுகள், பட்டு நூற்புத் தொழிலை நிலைப்படுத்தி, தொழில் முனைவோர்களை நூற்புத் தொழிலில் அதிக முதலீடு செய்ய ஊக்குவித்துள்ளது.

3.4 பட்டு விற்பனையாளர் மற்றும் பட்டு வாங்குவோர்களிடமிருந்து வர்த்தகம் செய்யப்படும் பட்டின் மதிப்பில் 0.75 சதவீதம் லெவி கட்டணமாக வசூலிக்கப்பட்டு, பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதிக் கணக்கில் சேர்க்கப்பட்டு, பின்னர் அத்தொகை பட்டுத் தொழிலின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்படுகிறது.

3.5 2003–2004 ஆம் ஆண்டில் மார்ச் 2004 முடிய 200 மெட்ரிக் டன் பட்டு கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 100.60 மெட்ரிக் டன் பட்டு கொள்முதல் செய்யப்பட்டு பட்டு விற்பனையாளர் மற்றும் வாங்குவோர்களிடமிருந்து லெவி கட்டணமாக ரூ.16.65 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 29

## 4. டான்சில்க், காஞ்சிபுரம்:

4.1 தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், ஒரு தலைமைக் கூட்டுறவு இணையமாக 17-04-1978-ல் பதிவு செய்யப்பட்டு, 09-09-1978 முதல் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது.

4.2 தமிழகத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் அபிவிருத்தி செயல்களுக்கு உதவிகள் அளிப்பதோடு தரமான பட்டினை நியாயமான விலைக்கும், போதுமான அளவிற்கும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், மற்றும் சர்வோதய சங்கங்கள் ஆகியவைகளுக்கு விநியோகித்து வருகிறது.

4.3 இணையம் 'அ' வகை மற்றும் 'ஆ' வகை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பட்டு வளர்ச்சி மற்றும் பட்டுநூல் நூற்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சர்வோதய சங்கங்களிலுள்ள முதன்மை உறுப்பினர்கள் 'அ' வகை சங்க உறுப்பினர்களாவர். பட்டு விவசாயிகள், நூற்பாளர்கள், பட்டு முறுக்காளர்கள் மற்றும் பெரும் நெசவாளர்கள் 'ஆ' வகை இணை உறுப்பினர்களாவர். தற்பொழுது 279 'அ' வகை உறுப்பினர்களும் 96 'ஆ' வகை உறுப்பினர்களும் உள்ளனர்.

4.4 இணையம், முதன்மை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற் குழுவின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். வாரியம் கலைக்கப்பட்டு விட்டதால் தற்போது அரசால் பணியமர்த்தப்பட்ட தனி அலுவலரைக் கொண்டு செயல்படுகிறது.

4.5 வியாபார மூலதனம்: இணையம், நிதி உதவியாக காஞ்சிபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து ரூ.100.00 இலட்சம் காசுக் கடனாகவும், உறுப்பினர்கள் பங்கு மூலதன தொகையாக ரூ.112.45 இலட்சமும் மூலதனமாகப் பெற்று செயல்படுகிறது. தேசிய பட்டுநூல் வங்கி, புதுடில்லி மூலமாக ரூ.117.49 இலட்சம் கச்சாப் பொருள் மூலதனக் கடனாகவும் ரூ.1.70 இலட்சம் தமிழக அரசுப் பங்கு மூலதனமாகவும் பெற்று செயல்பட்டு வருகிறது. தரமான கச்சாப்பட்டினை கொள்முதல் செய்திட ரூ.60.00 இலட்சம் உள்ளது. (மத்திய பட்டு வாரியம் ரூ.30.00 இலட்சம், இணையம் ரூ.30.00 இலட்சம்)

4.6 காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 இடங்களில் இணையம் கிளை மையங்களைக் கொண்டுள்ளது.



2004 ஜூலை 29]

4.7 அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரத்திலிருந்து முக்கியமாக கச்சாப் பட்டினை இணையம் கொள்முதல் செய்கிறது.

4.8 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.3,164.01 இலட்சம் மதிப்புள்ள 250.04 மெட்ரிக் டன் பட்டினை கொள்முதல் செய்துள்ளது. 31-03-2004 முடிய இணையத்தின் தோராய லாபம் ரூ.92.97 இலட்சமாகும்.

## 5. பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி:

5.1 உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட தேசிய பட்டு வளர்ச்சித் திட்ட செயலாக்கத்தின்போது பட்டுக்கூடு வாங்குவோரிடமிருந்து லெவி கட்டணமாக ஒரு கிலோவிற்கு 10 பைசா வீதம் வசூலிக்கப்பட்ட கட்டணத்தை அதிகரிக்க, வங்கி ஆலோசனை வழங்கியது. சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் அரசு செயலாளரின் தலைமையில் ஒரு குழு அமைக்கவும், விற்பனை செய்யப்படும் பட்டுக்கூடுகள் மற்றும் பட்டின் மதிப்பில் 0.75 சதவீதம் லெவி கட்டணமாக உற்பத்தியாளர் மற்றும் வாங்குவோரிடமிருந்து வசூலிக்கவும் அரசு ஆணையிட்டது.

5.2 மார்ச் 2004 முடிய ரூ.875.96 இலட்சம் லெவி கட்டணமாக வசூலிக்கப்பட்டு, ரூ.326.71 இலட்சம் துறையின் வளர்ச்சிப் பணிகளுக்காக பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் குழுவிடம் ஒப்புதல் பெற்று செலவிடப்பட்டுள்ளது.

## 6. 2004-2005 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்:

### 6.1 பகுதி வளர்ச்சித் திட்டங்கள்:

அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

* நீலகிரி மாவட்டத்தில் 1980–81 ஆம் ஆண்டு முதல், பட்டு வளர்ச்சித் திட்டங்கள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
* 2003–2004 ஆம் ஆண்டில் 80 விவசாயிகளுக்கு உதவியளிக்க ரூ.3.01 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு பெறப்பட்டது.
* 2004–2005 ஆம் ஆண்டில் 60 விவசாயிகள் மல்பரி சாகுபடி செய்யவும், பட்டுப்புழு வளர்க்கவும் கீழ்க்காணும் உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது:

[2004 ஜூலை 29

1) மல்பரி நாற்றுக்கள் மூலம் 0.25 ஏக்கரில் மல்பரி நடவு செய்தல் (ரூ.605/-ஒரு விவசாயிக்கு)

2) பயிற்சி மற்றும் கண்டுணர்தல் பயிற்சி (ரூ.250/- ஒரு விவசாயிக்கு)

3) ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.100/- மதிப்புள்ள தளவாடங்கள் விநியோகம்

4) பிளாஸ்டிக் நெட்ரிக்காக்கள் கொள்முதல் செய்ய உதவியளித்தல் (ரூ.500/- ஒரு விவசாயிக்கு)

5) தண்டு அறுவடை முறை தாங்கிகள் அமைக்க உதவியளித்தல் (ரூ.750/ ஒரு விவசாயிக்கு).

**(ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்:**

* கோயம்புத்தூர், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களில் 1985-86 ஆம் ஆண்டு முதல் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

* 2003-2004 ஆம் ஆண்டில் 500 விவசாயிகளுக்கு உதவியளிக்க ரூ.11.80 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு பெறப்பட்டது.

* 2004-2005 ஆம் ஆண்டில் மல்பரி சாகுபடி செய்யவும், பட்டுப்புழு வளர்க்கவும் 500 விவசாயிகளுக்கு கீழ்க்காணும் உதவிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது:

1) மல்பரி நாற்றுக்கள் மூலம் 0.25 ஏக்கரில் மல்பரி நடவு செய்தல் (ரூ.680/- ஒரு விவசாயிக்கு)

2) பயிற்சி மற்றும் கண்டுணர்தல் பயிற்சி (ரூ.250/- ஒரு விவசாயிக்கு)

3) ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.150/- மதிப்புள்ள பயிற்சி தளவாடங்கள் விநியோகம்

4) பிளாஸ்டிக் நெட்ரிக்காக்கள் கொள்முதல் செய்ய உதவியளித்தல் (ரூ.500/- ஒரு விவசாயிக்கு)

5) தண்டு அறுவடை முறை புழு வளர்ப்புத் தாங்கிகள் அமைக்க உதவியளித்தல் (ரூ.750/- ஒரு விவசாயிக்கு).



2004 ஜூலை 29]

**6.2 கிரியா ஊக்கித் திட்டம்:**

பட்டு வளர்ச்சிக்காகவும், பட்டு நூற்புத் தொழிலின் அபிவிருத்திக்காகவும் மாநிலத்தின் பல்வேறு செயல் திட்டங்களுக்கு கிரியா ஊக்கித் திட்டத்தின்கீழ் மத்திய பட்டு வாரியம் உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தில் மானியத் தொகையினை மத்திய பட்டு வாரியமும், மாநில அரசும் சமமாக ஏற்கின்றன. சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல், தனியாக புழுவளர்ப்பு மனை அமைத்தல், நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல், இளம்புழு வளர்ப்பு மையம் அமைத்தல், பலமுனை பட்டு நூற்பு ஏனங்கள் நிறுவுதல், பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பொருட்கள் தயாரித்தல் போன்ற திட்டங்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது

2004-2005 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது:

அ) மல்பரி தோட்டங்களில், சொட்டு நீர்ப்பாசன அமைப்புகளை நிறுவ விவசாயிகளுக்கு உதவியளித்தல்

ஆ) நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய விவசாயிகளுக்கு உதவியளித்தல்

இ) தனியாக புழுவளர்ப்பு மனை அமைக்க விவசாயிகளுக்கு உதவியளித்தல்

ஈ) இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க உதவியளித்தல்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | அலகு |
|---|---|---|
| 1. | சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவ உதவியளித்தல். | 400 ஏக்கர் |
| 2. | தனியாக புழுவளர்ப்பு மனை அமைக்க விவசாயிகளுக்கு உதவியளித்தல்.<br>(அ) நிலை - 1<br>(ஆ) நிலை - 2 | <br><br>375 எண்ணிக்கை<br>205 எண்ணிக்கை |
| 3. | நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய உதவியளித்தல்<br>(அ) நிலை - 1<br>(ஆ) நிலை - 2 | <br><br>375 எண்ணிக்கை<br>205 எண்ணிக்கை |
| 4. | இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க உதவியளித்தல் | 4 எண்ணிக்கை |

திட்டத்தின் மொத்தத் தொகை, மத்திய பட்டு வாரியம், மாநில அரசு, பயனாளிகளால் 25 : 25 : 50 என்ற விகிதப்படி ஏற்கப்படும்.

**7. 2004–2005ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்:**

7.1 பட்டு வளர்ச்சி வெவ்வேறு செயல்பாடுகளை கொண்டிருந்தாலும் 2004–2005 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் முக்கியமான இனங்களில் சாதனை அடைய திட்டமிடப்பட்டுள்ளது:

அ) 1,140 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்தல்

ஆ) 60.00 இலட்சம் முட்டைத் தொகுதிகள் வளர்த்தல்

இ) மாநிலத்தில் 3,000 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்தல்.

ஈ) 400 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு உற்பத்தி செய்தல்

உ) 5,700 நபர்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

**8. நிதித் தேவை:**

8.1 மேற்காணும் இயல்பு இலக்கினை அடைய 2004–2005 ஆம் ஆண்டிற்கு தொடர் திட்டங்களுக்காகவும் புதிய திட்டங்களுக்காகவும் மொத்த நிதி ரூ.2,211.81 இலட்சம் கீழ்க்காணும் விவரங்களின்படி தேவைப்படுகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு 2004—2005 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திட்டப் பணிகள் :<br>பகுதி - 1 திட்டம்<br>பகுதி - 2 திட்டம் | <br>169.88<br>22.50 |
| 2. | திட்டம் சாராப் பணிகள் | 2005.38 |
| 3. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2.35 |
| 4. | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 11.70 |
| | **மொத்தம்** | **2211.81** |





## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய சட்டத்தின்கீழ் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. ஊரக வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஊக்குவிக்கவும் அமைத்திடவும் மற்றும் மேம்படுத்துவதற்கும், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்வருமாறு:–

1. நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தலும், வேலை வாய்ப்புகளை அதிகரித்தலும்;

2. உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழி வகுத்தல்; மற்றும்

3. கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி, தன்னம்பிக்கை நிலையினை அடைந்திட உதவுதலும் ஆகும்.

கடந்த 40 ஆண்டுகளாக, கதர் கிராமத் தொழில் வாரியம் இம்மாநிலத்தில், குறிப்பாக கிராமப்புறத்தில் கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்கு, மிகச் சிறந்த சேவையினை செய்து வருகிறது. கதர் மற்றும் கிராமத் தொழில்களை முன்னேற்ற ஒருமித்த நோக்கமுடைய மக்களால் உருவாக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வாரியம் கிராமத் தொழில்களை வளர்ச்சி அடையச் செய்வதோடு, அதன் மூலமாக அதிகபட்ச அளவில் கிராமிய கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க வழிவகை செய்துள்ளது.

கிராம மக்கள் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் ஆகியோருக்கு தேனீ பெட்டிகள் வழங்கவும், நெசவாளர்களின் தறிகளை நவீனப்படுத்துவதற்கும் கிராம கைவினைஞர்களுக்குரிய உபகரணங்கள் வழங்கவும், மாநில மற்றும் மத்திய அரசுகள் மானியம் மூலமாக நிதியுதவிகள் அளித்து வருகின்றன. மாநில மற்றும் மத்திய அரசுகள்

[2004 ஜூலை 29

வழங்கும் நிதியுதவியுடன் வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்கள் கீழ்வருமாறு:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | உதவி அளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | 562.14 | 8,397 |
| 2 | மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள கைவினைஞர்களுக்கான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் | 121.36 | 5,884 |
| 3 | நீலகிரி மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கைவினைஞர்களுக்கான மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 213.36 | 6,107 |
| 4 | [illegible]ாவிடர் [illegible]ான சிறப்பு [illegible] உதவி | 2,707.25 | 37,317 |
| 5 | பகுதி-2 திட்டம் | 462.06 | 10,877 |

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

## I. கதர்

### (1) கதர், பருத்தி மற்றும் பாலியஸ்டர்:

கதர் வாரியத்தின் முக்கிய செயல்பாடுகளுள் ஒன்றான கதர் உற்பத்தியானது கிராம கைவினைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. அனைத்து கதர் இரகங்களின் உற்பத்தியின்கீழ், நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் போன்றவை முக்கிய செயல் முறைகளாக விளங்குகின்றன. ஏறத்தாழ



2004 ஜூலை 29]

183 கிராமிய நூற்பு நிலையங்கள், 67 உபகிளைகள், 12 நேபாளி தறி நிலையங்கள் இந்தச் செயல்முறைகளை நிறைவேற்றி வருகின்றன. இந்த நிலையங்கள் மூலம் சுமார் 20,000 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் 12,500 பேர் கிராமிய பெண்கள் ஆவார்கள். பருத்தி, கதரின் மூலம் பல்வேறு மாதிரியான வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் சீருடை துணிகள் போன்ற பெரும்பான்மையான கதர் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. ரூ.9.00 கோடி மதிப்பிற்கு கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்களை வாரியம் மூலம் உற்பத்தி செய்ய 2004-2005ஆம் ஆண்டிற்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரயில்வே, துறைமுக பொறுப்புக் கழகம், மருத்துவமனை, கல்வித் துறை ஆகிய அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் தேவை நமூனாக்களின் அடிப்படையில் மட்டுமே கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்கள் வாரிய அலகுகளில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகின்றன.

### (2) கதர் பட்டு:

பட்டுத் தொழில் ஒரு பழம் பெருமையுடைய தொழிலாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் 27 கதர் பட்டு உபகிளைகள் இயங்கி வருகின்றன. இவ்வாரியத்தினால் சாதாரண விலை முதல் அதிக விலை வரை உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள், தனித்தன்மை வாய்ந்ததுடன் சந்தையில் முதன்மை பெரும் அளவிற்கு மதிப்பு வாய்ந்ததாகும். மக்களின் கவனத்தினை ஈர்க்கும் வகையில் அச்சிடப்பட்ட பட்டுப் புடவைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. முயற்சி எடுத்து வண்ணங்களை மாற்றி கணினி மூலம் புதிய வடிவமைப்புகளை அமைத்து ரூ.2,000/- மதிப்பில் வாடிக்கையாளர்களின் விருப்பத்தினை பூர்த்தி செய்யும் வகையிலும், வியாபார போட்டியினை எதிர்கொள்ளும் வகையிலும் பட்டுப் புடவைகள் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாரியம் 1,500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இது தவிர வாரியத்திற்கு சொந்தமாக பட்டு சாயமிடும் அலகு ஒன்று சேலம் மாவட்டம் காட்டம்பட்டியில் இயங்கி வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டிற்கு கதர் பட்டுச் சேலைகளின் உற்பத்திக் குறியீடு ரூ.15.00 கோடியாக வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள நூற்பாளர் சேவை மையம், தேசிய வடிவமைப்பு மையம் (N.I.F.T) மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகிய துறைகளுடன் கலந்தாலோசித்து இளைய சமுதாயத்தினர், வேலைக்கு செல்வோர் மற்றும்

பொது மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பல்வேறு டிசைன்களில் பட்டு இரகங்களை வாரியம் உற்பத்தி செய்து வருகிறது. மேற்படி துறைகளும் வாரியத்தின் பட்டு உற்பத்தியினை மேம்படுத்தவும். பட்டு வடிவமைப்பினை கணினி மூலம் முன்னேற்றிட தகுந்த திட்ட அறிக்கை ஒன்று சமர்ப்பித்து கதர் கிராமத் தொழில் வாரியத்துடன் கைகோர்த்து செயல்பட சம்மதம் தெரிவித்துள்ளனர். இதற்கு மும்பை, கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும் பட்டு வடிவமைப்பு முன்னேற்ற திட்டத்திற்கு போதிய நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது.

**(3) கதர் மற்றும் பட்டு இரக விற்பனைக்கான தள்ளுபடி:**

கதர், பாலியஸ்டர் மற்றும் கதர் பட்டு இரகங்களின் விற்பனையை அதிகரிக்க மாநில அரசு மற்றும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு தள்ளுபடி வடிவத்தில் ஆதரவளிக்கிறது. மாநில அரசு கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் தள்ளுபடியுடன் சேர்த்து ஆண்டு முழுவதற்கும் கதர் இரகங்களுக்கு 30 விழுக்காடும் பட்டு இரகங்களுக்கு 20 விழுக்காடும் ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி வழங்கி வருகிறது. அரசு, தள்ளுபடி மானியம் வாரியத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டிற்கு அதிகபட்சம் ரூ.2.00 கோடி என நிர்ணயித்துள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் விற்பனைக்கும் இந்த தள்ளுபடி ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது. சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டிற்கும் அரசின் தள்ளுபடி மானியம் அதிகபட்சமாக ரூ.5.00 கோடி என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ.8.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(4) நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கான நலத் திட்டம்:**

கைவினைஞர்களுக்கான நல நிதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவாளர்கள் அவர்களது கூலியிலிருந்து 12 விழுக்காடு இந்த நல நிதிக்கு வழங்குவதுடன் வாரியமும் அதற்கு ஈடான பங்குத் தொகையை நல நிதியாக வழங்குகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நிதி, நூற்போர் மற்றும் நெசவாளர்களது நலத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்துடன் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கும் கூலியுடன் 10 விழுக்காடு தொகையினை ஊக்குவிப்புத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது. திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகை காலங்கள் போன்றவற்றிற்கு நூற்போர் மற்றும் நெய்வோருக்கு இந்நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகிறது.



நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் கருணைத் தொகையாக ரூ.20,000/– வழங்கும் ஒரு சமூக பாதுகாப்புத் திட்டம் வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வாரியத்தைச் சேர்ந்த 60 வயது அடைந்த கதர் நூற்பாளர்களுக்கு/ நெசவாளர்களுக்கு மாதம் ரூ.200/– ஓய்வூதியம் வழங்கும் திட்டம் வாரியத்தால் அமல்படுத்தப்பட்டுள்ளது.

**II. கிராமத் தொழில்கள்:**

**1) தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள்:**

மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் முதன்மை வாய்ந்ததாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் மிக முக்கியமான தொழிலாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 7 துறை அலகுகள் இயங்கி வருகின்றன. அவை கிண்டி, வீரராகவபுரம், அரக்கோணம், பள்ளிக்கொண்டா, திருப்பூர், நாஞ்சிக்கோட்டை மற்றும் பேட்டை ஆகும்.

அரசு அலுவலகங்கள், பொது ஸ்தாபனங்கள், அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பர்னிச்சர் மற்றும் தளவாடச் சாமான்கள் இத்துறை அலகுகளால் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

**2) தோல் தொழில்:**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் பல்வேறு தொழில்களில் தோல் தொழில் பிரதான தொழிலாகும். தற்போது கதர் வாரியத்தின்கீழ் 10 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

இக்காலணி அலகுகளில் தரம் வாய்ந்த காலணிகளும் தோல் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இக்காலணி அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் தோல் பொருட்களில் 80 சதவீதம் தமிழ்நாடு காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை, அரசு சார்ந்த துறைகள் போக்குவரத்து துறை மற்றும் இதர நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வாரியமானது பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கதரங்காடிகள் மூலம் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுவரும் சுமார் ஆயிரம் கைவினைஞர்களில் பெரும்பாலான கைவினைஞர்கள் அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர்கள்.

**3) உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்:**

தமிழகத்தில் கிராமப்புறங்களில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திடும் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் செயல்படுத்தப்படும் உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில் முக்கியமான ஒன்றாகும். வாரியத்தின்கீழ் தற்போது 38 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

வாரியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட குளியல் சோப்புகளான வேம்பு, சந்தனம், கார்பாலிக் சோப்பு, சலவைக் கட்டி மற்றும் தூள். ரப்–அப் பாத்திரம் துலக்கும் கட்டி, கிளீனிங் பவுடர் ஆகியவை பொது மக்களிடம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளன. வாரியத்தின் புதிய தயாரிப்புகளான மூலிகா குளியல் சோப்பு, ஹெர்பல் கை கழுவும் திரவம். எழில் ஷாம்பு, சுகப்பிரியா வலி நிவாரணி தைலம் ஆகியவை சந்தையில் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளன. தொடர்ந்து நடைபெறும் ஆராய்ச்சியின் விளைவாக நிலையான தரத்தைப் பெற்றுள்ளதாலும் வெளிச் சந்தையில் உள்ள சோப்பு இரகங்களைவிட வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்கள் உகந்த விலையில் கிடைக்கப் பெறுவதனாலும்தான் பொதுமக்களிடையே வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்களுக்கு தொடர்ந்து ஆதரவு கிடைத்து வருகிறது.

வாரியத்தின் சோப்பு வகைகளின் விற்பனையை நியாய விலைக் கடைகள் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிமுகப்படுத்தியதிலிருந்து இவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது. வாரியமானது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதி மாணவர்களுக்கும் வாரிய சோப்புகளை விற்பனை செய்து வருகிறது.

வாரியமானது அண்டை மாநிலங்களிலும் வாரிய சோப்பு வகைகளின் விற்பனையை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.



**4) தேனீ வளர்ப்புத் தொழில்:**

தேனீ வளர்ப்புத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும்.

வாரியமானது பச்சை தேனை பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜம்னாமருதூர் ஆகிய பகுதியிலுள்ள தேனீ வளர்ப்போரிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் பச்சை தேனானது 100 சதவீதம் தர பரிசோதனைக்குப் பிறகே கொள்முதல் செய்யப்படுகிறது. பிறகு பச்சை தேன், அம்சி மற்றும் ஜம்னாமருதூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள தேன் பதப்படுத்தும் நிலையங்களின் மூலம் பதப்படுத்தப்பட்டு, அக்மார்க் முத்திரை பெறப்பட்டு தேன் நிரப்பும் நிலையங்களில் பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம் அம்சியில் உள்ள வாரியத்தின் தேன் பதப்படுத்தும் அலகில் முதல் தரமான (ஏ.கிரேடு) தேன் உற்பத்தி செய்யப்படுகிறது.

இத்தொழிலின்கீழ். மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் மூலமாக மலைவாழ் பழங்குடியினர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்களுக்கு தேனீப்பெட்டிகள் வழங்க மானியமாக அரசு நிதி உதவி வழங்குகிறது. தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் அவர்கள் விவசாயக் கூலியின் மூலம் பெறும் வருவாயுடன் கூடுதல் வருவாயையும் இதன் மூலம் ஈட்டுகின்றனர்.

வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் தரமான தேன் நியாயமான விலையில் கிடைப்பதால் மக்களின் மத்தியில் மிகச் சிறந்த ஆதரவைப் பெற்றுள்ளது. வாரியமானது அரசு மருத்துவமனைகளில் மருந்து பொருள் தயாரிப்பதற்கு தேவையான தேனையும் விநியோகம் செய்து வருகிறது.

**5) கைமுறை காகிதத் தொழில்:**

கைமுறை காகிதத் தொழில் "கழிவிலிருந்து செல்வம்" எனும் அடிப்படையை ஆதாரமாக கொண்டதாகும். தற்போது பிடாகம் (விழுப்புரம் மாவட்டம்) செண்பகப்புதூர் (ஈரோடு மாவட்டம்) கோவனூர் (கோவை மாவட்டம்) மற்றும் அட்டைப் பெட்டி தயாரிக்கும் அலகு

உதகை பேப்பர் பை மற்றும் கவர் தயாரிக்கும் அலகு (நீலகிரி மாவட்டம்) போன்ற நான்கு அலகுகள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

இத்தொழிலில் கோப்பு அட்டைகள், காகித உறைகள், பாண்டு பேப்பர், ரேப்பர், மேனிபோல்டிங் பேப்பர், கைப்பைகள் ஆகியவையே பிரதான உற்பத்தியாகும். இந்த அலகுகளில் பணியில் ஈடுபட்டுள்ள அதிக அளவிலான தொழிலாளர்கள் கிராமப்புறத்தைத் சார்ந்தவர்கள். இத்தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின்படி கூலி வழங்கப்படுகிறது. அரசுத் துறைகளுக்கு தேவையான கவர்கள், கோப்பு அட்டைகள், பாண்டு பேப்பர் போன்ற காகிதப் பொருட்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் தேவைக்கும் விநியோக ஆணைகள் பெறப்பட்டுள்ளன. கிராம விவசாயிகளுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்க வேண்டியதன் காரணமாக இப்பொருட்கள் தொடர்பான விற்பனையினை விரிவுபடுத்தும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கோவை மாவட்டம், கோவனூர் என்னுமிடத்தில் அட்டைப் பெட்டிகள் தயாரிக்கும் அலகினை துவக்க மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ரூ.10.00 இலட்சம் மானியமாக வழங்கியதில் இவ்வலகு ஆரம்பிக்கப்பட்டு கடந்த 8/2002 முதல் உற்பத்திப் பணி நடைபெற்று வருகிறது. இவ்வலகில் உற்பத்தி செய்யப்படும் அட்டைப் பெட்டிகள் சோப்பு அலகுகள், காலணி அலகுகள் மற்றும் தேன் நிரப்பும் அலகுகள் போன்றவற்றிற்கு பண்டல்கள் செய்திட விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இத்துடன் உதகை மாவட்டத்தில் பேப்பர் பைகள் மற்றும் கவர்கள் தயாரிக்கும் அலகினை துவக்க மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ரூ.10.00 இலட்சம் மானியமாக வழங்கியதில் இவ்வலகு புதியதாக துவக்கப்பட்டு கடந்த 8/2002 முதல் உற்பத்திப் பணி துவங்கி நடைபெற்று வருகிறது. இவ்வலகில் காகித கவர்கள் மற்றும் பைகள் உற்பத்தி செய்யப்பட்டு உயர் நீதிமன்றம், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**6) மட்பாண்டத் தொழில்:**

இம்மாநிலத்தில் பாரம்பரிய தொழில்களில் மட்பாண்டத் தொழிலும் ஒன்றாகும். வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 4 மட்பாண்ட அலகுகள்



செயல்படுகின்றன. இவ்வலகுகளில் மெருகு மட்பாண்டங்கள் மற்றும் இதர மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றிற்கு வெளிச்சந்தையில் நல்லாதரவு உள்ளது. இம்மாநிலத்தில் பரவலாக உள்ள கதர் அங்காடிகளின் மூலம் இவ்வலகில் தயாரிக்கப்படும் அழகு வண்ண அலங்கார மட்பாண்ட பொருட்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

## III. விற்பனை

வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்காக 170 கதரங்காடிகளும், 10 கிராம சில்பாக்களும் மற்றும் 8 தோல் விற்பனை நிலையங்களும் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. கண்காட்சிகள் நடத்துவதன் மூலமும், கிராமப்புறங்களில் சிறப்பு விற்பனை செய்வதன் மூலமும், விளம்பரங்களுக்கு மின் ஒளிபரப்புகளைப் பயன்படுத்தியும் கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்களை மக்களிடையே விற்பனை செய்திட கணிப்பொறி இணைய தளம் www.khadikraft.com இயக்கப்படுகிறது. விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் வாரியத்தின் விற்பனைப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்னை உற்பத்தித் திறன் குழுவினரால் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கதர் ஆணையத்தினால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் உற்பத்திப் பொருட்கள் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கதரங்காடிகள் மற்றும் கிராம சில்பாக்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. வாரியத்தின் செயல்பாடுகளின் மூலம் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துகிறது.

மேலும் கதரங்காடிகளின் மூலம் விற்பனையை அதிகரிக்க, கதராணைக் குழுவிடமிருந்து நிதியுதவி பெற்று கோவையில் ஒரு கதரங்காடியினை ரூ.3.17 இலட்சம் செலவில் நவீனப்படுத்திட வாரியம் திட்டமிட்டுள்ளது.

## IV. பகுதி-2 திட்டம் ( புதிய திட்டங்கள்):

2004-2005ஆம் ஆண்டிற்கு வாரியம் பின்வரும் இரண்டு திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

[2004 ஜூலை 29

( ரூ.இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | நாகர்கோவில் மற்றும் ஜவ்வாது மலை ஆகிய இடங்களில் தேன் பரிசோதனை ஆய்வுக் கூடம் நிறுவுதல் | ரூ.2.00 |
| 2. | 5 அலுவலகங்களுக்கு கணிப்பொறி மற்றும் ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்கும் திட்டம் | ரூ.5.00 |
| | மொத்தம் | ரூ.7.00 |

**1. நாகர்கோவில் மற்றும் ஜவ்வாது மலை ஆகிய இடங்களில் தேன் பரிசோதனை ஆய்வுக்கூடம் நிறுவுதல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் அம்சி என்னுமிடத்திலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலையிலும் தேன் பதப்படுத்தும் நிலையம் வாரியத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அலகில் உள்ள தேன் தரமானதும், இடமானதும், ஒரே சீராகவுமுள்ளதாலும் மற்றும் ஊட்டச்சத்து வாய்ந்ததாக இருப்பதாலும் இந்த அலகின் மூலம் பதப்படுத்தும் தேனுக்கு சந்தையில் அதிக கிராக்கி உள்ளது. கீழ்க்கண்ட காரணங்களின் பொருட்டு தேன் தரத்தை சரிபார்க்க வேண்டியது அவசியமாகிறது:

அ) தரம் பிரிக்க

ஆ) ஒரே சீரான தரத்தைப் பராமரிக்க

இ) பதப்படுத்துதலை ஊர்ஜிதப்படுத்துவதற்கான உரிய நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்காக

ஈ) சிந்தடிக் இரசாயனங்களிலிந்து தேனைப் பாதுகாப்பதற்காக

உ) அதிகமாக காய்ச்சப்படுவதாலும், புளிப்புத் தன்மை மற்றும் புகையினால் தேனின் வாசனை குறையாமல் இருப்பதை கண்காணிக்கவும்

ஊ). தேன், மெழுகு, தூசி மற்றும் அயல் பொருட்கள் சேர்க்கையினைத் தடுக்கவும், மேலே மிதக்கும் அசுத்தங்கள் ஆகியவைகளை நீக்க பதப்படுத்துவதற்காகவும்

எ) உணவு கலப்படம், வண்ணம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவைகள் கலப்படம் செய்வதை அறியவும்



2004 ஜூலை 29]

தேன் பரிசோதனை ஆய்வுக்கூடம் நிறுவினால் பின்வரும் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்:

1. அடர்த்தி தன்மை 27 டிகிரி
2. ஈரப்பதம் குறித்து
3. சுக்ரோஸன் தன்மை குறித்து
4. பழச்சர்க்கரை-குளுக்கோஸ் விகிதாசாரம் அறிய
5. பிக்கீஸ் பற்றி அறிய
6. சர்க்கரை குறையும் தன்மை அறிய

மேலே கூறப்பட்ட ஆய்வுகளைக் கொண்டு பச்சைத் தேனின் தரத்தையும் சோதனை செய்யலாம்.

எனவே, வாரியம் நாகர்கோவில் மற்றும் ஜவ்வாது மலையில் தலா ரூ.1.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.2.00 இலட்சத்தில் இரு தேன் பரிசோதனை ஆய்வுக்கூடங்களை நிறுவிட உத்தேசித்துள்ளது.

**2. ஐந்து அலுவலகங்களுக்கு கணிப்பொறி மற்றும் ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்கும் திட்டம்**

தற்போதுள்ள நடைமுறைகளின்படி மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்படும் கணக்கு மற்றும் இதர விவரங்கள் கையால் எழுதப்படுவதால் அவற்றைத் தொகுத்து வழங்கும்போது அதிக தாமதம் ஆவதுடன் முடிவெடுப்பதும் தாமதமாகிறது. எனவே, மாவட்ட அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டால் கீழ்க்கண்ட பயன்கள் விளையும்:-

1. திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திட
2. உற்பத்தி அலகுகள்/கதாங்காடிகளின் வேலைத் திறனை நுணுக்கமாக கண்காணித்திட வேண்டுவது
3. பொருள் விவரம் பட்டியலைப் பயன்பெறும் வகையில் அனுமதித்திட வேண்டுவது
4. வணிகலினை முறைத் திறத்தினை உதவி பெறத்தக்க வகையில் அமைத்திட வேண்டும்.

மைய அலுவலகத்தில் 1997 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்கப்பட்டது. இதுவரை ஐந்து இலட்சம் பிரதிகள் இந்த இயந்திரத்தின் வாயிலாக எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஜெராக்ஸ் இயந்திரத்தின் திறன் நாளாக நாளாக தேய்வடைவதாலும், தற்போதுள்ள வேலைப் பளுவினை கட்டுக்குள் கொண்டு வர இயலாத நிலை உள்ளது. வெளிச்சந்தையில் உள்ள ஜெராக்ஸ் இயந்திரத்தில் அதிக தொகையினை செலுத்தி பிரதிகள் எடுத்து அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. எனவே, ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் ரூ.1.25 இலட்சம் அளவில் கொள்முதல் செய்வது மிகவும் அத்தியாவசியமாகிறது.

எனவே, வாரியம் 5 அலுவலகங்களுக்கு கணினிகள் தலா ரூ.0.75 இலட்சம் வீதம் ரூ.3.75 இலட்சத்திலும், ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் ரூ.1.25 இலட்சத்திலும் வாங்க உத்தேசித்துள்ளது.

## V விளிம்புத் தொகைத் திட்டம்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் வரையறுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி கிராமிய கைவினைஞர்களுக்கு உதவும் வகையில் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகைத் திட்டம் என்னும் ஒரு திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் தொழில் தொடங்கி தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் அதிகபட்சமாக 30 சதவீதம் மானியமாக வழங்கி வருகிறது. கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் அடையாளம் கண்டுள்ள 119 கிராமத் தொழில்கள் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற தகுதி உடையனவாகும். இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களிலுள்ள 1,120 பயனாளிகளுக்கு இதுவரை ரூ.171.60 இலட்சம் விளிம்புத் தொகை மானியமாக வாரியத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

## VI நிதிநிலை:

வாரியத்தின் நிதி ஆதாரம் மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் துணையுடன் வழங்கும் நிதியுதவி மற்றும் வாரியத்தின் விற்பனை வரவென இருவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசின் வரவு-செலவுத் திட்டத்தில், தள்ளுபடி மானியம் வணிகம் சாரா பணியாளர்களின் ஊதியத்திற்கான மானியம் மற்றும் பகுதி-2 திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு வழங்கும்





மானியங்களே முக்கியமானதாகும். இது தவிர அரசு வாரியத்தின் கணக்குகளை தணிக்கை செய்யும் தணிக்கையாளர்களுக்கு தணிக்கைக் கட்டணம் வழங்குகிறது. அக்கட்டணத் தொகை அரசின் வரவின தலைப்பில் சரிசெய்யப்படுகிறது. மாநில அரசால் வழங்கப்படும் நிதியுதவி பின்வருமாறு:—

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | நிதி ஒதுக்கப்பட்ட தலைப்பு | திருத்திய மதிப்பீடு 2003 - 2004 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2004 - 2005 |
|---|---|---|---|
| 1 | நிகர செலவு மானியம் | 2200.00 | 1960.00 |
| 2 | தணிக்கை கட்டணம் | 350.00 | 350.00 |
| 3 | கதர் விற்பனைத் தள்ளுபடி<br>(அ) கதர் வாரியம்<br>(ஆ) சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | <br>200.00<br>750.00 | <br>200.00<br>800.00 |
| 4 | சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக | 12.00 | 24.51 |
| | மொத்தம் | **3512.00** | **3334.51** |

[2004 ஜூலை 29

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

1. இந்தியாவிலேயே, தமிழ்நாடு, பனைத் தொழில் வளர்ச்சியில் முதன்மையாக உள்ளது. தமிழ்நாடு, பனைத் தொழில் வளர்ச்சிக்கு தேவையான வளங்களைக் கொண்டு, பனைத் தொழில் வளர்ச்சிக்கும் அவைகளின் மேம்பாட்டிற்கும் மையமாக அமைந்துள்ளது. இந்தியாவிலுள்ள சுமார் 8.59 கோடி பனை மரங்களில் தமிழ்நாட்டில் 5.20 கோடி பனை மரங்கள் உள்ளன. பனை மரம் தமிழ்நாட்டின் மாநில மரம் ஆகும்.

2. மாநிலத்தில் பனைத் தொழில் வளர்ச்சிக்காக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் என்ற பெயரில் ஒரு தனி வாரியம் தமிழ்நாடு சட்டம் (15) 1994–ன்படி தனியாக அமைக்கப்பட்டு 6-1-1995 முதல் சென்னையைத் தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

3. பனைப் பொருட்களுக்கு சந்தையில் போட்டி ஏற்படுத்துவது தொடர்பாக, வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல், அதற்குத் தேவையான தொழில் நுட்பங்கள் அளித்தல், பனைப் பொருள் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகள் செய்து பனைப் பொருட்களை முழுமையாக பயன்படுத்தி, பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்றவை இவ்வாரியத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

4. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் நேரடியான வியாபாரத்தில் ஈடுபடவில்லை. பனைத் தொழில் வளர்ச்சிக்காக 996 ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்களும் (பனை ஓலைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) 8 மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவுச் சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை நேரடியாக பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த அமைப்புகள் மூலமாகவும், மாநிலமெங்கும் உள்ள கதர் அங்காடிகள் மற்றும் விற்பனை அங்காடிகள் மூலமாகவும் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

5. தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு தனியாக வரவு-செலவுத் திட்டம் இல்லை. இவ்வாரியத்தின் செலவினம்



2004 ஜூலை 29]

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரிய வரவு-செலவுத் திட்டத்தில் அடங்குகிறது.

6. இவ்வாரியத்தின் நலத் திட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டங்களில் (i) தொடர் பசுமை புரட்சி (ii) உணவு பாதுகாப்பு (iii) வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் (iv) சூழல் பாதுகாப்பு ஆகிய திட்டங்கள் உள்ளடக்கிய திட்டங்களாக உள்ளன.

7. பனைத் தொழிலில் தற்போது பல்வேறு வகையான பனை வகை உண்பொருட்களான பதநீர், பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பாம் சாக்லெட் வகைகள், பதப்படுத்திய நுங்கு, பனம்பழ ஜாம் வகைகள், காற்றூட்டப்பட்ட குளிர்பான வகைகளான பாம்டா, பாம்கோலா மற்றும் உண்ணா பொருட்களான பனை ஓலைப் பொருட்கள், பனை நார் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### (அ) உற்பத்தி

2004–2005 ஆம் ஆண்டிற்கு மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகளுக்கு பனைப் பொருட்கள் உற்பத்தி குறியீடாக ரூ.1,230.00 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) விற்பனை

பனைப்பொருட்களை விற்பனை செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2004–2005ஆம் ஆண்டிற்கு ரூ.1,430.00 இலட்சம் மதிப்புள்ள பனைப்பொருட்களை விற்பனை செய்திட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### (இ) வேலைவாய்ப்பு

பனைத் தொழிலில் சுமார் ஆறு இலட்சம் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர். பதநீர் இறக்குதல், பனை வெல்லம் தயாரித்தல், பனந்தும்பு

அடித்தல், ஈச்சங்கூடைகள் முடைதல் ஆகிய பனைத் தொழில்களில் சுமார் 30,000 ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## 8. பனந்தும்பு மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஏற்றுமதி

பனந்தும்பு தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பெல்ஜியம், பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு ஆண்டுதோறும் சற்றொப்ப ரூ.4.00 கோடிக்கு தூத்துக்குடியில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மணப்பாடு, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு, வேலூர் மாவட்டத்தில் அடுக்கம்பாறை, சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை ஆகிய பகுதிகளில் பெண் கைவினைஞர்களால் அழகிய பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் அமெரிக்கா, லண்டன், பிரான்சு, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஜப்பான் மற்றும் நெதர்லாந்து ஆகிய அயல்நாடுகளுக்கு முகவர்கள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## 9. பனைத் தொழிலில் பயிற்சிகள்

கடலூரில் உள்ள தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி மையத்தின் மூலம் கிராமப்புற கைவினைஞர்களுக்கு பனைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 10. புதிய திட்டங்கள்

2004–2005 ஆம் ஆண்டில் அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் மூலம் கீழ்க்காணும் திட்டங்கள் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.17.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

1. சென்னை எழும்பூரிலுள்ள தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை இணைய "பாம்கோலா" மற்றும் "பாம்டா" உற்பத்திப் பிரிவினில் உற்பத்தி செய்யப்படும் "பாம்கோலா" மற்றும் "பாம்டா" குளிர்பான வகைகளை நவீன முறையில் சிறப்பாகத் தயாரிப்பதற்கு ரூ.4.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வாங்கப்படும். இது உற்பத்தியை அதிகரிக்கவும் நவீனப்படுத்தவும் வழிவகுக்கும்.



2. தருமபுரி மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 200 ஏழை பனைத் தொழில் கைவினைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பதநீரிலிருந்து பனை வெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.3.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

3. திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய தென்மாவட்டங்களில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 666 ஏழை பனைத் தொழில் கைவினைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பதநீரிலிருந்து பனை வெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.10.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

பனை மரங்கள் மண் அரிப்பைத் தடுத்து இயற்கை வளத்தைப் பாதுகாக்கிறது. பனைப் பொருட்கள் தூய்மை கேடற்றவை மற்றும் சுற்றுப்புறச்சூழலுக்கு உகந்தவை ஆகும். எனவே தொலைநோக்கு கண்ணோட்டத்துடன் பனை மரங்கள் வளர்த்து பாதுகாப்பது தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், பனைத் தொழில் வளர்ச்சிக்கும் அதனடிப்படையில் கிராமப்புறத்திலுள்ள இலட்சக்கணக்கான பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் மூலம் வகை செய்யப் படுகின்றன. கிராமப்புறங்களில் உள்ள பனைத்தொழில் கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுப்பதும், பனைத்தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கை மேற்கொள்வதும் தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் குறிக்கோளாகும். சிறிய அளவு மூலதனத்துடன் உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களை பயன்படுத்தி சுற்றுப்புற சூழலுக்கு உகந்தவாறு நாள்தோறும் மக்கள் வாங்கி பயன்படுத்தும் மற்றும் விரைவில் விற்பனையாகும் பனைபொருட்களை உற்பத்தி செய்யும் அதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் வகை செய்கின்றன.

[2004 ஜூலை 29

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1.00 தமிழகத்தில் கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்காகவும் மற்றும் முன்னேற்றத்திற்காகவும் புதிய இலக்கு நோக்கி சிறப்பான உத்வேகத்துடன் முன்னேற ஒரு தனி நிறுவனம் **"தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்"** என்ற பெயரில் தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனமாக 26-7-73 அன்று நிறுவனங்களின் 1956 ஆம் ஆண்டைய சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்நிறுவனம் 01-08-73 முதல் செயல்படத் துவங்கியது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது, தொழில் துறை மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சந்தை சங்கங்களின்கீழ் இயங்கிவந்த அனைத்து கைத்திறன் விற்பனை நிலையங்களும் பல்வேறு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந்நிறுவனத்தின்கீழ் உடனடியாக மாற்றப்பட்டன. அரசிடமிருந்து அனைத்து விற்பனை நிலையங்கள், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் உரிமை மாற்றம் செய்யப்பட்டபின் இந்நிறுவனம் "பூம்புகார்" என்ற பெயரில் இயங்கத் துவங்கியது. தற்போது பூம்புகார் தமிழ்நாட்டின் தலைசிறந்த கைவினைப் பொருட்களின் களஞ்சியமாக உள்ளது.

### 2.00 இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்:

இந்நிறுவனம் அமைக்கப்பட்டதற்கான முக்கிய குறிக்கோள்கள் வருமாறு:

i) தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு சீரான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பணியை மேற்கொள்ளுதல்

ii) கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்பாடடையச் செய்ய முறையான பயிற்சி அளித்தல்

iii) கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும் தரத்தினையும் மேம்படுத்தி அதே நேரத்தில், அத்தொழிலில் உள்ள உற்சாகமற்ற கடின உழைப்பைக் குறைத்து தொழில்முறை இடர்பாடுகளைக் களைதல்

iv) வடிவமைப்புகளில் புதுமையினைப் புகுத்துதல்



v) கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு அளித்தல்

இக்குறிக்கோள்களை அடைவதற்காக இந்நிறுவனம் சந்தை வாய்ப்பு, உற்பத்தி, சிறப்பு கோயில் திட்டங்களை மேற்கொள்ளுதல், கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

### 3.00 வணிக செயல்பாடுகள்

### 3.01 விற்பனை

இந்நிறுவனம், கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பு என்ற தனது முக்கிய குறிக்கோளை, கீழே விவரிக்கப்பட்ட 16 பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தும் கண்காட்சிகளில் விற்பனை செய்வதன் மூலமும் நிறைவேற்றி வருகிறது.

| தமிழ்நாட்டிலுள்ள விற்பனை நிலையங்கள் | |
|---|---|
| பூம்புகார் விற்பனை நிலையம்<br>108, அண்ணா சாலை,<br>சென்னை 600 002 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கலைமகள் இல்லம்<br>சன்னதி தெரு<br>கன்னியாகுமரி 629 702 |
| பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடற்கரை சாலை<br>மாமல்லபுரம் 603 104 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>874 பெரிய கடை வீதி<br>கோயம்புத்தூர் 641 001 |
| பூம்புகார் விற்பனை நிலையம்<br>48 காமிஸரி பஜார்<br>வேலூர் 632 004 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>52, வடக்குத் தெரு,<br>சுவாமிமலை 612 302 |
| பூம்புகார் விற்பனை நிலையம்<br>புகைவண்டி நிலைய சாலை<br>தஞ்சாவூர் 613 001 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>1154, மேட்டூர் ரோடு<br>ஈரோடு 638 001 |

[2004 ஜூலை

| | |
|---|---|
| பூம்புகார் விற்பனை நிலையம்<br>சிங்காரதோப்பு<br>மேற்கு பொலிவார் சாலை<br>திருச்சி 620 008 | பூம்புகார் விற்பனை<br>நிலையம்<br>எண் 2 கோட்டை பிரதான<br>சாலை,<br>சேலம் 636 011 |
| பூம்புகார் விற்பனை நிலையம்<br>12 மேற்கு வெளி வீதி<br>மங்கம்மாள்<br>சத்திரகட்டடங்கள்<br>இரயில்வே சந்திப்பு எதிரில்<br>மதுரை 625 001 | பூம்புகார் விற்பனை<br>நிலையம்<br>139 நெல்லையப்பர்<br>நெடுஞ்சாலை<br>திருநெல்வேலி 627 001 |

| வெளி மாநில விற்பனை நிலையங்கள் | |
|---|---|
| பூம்புகார் விற்பனை நிலையம்<br>104/105 பிரிகேட் சாலை<br>பெங்களூர் 560 001 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>சி-1 ஸ்டேட் எம்போரியா<br>காம்ப்ளெக்ஸ்,<br>இர்வின் சாலை,<br>பாபா கரக் சிங் மார்க்.<br>புதுடெல்லி 110 001 |
| பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடை எண் 21-22 முதல் தளம்<br>சி.ஐ.டி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்<br>எண் 2 காரியாஹாட் சாலை<br>கொல்கத்தா 700 068 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>அண்ணா ஆர்கேட்<br>152 மறைமலையடிகள் சாலை<br>பாண்டிச்சேரி 605 001 |

3.02 1973–1974 இல் ரூ.50.00 இலட்சத்திற்கு விற்பனை செய்த இந் [illegible] 2003-2004 இல் தன விற்பனையை ரூ.1308.00 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

3.03 தனது தீவிர விற்பனைக் கோட்பாடுகளைத் தொடர்ந்து செயல்படுத்தியதன் மூலமும், கோயில் திட்டங்களை திறம்பட நிறைவேற்றியதனாலும் 2003-2004 இல் இந்நிறுவனம் தன் விற்பனையை, சென்ற ஆண்டு விற்பனையுடன் ஒப்பிடும்போது ரூ.31.43 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது.



2004 ஜூலை 29]

3.04 கடந்த 4 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை பின்வருமாறு:

| ஆண்டு | விற்பனை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2001-2002 | 1179.88 |
| 2002-2003 | 1276.35 |
| 2003-2004 | 1307.78 |
| 2004-2005 | 1500.00 (எதிர்பார்க்கப்படுகிறது) |

3.05 ஏற்றுமதி

கடந்த ஆண்டுகளில் இந்நிறுவனத்தில் மறைமுக ஏற்றுமதியையே ஊக்குவிப்பதாக இருந்தது. 2003-04 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதி விற்பனையில் சில தடைகள் காரணமாக இந்நிறுவனத்தின் ஏற்றுமதி ரூ.75.00 இலட்சம் மட்டுமே ஆகும்.

கடந்த 4 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் ஏற்றுமதி விற்பனை பின்வருமாறு:

| ஆண்டு | விற்பனை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2001-2002 | 89.87 |
| 2002-2003 | 113.54 |
| 2003-2004 | 75.00 |
| 2004-2005 | 125.00 (எதிர்பார்க்கப்படுகிறது) |

3.06 இந்நிறுவனம் ஈரோட்டில் உள்ள விற்பனை நிலையத்தின் கட்டுமானப் பணியினை முடித்து 4-12-2003-ல் அதில் விற்பனையை துவக்கியது.

[2004 ஜூலை 29

3.07 மார்ச் 2004-ல் சுவாமிமலையில் தற்போது இயங்கிவரும் உற்பத்தி நிலையத்தில் ஒரு சிறப்பு விற்பனை நிலையத்தினை துவக்கியது.

**3.08 உற்பத்தி**

நம் நாட்டிலுள்ள கைவினைப் பொருட்கள் நிறுவனங்களிலேயே தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மட்டுமே கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு சொந்த உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ள ஒரே நிறுவனமாகும்:

| | |
|---|---|
| பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கல பொருட்கள் உற்பத்தி நிலையம், நாச்சியார்கோவில் - 612 602 | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம் எண் 52 வடக்குத் தெரு சுவாமிமலை 612 302 |
| பூம்புகார் பித்தளை கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம் தொழிற்பேட்டை மதுரை - 625 007 | பூம்புகார் சந்தன மரச்சிற்பங்கள் உற்பத்தி நிலையம் 54—55 சிட்கோ தொழிற்பேட்டை கச்சிராபாளையம் ரோடு கள்ளக்குறிச்சி 606 202 |
| பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம் புகை வண்டி நிலைய சாலை தஞ்சாவூர் 613 001 | பூம்புகார் கற்சிற்ப நிலையம் கடற்கரை சாலை மாமல்லபுரம் 603 104 |
| பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம் மன்னார் கோயில் அஞ்சல், அம்பாசமுத்திரம் (வழி), வாகைக்குளம் 627 413 | |

கடந்த 4 ஆண்டுகளில் இந்த உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு பின்வருமாறு:



2004 ஜூலை 29]

| வருடம் | உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2001-2002 | 203.58 |
| 2002-2003 | 184.59 |
| 2003-2004 | 116.00 |
| 2004-2005 | 125.00 (எதிர்பார்க்கப்படுகிறது) |

2003-2004 ஆம் ஆண்டில் இக்கழகம் தனது உற்பத்தி நிலையப் பொருட்களுக்கு அதிக அளவில் ஆணைகள் பெறவில்லையாதலால் மூலப் பொருட்களிலும் முடிவடைந்த பொருட்களிலும் தனது மூலதனத்தை முதலீடு செய்வது அவசியமில்லை எனக் கருதி தனது உற்பத்தியை தேவைக்கேற்ப குறைத்துக் கொண்டது. 2004-2005 ஆம் ஆண்டிலும் தனது உற்பத்தியை ரூ.125.00 இலட்சமாக நிர்ணயித்துள்ளது. இதில் கோவில்களிலிருந்து பெறப்படும் சிறப்பு ஆணைகள் சேர்க்கப்படவில்லை.

**4.00 பகுதி 2 திட்டங்கள்**

4.01 2003-2004ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் தமிழக அரசு ரூ.27.00 இலட்சங்களை கீழ்க்காணும் திட்டங்களுக்கு ஈடான மானியத் தொகையாக வழங்க அனுமதி அளித்தது.

| | | |
|---|---|---|
| 1 | ஈரோட்டில் விற்பனை நிலையத்திற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கு | ரூ. 12.00 இலட்சம் |
| 2 | சுவாமிமலையில் புதிய விற்பனை நிலையம் துவக்குவதற்கு | ரூ. 15.00 இலட்சம் |

இக்கழகம் ஈரோட்டில் விற்பனை நிலையம் அமைந்துள்ள புதிய கட்டடத்தை கட்டி முடிக்க அரசு ஒதுக்கிய ரூ.12.00 இலட்சங்களை 2003-2004 ஆம் ஆண்டிலேயே முழுவதுமாக செலவு செய்துள்ளது.

[2004 ஜூலை 29

4.02 சுவாமிமலையில் விற்பனை நிலையம், உற்பத்தி நிலையம் மற்றும் வடிவமைப்பு–பயிற்சி நிலையம் ஆகியவற்றை ஒரே இடத்தில் அமைக்க 15,042 சதுர அடி இடம் வாங்கியது. 2003-04ஆம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய மானியத்திற்கு இணையாக ரூ.15.00 இலட்சம் ஈட்டு மானியத் தொகையினை வழங்க தமிழக அரசு அனுமதி அளித்தது. ரூ.30.00 இலட்சத்திற்கும் அதிகமான செலவில் பொதுப் பணித் துறையின் மூலம் பல்நோக்கு கட்டடம் கட்டும் பணியை இக்கழகம் துவக்கியுள்ளது.

4.03 இந்நிறுவனம் சுவாமிமலையில் நடத்திய பஞ்சலோக உற்பத்தி பற்றிய மூன்றாண்டு சான்றிதழ் பயிற்சி 31-7-2003-இல் முடிவு பெற்றது. இதே போல் மீண்டும் சுவாமிமலையில் பஞ்சலோக உற்பத்தி பற்றிய மூன்றாண்டு சான்றிதழ் பயிற்சி நடத்திடவும் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழக அரசிடம் ரூ.10.00 இலட்சம் நிதி உதவி கோரி விண்ணப்பித்துள்ளது.

4.04 2004-2005ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தில் தமிழக அரசு நிதி ஒதுக்கீட்டின்படி ரூ.58.80 இலட்சத்திற்கு கீழ்க்காணும் திட்டங்களை இக்கழகம் நிறைவேற்றவுள்ளது:

| வ. எண் | திட்டங்கள் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பல்வேறு கைத்திறன் தொழில்கள் குறித்த பயிற்சித் திட்டங்கள் | 10.40 |
| 2. | கருவிகள் மற்றும் சாதனங்கள் குறித்த மேம்பாடு | 3.00 |
| 3. | தொழில்நுட்ப உத்திகள், ஆராய்ச்சிகள் மற்றும் வடிவமைப்புகள் ஆகியவற்றில் தரம் உயர்த்துதல் | 7.40 |
| 4. | கைத்திறன் தொழில்கள் மேம்பாட்டிற்காக திரண்ட அணுகுமுறை - 5 கைத்திறன் தொகுதிகள் | 38.00 |
| | **மொத்தம்** | **58.80** |



2004 ஜூலை 29]

## 5.00 சிறப்புத் திட்டங்கள்

உற்பத்தி செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுத்துகின்ற வகையில் இந்நிறுவனம் அதிக வாய்ப்புள்ள கோயில் சிறப்பு திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் முனைந்து செயல்பட்டு வருகிறது. அதன்படி இக்கழகம் தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் உள்ள கோவில்களில் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி தெரிந்துகொள்ள கோவில்களை தொடர்புகொண்டது. இதைத் தவிர மாநிலங்களில் உள்ள இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் மற்றும் இதர அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு அந்த வேலைகளுக்கான ஒப்புதலைப் பெற நடவடிக்கை மேற்கொண்டது. இக்கழகத்தின் இத்தகைய நடவடிக்கைகள் பயனளிக்கத் தொடங்கியதுடன் தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் உள்ள கோவில்களிலிருந்து மர இரதம், தங்க இரதம், கொடிமரம், வாகனம், பித்தளை கிராதிகள் மற்றும் பித்தளை உண்டியல்கள் செய்வதற்கான வேலை ஆணைகள் வரத் தொடங்கியது. கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்புத் திட்டங்கள் மூலம் இந்நிறுவனம் அடைந்த விற்பனை மற்றும் சேவைக் கட்டணம் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| வருடம் | விற்பனை மற்றும் சேவைக் கட்டணம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2001-2002 | 45.00 |
| 2002-2003 | 110.87 |
| 2003-2004 | 90.44 |
| 2004-2005 | 112.00 (எதிர்பார்க்கப்படுகிறது) |

சிறப்புத் திட்டங்களில் உள்ள பல வேலைகளை கருத்தில் கொண்டு இக்கழகம் சிறப்புத் திட்டப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. சிறப்புத் திட்டப் பணிகளில் பல வேலைகள் இந்த 2004-2005 நிதி ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2004 ஜூலை 29

5.01 பின்வரும் அட்டவணையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பெருமைவாய்ந்த சிறப்புத் திட்டங்கள் சமீபகாலத்தில் முடிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் தற்போது செய்து வரும் பணிகள் குறித்த விவரங்கள் தரப்பட்டுள்ளன.

| வ.எண் | சிறப்புத் திட்டத்தின் பெயர் | பணியின் மொத்த மதிப்பு | நிறுவனம் பணிகளுக்காக பெற்ற மொத்த மதிப்பு |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சங்களில்) |
| | **2003–04–ல் முடிக்கப்பட்டவை** | | |
| | **தமிழ்நாட்டிற்குள்** | | |
| 1. | கோவை மாவட்டம் மருதமலையிலுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 16'6 7/8" உயரத்தில் தங்கத் தேர் செய்து தருதல் | 108.00 | 15.85 |
| 2. | தாரமங்கலத்தில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக் கோயிலுக்கு 18' உயரத்தில் மரத் தேர் செய்து தருதல் | 20.48 | 20.48 |
| 3. | சென்னையிலுள்ள பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்கு மரத் தேர் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 25.00 | 9.03 |



2004 ஜூலை 29]

| | | | |
|---|---|---|---|
| | **2004–05 இல் செய்யப்படவுள்ள சிறப்புத் திட்டங்கள்** | | |
| 1. | மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் வெள்ளி அம்பல நடராஜர் சன்னதியில் வெள்ளித் தகடு வேய்தல் | 66.00 | 9.55 |
| 2. | சென்னை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் அலங்கார பித்தளை கிராதிகள் செய்து வழங்குதல் | 8.84 | 8.84 |
| | **ஆந்திரப் பிரதேசத்தில்** | | |
| 1. | ஸ்ரீகாளஹஸ்தியில் உள்ள ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு 15000 எண்கள் வெள்ளி நாக உருக்கள் செய்து வழங்குதல் | 10.79 | 10.79 |
| 2. | ஸ்ரீகாளஹஸ்தியில் உள்ள ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயிலிலுள்ள அம்மன் சன்னதிக்கு வெள்ளித் தகடு வேய்தல் | 149.00 | 29.80 |
| | **கர்நாடகத்தில்** | | |
| 1. | பெங்களூரில் உள்ள ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி கோயில் பொறுப்பாட்சிக்கு 15'3" வெள்ளித் தகடு வேய்தல் | 70.85 | 17.38 |

## 6.00 பூம்புகார் மாநில விருது

6.01 கைவினைஞர்களின் மேலோங்கிய படைக்கும் திறனையும், சிறந்த செயல் திறனையும் வெளிக்கொணர இந்நிறுவனம் ஆண்டுதோறும் பூம்புகார் விருது போட்டியினை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கலை மற்றும் கவின் பொருட்கள் களத்தினைச் சார்ந்த மேம்பட்டவர்கள் அடங்கிய நீதிபதிகளின் குழுவினால் ஐந்து மிகச்சிறந்த கலைப் பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெற்றி பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரொக்கத் தொகையாக ரூ.5,000/–, 40 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும்

சான்றிதழ் ஆகியவைகள் பரிசாக வழங்கப்படுகின்றன. இத்துறை சிறப்பு வாய்ந்த கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில் அரசு, பூம்புகார் விருதினை மாநில விருதாக அங்கீகரித்துள்ளதன் வாயிலாக பரிசு பெற்றவர்கள், மத்திய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத்தொகையான ரூ.1,000/-த்தினை, 60 வயதை எட்டியவுடன் பெற தகுதி உடையவராகிறார்கள்.

**.02 மத்திய அரசின் தேசிய விருது/சில்ப குரு/யுனெஸ்கோ/இளம் கைவினைஞர் விருது**

ஒவ்வொரு ஆண்டிலும் 25 கைவினைஞர்களுக்கு மைய அரசு தேசிய விருது வழங்கி வருகிறது. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த கைவினைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்று மாநில அளவில் தேசிய விருதுக்கான கைவினைஞர்களை தேர்வு செய்வதில் இந்நிறுவனம் மத்திய அரசுடன் இணைந்து செயல்படுகிறது. 2002 இல் தமிழகத்தைச் சேர்ந்த 3 கைவினைஞர்களுக்கு தேசிய விருது கிடைக்கப் பெற்றுள்ளது. 2003ஆம் ஆண்டில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த கைவினைஞர்களில் 10 நபர்கள் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் மாநில விருது மற்றும் தேசிய விருது பெற்ற சிறந்த கைவினைஞர்களில் 55 வயதை எட்டிய முதிர்ந்த கைவினைஞர்களுக்கு 'சில்ப குரு' விருது வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படுகிறது. இக்கழகம் 'சில்ப குரு' விருதுக்கு கைவினைஞர்களைத் தெரிந்து பரிந்துரை செய்வதிலும் மத்திய அரசுக்கு உறுதுணையாக செயல்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் உலக அளவில் கைவினைஞர்களின் திறமை வெளிப்படும் விதத்தில் சிறந்த கைவினைஞர்களுக்கு யுனெஸ்கோ (UNESCO) விருதும் உலகளவில் இளம் கைவினைஞர்களுக்கு 1-வது, 2-வது, 3-வது பரிசுக்கு தேர்வு செய்கிறது. இந்தப் போட்டிக்கு தமிழக இளம் கைவினைஞர்கள் போட்டியில் கலந்துகொள்ள இக்கழகம் உதவி செய்து வருகிறது. இந்த விருதுக்குத் தகுதியானவர்கள் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.



**7.00 பங்கு மூலதன அமைப்பு**

இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.00 கோடி.

**7.01 31-3-2004-ல் இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதன கட்டமைப்பு வருமாறு:**

| வ. எண் | விவரம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு | 176.693 |
| 2. | மத்திய அரசு | 116.000 |
| 3. | தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கைவினைஞர்கள் | 0.704 |
| | **மொத்தம்** | **293.397** |

**8.00 15 அம்ச திட்டத்தினை செயல்படுத்துதல்**

அரசின் 15 அம்ச திட்டத்தினை செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக இந்நிறுவனம் கைவினைஞர்களிடமிருந்து கலைப்பொருட்கள் கொள்முதல் செய்வதில் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த கைவினைஞர்களுக்கும் மற்றும் மகளிருக்கும் முன்னுரிமை அளித்து வருகிறது. அதே போன்று இந்நிறுவனத்தால் நடத்தப்படும் பயிற்சி திட்டங்களிலும் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

**.00 வளர்ச்சித் திட்டங்கள்**

அ. *2003-2004*

அரசு ஆணை நிலை எண் 158, நிதி (பொதுத் துறை நிறுவனங்கள்) துறை, நாள் 13.5.02 இல் காணும் அறிவுரைகளின்படி, இந்நிறுவனம் தன்னார்வமாக பணியிலிருந்து ஓய்வு பெறும் திட்டத்தைச் செயலாக்கியது. இதன் மூலம் மொத்தம் இருந்த 258 ஊழியர்களில், பல பதவிகளில் இருந்து 45 ஊழியர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் 31-12-02 அன்று தன்னார்வ பணி ஓய்வு அளித்துள்ளது.

மேலும் தீவிர கட்டுப்பாட்டினை மேற்கொள்ள 31-12-03 அன்று இரண்டாவது கட்டமாக தன்னார்வ பணி ஓய்வு மூலம் 26 பணியாளர்களை விடுவித்தது.

ஆ. 2003–2004 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1) பல மாவட்டங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தனது விற்பனை நிலையங்கள் மூலமும், தான் நடத்தும் கண்காட்சிகள் மூலமாகவும் அவர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு இக்கழகம் சந்தை வாய்ப்பினை அளித்துள்ளது. ரூ.3.00 இலட்சங்கள் மதிப்புள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்கள் கண்காட்சிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை நடப்பு நிதி ஆண்டில் கண்காட்சிகள் மூலம் விற்பனை செய்திடவும். மேலும் தரமான பொருட்களை நேரிடையாக கொள்முதல் செய்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் ரூ.2.00 இலட்சங்கள் மதிப்புள்ள பொருட்கள் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2) இந்நிறுவனத்திற்கான மின்னணு வலைதளம் அமைக்கும் பணியினை எல்காட் (ELCOT) நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனத்தினர் ஆரம்ப கட்ட பணியினை மேற்கொண்டுள்ளார்கள்.

3) சில முக்கிய திருத்தலங்களில் சிறப்பு விற்பனை நிலையங்களை அமைப்பதில் சில நடை-முறைச் சிக்கல்கள் உள்ளன. ஆயினும் இது குறித்து மறுபடியும் இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடமும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடமும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. சுவாமிமலையில் கோயிலுக்குச் சொந்தமான வளாகத்தில், தற்போது உள்ள இக்கழகத்தின் உற்பத்தி நிலையத்தில் ஒரு சிறப்பு விற்பனை நிலையம் மார்ச் 2004 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது. எஞ்சிய கோவில்களிலும் விற்பனை நிலையங்களைத் திறக்க விரைவாக பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



# இணைப்பு - VI

(132 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 42 – சிறு தொழில்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

நாட்டின் பொருளாதார அமைப்பில், சிறு மற்றும் குறுதொழில் பிரிவு முக்கியமான மற்றும் துடிப்பான அங்கமாக திகழ்கிறது. நமது நாட்டிலுள்ள சுமார் 35.31 இலட்சம் சிறு தொழில் நிறுவனங்கள் சுமார் 199.65 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன. நமது நாட்டின் தொழில் உற்பத்தியில் 40 விழுக்காடும், ஏற்றுமதியில் 35 விழுக்காடும் சிறு தொழில் பிரிவு மூலம் கிடைக்கப் பெறுகிறது. 31–3–2004–ல் தமிழ் நாட்டில் 34.65 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் ரூ.13,292 கோடி முதலீட்டில் 4.75 இலட்சம் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் உள்ளன.

தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் வகையிலான முதலீட்டின் மதிப்பு ரூ.100 லட்சத்திற்கும் மிகாமல் உள்ள தொழில் அலகுகள் “சிறு தொழில் நிறுவனம்” என்றும், தளவாடங்கள் மற்றும் இயந்திரங்களின் மதிப்பு ரூ.25 லட்சம் வரை இருப்பின் அவை “குறுதொழில் நிறுவனம்” என்றும் மத்திய அரசால் வகைபடுத்தப்பட்டுள்ளது. சிறு தொழில்களை பாதுகாக்கும் பொருட்டு 675 இனங்களை சிறு தொழில் நிறுவனங்கள் மட்டுமே உற்பத்தி செய்யவும், அரசு செய்யும் கொள்முதல்களைப் பொறுத்தமட்டில் 358 இனங்கள் பிரத்தியேகமாக சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே வாங்கப்பட வேண்டுமென்றும் விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமை கொள்கையின்படி மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாட்டின் பொருளாதார ரீதியான தொழில் வளர்ச்சி நிலைத்து, நீடித்து நிரந்தரப்படுத்தப் படுவதற்கு, சிறு மற்றும் குறு தொழில்கள் மிகவும் முக்கியமாக இருப்பதாலும், தமிழகத்தின் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு சிறு மற்றும் குறு தொழில்கள் பொருளாதார ரீதியாக இயங்குவது அவசியம் என்பதாலும், அவற்றின் சீரிய வளர்ச்சிக்கேற்ற அரிய புது சிறப்பு கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்கின்ற தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்த அரசு பல்வேறு கொள்கை முடிவுகளை வகுத்துள்ளது.

## புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும். வேளாண் பொருள்களுக்கு கூடுதல் விலை கிடைக்கவும், ஊரக பொருளாதாரத்தை மேம்படுத்தவும், வேளாண்சார் / உணவு பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் 28–6–2002 அன்று தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு 2003–04 ஆம் ஆண்டில் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பிணையம் இல்லாமல் கடன் உறுதி நிதி குழும திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர் கடனுதவி பெறுவதற்கு வசதியாக மூலதன முதலீட்டின் வரம்பு ரூ 2.5 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் ஊக்க உதவிகளில், சிறப்பு மூலதன மானியமாக இயந்திரம் மற்றும் தளவாடங்களுக்கான முதலீட்டில் 15 விழுக்காடு மூலதன மானியம் அதிகபட்சமாக ரூ.15 இலட்சம், மொத்த தொழிலாளர்களில் 50 விழுக்காடுக்கும் அதிகமாக மகளிரை பணியமர்த்தினால் கூடுதல் மூலதன மானியமாக 5 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம், மின்னாக்கி மானியமாக மின்னாக்கியின் விலையில் 15 விழுக்காடு அதிகபட்சமாக ரூ 5 இலட்சம் மற்றும் குறைந்த அழுத்த மின்கட்டண மானியமாக மின் கட்டணத்தில் 30 விழுக்காடு. 20 விழுக்காடு மற்றும் 10 விழுக்காடு முறையே முதல், இரண்டு மற்றும் மூன்றாவது ஆண்டுகளில் வழங்கப்படும்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் துவக்கப்படும் அலகுகளுக்கு, நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுதல், சட்ட விதிகளின்படி அனுமதி பெறுதல் மற்றும் மின் இணைப்பு பெறுதல் ஆகியவற்றிற்குத் தேவையான வழிகாட்டுதலை மாவட்ட ஆட்சியர்கள் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுக்கள் அளிக்கின்றன.

இத்திட்டத்தின்கீழ், 31–3–2004 வரை, 385 வட்டாரங்களில் ரூ. 532.26 கோடி மதிப்பிற்கான, 765 திட்டங்களுக்கு மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒப்புதலளித்துள்ளது. முந்திரி பதப்படுத்தல், மலர்ச்சாறு எடுத்தல், மூலிகைச்சாறு எடுத்தல், மிளகாயிலிருந்து ஓலியோரெசின் தயாரித்தல், காய்கறி மற்றும் பழங்கள் பதப்படுத்தல், தரம் பிரிக்கும் நவீன அரிசி ஆலை அமைத்தல், குளிர்ப்பதன கிடங்கு அமைத்தல், கால்நடை மற்றும் கோழித் தீவனம் தயாரித்தல், இறால் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, மாவு மற்றும் சவ்வரிசி தயாரித்தல்,



ஆக்டிவேட்டட் கார்பன், தென்னை நார்க் கழிவு கட்டிகள், கயிறு நார், தேங்காய் ஓட்டுத் தூள் போன்ற தொழில்கள் அமைக்க குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வங்கி/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் 160 திட்டங்களும், சொந்த முதலீட்டில் 57 திட்டங்களும் ஆக மொத்தம் 217 திட்டங்கள் 31–3–2004 நிலவரப்படி செயலாக்க நிலையில் உள்ளன. 91 அலகுகள் ரூ. 60.38 கோடி திட்ட மதிப்பீட்டில் உற்பத்தியை துவங்கியுள்ளன.

## இணைய தளம் மூலம் தற்காலிக சிறு தொழில் சான்றிதழ் உடனடியாக பதிவு செய்தல்

இணைய தளத்தின் மூலமாக தற்காலிக சிறு தொழில் சான்றிதழ் உடனடியாக வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12–9–2002 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

புதிதாக சிறு தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், அரசு ஒப்புதலளித்த 262 தனியார் கணினி சேவை மையங்கள் மூலம் ரூ 50/– மட்டுமே சேவைக் கட்டணமாக செலுத்தி தற்காலிக சிறு தொழில் சான்றிதழ் பெறலாம். இந்த எளிய நடைமுறை, புதிதாக தொழில் துவங்கும் தொழில் முனைவோர்கள் தங்களின் வசதி மற்றும் தேவைக்கேற்ப உடனடியாக தற்காலிக சிறுதொழில் சான்றிதழ் பெற வழிவகுக்கிறது. 31–3–2004 வரை, 38,236 தற்காலிக சிறு தொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## சிறு தொழில் நிறுவனங்களின் பதிவு – நிரந்தரம்

2003–04 நிதியாண்டில் 26,545 சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிரந்தர சிறு தொழில் பதிவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களில் சுமார் ரூ.760 கோடி முதலீடு செய்யப்பட்டு இதன் மூலம் 1,91,920 பேருக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

## ஏற்றுமதி சேவை மையம்

தொழில் முனைவோர்களை ஊக்குவித்து ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு, 2002–03 ஆம் ஆண்டில் மாவட்ட தொழில் மையங்களில் ஏற்றுமதி சேவை மையங்களை அரசு ஏற்படுத்தி உள்ளது. ஏற்றுமதிகள் குறித்து தற்போதைய தகவல்கள், புதிய ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்து தகவல்கள் மற்றும் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட நடைமுறைகள்

போன்ற உதவிகளை ஏற்றுமதி சேவை மையம் அளிக்கிறது. ஏற்றுமதி விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள், ஏற்றுமதி சந்தை வாய்ப்பு, வெளிநாட்டு இறக்குமதியாளர்களின் முகவரிகள் மற்றும் ஏற்றுமதி படிவங்கள் சம்பந்தமான அறிவுரைகள் ஆகிய முக்கிய பணிகளுக்காக ஏற்றுமதியாளர்களுக்கு உதவ, மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான ஏற்றுமதி வளர்ச்சிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் ஏற்றுமதி மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான ஏற்றுமதி மேம்பாட்டு பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி

ஐந்து இலட்சம் மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியளிக்கும் திட்டத்தின்கீழ் 2001–02 முதல் 2005–06 முடிய, ஆண்டிற்கு 25,000 வீதம் 1,25,000 மகளிருக்கு பயிற்சியளிக்க தொழில் மற்றும் வணிகத் துறை திட்டமிட்டுள்ளது.

2003–04–ல், சுய உதவிக் குழுக்களிலிருந்து 11,172 மகளிர், தொழில் நுட்பக் கல்வி (ஐ.டி.ஐ./பட்டய படிப்பு) பயின்ற 8,828 மகளிர் மற்றும் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 5,137 மகளிர் ஆக மொத்தம் 25,137 மகளிர் சிறு தொழில் துவங்க பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர, 2003–04 ஆம் ஆண்டில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், தொழில் முனைவோர்களுக்கு வள மேலாண்மை உத்திகள் அடங்கிய தொழில் முனைவோர் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டு, இதுவரை 80 தொழில் முனைவோர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

## பின்முனை வட்டி மானியம்

சிறு தொழில் நிறுவனங்கள் பெறும் கடனுக்கான வட்டி சுமையைக் குறைப்பதற்கு, தொழில்நுட்ப மேம்பாடு / நவீன மயமாக்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கு வாங்கிய காலக்கடன், கடன் உத்திரவாத நிதிக் குழுமத் திட்டத்தின்கீழ் வாங்கிய காலக்கடன், நடப்பு மூலதனக் கடன், தேசிய சமபங்கு திட்டத்தின்கீழ் வாங்கிய காலக்கடன், ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் பெறுவதற்கான காலக்கடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் மூலம் அறிவார்ந்த கண்டுபிடிப்புகளின் காப்புரிமை பதிவு செய்வதற்கு



காலக்கடன், தேசிய சிறு தொழில் நிறுவனம் வழங்கும் கூட்டுக்கடன் மற்றும் தேசிய சிறு தொழில் நிறுவனம் – சிட்கோ கூட்டமைப்பு வழங்கும் கூட்டுக்கடன், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் காலக்கடன் ஆகியவைகளுக்கு பின்முனை வட்டி மானியம் வழங்கும் புதிய திட்டம் 2003–04–ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய திட்டத்தில், அடிப்படை கடன் வட்டி விகிதத்திற்கு மேலாக 3 விழுக்காடு அல்லது உரிய வட்டி விகிதத்திற்கும் அடிப்படை கடன் வட்டி விகிதத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் இவை இரண்டில் எது குறைவானதோ, அது பின்முனை வட்டியாக வழங்கப்படும். நிதி நிறுவனங்களால் அடிப்படை கடன் வட்டி விகிதம் பின்பற்றப்படாத நிலையில், 10.5 விழுக்காட்டிற்கும் கூடுதலாக வங்கியால் விதிக்கப்படும் வட்டி, அதிகபட்சமாக 3 விழுக்காடு வரையில் மானியமாக அனுமதிக்கப்படும். நிதி நிறுவனங்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாக காலாண்டு அடிப்படை முறையில் ஈடு செய்யப்படும் பின்முனை வட்டி மானியம், கடனை திரும்பச் செலுத்தும் கால அளவுடன் தொடர்புபடுத்தாமல் அதிகபட்சமாக ஐந்தாண்டுகள் வரை ஒவ்வொரு கடனுக்கும் அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வரை அரசால் வழங்கப்படும்.

## தொழில் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

தற்போதைய உலக வர்த்தக சூழலில் சிறு தொழில் நிறுவனங்கள் தாமான பொருட்களை போட்டிக்குரிய விலையில் அதிக அளவில் உற்பத்தி செய்தால்தான் நிலைத்து நிற்க முடியும். தொழில் குழும அணுகுமுறையை (Industrial cluster approach) பின்பற்றுதல் மூலமே, சிறு தொழில் நிறுவனங்களின் திறனை மேம்படுத்த முடியும்.

பொது–தனியார் பங்கேற்பு கொள்கையின்படி, தொழில் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் இந்திய அரசுடன் இணைந்து பங்கேற்பதுடன், தொழில் குழுமங்களை மேம்படுத்த தமிழக அரசு விரைவான மற்றும் முனைப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

ஆம்பூரில் தோல் பொருள் தொடர்புடைய குழுமம், கோயம்புத்தூரில் பம்பு, மோட்டார், வார்ப்படம் மற்றும் தொடர்புடைய தொழில் குழுமம், சென்னையில் மோட்டார் வாகன தொடர்புடைய துணை தொழில்கள் குழுமம், தமிழ்நாட்டில் கயிறு மற்றும் இது தொடர்புடைய கூட்டுப் பொருட்கள் குழுமம், மதுரையில் தானியம், பருப்பு வகைகள் அரைத்தல்

குழுமம். கிருஷ்ணகிரியில் மாம்பழக் கூழ் தயாரித்தல் குழுமம் ஆகிய ஆறு குழுமங்கள் குறித்த விரிவான திட்ட அறிக்கைளை பரிந்துரையுடன் இந்திய அரசுக்கு தமிழ்நாடு அனுப்பியுள்ளது. கோவையிலுள்ள பம்பு, மோட்டார், வார்ப்படம் மற்றும் தொடர்புடைய தொழில் குழும திட்டத்திற்கு மத்திய அரசு முதற்கட்ட ஒப்புதல் வழங்கியுள்ளது. மோட்டார் வாகனம் தொடர்புடைய துணை தொழில் குழுமத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் திருப்பூர், துணி சம்பந்தபட்ட குழும மேம்பாட்டு திட்டத்திற்கு, மத்திய அரசு முதல் தவணையாக ரூ.25 கோடி வழங்கியுள்ளது.

## ஊரக தொழில் குழும மேம்பாடு

வேளாண்சாரா தொழிலில் ஊரக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கி ஊரக பொருளாதாரத்தை அதிகரிக்கவும், ஊரக கைவினைஞர்கள் நகரம்/மாநகரங்ளை நோக்கிச் செல்வதைக் குறைக்கவும், புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள ஊரக தொழில் குழுமங்களை அமைக்க, "தேசிய ஊரக தொழில்மயமாக்கல் திட்டம்" என்ற புதிய திட்டத்தை மைய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிராம தொழில் குழுமத்தை மேம்படுத்த ஆய்வு அறிக்கை, செயல் விளக்கம் அளித்தல் மற்றும் நவீன கருவிகள் மற்றும் கருவி கலன்கள் உருவாக்குதல், வடிவமைப்பு உள்ளிட்ட தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல், சந்தை இணைப்புகள், கருத்தரங்குகள் மற்றும் கருத்துப் பட்டறைகள், ஆய்வு உலா, தொழில் ஆலோசனை ஆகியவற்றின் செலவுக்காக ரூ.5.00 இலட்சம் ஒவ்வொரு குழுமத்திற்கும் மானியமாக மத்திய அரசு வழங்குகிறது.

இத்திட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் புளி பதப்படுத்துதல் மற்றும் விற்பனை, தென்னை நார் மற்றும் கயிறு தயாரித்தல், மதுரை மாவட்டத்தில் சோப்பு மற்றும் ஆயத்த ஆடை தயாரித்தல், விழுப்புரம் மாவட்டத்தில் மர வேலைப்பாடுகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் வெண்கல உலோகப் பொருட்கள் தயாரித்தல், திருவாரூர் மாவட்டத்தில் தீப்பற்றாத மற்றும் நெடுநாள் நிலைக்கும் தென்னங்கீற்று தயாரித்தல், திருநெல்வேலி மாவட்டத்தில் கோரைப்பாய் நெய்தல், சேலம் மாவட்டத்தில் பாக்கு இலையில் கோப்பைகள்/தட்டுகள் தயாரித்தல் ஆகிய ஊரக தொழில் குழுமங்கள் வளர்ச்சிக்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.





## பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்

வேலை வாய்ப்பின்மைக்கு தீர்வு காண்பதற்கு, படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பளிக்கும் பொருட்டு மத்திய அரசின் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் 1993 அக்டோபர் 2 ஆம் நாள் தொடங்கப்பட்டது. அன்று முதல் இத்திட்டம் நம் மாநிலத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு அங்கீகாரம் பெற்ற, அரசின் ஒப்புதல் பெற்ற (தொழிற் பயிற்சி நிறுவனம்) நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் ஆகியோருடைய நலனை பாதுகாக்கும்பொருட்டு அவர்களுக்கு முறையே 22.5 சதவீதம் மற்றும் 27 சதவீத இட ஒதுக்கீடும் அளிக்கிறது.

2003-04 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கடன் ஒப்பளிப்பு 20,000 என்ற இலக்கில் நமது மாநிலத்தில் சுமார் ரூ. 83.04 கோடியளவில் 20,016 கடன் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## ஒற்றைச் சாளர முறை

சிறு தொழில் முனைவோர்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புற வளர்ச்சித் துறை, தீயணைப்புத் துறை, பொது சுகாதாரத் துறை போன்ற பல்வேறு துறைகளிடமிருந்து சட்ட ரீதியாக பெற வேண்டிய அனுமதிகளை விரைவில் பெறுவதற்கு, அரசு ஒற்றைச் சாளர முகமை அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள அமைப்புகளிடமிருந்து அனுமதிகளைப் பெறுவதற்கு மாவட்ட தொழில் மையம் மூலம் விண்ணப்பிக்க பொதுவான விண்ணப்பப் படிவம் வரையறுக்கப் பட்டுள்ளது. மாவட்டத் தொழில் மையங்கள் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகின்றன.

தொழில் முனைவோர்களுக்குத் தேவையான அனுமதிகளை விரைந்து பெறுவதற்கும், திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும் சிரமங்களைத் தீர்ப்பதற்கும், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட ஒற்றைச் சாளர குழுக் கூட்டம் மாதம் ஒருமுறை கூடும்.

2003-04 ஆம் ஆண்டில் 1,061 விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒற்றைச் சாளர குழுக் கூட்டத்தில் தீர்வு செய்யப்பட்டன.

[2004 ஜூலை 29

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வேளாண் சார்ந்த தொழில்களைத் துவக்குவதற்குரிய சட்ட ரீதியிலான அனுமதி மற்றும் விரைவில் மின் இணைப்பு பெறும் பொருட்டு நகர்ப்புற வளர்ச்சித் துறையின் துணை இயக்குநர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மாவட்ட பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோர்களை, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் திட்டங்களைத் தேர்வு செய்யும் மாவட்ட அளவிலான குழுவில் உறுப்பினர்களாகச் சேர்த்து அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் தொழில் முனைவோர்கள் 21 நாட்களுக்குள் நிலங்களை மறுவகைப்படுத்துவதற்கு அனுமதியும், 7 நாட்களுக்குள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெற்றுத் தரவும், முன்னுரிமை அடிப்படையில் தாமதமின்றி மின் இணைப்பு பெற்றுத் தரவும் இக்குழு உதவுகிறது.

## மண்டல தொழில் உதவிக் குழுமம்

சிறிய மற்றும் துணைத் தொழில் நிறுவனங்களுக்கு காலம் தாழ்த்தி செலுத்தப்படும் தொகைக்கு வட்டி வசூலிக்கும் சட்டம் 1993–இன்கீழ், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு நான்கு மண்டல தொழில் உதவிக் குழுமங்களை தமிழக அரசு அமைத்துள்ளது. இக்குழுமங்கள் விற்பனை செய்யும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை செய்த பொருட்களுக்கான நிலுவைத் தொகையினை பொருள் வாங்கிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறது. இந்த உதவிக் குழுமம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படுகிறது. 2003–04 ஆம் ஆண்டில் ரூ. 343.56 இலட்சம் மதிப்பிற்கு 131 இனங்களுக்கு இக்குழுமங்கள் மூலம் தீர்வு காணப்பட்டது.

## சிறு தொழில் வாரியம்

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசு தலைமைச் செயலரை துணைத் தலைவராகவும் கொண்டு சிறு தொழில் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் உறுப்பினர்–செயலராக உள்ளார். பல்வேறு துறைகளின் அலுவலர்களும், சிறு தொழில் சங்கப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ளனர்.



2004 ஜூலை 29]

உறுப்பினர்களாக உள்ள சங்கங்களிடமிருந்து பெறும் கோரிக்கைகளை வாரியக் கூட்டத்தில் வைத்து, அதன் மீதான பரிந்துரைகள் தக்க நடவடிக்கைக்காக அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

## மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்

சிறு தொழில் வளர்ச்சி மேம்பாட்டிற்காக அனைத்து அடிப்படை வசதிகளும் ஒருங்கமைந்த மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள் தமிழகத்தில் கீழ்க்கண்ட 8 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன:—

1. டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்ட்ரானிக் தொழிற்பேட்டை, சென்னை.
2. மேம்படுத்தப்பட்ட மனைகள் தொழிற்பேட்டை, பெருங்குடி, சென்னை.
3. காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்
4. கோயம்புத்தூர்
5. சேலம்
6. ஓசூர்
7. திருச்சிராப்பள்ளி
8. மதுரை

## பரிசோதனைக் கூடங்கள்

திருவள்ளூர் மாவட்டத்தில் காக்களூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் ஆகிய இடங்களில் மின் மற்றும் மின்னணு பொருட்களுக்கான பரிசோதனைக் கூடங்களை தொழில் வணிகத் துறை நடத்தி வருகிறது. மேலும் இரசாயனப் பொருட்களை சோதனை செய்வதற்கு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் சோதனைக் கூடங்களை இத்துறை இயக்கி வருகிறது. இச்சோதனைக் கூடங்கள் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சலுகை கட்டணத்தில் சோதனைகளை மேற்கொள்கின்றன.

2003–04 ஆம் ஆண்டிலிருந்து காக்களூரில் சோதனை மற்றும் மின்சாதனங்களின் திறன் வரைவித்தல் ஆகியவற்றில் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

## தொழிற் கூட்டுறவுப் பிரிவு

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு மூலப்பொருட்களை கொள்முதல் செய்து விநியோகித்தும், உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டும், உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தும், சேவை செய்து வருகின்றன. தற்போது மொத்தம் 61,775 உறுப்பினர்களைக் கொண்ட 318 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 2003–04 ஆம் ஆண்டில் 1,10,852 பேருக்கு வேலைவாய்ப்பளித்து ரூ.332.89 கோடிக்கு விற்பனை செய்துள்ளன.

## தேயிலைப் பிரிவு

### இன்கோசர்வ்

நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக 19,799 சிறு தேயிலை விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் இன்கோசர்வின் உறுப்பினர்களாகச் செயல்படுகின்றன. 2003–04 ஆம் ஆண்டில் இந்தத் தொழிற்சாலைகள் 137.48 இலட்சம் கிலோ தேயிலைத் தூளை உற்பத்தி செய்து ரூ.42.44 கோடி விற்பனை அளவை எட்டியுள்ளது. தேயிலை சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சியைக் கருத்தில் கொண்டு, சிறு தேயிலை விவசாயிகளின் பச்சைத் தேயிலையின் விலையை நிலை நிறுத்துவதற்காக பொது விநியோகக் கடைகள் மூலம் 'ஊட்டி டீ' விற்பனை செய்யும் திட்டத்தை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28–8–2001–ல் துவக்கி வைத்தார்கள். 31–3–2004 வரை ரூ.58.77 கோடி மதிப்பிலான 7836.186 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### டீசர்வ்

தேயிலை ஏலத்தை வெளிப்படையான முறையில் நடத்தி சிறு தேயிலை விவசாயிகளின் பச்சைத் தேயிலைக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்கச் செய்யும் நோக்கில் நாட்டிலேயே முதலாவதாக குன்னூரில் மின்னணு முறையிலான "டீசர்வ்" என்ற தேயிலை ஏல மையத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 13–9–2003 அன்று துவக்கி வைத்தார்கள். இதுவரையில் ரூ.26.76 கோடி மதிப்பிலான 80,67,294 கிலோ தேயிலை இந்த ஏல மையத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.



தற்போது செயல்பட்டுவரும் இதர ஏல மையங்களில் நிலவும் குறைபாடுளைக் களைவதற்கு இந்த ஏல மையம் உறுதி செய்கிறது.

டீசர்வ், தேயிலை வாங்குவோரை கூடுதலாக கவரும் வகையில், டீசர்வ் மூலமாக விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு தமிழ்நாடு விற்பனை வரி 4% எனவும் அல்லது மத்திய விற்பனை வரி 2% எனவும் வரிச் சலுகை 29–5–2003 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

### சேகோசர்வ்

நமது மாநிலத்தில் மிகவும் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் எடுத்துக்காட்டுதல்களில் ஒன்றாக "சேகோசர்வ்" விளங்குகிறது. 2003–04 ஆம் ஆண்டில் ரூ.187.67 கோடி மதிப்புள்ள உற்பத்திப் பொருட்களை இச்சங்கம் விற்பனை செய்துள்ளது. சவ்வரிசி மற்றும் மாவு உற்பத்தி செய்யும் 700 சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு சேகோசர்வ் ஆதரவு அளித்து வருகிறது. நமது நாட்டிற்கு தேவைப்படும் சவ்வரிசி மற்றும் மாவு ஆகியவற்றில் 80 விழுக்காடு தேவையை சேகோசர்வ் பூர்த்தி செய்கிறது. சேலம், "சேகோசர்வ்" வாயிலாக விற்கப்படும் மாவு மற்றும் சவ்வரிசிக்கு 7–5–2003 முதல் விற்பனை வரியில் 2% சலுகை வரி வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இச்சலுகை வரி விதிப்பானது சேகோசர்வ் உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் மாவு மற்றும் சவ்வரிசியை அவர்களுக்கு மிகுந்த பயனளிக்கும் வகையில் விற்பனை செய்வதற்கு அதிக அளவில் உதவுகிறது. சேகோசர்வ் 2002–03 ஆம் ஆண்டில் ரூ.139.57 இலட்சம் நிகர இலாபமாகவும் 2003–04 ஆம் ஆண்டில் ரூ.218.48 இலட்சம் தோராயமான நிகர இலாபமாகவும் ஈட்டியுள்ளது.

## கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 9,901 உறுப்பினர்களைக் கொண்டு 66 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 2003–04 ஆம் ஆண்டு இக்கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ 10.32 கோடி அளவிற்கு விற்பனை எய்தியுள்ளன. சந்தை வளர்ச்சி உதவித் திட்டத்தின்கீழ் 2003–04 ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ. 30.45 இலட்சத்தினை கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில், கயிறு சார்ந்த தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு, கயிறு வாரியம் 2004–06 ஆண்டுகளில் செயல்படுத்துவதற்கு ரூ.42.36 கோடி மதிப்பில் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்துள்ளது.

இத்திட்டத்தில் தமிழ்நாடு அரசு இணைந்து செயல்படுத்துவதற்கு, தனது பங்காக 2004–05 ஆம் ஆண்டிற்கு ரூ.43.40 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி 1961 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களின் கடன் தேவையை நிறைவு செய்யும் வகையில் இவ்வங்கி செயல்பட்டு வருகிறது. நபார்டு வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிப்பதற்கு பாரத ரிசர்வ் வங்கி இவ்வங்கிக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ)

சிட்கோ தமிழகத்தில் சிறுதொழில்களை மேம்படுத்தி ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு தமிழக அரசின் நிறுவனமாக 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நிறுவப்பட்டது. சிட்கோ 41 தொழிற்பேட்டைகளை மேம்படுத்தி உள்ளது. 35 அரசு தொழிற்பேட்டைகளுக்கு முகவராகவும் இருந்து வருகிறது. இதுவரையில் சிட்கோ 4,479 மனைகளை மேம்படுத்தி உள்ளது. இது தவிர 4,222 தொழிற்கூடங்களைக் கட்டியுள்ளது. மேலும் 200 முதல் 600 சதுர அடி வரை அளவு கொண்ட 1,841 குறுதொழிற்கூடங்களை கட்டியுள்ளது.

இந்நிறுவனம் 2003–04–ல் (மார்ச் 2004 வரையில்) நிறைவேற்றிய திட்டங்கள் மற்றும் 2004–05 ஆம் ஆண்டுக்கான திட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### தொழிற்பேட்டைகள்

(மதிப்பு ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | 2003-2004 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2003-04 ஆம் ஆண்டில் அடைந்த சாதனை | | 2004-05 ஆம் ஆண்டுக்கான இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | மதிப்பு | எண் | மதிப்பு | எண் | மதிப்பு |
| 1 | மேம்படுத்தப்பட்ட மனைகள் | 840 | 896.00 | 614 | 377.45 | 522 | 1023.32 |
| 2 | மேம்படுத்தப்பட்ட மனைகளின் விற்பனை | 740 | 1836.00 | 485 | 1324.21 | 850 | 2055.85 |
| 3 | தொழிற்கூடங்களின் விற்பனை | 135 | 1123.00 | 114 | 1002.37 | 90 | 556.29 |



### மகளிர் தொழிற் பூங்காக்கள் மற்றும் தொழில்நுட்ப பூங்காக்கள்

மாண்புமிகு முதல்வரால் அறிவிக்கப்பட்டவாறு மகளிர் தன்னாற்றல் பெறுவதற்கு 5 மகளிர் தொழிற் பூங்காக்களை தமிழகத்தில் ஏற்படுத்தும் திட்டம் இந்நாட்டிலேயே முதன்மை திட்டமாகும். அரசு புறம்போக்கு நிலங்களில் இந்த மகளிர் தொழிற் பூங்காக்களை அமைத்தால், நிலத்தின் விலையில் 50 விழுக்காடு தள்ளுபடி வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை அருகில் அமைந்துள்ள திருமுல்லைவாயில் மற்றும் திருச்சி மாவட்டத்திலுள்ள வாழவந்தான் கோட்டை ஆகிய இரு இடங்களில் புதிய தொழிற் பூங்காக்கள் அமைக்கப்பட்டு அவை மகளிர் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டம் கருப்பூரில் மூன்றாவது மகளிர் தொழில் பூங்கா அமைப்பதற்கு மேம்பாட்டுப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. அவற்றின் ஒதுக்கீடுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டு வருகின்றன. மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் எஞ்சியுள்ள இரண்டு மகளிர் தொழில் பூங்காக்கள் 2004-05 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

குறு தொழில்கள் நாட்டின் தொழிற்துறையின் முதுகெலும்பாக விளங்குகிறது. சிறு தொழில்களில் குறு தொழில்களின் பங்கு சுமார் 92 விழுக்காடாகும். மேலும் அதிக சுய வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை உருவாக்குவதால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் குறு தொழில்கள் வளர்ச்சிக்கு மூன்று தொழில்நுட்ப பூங்காக்கள் அமைக்க வேண்டுமென அறிவித்தார்கள். 2004-05 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் குறு தொழில் முனைவோர்களுக்கென இத்தகைய தொழில்நுட்பப் பூங்காக்களை புறநகர் பகுதிகளில் அமைக்க சிட்கோ முனைந்துள்ளது. இவற்றிற்காக வேலூர் மாவட்டம் வாணியம்பாடி அருகிலுள்ள விண்ணமங்கலத்தில் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, சிட்கோ முன் நுழைவு செய்துள்ளது. நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் நிலம் தேர்வு செய்யப்பட்டு இந்து அறநிலையத் துறையிடமிருந்து முன் நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. தேனியில் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அவற்றை சிட்கோவிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### மூலப்பொருள் உதவி

சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலப் பொருட்களை நியாய விலையில் விநியோகம் செய்வது இந்நிறுவனத்தின் பணிகளில் ஒன்றாகும். சிட்கோ கீழ்க்கண்ட மூலப்பொருட்களை விநியோகம் செய்து வருகிறது:—

[2004 ஜூலை 29

1. இரும்பு மற்றும் எஃகு

2. மெழுகு

3. பொட்டாசியம் குளோரேட்

4. அச்சுத்தாள்*

*அச்சுத்தாள் அரசுத் துறைகள், கல்வி நிறுவனங்கள், நகலகம், அச்சகக் கூடங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

## 2003-2004 ஆம் ஆண்டுக்கான மூலப்பொருட்களின் விற்பனை இலக்கும், அடைந்துள்ள சாதனையும் மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுக்கான விற்பனை இலக்கும்

(மதிப்பு ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | 2003-2004 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2003-04 ஆம் ஆண்டில் அடைந்த சாதனை | | 2004-05 ஆம் ஆண்டுக்கான இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மெ. டன் | மதிப்பு | மெ. டன் | மதிப்பு | மெ. டன் | மதிப்பு |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 7500.000 | 1500.00 | 8645.429 | 2103.92 | 10000 | 2300.00 |
| 2 | மெழுகு | 3000.000 | 999.00 | 1236.475 | 430.69 | 2000 | 760.00 |
| 3 | அச்சுத்தாள் | 1250.000 | 522.00 | 1568.014 | 653.58 | 2000 | 860.00 |
| 4 | பொட்டாசியம் குளோரேட் | 30.000 | 11.85 | 46.750 | 16.68 | 70 | 24.50 |

### விற்பனை உதவித் திட்டம்

சிட்கோ தனது விற்பனை உதவித் திட்டத்தின்கீழ் சிறு தொழில் நிறுவனங்களின் பொருட்களுக்கு போட்டி விலையில் விற்பனை செய்ய உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ், அரசுத் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களால் விளம்பரப்படுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் சிறுதொழில் நிறுவனங்கள் சார்பாக கலந்துகொள்கிறது. 2003-04 ஆம் ஆண்டில் ரூ.35.038 இலட்சம் அளவிற்கான ஆணைகளை சிட்கோ நிறைவேற்றி உள்ளது. 2004-05 ஆம் ஆண்டில் ரூ.30 இலட்சம் அளவிற்கு ஆணைகள் பெற்று விற்பனை உதவி செய்ய உள்ளது.



2004 ஜூலை 29]

### ஏற்றுமதி உதவித் திட்டம்

சிட்கோ நிறுவனம் சிறு தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய இணைய தளத்தின்மூலம் விளம்பரப்படுத்தி உதவி புரிந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 95 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### தேசிய சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் சிட்கோ நிறுவனம் கூட்டு காலக் கடன் திட்டம்

சிட்கோ தேசிய சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து குறு தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 25 இலட்சம் வரையில் கூட்டு காலக் கடன் திட்டத்தின் கீழ்கடனுதவி வழங்க உடன்பாடு செய்துள்ளது. இத்திட்டம் மனையின் விலை, கட்டட மதிப்பு, இயந்திரங்களின் மதிப்பு, நடைமுறை மூலதனம் ஆகிய அனைத்திற்கும் கடன் வழங்கும் அரிய திட்டமாகும். இக்கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 13% வட்டியாக வசூலிக்கப்படும். இக்கடனுக்கு ஈட்டு பிணையம் செலுத்த தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின்கீழ் தமிழக அரசு வட்டியின் அளவை குறைக்கும் பொருட்டு வட்டி மானியமாக ஆண்டிற்கு மூன்று விழுக்காடு வரை வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது. வட்டி அளவு 10.5 விழுக்காடு வரை குறைப்பதற்கு இந்த வட்டி மானியம் வழங்கப்படும்.

### புதிய முயற்சிகள்

### சிறு தொழில் மற்றும் குறு தொழில் தகவல் பெட்டகம்

தமிழ்நாட்டில் உள்ள சிறு தொழில்கள் குறித்து அடிப்படை புள்ளிவிவரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. பதிவு செய்யப்பட்ட சிறு மற்றும் குறு தொழில்களிடம் ஆய்வு செய்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு அடிப்படை புள்ளிவிவரம் தயாரிக்கப்படுகிறது. தொழில் அலகுகள் தயாரிக்கும் பொருட்கள், தரம், உற்பத்தித் திறன், உற்பத்தி செய்வதற்கு கடைபிடிக்கும் தொழில்நுட்பம், தொழில்முனைவோர் குறித்த தகவல் ஆகியவை நேரடி இணையதளத்தில் பதிவு செய்யப்படுகிறது. இத்தகவல் பரப்புதல் மற்றும் பரிமாறுதல் மூலம் சிறு தொழில்கள் தங்கள் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு விவரங்கள் மற்றும் தங்களுக்குத் தேவையான விவரங்கள் பெறுவதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

[2004 ஜூலை 29

## சிட்கோவின் இணையதளம்

சிட்கோ ஒரு புதிய இணையதளத்தை உருவாக்கி, சிட்கோ செயல்படுத்தும் அனைத்து திட்டங்கள் குறித்த விவரங்கள் அதாவது சிட்கோ தொழிற்பேட்டைகளில் காலியாக உள்ள தொழிற்கூடங்கள் மற்றும் காலியாக உள்ள மனைகள், மனைகளின் தற்போதைய விலை சிட்கோவில் கிடைக்கும் மூலப்பொருட்கள் பற்றிய விவரம் அனைத்தும் இணையதளத்தில் தெரிவிக்கப்படும். சிறு தொழில் உற்பத்தியில் பொருட்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கிடைக்கும் சந்தை வாய்ப்பு பற்றிய அனைத்து விவரங்களும் இந்த இணையதளத்தில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

## விருப்பக் கொள்முதல் முகவர்

அரசு மற்றும் அரசு சார்புள்ள நிறுவனங்களின் மூலம் வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் சட்டப்படி (Tamilnadu Transparency in Tenders Act, 1998) சிட்கோ நேரடியாக ஈடுபட இயலாது. மாநிலத்தின் உட்புறப் பகுதியிலுள்ள சிறு தொழில் மற்றும் குறுதொழில்கள் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை அரசு மற்றும் அரசு சார்புள்ள நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய உதவும் பொருட்டு சிட்கோவை விருப்ப கொள்முதல் முகவராக அறிவிக்குமாறு வேண்டப்பட்டுள்ள கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. சிட்கோ சிறுதொழில் முனைவோர்களின் சார்பாக ஒப்பந்தப் புள்ளிகளில் கலந்துகொள்ளவும் மற்றும் பொருட்களை அரசு மற்றும் அரசு சார்புள்ள நிறுவனங்களுக்கு வழங்கிடவும் அவர்களுக்கு வர வேண்டிய தொகையை பெற்றுத்தரவும் சிட்கோ உதவியாக இருக்கும்.

## வர்த்தக சின்னம் முறையில் விற்பனை (BRAND MARKETING)

சிறு தொழில் நிறுவனங்கள் தற்போது நிலவி வரும் உலகளாவிய போட்டிச் சந்தையில் தங்களது பொருட்களை வெற்றிகரமாக விற்பனை செய்ய பொது வணிகப் பெயர் (Common Brand) அவசியமாக உள்ளது. சிறு தொழில் நிறுவனங்களின் குறிப்பிட்ட சில பொருட்களை தேர்ந்தெடுத்து வர்த்தக சின்னம் பெயரில் (Brand Marketing) விற்பனை செய்ய சிட்கோ நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



2004 ஜூலை 29]

## சிட்கோ தொழிற்பேட்டைகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்

சிட்கோவின் தற்போதுள்ள தொழிற்பேட்டைகளில் கட்டமைப்பு வசதிகள் நீண்டகால பயன்பாட்டினால் பாதிப்படைந்துள்ளன. பொது மற்றும் தனியார் முயற்சியில் நிதி ஆதாரம் பெற்று, பாதிப்படைந்த அடிப்படை கட்டமைப்பு வசதிகளை சீர் செய்யவும் மற்றும் மேம்படுத்தவும் சிட்கோ நடவடிக்கை எடுத்துள்ளது.

அ. முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட கிண்டி தொழிற் பேட்டையிலுள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகள் கடந்த 20 ஆண்டுகளாக சிதைந்த நிலையில் உள்ளன. அதனை இந்திய அரசின் ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (Integrated Infrastructure Development Scheme) உதவியுடன் ரூ.1002.24 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழக அரசு மற்றும் இந்திய அரசு இத்திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இந்திய அரசு அதிகபட்சம் ரூ. 2 கோடி வழங்கும். அதே அளவிற்கு தமிழக அரசு மானியம் வழங்கும். இத்தகைய இணையான மானியத் தொகை மாநில அரசு அளிப்பதில் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு செயல்படுத்தி உள்ளது. திட்டத்தை செயல்படுத்திய பிறகு இந்திய அரசு தமது பங்கு மானியத்தை வழங்கும். இத்திட்டத்தை செயல்படுத்த சிறப்பு சேவை அமைப்பு (Special Purpose Vehicle) அமைக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்பு கம்பெனி சட்டத்தின்கீழ் 16-6-2004 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்ட மதிப்பில் இந்திய அரசின் "ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்" (Integrated Infrastructure Development Scheme)—கீழ் பெறப்படும் தொகை மற்றும் ஒதுக்கீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் தொகை ஆகியவற்றின் மூலம் ஓசூர், கப்பலூர் பகுதி 2, குறிச்சி, மேட்டூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளின் கட்டமைப்பினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(மதிப்பு ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தொழிற் பேட்டையின் பெயர் | உத்தேச மதிப்பு | இந்திய அரசின் மானியம் | தமிழக அரசின் மானியம் | ஒதுக்கீட்டாளர்களின் பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | ஓசூர் | 62.00 | 23.94 | 23.94 | 14.12 |
| 2 | கப்பலூர் பகுதி 2 | 340.00 | 136.00 | 136.00 | 68.00 |
| 3 | குறிச்சி | 167.00 | 66.80 | 66.80 | 33.40 |
| 4 | மேட்டூர் | 160.00 | 64.00 | 64.00 | 32.00 |
| 5 | விருதுநகர் | 40.00 | 16.00 | 16.00 | 8.00 |

இ. மத்திய திட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் "கூடுதல் மத்திய உதவித் திட்டத்தின்" (Additional Central Assistance Scheme) மூலம் மற்றும் ஒதுக்கீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் தொகையினைக் கொண்டும் கப்பலூர் பகுதி 1, காக்களூர், பேட்டை மற்றும் ராணிப்பேட்டை ஆகியவற்றிலுள்ள தொழிற்பேட்டைகளின் கட்டமைப்பினை கீழ்க்கண்ட திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளது.

(மதிப்பு ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | உத்தேச மதிப்பு | இந்திய அரசின் மானியம் | ஒதுக்கீட்டாளர்களின் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 1 | கப்பலூர் பகுதி 1 | 120.00 | 72.00 | 48.00 |
| 2 | பேட்டை | 24.00 | 14.40 | 9.60 |
| 3 | காக்களூர் | 65.00 | 45.00 | 20.00 |
| 4 | ராணிப்பேட்டை | 110.00 | 66.00 | 44.00 |





## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) 1965 ஆம் ஆண்டு, மாநிலம் முழுவதுமுள்ள சிறு தொழில் கூடங்களின் கூட்டமைப்பாக, ஆரம்ப திட்ட காலங்களில் தொழில் மற்றும் வணிகத் துறையினால் பரவலாக நிறுவப்பட்ட 64 சிறு தொழிற்கூடங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. கடிகார உதிரி பாகங்களைக் கொண்டு கடிகாரம் செய்தல், சாராவி மூலம் பொருட்கள் உற்பத்தி செய்தல், ஆழ்குழாய் கைப்பம்புகள் மற்றும் இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்தல் ஆகியவற்றிற்கான உற்பத்திக் கூடங்களை பின்னர் டான்சி நிறுவியது. டான்சியின் கட்டமைப்பு வசதிகளை தனியார் தொழில் முனைவோர்கள் தாராளமாக பயன்படுத்தியதன் மூலம் டான்சி நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் சிறப்பான சேவை செய்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநிலத்தில் தொழில் துறை நடவடிக்கை குறைவாக இருந்த நிலையில் டான்சி முன்னோடியாக டைகாஸ்ட்டிங், ஃபோர்ஜிங், இனாமல்டு வயர், வார்ப்பட பொருட்கள், தோல் பதனிடுதல், தோல் பொருட்கள், மின்சார கருவிகள், இயந்திர தொழிற்கூடங்கள், நுண் கருவிகள், இயந்திர கருவிகள், உயர்கட்டுமான பொருட்கள், துத்தநாக முலாம் பூசுதல், சிறுசிறு பொறியியல் பொருட்கள், எஃகு மற்றும் மரத்திலான அறைகலன்கள் போன்ற பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்து, பல்வேறு துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்தது. மேலே குறிப்பிடப்பட்ட தொழில்களை இம்மாநிலத்தில் தனியார் துவங்குவதற்கு டான்சி முன்னோடியாக திகழ்ந்து வந்தது.

காலப்போக்கில் தொழில் வளர்ச்சியில் தனியார் ஈடுபட்ட நிலையில் வார்ப்படம், போர்ஜிங்ஸ், எனாமல்ட் ஒயர்ஸ், பவுண்டரி மற்றும் இயந்திர கருவிகள் ஆகிய தொழில்களிலிருந்து டான்சி விலகிக் கொண்டது. தற்பொழுது 26 உற்பத்திக் கூடங்கள் மற்றும் 6 செயல் பிரிவுகள் மட்டுமே டான்சியின்கீழ் இயங்கி வருகின்றன.

உயர்கட்டுமான பொருட்கள், நுண் அலைகோபுரங்கள் மற்றும் உயர்அழுத்த மின்கடத்தி கோபுரங்களுக்குத் தேவையான துத்தநாக முலாம் பூசிய கோபுரப் பாகங்கள், மின்கடத்திப் பொருட்கள், சிறுசிறு பொறியியல் பொருட்கள், மரம் மற்றும் எஃகு பொருள்களால் ஆன அறைகலன்கள், துத்தநாக முலாம் பூசுதல், இந்தியா மார்க்–II ஆழ்குழாய் கைப்பம்புகள், காஸ்கெட் ஷெல்லாக், சர்ஜிகல் ஸ்பிரிட் போன்ற சாராவியை (ஸ்பிரிட்) மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், கடிகார உதிரி பாகங்களைக் கொண்டு

கடிகாரம் செய்தல் போன்றவை டான்சி உற்பத்தி செய்யும் பொருட்களாகும்.

பலவகையான பெயிண்ட்களை உற்பத்தி செய்யும் தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும், "டாப்பாப்" நிறுவனம் டான்சியின் துணை நிறுவனமாகும்.

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 6 இடங்களில் டான்சியின் விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநில / மத்திய அரசுத் துறைகள், அரசு சார்ந்த பொது நிறுவனங்கள் மற்றும் பெயர் பெற்ற தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்களையும் சேவையையும், கடந்த நாற்பது வருடங்களாக டான்சி வழங்கி வருகிறது.

துத்தநாக முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண் அலை கோபுரங்கள், பல வகையான உயர் கட்டுமானங்கள், துத்தநாக முலாம் பூசுதல், ஆழ்குழாய் கைப்பம்ப்புகள், தரமிக்க அறைகலன்கள் முதலியன உற்பத்தி செய்வதில் டான்சி தன் முத்திரையைப் பதித்து தனித்தன்மை பெற்றுள்ளது.

நமது அரசின் சமுதாய நலப் பணிகளை நிறைவேற்றுவதிலும் டான்சி அரசுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக எல்லோருக்கும் கல்வித் திட்டம், கரும்பலகை வழங்கும் திட்டம், வறட்சிப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ஆழ்குழாய் கைப்பம்ப்புகள் நிறுவுதல் மற்றும் அதற்கான உதிரி பாகங்களை உற்பத்தி செய்து வழங்குதல் போன்ற சீரிய பணிகளையும் டான்சி ஆற்றி வருகிறது. மேலும், இந்திய வானாராய்ச்சி நிலையம், பாரத கனரக மின் நிறுவனம், பாரத விமானவியல் நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கு உயர் தொழில்நுட்பம் வாய்ந்த பாகங்களை உற்பத்தி செய்து கொடுத்து வருகிறது.

ஆரம்ப கட்டமாக எஃகு அறைகலன்கள் மற்றும் ஆழ்குழாய் கைப்பம்ப்புகள் உற்பத்திக் கூடங்களுக்கு ஐஎஸ்.ஓ-9001:2000 தர நிர்ணயம் சான்றிதழ் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

டான்சி உற்பத்தி செய்யும் பொருட்களை வாங்க முன்பு அரசு ஆணைகளில் வழங்கப்பட்ட கொள்முதல் முன்னுரிமை உத்திரவுகள் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998, பிரிவு 16 (C)-ன்கீழ் வருகின்றன எனவும் அவ்வுத்திரவுகளை அனைத்து கொள்முதல் செய்யும் அரசு நிறுவனங்களும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. இச்சலுகையின் மூலம் அரசுத் துறைகள், வாரியங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து பணி ஆணைகளை டான்சி பெற இயலும்.



# இணைப்பு

## பகுதி II திட்டங்கள், 2004-2005

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இறுதி நிலைச் செலவு | 2004-2005-ல் செலவு |
|---|---|---|---|
| 1. | ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட சிறுதொழில் நிறுவனங்களுக்கு விற்பனை மேம்பாட்டுக்கு நிதியுதவி | 9.00 | 9.00 |
| 2. | தற்போதைய தொழிற்சாலைப் பணியாளர்களுக்குரிய சி.என்.சி இயந்திரத்தைக் கையாளும் திறமையை மேம்படுத்தல் | 5.00 | 2.50 |
| 3. | ஏற்றுமதி மேம்பாடு - வழிகாட்டி முறை குறித்து அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் | 9.00 | 9.00 |
| 4. | வட்டார அளவில் வசதி படைத்த முதலீட்டாளர்களை தொழில் முனைவோர் ஊக்குவிக்கும் திட்டம் | 12.50 | 12.50 |
| 5. | 28 மாவட்ட தொழில் மையத்திற்கும் சென்னை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கும் மற்றும் இயக்ககத்திற்கு தகவல் அனுப்பும் வசதி, இணையதள தொடர்பு வசதியுடன் 30 கணினிகள் மற்றும் துணை சாதனங்களுக்கு வகை செய்தல் | 18.00 | 11.25 |

| | | | |
|---|---|---|---|
| 6. | தருமபுரி மாவட்டம் பர்கூர் வட்டம், வெப்பாலம்பட்டி கிராமத்தில் தென்னை நாரிழை நூற்புத் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தல் | 1.00 | 1.00 |
| 7. | தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கள்ளூர் கிராமத்தில் தென்னை நாரிழை நூற்புத் தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கத்தை ஏற்படுத்தல் | 1.00 | 1.00 |
| 8. | மதுரை, மண்டல சோதனை பகுப்பாய்வு ஆய்வுக் கூடத்தில் சோதனை வசதிகளை மேம்படுத்துதல் | 15.14 | 15.14 |
| 9. | மதிப்பு கூட்டப்பட்ட தென்னை நார் பொருட்களின் உற்பத்தியில் தென்னை நார் தொழில் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள தென்னை நார் தொழில் பணியாளர்களின் திறமையை மேம்படுத்துவதற்கான பயிற்சியளித்தல் | 5.00 | 5.00 |
| 10. | மகளிருக்கான தென்னை நார் தொழில் திட்டத்தின் கீழ் மேட்டார் பொருத்தப்பட்ட பாரம்பரியமிக்க ராட்டைகளை வாங்குவதற்கு பயிற்சி பெற்ற 2,000 மகளிருக்கு நிதியுதவியளித்தல் | 13.40 | 13.40 |
| 11. | தமிழ்நாட்டில் மதிப்பு கூட்டப்பட்ட தென்னை நார் பொருட்களை மேம்படுத்துவதற்கு பாய், தயாரிப்பு மற்றும் பாய்முடையும் 30 தொழில் பிரிவுகளுக்குத் தொடக்க நிதியுதவி | 20.00 | 20.00 |
| 12. | தமிழ்நாட்டில் மண்ணியல் வகையில் தென்னை நார் பொருள் தயாரிப்பு குறித்து கட்புல விளக்கம் அளித்தல் | 8.00 | 2.00 |



| | | | |
|---|---|---|---|
| 13. | தமிழ்நாட்டில் தென்னை நார் தொழில் முனைவோருக்காக, கேரளத்தில் மேற்கொள்ளப்படும் பயிற்சி சுற்றுப் பயணம் | 2.00 | 1.00 |
| 14. | சிட்கோ ஒருங்கிணைந்த அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் பேட்டையை மேம்படுத்தல் | 100.00 | 100.00 |
| 15. | மாவட்ட தொழில் மையங்களுக்கு வண்டிகள் வாங்குதல் | 61.99 | 61.99 |
| 16. | சிறிய அளவிலான தேயிலை தோட்டக்காரர்கள் தேயிலை விலை நிர்ணய நிதிய உறுப்பினர்களாவதற்கு நிதியுதவி | 115.00 | 115.00 |
| | **மொத்தம்** | **396.03** | **379.78** |

V211,31P04
P04.621

## சிறு தொழில் துறை — வரவு செலவுத் திட்டம்

### கோரிக்கை எண் 42

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | 2003-04 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2003-04 திருத்திய மதிப்பீடு | 2004-05 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2407 மலைத்தோட்டப் பயிர்கள் | 0.01 | -- | 115.0 |
| 2425 கூட்டுறவு | 5.00 | 5.00 | -- |
| 2851 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 4800.36 | 4573.64 | 5513.9 |
| 2852 தொழில்கள் | 503.89 | 341.34 | 369.19 |
| 2885 தொழில்கள், கனிமப் பொருள்கள் குறித்த ஏனைய செலவுகள் | 970.00 | 800.00 | 700.00 |
| 3451 தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள் | 107.81 | 102.21 | 110.17 |
| 4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 10.00 | 10.00 | -- |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 0.01 | 20.00 | 20.00 |
| 4851 கிராமத் தொழில்கள், சிறுதொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 203.52 | 100.00 | 123.50 |
| 6851 கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கான கடன்கள் | 100.00 | 50.00 | 50.00 |
| மொத்தம் | 6700.60 | 6002.19 | 7001.85 |

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவை நிருபர் பிரிவால் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.

22617